தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை—36

இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு

முதல் பகுதி

ENGLISH ECONOMIC HISTORY

(PART - I)

ஆசிரியர்

ஜார்ஜ் டபிள்யூ. சௌத்கேட், பீ.ஏ.

தமிழாக்கம்

கீ. சீ. இராமசாமி, எம். ஏ., எம். காம்.,

விரிவுரையாளர்,

இஸ்லாமியக் கல்லூரி, வாணியம்பாடி.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—February, 1964.
B. T. P. No. 35

ENGLISH ECONOMIC HISTORY—Part I

George W. Southgate

Translation

K. S. Ramaswamy

PRICE Rs. 6·00

This translation of ENGLISH ECONOMIC HISTORY by George W. Southgate is published by arrangement with J. M. Dent & Sons Ltd., London

Printed at
Kamala Press,
37, Car Street, Triplicane,
MADRAS-5.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி. ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம் 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I** என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 35ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 70 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிடலங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை ஆதலின் உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும், ஒத்துழைப்புக்கும் நம் [illegible] உரித்தாகுக.

1958-ன் திருத்தப்பட்ட பதிப்புக்கு முகவுரை

இந்நூல் 1934-ல் வெளியிடப்பட்டது. மறுபடி அச்சிடப்பட்ட போதெல்லாம் கூட்டல்களும் திருத்தங்களும் செய்து விஷயங்களைப் புதுப்பிக்க வாய்ப்புண்டாயிற்று. 1948-ல் வேறு அச்சில் நூலைக் கோத்தபோது மறுபடி திருத்தி எழுத வாய்ப்புண்டாயிற்று; மேலும் இரண்டு அதிகாரங்கள் சேர்க்கப்பட்டன.

மீண்டும் ஒருமுறை அச்சு மாற்றப்பட்டுள்ளது; நூல் முழுதும் ஆழ்ந்து படிக்கப்பட்டுத் திருத்தப்பட்டுள்ளது. அநேகமாக எல்லா அதிகாரங்களிலும் சிறு மாறுதல்கள் உள்ளன. இரண்டு மூன்று அதிகாரங்களின் விஷயங்களின் கோவை மாற்றப்பட்டதுடன் நூலின் பிற்பகுதியில் நிறையச் சேர்க்கப்பட்டுள்ளன. அனுவசியமான விவரங்கள் இல்லாமலும் தேவையானவை விட்டுப்போகாமலும் இன்றுவரை இங்கிலாந்தின் பொருளாதார விவகாரங்களின் பல அமிசங்களும் நடந்து வந்ததைச் சமநோக்குடன் இந்நூல் விவரிக்கிறது என்று ஆசிரியர் நம்புகிறார்.

யோசனைகள் கூறியும் புது விவரங்களைத் தந்தும் உதவிய பல நண்பர்களுக்குத் தம் மனமார்ந்த நன்றியை நூலாசிரியர் தெரிவித்துக் கொள்கிறார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பொருளாதார வரலாற்றுத்துறையின் முன்னாள் ரீடராக (Reader) இருந்த டாக்டர் சி. ஆர். ஃபே, (Dr. C. R. Fay), M.A.,வுக்கும் சார்டர்டு இன்ஷுரன்ஸ் இன்ஸ்டிடியூட்டின் கல்வி இயக்குநரான டாக்டர் டபிள்யூ. ஏ. டின்ஸ்டேல் (Dr. W.A. Dinsdale) Ph.D., B.Com.-க்கும், திரு.ஆர். பாக்மன் (Mr. R. Packman), B.Com-க்கும், பிரிட்டிஷ் இன்ஷுரன்ஸ் சங்கச்செயலாளர் திரு. ஆர். டி. டி. வில்மட் (Mr. R. T. D. Wilmot) டுக்கும் விசேஷமாக நூலாசிரியர் கடமைப்பட்டுள்ளார்.

1958 ஜுலை. **ஜி. டபிள்யூ. எஸ்.**

முதற்பதிப்பின் முகவுரை

இந்நாட்டின் பொருளாதார வரலாற்றை மேற்போக்காகக் கூறுவதைவிட அதிகமாக விவரிக்க வேண்டும்; ஆனால், அதே சமயம் முதன்முதலில் இப்பொருளைப் படிப்பவர்களும் புரிந்துகொள்ளுமாறு இருக்கவேண்டும் என்பதுதான் இந்நூல் எழுதியதன் நோக்கம்.

ஏற்கெனவே உள்ள பல நூல்களுக்கும் இதற்கும் ஒரு வேறுபாடு உள்ளது. இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றை முழுமையாக இந்நூல் விளக்குகிறது. இம்முயற்சியில் குறைபாடுகள் இருக்கலாம். பழைய பாடப் புத்தகங்களில் தொழில் புரட்சிக்குப் பின் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் போதுமானஅளவு விவரிக்கப்படவில்லை. அதுவும், கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்தின் பொருளாதாரம் பலதுறைகளில் வளர்ந்துள்ளது. அதன் பல்வேறு அமிசங்களை மேலே குறிப்பிட்ட நூல்களைவிட விவரமாக விளக்க வேண்டியது அவசியமாகும். அதே சமயம், இப்பொருளின் சில அமிசங்களைப் பற்றியும் சில குறிப்பிட்ட காலங்களில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி பற்றியும் சமீபகாலத்தில் சில அருமையான நூல்கள் வெளிவந்துள்ளன. ஆகையால், தனக்குத் தேவையான விஷயங்களைச் சேகரிக்க ஒரு மாணவன் பல நூல்களைப் பார்க்கவேண்டிய நிலையில் உளன். இந்நூலிலிருந்து இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றைப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் தமக்குத் தேவையான அனைத்தையும் பெறுவர் என்று நம்பப்படுகிறது. ஆறுவது படிவம், பட்டப்படிப்புக்கு முன் வகுப்பு ஆகியவற்றில் படிக்கும் மாணவர்களுக்காகத்தான் இது முக்கியமாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், ஐந்தாவது படிவத்துக்கும் தேவையானால் இதை உபயோகிக்கமுடியும்; அதற்கு இது மிகவும் கடினமாக இராது. இப்பொருள் பற்றிப் பொது அறிவுபெற விரும்பும் சாதாரண வாசகர்களுக்கும் இந்நூல் எளிதாக இருக்கும்.

இந்நூலாசிரியரின் Text Book of Modern English History, Text Book of Modern European History ஆகிய நூல்களில் உள்ளதுபோல அதிகாரங்களின் சுருக்கங்களை இதில் சேர்ப்பது அவசியமாகத் தோன்றவில்லை. கீழ் வகுப்புகளில் இங்கிலாந்து அல்லது ஐரோப்பாவின் வரலாற்றைக் கற்பிக்க ஒதுக்கப்படுவதை விட, செகண்டரி பள்ளிகளில் ஆறுவது படிவத்துக்கு இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சியைக் கற்பிக்கச் சாதாரணமாக நிறைய நேரம் ஒதுக்கப்படுகிறது. ஆகையால், பிற நூல்களில் உள்ளதைப்போல இந்நூலுக்குச் சுருக்கங்கள் அவசியமில்லை என்று தோன்றுகிறது. மேலும் சுருக்கங்களைச் சேர்த்தால் பக்கங்கள் அதிகமாகி நூலின் விலை உயரும்.

இந்நூலைத் தயாரிப்பதிலும் திருத்துவதிலும் அவருக்கு உதவி செய்ததற்காக அவரது சகாக்கள், தோழர்கள் இருவருக்கும் இந்நூலாசிரியர் தம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார். திரு. டி. எல். டி. போர்டர், (T. L. D. Porter) B.A., B.Sc., சில பொறியியல், விஞ்ஞான விஷயங்களில் அளித்த விவரங்களுக்காகவும், திரு. டபிள்யூ. ஜி. மெக்ஃபர்ஸன் (W. G. McPherson) B.A., அவர்கள் கையெழுத்துப் பிரதியைப் படித்து உயர்ந்த பல யோசனைகளைத் தெரிவித்ததற்காகவும் நன்றிக்கு உரியராகின்றனர்.

ஜி. டபிள்யூ. எஸ்.
(G. W. S.)

1934 ஜனவரி

இங்கிலாந்தின் பொருளாதார வரலாறுபற்றிப் படிக்கும் மாணவர்களுக்குச் சில யோசனைகள்

(1) முடியுமானால், பொருளாதார வரலாற்றைப் படிக்கும் போதே பொருளாதாரக் கோட்பாடுகளையும் படிக்க வேண்டும். பொருளாதாரக் கோட்பாடுகளைப்பற்றி ஓரளவு அறிந்து கொள்ளாமல் பொருளாதார வரலாறு எப்படி ஏற்பட்டது என்பதை நன்கு உணர முடியாது. உதாரணமாக, மெர்க்கண்டலிசக் கோட்பாடுகளின் குறைகளையும் பொது விலைவாசி மாற்றங்களையும் உணரப் பணவியல் கோட்பாடுகள் தெரிந்திருக்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலமுடையவர்களது வளத்தின் காரணத்தை உணர நில வாரக் கோட்பாடுகளை அறிந்திருக்க வேண்டும்.

(2) பொருளாதார வரலாற்றுடன் பொருளியல் கோட்பாடுகளைப் படிப்பதால் பொருளாதாரத்தின் கலைச் சொற்களில் பழக்கம் உண்டாகிறது. பொருளாதார வரலாற்று நூலின் சொற்களைப் பொருளியலார் கூறும் அர்த்தத்தில் உபயோகிப்பது நல்லது. உதாரணமாக 'மூலதனம்' (capital), செல்வம் (wealth), பங்கீடு (distribution) ஆகிய சொற்களைப் பொருளியலார் ஒப்புக்கொண்ட அர்த்தத்தோடு பயன்படுத்தினால் குழப்பம் இல்லாதிருக்கும். சாதாரணமாக மக்கள் 'நிலம்' (land) என்ற சொல்லுக்குக் கொள்ளும் அர்த்தமும், பொருளியலார் கூறும் அர்த்தமும் மாறுபடுகின்றன. இவை ஒன்றுக்கொன்று ஒவ்வாமலோ முரண்பட்டோ இல்லை; ஒரு அர்த்தம் மற்றதைவிட ஓரளவு விஸ்தாரமானது. விவசாயத்தைப் பற்றிக் கூறும்போது சாதாரண (குறுகிய) அர்த்தத்தில் 'நிலம்' என்ற சொல்லுக்குப் பொருள் கொள்வது இயல்பாயினும் அதற்குப் பொருளியலில் காணப்படும் உண்மையான அர்த்தத்தை மறக்கக் கூடாது.

(3) பொருளாதார வரலாறு எல்லா இடத்திலும் ஒரே மாதிரி இருக்கும் என்று எதிர் பார்க்கக் கூடாது. எல்லா இடத்துக்குமாகச் சேர்த்துப் பொதுவாக முடிவுகளைக் கூறும்போது கவனமாக இருக்க வேண்டும். தெரிந்த உண்மைகள் நிறைய இருந்தால்தான் பொது முடிவுகளை நம்பலாம் என்பது அளவையியலில் (Logic) ஒரு நல்ல

கோட்பாடாகும். விதிவிலக்கற்ற பொதுமுடிவுகள் தவறு மளவுக்கு நிறையப் பொருளாதார உண்மைகளைச் சேகரிக்க முடியாது. விதிவிலக்குகள் இருக்கக்கூடும் என்பதை எப்போதும் மறக்கக் கூடாது. ஐந்தாறு கவுன்டிகளில் ஐந்தாறு கிராமங்களின் ஆவணங்களைப் பார்த்து அங்கெல்லாம் மாற்றுகை ஒரே விதிப்படி நடந்திருப்பதைக் கண்டதும் அவ்விதிகள் எங்குமே அதேபோல இருந்தன என்ற முடிவுக்கு வரத் தோன்றும். அப்படிப் பொதுவாகக் கூறிவிட்டால், பின்னர் வேறு சான்றுகளைக் காட்டிப் பிறர் நம் சொல்லைப் பொய்யாக்கிவிடுவர். 'இன்றும் உள்நாட்டில் பல நகரங்களில் பல நூற்றாண்டுகளாக நடந்த அதே கிழமையில் சந்தை நடக்கிறது' என்ற கூற்றை மறுக்கமுடியாது. ஏனெனில் பல இடங்களில் இது உண்மை என்பதை நாம் அறிவோம். எல்லா உள்நாட்டு நகரங்களிலும் அவ்வாறு நடந்தது என்று கூறினுல் அவ்வாறு நடக்காத ஓர் உதாரணம் இருந்தால் போதும் அது பொய்யாவதற்கு. அதே போல, 'நார்மன் வெற்றிக்கு முன் இந்நாட்டில் வணிக கில்டுகள் இருந்ததற்குத் தெளிவான சான்றுகள் இல்லை' என்று சொல்வதில் 'நார்மன் வெற்றிக்குமுன் இந்நாட்டில் வணிக கில்டுகளே இருக்கவில்லை' என்று சொல்வதைவிட ஆபத்துக் குறைவு.

(4) எல்லா இடத்துக்கும் பொருந்தும் என்ற பொதுமுடிவுகளையும் விதிவிலக்குகள் இல்லாதது போலச் சொல்லப்பட்ட கூற்றுக்களையும் பற்றி எச்சரித்ததனுல் தெளிவற்ற முறையில் எந்த விவரத்தையும் கூறுவது தவறல்ல என்று ஆசிரியர் கூறுவதாக அர்த்தமில்லை. தெளிவாகவும் துல்லியமாகவும் ஒரு விஷயத்தைப் பற்றிக் கூறவேண்டுமானுல், அது நிபந்தனையற்ற முழுமையான ஒரு கூற்ருக (absolute statement) இருக்க வேண்டுமென்பதில்லை; தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ள கருத்தைத் துல்லியமான கூற்றுப் பிரதிபலிக்கிறது. சொற்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் சரியான அர்த்தத்தில் கையாள வேண்டும். 'தொழில்' (industrial) 'வாணிபம்' (commercial) போன்ற சொற்களை அவற்றின் சரியான பொருளிலேயே உபயோகிக்கவேண்டும். ஒன்றுக்கொன்று மாற்றி உபயோகிக்கக்கூடாது.

(5) இந்நூலில் சில விஷயங்களை இதன் ஆசிரியர், பார்க்கிங், (Barking) மேனரைக் காட்டி விளக்கியிருக்கிறுர். இடைக்காலத்தில் அது பார்க்கிங் மடத்தின் வசம் இருந்தது. அதேபோலத் தமக்கருகில் உள்ள ஏதாவதொரு பெரிய சமய நிறுவனத்தின் ஆவணங்களில்

இதற்கு உதாரணங்கள் உள்ளனவா என்று மாணவர்கள் பார்ப்பது நல்லது. இதற்கு உள்ளூரில் நல்லதொரு நூலகத்துக்குச் சென்றுவர வாய்ப்பு இருக்கவேண்டும். இவ்விஷயங்களில் விக்டோரியா கவுன்டி வரலாறு (Victoria County History) நிறைய விவரங்களைத் தருகிறது.

(6) முதன் முதலில் படிக்கத் தொடங்குபவர்கள் நிறையப் புள்ளி விவரங்களை மனப்பாடம் செய்ய வேண்டாம். ஓரளவு அவற்றைப் பார்த்தால் போதும். நிறையப் பயிற்சி இல்லாத மாணவர்கள் பொருளாதார வரலாற்றின் புள்ளி விவரங்களை உபயோகிப்பதில் அபாயம் உள்ளது. உதாரணமாக பல இடங்களி லிருந்து சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை, அவற்றின் அடிப்படை கள் ஒன்ருக உள்ளனவா என்று நன்கு கவனிக்காமல் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. (சாதாரணமாகப் புள்ளி விவரங்கள் பல இடங் களில் பல அடிப்படைகளில்தான் தயாராகின்றன). புள்ளியியலின் ஆதாரக் கொள்கைகளின்படியே புள்ளி விவரங்களைப் பயன்படுத்த வேண்டும். பொருளாதார வரலாற்றை உயர்ந்த கட்டங்களில் படிக்கும் மாணவர்கள் இதை மேற்கொள்ளலாம்.

(7) இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு மிகவும் விஸ்தார மானது. இத்தகைய ஒரு சிறிய நூலில் அதைப் பொதுப்படையாக விவரித்து அதன் விசாலத்தைச் சுட்டிக் காட்டத்தான் முடியும். இன்னும் விவரமாக இதைப்பற்றி அறியப் பிற நூல்களைப் படிக்க வேண்டும். இந்நூலில் உள்ள பல பொருள்களைப்பற்றிச் சிலதுறை களில் விசேஷமாக வரலாற்ருசிரியர்கள் எழுதிய சில நூல்களில் மேலும் விவரமாக விளக்கங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, வணிக கில்டுகளைப் பற்றிப் புரொபசர் குரோஸ் (Professor Gross) எழுதிய நூல் மிக அருமையானது. தொழிற்புரட்சிக் காலத்தில் தொழிலாளர் சூழ்நிலையைப்பற்றி ஜே. எல். ஹாமண்டும், பார்பரா ஹாமண்டும் (J. L. and Barbara Hammond) பல நூல்கள் எழுதி யுள்ளனர். தொழிலாளர் சங்கங்களின் வரலாற்றை சிட்னி வெப்பும் பியட்ரிஸ் வெப்பும் (Sidney and Beatrice Webb) எழுதியுள்ளனர். இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றின் பல அமிசங்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள புகழ்பெற்ற நூல்களின் நீளமான பட்டியல் ஒன்றைத் தயாரிக்க முடியும். ஆனுல் அத்தகைய பட்டியலை இந்நூலில் சேர்க்கப் பல காரணங்களுக்காக ஆசிரியர் விரும்பவில்லை. முக்கிய மாக, எந்த நூலை அதில் சேர்ப்பது, எதை விட்டுவிடுவது என்பதைத்

தீர்மானிப்பது கடினம். நூல்களின் பெருமைபற்றி ஒருவருக்குள்ள கருத்து மற்றவருக்கு இருக்காது. தான் படிக்க வேண்டிய நூல்களின் பட்டியலை மாணவன் தானே தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பது ஆசிரியரின் கருத்து. தன் ஆசிரியர்கள் படிக்கச்சொல்லும் நூல்களையும், ஏற்கெனவே படித்த நூல்களில் அடிக்கடி குறிபிடப்பட்ட பிற நூல்களையும், நல்ல மதிப்புரைபெற்ற புது நூல்களையும், அப்போதைக்கப்போது அப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். இதில் மற்றொரு நன்மை யாதெனில், எந்தத் துறையில் மாணவன் விசேஷ கவனம் செலுத்துகிறானோ அதற்கேற்றவாறு புத்தகப் பட்டியலைத் தயாரித்துக் கொள்ளலாம்.

முன்னுரை

இங்கிலாந்தின் வரலாற்றில் பொருளாதாரத்தின் பங்கு

(The Economic Factor in English History)

மிகப் பழைய காலம் தொட்டு, உண்மையில் மனிதர்கள் எழுத அறிந்த நாள் முதல், தம் சாதனைகளையும் தம் முன்னோர்களது சாதனைகளையும் பிறர் அறியுமாறு எழுத்திலே பொறித்துவைப்பது மக்களது வழக்கமாக இருந்து வருகிறது. தத்தம் இனத்தவரது பெருமையை எடுத்துரைக்கவும், பலத்திலும் வீரத்திலும் பிற இனங்களைவிட அவ்வினம் மேலானது என்று உறுதி கூறவும், முன்னோருக்கு இணையாக இளைஞர்கள் விளங்குமாறு அவர்களுக்கு ஊக்கமளிக்கவும், தம் இனத்தவரின் அரும்பெரும் சாதனைகளைப் பற்றிச் சரித்திராசிரியர்கள் எழுதினர்; கவிஞர்கள் பாடினர். ஓர் இனம் அல்லது நாட்டின் தற்பெருமை யுணர்ச்சியைத் திருப்தி செய்வதைவிட சரித்திரம் படிப்பதனால் உயர்ந்த பயன் உண்டு என்பது வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும் நாளடைவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. மனித சமுதாயத்தின் வரலாறு முழுவதிலும் ஒரே மாதிரி காரண காரிய உறவும் கால ஒழுங்கும் இருப்பதை அறிவாளிகள் கவனிக்காமலிருக்க முடியாது. அதாவது, ஒரு வகைச் சூழ்நிலையில் ஒரே வகை விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை அவர்கள் அறிகின்றனர்.

ஆகையால், பழைய நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்து மனித இனம் சேர்த்து வைத்துள்ள இவ்வனுபவ அறிவினால் புதுப் பிரச்சினைகள் தோன்றும்போது அவற்றுக்கு முடிவு காண முயற்சி செய்ய முடிகிறது. இவ்வனுபவங்களிலிருந்து மனித சமுதாயத்தின் வரலாறு முழுவதிற்கும் அடிப்படையாக உள்ள கொள்கைகளைச் சேர்த்து வரலாற்றின் ஒரு தத்துவ சரித்திரமே தோன்றியது. மனித நடவடிக்கைகளில் தெளிவாகப் புலனாகும் மண்ணாசை, சமய வெறி, போர்ப் பெருமை போன்ற நோக்கங்கள் தனித்தனியாகப் பிரித்து ஆராயப் பட்டன.

மனித சமுதாயத்தின் நடவடிக்கைகளை மேற்கூறிய காரணங்களை மட்டும் காட்டி விளக்க முடியாது என்பது சமீப காலத்தில் அதிகமாகப் புலனாகி வருகிறது. பதினான்காம் லூயீ செய்த போர்களுக்குத் தன் ஆதிக்கத்தைப் பரப்ப விரும்பியது நோக்கமாக இருக்கலாம். இரண்டாம் ஃபிலிப் சமய வெறியினால் போர்களைச் செய்திருக்கலாம். நெபோலியன் புகழுக்காகப் போராடியிருக்கலாம். ஆனால் எல்லா

இடங்களிலும் எல்லா நடவடிக்கைகளுக்கும் இவையே காரணமாக இல்லை. சில சமயங்களில் இந்நோக்கங்கள் பலமாக இருந்தன; தடுக்க முடியாதவையாகவும் இருந்தன. பல சமயங்களில் அவை மந்தமாக இருந்தன அல்லது இல்லாமலிருந்தன. மனித சமுதாயத்தின் நடவடிக்கைகள் முழுதும் ஒரு சில பெரும் போர்களில் அடங்கி விடவில்லை. தேசங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. மக்கள் போரிடுவதோடும் பிரார்த்தனை செய்வதோடும் நின்று விடவில்லை. அவர்கள் உழைக்கின்றனர், வாணிபம் செய்கின்றனர், உழுகின்றனர், அறுவடை செய்கின்றனர். ஆகையால் ஒரு நாட்டின் வளர்ச்சியை முழுமையாகவும் சம நோக்குடனும் விவரிக்க வேண்டுமானால் பொருளாதார நிகழ்ச்சிகளுக்கு முழு முக்கியத்துவத்தையும் அளிக்க வேண்டும்.

மனிதனுக்குத் தேவையான பொருள்கள் பல; அவை பலவகைப் பட்டவை. அத் தேவைகளனைத்தையும் முழுமையாகப் பூர்த்தி செய்வது இயலாது. நாகரிகம் வளரவளர இத்தேவைகளின் அளவும் வகையும் அதிகரிக்கின்றன. ஒரு தேவை பூர்த்தியானதும் அதனிடத்தில் மற்றொன்று தோன்றுகிறது. ஒரு பையனுக்கு ஒரு சைக்கிள் கிடைக்கிறது; நாளடைவில் அவன் மோட்டார் சைக்கிள் ஒன்று வேண்டும் என்கிறான்; இன்னும் வயதானதும் ஒரு காரை விரும்புகிறான்; கார் வைத்திருப்பவர் அதைவிட வசதியும், சக்தியும், வேகமும் அதிகமான காரை விரும்புகிறார். ஒரு வீட்டின் சொந்தக்காரன், பல சமயம், அதைவிடப் பெரிய வீட்டை விரும்புகிறான்; நிறையச் செல்வம் படைத்திருந்தால் நகரத்தில் ஒரு வீடும், நாட்டுப்புறத்தில் ஒன்றும், சில சமயம் கடற்கரையில் ஒரு பங்களாவும், காட்டில் ஒரு தங்குமிடமும்கூட வாங்குகிறான். என்றும் ஆசைக்கு அளவில்லை. செல்வம் பெருகப் பெருக நம் குறிக்கோளின் எல்லையும் தூரத்தில் போய்க் கொண்டே இருக்கிறது. மனித இயல்பு இவ்வாறிருப்பது நல்லதே. மனிதனது தேவைகள் எல்லையற்றிருப்பதால்தான் மனித சமுதாயத்தில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுகிறது. சமுதாய வளர்ச்சி ஓரேயிடத்தில் நிலைத்து நிற்க என்றும் வழியில்லை; முன்னேற்றம் நின்று போன சமுதாயம் பின்னடையத் தொடங்கிவிடும். திருப்தி அடைந்த மனித இனம் மறைந்து போகும்.

மனிதன் உழைத்தும் கஷ்டப்பட்டும் பெருகிற இத்தகைய பொருள்கள் செல்வம் எனப்படுகின்றன. இச்செல்வத்தின் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகியவற்றைப் பற்றிய கோட்பாடுகள் கொண்டது தான் பொருளாதார நூல். மக்கள் முன் காலத்தில் எவ்வகையில் தம்

தேவைகளைத் திருப்தி செய்து கொண்டனர் என்பது பற்றியும் அவர்களது பொருளாதார நடவடிக்கைகளின் பல கட்டங்களைப் பிரதிபலிக்கும் அமைப்புக்கள், நிறுவனங்கள், கண்டு பிடிப்புக்கள் ஆகியவை பற்றியும் பொருளாதார வரலாறு கூறுகிறது.

மனிதனுடைய அடிப்படையான தேவைகள், உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை. இன்று நாகரிகமடைந்த சமுதாயத்தில் ரேடியோ, டெலிவிஷன் பெட்டிகள், கார், செய்தித்தாள், புகைப்படமெடுக்கும் கருவி (camera), புத்தகங்கள், கால்ஃப் மட்டைகள் (golf clubs) போன்றவையெல்லாம் தேவைப்படுகின்றன. ஆனால் அவை அனைத்தும் உயிர் வாழ அத்தியாவசியமானவை யல்ல. ஆனால் உணவு, உடை, இருப்பிடம் இன்றி உயிர்வாழ முடியாது. ஆதிகால மனிதனுக்கும் இவை அதே அளவு அவசியமாக இருந்தன. இவற்றுள் உணவுதான் மிகவும் அவசியமானது. ஆனால் உணவும் குளிர்ந்த பருவங்களிலும் பிரதேசங்களிலும் தேவைப்படுவதைவிடக் குறைவாகவே வெப்பமானவற்றில் தேவைப்படுகின்றது. சில வெப்ப மண்டலப் பிராந்தியங்களில் உண்மையில் உணவு நிறையவும் அதிகக் கஷ்டமின்றியும் கிடைக்கிறது. உடைக்கும் இருப்பிடத்துக்குமான தேவையும் அங்குக் குறைவு; அத்தேவையை எளிதிலும் பூர்த்தி செய்ய முடிகிறது. எனவே, பிற இடங்களில் ஏற்பட்டுள்ள அளவுக்கு மனிதன் இயற்கையோடு போராட வேண்டிய நிர்ப்பந்தம் அங்கு இல்லை. ஆகையால் அங்கு வசிப்பவரது நாகரிகம் வளரவேயில்லை. ஆகையால் அவர்களுக்குப் பொருளாதார வரலாறே இல்லை; இருந்தாலும் அது மிகச் சிறிதே.

மனித குலத்தின் மிக அவசியமான தேவை உணவாதலின் முன் காலத்தில் உணவை மக்கள் எப்படி உற்பத்தி செய்தனர் என்பதே பொருளாதார வரலாற்றில் பெரும் பகுதியாகிறது. நாகரிகம் நன்கு வளர்ந்த சில நாடுகள் தமக்குத் தேவையான உணவு முழுவதையும் தாமே பயிரிட முயல்வதைக் கைவிட்டு வேறு பொருள்களைத் தயாரிப்பதில் விசேஷ கவனம் செலுத்தின. அப்பொருள்களை ஏற்றுமதி செய்து, மிக அவசியமான தம் உணவை, உபரியாகப் பெற்றுள்ள நாடுகளிலிருந்து இவை இறக்குமதி செய்து கொள்கின்றன. இக் கோஷ்டியில் பிரிட்டனையும் இப்போது சேர்க்கலாம். பெரிய ஆலைத் தொழில்களும் விஸ்தாரமான பன்னாட்டு வாணிபமும் இதனால்தான் தோன்றியுள்ளன.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்வரை விவசாயமே இங்கிலாந்தின் முக்கியமான தொழிலாக இருந்தது. மக்களுக்குத் தேவை

யான உணவு நாட்டிலேயே பயிரிடப்பட்டது. சில சமயம் ஏற்றுமதி செய்யுமளவுக்கு உபரி உற்பத்தியும் இருந்தது. மக்கள் தொகை பெருகி, அதில் பெரும்பகுதி சுரங்கங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்யப் போய்விடவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டன் உணவை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. இன்னும் சமீப காலத்தில் ஆங்கிலப் பொருளாதார நடவடிக்கைகளின் கதை மேலும் சிக்கலாக மாறியுள்ளது. விவசாயம் இன்றும் முக்கியமாக உள்ளது. (வரும் ஆண்டுகளில் அதன் முக்கியத்துவம் மேலும் அதிகமாகலாம்). ஆனால், அதைவிட ஆலைத் தொழிலும் வாணிபமும் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. கப்பல்கள், விமானங்கள், சைகிள்கள், மோட்டார் வண்டிகள், ரேடியோ, டெலிவிஷன் சாதனங்கள், ரசாயனப் பொருள்கள் ஆகிய பொறி செய் பண்டங்கள் ஏற்றுமதியாகின்றன. உணவும் மூலப் பொருள்களும், பிற நாடுகளின் ஆலை உற்பத்திகளும்கூட அவற்றுக்குப் பதிலாக இறக்குமதியாகின்றன. நவீனப் பொறியியல் வளர்ச்சியால் போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்தான் இவ்வளவு பெரிய அளவுக்கு வாணிபம் நடக்க வழிசெய்கிறது. போக்குவரத்தினாலேயே பல புதுவகைப் பொருளாதார நடவடிக்கைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு இங்கிலாந்தின் பொருளாதார அக்கறைகள் பல துறைகளிலும் பரவியுள்ளதால் இந்நாட்டின் பொருளாதார வரலாற்றைப் படிக்கும் மாணவன் தொழிலையும் வாணிபத்தையும் முக்கியமாகப் படிக்க வேண்டுமென்றும், விவசாயத்தை அவ்வளவு முக்கியமாகக் கருத வேண்டியதில்லை என்றும் எண்ணக்கூடும். அது தவறு. தொழில் புரட்சிக்கு முன் பிற பொருளாதார விவகாரங்களை எல்லாம்விட விவசாயம் மிக அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை மறக்கக்கூடாது. பல நூற்றாண்டுகளாக ஆங்கில வாழ்க்கையின் சின்னமாக விளங்கியவன் கைவினைஞனோ, வியாபாரியோ, மாலுமியோ அல்லன். விவசாயிதான் அவன். இன்றும் Punch பத்திரிகையில் காணப்படும் ஜான் புல் (John Bull) ஒருமாதிரிப் பழங்கால நாட்டுப்புறப் பெருநிலக் கிழவன்தான். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை ஆங்கிலேயர்களின் முக்கிய அக்கறை நிலத்தைப் பண்படுத்துவதில்தான் இருந்தது. ஆகையால் இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றை விவசாயத்தை ஆராய்வதோடுதான் தொடங்க வேண்டும். அவ்வரலாற்றைப் படித்து முடியும்வரை தொடர்ந்து விவசாயத்தின் முக்கியத்துவத்தை மனத்தில் கொள்ள வேண்டும்.

பொருளடக்கம்

இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு

முதல் பாகம்

1. மேனர் முறை

(The Manorial System)

இங்கிலாந்தின் பெரும்பகுதியில் இடைக் காலம் (Middle Ages) முழுவதிலும் கிராமப்புற அமைப்பின் அலகாக (Unit) மேனர் (Manor) விளங்கியது. நார்மன் வெற்றிக்கு (Norman Conquest) வெகுகாலம் முன்னரே மேனர் முறை இங்கிலாந்தில் வழக்கத்தில் இருந்தது. நார்மன் வெற்றியின்போது மேனர் சாகுபடிமுறை அங்கு நன்கு நடந்துவந்தது.[1] இம் முறை இங்கிலாந்தில் மட்டுமன்றி மத்திய ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா நாடுகள் அனைத்திலும் வழக்கத்தில் இருந்தது. இங்கிலாந்தில் இது எவ்வாறு தோன்றியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இதைப்பற்றிப் பல கருத்துக்கள் உள்ளன. ரோமானிய சாம்ராச்சியத்தில் அடிமை ஊழியர்களால் பயிரிடப் பட்ட பண்ணையாகிய 'வில்'(Vill)விலிருந்து இது தோன்றியிருக்கலாம் எனச் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சுதந்திரக் குடியானவர்களால் ஜெர்மனி நாட்டில் பயிர் செய்யப்பட்ட பிரதேசமாகிய 'மார்க்' (Mark) கிலிருந்து இது தோன்றியிருக்கலாம் என வேறு சிலர் கருதுகின்றனர். தற்போது பல அறிஞர்கள், இடைக் காலத்து மேனர் சாகுபடி முறையானது ரோமானியர், டியூடானியர்[2] ஆகிய இருவருடைய முறைகளினின்றும் தோன்றியிருக்கலாம் என்று கருதுகின்றனர். இது தீர்மானமான முடிவு அன்று; எல்லாரும் ஒப்புக்கொள்ளுமாறு மேனரின் தோற்றம், முதல் வளர்ச்சி பற்றிய பிரச்சினைகள் சிலவற்றிற்கு முடிவு கூறுவது எளிதன்று.

[1] *1086*-ல் எழுதி முடிக்கப்பட்ட டூம்ஸ்டே புத்தகத்தி (Domesday Book) லிருந்துதான் நார்மன் ஆட்சியில் மேனர் முறை நடந்துவந்ததைப் பற்றிப் பெரும்பாலும் நாம் அறிகிறோம். டூம்ஸ்டே புத்தகத்தில் மேனர் என்ற சொல் வரி விதிப்பதற்காகப் பிரிக்கப்பட்ட எந்த ஒரு நிலப் பரப்பையும் குறிக்கிறது. இவ்வதிகாரத்தில் 'மேனர்' என்பது ஒரு பொருளாதார அமைப்பாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவும் டூம்ஸ்டேயில் குறிப் பிடப்பட்ட மேனரும் எல்லா வகையிலும் ஒன்றன்று.

[2] ஜெர்மானிய மக்கள் இனம்.

ஒரு கிராமம், அதைச் சுற்றியுள்ள வயல்கள் இவை சேர்ந்த பெரியதொரு நிலப் பரப்பு மேனர் எனக் குறிப்பிடப்பட்டது.[1] பல மேனர்களைச் சுற்றி மரம், செடிகளாலான வேலியிருந்தது. அதை ஆங்கிலோ சாக்ஸானியர் 'டன்' (Tun) என்றழைத்தனர். மேனரின் எல்லையைக் குறிக்கவும், அதைப் பாதுகாக்கவும் அவ் வேலி பயன் படுத்தப்பட்டது. நல்ல நிலைமையில் வைக்கப்பட்டிருந்தால், அது கொள்ளையர்கள், சட்ட விரோதிகள் எனச் சமூகத்தினுல் விலக்கப் பட்டவர்கள் (Outlaws), வன விலங்குகள் இவற்றினின்று மேனர் மக்களுக்கு நல்ல பாதுகாப்பளிக்கும். ஆனுல், தேர்ச்சி பெற்ற போர் வீரர்களின் படையெடுப்பினின்று பாதுகாப்பளிக்காது. குடியேற்றம் அதிகமாக உள்ள பகுதிகளில் ஒரு மேனரை அடுத்து மற்றொரு மேனர் இருக்கும். இவை இரண்டையும் வேலி பிரிக்கும். தூரமான இடங் களில் எந்த மேனரையும் சாராத புதர் நிலங்களும் (Moor), பாழ் வெளிகளும் (Wilderness) பரந்து கிடந்தன. அவற்றில் காட்டு மிருகங்களும், கொள்ளைக்காரர்களுமே வசித்தனர்.

ஒவ்வொரு மேனருக்கும் ஒரு பிரபு (Lord) உண்டு. ஆனுல், அப் பிரபுவுக்கு அந்த மேனர் 'சொந்தம்' என்று கூறுவது தவருகும். நிலத்தின்மீது பரிபூரண உரிமை அரசனுடையதே. எல்லா நிலங் களும் அவர் வைத்திருக்கிருர்; அல்லது அவரிடமிருந்து பிறர் வாங்கி வைத்துள்ளனர் என்ற கொள்கை அப்போது வழங்கியது. தன் நிலப் பரப்பின் பூரண முதலாளி என்பதைவிட, அதை வைத்திருப்பவர் அல்லது குடியிருப்பவர் என்றே மேனரின் பிரபு கருதப்பட்டார். எனினும், இன்றுள்ள நிலக் குடிமைக்கும் இதற்கும் மாறுபாடு உண்டு. அரசனிடமிருந்தோ, அவரிடமிருந்து பெற்ற மற்ருெரு பிரபுவிடமிருந்தோ மேனரை வாங்கி வைத்துள்ள பிரபுவின் உரிமையை, அவர் ராஜத்துரோகக் குற்றமிழைத்தாலொழிய, யாராலும் பறிக்க முடியாது.

அரசனே ஒரு மேனரின் பிரபுவாக இருக்கலாம். தன் குடிகளில் யாரையும்விட அதிகமான பண்ணைகள் அரசனது ஆதீனத்தில் இருந் தன. அவை அரச நிலங்கள் (Crown lands), அரசர் பண்ணைப் பரப்பு (Royal domain) என்று அழைக்கப்பட்டன. சில சமயம் தன் பரிவாரங்களுக்கு நில மானியங்களை அரசன் அளிக்கும்போது இப்

[1] மேனர்களின் பரப்பளவு மிகவும் மாறுபட்டது. சில, ஒரு 'ஹைடு' (Hide) அளவுக்கும் (அதாவது 120 ஏக்கருக்கும்) குறைவு. எஸெக்ஸில் (Essex) பார்கிங் (Barking) என்ற மேனரின் பரப்பு முப்பது ஹைடுகள். சில மேனர்கள் அதைவிடப் பெரியன.

பண்ணைப் பரப்புக் குறையும்; வேறு சமயங்களில், வாரிசு இன்றி மேனரின் பிரபு இறக்கும்போதும், அரசத் துரோகம் செய்தவர்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும்போதும் அரசர் பண்ணைப் பரப்பு அதிகரிக்கும். சில பெரிய பிரபுக்கள்வசம் பல மேனர்கள் சாதாரணமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நாடு முழுதும் சிதறி இருந்தன. உதவி செய்தவர்களுக்குத் தாராளமாகப் பரிசளிப்பது நார்மன் வெற்றி வீரரது (Norman Conqueror)[1] கொள்கையாக இருந்த போதிலும், பிரான்ஸில் இருந்ததுபோல் ஒரு தொகுப்பாகப் பிரபுக்களின் பெரிய மாநிலங்கள் (Feudal provinces) தோன்றுவதை அவர் தவிர்த்தார். பல சிறிய பிரபுக்கள் வசம் ஒரு மேனர்[2] அல்லது அதிகப்பட்சமாக இரண்டு அல்லது மூன்று மேனர்கள் இருந்தன. இடைக் காலத்தில் இருந்த அத்தகைய பிரபுக்களை நவீன காலத்துக் கிராமப்புறப் பெருநிலக்கிழார்களுடன் (Country squire) ஒப்பிடலாம். பெரிய அளவில் மேனர்கள் திருச்சபையின் (The Church) வசம் இருந்தன. மேற்றிராணியார்கள் (Bishops), மடத் தலைவர்கள், பிற சமயத் தலைவர்கள் ஆகியோர் அம் மேனர்களின் பிரபுக்களாவர். திருச்சபைக்கு மேலும் மேலும் நில நன்கொடைகள் வந்தன. ஆனால், அதன்வசம் இருந்த நிலங்கள் எதுவும் அதன் கையைவிட்டுப் போகவில்லை. எனவே, திருச்சபை நிலங்களின் பரப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.[3]

[1] முதலாம் வில்லியம்.

[2] ஒரே ஒரு மேனர் வைத்திருந்த பிரபுக்களின் எண்ணிக்கை, குறைவே என உறுதியாகக் கூறப்படுகிறது.

[3] ஒரு முக்கியமான சமய அமைப்பின் சொத்துக்களின் பரப்பை இங்கே காணலாம். டூம்ஸ்டே புத்தகம் தயாராகும்போது பார்கிங் மடத்தின் (Barking Abbey) நிலங்கள் பின்வருமாறு: எஸெக்ஸில் (Essex), பார்கிங் (Barking) (முப்பது ஹைடுகள்), மக்கிங் (Mucking) (7 ஹைடுகள்), பல்பான் (Bulphan) (7 ஹைடுகள்), பார்ன்டன் (Parndon) (½ ஹைடு), விஸ்பரோ (Wisborough) (11½ ஹைடுகள்), வார்லி (Warley) (3 ஹைடுகள்), இங்கடஸ்டன் (Ingatestone) (2½ ஹைடுகள்), ஹாக்லி (Hockley) (7½ ஹைடுகள்), டால்ஸ்பரி (Tollesbury) (8 ஹைடுகள்) ஆகிய மேனர்கள்.

மிடில்ஸெக்ஸில் (Middlesex) டைபர்ன் (Tyburn) மேனர்.

பக்கிங்ஹம்ஷயரில் (Buckinghamshire) ஸ்லாப்டன் (Slapton) மேனர்.

பெட்பர்ட்ஷயரில் (Bedfordshire) லிட்லிங்டன் (Lidlington) மேனர்.

சர்ரேயில் (Surrey) வாலிங்டனில் (Wallington) உள்ள நிலங்கள்.

1539 நவம்பர் *14* அன்று பார்கிங் மடம் தன் சொத்துக்களுடன் அரசனிடம் ஒப்புவிக்கப்பட்டது. அப்போது மேற்கூறிய நிலங்களைத் தவிர அதன் வசம் இருந்தவை: எஸெக்ஸில், ஆபட்ஸ் ரூதிங் (Abbots' Roothing), லெடன் ரூதிங் (Leaden Roothing), ஃபாபிங் (Fobbing), சௌத் பென்ஃப்ளீட் (South Benfleet), வால்டம்ஸ்டவ் (Walthamstow), ஹாட்ஃபீல்ட் (Hatfield), டாகன்ஹம் (Dagenham), வெஸ்ட்பரி (Westbury) ஆகியவற்றிலுள்ள பண்ணைகள்; வெஸ்ட் ஹாம் (West Ham), லேடன் (Leyton), வான்ஸ்டட் (Wanstead) ஆகியவற்றின் குடிவாரம்.

மிடில்ஸெக்ஸில் மேரிலபோன் (Marylebone) நிலங்கள், கேம்பிரிட்ஜ்ஷயரில் (Cambridgeshire) ஃபுல்பர்ன் (Fulbourne) மேனர்.

நாட்டின் பெரும் பகுதியில் மேனர் அமைப்பில் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஒற்றுமையிருந்தது. ஆனால், பரிபூரணமாக ஒன்றைப் போலவே மற்றொன்றிருந்தது எனக் கூற முடியாது. சில ஆண்டுகளுக்கு முன் நினைத்திருந்ததைவிட அதிக அளவில் அவை மாறுபட்டன என்று இப்போது நம்பப்படுகிறது. சாதாரணமாக, மேனர்களில் மூவயல் முறைப்படி (Three-field-system) சாகுபடி நடந்தது. ஆனால், சீரான மூவயல் முறையைக் கடைப்பிடிக்காத பல கிராமங்கள் இங்கிலாந்தின் வடக்கிலும் மேற்கிலும் இருந்தன. கிழக்கு ஆங்கிலியாவின் (East Anglia) கிராமங்களில் இம் முறை இருந்ததை நிரூபிக்க முடியவில்லை. இருந்தபோதிலும், பெரும்பாலான பகுதிகளில் ஒரு மேனருக்கும் மற்றொன்றுக்கும் போதுமான ஒற்றுமையிருந்ததால் மேனரின் விசேஷ அமைப்புப்பற்றிப் பொதுப்படையாக விவரிக்க முடியும்.

சாதாரணமாக ஒரு மேனரின் கட்டடங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து நெருக்கமான ஒரு கிராமமாக அமைந்தன.[1] ஏதாவது ஒரு சில கிராமங்களில்தான் வீடுகள் தனித் தனியாக இருந்தன. அதுவும் இங்கிலாந்தின் கிழக்கு அல்லது தென்கிழக்குப் பகுதிகளைவிட மேற்குப் பகுதியில்தான் சாதாரணமாகக் காணப்பட்டது. மேனரின் மிக முக்கிய கட்டடம் மேனர் வீடு (Manor-house). சாதாரண மக்களின் சிறு வீடுகளைவிடத் திண்மையாக அது கட்டப்பட்டது. அச் சிறு வீடுகள், மரத்தாலோ அல்லது குச்சிகள் முடைந்தோ அமைக்கப்பட்டன; புல் அல்லது கீற்றுக் கூரையைக் கொண்டிருந்தன; எல்லா வகையிலும் பயன்படும் ஓரிரு அறைகள் கொண்டிருந்தன. மேனர் வீடு சில சமயம் மரத்தால் கட்டப்பட்டது. ஆனால், அநேகமாக அது கல் கட்டடமே; அது மாடி வீடு; பல அறைகள் கொண்டது. அறைகளில் பெரியது ஒரு கூடம் (Hall). அதில்தான் பொதுவாக மேனர் நீதிமன்றக் கூட்டங்கள் நடக்கும். அவ் வீட்டுடன் இணைந்து தானியக் களஞ்சியமும், பிற வெளிக் கட்டடங்களும் இருந்தன. அதில் மேனரின் பிரபு வசித்தார்.

லண்டனில் ஆல் ஹாலோஸ் பார்கிங் (All Hallows Barking), செயின்ட் மார்கரெட்ஸ் லாத்பரி (St. Margaret's Lothbury) ஆகியவற்றில் திருக்கோயில் பதவிகளுக்கு ஆளமர்த்தும் உரிமைகள்.

[1] இந்த 'நெருக்கமான' (Compact) அல்லது 'மையமான' (Nucleated) அமைப்பு விவசாயத்துக்கு ஏற்றதாக இருந்தது. கிராமத்தாருடைய நிலங்கள் எல்லாப் பக்கங்களிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருந்ததால், மத்தியில் வசிப்பது வசதியாக இருந்தது. வீடுகள் சிதறியிராததால், பரந்த வெளிகளில் நிலங்களைத் துண்டிட்டுப் பங்கிடுவது எளிதாயிற்று. கால்நடை மேய்ப்பில் ஈடுபட்டிருந்த கிராமங்களுக்கு வீடுகள் சிதறி அமைந்த முறை ஏற்றதாக இருந்தது.

பிரபுவுக்குப் பல மேனர்கள் இருந்ததால், அவரது தல அதிகாரி (Bailiff) அதில் வசித்தார். மேனரும் திருச்சபைப் பாரிஷும் (Parish) ஒன்ருக இருந்ததால், அதில் ஒரு கோயிலும் (Church), அதன் அருகில் மத குருவுக்கு ஒரு வீடும் இருந்தன. அவ்வாறு பல மேனர்கள் இருந்தன.[1] ஓடைக் கரையில் மாவரைக்கும் இயந்திர சாலை (Mill) ஒன்றும் மேனரில் இருக்கும். வசதியான ஓடை ஏதும் இல்லாவிடில், ஒரு குன்றின்மீது காற்ருடி இயந்திரம் ஒன்று அமைக்கப்படும்.[2]

தன் தேவைகள் அனைத்தையும் தானே பூர்த்தி செய்து கொள்வது மேனர் அமைப்பின் குறிக்கோளாகும். அதன் குடிமக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் அங்கேயே உற்பத்தி ஆக வேண்டும் என்றும், அங்கு உற்பத்தியான தனைத்தையும் அவர்கள் பயன்படுத்தவேண்டும் என்றும் கருதப்பட்டது. சுயதேவைப் பூர்த்தி பரிபூரணமாக நிறைவேறவில்லை. ஆனுல், அக் குறிக்கோளின் படி வெளியாருடன் வாணிபம் செய்வது நல்லதன்று என்றும், அதைக் கூடுமானவரை குறைக்கவேண்டும் என்றும் அப்போது கருதப் பட்டது. சுயதேவைப் பூர்த்தியில் பெரும் அளவுக்கு அப்போது வெற்றி காணப்பட்டது. மேனரில் விளைந்த கோதுமையை இயந் திரத்தில் அரைத்து ரொட்டி சுட்டனர். பார்லி (Barley) தானியத்தை ஊறவைத்து முளை வந்ததும் மால்ட் (Malt) செய்து, அதனின்று 'ஏல்' (Ale) மதுவைத் தயாரித்தனர். ஆடு மாடுகளின் இறைச்சியும், பாலும், முட்டைகளும் மேனரிலேயே உற்பத்தியாயின. ஆட்டு உரோமத்தினின்று கம்பளி நூல் குடிசைகளில் தயாராயிற்று. அதை முரட்டுத் துணிகளாக அங்கேயே நெய்தனர். தோலைப் பதனிட்டு அதனின்று காலணிகள் தயாரித்தனர். கட்டடங்களுக்குத் தேவை யான மரம் ஒவ்வொரு மேனரிலும் வேண்டுமளவு கிடைத்தது. சில சமயம் தேவையான கற்களும் அங்கேயே கிடைத்தன. எனினும், எந்த மேனரும் தன் தேவைகளனைத்தையும் தானே முழுவதும் பூர்த்தி செய்ய முடியவில்லை. மேனரின் பெண்களுக்காகப் பட்டு, வெல் வெட் (Velvet) துணிகள், லேஸ் கரைகள் (Laces), நாடாக்கள் (Ribbon) ஆகியவற்றை வெளியில் வாங்கவேண்டியிருந்தது. துணி களைத் தைக்கவும், பழுது பார்க்கவும் ஊசி, நூல் வேண்டியிருந்தது.

[1] இன்றைய கிராமப் பாரிஷின் பரப்பு, பலவற்றில் இடைக் கால மேனருக்குச் சமம்.

[2] எனவே, கிராமத்து இயந்திரம் பொதுவாக, கிராமத்தில் மிக உயர மான அல்லது தாழ்வான இடத்தில் இருக்கும். பன்னிரண்டாம் நூற் ருண்டிலேயே காற்ருடி இயந்திரங்கள் பயன்பட்டதாகத் தெரிகிறது.

மர வேலைக்கு ஆணிகள் வாங்கவேண்டியிருந்தது. இரும்பு, எஃகுக் கருவிகளும், ஆயுதங்களும் தேவைப்பட்டன. உணவைப் பாதுகாக்க உப்பும், ஆடுகளை வியாதிகளினின்று காப்பாற்றத் தாரும் (Tar) வேண்டியிருந்தன. இவ்வாறு பலவகைப் பொருள்களை வெளியிலிருந்து வாங்கவேண்டியிருந்ததால், அதற்காக மேனரின் உபரி உற்பத்தியை விற்கவேண்டியிருந்தது. பட்டணங்களின் ஜனத்தொகை அதிகமாக இருக்கவே, அவர்கள் அனைவருக்கும் தேவையான உணவை அங்கேயே பயிரிட முடியவில்லை. எனவே, அதற்காக அருகிலிருந்த கிராமங்களிலிருந்து உணவுப் பொருள்கள் நகரச் சந்தைக்கு வந்தன. ஆக, சுயதேவைப் பூர்த்தி அடைய முடியாத குறிக்கோளாகவே இருந்தது. எனினும், வெளி வாணிபத்தைக் கூடுமானவரை குறைப்பது நல்ல நிருவாகத்துக்கு அறிகுறியாகக் கருதப்பட்டது.

இடைக் கால மேனரின் பொருளாதார விவகாரங்களில் பண்டமாற்று முறை நிலவியது. கீழே குறிப்பிட்டுள்ளபடி பொருள்கள் ஒன்றுக்கு ஒன்று மாற்றிக்கொள்ளப்பட்டன. மாவரைப்பவன், சக்கரம் செய்பவன், கருமான், கிராமக் கைவினைஞன் ஆகியோருக்கு ஊதியமாகத் தானியம், உரோமம், முட்டைகள், பிற பொருள்கள் ஆகியவை தரப்பட்டன. மேனர் விவகாரங்களில் காசு அதிகமாகப் பயன்படவில்லை. அருகிலிருந்த அங்காடிகளுக்கு உபரி உற்பத்தியை எடுத்துப் போகும் வழக்கம் தொடங்கியதும்தான் பணம் அதிகமாகப் பயன்பட்டிருக்கவேண்டும். ஊரூராகத் திரிந்து பொருள் விற்பவர்களிடமும் பணம் கொடுக்காமல் பொருள்களைக் கொடுத்து வாணிபம் செய்திருக்க முடியாது.

மேனர் நிலங்கள் பின்வருமாறு பிரிக்கப்பட்டன: டிமீன் (Demesne) அல்லது உள்நிலம் (Inland), இது பிரபு வைத்திருப்பது; வில்லனேஜியம் (Villenagium) அல்லது வெளிநிலம் (Outland), இது பண்ணையாட்களுக்கு (Serfs) அளிக்கப்பட்ட நிலம். அவர்களுக்கு அந் நிலத்தின்மீது சட்டபூர்வமான உரிமை ஏதும் இல்லை. வழக்கத்தின் காரணமாக அவர்களுக்கு அதன் சாகுபடி உரிமையிருந்தது. சட்டப்படி அவர்கள் நிலம் பிரபுவைச் சேர்ந்தது. அவர்களது நிலத்தைவிட்டுப் பண்ணையாட்களை அகற்றும் உரிமை அவருக்கு இருந்தது. அவரது சொந்த நிலங்களுக்குச் சாகுபடிக்கு ஆட்படை இல்லாமல் போய்விடுமாதலின், அவ்வாறு செய்வது அவருக்கு நல்லதல்ல. தன் பண்ணையாட்களை வெளியேற்றும் பிரபுவினால் அவரது மேனரே நாசமாகும். இருந்தபோதிலும், இடைக் காலச் சட்ட அறிஞர்களின் கருத்தின்படி பண்ணையாட்களின் நிலங்

களும், மேனருக்குள் பரந்து கிடக்கும் பாழ் நிலங்கள், வன நிலம், புல் வெளிகள் ஆகியவையும் பிரபுவின் உள்நிலத்தின் பகுதிகளாகும்.[1] சுதந்திரக் குடியானவர்களின் (Free men) நிலங்கள் போக, மேனர் முழுதுமே டிமீனில் சேர்ந்தது எனக் கூற முடியும். கிழக்கு மாவட்டங்களில் (County) சுதந்திரக் குடியானவர்களின் தொகை கணிசமாக இருந்தது ; பிற இடங்களில் அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே.

மேனரின் நிலங்கள் பலவகையில் பயன்பட்டன. மக்களின் முக்கியத் தொழில் விவசாயம் ; எனவே, சாகுபடி நிலங்கள் மிக முக்கியமானவை. சாகுபடி நிலப் பரப்பு இரண்டு அல்லது மூன்று பெரிய வயல்கள் கொண்டதாகும்.[2] ஒவ்வொரு வயலும் அகலமான நெடுந் துண்டுகளாகப் (Belts) பிரிக்கப்பட்டன. இவற்றைப் பர்லாங்கு (Furlong), ஷாட்டு (Shot), ப்ளாட்டு (Flat) என்று பல வகையாக அழைத்தனர். இந் நெடுந் துண்டுகள் சிறு துண்டுகளாகப் (Strips) பிரிக்கப்பட்டன. ஒரு ஷாட்டின் அகலமும், ஒரு துண்டின் நீளமும் ஒரு பர்லாங்கு ஆகும். ஓர் உழவுகாலின் நீளம், அதாவது ஓர் ஏர்க்குழு மூச்சுவிடாமல் ஒரு முறை உழக்கூடிய நீளம், ஒரு பர்லாங்கு ஆகும். மணற்பாங்கான நிலத்தில் களிமண் நிலத்தைவிட ஏர்க்குழு ஓய்வு எடுக்குமுன் அதிக தூரம் செல்லமுடியும். எனவே, பர்லாங்கின் தூரம் மாறுபட்டது. நாளடைவில் அது நாற்பது கோல் (Rod) அளவு என ஒருசீராகக் கணக்கிடப்பட்டது. துண்டின் அகலம் மேனருக்கு மேனர் மாறுபட்டபோதிலும், ஒரே மேனருக்குள் எல்லாத் துண்டுகளின் அகலமும் ஒன்றே. அது ஒன்று, இரண்டு அல்லது நான்கு கோல்களாக இருக்கலாம். அப்படியாயின், துண்டின் பரப்பு முறையே கால் ஏக்கர், அரை ஏக்கர் அல்லது ஓர் ஏக்கராக இருக்கும்.[3] பெரிய சாகுபடி வயல்களிலே வேலிகள் இல்லை. வரிசை

[1] மேனரில் இருந்த நிலம் சட்டப்படி யாரைச் சேர்ந்தது என்பது முக்கியமானதொரு பிரச்சினையாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் நிலங்களுக்கு வேலியமைக்கும் பேரியக்கத்தின் காலத்தில் நிலப் பங்கீட்டை இது மிகவும் பாதித்தது.

[2] மிகப் பெரிய மேனர்களில் வயல்களின் எண்ணிக்கை மூன்றின் பெருக்கல் தொகைகளாக இருந்தது.

[3] இந்த அளவுகள் ஒரே சீரானவையல்ல ; தல வழக்குக்கு ஏற்ற வாறு மாறின. அகலம், நீளம் இரண்டும் இடத்துக்கு இடம் மாறுபட்டன. தவிர நெடுநாட்கள் கோலுக்குச் சரியானதொரு அளவு ஒப்புக்கொள்ளப் படவில்லை. ஏர்க்குழுவில் எருதுகளுக்கு இடையிலிருந்த கோலின் தூர மாக அது கொள்ளப்பட்டது. இடைக்காலத்தின் பிற்பகுதியில்தான் அது ஐந்தரை துணி கஜமாக, ஒருசீராக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆக, ஒரே மேனருக்குள் 'ஏகரா'க்களின் அளவு ஏறக்குறையச் சமமாக இருந்த போதும், ஒரு ஏகராவின் அளவு மேனருக்கு மேனர் நிறைய மாறு பட்டது.

யாகக் கற்களை வைத்தோ, ஓர் ஏர்க்கால் அகலத்துக்கு உழாமல் விட்ட புல் வரப்பாலோ துண்டுகளின் வரம்பு குறிக்கப்பட்டது.[1] ஒரு ஷாட்டுக்கும் மற்றொன்றுக்கு மிடையே அதைவிட அகலமான புல் தரை இருந்தது. அப் புல் தரைகள் தலைநிலங்கள் (Headlands) என்று அழைக்கப்பட்டன. ஏர்க்குழு திரும்ப வேண்டிய அளவுக்கு இத் தலை நிலங்கள் அகலமாக இருந்தன.[2]

சில துண்டுகளைப் பிரபுவும், சிலவற்றைக் கிராமத்தாரும் பயிரிட்டனர். எந்த விவசாயியின் துண்டுகளும் அம் மூன்று வயல்களிலும் சிதறிக் கிடந்தன. இவ்வாறு இருப்பதற்குப் பல காரணங்கள் ஊகிக்கப்பட்டுள்ளன. நிலத்தைப் பண்படுத்தப் பல விவசாயிகள் ஒன்று சேர்ந்து உழைத்தனர் என்பது பொதுவாகக் கூறப்படுகிற காரணம். ஒருவன் ஏர் தருவான்; சிலர் மாடுகள் அனுப்புவர்; வேறு சிலர் தம் உழைப்பினை நல்குவர். ஓர் ஏக்கர் துண்டு உழ ஒரு நாள் பிடிக்கும். எனவே, ஒருவர்பின் ஒருவராக முறையாக ஒவ்வொரு துண்டினைப் பெற்றனர். இக் கொள்கையைத் திருத்தம் இன்றி ஒப்புக்கொள்வது கடினமே.[3] இது உண்மையாயிருப்பின் முதற் சில துண்டுகளின் சொந்தக்காரர்களே மறுபடி அதே வரிசையில் ஷாட்டின் அடுத்த சிலவற்றின் சொந்தக்காரர்களாக இருக்கவேண்டும். அடுத்தடுத்து வரும் தசாம்ச பின்னம்போல (Recurring decimal) இது அமைந்திருக்கவேண்டும்.[4] ஆனால், சாதாரணமாக அப்படி இல்லை. மேலும்,

[1] சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கிடையே புல் வரப்பு இருந்தது என்பதை இன்று எல்லோரும் ஒப்புக்கொள்வதில்லை. இக் கருத்துக்கு ஆதாரமே இல்லை எனச் சிலர் எழுதியுள்ளனர். ஆனால், புல்வரப்புகள் இருந்ததற்குச் சான்று உள்ளது. *1563*ஆம் ஆண்டைய திருக்கோயில் நீதிமொழி ஒன்று (Homilies of 1563) 'பொது வரப்புகளுக்கும், நடைபாதைகளுக்கும் மிக அருகில் உழுபவர்களைக்' (Men who 'plow up so nigh the common balkes and walkes') கண்டிக்கிறது. மேலும், *18*ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து வந்த ஸ்வீடிஷ் யாத்திரிகரான பீடர்காம் (Peterkalm), 'ஐவிங்ஹோவின் (Ivinghoe) வேலியற்ற வயல்களில், ஒரு விவசாயியின் துண்டு நிலத்துக்கும், மற்றொருவரின் நிலத்துக்கும் நடுவே இரண்டடி வரப்பு இருந்தது' என்று எழுதியிருக்கிறார். உண்மையில் இங்கிலாந்தின் பல பாகங்களில் பலவகைச் சாகுபடி முறைகள் இருந்தன. ஆகவே, சில இடங்களில் வரப்பு இல்லாததால் வேறு எங்கும் இல்லை என்று முடிவு கட்டிவிட முடியாது.

[2] நிலத்தைப் பங்கிடுவது இங்கு விவரித்தபடி அவ்வளவு கணிதச் சீராக (Mathematically regular) இல்லை. அது நிலத்தின் அமைப்பைப் பொறுத்திருந்தது. ஒரு ஷாட்டின் முடிவில் 'கோர்' (Gore) என்று அழைக்கப்பட்ட முக்கோணத் துண்டுகளும் இருந்தன.

[3] முறையாக ஒருவருக்குப் பின் ஒருவருக்கு நிலம் பங்கிடு செய்யப்பட்டதென்ற கருத்தை ஸீபோம் (Seebohm) ஆதரிக்கிறார்; வினோக்ரடாப் (Vinogradoff) மறுக்கிறார். யாவரும் சமமாகப் பாவிக்கப்படவேண்டும் என்ற கொள்கையே நிலங்கள் இவ்வாறு சிதறிக் கலந்திருப்பதன் காரணம் என்று வினோக்ரடாப் கூறுகிறார்.

[4] சில இடங்களில் துண்டுகளின் பங்கீடு ஓரளவு வரிசையாக இருப்பது புலப்படுகிறது.

ஓர் ஏரும், மற்றும் அதற்குத் தேவையான மாடும், ஊழியரும் உடைய ஒருவனுடைய துண்டுகள் அனைத்தும் ஒரே இடத்தில் சேர்ந்திருக்க வேண்டும்; அவ்வாறும் இல்லை. இம் முறையின் இயல்புகள் அனைத்துக்கும் தக்க காரணம் காட்டும் கருத்து ஏதும் நமக்குத் தெரியாவிட்டாலும், இம் முறையின் குறிக்கோள் நமக்குப் புரிகிறது. நிலத்தின் தரம் மாறுபட்டது. ஒரு விவசாயியின் நிலம் அனைத்தும் ஒரே இடத்தில் பெரிய துண்டாக அமைந்திருந்தால், ஒருவனது நிலத்தை விட மற்றொருவனது நிலம் தரம் குறைந்திருக்கும். (வளமற்ற நிலத்தைச் சீர்செய்ய வழியொன்றும் தெரியாத அக்காலத்தில் இது மிக அவசியமாகும்.) தவிர, ஒருவன் நிலங்கள் அவன் வீட்டுக்கு வெகு அருகில் இருக்கலாம்; மற்றொருவனது நிலமோ ஓரிரு மைல் தூரத்தில் இருக்கலாம். எனவே, துண்டு நில முறை மூலம் நன்மை தீமைகளை அனைவரும் சமமாகப் பங்கிட்டுக்கொண்டனர். இன்னாருக்கு இன்ன துண்டு என்பதை முதலில் சீட்டுக் குலுக்கிப் போட்டு ஏற்பாடு செய்திருக்கலாம்.

அநேக மேனர்களில் பரவலான ஒரு புல்வெளி இருந்தது. அறுவடைக்காகப் புல் வளர்ந்த இங்குக் கால்நடைகளை அனுமதிப்பது இல்லை. இங்கு விளைந்த வைக்கோல் (உலர்ந்த புல்) மாடுகளுக்குப் பனிக் கால உணவாகும். ஒவ்வொரு விவசாயிக்கும் அவனிடமுள்ள மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அறுவடையில் பங்கு உண்டு. தாழ்ந்த குச்சி வேலிகளால் இப் புல்வெளி பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவனவன் தன் புல்லை அறுத்துக்கொண்டான். ஆண்டுக்காண்டு துண்டுகளின் பங்கீட்டில் மாறுதல் இருந்திருக்கலாம். இலையுதிர் காலத்தில் இரண்டாவது புல் அறுவடைக்குப் பின் இங்கு மேயக் கால்நடைகள் அனுமதிக்கப்பட்டன.

முன்னேற்றம் அடைந்த சில மேனர்களில், பிரபுவுக்குச் சொந்தமான அல்லது அவரால் நல்ல தொகைக்குக் கிராமத்தில் வசதியுள்ள விவசாயிகளுக்கு வாரத்துக்கு விடப்பட்ட வேலியிட்ட நிலங்கள் இருந்தன. இந்த 'அடைத்த நிலங்கள்' (Closes) சாகுபடி நிலமாகவோ புல்வெளியாகவோ இருக்கலாம். சாகுபடி நிலமாக இருந்தால், வேலியற்ற அதே தரமுள்ள வேறு நிலங்களைவிட அதிக மகசூல் இதில் விளையும். மக்கள் தொகை பெருகிவந்த மேனர்களில் இவை அமைக்கப்பட்டிருக்கலாம். புது வேலியிட்ட நிலங்களைப் புறம்போக்குகளில்தான் (Wastes) அமைக்க முடியும். 1235-ல் மெர்டன் சட்டம் (The Statute of Merton), திருவீரர்களுக்கும் (Knights) சுதந்திரக் குடியானவர்களுக்கும் (Freeholders) தேவையானது

போக மீதி பாழ் நிலங்களில் (Wastes) வேலி யமைப்பதை அனுமதித்தது.

இவை போக, மேனரில் மிகுந்த பகுதி 'சாம்பியன்' (Champion) எனப்பட்ட பாழ் நிலம். 'பாழ் நிலம்' என்பதால் சிறிதும் பயனற்றது என்று பொருளல்ல. அதில் பெரும்பகுதியில் மேனரின் ஆடு மாடுகள் மேய்ந்தன. இந்தப் பொது மேய்ச்சலிடம் இல்லாமல் இருந்தால், மேனர் சாகுபடி முறையை நடத்தியே இருக்க முடியாது. சில மேனர்களில் மேய்ச்சல் நிலம் போதவில்லை. அதனால், அவ்வூரார் தம் கால்நடைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. சில மேனர்களில் வேண்டுமளவுக்கு மேய்ச்சலிடம் இருந்தது. பொது மேய்ச்சலிடமாக ஒப்புக்கொள்ளப்பட்டதைத் தவிர, மேனரின் கோடியில் பயன்படுத்தப்படாத சில கரடுமுரடான இடங்களும் இருந்தன. எப்போதாவது கால்நடை மேய்க்கவும், புல் வெட்டிக்கொள்ளவும் அவை பயன்பட்டன. பாழ் நிலத்தில் மேனரின் பொது வன நிலமும் (Woodland) சேர்ந்திருந்தது. அங்கிருந்து வீடு, ஏர், வண்டி ஆகியவற்றிற்காக மரமும், எரிப்பதற்கு விறகும், சுள்ளிகளும் சேகரிக்கப்பட்டன. இவ் வுரிமை 'காமன் ஆப் எஸ்டோவர்' (Common of Estover) என்று கூறப்பட்டது.

மேனரில் வசித்தவர்களைச் சுதந்திரமானவர்கள் (Free), தளையுற்றவர்கள் (Unfree) என்று பிரிக்கலாம். அநேகமாக ஒவ்வொரு மேனரிலும் பின் வகையைச் சேர்ந்தவரின் எண்ணிக்கையே அதிகம்.[1] மேனரின் பிரபு,[2] அவரது தல அதிகாரி, கிராம மத குரு (Priest), மற்றும் சாதாரணமாக வாரம் செலுத்தும் சாக்மென் (Socmen) என்றழைக்கப்படும் பல விவசாயிகளும், பல சுதந்திர மக்களும் (Liberi Homines) தளையற்றவராவர். ஆனால், சுதந்திரமற்றவர்கள் தாம் பொருளாதார முக்கியத்துவம் அதிகம் படைத்த வகுப்பினர் ஆவர். அவர்கள்தாம் மேனரின் உழைப்பனைத்தையுமோ, அதில் பெரும் பகுதியையோ அளிக்கின்றனர். அவர்கள் தம் நிலத்தோடு தம் பிரபுவின் நிலத்தையும் சாகுபடி செய்தனர்.[3] இது எல்லா மேனர்களிலும் நடந்துவந்தது. எனவே, டிமீன் நிலத்தைத் தளையுற்ற

[1] டூம்ஸ்டே நூலிலிருந்து, அது தயாரானபோது, கிராமப்புற மக்கள் தொகையில் 70% பண்ணையாட்கள் எனத் தெரிகிறது. அவர்களில் 38% வில்லின்கள் (Villeins), 32% போர்டர்கள் (Bordars) அல்லது காட்டர்கள் (Cottars). கிழக்கு மாவட்டங்களில் சுதந்திரக் குடியானவர்களின் சதவிகிதம் கணிசமாக உயர்ந்திருந்தது.

[2] பிரபு அந்த மேனரிலேயே குடியிருப்பார் என்பதற்கில்லை.

[3] அவர்களது உழைப்புக்கு ஊதியம்தான் வில்லின்கள் வைத்துள்ள நிலங்கள்; அல்லது அந் நிலங்களுக்கு வாடகையாகத்தான் அவர்கள் தம்

குடியானவரது உழைப்பினுல் சாகுபடி செய்வது மேனர் முறையின் அடிப்படை இயல்பாகக் கருதப்படுகிறது. சில அடிமைகளும் இருந்தனர்; ஆனுல், பன்னிரண்டாம் நூற்ருண்டின் மத்தியில் அடிமை வழக்கம் மறைந்துவிட்டது.[1] தளையுற்றவர்கள், பண்ணையாட்கள் **(Serfs)** இவர்கள் நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அவ்விடத்தை விட்டுப் போகலாகாது. பிரபுவுக்கு வேலை செய்யும் கடமை அவர்களுக்கு இருந்தது.[2] அவர்களில் சிலருக்கு வில்லின்கள் **(Villeins)** என்றும், பிறருக்கு போர்டர்கள் **(Bordars),** காட்டர்கள் **(Cottars)** என்றும் பெயர். சட்டப்படி இவ் வகுப்புகளுக்கிடையே வேற்றுமை ஏதும் இல்லை. ஆனுல், பொருளாதார வசதிகளில் வேறுபாடு இருந்தது. போர்டர்களைவிட வில்லின்கள் வசதியுடன் வாழ்ந்தனர்.

பண்ணையாட்களுக்குச் சட்டப்படி அவர்களது பிரபுக்களுக்கு எதிராக உரிமை ஏதும் இல்லை. ஆனுல், பிற மக்களுக்கு எதிராகத் தெளிவான உரிமைகள் அவர்களுக்கு இருந்தன. (கீழே குறிப்பிடப்பட்ட காரணத்துக்காகவன்றித்) தன் பிரபுவின் மீது ஒரு பண்ணையாள் அரச நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியாது.[3] ஆனுல், பிறர் மீது வழக்காடலாம். ஆனுல், சட்டத்தைவிட வழக்கத்தையே அதிகமாக, அடிப்படையாகக் கொண்டு இடைக் காலச் சமுதாயம் அமைந்திருந்தது. சட்டப்படியான உரிமைகளுக்குச் சமமாக நிலையான உரிமைகளை சமுதாய வழக்கின் காரணமாகப் பண்ணையாட்கள் பெற்றிருந்தனர். அவ் வழக்கத்தின்படி, தன் வீடு, தோட்டம், நிலவுடைமை, புல் அறுவடையில் பங்கு ஆகியவற்

உழைப்பை அளிக்கின்றனர் எனக் கொள்ளத் தோன்றலாம். ஆனுல், இடைக் கால வழக்கொன்றை நவீன கால ஒப்பந்தம் **(Contract)** ஒன்றுக்கிணையாக இது கருதுவதாகும். பிரபு, பண்ணையாள் இருவருமே இதை இவ்வாறு கொள்ளவில்லை என்பது திண்ணம்.

[1] அடிமைகள் போர்டர் **(Bordar)** வகுப்புடன் ஒன்றிவிட்டனர்.

[2] தளையுற்ற குடிமைக்காரர்களின் தோற்றம் பற்றி மிகப் பொறுமையாக ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இவ் விஷயத்தை இந் நூலில் விவரிப்பது இயலாது. பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தைச் சுருக்கமாகக் கூறலாம். ஆங்கிலோ சாக்ஸானியர் காலத் தொடக்கத்தில் பொதுவாகத் தளைகள் ஏதும் இல்லை. நாளடைவில் குடியானவர் பிரபுவின் பாதுகாப்பைப் பெறுவதற்கு ஈடாகத் தங்களைச் சமர்ப்பித்துக் கொண்டதால், அவர்களது சுதந்திரம் மறைந்து வந்தது. நார்மன் வெற்றிக்குப் பின், முன்னர் சுதந்திரமாக இருந்த மேலும் பல குடியானவர்கள் இவ்வாறு தாழ்வு அடைந்தனர். நார்மன் வெற்றிக்குப் பின் பல காலம் இது தொடர்ந்து நடந்தது. பதின்மூன்ரும் நூற்ருண்டுக்கும், பதினைந்தாம் நூற்ருண்டுக்கும் இடையே தளைகள் நீங்கத் தொடங்கின. பின்னர் விவரித்துள்ளபடி பண்ணையாண்மை மறையத் தொடங்கியது.

[3] அவ்வாருன வழக்கில் பிரபு ‘இவன் எனது வில்லின்’ என்று விடையளித்தால் போதும், வழக்கு தள்ளுபடியாகும்.

திற்குப் பண்ணையான் ஒவ்வொருவனுக்கும் உரிமை இருந்தது. பொது மேய்ச்சல் இடத்தில் தன் கால்நடைகளை அவன் மேயவிடலாம். காட்டில் அவனது பன்றிகள் கருவாலிக்கொட்டைகளை (Acorns) தோண்டித் தின்னலாம். தன் வீட்டையோ, கலப்பையையோ, வண்டியையோ பழுதுபார்க்க மரம் வெட்டிக்கொள்ளலாம். வேலை செய்யவேண்டிய கடமை இருந்தாலும், மேனரின் வழக்கத்தின்படி சில திருநாட்களில் அவனுக்கு விடுமுறை உண்டு.

ஒரு முழு வில்லின் (Full Villein), ஒரு வர்கேட் (Virgate) அல்லது யார்ட்லண்ட் (Yardland) அளவு நிலத்தை வேலியற்ற வயலில் பெற்றான். அதாவது, ஒவ்வொரு வயலிலும் பத்து ஏக்கர் (அது சாதாரணமாக முப்பது ஏக்கர்; ஒவ்வொருவருக்கும் அவ்வளவே என்று சொல்ல முடியாது). அவனைச் சாதாரணமாக வர்கேடர் (Virgater) அல்லது யார்ட்லிங்கு (Yardling) என்று அழைத்தனர். அரை வில்லினிக்கு (Half Villein), போவேட் (Bovate) அல்லது ஆக்ஸ்-காங்கு (Ox-gang) என்று கூறப்பட்ட பதினைந்து ஏக்கர் நிலம் கிடைத்தது. போர்டர்களுக்கும் காட்டர்களுக்கும் கிடைத்தது அதைவிட மிகக் குறைவு; அதாவது, ஒன்றிலிருந்து ஐந்து ஏக்கர் வரை. சாதாரணமாக, தகப்பனது நில உரிமையை அவனுக்குப் பின் மகன் பெற்றான். இடைக் காலத்தின் பிற்பகுதியில் வில்லின் நிலங்களின் அளவு இவ்வளவு சீராக இல்லை. எனினும், பழைய வர்கேட்டுக்குப் பொருத்தமான ஒரு விகிதத்தில் அமைந்திருந்தது. உதாரணம், 22½ ஏக்கர், 37½ ஏக்கர், 45 ஏக்கர் போன்று நிலத்தை அளவுக்கு மீறித் துண்டாடுவது தவிர்க்கப்பட்டது. நிலத் துண்டுகள் அப்படியே இருந்தால்தான் பிரபுவுக்கு நல்லது; அப்போதுதான் பண்ணையாட்கள் தம் கடமைகளைச் செய்ய முடியும். மிகச் சிறிய நிலமுடையவனிடம் மாடுகள் வைத்திருக்கும் வசதி இருக்காது. எனவே, அவனால் உழ முடியாது.

மேனரின் வழக்கப்படி பிரபுவுக்கு வில்லின் செய்யவேண்டிய கடமைகள் சில இருந்தன. வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் பிரபுவின் நிலத்தில் அவன் வேலை செய்யவேண்டும். வாரத்துக்கு எத்தனை நாள் இவ் வேலை என்பது மேனருக்கு மேனர் மாறுபட்டது. அரசன் மேனர்களில் பொதுவாக இது இரண்டு நாட்கள்தான். பிற மேனர்களில் பெரும்பாலானவற்றில் இது மூன்றாக இருந்திருக்கலாம். ஐரோப்பாவின் சில பகுதிகளில் பண்ணையாட்கள் தம் பிரபுக்களுக்காக வாரத்தில் ஆறு நாட்கள்வரை கூட வேலை செய்யக் கடமைப்பட்டிருந்தனர். ஆனால், ஆங்கிலப் பண்ணை

யாட்கள் வாரத்துக்கு மூன்று நாட்களுக்கு மேல் வேலைசெய்யக் கடமைப்பட்டிருந்தது அரிது.[1] வில்லின்கள் எம் மாதிரி வேலைகளைப் பிரபுக்களுக்காகச் செய்யவேண்டும் என்பது திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை. உழுதல், விதைத்தல், அறுவடை செய்தல், வண்டியில் ஏற்றிச் செல்லுதல், மரம் வெட்டுதல், ஆடுகளைக் கழுவுதல், உரோமம் வெட்டுதல், வேலியைப் பழுதுபார்த்தல் ஆகியவையோடு, மேனரின் விவசாயம் சம்பந்தப்பட்ட வேறு எந்த வேலையையும் அவன் செய்யவேண்டியிருக்கலாம். உழுவதற்கு அவன் தன் ஜோடிக் காளைகளைக் கொண்டு வர வேண்டும். ஓர் ஏக்கர் நிலத்தை உழுவது ஒரு நாள் வேலையாகக் கருதப்பட்டது. அதைச் சாதாரணமாக ஒரு 'வேலை' (A work) என்று அழைத்தனர். எப்போதும் அதற்கு ஒரு முழு நாளும் செலவழியாது. அந்த வேலை முடிந்ததும் வில்லின் தன் நிலத்துக்குத் திரும்பிவிடலாம். சில சமயம் அவனது வார வேலையைச் செய்ய ஒரு பதிலாளை அனுப்ப அனுமதிக்கப்பட்டிருக்கலாம். தனக்குப் பதிலாகத் தன் மகனையோ, கூலி கொடுத்து மற்றொரு ஆளையோ அவன் அவ் வேலைக்கு அனுப்பலாம். விதைப்பு, அறுவடை போன்று நிறைய வேலையிருக்கும் சமயங்களில், வில்லின் சாதாரண சமயத்தைவிட அதிக வேலை செய்யவேண்டியிருக்கும். அது தரும வேலை (Boon-work) என்று அழைக்கப்பட்டது. அச் சமயங்களில் மேனரிலிருந்த அனைவரும் பிரபுவின் பண்ணையில் உழைத்துக் கொண்டிருப்பார்களாதலின், வில்லின் தானே வந்து தரும வேலையைச் செய்யவேண்டியிருந்தது. தரும வேலை நாட்களில் அவனது மனைவியைத் தவிர, வில்லினின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அவனுடன் பிரபுவின் பண்ணைக்கு வேலைக்கு வரவேண்டும். தரும வேலை செய்பவர்களுக்குப் பிரபு உணவளிப்பார். இது தவிர, எந்தச் சமயத்திலும் பிரபுவுக்காக வண்டியில் சுமை ஏற்றிச் செல்வதற்காக வில்லின் தன் வேலையை விட்டு விட்டுப் போகவேண்டியிருக்கும். ஆனால், இவ் வேலையின் அளவும், வருட முழுவதற்கும் தரும நாட்களின் எண்ணிக்கையும் ஊர் வழக்கப்படி நிருணயிக்கப்பட்டிருந்தன. கடைசியாக, வில்லின் பணமாகவோ, பொருளாகவோ சிலவற்றைப் பிரபுவுக்குச் செலுத்தவேண்டியிருந்தது. உதாரணமாக, மைக்கல்மஸின் (Michaelmas) போது ஒரு வாத்து, ஈஸ்டருக்கு (Easter) முட்டைகள் முதலியன. இந்தச் சில்லறைக் கடமைகள் மேனருக்கு மேனர் மாறுபட்டன.

[1] சில ஆங்கிலப் பண்ணையாட்கள் நான்கு நாட்களும், சிலர் ஐந்து நாட்களும் கூட வேலை செய்யக் கடமைப்பட்டிருந்ததற்கு உதாரணங்கள் உள்ளன. ஆனால், அவ்வாறிருந்தது அரிது.

வில்லினுக்குப் பல கஷ்டங்கள் இருந்தன. பிரபுவின் அனுமதியின்றி அவன் மேனரைவிட்டு வெளியேறக்கூடாது. இவ்வனுமதி சாதாரணமாகக் கிடைக்காது. அப்படி ஓடிப்போனால், அவனைப் பின் தொடர்ந்து கட்டி இழுத்து வந்துவிடுவர். தொடர்ந்து தன் கடமைகளைச் செய்து வந்த போதும், ஏதாவதொரு காரணத்துக்காக மேனருக்கு வெளியே வசிக்க விரும்பினால், அதற்கும் பிரபுவின் அனுமதி தேவை. அதற்குச் செவேஜ் (Chevage) என்று கூறப்பட்ட ஒரு கட்டணத்தைச் செலுத்தவேண்டும். வில்லின் தன் தானியத்தைக் கிராம இயந்திரத்தில்தான் அரைக்கவேண்டும். இயந்திரம் பிரபுவுக்குச் சொந்தம். மாவரைப்பவன் (Miller) அவருக்கு இயந்திரத்துக்காக வாடகை செலுத்திவந்தான். பண்ணையாட்கள் வசம் இயந்திரக்கல்கள் உள்ளனவா என்று சோதனை செய்யவும், அவற்றைப் பறிமுதல் செய்யவும் பிரபுவுக்கு உரிமை உண்டு. பிரபுவின் அனுமதியின்றி வில்லின் தன் காளை, குதிரைகளை விற்கலாகாது. அவனோ, அவன் மகனோ படிக்கக் கற்றுக்கொள்ளக்கூடாது.[1] (மத குரு வேலையை ஏற்க விரும்புவோர் மட்டுமே கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர். மத குருக்களோ சுதந்திர மனிதர்கள். வில்லின் மத குருவானால் அவனது சேவை பிரபுவுக்கு நஷ்டம்). வில்லின் மகளுக்குத் திருமணமானால் மர்ச்செட் (Merchet) என்றழைக்கப்பட்ட காணிக்கையைப் பிரபுவுக்குச் செலுத்த வேண்டும்.[2] வில்லின் இறந்துபோனால், அவன் மகன் ஓர் அபராதத் தொகையைச் செலுத்தித்தான் அவனது நிலத்தை அடைய முடியும். தகப்பனது சாமான்களை அடைய 'ஹெறியட்' என்ற காணிக்கையைச் செலுத்தவேண்டும். 'ஹெறியட்' என்பது வில்லின் குதிரைகளில் மிக உயர்ந்ததைப் பிரபு பெறும் உரிமையாகும். [தன் 'வெய்னேஜ்' (Wainage) என்பதற்காகவன்றி வேறெதற்கும்] அரசனது நீதி மன்றங்களில் பிரபுவின்மீது வில்லின் வழக்குத் தொடரலாகாது. ('வெய்னேஜ்' என்பதில் அவனது விவசாயக் கருவிகள் சேர்ந்திருக்கலாம்; ஒருவேளை விளைந்த பயிரும் சேர்ந்திருக்கலாம்.) மேனரின் எல்லா நீதி மன்றங்களுக்கும் அவன் கட்டுப்பட்டவன். கடைசியாக, பிரபு வில்லின்களிடம் வரி வசூலிக்கலாம். ஆனால், ஐரோப்பிய பிரபுக்களைப் போல வில்லின்களின் உயிரை வாங்கும் உரிமை ஆங்கிலப் பிரபுக்களுக்கு இல்லை.

[1] ஆனால், 1406-ல் வந்த தொழில் வினைஞர் சட்டப்படி, 'எந்த ஆணும் பெண்ணும் அவர்கள் எந்த நிலையில் இருந்தபோதும், தம் குழந்தைகளை நாட்டிலுள்ள, தாம் விரும்பிய எந்தப்பள்ளிக்கும் பாடம் கற்க அனுப்பலாம்.'

[2] சில மேனர்களில் அந்தப் பெண் வேறு மேனரைச் சேர்ந்த ஒருவனை மணந்துகொண்டால்தான் 'மர்ச்செட்' செலுத்தவேண்டும் என்றிருந்தது. சில மேனர்களில் வில்லினின் மகனுக்கு மணம் நடந்தாலும் மர்ச்செட் வாங்கப்பட்டது.

சட்டப்படி இல்லாவிடினும், பொருளாதார வசதிகளில் வில்லின்களைவிடத் தாழ்ந்தவர்கள் போர்டர்கள், காட்டர்கள் ஆகிய பண்ணையாட்கள். நாட்டின் சில பாகங்களில் அவர்களைப் போர்டர்கள் என அழைத்தனர். வேறு பகுதிகளில் அவர்களுக்குக் காட்டர்கள் என்ற பெயர் வழங்கியது.[1] இவை இரு தனித்தனி வகுப்பாரைக் குறிக்கிறது என்றும், போர்டர்கள், காட்டர்களைவிட உயர்ந்த நிலையில் இருந்தனர் என்று காண்பிக்கச் சிலர் முயன்றனர். ஆனால், இவை இரண்டும் இரு பெயர்கள் கொண்ட ஒரே வகுப்பாக இருந்திருக்கலாம்; ஆனால், அது நிச்சயமாக நிரூபிக்கப்பட்டதாகக் கொள்ள முடியாது. போர்டர்களிடம் கலப்பையோ, காளையோ இல்லை. அவர்களிடமிருந்த நிலமும் வில்லின்கள் வைத்திருந்ததை விடக் குறைவே.[2] அவர்கள் பிரபுவிற்காக வாரத்துக்கு ஒரு நாள் உழைத்தால் போதும். எனவே, அவர்கள் சில சமயம் 'திங்கட்கிழமைக் காரர்கள்' (Monday-men) (*lundinarii*) என அழைக்கப்பட்டனர். தம் நிலமும் அதிகம் இல்லாமல், பிரபுவுக்குச் செய்யவேண்டிய கடமையும் குறைவாக உள்ள அவர்களுக்கு ஓய்வு நேரம் அதிகம் இருக்க வேண்டும் என்பது தெளிவு. அந்நேரங்களில் அவர்கள் கூலிக்கு வேலைசெய்ய முடிந்தது. பிரபுவோ அல்லது வசதியுள்ள வில்லின்களோ அவர்களை அவ்வாறு வேலைக்கு வைத்துக்கொண்டனர். இன்றைய பயிர்த் தொழிலாளி வர்க்கம் இவர்களினின்றுதான் தோன்றிற்று என்பதில்தான், வரலாறு, பொருளாதாரம் இவ்விரு துறைகளிலும் போர்டர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவர்களினின்றுதான் தச்சன், சக்கரம் செய்வோன், கருமான் போன்ற மேனர் தொழில் வினைஞர்களும் தோன்றினர். சமூகத்துக்குத் தாம் செய்யும் சேவைக்கு ஈடாக இவர்கள் ஒப்பந்தப்படி தானியங்களைப் பெற்றுக்கொண்டனர். முன் கூறியபடி வில்லின்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும், அவர்களது கடமைகளும், போர்டர்களுக்கும் உண்டு என்பதை இங்குக் கூறவேண்டும்.

பண்ணையாள் சுதந்திர மனிதனாக மாற வழியிருந்தது. மேனரின் பிரபு அவனுக்கு விடுதலை தரலாம். ஆனால், அவ்வாறு நேர்ந்தது மிக அரிது. அதைவிட அதிகமாகப் பயன்பட்ட வழி விலை

[1] போர்டர்களிடம் ஐந்து ஏக்கர் வரை நிலம் இருந்தது; காட்டர்களிடம் சிறு வீடுகள் இருந்தனவேயன்றி நிலமில்லை என்று சில சமயம் கூறப்படுகிறது. ஆனால், ஒரு சில காட்டர்களிடமாவது சிறு நிலத்துண்டுகள் இருந்ததற்குச் சான்று உள்ளது.

[2] போர்டர்களின் சிறு நிலங்கள் வேலியற்ற பெருவயல்களில் இருந்தனவா என்பது பற்றிக் கருத்து வேற்றுமையுள்ளது. விநோக்ரடாப் இல்லையென்று நினைக்கிறார். ஆஷ்லியின் (Ashley) கருத்து இதற்கு எதிராக உள்ளது.

கொடுத்து விடுதலை வாங்குவது. சட்டத்தின்படி கண்டிப்பாகப் பார்த்தால், வில்லினுடைய சொத்துக்கள் அனைத்தும் பிரபுவுக்குச் சொந்தம். எனவே, தன் விடுதலைக்குத் தேவையான அளவு பணத்தை ஒருவன் சேர்த்துவைத்தானுனல், அப்பணத்தை எடுத்துக் கொண்டு விடுதலை தர பிரபு மறுக்கலாம். இவ்வாறு நேர்ந்தது அரிது. எனினும், இதைத் தடுக்க கிராம மத குரு போன்ற ஒரு மூன்றும் மனிதனிடம் அப் பணத்தைக் சேர்த்துவைக்கக்கூடும். மேற்றிராணியார் ஒரு வில்லினைத் திருச்சபையில் சேர்த்துவிட்டாலும் அவன் விடுதலை பெறுகிறுன். அவன் ஊரிலிருந்து ஓடிவிட்டால் அவனைத் துரத்திக் கட்டாயமாக இழுத்துவரக்கூடும்; ஆனுல், இதை ஒரு வருடம் ஒரு நாளுக்குள் செய்யவேண்டும். இந்தக் காலத்துக்குள் அவன் பிடிபடவில்லையாயின் அவன் விடுதலை பெற்றுவிடுகிறுன்.

மேலே குறிப்பிட்டதைப் பார்த்தால் வில்லினுடைய வாழ்க்கையில் சுகம் என்பது மருந்துக்கும் இராது என்று தோன்றலாம். ஆனுல், நடைமுறையில் வில்லின்கள் அநியாயமான அடக்குமுறைக்கு ஆளாகவில்லை. இன்றைய தொழிலாளர்களுடன் ஒப்பிடும் போது அவர்களது வாழ்க்கைத் தரம் குறைந்திருந்தது. ஆனுல், இன்றைய தொழிலாளியின் நலத்தைப் பாதிக்கக்கூடிய சில ஆபத்துக்களுக்கு அவர்கள் உட்படவில்லை. வேலையின்மையைப் பற்றியோ, முதுமை அல்லது நோய் காரணமாக வருமானம் அற்றுப்போய் விடுமோ என்றே அவர்கள் அச்சப்படவில்லை. வில்லின் இறந்த போது அவனுக்குச் சிறு பிள்ளைகள்தான் இருந்தனர் என்றுலும், அவனது நிலம் பறிபோய்விடாது. அவனது மனைவி அந்நிலத்தை வைத்திருந்தாள். அதற்கு ஈடாக அக் குடும்பம் தன்னுலியன்ற சேவைகளைப் பிரபுவுக்குச் செய்தது. பண்ணையாள் மேனரை விட்டு வெளியேறும் உரிமை பெறவில்லை என்பது உண்மை; ஆனுல், அவன் அவ்வாறு வெளியேற விரும்பியது அரிது. பண்ணையாட்களை ஒடுக்கி வைப்பது பிரபுவுக்கும் நல்லதல்ல. வழக்கத்துக்குப் புறம்பாக நடந்து, சட்டப்படித் தன் உரிமைகளைக் கட்டாயமாக அமல் செய்து தனக்குக் கீழ் உள்ளோரை வருத்தும் பிரபு, கடைசியில் தானே வருந்துவார். அவரது மேனரின் சுபிட்சம், மனத் திருப்தியுள்ள பண்ணையாட்கள் தேவையான உழைப்பை நல்குவதைத்தான் பொறுத்திருந்தது.[1]

[1] இரண்டாம் அலெக்சாண்டர் பண்ணையாட்களுக்கு விடுதலை தருமுன், இதன் முக்கியத்துவம் ரஷ்யாவில் நன்கு உணரப்பட்டது. பெரிய நிலச்சுவான்தாரர்கள் தம் பண்ணைகளின் அளவை அதில் இருந்த 'ஆத்மாக்களின்' எண்ணிக்கையினுலேயே குறிப்பிட்டனர்.

முக்கியமாகக் கிழக்கு மாவட்டங்களில் (Eastern counties) பல மேனர்களில் பல சுதந்திரக் குடியானவர்கள் வசித்து வந்தனர்.[1] அவர்களை டூம்ஸ்டே புத்தகமும், பிற தஸ்தாவேஜுகளும் சாக்மென் (Socmen) என்றுவது, சுதந்திர மனிதர் (Liberi homines) என்றுவது குறிப்பிடுகின்றன. தற்போது இவை இரு தனி வகுப்புக்களாகச் சாதாரணமாகக் கருதப்படுகின்றன. ஆனுல், இவை தனித்தனிப் பிரிவுகள் என்பது நிச்சயமில்லை. சாக்மென் தம் நிலங்களைப் பிரபுவின் அனுமதியின்றி விற்கமுடியாது. மேலும், மேனர் நீதிமன்றங்களுக்கு உட்படவேண்டும். ஆனுல், இவ் விஷயத்தில் சுதந்திர மனிதருக்குப் பூரண விடுதலை உண்டு. எனவே, இவர்கள் சாக்மெனைவிட உயர்ந்தவர்கள் என்று சிலர் கூறுகின்றனர். ஆனுல், இதற்கு நேரெதிரான சான்றுகளும் காணப்படுகின்றன. இவ்விரு வகுப்புகளுக்கும் என்ன வேறுபாடு என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. தம்மிடமிருந்த நிலத்துக்காகப் பிரபுவுக்குச் சுதந்திரக் குடியானவர்கள் வாரம் செலுத்தவேண்டியிருந்தது. இது பணமாகவோ, பொருளாகவோ, உழைப்பாகவோ செலுத்தப்படலாம்.[2] வில்லின்களைப் போல, தந்தையின் சொத்துக்களை அடையும்போது அபராதப் பணமும், ஹெரியட்டுங்கூட கொடுக்கவேண்டி இருக்கலாம். எனவே, சுதந்திரக் குடியானவர்களுக்கும் பண்ணையாட்களுக்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் சுட்டிக்காட்ட முடியாது. ஆனுல், சுதந்திரக் குடியானவர்கள் தம் நிலங்களை விட்டுவிட்டு, மேனரை விட்டு வெளியேறலாம்; பிரபுவின்மீது வழக்குத் தொடரலாம்; சாதாரணமாக மர்ச்செட் செலுத்தவேண்டியதில்லை ஆகியவற்றை இங்குக் குறிப்பிட வேண்டும்.[3] அதே சமயம், வில்லின் நிலையிலுள்ள சில விவசாயிகளும்

[1] டென்மார்க்கிலிருந்து குடியேறியவர்களின் சந்ததிகளே இச் சுதந்திர மக்கள். அவர்கள் தம் சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்திருக்கவேண்டும், அல்லது விசேஷ சேவைக்குப் பரிசாக நில மானியங்கள் பெற்றவர்களாகவோ, அவர்களது சந்ததிகளாகவோகூட இவர்கள் இருக்கலாம். டூம்ஸ்டே நூலில் 12,000 சுதந்திர மனிதர்களைத் தவிர, 23,000 சாக்மென்களையும் (Socmen) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நார்ஃபக் (Norfolk), சப்ஃபக் (Suffolk), எசெக்ஸ் (Essex) மாவட்டங்களுக்கு வெளியே சுதந்திரக் குடியானவர்களைக் காண்பது அரிது.

[2] மேனரின் சுதந்திரக் குடியானவன் வாரத்துக்காகத் தந்த உழைப்புக்கும், பண்ணையாளின் கட்டாய உழைப்புக்கும் உள்ள வித்தியாசம், அது குணத்திலும் அளவிலும் பின்னதைவிட நிச்சயமாக இருந்தது என்பது தான். சாதாரணமாக நிலத்தின் மதிப்புடன் ஒப்பிட்டால் அவ்வுழைப்பு வாரம் மிகக் குறைவு.

[3] மர்ச்செட், செவேஜ் செலுத்தும் கடமை, பிரபு விதிக்கும் வரியைச் செலுத்துவது, பிரபுவின் அனுமதியின்றிக் காளைகளை விற்க முடியாத நிலைமை, மேற்பார்வையாளராக (Reeve) பணியாற்றவேண்டிய கடமை, இன்ன சேவை செய்யவேண்டும் என்பது நிச்சயமில்லாத நிலை (நாளைக்கு இன்ன வேலை தரப்படும் என்று இன்று வில்லின் அறியான்) ஆகியவை தான் வில்லினுக இருப்பதற்கு அடையாளங்கள். மர்ச்செட் செலுத்து

வாரம் செலுத்தி நிலம் வைத்திருந்ததுண்டு. சுதந்திரக் குடியான வர்கள் சிலரும் வில்லின் நிலக் குடிமை ஷரத்துக்களுக்கடங்கி நிலம் வைத்திருந்து, ஆனால், அதே சமயம் வேறு விஷயங்களில் விடுதலை பெற்றிருந்ததும் உண்டு. பொருளாதார நிலையைப் பொறுத்தவரைச் சுதந்திரக் குடியானவர்களும் வசதியுள்ள வில்லின்களும் ஒரே நிலையில் இருந்தனர்.

மேனரின் நீதிமன்றங்களைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிடப் பட்டது. அவை வருஷத்தில் இரண்டு மூன்று முறை பிரபு அல்லது அவரது நிருவாக அதிகாரியால் (Steward) நடத்தப்படும்.[1] பிரபுவின் ஆதீனத்திலிருந்த அனைவரும் நீதிமன்றக் கூட்டங்களுக்கு வரவேண் டும். அங்குச் சிறு குற்றங்களுக்குத் தண்டனைகள் அளிக்கப்பட்டன. பிதுரார்ச்சிதமாக வந்த நில உரிமை, நிலங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவருக்கு மாறுவது ஆகியவை மன்றப் புத்தகத்தில் (Court roll) பதிவு செய்யப்பட்டன. கடமையைச் செய்யாதவருக்கும், வழக் கத்தை மீறியவருக்கும் அபராதங்கள் விதிக்கப்பட்டன. இம் மன்றங் களின் தீர்ப்புக்கள் மேனரின் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் இருந்தன. தகராறு இருந்த விஷயங்களில், அவ்வூர்ப் பழக்கம் என்ன என்பதை எடுத்துக் கூற ஜூரர்களின் குழு ஒன்று அமைக்கப் பட்டது.[2]

மேனரின் விவசாயம் முதல் முதலில் இரு வயல் முறைப்படி (Two-field system) நடந்தது. நாளடைவில் மூவயல் முறை (Three-field system) வழக்கத்துக்கு வந்தது. இம் முறைப்படி எந்த வருஷ மும் இரு வயல்கள் பயிரிடப்பட்டன; மூன்றாவது தரிசாக விடப் பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு வயலும் தரம்பாக இருக்குமாறு மாற்றி மாற்றிப் பயிரிடப்பட்டன. முதல் வயலில் ரை (Rye) அல்லது கோதுமை பயிர் செய்யப்பட்டது. இரண் டாவதில் பார்லி (Barley), ஓட்ஸ் (Oats) அல்லது பீன்ஸ் (Beans) பயிராயிற்று. கிளோவர் (Clover),[3] உருளைக் கிழங்கு, டர்னிப்

வதால் மட்டும் ஒருவனை வில்லினாகக் கருத முடியாது. மர்ச்செட் செலுத் தாத வில்லின்களும், அதைச் செலுத்திய சில சாக்மென்னும் நாட்டில் இருந்தனர்.

[1] ஒரு பிரபுவிடம் பல மேனர்கள் இருந்தால், அவற்றை அடிக்கடி சென்று பார்க்க ஒரு நிருவாக அதிகாரி நியமிக்கப்பட்டார். தல அதிகாரி யின் கணக்குகளை ஆய்வது, நீதிமன்றங்களை நடத்துவது, மன்றப் புத்தகத் தில் (Court roll) பதிவுகள் செய்வது ஆகியவை அவருடைய வேலைகள்.

[2] மேனர் நீதிமன்றங்களின் நடைமுறை காரணமாக, நாளடைவில் வில்லின்களின் சேவையின் அளவு மேலும் திட்டமாக்கப்பட்டது போலத் தோன்றுகிறது.

[3] கால்நடைத் தீவனமாகப் பயன்படும் ஒருவகை மணப்புல்.

(Turnip), ஸ்வீடு (Swede) போன்ற கிழங்கு வகைகள் ஆகியவை பயிரிடப்படவில்லை. கோதுமையும் ரையும் இலையுதிர் காலத்தில் விதைக்கப்பட்டு, அதற்கடுத்த கோடைக் காலத்தின் பிற்பகுதியில் அறுவடை செய்யப்பட்டன. பார்லி வசந்த காலத்தில் விதைக்கப் பட்டு, இலையுதிர் காலத்தில் அறுவடை செய்யப்பட்டது. எனவே, கோதுமை அறுவடை, பார்லி அறுவடைக்கு முன் நடந்தது. கோது மையும், பார்லியும் வீச்சரிவாளினுல் (Scythe) அறுக்கப்பட்டது.[1] வைக்கோலில் பெரும்பகுதி வயலிலேயே இருக்கும். உற்பத்தி மிகவும் குறைவு; ஏக்கருக்குச் சராசரி ஆறு முதல் எட்டு புஷல் (Bushel) வரைதான். ஏருவிடல் வழக்கமில்லை.


கோதுமை அறுவடையான பின், அந்த வயல்களில் இருந்த வைக்கோலையும், (வரப்பு, தலை நிலங்களிலிருந்த) புல் பூண்டையும் கால்நடைகள் மேய்ந்தன. அறுவடைக்குப் பின்னுள இம் மேய்ச்ச லுக்கு மைக்கல்மாஸ் மேய்ச்சல் (Michaelmas grass) என்று பெயர். புல்வெளியிலும் இரண்டாவது புல் அறுவடைக்குப் பின், மேய்ச்சல் அனுமதிக்கப்பட்டது. இதற்கு லேமாஸ் மேய்ச்சல் (Lammas grass) என்று பெயர். சாகுபடி வயல்களில் இவ்வாறு தம் கால்நடைகளை மேய்க்கும் உரிமைக்குக் காமன் ஆப் ஷேக் (Common of shack) என்று பெயர்.

பின்வரும் படத்தைப் பார்த்தால், மூன்று ஆண்டுகளில் சுமார் பதினெட்டு மாதங்கள்தான் நிலம் பயிரிடப்பட்டு வந்தது என்பது புலப்படும். விதைக்கும் பயிரும், சாகுபடி பருவங்களும் வழக்கத் தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டன. எல்லாத் துண்டு நிலங் களைப் பயிரிடுவோரும் இவ் வழக்கத்தைக் கட்டாயமாகக் கடைப் பிடிக்கவேண்டும். இவ் விஷயத்தில் இவ் வழக்கம் கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டதால், யாரும் அதை மீற எண்ணியிருக்க மாட்டார்கள் எனக் கொள்ளலாம்.

டிமீன் நிலத்தின் அறுவடை பிரபுவுக்குச் சொந்தம். பிரபுவின் வசம் பல மேனர்கள் இருந்தால், அவர் தம் பரிவாரங்களுடன் அவற் றுக்கு விஜயம் செய்து அறுவடையைப் பயன்படுத்திக் கொள்வார். இல்லாவிடில், தானியம் மேனர் வீட்டுக்கு அனுப்பப்படும். பிரபு அங்குக் குடியிருந்தால், அவரும், அவர் குடும்பமும், அவரை அடுத்து வாழ்ந்தவர்களும் அதை உபயோகிப்பர். அவர் வேறு எங்காவது

[1] வைக்கோல், அரிவாளினுல் (Sickle) வெட்டப்பட்டது.

வசித்தால், தானியம் அங்கு அனுப்பப்படும். வில்லின்கள் அதை வண்டியில் ஏற்றிச் செல்லும் கடமை பெற்றிருந்தனர், அல்லது அருகிலிருந்த நகர அங்காடியில் அது விற்கப்படும். தன் மேனர்களில் உற்பத்தியான தானியத்தை விற்ற தொகை பெரிய பிரபுக்களின் வருவாய் ஆகும். அரசனின் வருமானத்தில் பெரும் பகுதி இவ்வாறு தான் வந்தது.



விவசாய வேலைகளில் மிகவும் முக்கியமானதும் கஷ்டமானதும் உழுவதாகும். பெரும் கலப்பையை எட்டுக் காளைகள் கொண்ட ஒரு கோஷ்டி இழுத்தது. சிறு கலப்பையை இழுக்க நான்கு காளைகள் போதும். புதிதாக ஒரு நிலத்தை உழப் பெருங் கலப்பையும், ஏற்கெனவே பண்படுத்தப்பட்ட நிலத்தை உழச் சிறு கலப்பையும் பயன் படுத்தப்பட்டிருக்கலாம். டிமீன் நிலத்தை உழப் பெருங் கலப்பையும் வில்லின்கள் நிலத்தை உழச் சிறு கலப்பையும் பயன்படுத்தப்பட்டது என்பது மற்றொரு கருத்து. சாதாரணமாக, ஒரு வில்லினிடம் ஒரு ஜோடிக் காளையே இருந்ததால் உழுவதற்குப் பிறருடைய கூட்டுறவு வேண்டியிருந்தது. தரிசு நிலம், பயிர் விளைந்திருந்த நிலத்தைவிட

அதிகம் உழப்பட்டது; அதன் மண் ஆண்டுக்கு இரு முறை (அல்லது மூன்று முறையும் இருக்கலாம்) திருப்பப்பட்டது.

இன்றைய பண்ணைகளின் கால்நடைகளோடு ஒப்பிட்டால் மேனரின் கால்நடைகள் சிறியவையாகவும் தரம் குறைந்தவையாகவும் இருந்தன. போதுமான தீனியின்மை, தொத்து நோய்கள், தரமற்ற கால்நடைகளின் இனப் பெருக்கம் ஆகியவை இவ் விஷயத்தில் முன்னேற்றம் ஏற்படாமல் தடைசெய்தன. காளைகள் பலம் பொருந்தியவையாக இருப்பினும் மெல்லியவையாக இருந்தன; இழுக்கும் சக்திக்காக அவற்றிற்கு மதிப்பே ஒழிய அவற்றின் மாமிசத்துக்காக அல்ல. ஸ்கேப் (Scab) எனப்பட்ட நோயினால் ஆடுகள் பீடிக்கப்பட்டன. அவற்றில் பல இறந்தன. திடகாத்திரமான ஆடுகளிலிருந்தும் சராசரி ஓர் ஆட்டுக்கு ஒன்றரை ராத்தல் உரோமம்தான் கிடைத்தது. பன்றிகளும், வாத்து, கோழிகளும் எண்ணற்று இருந்தன. மேனர் சாகுபடி முறையில், கால்நடைகளின் பனிக்காலத் தீவனப் பிரச்சினைக்குப் போதுமான வழி ஏதும் செய்யப்படவே இல்லை. வருஷத்தில் பல மாதங்கள் சிறிதளவு வைக்கோலே அவற்றிற்கு ஆகாரம். இலையுதிர் காலத்தில் தேவைக்கதிகமாக இருந்த கால்நடைகளைக் கொன்று, இருந்த உணவு பிறவற்றிற்கு பங்கிடப்பட்டது. கொன்ற மிருகங்களின் இறைச்சியை உப்பிட்டுப் பனிக்காலத்தில் உணவாகப் பயன்படுத்தினர். உப்புக் கிடைப்பது அரிது; விலையும் அதிகம். எனவே, இறைச்சி சரியாகப் பாதுகாக்கப்படவில்லை. கெட்டுப்போன இறைச்சிக்குச் சுவைகொடுக்கக் கீழ் நாடுகளிலிருந்து இறக்குமதியான ஏலம், கிராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் உபயோகிக்கப்பட்டன. (ஐரோப்பாவின் மத்திய, மேற்குப் பகுதிகளில் வாசனைத் திரவியங்களுக்கிருந்த தேவைதான் வெனிஸ் நகரம், பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனி ஆகியவற்றின் சுபிட்சத்துக்கு அடிகோலிற்று.)

மேனரின் நிருவாகத்தைத் தல அதிகாரி (Bailiff) கவனித்தார். பண்ணையாட்கள் தம் கடமைகளைச் செய்யுமாறு அவர் பார்த்துக் கொண்டார். இவ் வேலையில் அவருக்கு ரீவ் (Reeve), ஹேவர்ட் (Hayward) என்ற மேற்பார்வையாளர்கள் உதவினர். தல அதிகாரிக்கு உதவியாக மேற்பார்வை செய்வதற்காகத் தம் சாதாரணக் கடமைகளினின்று விலக்குப்பெற்ற வில்லின்கள் இவர்கள். வார வேலையில் (Week-work) ஈடுபட்டிருந்த பண்ணையாட்களைக் கவனிப்பது ரீவின் வேலை. தரும வேலையில் (Boon-work) ஈடுபட்டிருப்பவர்களை மேற்பார்வை செய்வதும், காடுகள், புல்வெளிகள் ஆகியவற்

றைக் கவனித்துக்கொள்வதும் ஹேவர்டின் வேலை. தல அதிகாரி கணக்குகளை எழுதிவைக்கவேண்டும். பிரபுவின் நிருவாக அதிகாரி மேனருக்கு அடிக்கடி வரும்போதெல்லாம் இக் கணக்குகளை அவருக்குக் காட்டவேண்டும்.

இவ்வதிகாரத்தை முடிக்கும் வாயிலாக, மேனர் முறையின் அடிப்படை இயல்புகளைத் திரும்பக் கூறுவோம். முதலாவதாக, இது பரவிய இடங்களிலும் காலத்திலும் இம் முறை எல்லா மேனர்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. பாழ் நிலங்களைத் தவிர, நாடு முழுவதும் இச் சாகுபடி முறை அமலிலிருந்தது. இதன்கூடவே வேறு எந்த முறையும் கையாளப்படவில்லை.[1] இடைக் காலத்தில் நகரங்கள்கூட முழு வளர்ச்சிபெற்ற மேனர்கள்தாம். இரண்டாவதாக, அவற்றின் அமைப்பிலும் நடைமுறையிலும் மேனர்களுக்கிடையே நிறைய ஒற்றுமையிருந்தது. பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் இவற்றின் சிறு விவரங்கள் பலவற்றில் வேறுபாடு இருந்தபோதும், பொது அமைப்பில் ஒரு மேனரைப்போலவே மற்ருென்று இருந்தது. மேனர் பிரபுவின்வசம் இருந்தது. அவருக்கு அங்குக் குடியிருந்தவர்கள்மீது சில வரையறுக்கப்பட்ட உரிமைகள் இருந்தன. நாட்டின் பெரும் பகுதியில் விவசாயமே மேனரின் முக்கிய குறிக்கோள். விவசாயம் செய்யப்பட்ட நிலங்களுக்கு வேலியில்லை. மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவன்றி, வியாபாரத்துக்காகச் சாகுபடி நடக்கவில்லை. ஆனால், இடைக் காலத்தின் பிற்பகுதியில், மேனரின் உபரி உற்பத்தி வெளியில் விற்கப்பட்டது. சுயதேவைப் பூர்த்தி மேனரின் குறிக்கோள். சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி ஏறக்குறைய இக் குறிக்கோள் அடையப்பட்டது. பழைய வழக்கங்களே மேனர் வாழ்க்கைக்கு அடிப்படை. ஊர் வழக்கத்துக்கு மதிப்பு மிக உயர்ந்திருந்தது. அதேசமயம் அதை மீறமுடியாது என்ற நிலையும் இல்லை. கடைசியாக, அதுவும் முக்கியமாக, பிரபுவின் டிமீன் நிலத்தில் பண்ணையாட்கள் உழைப்பது இம் முறையின் அடிப்படை இயல்பாகும். இது நடந்துவந்தவரை மேனர் முறை மாறவில்லை. இது நின்றதும் மேனர் முறையும் மறைந்தது.

மேனர் முறையின் குறைபாடுகள் எளிதில் புலப்படுகின்றன. அவற்றை மிகைபடவும் கூற முடியும். வழக்கத்தினுல் கட்டுப்பட்டு மக்களனைவரும் சேர்ந்து பயிரிடுவதனுல், அறிவும் துணிவுமுள்ள விவசாயிகள் பரிசோதனைகள் செய்து விவசாயத்தை அபிவிருத்தி செய்

[1] சமீபகால ஆராய்ச்சியின் விளைவாக இம் முடிவுபற்றிச் சந்தேகம் எழுந்திருக்கிறது.

வது தடைபட்டது. யாவரும் பண்டைய வழக்கப்படியே வரிசையாகச் சாகுபடி செய்யவேண்டியிருந்ததால் மாறுதல்கள் செய்ய முடியவில்லை. நிலங்களினின்று களைகளை எடுக்க முடியவில்லை. அவை சோம்பேறிகளின் நிலங்களினின்று நன்கு பாடுபடுபவர்களின் நிலங்களுக்குப் பரவின. வரப்புத் தகராறுகள் அடிக்கடி தோன்றின. வரப்பை அடுத்தவன் வெட்டிவிட்டதாக அடிக்கடி விவசாயிகளிடமிருந்து குற்றச்சாட்டுகள் வந்தன. ஒரு துண்டிலிருந்து மற்றொன்றுக்குப் போக வெகுநேரம் வீணாயிற்று. எனினும், இம் முறை அக்காலத்துக்கு ஏற்றதே. தேவையான உணவு உற்பத்தியாயிற்று. அந்தக் காலக் கருத்துப்படிச் சுகமான நிலையில் கிராம மக்கள் வாழ்ந்தனர். பண்ணையாட்களால் அவை சாகுபடி செய்யப்படாவிட்டாலும், வேலியற்ற நிலங்களைச் சாகுபடி செய்வது பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை நடந்துவந்தது. இத்தனை நாட்கள் அது நீடித்து வந்ததன் காரணம் அதை மாற்றுவதில் இருந்த கஷ்டமேயன்றி, அம் முறையின் நன்மைகளாக இருக்காது. அதன் காலத்தை மீறி அம் முறை நடந்து வந்தது. இறுதியில், அதனால் பெருந் தொல்லையே விளைந்தது. எனினும், பல நூற்றாண்டுகளாக ஒரு நாட்டில் பயன்பட்ட முறைக்குப் பெருமைகள் பல இருந்திருக்கவேண்டும். அவற்றை ஆராயாமல் சட்டென அம் முறையைக் கண்டித்துவிடக் கூடாது.

2. இடைக் காலத்தில் நகரங்களும் வாணிபமும்

(Towns and Trade in the Middle Ages)

இடைக் காலத்தில் இங்கிலாந்தில் நகரங்கள் பெரிதாக இல்லை. அவற்றின் எண்ணிக்கையும் குறைவே. இடைக்காலத்தில் லண்டனின் ஜனத்தொகை 25,000-லிருந்து 30,000-க்குள் இருந்ததென மதிப்பிடப் பட்டிருக்கிறது. 10,000 மக்களுக்குமேல் வசித்த வேறு நகரங்கள் யார்க்கும் (York), பிரிஸ்டலுமே (Bristol). வேறு சில நகரங்களின் ஜனத்தொகை 5,000-லிருந்து 10,000 வரை இருந்தது. பிற நகரங்கள் மிகச் சிறியவை. ஆயிரக்கணக்கிலன்றி நூற்றுக்கணக்கில் மக்கள் தொகையின் எண்ணிக்கையிருந்த சில நகரங்களும் இருந்தன.[1] இவை அளவில் நகரங்களாக இல்லாமல் இன்று நாம் பெரிய கிராமம் என்று சொல்வதற்கு இணையாக இருந்தன. வேறு சில விஷயங்களிலும் இவை நகரங்களைப்போலன்றிக் கிராமங்களைப்போல் இருந்தன. இடைக் கால நகரங்களில் பெரும்பாலானவை வெறும் மேனர் கிராமங்களே.[2] ஏதாவதொரு காரணத்தால் மேலும்மேலும் மக்கள் அவற்

[1] டூம்ஸ்டே புத்தகத்தில் எண்பது நகரங்களைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவற்றில் சுமார் நாற்பதில், 1377-ல், ஆயிரம் மக்களுக்குமேல் வசித்தனர்.

[2] நகர வளர்ச்சியில் பின்வரும் கட்டங்களைக் காணலாம்:

(அ) வளர்ந்த கிராமங்கள்; விவசாயத்தில் சம்பந்தப்படாத நகர உரிமைக் குடியினர் (Burgesses) மிகக் குறைவே.

(ஆ) ஒரு சாசனம் பெற அதன் பிரபுவுடன் பேச்சு வார்த்தை நடத்துமளவுக்கு அதன் மக்கள் தொகையும் செல்வமும் வளர்ந்தது. வாணிப கில்டு அமைக்கப்படல்.

(இ) மேலும் வளர்ச்சி. அமைப்பில் மேலும் பல புது அமிசங்கள். தொழில் கில்டுகளின் தோற்றம்.

(ஈ) முதலாளித்துவ தொழிலமைப்பின் வளர்ச்சி, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கத்தின் வளர்ச்சி.

றில் குடியேறியதால், நகர்ப்புற இயல்புகளை அவை பெற்றுவிட்டன. பல நூற்றாண்டுகளுக்கு அவற்றில் கிராம இயல்புகளின் சாயல் தொடர்ந்து இருந்தது.

ஒரு கிராமம் பட்டணமாக வளர்ச்சி பெறுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. பல சாதகமான சூழ்நிலைகள் சேர்ந்து இந் நகரங்களின் வளர்ச்சிக்கு வழிசெய்தன என்பதை எடுத்துக்காட்ட முடியும். ரோமானியர் ஆட்சிக் காலத்திலேயே பிரிட்டனில் நகரங்கள் இருந்தன. ரோமானியப் படைகள் திரும்பிச் சென்றபின் தோன்றிய குழப்பநிலையில் இந் நகரங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன அல்லது அடியோடு மறைந்து போயின. எனினும், இன்ன இடத்தில் குடியேறவேண்டும் என்பதற்கு ரோமானியர்கள் கொண்ட காரணங்களையே பின்னால் வந்த இனங்களும் கொண்டமையால், அடுத்த நூற்றாண்டுகளில் தோன்றிய பல நகரங்கள் ரோமானிய நகரங்கள் இருந்த இடங்களிலோ அல்லது அவற்றிற்கு அருகிலோ அமைக்கப்பட்டன. அவ்விடங்களில் கட்டடப் பொருள்கள் கிடைத்தன. அங்குத் தம் கோவில்களையும் கோட்டைகளையும் கட்ட சாக்ஸன், நார்மன் மக்களைத் தூண்டியிருக்கக்கூடும் என்பது அதற்கு மற்றொரு காரணமாகும்.

சௌகரியமான இடமாகப் பார்த்துப் பல நகரங்கள் அமைக்கப்பட்டன. இரண்டு முக்கிய சாலைகளின் சந்திப்பு, அல்லது ஒரு சாலையும் நதியும் சந்திக்குமிடம், அல்லது இரு ஆறுகள் கலக்குமிடம் ஆகியவை உள்நாட்டு வாணிபத்துக்கு வசதியான இடங்கள். கப்பல் தங்க நல்ல வசதியுள்ள இடங்களில் துறைமுகங்கள் தோன்றின. சில சமயங்களில் துறைமுகங்கள் கடலோரத்தில் அமையாமல், ஆறுகளில் அக்காலப் படகுகள் எதுவரை போகக் கூடுமோ அவ்விடத்தில் அமைந்தன. இவ்வாறு, கடலிலிருந்து பதினைந்து இருபது மைல் தூரத்திலிருந்த துறைமுகங்களை நேரிடையாகக் கடலினின்று எதிரிகள் தாக்க முடியாது. அதேசமயம் உள்நாட்டிலிருந்து பொருள்களைச் சேகரிக்கவும், வந்த பொருள்களை உள்நாட்டில் வினியோகிக்கவும் இது வசதியாக இருந்தது.

வேறு சில நகரங்கள் ஒரு பெரிய மடம் (Monastery) அல்லது பிரதான திருக்கோயிலுக்கு (Cathedral) அருகில் தோன்றின. நகரத்து மக்கள் பெரும்பாலும் அங்கிருந்த துறவிகள் (Monks), குருமார் ஆகியோருடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதில் ஈடுபட்டிருந்தனர். திருக்கோயிலில் புகழ்பெற்ற புனிதர் (Saint) ஒருவருடைய சமாதியிருப்பின்,

அங்கு வரும் யாத்திரிகர்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்தனர். அபாய காலத்தில் அருகிலிருந்த கிராம மக்கள் வந்திருக்கக் கூடியவாறு அரண் சூழ்ந்த இடங்களினின்று சில நகரங்கள் வளர்ந்திருக்கலாம்.

மிகப் பழங்காலந்தொட்டு நகர மக்கள் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். சரக்குகள் அங்குவந்து குவியும். எனவே, சாதாரணமாக மேனரின் எல்லையிலிருந்த செடிவேலி நகரப் பாதுகாப்புக்குப் போதாது. மண் அல்லது செங்கல்லால் கட்டப்பட்ட சுவர் அதற்குத் தேவை.[1] [சில சமயம் 'குடியிருப்பு' (Township) என்று அழைக்கப் பட்ட] கிராமத்துக்கும் நகரத்துக்கும் இவ்வாறு மாறுபடுத்திக் கூற லாம். அவ்விடத்தின் வளர்ச்சி காரணமாக, எப்போது ஏதாவதொரு வகைச் சுவர் அதைச் சுற்றி எழுப்பப்படுகிறதோ, அப்போது அதற்கு நகரம் (Town) என்ற பெயர் பொருந்தும் எனலாம்.

மேனர் நகரமாக வளர்ந்ததனால் அதன் பிரபுவின் உரிமைகள் பாதிக்கப்படவில்லை. எனினும், கிராம மேனரில் இருந்த பண்ணையாட்களைவிட, நகர உரிமைக் குடியினருடைய (Burgesses) எண்ணிக்கையும் செல்வமும் அதிகம். பிரபுவின் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மேலும் சலுகைகளை அவர் பெற முடிந்தது. அரசனது ஆதீனத்திலிருந்த நகரங்கள், சாதாரணமாக ஒரு விலைகொடுத்து அரசனிடமிருந்து பட்டயங்களைப் (Charters) பெற்றன. அரசர்கள் சிறு நகரங்களின் உள் விவகாரங்களைப்பற்றிக் கவலைப்படுவதைவிடப் போர்களுக்கும் சிலுவை யுத்தங்களுக்கும் பணம் திரட்டுவதில் அக்கறை காட்டினர். திருச்சபையைச் சேராத பிரபுக்களின் ஆதீனத்திலிருந்த நகரங்களும் அவ்வாறே பட்டயங்கள் பெற்றன. ஆனால், திருச்சபைப் பிரபுக்கள் தம் உரிமைகளை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. எனவே, துரதிருஷ்டவசமாக, மடங்களை அல்லது சமய மாவட்டத் தலைவரைச் சார்ந்த நகரங்கள் நாகரிக உரிமைகள் (Municipal Privileges) பெறுவதில் பின்தங்கி நின்றன.

பொதுவாக, நகர மக்கள் பட்டயங்களை வேண்டிப் பெற்றதன் குறிக்கோள் வெளிக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெறுவதுதான். வேண்டிய சலுகைகள் அனைத்தும் ஒரே பட்டயத்தின்மூலம் கிடைத்துவிடவில்லை. ஒரு நகரத்தைப்போலவே மற்றொன்றுக்கும் உரிமைகள்

[1] Town (நகரம்) என்ற சொல் ஆங்கிலோ சாக்ஸானிய மொழியில் Tun என்ற சொல்லிலிருந்து வந்தது. Tun என்றால் வேலி என்று பொருள். எனவே, அது மேனராகும். Burh என்ற ஆங்கிலோ சாக்ஸானியச் சொல் லுக்கு அரண் சூழ்ந்த இடம் என்று பொருள். அதிலிருந்து 'Borough' என்ற சொல் வந்தது.

கிடைத்தன என்றும் சொல்ல முடியாது. எனினும், இவ்வாறு உரிமை பெற்ற நகரங்கள் (Enfranchised Boroughs) அனைத்துக்கும் பொதுவான பல உரிமைகளைப் பிரித்துக் கூறமுடியும். அவை அரசாங்கக் கஜானாவுக்குச் செலுத்த வேண்டிய தொகையை ஷெரீப் மூலமன்றி நேரிடையாகவே செலுத்தின. இதனால், ஷெரீப்பின் அநீதத் தண்டல்களினின்று தப்பிக்க முடிந்தது.[1] நகரங்கள், அரசனுக்குக் கட்ட வேண்டிய தொகை நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு நகரக் கப்பம் (firma burgi) என்று பெயர். ஒவ்வொரு நகரத்திலும் ஒரு நகர மன்றம் இருந்தது. அது வழக்குகளை மட்டுமன்றி நகரப் பொது விவகாரங்களையும் நடத்தியது. ரீவ் (Reeve) அல்லது மேயர் (Mayor) அதற்குத் தலைமை வகித்தார். நகர மன்றம் அமைத்ததில் இரண்டு நன்மைகள் இருந்தன. நகரத்துக்குள் வெளியார் அதிகாரம் செலுத்துவது தவிர்க்கப்பட்டது. (அபராதங்கள் மூலம்) மன்றத்துடைய வருவாயை நகரம் இழக்கவில்லை. நகரப் பட்டயங்களில் அளிக்கப்பட்ட மற்றொரு உரிமை தனி மனிதனின் சுதந்திரமாகும். இதுபற்றிய ஷரத்துக்கள் நகரத்துக்கு நகரம் மாறுபட்டன. சில நகரங்களில், எல்லா நகரமக்களுக்கும் அல்லது ஒரு வருடமும் ஒருநாளும் (பண்ணையாள் விடுதலை பெறத் தேவையான காலம்) நகர எல்லைக்குள் வசித்தவர்களுக்கும் சுதந்திரம் கிடைத்தது. வேறு சிலவற்றில், வாணிப கில்டின் உறுப்பினர்கள் அல்லது வேறு ஏதாவது யோக்கியதாம்சம் உள்ளவர்களுக்கு மட்டும் இவ்வுரிமை வழங்கப்பட்டது. வாணிப கில்டு அமைத்துக்கொள்வது மற்றொரு முக்கியமான உரிமையாகும். இடைக் கால நகரத்தின் விசேஷமான இவ்வமைப்பைப்பற்றிக் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. கடைசியாக, நகரத்தில் சந்தை அல்லது அங்காடி நடத்தும் உரிமையையும் அப் பட்டயம் தந்திருக்கலாம்.

அநேகமாக எல்லா இடைக் கால நகரங்களிலும் அங்காடிகள் (Markets) இருந்தன.[2] ஆனால், அவை நகர அதிகாரிகளின் கட்டுப்

[1] Sheriff (ஷெரீப்) என்ற சொல் 'Shire-reeve' மாவட்டத் தண்டல் மேற்பார்வையாளர் என்பதிலிருந்து வந்தது. மாவட்டத்தினின்று அரசனுக்குச் சேர வேண்டிய பணத்தை வசூலிப்பது ஷெரீப்பின் பொறுப்பு. ஒவ்வொரு மாவட்டமும் செலுத்தவேண்டிய வரித்தொகை (Ferm) நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஷெரீப்புகள் அதற்கதிகமாகவே வசூலித்து மிகுதியைத் தாமே வைத்துக்கொண்டனர் என நம்பப்படுகிறது. எனவே, நகரத்துக்குத் தனியான கப்பம் நிர்ணயிக்கப்பட்டு அதை ஷெரீப் மூலமன்றி நேரிடையாகச் செலுத்துவது நகர மக்களுக்கு நல்லதாக இருந்தது. 12-ம் அதிகாரத்தைப் பார்க்கவும்.

[2] அங்காடி நடத்தியவை யெல்லாம் சுயாட்சி பெற்ற நகரங்கள் (Boroughs) ஆகிவிடாது. (பட்டயங்கள் பெற்ற) சுயாட்சி நகரங்களுக்கும் (Corporate Towns), அங்காடி நகரங்களுக்கும் உள்ள வேறுபாட்டை மறக்கக் கூடாது.

பாட்டில் நடக்கவில்லை. அங்காடி நடத்தும் உரிமையை அரசாங்கம் அளித்தது. பல நகரங்களில் இது தல அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட போதிலும், சிலவற்றில் இதைத் தனி மனிதர்கள் பெற்றிருந்தனர். சில அங்காடிகள் திருச்சபைக்குச் சொந்தமாக இருந்தன. சில சமயங்களில் அவற்றை நடத்தும் உரிமையை அரசாங்கமே வைத்திருந்தது. அங்காடிகளால் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு நல்ல லாபம். பொருள் விற்பவர்கள்மீது அவர்கள் சுங்கம் (Tools) விதித்தனர். சில சமயம் வாங்குபவரும் வரி செலுத்தவேண்டியிருந்தது. அங்கிருந்த கடைகளைப் பயன்படுத்துவதற்காகக் கடை வாடகையான ஸ்டாலேஜ் (Stallage) என்ற கட்டணமும் வசூலிக்கப்பட்டது.[1] பொருள்களை வாங்கி விற்க வேறு வாய்ப்புகள் இல்லாத அக் காலத்தில், அங்காடிகளுக்குப் பெரும் முக்கியத்துவம் இருந்தது. மரபு, சட்டம் இவை இரண்டும் அனுமதிக்கும் இடைக் கால வழக்கமான சாட்சிகள் முன்னிலையில் பேரம் பேசி விலை முடிப்பதற்கு இவ் அங்காடிகள் வகை செய்தன. பின்னர் தகராறுகள் ஏற்பட்டால், விவகாரத்தின் விவரங்கள்பற்றிச் சான்றுக்குச் சாட்சிகள் இருப்பதனுல் நன்மையுண்டு. லண்டனில் அங்காடி தினந்தோறும் நடந்தது.[2] பிற இடங்களில் வாரம் ஒரு நாள்தான் நடந்தது. அங்காடி நாள் சாதாரணமாக மாற்றப்படுவதில்லை. இன்றும் உள்நாட்டில் பல நகரங்களில் பல நூற்றுண்டுகளாக நடந்த அதே கிழமையில் சந்தை நடக்கிறது.[3]

ஆண்டுக்கொருமுறை திருவிழாச் சந்தைகள் (Fairs) நடந்தன. இவையும் முன்கூறிய அங்காடி அல்லது வாரச் சந்தையும் (Markets) ஒன்றல்ல. சில நகரங்களில் ஆண்டுக்கு இரண்டு முறை அல்லது அதற்கு மேலும் திருநாள் சந்தைகள் கூடும். ஆனுல், அவை தனித் தனிச் சந்தைகளாகக் கருதப்பட்டன. அததன் காலத்தில் ஆண்டுக்கொருமுறை ஒவ்வொரு சந்தையும் கூடிற்று. நகரத்திலும் அதன் அருகிலும் வசித்தவர்களுக்காக அங்காடிகள் நடந்தன. திருவிழாச் சந்தைகளுக்கோ நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்துங்கூட மக்கள் வந்தனர். ஏதாவதொரு புனிதரின் நன்னுளன்று அவை தொடங்கின. ஒரு கோயிற் சமாதியின் அருகில் நடந்தன, புனிதர்களின் சமாதியைக் காணவந்த யாத்திரிகர்களின் கூட்டங்களி

[1] இங்கு அதிகார பூர்வமான தராசுகள் வைத்திருக்கப்படலாம்.

[2] லிங்கன் (Lincoln), வேறு சில முக்கிய நகரங்கள் ஆகியவற்றில் வாரத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நாட்களில் அங்காடி நடந்தது.

[3] அடுத்தடுத்த ஊர்களில் வெவ்வேறு நாட்களில் அங்காடி நடந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட அங்காடிகளுக்கு அருகில் வசித்தவர்கள் வெவ்வேறு சந்தை நாட்களில் வெவ்வேறு ஊர்களுக்குப் போக இதனுல் வழியுண்டாயிற்று.

னின்று இச் சந்தைகள் தோன்றியிருக்கலாம். புகழ்பெற்ற சமாதிகளில் பிரார்த்தனை செய்வதற்காக மக்கள் நெடுந் தூரம் பிரயாணம் செய்து வந்தனர். அந் நேரத்தில், பக்தியுடன் வாணிபத்தையும் நோக்கமாகக் கொண்டு, பிற யாத்திரீகர்கள் வாங்கக் கூடிய தம் பொருட்களை அங்குத் தம்முடன் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடும். இவ்வாறு தோன்றியமையால், திருவிழாச் சந்தைகளுக்குத் திருச்சபையின் விசேஷமான ஆதரவும் பாதுகாப்பும் கிடைத்தது. திருவிழாச் சந்தைகளின் தோற்றம் இவ்வாறிருப்பினும் இவற்றை நடத்தும் உரிமையை அரசனிடமிருந்து பெறவேண்டியிருந்தது. இவ்வாறு அளிக்கப்பட்ட பட்டயங்கள் பல ஏற்கெனவே நடந்து வந்த சந்தைக் கூட்டங்களுக்கு அதிகார பூர்வமாக அளிக்கப்பட்ட அங்கீகாரங்களே.

திருவிழாச் சந்தைகளில் சாதாரணமாக எல்லாவகைப் பொருள்களிலும் வியாபாரம் நடக்கவில்லை. உரோமம், தோல், துணி, குதிரைகள் எனக் குறிப்பாக ஒரு முக்கிய பொருளுக்காகத்தான் சந்தை நடந்தது. எனினும், பெரிய அளவில் மக்கள் கூடும் இடத்தில் பலவகைப் பொருள்கள் விற்கப்படுவது இயல்பே. எனவே, எந்தச் சந்தையிலும் உண்பதற்கும், குடிப்பதற்கும், உடுப்பதற்கும் ஆன பொருள்கள் நிறைய விற்றன. ஜோசியர்கள், மந்திரவாதிகள், வித்தைக்காரர்கள், கழைக் கூத்தாடிகள் ஆகியோரும் அங்குக் கூடாரம் அடித்துத் தம் வித்தையைக் காட்டிப் பணம் சம்பாதித்தனர்.[1]

திருவிழாச் சந்தைகள் ஒரு நாளிலேயே முடிந்துவிடலாம். ஆனால், பல ஒரு வாரம் நடந்தன. சில அதற்கு மேலும் நடந்தன. சந்தைக் காலத்தில், தல நிருவாகிகள் தம் அதிகாரங்களைச் சந்தை நிருவாகிகளுக்கு விட்டுக்கொடுத்தனர். எனவே, சாதாரணமாக அவ்வூரில் வாணிபத்தின்மீதிருந்த கட்டுப்பாடுகள் தற்காலிகமாக விலக்கப்பட்டன. அமைதியைப் பாதுகாப்பது, வியாபாரம் நடக்கவேண்டிய முறை, தகராறுகளைத் தீர்ப்பது இவைபற்றி அதிகாரபூர்வமான அறிக்கை வெளியாகும். சந்தைக்கு நெடுந் தூரத்திலிருந்து பல மக்கள் விஜயம் செய்தனர். எனவே, தகராறுகள் தீர்ப்பதில் சிறு தாமதம் ஏற்பட்டாலும் அது நீதி மறுக்கப்பட்டதற்கு இணையாகும். வழக்குகளை உடனுக்குடன் தீர்க்க ஒரு விசேஷ நீதிமன்றம் அமைக்கப்பட்டது. அதன் பெயர் பைபெளடர் கோர்ட்டு (**Piepowder**

[1] சந்தைகளின் இவ்வியல்பான வேடிக்கைகளும் களித்தலுந்தான் இன்று பல திருவிழாச் சந்தைகளில் மிஞ்சியுள்ளன.

Court).[1] ஒன்றுக்கொன்று நெடுந் தூரத்தில் அமைந்த (York), விஞ்சிஸ்டர் (Winchester), லின் (Lynn), பிரிஸ்ட்டல் (Bristol) ஆகிய நகரங்களில் நடந்த பைபௌடர் மன்றங்களில் பல சந்தைகளுக்கு ஒருவர் பின் ஒருவராக வந்த அதே வியாபாரிகள் கலந்து கொண்டனர். அவர்களது தொழிலுக்குத் தேவைப்பட்டபடி சில வாணிப வழக்கங்களை ஒப்புக்கொண்டு, அதன் அடிப்படையில் வாணிப விதிகளைத் (Law Merchant) தோற்றுவித்தனர். அவற்றை அங்கீகரித்துள்ள எந்த நாட்டின் அரசாங்கச் சட்டம் அல்லது பொது நீதியின் அடிப்படையில் அவை இல்லை. எனினும், பொதுவாக வாணிப சமுதாயத்தை அவை கட்டுப்படுத்தி வந்தன.[2]

இடைக் காலத்தில் பன்னாட்டு வாணிபத்தைப் பெருக்க இத் திருவிழாச் சந்தைகள் மிகவும் உதவின. நெடுந் தூரத்திலிருந்த நாடுகளினின்று பல பொருள்கள் இங்குக் கொண்டுவந்து விற்கப்பட்டன. இச் சந்தைகள் இல்லையேல், அவை கிடைத்திருக்க முடியாது. எனினும், இச் சந்தைகளின் முக்கியத்துவத்தை மிகைபடக் கூறக் கூடாது. பல சந்தைகள் நடந்தபோதிலும் இவற்றில் சிலவற்றின் புகழ்தான் வெளிநாடுகளில் பரவியிருந்தது. ஏன் சில சந்தைகள் மட்டும் முக்கியமானவையாக இருந்தன; அவற்றிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் அருகிருந்தும் தூரத்திலிருந்தும் வந்தனர்; ஏன் வேறு பல சந்தைகளுக்கு அருகிலிருந்த மக்களின் ஆதரவுமட்டுமே கிடைத்தது என்பதற்குக் காரணம் காட்டுவது கடினம். அது நடந்த இடம், காலம் இவை காரணமாகச் சில புகழ்பெற்ற சந்தைகள் முக்கியமாகக் கருதப்பட்டிருக்கலாம்.[3] சந்தைக்கு வந்த வியாபாரிகள் தவறாமல் அவற்றுள் பலவற்றிற்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். எனவே, போக வசதியற்ற இடங்களிலும் வசதியற்ற பருவங்களிலும் நடந்த சந்தைகளுக்கு நிறைய மக்கள் விஜயம் செய்யவில்லை.

மிகப் பண்டைக்காலத்திலிருந்தே வணிக வர்க்கத்தின் பொருளாதார, சமுதாய அமைப்பின் இயல்புகள் தனிப்பட்டவை. பொருள்

[1] பழைய ஃபிரெஞ்சுச் சொற்கள் Piepoudreux (பொருள் விற்பவன்) அல்லது Pied (கால்), Pouldre (தூசு படிந்த) ஆகியவற்றிலிருந்து ஃபிரெஞ்சு Poudreux என்ற சொல்லைப் பார்க்க. சந்தைக்கு வந்தவர்கள் பயணம் காரணமாகத் தோன்றிய நிலையை இச்சொல் குறிக்கிறதெனத் தெரிகிறது.

[2] 1350-க்குப் பின் பைபௌடர் மன்றங்களின் முக்கியத்துவம் குறைந்தது. அவற்றின் இடத்தில் ஸ்டேபில் மன்றங்கள் (Courts of the Staple) தோன்றின.

[3] சென்ட் ஐவ்ஸ் (St. Ives), விஞ்சிஸ்டர் (Winchester), சென்ட் கைல்ஸ் (St. Giles), ஸ்டௌர்பிரிட்ஜ் (Stourbridge), ஸ்மித்ஃபீல்ட், சென்ட் பார்த்தல்மியூ (St. Bartholomew, Smithfield) ஆகிய இடங்களில் நடந்த சந்தைகள் புகழ்பெற்றவை.

களை உற்பத்தி செய்வதன் மூலமன்றி அவற்றை வாங்கி விற்பதன் மூலம் வாழ்க்கை நடத்துவதும், கூடுமாயின் செல்வத்தைச் சேர்ப்பதும் அவர்களது குறிக்கோள். எனவே, இயற்கையாகவே அவர்கள் நகரங்களில் வாழ விரும்பினர். நகரங்களில்தான் வாணிபம் செய்ய வாய்ப்புக்கள் இருந்தன. நகர அரண்களுக்குள்ளேதான் அவர்களது சரக்குகளுக்குத் தேவையான பாதுகாப்புக் கிடைத்தது.

இடைக் கால வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சமுதாயம் அனைத்தும் கூட்டுறவோடு நடக்கவேண்டியிருந்தது.[1] எனவே, ஒருவருக்கொருவர் உதவவும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், விசேஷச் சலுகைகளைப் பெறவும், ஒரே ஊரில் வாழ்ந்த வணிகர்கள் ஒன்று சேரவேண்டியிருந்தது. இதற்காக அவர்கள் அமைத்த சங்கத்தை வணிகர் கில்டு (Merchant Gild) என அழைத்தனர்.[2] நகர உரிமைக் குடியினர் அனைவரும் கில்டில் உறுப்பினர்கள்; அல்லது கில்டு உறுப்பினர்கள்தான் நகரக் குடியுரிமை பெறக் கூடியவர்கள் என்று சில சமயம் எண்ணப்பட்டது. நுழைவுக் கட்டணம் செலுத்தி எந்த நகர உரிமைக் குடிமகனும் கில்டில் சேரக்கூடும் என்று கொள்ளலாம். ஆனால், ஒரு நகரத்தில் வாணிபத்தில் ஈடுபடாமல் கில்டில் சேர விரும்பாத நகரக் குடியுரிமை பெற்ற சிலர் இருந்திருக்கலாம். கில்டுகளில் சில சமயம் நகரக் குடியுரிமை பெறாத வெளியார்களும் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டதுண்டு.

நார்மன் வெற்றிக்கு முன் இங் நாட்டில் வணிகர் கில்டுகள் இருந்ததற்குத் தெளிவான சான்று இல்லை. ஆனால், 12, 13-வது நூற்றாண்டுகளில் பெரும்பாலான ஆங்கில நகரங்களில் அவை இருந்தன.[3] நகர வாழ்க்கையின் முக்கிய அமிசமாக அவை விளங்கின. ஏற்கெனவே, ஐரோப்பியக் கண்டத்தில் நடந்துவந்த ஒரு வகை ஸ்தாப

[1] பண்டைக்காலம்தொட்டே இங்கிலாந்தில் கில்டுகளும் பிறவகைச் சங்கங்களும் (முக்கியமாகச் சமய சங்கங்களும்) இருந்தன. இடைக் காலத்தில் அவை தொடர்ந்து நடந்தன.

[2] Gild என்ற சொல் ஆங்கிலோ சாக்ஸன் வினைச்சொல் Gyldan அல்லது Gildan (பணம் செலுத்து) என்பதிலிருந்து வந்தது. Gild என்ற சொல்லுடன் அது தொடர்பு கொண்டது. ஐஸ்லண்டில் (Iceland) Gildi (கப்பம்) என்றொரு சொல் உள்ளது. இதன் தோற்றத்தின் அடிப்படையில் பார்த்தால் Guild என்று எழுத்துக் கூட்டுவதற்கு ஆதாரமில்லை. அநேக வரலாற்றாசிரியர்கள், 'Gild' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

[3] வணிகர் கில்டுகள் இருக்காத நகரங்கள், லண்டன், சிங்க் போர்ட்ஸ் (Cinque Ports) ஆகியவை. நார்விச் (Norwich), கோல்செஸ்டர் (Colchester) ஆகியவற்றிலுங்கூட இல்லாதிருக்கலாம். லண்டனிலும் சிங்க் போர்ட்ஸிலும் மிகப் பண்டைக்காலந்தொட்டு வணிகர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்ததால், அவர்கள் கில்டுகள்மூலம் சலுகைகள் நாடுவது அவசியமில்லாது போயிற்று.

னத்தைப் பின்பற்றி இங்கிலாந்தில் இவை அமைந்தன என்று ஊகிக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் தோற்றத்துக்கு இக்காரணம் கூறுவது அவசியமில்லை. இடைக் கால வாழ்க்கையின் பொது அமைப்புக்குக் கில்டுகள் முழுவதும் ஏற்றவையே. ஐரோப்பாவில் அவை தோன்றுவதற்கிருந்த காரணங்கள் அதேபோல இங்கிலாந்திலும் இருந்தன.

ஏற்கெனவே கூறியபடி, அரசன் அல்லது மேனரின் பிரபு வழங்கிய பட்டயத்தின் அடிப்படையில் வணிக கில்டுகளின் உரிமைகள் அமைந்தன. பொதுவாக, கில்டு உறுப்பினர்கள் நகரத்துக்குள் வாணிப முற்றுரிமை பெற்றனர்.[1] சுங்க வரியின்றி மொத்தமாகவும் சில்லறையாகவும் எச் சமயத்திலும் பொருள்களை வாங்கி விற்கும் உரிமையை அவர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். ஆனால், சுங்க வரி செலுத்திக் கில்டுகாரர்களுக்கு மொத்தமாக விற்பனை செய்யப் பொதுவாக அன்னியர்கள் நகரத்துக்குள் வர அனுமதிக்கப்பட்டனர்.[2] அவர்கள் சில்லறையில் பொருள் விற்கவோ கில்டில் அல்லாதவர்களுடன் வியாபாரம் செய்யவோ கூடாது. இதற்கெல்லாம் அனுமதி தரப்பட்டிருந்தால் கில்டு முற்றுரிமையின் மதிப்பே போய்விட்டிருக்கும்.[3] கில்டைச் சேராத நகரத்தாரும் சாதாரண மளிகைச் சாமான்களை நகருக்குள் வாங்கி விற்கலாம். நாடு முழுவதும் வணிக கில்டுகள் பெற்றிருந்த உரிமைகள் ஒன்றேபோல் இல்லை. இம் முற்றுரிமைக்கு வேறு சில விதிவிலக்குகளும் இருந்தன.

வழக்கமான விலைகளில் நியாயமான வாணிபம் நடக்க ஏற்பாடு செய்வதுதான் கில்டுகளின் குறிக்கோள். இக் குறிக்கோளுக்குப் புறம்பான பழக்கங்கள் ஆதரிக்கப்படவில்லை; அல்லது நிச்சயமாகத் தடை செய்யப்பட்டன. இடைக் காலத்தில் ஒரு பொருளின் நியாயமான விலை என்பது அதன் உற்பத்திச் செலவைப் பொறுத்தது எனக் கருதப்பட்டது. வியாபாரி நியாயமான இலாபத்தைச் சம்பாதிக்கலாம். அவனது இனத்துக்கேற்ற சுகத்தோடு வாழத் தேவையான வருவாயே நியாயமான இலாபமாகும். ஆனால், அமித இலாபம் பெற நினைப்பது அக் காலத்துக் கிறித்துவ அறக் கோட்பாடுகளுக்குப் புறம்பானதாகும். நியாயமான விலைக்கு அதிகமாகவோ குறைவாகவோ வியா

[1] சில சமயம் இம் முற்றுரிமை நகருக்கு வெளியில் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை அளிக்கப்பட்டது.

[2] நகரில் பொருள் விற்க அனுமதிக்கப்பட்ட கில்டைச் சேராதவர்கள் நகரக் கப்பத்துக்கு (**Firma Burgi**) ஏதும் செலுத்துவதில்லை. அரசனுக்குக் கட்டவேண்டிய இத் தொகையில் சுங்கமும் ஒரு பகுதி. எனவே, அவர்களிடமிருந்து சுங்கம் வசூலித்தது நியாயமே.

[3] தானியம், உரோமம், தோல் இவற்றில் கில்டைச் சேராதவர்கள் வியாபாரம் செய்யக்கூடாது.

பாரம் செய்தால் வாங்குபவனோ விற்பவனோ பாதிக்கப்படுகிறான். எனவே, விலையை மாற்றக் கூடாது. பொருள்களின் அளிப்புக் குறைவாக உள்ள சமயத்தில் விலையை உயர்த்திப் பிறருடைய தேவைகளினின்று இலாபம் பெற எண்ணுவது ஒரு கிறித்துவனுக்கு அழகல்ல என்று கருதப்பட்டது. பொருள்கள் தேங்கிவிட்டதனால் விலை குறைத்து விற்பதும், நேர்மையான வணிகர்களுக்கு நஷ்டமுண்டாக்குமாதலின் நல்லதல்ல.[1] ஓர் அங்காடியில் பொருள்களை வாங்கி, அவற்றின் மதிப்பை எவ்வகையிலும் உயர்த்தாமல், அதே அங்காடியில் உயர்ந்த விலைக்கு விற்பது [இலாப வாணிபம் (regrating)] தடுக்கப்பட்டது. பொருள்களை அங்காடிக்கு வரும் வழியிலேயோ, அல்லது அங்காடி சரியாகத் திறக்கு முன்னர் அவை வந்தவுடனேயோ குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்பதற்காக வாங்குவதும் [முந்திக் கொள்வது (forestalling)] தடுக்கப்பட்டது. பொருள்கள் முழுவதையுமோ அல்லது பெரும்பகுதியையோ விலைகளை ஏற்றுவிப்பதற்காக வாங்கிவிடுவதும் [மொத்தமும் வாங்குதல் (engrossing)] தடை செய்யப்பட்டது. இது இன்றைய வழக்கமான பதுக்கலுக்கு இணையான இடைக் கால வழக்கமாகும்.

இத் தீய வழக்கங்கள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை; இவற்றை எப்போதும் தெளிவாகப் பகுத்துச் சொல்ல முடியாது. இவை மிகச் சாதாரணமாக நடந்துவந்தன. இவை பற்றிய குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கையையும் இவற்றுக்கான கட்டுப்பாடுகளின் எண்ணிக்கையையும் பார்த்தால், இடைக் கால வாணிப நடைமுறை பல சமயங்களில் கில்டுகளின் குறிக்கோளுக்கு ஏற்றவாறு இல்லை என்று தெரிகிறது.

வணிக கில்டின் முக்கியமான பணிகளில் ஒன்று வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவது. விற்பனைக்கு இருக்கும் பொருள்களைப் பரிசோதிக்க அதிகாரிகளைக் கில்டு நியமித்தது. தரம் குறைந்த பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றின் சொந்தக்காரர்களுக்கு அபராதமும் மறுபடி அக் குற்றம் செய்தால் கில்டிலிருந்து நீக்கமும் தண்டனையாக அளிக்கப்பட்டன. எடைகள், அளவுகள், தரங்கள், விலைகள் இவைபற்றி 'அஸைஸஸ்' (Assizes) எனப்படும் சட்டங்கள் விதிக்கப்பட்டன. அவற்றை மீறியவர்கள் பலரெனினும், நேர்மை

[1] வழக்கமான விலையில் தன் பொருள்களை விற்க முடியாத வணிகன் கில்டின் சக உறுப்பினர்கள் அனுமதியின்றி விலை குறைக்கலாகாது. இவ்வனுமதி கிடைக்காவிட்டால் தன்னிடம் மிகுந்திருந்த சரக்கை வாங்கிக் கொள்ள அவன் அவர்களுக்குச் சொல்லலாம்.

யற்ற வியாபாரிகளின் தந்திரங்களினின்று வாங்குவோருக்குப் பாது காப்பளிக்கவேண்டிய அவசியத்தை அதிகாரிகள் உணர்ந்திருந்ததற்கு இச் சட்டங்கள் சான்ருகும்.

வணிக கில்டின் சமுதாயக் கூட்டமைப்பு இயல்பு அதில் வழங்கிய பண்டத்தொகுதி உரிமை (right of lot)யிலிருந்து தெளிவாகத் தெரி கிறது. ஒரு கில்டுக்காரன் மிக்க லாபத்தில் பண்டங்களை வாங்கினுல் அந்தப் பொருள் தொகுதியைப் பிற கில்டுக்காரர்களுடன் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். இவ் உரிமை நகரத்துக்கு நகரம் மாறுபட்டது. சில நகரங்களில் அச் சமயம் அங்கிருந்த கில்டுக்காரர்களுடன் மட்டுமே அப் பண்டங்களைப் பங்கிட்டுக்கொள்ளவேண்டும் என்றிருந்தது. சில வற்றில் பங்கிடப்படவேண்டிய அளவுக்கு வரம்பு வைத்துப் பெரும் பகுதி முதலில் வாங்கியவனுக்கே அளிக்கப்பட்டது. வேறு சிலவற் றில்தான், பிற வணிகர்களுக்குப் பங்கிட்டளித்த பொருள்கள்மீது முதலில் வாங்கியவன் ஒரு சிறு இலாபம் பெற அனுமதிக்கப்பட் டான். இதற்கிணையானதும், இதனின்று தோன்றியிருக்கக் கூடியது மான வழக்கம் கில்டுகளே மொத்தமாகப் பண்டங்களை வாங்குவ தாகும்.[1] இப் பண்டங்களை கில்டுக்கு ஒரு சிறு இலாபம் வருமாறும், கில்டுக்காரர்கள் சில்லறையில் நியாயமான விலைக்கு விற்கக்கூடு மாறும் ஒரு விலையை நிர்ணயித்துக் கில்டு உறுப்பினர்கள் பின்னர் பங்கிட்டுக்கொள்வர். இம் முறைகளால் கில்டுக்காரர்களுக்குச் சம மான வாணிப வாய்ப்புக்கள் கிடைத்தன. பணக்கார வியாபாரிகள் வியாபாரத்தில் சர்வாதீனம் செய்யும் இயல்பை இது தடுத்தது. தவிர, வெளி வியாபாரிகளுக்குப் போகாமல் இலாபத்தைக் கில்டு பெற்றது. இவ் வழக்கங்களில் கம்பெனி வியாபாரத்தின் வித்துக்கள் புலப்படுகின்றன.

கடன்களை வசூலிப்பதில் கில்டின் ஆதரவும் பாதுகாப்பும் வியா பாரிக்கு மிகவும் பயன்பட்டன. நீதிமன்றத்தில் வழக்குத் தொடரு வதனுல் விரைவில் பலன் கிட்டாது; செலவு அதிகம்; பலன் நிச்சயமு மில்லை. எனவே, வேறு பரிகாரங்கள் இருக்கும்போது கில்டுக்கா ரர்கள் இம் முறையைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை. அதன் உறுப் பினர்களுக்கு இடையே ஒருவருக்கொருவர் செலுத்தவேண்டிய பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு கட்டாயப்படுத்த கில்டு அமைப்

[1] கில்டுகள் வியாபாரக் கம்பெனிகள் அல்ல. கில்டுகள் மொத்த மாகப் பொருள் வாங்கும் வழக்கம் விதிவிலக்கே. பின்னர் ஓர் அதிகாரத் தில் விவரிக்கப்படும் 'கட்டுப்பாட்டு'க் (Regulated) கம்பெனிகள் சில விஷயங் களில் வணிக கில்டுகளை ஒத்திருந்தன.

பால் முடிந்தது. ஆனால், கடன்காரர், கடன் கொடுத்தவர் இருவரும் வெவ்வேறு ஊர்களில் வசித்து, வெவ்வேறு கில்டுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தபோது இது அவ்வளவு எளிதல்ல. கடனாளி பணம் செலுத்த மறுத்தாலோ அல்லது அவனால் முடியாவிட்டாலோ பணம் சேரவேண்டியவன் தன் வழக்கைத் தன் கில்டிடம் கூறுவான். அது கடனாளியின் கில்டை இடித்துரைக்கும். அந்தக் கில்டு பணத்தைக் கட்டும்படி அவனுக்குச் சொல்லும். சாதாரணமாக, அதுவே பலன்தரப் போதுமானதாக இருந்தது. தேவைப்பட்டால், கடன் கொடுத்தவனது கில்டு கடனாளியின் கில்டைச் சேர்ந்த பிற வியாபாரிகளின் பொருள்களைப் பறிமுதல் செய்யும். அவர்களுக்குத் தம் கில்டிடம் முறையிடுவதன்றி வேறு வழியில்லை. கில்டு கடனாளியை அவர்களுக்கு நஷ்ட ஈடு தரச் செய்யும். இவ்வாறு சுற்றி வளைத்து ஏதோ ஒரு மாதிரி நியாயம் கிடைக்கும்.

இந்த முறைக்கு ஆட்சேபம் இருந்தது. கடன்படாதவர்கள், மற்றவர் கடனுக்கு உத்தரவாதமளிக்காதவர்கள் எல்லாம் காரணமின்றித் தம் பொருள்கள் பறிக்கப்பட்டு, அதற்கான பணம் நிச்சயமாகக் கடைசியில் வரும் என்ற நம்பிக்கையும் இல்லாத நிலையில் அகப்பட்டுக்கொண்டனர். நாளடைவில் அரசனிடமிருந்து நகரங்கள், பிறர் கடன்களுக்காகத் தம் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாகாது என்ற உரிமையைக் கில்டுக்காரர்கள் பெறுமாறு பட்டயங்கள் பெற்றன. 1275-ல் வெஸ்ட்மின்ஸ்டரின் முதல் சட்டத்தின்படி, தான் கொடுக்கவேண்டியதல்லாத வேறு கடன்களுக்காக எந்த வியாபாரியின் சரக்கும் பறிமுதலாவது தடைசெய்யப்பட்டது. இந்தச் சட்டம் இயல்பாக மீறப்பட்டது. பொதுமக்களது கருத்து வளருமுன் சட்டங்கள் இயற்றப்பட்டால் அவற்றை அமலாக்குவது கடினம் என்பதற்கு இது ஒரு சான்று. பறிமுதல் செய்யும் பழைய வழக்கம் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிவரை அடிக்கடி கையாளப்பட்டது என்று எண்ண இடமிருக்கிறது.

வெவ்வேறு கில்டுகளைச் சேர்ந்தவர்களுக்கிடையே பணம் செலுத்தும் பொறுப்பைக் கட்டாயமாக்குவதிலுள்ள கஷ்டத்தைப் போக்கச் சில சமயம் நகரங்கள் தமக்குள் ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. இடைக் காலத்தின் பிற்பகுதியில் இவை மிக அதிகமாயின. இவ்வொப்பந்தங்களில் சுங்க வரிகள் போன்று வியாபார விவகாரங்களைச் சேர்ந்த பல விஷயங்களைப்பற்றி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. லண்டனுக்கும் வேறு பல முக்கிய நகரங்களுக்கும் இடையே இவ்வாறு தனித்தனி ஒப்பந்தங்கள் இருந்தன. சௌதாம்ப்டன்

(Southampton) நகருக்கும் அத்தகைய ஒப்பந்தங்கள் பல இருந்தன. அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்குக் குறிப்பிடாமல் ஒரு நாட்டு நகரத்துக்கும் மற்றொன்றின் நகரத்துக்குமிடையேகூட அத்தகைய ஒப்பந்தங்கள் ஏற்படக்கூடும்.[1]

வணிக கில்டு வியாபார விஷயங்களில் மட்டுமின்றி, சமயம், தருமம் இவ் விஷயங்களிலும் ஈடுபட்டிருந்தது. நோய்வாய்ப்பட்டும் வறுமையாலும் வருந்தினவருக்கும், நஷ்டம் அடைந்தவருக்கும் உதவி கிடைத்தது. தம் உறுப்பினர்கள் இறந்தால் அவர்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனைக்குச் செலவுகள் செய்யவும், தேவைப்பட்டால் அவர்களின் மனைவிகளுக்கும் குழந்தைகளுக்கும் ஆதரவளிக்கவும் கில்டுகள் கடமைப்பட்டிருந்தன.

கில்டின் தலைவர் நகராண்மைக் கழக முதுமகன் (Alderman). கில்டு நிருவாகத்தில் அவருக்கு உதவ இரண்டு அல்லது நான்கு காப்பாளர்களும் (Wardens) இருந்தனர். சாதாரணமாக, ஒரு மன்றமும் (Council) இருந்தது. பெரிய கில்டுகளில் சில விசேஷமான பணிகளுக்காக வேறு அதிகாரிகளும் இருந்தனர். கில்டின் அளவுக்குத் தக்கவாறு அதன் நிருவாக அமைப்பும் அதிகாரிகளின் எண்ணிக்கையும் மாறின. குறிப்பிட்ட காலங்களில், அவ்வப்போது நடந்த கில்டு கூட்டங்களில் (morwenspeches) புது உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்; விதிகள் இயற்றப்பட்டன; வேறு விஷயங்கள் கவனிக்கப்பட்டன. பின்னர் விருந்தும் நடக்கும்.

உறுப்பினர்களுக்கிடையே தோன்றிய தகராறுகளைத் தீர்க்க கில்டு நீதிமன்றம் ஒன்று நடந்தது. அது கில்டு விதிகளை மீறிய குற்றங்களை ஆராய்ந்து தண்டனை அளித்தது. சில சமயம் இவ் விஷயங்கள் நகர நீதிமன்றத்திலும் நடந்தன. இவ்விரு நீதிமன்றங்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கூறுவது எளிதன்று.

நகரத்தோடு வணிக கில்டு கொண்டிருந்த தொடர்பு மிகவும் சுவையுடையதும் விவாதிக்கப்பட்டதுமான விஷயமாகும். கில்டும் நகர நிருவாக அமைப்பும் ஒன்றே என்பது தவறு. எனினும், கில்டு என்பது தற்காலத்திய வணிகர் சபை (Chamber of Commerce) போன்ற தனிப்பட்டவர்களது சங்கம் போன்றதல்ல; அதனினும் சக்தி வாய்ந்ததாகும். நகர நிருவாகத்துக்கும் அதற்கும் நெருங்கிய

[1] லண்டனுக்கும் பேயோனுக்கும் (Bayonne) இடையே அத்தகைய ஓர் ஒப்பந்தம் இருந்தது.

தொடர்பு இருந்தது. இவ் விஷயத்தில் மட்டுமன்றி இடைக் கால வாழ்க்கையின் வேறு பல அமிசங்களிலும், எல்லா இடங்களிலும் இந்த மாதிரி நடைமுறைதான் வழக்கத்தில் இருந்தது என்று எதையும் எடுத்துக் கூறுவது பிழையாகும்.[1] ஆனால், நிச்சயமாகக் கூறக் கூடியவை யாதெனில், கில்டு உறுப்பினர் பெரும்பாலும் நகர உரிமைக் குடியினர்தாம் என்பதும், நகர உரிமைக் குடியினரில் பெரும்பாலோர் கில்டு உறுப்பினரே என்பதுமாகும். மேலும், நகரம், கில்டு இரண்டின் நிருவாகத்திலும் மிகவும் ஈடுபட்டவர்கள் ஒரே நபர்களே. குடிமக்களில் மிகப் பணக்காரர்களும் மிக முக்கியமானவர்களுமே இரண்டிலும் அதிகாரம் வகித்தனர். நகர நிருவாகத்துக்கும் கில்டுக்கும் எவ் விஷயத்திலும் போட்டியில்லை. ஒன்றின் நலமே மற்றொன்றின் நலமாகும். எனவே, நகரம், கில்டு இரண்டின் நிருவாகமும் ஒன்றுசேர்ந்துவிட்டது என்று எண்ணுவது தவறல்ல.

[1] நடைமுறைகளில் நகரத்துக்கு நகரம் பல வேறுபாடுகள் இருந்தன. போக்குவரத்து வசதிகள் பெருகி, நாடு முழுவதும் ஒரே மாதிரி கொள்கைகள் தோன்றிய பின்னரே, நகர நிருவாகம் எங்கும் ஒரே மாதிரி நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

3. தொழில் கில்டுகள்

(Craft Gilds)

இடைக் கால நகரங்கள் ஒவ்வொன்றிலும் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த பல மக்கள் இருந்தனர் என்பதும், அநேகமாக எல்லா நகரங்களிலும் அவர்கள் வணிக கில்டுகள் அமைத்திருந்தனர் என்பதும் ஏற்கெனவே கூறப்பட்டது. நாளடைவில் பொருள்களை உற்பத்தி செய்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களும் தங்களுக்குள் சங்கங்களை அமைத்துக்கொண்டனர். அவற்றிற்கும் கில்டுகள் என்ற பெயரே வழங்கியது.[1] மிகச் சிறிய நகரங்கள் தவிரப் பிறவற்றில் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு கில்டு இருந்தது. நகரத்தில் சொத்து இல்லாத தாழ்ந்த அந்தஸ்திலிருந்தவர்கள், வணிக கில்டு, நகர நிருவாகம் இரண்டிலும் அதிகாரம் செலுத்திய பணக்கார நகர உரிமைக் குடியினரின் ஆதிக்கத்தை விரும்பாது முதன்முதலில் தொழில் கில்டுகள் அமைத்தனர் எனக் கூறப்படுகிறது. இவ் வாசகத்தின் பொருள் வணிக கில்டுகளுக்கு விரோதமாகத் தொழில் கில்டுகள் தோன்றின என்பதே. இவை இரண்டுக்கும் சில ஐரோப்பிய நகரங்களில் முரண்பாடு இருந்ததாகச் சான்றுகள் உள்ளன. ஆனால், இங்கிலாந்தில் இவை இரண்டுக்கும் அதே போல விரோதம் இருந்ததாகத் தெரியவில்லை. வணிக கில்டு, மற்றும் இடைக் கால வாழ்க்கையின் பல அமிசங்களின் அடிப்படைக் கூட்டுறவாகும். எனவே, அதே கூட்டுறவு மனப்பான்மை காரணமாக ஓரே தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் கில்டுகளை அமைத்துக்கொள்வது இயல்பே எனலாம்.

[1] 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தொழில் கில்டுகள் இருந்ததாகத் தெரிகிறது. லண்டன், லிங்கன் (Lincoln), ஆக்ஸ்பர்டு (Oxford) ஆகிய இடங்களில் 1130-ல் நெசவாளர் கில்டுகள் இருந்தன. சில ஆண்டுகளுக்குள் லண்டனில் ரொட்டி சுடுவோர், ஆக்ஸ்பர்டில் செருப்புத் தைப்பவர்கள், விஞ்சிஸ்டரில் (Winchester) ஆடை செய்யும் தொழிலில் தோய்த்துக் கஞ்சி போடுவதில் ஈடுபட்டிருந்தவர்கள் (Fullers) ஆகியோர் கில்டுகளை அமைத்தனர்.

உண்மையில், தொழில் துறையில் கில்டு முறை நன்கு வளர்ந்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருந்தன. ஒத்த குறிக்கோள்கொண்டு ஒரே தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் சங்கம் அமைத்துக்கொள்ளும் இயற்கையான இயல்பைத் தவிர, நகர அதிகாரிகளும் அவர்களை அவ்வாறு செய்யுமாறு வற்புறுத்தினர்.[1] இவ்வுயர் அதிகாரிகள் அநேகமாக எல்லா நகரங்களிலும் வணிக கில்டுகளிலும் நெருங்கிய அக்கறைகொண்டிருந்தனர். விற்பனைக்கு வரும் பொருள்கள், நல்ல கச்சாப் பொருள்களைப் பயன்படுத்தி நல்ல வேலைப்பாடுடன் செய்யப்பட்டிருக்க வேண்டும் என அவர்கள் விரும்பினர். எனவே, ஒவ்வொரு தொழிலிலும் உற்பத்தி தரமானதாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர். இதற்காக அத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், தொழிற்சாலைகளில் தயாராகும் பொருள்களைப் பரிசோதிக்க அதிகாரிகளை நியமிக்கவேண்டும் எனக் கட்டாயப்படுத்தினர். நாளடைவில், இதனால் தொழில்பற்றிய எல்லா விவகாரங்களையும் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. அந்தந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் அனைவரும் ஓர் அமைப்பாக, தொழில் கில்டாக மாறினர்.[2] தன் ஆதிக்கத்துக்கு வெளியிலிருந்தவர்களது திறமைக்கும் நேர்மைக்கும் கில்டு உறுதிகூற முடியாததலின், தொழிலாளிகள் அனைவரும் கட்டாயமாகக் கில்டு உறுப்பினராக வேண்டியிருந்தது.[3]

ஒரு தொழிலைக் கட்டுப்படுத்தும் உரிமை இவ்வாறு அத் தொழில் கில்டுக்கு இருந்தது. ஆனால், அந்தக் கில்டைக் கட்டுப்படுத்தும் உரிமை நகர நிருவாகத்துக்கு இருந்தது.[4] ஒரு கில்டு தன் கடமைகளைச் சரி

[1] அங்கீகாரமின்றியே சில தொழில் கில்டுகள் தோன்றின. அவை திருட்டு கில்டுகள் (**Adulterine Gilds**) எனப்பட்டன. அவற்றை அதிகாரிகள் ஒழிக்கக் கூடும்.

[2] இவற்றில் முக்கியமான தொழில்கள் ஆடைகள் தயாரிப்பதைச் சேர்ந்தவை (உதாரணம்: நெசவாளிகள், தையற்காரர்கள், தலையணை தயாரிப்போர்). தோல் தொழில் (உதாரணம்: சேணம் தயாரிப்போர்), பொற்கொல்லர், வெள்ளிக் கொல்லர், கவசம் செய்வோர், கடிவாளம் செய்வோர் ஆகியோர் சங்கங்களும் முக்கியமானவையே. தம் தொழிலின் தன்மைப்படி இடத்துக்கு இடம் மாறவேண்டியிருந்ததால் கட்டடத் தொழிலில் ஈடுபட்டிருந்த கொத்தர், தச்சர் போன்றவர்களின் சங்கங்கள் அவ்வளவு நன்ருக அமைந்திருக்கவில்லை.

[3] கில்டில் இல்லாதவர் அத் தொழிலைச் செய்யக்கூடாது என்பது முதலில் ஒரு சிலருக்கு மட்டும் முற்றுரிமை வழங்குவதற்காகச் செய்த ஏற்பாடு அல்ல. கில்டில் இல்லாதவர்களை அதில் சேரச் செய்யவும், அவர்களது உற்பத்தியை மேற்பார்வை செய்யவுமே இவ்வாறு விதிக்கப்பட்டது.

[4] இருந்தபோதிலும், சில முக்கியத் தொழில் கில்டுகள் அரசனிடமிருந்து பட்டயங்கள் பெற்று நகர நிருவாகக் கட்டுப்பாடுகளினின்று விடுதலை பெற்றன.

வரச் செய்யவில்லை என்றே, பொது மக்களது நன்மையைவிடத் தன் உறுப்பினரது இலாபத்தை முக்கியமாகக் கருதித் தன்னலத்தோடு நடக்கிறது என்றே கருதப்பட்டால், கில்டு விதிகளைக் கூட்டவோ நீக்கவோ நகராட்சி தயங்கவில்லை. ஆனால், நன்கு கடைப்பிடிக்கப்பட்டால், மேல் அதிகாரி எவருடைய குறுக்கீட்டையும் தேவையற்றதாகச் செய்யக்கூடிய குறிக்கோளை கில்டுகள் ஏற்படுத்திக்கொண்டன. நேர்மைக்கு உதாரணமாகத் திகழவேண்டும், பொருள்களின் தரம் மிக உயர்வாக இருக்கவேண்டும் என்பதே கில்டுகளின் குறிக்கோள். விலைகள் நியாயமாக இருக்கவேண்டும்; பற்றுக்குறை அல்லது தேக்கம் காரணமாக விலைகளை ஏற்றவோ குறைக்கவோ கூடாது என்று அவை வற்புறுத்தின. தொழிலாளிகளைக் கில்டு பாதுகாத்தது. அவர்கள் சுகமான வாழ்க்கை வாழ வழிசெய்யவேண்டிய அவசியத்தை அது ஒப்புக்கொண்டது. ஆனால், நல்ல வேலைப்பாடும், தொழிலில் நேர்மையும் தனிப்பட்ட உறுப்பினர்களுடைய சொந்த நலத்தைப் பாதுகாப்பதைவிட முக்கியமாகக் கருதப்பட்டது.

தொழில் கில்டின் அமைப்பு ஓரளவுக்கு வணிக கில்டின் அமைப்பை ஒத்திருந்தது. தொழில் கில்டின் தலைமையில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நகர மேயரால் நியமிக்கப்பட்ட பல காவலர்கள்[1] (Wardens) இருந்தனர். பெரிய கில்டுகளில் சங்கத்தின் சாதாரண நடவடிக்கைகளைக் கவனிக்கவும், உறுப்பினர்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை அமைக்கவும் ஒரு மன்றம் (Council) இருந்தது. காலந்தோறும் உறுப்பினர்களின் பொதுச்சபைகள் (Assembly) கூடி முக்கியமான விவகாரங்களைத் தீர்த்தன. கில்டு அமைப்புக்களின் விவரங்கள் ஒன்றுக்கொன்று மிகவும் மாறுபட்டன. சிலவற்றில் காவலர்களைப் பொதுச்சபை தேர்ந்தெடுத்தது. சிலவற்றில் மன்றம் தேர்ந்தெடுத்தது. சில கில்டுகளில் மன்றம், பொதுச்சபையின் அதிகாரத்துக்குட்பட்டு, அதன் சாதாரணக் குழுவாகப் பணியாற்றியது. வேறு சிலவற்றில் கில்டு அதிகாரம் பெருமளவுக்கு மன்றத்திடமிருந்தது; பொதுச்சபைக்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை.

தரம், வேலைப்பாடு இரண்டும் உயர்வாக இருக்குமாறு உறுப்பினர்களின் உற்பத்தியைப் பரிசோதிப்பதுதான் காவலர்களின் முக்கிய பணி. இதற்காக, தொழிற்சாலைகளுக்குப் போய் உற்பத்தியான பொருள்களையும், ஆகிக்கொண்டிருப்பவற்றையும் பரிசோதிக்கும்

[1] கில்டின் அளவுக்குத் தக்கபடி இரண்டு, நான்கு அல்லது அதற்கு மேலும்.

அதிகாரம் அவர்களுக்கு இருந்தது. நல்ல வேலைப்பாடு அல்லது நல்ல கச்சாப் பொருள் இல்லாததால் தரம் குறைந்த பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அதைச் செய்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மோசமான குற்றங்களைத் திரும்பத் திரும்ப இழைத்தவர்கள், மரச் சட்டத்தில் (stocks or the pillory) அடைத்து வைத்துத் தண்டிக்கப்பட்டனர். அவர்கள் கில்டிலிருந்து நீக்கப்படலாம்.

தொழிலின் நடைமுறைகளைப்பற்றிய விதிகளை கில்டு செய்தது. அதை நடைமுறைக்குக் கொண்டுவந்தவர்கள் காவலர்கள். இவ் விதிகளில் பல தொழில் நுட்ப விவரங்களைப்பற்றியன. தொழிலுக்குத் தொழில் மாறுபட்டது. வேறு சில பொதுவான விதிகள் இரவில் வேலை செய்வதைத் தடுத்தன. அப்போது போதுமான அளவு செயற்கை ஒளி தரக்கூடிய சாதனமில்லை. எனவே, இரவு வேலையின் தரம் திருப்திகரமாக இருக்காது. அது எப்படி இருப்பினும் அதை மேற்பார்வை செய்வதும் கடினம். கூலி விவரங்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஓரளவுக்கு விலையும் நிர்ணயிக்கப்பட்டது. பல இடங்களில் விலைக் கட்டுப்பாட்டைக் கில்டு, நகராட்சி இரண்டுமே செய்தன. உணவுப் பண்டங்களை வாங்கி விற்கவேண்டிய அவசியம் இருந்த தொழில்களில் வணிக கில்டு அதிகாரிகளைப் போலவே தொழில் கில்டு அதிகாரிகளும் முந்தி வாங்குதல், இலாப வாணிபம், மொத்தமும் வாங்குதல் போன்றவற்றைத் தடைசெய்வதில் எச்சரிக்கையாக இருந்தனர்.

இடைக் காலத்தில் தொழிற் கலைஞர்களை பின்வரும் மூன்று வகைகளாகத் தனித்தனியாகப் பிரிக்கலாம்: தொழில் முதல்வர்கள் (Masters), தேர்ந்த கூலியாட்கள் (Journeymen), தொழில் பயில்வோர் (Apprentices). தொழில் முதல்வன் தொழிற்சாலையை அமைத்தான். தன் ஊழியர்களுடன் அதில் தானும் உழைத்தான். தேர்ந்த கூலியாட்கள் தொழிலை நன்கு கற்றவர்கள்; கூலிக்கு வேலை செய்பவர்கள். தொழில் பயில்வோர் சிறுவர்களும் இளைஞர்களும்; அத்தொழிலைக் கற்பதில் ஈடுபட்டிருந்தனர். இப் பாகுபாடு சமுதாய அந்தஸ்திலுள்ள வேறுபாடுகளைக் குறிக்கவில்லை; தொழில் வாழ்க்கையில் வெவ்வேறு கட்டங்களைக் குறிக்கிறது. தொழிலில் முதலில் புகுபவர்கள் அதைப் பயில வேண்டும். அதன்பின் சரியாகத் தேர்ச்சி பெற்ற தொழிலாளியாகலாம். பயிற்சிக் காலத்தைத் திருப்திகரமாக முடித்த பின் கில்டின் முழு அங்கத்தினராக முடியும். வேண்டுமாயின், அதன் பின் தொழில் முதல்வனாகக் கூலியாட்களை வேலைக்கமர்த்தியும், பயில்வோரை எடுத்துக்கொண்டும் தன் சொந்தத் தொழிலைத்

தொடங்கி நடத்தலாம். எனினும், கில்டு உறுப்பினரான இளைஞர்கள் சில ஆண்டுகள் தொழில் முதல்வனொருவனிடம் கூலியாளாக உழைப்பது வழக்கமாக இருந்தது.[1] சாதாரணமாகத் தான் தொழில் பயின்ற முதல்வனிடமே வேலை செய்யலாம். இதனால், அவனது அனுபவமும் தொழில் நடத்தும் பயிற்சியும் அதிகரிக்கின்றன. தான் சொந்தத் தொழிற் கூடம் அமைக்கத் தேவைப்படக்கூடிய சிறு மூலதனத் தொகையையும் அக் காலத்தில் அவன் சேர்த்துக்கொள்கிறான்.[2] தேர்ந்த கூலியாள் இக் கட்டத்தைத் தன் வாழ்க்கையின் முடிவானதாகக் கருதவில்லை. நாளடைவில் தானும் ஒரு தொழில் முதல்வனாக வேண்டும் என்று எதிர்பார்த்தான்.[3] கில்டு முறை நன்கு நடந்த காலத்தில், இக் காரணத்தினால் கூலியின் அளவுபற்றிய பிரச்சினைக்கு முக்கியத்துவம் இல்லை. நாளைக்கு முதல்வரானால் தாமே அதிகக் கூலி பிறருக்குக் கொடுக்க வேண்டுமாதலின், தாம் கூலியாட்களாக இருந்த போது அதிக ஊதியம் கேட்க அவர்கள் முயலவில்லை. கூலியாட்கள், தொழில் பயில்வோர் இரு வகையினருமே தம் தொழில் முதல்வரின் வீட்டில் வசித்தது இயற்கை. அவர்கள் அவருடனேயே உணவு அருந்தினர். தொழில் விஷயங்களில் உள்ளது போலவே அவர்களது சொந்த நடத்தையிலும் முதல்வனுக்குக் கட்டுப்பட்டு நடந்தனர்.

1260ஆம் ஆண்டிலேயே தொழில் பயில ஒரு தொழில் வினைஞனிடம் சேரும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. இது விரைவில் கில்டுத்தொழில் முறையின் ஒரு முக்கிய அமிசமாயிற்று. கில்டு முறை தோன்றிய தொடக்க நாட்களில், ஒருவன் தன் தேர்ச்சியை நிரூபித்து விட்டால் தொழிற் பயிற்சி செய்யாமலேயே கில்டில் சேரலாம். ஆனால், நாளடைவில் தொழில் பயில்வோனாகச் சேருவதன் மூலம்தான் அத் தொழிலில் சேர முடியும் என்ற வழக்கம் ஏற்பட்டது.[4] கில்டின்

[1] பதினைந்தாம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் கில்டு விதிப்படி தொழில் பயின்றவன், பயிற்சி முடிந்ததும் சில காலம் கூலியாளாக உழைத்த பின்னரே தொழில் முதல்வனாக அங்கீகரிக்கப்படுவது வழக்கமாக இருந்தது.

[2] தொழில் தலைவனது மூலதனமெல்லாம், அவன் பயன்படுத்திய கருவிகளும் மூலப் பொருள்களுமேயாம். பல சமயம் வாடிக்கைக்காரர் கொடுத்த மூலப் பொருள்களைக் கொண்டு அவர்கள் ஏவியபடி பொருள்களைச் செய்வதுண்டு. அவனை எல்லா வாடிக்கைக்காரர்களும் அறிவர். அவர்களது ஆதரவு அவனது நற்பெயரைப்பொறுத்து இருந்தது.

[3] தொழில் முதல்வனாகும் முன்னர், கூலியாள் கில்டுக் காவலருக்குத் தான் சொந்தத் தொழில் நடத்தும் திறமை பெற்றுவிட்டதை நிரூபிப்பதற்காக 'ஒரு முதல்தரமான உற்பத்தியை' (Masterpiece) செய்து காட்ட வேண்டியிருக்கும்; எனினும், இவ் வழக்கம் எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டதாகக் கூற முடியாது.

[4] எனினும், கில்டு முறை வழக்கத்திலிருந்த காலம் முழுதும் ஒரு சில தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள் பயிற்சியை மேற்கொண்டிராவிடினும், அவர்களை கில்டுகளில் சேர்த்துக்கொண்டதற்குச் சான்றுகள் உள்ளன.

மேற்பார்வையில் புது உறுப்பினர்களுடைய பயிற்சி நடந்தால்தான் வேலைப்பாட்டின் தரம் உயர்ந்து கில்டின் நற்பெயர் காப்பற்றப்படும் என்று கருதப்பட்டது. தொழிற் பயிற்சி (Apprenticeship) வெறு மனே ஒரு வேலையைக் கற்றுக்கொடுப்பது மட்டுமல்ல; தொழில் பயில வரும் இளைஞனை நல்ல தொழிலாளியாக்குவது போலவே, நல்ல குடி மகனாகவும், நல்ல கிறித்துவனாகவும் ஆக்குவதே அதன் நோக்கம். தொழிலில் திறமை யளிப்பதோடு பயில வந்தோரின் நன்னடத்தையை வளர்ப்பதும், சமயப் பயிற்சி அளிப்பதும் தொழில் முதல்வனுடைய கடமைகளாகும்.[1] அவர்களைக் கட்டுப்படுத்தும் உரிமை முழுமை யாக அவனுக்கு இருந்ததற்கு இதுவே காரணம்.

தொழிலுக்குத் தொழில், நகரத்துக்கு நகரம் தொழில் பயில வேண்டிய காலம் மாறுபட்டது. ஆனால், நாளடைவில் லண்டன் நகரத்து கில்டுகள் பயிற்சிக் காலத்தை ஏழாண்டுகளாக நிர்ணயித் தன. பிற நகரங்களது கில்டுகளும் இவ் உதாரணத்தைப் பின் பற்றின; எனவே, கடைசியில் இதுவே சாதாரணமான பயிற்சிக் காலமாகக் கருதப்பட்டது. 1563ஆம் ஆண்டில் எலிசபெத் ராணியது தொழில் வினைஞர்கள் சட்டம் (Elizabethan Statue of Artificers) இதையே எல்லா இடங்களிலும் பயிற்சிக் காலமாக நிர்ணயித்தது. சாதாரணமாக, தஸ்தாவேஜிகளில் பயிற்சியாளர்களின் பெயர் எழுதப் பட்டது. இதனால், பயிற்சி உண்மையில் நடத்துவது என்பதற்குச் சான்று ஏற்படுகிறது. பயிற்சியாளர்களைப் பதிவு செய்ய நகராட்சிக் குக் கட்டணம் செலுத்தவேண்டி யிருந்ததால் சிலர் பதிவு செய்து கொள்ளவில்லை. சில சமயம் தொழில் பயில்வோர் ஒரு தொழில் முதல்வரை விட்டு மற்றொருவரிடம் பயில அனுமதிக்கப்பட்டனர். அவனது முதல்வன் இறந்தாலோ, நோய்வாய்ப்பட்டாலோ இது அவசியமாகிறது. தொழிற் பயிற்சி தரவேண்டும் என்ற ஒப்பந்தத் தில் தன் பகுதியைச் செய்ய ஒரு முதல்வன் விடாது மறுத்தால், முதல் வரை மாற்றிக்கொள்ளப் பயில்வோருக்கு கில்டு அனுமதி தந்தது.

தொழில்களின் பழைய வரலாற்றைப் பார்த்தால் பயில்வோரின் எண்ணிக்கைக்கு வரம்பு குறிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அப் போது விவசாயமே பிரதான தொழிலாக இருந்தது. பிற தொழில்

[1] பொதுப் பிரார்த்தனை நூலின் கேள்வி பதிலில் (Catechism in the Book of Common Prayer) ஒரு குறிப்பு பின்வருமாறு பணிக்கிறது: 'எல் லாத் தாய்மார்களும், தகப்பன்மார்களும், முதல்வர்களும், எஜமானிகளும் (வினா விடை கற்றுக்கொள்ளாத) தம் குழந்தைகளையும், வேலைக்காரர்களை யும், பயிற்சியாளர்களையும் திருக்கோவிலுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் வரச்செய்யவேண்டும். மேலும்......'

களுக்கு ஆள் அகப்படுவதே கடினம். ஆனுல், இடைக் காலத்து இறுதியில் தொழில்கள் வளர்ச்சிபெறத் தொடங்கின். கில்டில் சேர விரும்பியவரது எண்ணிக்கையும் பெருகியது. அவர்களது எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த ஏதாவதொரு வழிசெய்யவேண்டும் என்று எண்ணப்பட்டது. இதற்காகத் தொழில் பயில்வோராகச் சேருவோருக்குச் சில யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. சில நகரங்களில் கில்டு உறுப்பினர் அல்லது நகர உரிமைக் குடியினர் ஆகியோரின் பிள்ளைகள் மட்டுமே தொழில் பயில்வோராகப் பதிவு செய்யப்பட்டனர். தொழில் பயில்வோர் ஒரு தவணைத் தொகை (premium) செலுத்த வேண்டியதென்ற வழக்கமும் அப்போதுதான் ஏற்பட்டது. பல இடங்களில் இப் பிரச்சினைக்கு வேறொரு முடிவு காணப்பட்டது. ஒரு தொழில் முதல்வனிடம் பயில வருவோரின் எண்ணிக்கையைக் கில்டு விதிகள் நிர்ணயித்தன. இதனுல், தொழிலில் எல்லாக் கட்டங்களில் இருந்தவர்களுக்கும் நன்மையே. ஓரிருவர் மட்டுமே தன்னிடம் கற்ருல், தொழில் முதல்வனுல் நன்ருகத் தொழிலைக் கற்பிக்க முடியுமாதலின் இது தொழில் பயில்வோருக்கு நல்லது. நிறையப் பயிற்சியாளர்களைத் தொழில் முதல்வர்கள் வைத்துக்கொண்டால், பயிற்சி சுமார் ஓர் ஆண்டு ஆனதும் கூலியாட்களுக்குக் கொடுக்கப்படும் வேலையைப் பயிற்சியாளர்களையே தொழில் முதல்வன் செய்யச் சொல்வான்; இதனுல், கூலியாட்கள் வேலையின்றித் திண்டாடுவர். எனவே, இவ் விதி அவர்களுக்கும் நல்லது. நிறையப் பேருக்குப் பயிற்சி அளித்தால் பின்னர் தனக்குப் போட்டியாக மிக அதிகமான எண்ணிக்கையில் புது முதல்வர்கள் தோன்றிவிடுவர்; ஆகையால், இவ் விதி தொழில் முதல்வனுக்கும் நல்லது.

கில்டு முறையில் சமய நெறி, தருமம் ஆகிய அமிசங்களுக்கும் முக்கியத்துவம் இருந்தது. கில்டு உறுப்பினர்கள் ஒரே மாதாகோவிலுக்குச் சென்றனர். தம் தொழிலின் சகாய புனிதரின் (Patron Saint) பீடத்தின் முன் தொழுதனர். கிறித்துவ வேதத்தின் (Bible) கதைகளைத் தழுவி மிஸ்டரி நாடகங்களைப் (Mistery plays)[1] பல

[1] மிஸ்டரி நாடகத்தில் இரகசியப் பொருள் (Mystery) ஏதுமில்லை. ஒரு தொழிலைச் சார்ந்தவர்கள், அதாவது, மிஸ்டரி (Mistery) தயாரித்த நாடகங்கள் அவை. இச் சொல் பழைய ஃபிரெஞ்சு Mestier, லத்தீன் Ministerium (செய்யும் தொழில், வகிக்கும் பதவி) என்பதினின்று தோன்றியது. நவீன ஃபிரெஞ்சுச் சொல் Metier பார்க்க. (இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் எனினும், சில வரலாற்ருசிரியர்கள் இந்த விவரத்தை ஒப்புக் கொள்ளவில்லை). சொந்தமாகப் பைபில் வைத்திராதவர்களும், பெரும்பாலும் படிக்கத் தெரியாதவர்களும் வேத நூலிலிருந்த வரலாறுகளை அறிவதற்கு, விவிலிய நிகழ்ச்சிகளைப்பற்றிய இந் நாடகங்கள் உதவின.

கில்டுகள் நடத்தி வந்தன. தம் தொழிலுடன் ஏதாவதொரு வகையில் சம்பந்தப்பட்டதான நிகழ்ச்சி ஒன்றை நாடகத்தின் பொருளாக கில்டு தேர்ந்தெடுப்பது வழக்கம். கப்பல் கட்டுவோர் ஆர்க்கின் (Ark) வரலாற்றை நடித்துக் காட்டினர். கானுவில் திருமண விழா நடந்த நிகழ்ச்சியை (Marriage feast at Cana) மதுபானம் தயாரிப்போர் நடித்தனர். நோயினுலோ, வேறு வகையினுலோ கஷ்டப்பட்ட உறுப்பினர்களுக்குப் பிற சகாக்களின் உதவி கிடைத்தது. நோய் வாய்ப்பட்டவன் முடிக்காமல் பாதியில் விட்டவேலையைப் பிற சகாக்கள் முடித்துத் தந்து, ஏற்கெனவே செய்ததற்கான வருமானத்தை அவன் இழக்காமல் பார்த்துக்கொண்டனர். இறந்த உறுப்பினர்களின் மனைவி மக்களுக்குப் பண உதவி அளிக்கப்பட்டது. பிள்ளைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டுப் பின்னர் தொழில் பயில அனுப்பப்பட்டனர். பெண்களுக்குத் திருமணம் ஆனுலோ அல்லது கன்னிமார் மடத்தில் (Convent) சேர்க்கப்பட்டாலோ அதற்குச் சீதனம் (dowry) அளிக்கப்பட்டது. பணவசதி மிக்க கில்டுகள் பிச்சைக்காரர் விடுதிகளையும் பள்ளிக்கூடங்களையும் நடத்தின. ஏழைகள், முதியோர், நோயாளிகள் ஆகியோருக்கு உதவ கில்டு நிதிகள் பயன்பட்டன; சில கில்டுகளில் இதற்காகத் தனி நிதியும், கில்டுக்குள் ஒரு தனி அமைப்பும் ஏற்படுத்தப்பட்டன. கில்டுகளின் பணக்கார உறுப்பினர்கள் பலர் இறக்கும்போது தம் சொத்தில் ஒரு பகுதியை கில்டின் தரும நிதிக்கு அளித்தனர்.

கில்டுக்காரர்கள் ஒருவரோடொருவர் உடன் பிறந்தார் போலப் பழகவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. தம் சகாக்கள் கஷ்டத்தினின்று எந்த இலாபத்தையும் அவர்கள் அடைய முயலக்கூடாது. பிறர் குறிப்பிடும் விலைக்குக் குறைவாக விலை கூறுதல், உள்ள வேலையில் பெரும் பகுதியைத் தானே மேற்கொள்ள முயலுதல், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைப் பிறரிடமிருந்து பிரித்து வேலைக்கு அமர்த்திக்கொள்ளுதல் ஆகியவை இச் சகோதரத்துவக் குறிக்கோளுக்கு எதிராகக் கருதப்பட்டன. இரு உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறுகளை அவர்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடாது. கில்டினுல் அவற்றைத் தீர்க்க முடியாவிட்டால்தான் நீதிமன்றத்துக்குப் போகலாம். அதுவும் கில்டின் அனுமதியோடுதான்.[1] இவ் விஷயத்தில் கில்டுகள் நீதிமன்றங்களாகப் பணியாற்ற விரும்பவில்லை. உறுப்பினர்கள்

[1] 1504ஆம் ஆண்டுச் சட்டம் (வேறு இடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது) இவ் விதியைத் தளர்த்தியது. ஆனுல், இதனுல் பலன் இருந்ததாகத் தெரியவில்லை.

ஒருவரோடு ஒருவர் ஒத்துச் சமரசமாகத் தகராறுகளைத் தீர்க்க வழி செய்ய விரும்பின. கில்டின் சகாக்களுக்கிடையே தகராறுகள் இருப்பதை ஊர் அறியச் செய்வது நல்லதன்று எனக் கருதப்பட்டது.

கில்டுக்காரர்கள் வளர்க்கவேண்டிய உடன்பிறந்தார் பாசம் ஒரு கில்டுக்கும் மற்றொன்றுக்கும் இடையிருந்த உறவில் பல சமயம் காணப்படவில்லை. ஒரு வேலை எத்தொழிலைச் சேர்ந்தது என்பது பற்றிச் சாதாரணமாகத் தகராறுகள் எழுந்தன. துணி தைப்பவர்கள் (tailors), துணி விற்பவர்கள் (drappers) ஆகியவர்களது வேலைகள் சில சமயம் ஒன்றிலொன்று கலந்தன. அதுபோலவே, கொத்தர்களும் (masons), ஓடு வேய்பவர்களும் (tilers), சக்கிலிகளும் (cobblers), காலணி செய்வோரும் (cordwainers).[1] இதன் விளைவாக கில்டுகளுக்கிடையே தகராறுகள் எழுந்தன. இவற்றைத் தீர்க்கச் சில சமயம் இன்ன வேலை இன்ன தொழிலைத்தான் சேர்ந்தது என்று திட்டவட்டமாக வரம்பு கட்டப்பட்டது. சில சமயம் ஒரே தொழிலாளி இரு கில்டுகளிலும் சேர அனுமதிக்கப்பட்டான். பதினாலும் நூற்றாண்டு நடக்கும்போது சில நகரங்களில் 'ஒரு தொழிலில் உரிமை பெற்றவன் எல்லாத் தொழிலும் உரிமை பெற்றவனாவான்'[2] என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப் பெற்றது.

வணிக கில்டுகளுக்கும் தொழில் கில்டுகளுக்கும் இருந்த உறவு பற்றிப் பல ஊகங்களும் ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டுள்ளன. முன்னரே கூறியபடி, பணக்கார வணிகர்களுக்கு எதிராக ஏழைத் தொழிலாளர்களால் தொழில் கில்டுகள் தோற்றுவிக்கப்பட்டன என்பது ஓர் ஊகம். ஆனால், ஆங்கில கில்டுகளைப் பொறுத்தவரை இக் கருத்துக்குப் போதுமான சான்றுகள் இல்லை.[3] ஆனால், தொழில் கில்டுகள் நகராட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்டு இருந்தன. கில்டுகள் உரிமைகளைப் பெற முயன்றன. நகர நிருவாகிகள் தம் அதிகாரத்தைக் கைவிடவில்லை. நகராட்சியும் வணிக கில்டும் ஒன்றாக இல்லாவிட்டாலும்

[1] Cordwainers - செருப்புத் தைப்பவர்கள். Cordwain என்ற கார்டோவா (Cordova)வைச் சேர்ந்த தோலில் (ஸ்பானியத் தோல்) வேலை செய்பவர்கள். இச் சொல் பழைய ஃபிரெஞ்சு Cordouvan, ஸ்பானியச் சொல்லி (Cordoban)லிருந்து வந்தது. சக்கிலிகள் செருப்புகளைப் பழுது பார்ப்பவர்கள்.

[2] A man who was 'free of one craft was to be free of all'

[3] இங்கிலாந்தில் குடியேறிய சில அயல்நாட்டார்கள் முதலில் அமைத்த கில்டுகளை வணிக கில்டுகள் எதிர்த்தன. இத் தொழில் கில்டுகளில் சில அரசனிடமிருந்து தனிப் பட்டயங்கள் பெற்றுத் தனி வரித்தொகை செலுத்தின. வணிக கில்டுகளின் அதிகாரத்துக்கு அவை உட்படவில்லை. அப்போதிருந்த தகராறுக்கு இனவெறுப்பு (Racial prejudice) ஒரு காரணம்.

அவற்றுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. எனவே, வெளியே தெரியாவிட்டாலும் இருவகை கில்டுகளுக்குமிடையில் சில சமயம் தகராறுகள் இருந்தன என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். தாம் செய்த பொருள்களைத் தாமே விற்றதனால் தொழில் கில்டு, வணிக கில்டு இரண்டையுமே தொழிலாளர்கள் சேர்ந்திருக்க வேண்டும் என்பது மற்றொரு கருத்து.[1] மூன்றாவதொரு கருத்துப் பின்வருமாறு: தொழில் கில்டுகளுக்குப் பல்லாண்டுகளுக்கு முன் வணிக கில்டுகள் தோன்றின. அவை 12, 13ஆம் நூற்றாண்டுகளில் பிரசித்தமாக இருந்தன. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் அவற்றின் முக்கியத்துவம் குறையலாயிற்று. ஆனால், அப்போதுதான் தொழில் கில்டுகள் உச்சநிலையில் இருந்தன. இக் கருத்தின்படி இவ்விரண்டின் தொடர்பு ஒன்றன் வாரிசாக மற்றொன்று வந்தது என்பது தான். கைவினைஞர்களின் எண்ணிக்கை பெருகிப் புதுப்புதுத் தொழில்கள் தோன்றியபோது, நகரத்தின் பொருளாதார விவகாரம் முழுமையையும் முன்போல வணிக கில்டு கவனிக்க முடியவில்லையாதலின், ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனி கில்டு அமைக்கப்பட்டது இயற்கையே. பொருளாதார அமைப்பு வளர்ந்து சிக்கலாக மாறியதற்கேற்ப ஒரு வணிக கில்டு பல தொழில்களுக்கான பாகங்களாகப் பிரிக்கப்பட்டன என்றுகூடக் கூறத்தோன்றும். முக்கியமாக இப்ஸ்விச் (Ipswich), கெண்டல் (Kendal) போன்ற நகரங்களின் ஆவணங்கள் (records) இக் கருத்துக்குச் சான்றாக அமைந்துள்ளன. தம் பணிகளைத் தொழில் கில்டுகள் மேற்கொள்ளவே வணிக கில்டுகள் நாளடைவில் தேய்ந்து மறைந்தன. அவற்றில் சில சமயநெறிச் சங்கங்களாகத் தொடர்ந்து நடந்தன. மேலே கூறிய கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானதல்ல. ஒவ்வொன்றிலும் ஓரளவு உண்மை உள்ளது. இடைக் காலப் பொருளாதார வரலாற்றின் பல பிரச்சினைகளைப் போலவே இதையும் ஓரே பொதுப்படையான அனுமானத்தினால் விளக்கிவிட முடியாது.

கில்டுமுறை நன்கு நடந்தபோது தொழில் முதல்வருக்கும் தேர்ந்த கூலியாட்களுக்குமிடையே பூசல்கள் இல்லை. இன்றைய சொற்படி அவர்களை முதலாளி, தொழிலாளி என்றழைத்தால் அவர்களுடைய குறிக்கோள்களுக்கிடையே போட்டியிருந்தது என்று ஆகும். உண்மையில் அவ்வாறான விரோதம் அவர்களுக்குள் இல்லை. அவர்கள் இருவரும் தொழில் வாழ்க்கையின் இருவேறு கட்டங்களில் இருந்த

[1] குரோஸ் (Gross), பால்கிரேவ் (Palgrave) ஆகியவர்கள் இப் பிரச்சினையின் இந்த அமிசத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

வர்கள். கூலியாள், என்ருவது தொழில் முதல்வனுக வேண்டுமென எதிர்பார்த்திருந்தபோது—அவர்களுக்குள் விரோதம் தோன்ற வழியில்லை. ஆனுல், நாளடைவில் இந் நிலை மாறியது. வாணிபமும் தொழிலும் வளர்ச்சி பெற்றபோது மூலதனத்தின் முக்கியத்துவம் அதிகரித்தது. நிறையப் பணம் இருந்த கில்டு உறுப்பினர்கள் தாமே வேலை செய்வதை நிறுத்திப் பிற தேர்ந்த கைவினேஞர்களை வேலைக்கமர்த்திப் பொருள்களை உற்பத்தி செய்தனர். தாமே தொழில் முதல்வராகும் வாய்ப்பு மறைந்து, வாழ்நாள் முழுதும் கூலியாட்களாகவே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதைப் பல கூலியாட்கள் உணர்ந்துகொண்டனர். அதன் பிறகு விரோத மனப்பான்மை வளர்ந்தது. தொழில் முதல்வர்கள் தம்மைப் பலவிதங்களில் வருத்துவதாக அவர்கள் கூறலாயினர். கூலி, வேலை நேரம்பற்றிய தகராறுகள் எழுந்தன. தொழில் பயில்வோர் செய்தளித்த ஒப்பந்தப் பத்திரத்தில் பயிற்சி முடிந்ததும் தம் முதல்வருக்குப் போட்டியாகத் தொழில் நடத்தக்கூடாது என்றிருந்த கட்டுப்பாட்டைப்பற்றியும், அதே போலப் புகார் செய்தனர். சில தொழில் முதல்வர்கள் மிக அதிகமாகத் தொழில் பயில்வோரை வேலைக்கு வைத்துக்கொண்டிருந்தனர்; தொழிலில் வேலை செய்வோர் எண்ணிக்கை மிகவும் பெருகியது; தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றெல்லாம் கூலியாட்கள் புகார் செய்தனர். கில்டில் தம் அந்தஸ்து, தொழில், முதல்வர்களுடையதைவிடக் குறைவாக இருந்ததற்கும் அவர்கள் வருந்தினர். கில்டின் முக்கியப் பதவிகள் அனைத்தையும் தொழில் முதல்வர்களே வகித்தனர். தொழில் முதல்வர்களோ இதற்கு விடையாக, கூலியாட்கள் சோம்பேறிகளாகவும், குடிகாரர்களாகவும், துன்மார்க்கர்களாகவும் இருந்தனர் என்றும், வேலைக்குச் சரியாக வருவதில்லை என்றும் குற்றஞ் சாட்டினுர்கள்.

பல நகரங்களில் தேர்ந்த கூலியாட்கள் தம் அக்கறைகளைப் பாதுகாக்கத் தனியாக கில்டுகளை அமைத்துக்கொண்டனர். இந்தத் தேர்ந்த கூலியாட்கள் கில்டுகள் அல்லது யோமன் கில்டுகள் (Journeymen Gilds or Yeoman Gilds) வெற்றியாக நடக்கவில்லை. முதலிலிருந்தே நேரிடையாகவும் மறைமுகமாகவும் தொழில் கில்டுகள் காட்டிய விரோதத்தைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அரை மனத்துடன் அங்கீகாரம் பெற்று எஞ்சிநின்ற யோமன் கில்டுகளும் தொழில் கில்டுகளுக்கு அடங்கி நடக்கவேண்டியிருந்தது. அதனுல், தொழில்மீது அதிகாரம் இல்லாமற் போனதோடு, கூலியாட்களின் நிலையை உயர்த்தும் சக்தியையும் அவை இழந்தன. தொழிலாளர் சங்கங்களைத் தோற்றுவிக்க இவ்வாறு செய்யப்பட்ட முதல் முயற்சிகள் தோல்வி

யுற்றதற்கு எளிதில் காரணம் காட்டலாம். தொழில் கில்டுக்கு அதிகாரமும் பண வசதியும் அதிகம். கூலியாட்கள் கில்டுகள், உறுப்பினரின் எண்ணிக்கை, நிதி வசதி இரண்டிலும் தாழ்ந்த நிலையில் இருந்தன. இக் குறை வேண்டுமாயின் நாளடைவில் நிவர்த்திக்கப் பட்டிருக்கலாம். ஆனால், கூலியாட்கள் கில்டின் அடிப்படைப் பலவீனம் வேறு. அதில் இருந்த மக்கள் திறன் குறைந்தவர்கள். தம் வேலை நிலைமையும் எதிர் காலமும் திருப்தியாக இல்லாததால் ஏமாற்றமடைந்த கூலியாட்களே இதை அமைத்தனர். எல்லாக் கூலியாட்களும் இதில் சேரவில்லை. சில கூலியாட்களுக்குத் தொழில் முதல்வராகக்கூடிய வாய்ப்பு இருந்தது. திறனும் முயற்சியும் உடையவர்களுக்கே இது இயலும். அத்தகையவர்கள் தம்மைவிடத் தாழ்ந்தவர்கள் தொடங்கிய இவ்வியக்கத்துக்கு ஆதரவு அளிக்கவில்லை. கூலியாட்களாகிய தம் நிலையைச் சீராக்குவதைவிட அதைவிட்டு வெளியேறி உயர்ந்த நிலையை அடைய விரும்பிய திறமைவாய்ந்த கூலியாட்கள் சேராததால்தான் இவ்வியக்கம் தோல்வியுற்றது.

இடைக் காலத்தின் இறுதியில் கில்டு முறையில் ஏற்பட்ட மாறுதல்களில் ஓர் அமிசம் தொழில் முதல்வர்களுக்கும் கூலியாட்களுக்கும் இருந்த தகராறு. கில்டுகளின் செல்வ நிலை உயர்ந்து இடைக் கால இயல்பான கூட்டுறவுக்குப் பதில், நவீன இயல்பான போட்டி மனப்பான்மை வளர்ந்ததும் கில்டுகள் தம் நலனையே குறியாகக் கொண்டன. பொது மக்களிடம் நியாயமாக நடக்கும் நிறுவனங்கள் என்ற நற்பெயரைக் காப்பாற்றுவதில் சிறிதும் அக்கறை கொள்ளாது தன்னலமும் குறுகிய மனப்பான்மையும் கொண்ட நிறுவனங்களாக மாறின. புதிதாகச் சேருபவர்களைக் கட்டுப்படுத்தி, ஏற்கெனவே உள்ளவர்களின் சர்வாதினத்தைக் கில்டுகள் தீவிரமாகப் பாதுகாக்கத் தொடங்கின. புதிதாகச் சேருபவர்களிடம் மிக அதிகமாக நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. கில்டுக்காரர்களின் பிள்ளைகளுக்கு இதிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டது. சில கில்டுகளில் கூலியாட்கள் தொழில் முதல்வர்களாவது தடுக்கப்பட்டது. கில்டு உறுப்பினர்களுக்குள்ளேயே பணம் படைத்தவர்களும் புகழ்பெற்றவர்களுமான சிலர் 'தனி உடுப்பு' (livery) அணிந்தனர். உடுப்புக்காரர்கள் (of the livery), உடுப்பு அல்லாதவர்கள் என அவர்களுக்குள் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. இந்த உடுப்புக்காரர்கள் (livery-men) கில்டு உறுப்பினர்களின் உற்பத்தி முழுவதையும் விற்கும் முற்றுரிமையைத் தாமே வைத்துக்கொண்டனர். இதன் விளைவாகப் பிறர், பேருக்குத் தொழில் முதல்வராயினும், தம் உற்பத்தியை அவர்களுக்குக் கட்டாயமாக விற்கவேண்டியிருந்ததால், உண்மையில் அவர்

களுடைய கூலியாட்களுக்கு இணையாக இருந்தனர். மேலும், சில பாகுபாடுகளும் தோன்றின. உடுப்புக்காரர்களிலிருந்துமட்டும் சிலர் 'உதவியாளரின் உள் மன்ற' (Inner Court of Assistant) உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்க நிர்வாகம் இவர்கள் கையில் இருந்தது.

பலம்மிக்க டியூட்டர் மன்னர்களின் ஆட்சி தோன்றியதும் கில்டுகள் மறையலாயின. அவர்கள் ஆதிக்கம் செலுத்திய நகரங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதை அவர்களது குறுகிய மனப்பான்மையும் தன்னலமும் தடை செய்தன. புது நகரங்கள், கில்டு கட்டுப்பாடுகளின்றித் தோன்றின. அங்குத் தொழில்கள் வெகு வேகமாக முன்னேறின. சில கைவினைஞர்கள் பழைய நகரங்களைவிட்டு வெளியேறி, நகர்ச் சுவருக்கு அப்பாலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் வாழ்ந்தனர். பிரபுக்களின் அதிகாரம் மறைந்து நாடு முழுதும் அமைதி நிலவியதால் இது சாத்தியமாயிற்று. நகர்ச் சுவருக்குள்ளே தான் கில்டுகளின் அதிகாரம் செல்லும்; வெளியிலிருந்தவர்கள் அவற்றின் கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை. இது முழுதும் நல்லது என்று கூற முடியாது. வெளியேறிய தொழிலாளிகள் கில்டுக்காரர்களைவிடத் திறமை குறைந்தவர்கள். அவர்கள் போதுமான பயிற்சி பெற்றிருக்க வேண்டியதில்லை. எனவே, வேலைப்பாட்டின் தரம் குறைந்தது. ஆனால், கில்டுகள் செய்தவாறு, ஒரு தொழிலை அது நடந்த இடத்தைச் சேர்ந்த ஓர் அமைப்புக் கட்டுப்படுத்தினால் போதும் என்ற காலம் மாறிவிட்டது. டியூட்டர் ஆட்சியில் தொழிற் கட்டுப்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டது. கட்டுப்பாடுகள் தேசம் முழுவதற்குமாகச் செயற்படுத்தப்பட்டன.[1]

பதினாறும் நூற்றாண்டின் இடைப் பகுதியில் ஆறும் எட்வர்டின் பாதுகாவலரான (Protector of Edward VI) சாமர்செட் கோமகன் (Duke of Somerset) கையில் கில்டுகள் படாதபாடு பட்டன. அவற்றின் சமய நடவடிக்கைகளில் மூட நம்பிக்கைகள் இருந்தன என்ற சாக்கில் அவற்றின் சொத்துக்களின் பெரும் பகுதி பறிமுதலாயிற்று. சமய விவகாரங்களுக்காக வைக்கப்பட்டிருந்த தொகைகளை மட்டுமே

[1] 1437-லேயே ஒரு பாராளுமன்றச் சட்டம், கில்டுகள் தம் விதிகளை அமைதிகாக்கும் நீதிபதிகளிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்று கூறியது. அரசாங்கப் பட்டயம் பெற்றிருப்பதால் நகராட்சியின் அதிகாரத்திலிருந்து விலக்குக் கோரிய கில்டுகளுக்கென விசேஷமாக இச் சட்டம் அமல் செய்யப்பட்டிருக்கலாம். யார்க்கிஸ்டுகளின் (Yorkist) செல்வாக்கு வளர்ந்ததும் இச்சட்டம் அமலாகவில்லை எனத் தோன்றுகிறது. 1504-ல் வந்த சட்டப்படி கில்டுகளின் புது விதிகள் அசைஸ் நீதிபதிகளின் (Justices of Assize) ஒப்புதல் இன்றிச் செல்லாது என்று விதிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யவேண்டுமாயினும், எந்தப் பகுதி எந்தப் பணிக்காக் வைக்கப்பட்டிருந்தது என்று திட்டமாகப் பாகுபாடு செய்வது எளிதல்ல வாதலின், அரசாங்க உத்தரவைச் செயலாற்றிய கமிஷனர்கள் தயை காட்டிய குற்றத்துக்காளாகாது, சொத்தில் பெரும் பகுதியைப் பறிமுதல் செய்தனர். இக் கஷ்டத்தைக் கில்டுகள் தாங்கிக்கொண்டன. ஆனால், அதனுடன் அவற்றின் முக்கியத்துவம் குறைந்து விட்டது.[1]

மாநிலங்களிலிருந்த நகரங்களைச் சேர்ந்த கில்டுகளைவிட லண்டன் கம்பெனிகள்[2] சக்தி வாய்ந்திருந்ததால், அவற்றின் நிலை அவ்வளவு மோசமாக இல்லை. அரசாங்கத்துக்கு மொத்தமாக ஒரு தொகை செலுத்தித் தம் சொத்துக்களின் பெரும் பகுதியை அவை வைத்துக் கொண்டு அனுபவித்தன. இன்றும் ஸிடி ஆப் லண்டனில் (City of London) அவை முக்கிய இடம் வகித்து வருகின்றன. ஆனால், அவற்றில் வெகு சிலவே இப்போது வாணிபத்தில் ஈடுபட்டுள்ளன. அவை பெருஞ் செல்வம் படைத்துள்ளன; பள்ளிகள் நடத்துகின்றன; பல வகைத் தருமங்களைச் செய்கின்றன; அவற்றின் பொது விழாக்கள் வெகு விமரிசையாக நடக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிற்காலத்துத் தொழிலாளர் சங்கங்கள், தொழில் கில்டுகள் இரண்டின் வரலாற்றுத் தொடர்ச்சியைக் கண்டுபிடிக்க சில முயற்சிகள் செய்யப்பட்டன.[3] அத்தகைய தொடர்ச்சி ஏதும் இல்லாமையால் முயற்சி தோற்றது. எனினும், இவ் விரண்டுக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்வது நல்லது. ஒன்றிலிருந்து மற்றது தோன்றாவிடினும் சாதாரணமாக எண்ணப்படுவதைவிட அதிகமான ஒற்றுமை இவ் விரண்டுக்குமிடையே உள்ளது. மேலெழுந்தவாரியாக ஒப்பிட்டால், கில்டு ஒரு சிறு பிரதேசத்தில் மட்டும் ஆதிக்கம் செலுத்தியது. ஆனால், தொழிலாளர் சங்கம் நாடு முழுவதிலும் இயங்கியது என்று தெரியும். கில்டு அத் தொழிலில் ஈடுபட்ட முதலாளி, தொழிலாளி அனைவரும் சேர்ந்தது; தொழிலாளர் சங்கத்தில் ஊழியர்கள்மட்டுமே இருந்தனர். கில்டு

[1] அவற்றிடம் எஞ்சி நின்ற உரிமைகளும் 1835-ல் சட்டப்படி போய் விட்டன.

[2] பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுகளிலிருந்து தொழில் கில்டுகள் 'கம்பெனிகள்' (Companies), 'உடுப்புக் கம்பெனிகள்' (Livery Companies) என்று பெயர் வைத்துக்கொண்டன. பிற்காலத்தில் இப் பெயர் சாதாரணமாக வழங்கலாயிற்று.

[3] பிரெண்டானோவின் (Brentano) 'History and Development of Guilds' நூலில், ஹவ்வெல் (Howell)லின் 'Conflict of Capital and Labour', மற்றும் 'Trade Unionism, New and Old' நூல்களிலும்.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் அக்கறை ஒன்றே என்பதன் அடிப் படையில் அமைந்தது; தொழிலாளர் சங்கம் இவ் விருவரின் அக்கறை களும் எதிரானவை என்ற கொள்கையின் அடிப்படையில் நடக்கிறது. கில்டு, தொழிலின் பெருமைக்குப் பாடுபடுகிறது; தொழிலாளர் சங்கம், தன் உறுப்பினர்களின் நலனுக்காக மட்டும் உழைக்கிறது. ஆனால், இயங்கும் பிரதேசம் பெரிதாக இருப்பதில் உள்ள வித்தியாசம், பொருளாதார வளர்ச்சி காரணமாக ஊர்த் தொழில்கள் தேசியத் தொழில்களாக மாறியதனுல் ஏற்பட்டது. அதே சமயம், தொழிற் சங்கங்கள் விரோதத்தின் அடிப்படையில்தான் பணியாற்றுகின்றன என்று எண்ணிவிட முடியாது. தொழிற் பூசல்கள் சில சமயம் நேரு கின்றன. அவற்றைப் பத்திரிகைகள் பொது மக்களது கவனத்துக்குக் கொண்டுவருகின்றன. ஆனால், அதே சமயம் பெரிய தொழிலாளர் சங்கத்தின் அலுவலகத்தில் நடக்கும் வேலைகள் எப்படி வேலை நிறுத் தங்களை ஊக்குவிப்பது என்பதைப்பற்றியதல்ல; பல பணிகள் அங்கு நடக்கின்றன. சாதாரணமாக் அப் பணிகளில் முதலாளிகளும் அவர் களது சங்கங்களும் நட்புறவோடு கலந்துகொள்கின்றனர். தவிர, தொழிலாளர் சங்க உறுப்பினரும் முதலாளிகளுடன் விரோதம் பாராட்டுவதைவிடக் கூட்டுறவு கொள்வதனுல் நன்மை விளையும் என்பதையும், தொழில் வளர்ந்தால் இருவருக்கும் இலாபம், தாழ்ந் தால் இருவருக்கும் நஷ்டம் என்பதையும் பல சமயம் உணர்கின்றனர். கில்டுகள், தொழில் பயில்வோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்து வதும், தொழிலாளர் சங்கங்கள் புதிதாகத் தொழிலில் சேருவோர் எண்ணிக்கையைக் குறைக்க முயல்வதும் ஒரே குறிக்கோளுடன்தான். அதனுல், தொழிலில் ஈடுபடும் தொழிலாளிகளின் தேவைக்குத் தக்க வாறு அவர்களின் அளிப்பு (supply) நிர்ணயிக்கப்படுகிறது. கில்டு களின் தருமப் பணிகளைப் போலத் தொழிலாளர் சங்கங்களின் ‘தோழமை’ உதவிகளும் (‘friendly’ benefits) உள்ளன. இவ் வுதவிகள் தேசிய இன்ஷூரன்ஸ் திட்டங்கள் தோன்றப் பல ஆண்டு களுக்கு முன்னரே, பல சங்கங்களில் உறுப்பினருக்கு அளிக்கப் பட்டன. தொழிலாளர் சங்கங்கள் தம் ‘தொழில்களின்’ நற்பெய ரைப்பற்றி அக்கறை காட்டவில்லை என்று கூறுவதும், கில்டுகள், முக்கியமாக அவற்றின் வரலாற்றின் பிற்பகுதியில் தன்னலமற்று இருந்தன என்று கூறுவதும் இரண்டுமே தவறுதான். இருப்புப் பாதை ஊழியரின் தேசிய சங்கம் (National Union of Railwaymen) போன்ற பெரிய சங்கம், அதன் உறுப்பினர்கள் திறமையற்றவர்கள், அவர்களை நம்ப முடியாது என்றெல்லாம் யாரேனும் கூறினுல், அதை வன்மையாக எதிர்க்கும். ஏனெனில், இருப்புப் பாதை ஊழியர்கள்

திறமைக்கும் நம்பிக்கைக்கும் மிகவும் பிரசித்தமானவர்கள். பிரிட்டிஷ் வைத்தியர் சங்கம் (British Medical Association), ஆசிரியர்களின் தேசிய சங்கம் (National Union of Teachers) ஆகியவை உண்மையில், முறையே வைத்தியர்கள், ஆசிரியர்களுடைய தொழிற் சங்கங்களாகும். இத்தகைய சங்கங்களின் நோக்கம் தம் உறுப்பினரின் பண வருவாயைப் பாதுகாப்பது மட்டுமல்ல; சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் பொது மக்களது நலனை அதிகரிப்பதில் அவை மிகவும் ஆர்வமுடன் உழைக்கின்றன. இடைக் காலத்தில் இருந்ததை விட உயர்வாகத் தொழிலமைப்பு என்றும் இருக்கமுடியாது என்று சிலர் கூறியிருக்கின்றனர். ஆனுல், அம் முறையின் நல்ல அமிசங்கள் பல இன்றையத் தொழிலமைப்பிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை யாவரும் உணரவேண்டும்.

4. மேனர் முறையின் வீழ்ச்சி

(The break-up of the manorial system)

தலையுற்ற குடியானவர்களால் டிமீன் நிலங்கள் பயிரிடப்படுவதை முக்கிய இயல்பாகக்கொண்ட மேனர் முறை சில நூற்றாண்டுகள் நீடித்தது. இந் நீண்ட காலத்தில் மாறுதல்கள் தோன்றுமலில்லை. மேனர் பழக்க வழக்கங்களிலும் நடைமுறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால், அவை கண்ணுக்குப் புலப்படாதவாறு மெதுவாக ஏற்பட்டன. இடைக் காலத்தின் இறுதியில் ஏற்பட்ட மாற்றங்கள் தீவிரமானவை ; அவை அம் முறையின் அடித்தளத்தையே தகர்த்தெறிந்தன. பண்ணையாட்களுக்கும் பிரபுவின் நிலத்துக்கும் இருந்த தொடர்பு பலவீனமாகி இறுதியில் மறைந்துவிட்டது. வேலியற்ற திறந்தவயல் முறை (open-field system) போய், (19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில்தான் இது கடைசியாக மறைந்தது) நிலங்களுக்கு வேலியிடல் தொடங்கிற்று. மேனரின் பொருளாதார வாழ்க்கையில் அதிகாரம் செலுத்திவந்த பழக்க வழக்கங்களின் மதிப்புக் குறைந்தது. பதினன்கு, பதினைந்து நூற்றுண்டுகளில் ஏற்பட்ட இயக்கங்கள்தாம் இடைக் கால மேனர் முறையின் வீழ்ச்சிக்குக் காரணம். இவ்வியக்கங்கள் மூன்று.

முதலாவதாக, உழைப்பினை அளிப்பதற்குப் பதில் பணம் செலுத்தப்பட்டது. இதற்கு மாற்றுகை (commutation) என்று பெயர்.[1] பன்னிரண்டாம் நூற்றுண்டில் சில இடங்களில் இது நடந்தது. பதின்மூன்றும் நூற்றுண்டில் மேலும் சில இடங்களில் நடந்தது. பதினன்காம் நூற்றுண்டில் பெருங் கொள்ளை நோய்க் (Black

[1] வேலைக்குப் போகாதவருக்கு மேனர் நீதிமன்றம் விதித்த அபராதங்களின் அடிப்படையில் மாற்றுகைபற்றிய விவரங்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கவேண்டும்.

Death) காலத்தில்கூட அது அங்குமிங்குமாகச் சில இடங்களில் நடந்துவந்ததே தவிர, எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட வில்லை. (உதாரண மேனர்கள் இருந்த நிலையில்) பணம் இல்லாமை யால் வெளி உலகினின்று தனித்துநின்ற பழமையான ஒரு சமுதாயத் தில் மாற்றுகை நடப்பது கடினமே. உபரி உற்பத்தி கையிலிருந்தால் அதை விற்க அருகிலிருந்த ஊர்களில் அங்காடிகளுக்கும் சந்தைகளுக் கும் போகும்போதுதான் பண்டங்களைப் பணத்துக்கு மாற்றுவதை மேனர் மக்கள் அறியக்கூடும். எனவே, முதன் முதலில் நகரங்களுக்கு அருகிலிருந்த வசதியுள்ள வில்லின்கள்தான் முதன் முதலில் மாற்றுகை வழக்கத்தை மேற்கொண்டிருக்கவேண்டும். தூரத்தில் தனித்து நின்ற மேனர்களில் இவ் வழக்கம் நெடுநாட்களுக்குப் பின்னரே ஏற் பட்டிருக்கவேண்டும்.

முதலில் மாற்றுகை வழக்கம் பிரபுவுக்கும் அவரது பண்ணை யாட்களுக்கும் இடையே ஒப்பந்தப்படி ஏற்பட்டது. ஆனால், சில பிரபுக்கள் விருப்பமற்ற வில்லின்களையும் மாற்றுகைத் தொகையைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தினர். பழக்கத்தின் தளைகள் வலிமை பெற்றிருந்த சமுதாயத்தில் எந்த மாறுதலுக்கும் எதிர்ப்பிருக்கும். இவ் வெதிர்ப்பு, இம் முறையைத் தவறாக நினைக்காத அளவுக்குக் குறைந்ததும், இரு சாராருக்கும் இதனால் விளையும் நன்மைகள் புல னாயின. பண்ணையாட்களிடமிருந்து பெற்ற பணத்தைக்கொண்டு பிரபு கூலிக்கு ஆட்களை நியமித்துக்கொள்ளலாம். பண்ணையாட்களை விடக் கூலிக்கு உழைப்பவர்கள் அதிக வேலை செய்வார்கள் என்று நம்பப்பட்டது. எவ்வளவு சோம்பேறியாக இருந்தாலும் வேலை போய்விடுமோ என்ற பயத்தில் கூலியாள் ஒரு குறிப்பிட்ட அளவு வேலையாவது செய்வான்; பண்ணையாளை எப்போதும் வேலை செய்யச் சொல்லி ஊக்கிக்கொண்டிருக்கவேண்டும். மாற்றுகை வழக்கத்தின் காரணமாக வேலையை மேற்பார்வை செய்யவேண்டிய கஷ்டமும் பண்ணை நிர்வாகச் செலவும் குறைந்தது. ஆண்டின் சில பருதிகளில் நிலத்தில் ஒரு வேலையும் இருக்காது. எனவே, கூலியாட்களும் நிறையத் தேவையில்லை. மாற்றுகைக்காகப் பண்ணையாட்கள் கொடுத்த பணத்தில் ஒரு பகுதியைப் பிரபு மிச்சமும் பிடிக்கலாம். கட்டாய உழைப்பு கஷ்டமானது மட்டுமல்ல, அது தாழ்மையானது. எனவே, வில்லினுக்கு அதற்கு மாறாகப் பணம் கொடுப்பதில் மகிழ்ச்சியே. செலுத்துவதின் இயல்பிலும் அவனுக்கு ஒரு நன்மை யிருந்தது. முன்னிருந்த கடமைகள் திட்டமாகக் குறிப்பிடப்பட வில்லை. இப்போது இவ்வளவு தொகை செலுத்தவேண்டும் என்பது அவனுக்குத் திட்டமாகத் தெரியும். மேலும், செலுத்தவேண்டிய

பணத் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டு, ஊர் வழக்கத்தின்படி ஒப்புக் கொள்ளப்பட்டன; அதன் பின்னர், பணத்தின் மதிப்பு மாறியபோது அவர்களை அது பாதிக்கவில்லை. நெடுங்காலத்துக்குப் பணத்தின் மதிப்பு விழுந்தது; அதாவது விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போயின. அப்போது மாற்றுகைத் தொகைகள் மாருததால் வில்லி னுக்கு லாபமுண்டாயிற்று.

ஆனல், பிரபுவும் பண்ணையாளும் மாற்றுகைக்கு ஒப்புக்கொள்ள ஏதாவதொரு நோக்கம் இருந்தபோதிலும், அவர்களது அக்கறைகள் மாறுபட்டன. ஒரே சமயத்தில் ஒரு பண்ணையாளின் எல்லாக் கடமைகள் விஷயத்திலும் மாற்றுகை ஒப்புக்கொள்ளப்படவில்லை. வில்லின், தமக்கு மிகவும் கஷ்டமான தரும வேலை, வண்டி ஏற்றிச் செல்லுதல் போன்ற பணிகளுக்கு மாற்றுகை பெற விரும்புவர்; பிரபுவோ, தனக்கு இலாபம் மிகவும் குறைவான கடமைகளுக்காக மாற்றுகை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பார். பொருளாகத் தர வேண்டிய சில்லறைக் கடமைகள் காசு செலுத்தும் பொறுப்பாக முதலில் மாற்றப்பட்டிருக்கும். வாரவேலை அதற்குப் பிறகு மாற்றப் பட்டிருக்கும்.[1] அதன் பிறகு ஒரு வேளை வண்டி ஏற்றிச் செல்வதும், இறுதியில் தரும வேலையும் மாற்றப்பட்டிருக்கலாம். அறுவடை நிலங்களில் வேலை செய்வதினின்று பண்ணையாட்களுக்கு விடுதலை யளிப்பதைப் பிரபு விரும்பமாட்டார். எல்லா நிலங்களிலும் வேலை நடக்கும் அச் சமயங்களில் கூலியாட்கள் கிடைக்கமாட்டார்கள். தரும வேலை செய்பவர்களுக்கு வழக்கப்படி பிரபு உணவும் பானமும் அளிக்கவேண்டும். இடைக் காலத்தின் இறுதியில் விலைவாசிகள் உயர்ந்தபோது இப் பண்டங்களின் விலை வேலையின் மதிப்பைவிட அதிகமாயிற்று. எனவே, தரும வேலையை மாற்றுவதற்கு ஒப்புக் கொள்ளப் பிரபுக்கள் தயங்கவில்லை. சில மேனர்களில் மாற்றுகை தாற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆண்டுக்கு ஆண்டு பிரபுவின் விருப்பப்படி அது நிர்ணயிக்கப்பட்டது. ஆனல், சில ஆண்டுகள் அவ்வாறு நடந்து அது வழக்கம் என்று ஆனபின் பழைய முறைகளைத் திரும்ப அனுஷ்டிப்பது இயலாது போயிற்று.

மேனரில் கூலிக்கு வேலைசெய்யத் தயாராக இருப்பவர்கள் பலர் இருந்ததால்தான் மாற்றுகை செய்ய முடிந்தது. கூலித் தொழிலாளி களாகப் போர்டர்கள் ஏற்கெனவே மேனர்களில் இருந்தனர். அவர்

[1] வார வேலைக்குப் பதிலாள் அனுப்பும் வழக்கம் இம் மாறுதலுக்கு வழி செய்தது. வில்லின் கூலிக்கு ஆளமர்த்தி, தனக்குப் பதிலாக வேலைக் கமர்த்துவதைவிடப் பிரபுவே கூலியாட்களை நியமித்துக்கொண்டார்.

களோடு வில்லின்களின் இளைய பிள்ளைகளும் மேனருக்குப் புதிதாக வந்தவர்களும் சேர்ந்துகொண்டனர். பண்டைக் காலத்தில் இடப் பெயர்ச்சி (migration) மிக அரிதாக இருந்தது; இடைக் கால இறுதியில் சூழ்நிலை மாறியதால் அது இயல்பாகிவிட்டது.

அடுத்த சில ஆண்டுகளில் மாற்றுகைமூலம் பல பண்ணையாட்களுக்கு விடுதலை கிடைத்துக்கொண்டே வந்தது. 1348-49-ல் பெருங் கொள்ளை நோய் தோன்றியபோது தாற்காலிகமாக இத் தளை நீக்கம் தடைப்பட்டது. இங்கிலாந்தில் இடைக் காலத்தில் அடிக்கடி பிளேக் நோய் பரவியது. ஏற்கெனவே, ஓரளவு இருந்த வியாதிதான் அது. ஆனால், அடிக்கடி பெரிய அளவில் மூண்டது. குறைவாகவோ அதிகமாகவோ ஏற்கெனவே இருந்துவந்த தீங்குகள் திடீரென விசுவரூபம் எடுப்பதற்கு ஓர் உதாரணம்தான் இக் கொள்ளை நோய் எனலாம். பதினான்காம் நூற்றாண்டில் பலமுறை இக் கொள்ளை நோய் தீவிரமாகப் பரவியது ; முக்கியமாக 1348-9-ல், 1361-2-ல், 1368-9-ல், 1370-ல், 1381-2-ல், மற்றும் 1396-ல். 1348-9-ல் பரவிய பிளேக்கைப் பெரிய கொள்ளை நோய் (Black Death) என்றழைத்தனர். இது சைனாவில், ஏறத்தாழ 1333-ல் தொடங்கியதெனக் கூறப்படுகிறது. அங்கிருந்து 1345-ல் ஆசியா மைனரிலும், 1347-ல் இத்தாலிக்கும், 1348-ல் ஃபிரான்ஸுக்கும் பரவி, 1348-ல் இலையுதிர் காலத்தில் இங்கிலாந்தைப் பீடித்தது. இதனால் நேர்ந்த சாவுகள் மிக அதிகம். இடைக் கால வரலாற்றுக்காரர்களின் மிகைபடக் கூறலுக்குத் தேவையான தள்ளுபடி செய்து, உண்மையான வரலாற்றுச் சான்றுகளை மட்டும் எடுத்துக்கொண்டால்கூட, பிளேக், நாட்டில் மூன்றில் ஒரு பகுதி மக்களைக் கொள்ளைகொண்டது என்று உறுதியாகக் கூறலாம். இது குறைவான மதிப்பீடாக இருக்கலாம்; இறந்தவர் விகிதம் இதற்கதிகமாகவும் இருக்கலாம். ஸீபோம் (Seebohm) உட்படப் பல ஆராய்ச்சியாளர்கள் ஜனத் தொகையில் பாதி இந்நோயில் இறந்துபட்டதாகக் கருதுகின்றனர். நான்கு மிலியனுக்கு அதிகமாக இருந்த மக்கள் தொகை இரண்டரை மிலியனாக இந் நோயின் விளைவாகக் குறைந்தது என்று கூறுவது மிகவும் தவறாகாது. ஐரோப்பாக் கண்டத்திலும் இதே தீவிரத்துடன்தான் இந் நோய் மக்களைப் பீடித்திருக்கவேண்டும். இங்கிலாந்து உட்பட ஐரோப்பா முழுவதிலும் மக்கள் அப்படியே மறைந்து போகாதது வியப்பே.

பெருங் கொள்ளை நோயினால் ஏற்பட்ட சாவுகளின் உடனடியான விளைவு தீவிரமான தொழிலாளர் பற்றாக்குறையாகும். அறுவடை செய்வாரின்றிப் பயிர்கள் அழிந்தன; நிலம் சாகுபடி செய்வாரற்று

வெறுமனே கிடந்தது. வேலைக்கு ஆட்களை எப்படிச் சேகரிப்பது என்பது மேனரின் பிரபுக்களுக்கு விளங்கவில்லை.[1] எஞ்சிநின்ற தளை நீங்கிய தொழிலாளர்கள் இதுவரை கேட்டிராத அளவு கூலி வேண்டுமெனக் கோரினர். தம் சேவைகளை மாற்றுகை செய்திராத பண்ணையாட்கள் விடுதலைவேண்டுமென மிகவும் வற்புறுத்தினர். தம் வேலையின் மதிப்பை அவர்கள் மேலும் நன்கு உணர்ந்தனர். சாதாரணக் கூலியாட்களோடு ஒப்பிட்டால் தம் சமுதாய அந்தஸ்து மாறியதையும் அவர்கள் உணர்ந்தனர். முதலில், கூலியாளைவிட வில்லினுக்குச் சொத்தும் வருவாயும் அதிகம் இருந்தது. கொள்ளை நோய்க்குப் பின் கூலி உயர்ந்ததால், பண்ணையாளின் வருவாயைவிடக் கூலியாட்கள் அதிக ஊதியம் பெற்றனர். இந் நிலைமையைச் சமாளிக்கப் பிரபுக்கள் முன்னிருந்த அளவுக்குமேல் ஊதியம் உயரக்கூடாது என்று சட்டமியற்றவும், பண்ணையாட்களுக்கு மாற்றுகை அளிக்க மறுக்கவும் முயன்றனர். 1349ஆம் வருஷத்துத் தொழிலாளர் அவசரச் சட்டம் **(Ordinance of Labourers)**, 1351ஆம் ஆண்டின் தொழிலாளர் சட்டம் (Statute of Labourers) ஆகியவற்றை மீறி ஊதியங்கள் உயரலாயின.[2] இன்னும் விடுதலை பெறாத ஒரு சில பண்ணையாட்கள்

[1] பதினான்காம் நூற்றாண்டின் மத்தியிலேயே மாற்றுகை வழக்கம் மிக அதிகமாகப் பரவியிருந்தது; பொதுவாக எல்லா மேனர்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது; மாற்றுகை செய்துவிட்ட பண்ணையாட்களைக் கொள்ளை நோய்க்குப் பிறகு பழையபடி தன் கடமைகளைச் செய்யச் சொல்லிப் பிரபுக்கள் கட்டாயப்படுத்தினர் என்று ஒரு காலத்தில் நம்பப்பட்டது. இக் கருத்தைப் பிரசித்தமாக்கியவர் உழைப்புக்கும் கல்வியறிவுக்கும் பெயர்பெற்ற பேராசிரியர் தரல்டு ரோஜர்ஸ் (Professor Thorold Rogers) என்பவர். ஆனால், இக் கருத்துப் பொருத்தமாக இல்லை. கொள்ளை நோய்க்கு முன் மாற்றுகை, முன் எண்ணப்பட்ட அளவு பரவவில்லை என்று இப்போது கருதப்படுகிறது. அனைவரும் மாற்றுகை செய்துகொள்ளுமளவுக்கு மேனர்களில் பணம் இல்லை. தவிர, நாட்டு மேனர்களின் பாதியில் மாற்றுகைக்குச் சான்றே இல்லை. வேறு சிலவற்றில் ஒரு சிலரே மாற்றுகை செய்திருந்தனர். மிகச் சிலவற்றில்தான் பண்ணையாட்கள் அனைவரும் மாற்றுகை செய்திருந்தனர். பல மேனர் பதிவுப் புத்தகங்களில் பண்ணையாட்களின் கடமைகளின் பண மதிப்புக் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிகிறது; இவ் வழக்கம் வேலை செய்யாததற்கு அபராதம் நிர்ணயிக்க உதவியது. மாற்றுகைத் தொகையை நிர்ணயிக்கவும் இது மிகவும் உதவியது. ஆனால், மாற்றுகை வழக்கம் தொடங்கப் பல காலத்துக்கு முன்னரே இக் குறிப்புக்கள் இருந்தன. இதனால்தான் இவ்வாறு தவறான கருத்து எழுந்தது. கட்டாயச் சேவையின் பண மதிப்புக் குறிப்பிடப்பட்டிருந்ததை ஏற்கெனவே மாற்றுகை நடந்துவிட்டதற்குச் சான்றாக எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால், அது சரியில்லை.

[2] 1349-ல் கொள்ளை நோய் இன்னும் பீடித்துக் கொண்டிருந்தபோதே மூன்றாம் எட்வர்ட் தொழிலாளர் அவசரச் சட்டம் ஒன்றை இயற்றினார். அதன்படி, கொள்ளை நோய்க்கு முன்னிருந்ததைவிட அதிகக் கூலியைக் கொடுப்பதும் பெறுவதும் சட்ட விரோதமாயிற்று. கூலியாட்கள் பழைய விகிதத்தில் கூலியளித்தால் வேலையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று உத்தரவாயிற்று. 1351-ல் முதல் தொழிலாளர் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அவசரச் சட்டத்தைச் சட்டபூர்வமாக ஆக்கியதோடன்றி, விலைகளும் ஊதியமும் பழைய நிலைக்குக் குறையவேண்டுமென அது உத்தரவிட்டது. குடியானவர் புரட்சிக்கு (Peasant Revolt) முன் முப்பது ஆண்டு

மீது தமக்கிருந்த உரிமையை விட்டுவிடப் பிரபுக்கள் மேலும் விரும்ப வில்லை. மாற்றுகை செய்துகொள்வதில் இவ்வாறு ஏற்பட்ட தடை வில்லின்களின் உள்ளத்தில் மேலும் அதிருப்தி உண்டாக்கியது. இவ் அதிருப்தி காரணமாகக் குடியானவர் புரட்சி தோன்றியது.

1381-ல் குடியானவர்களின் இப் பெரும் புரட்சி தோன்றியதற்குப் பல காரணங்கள் உள்ளன.[1] வில்லின்கள் மட்டுமன்றி வேறு பல

களில் இச் சட்டம் ஐந்து முறை திரும்பத் திரும்ப நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு முறையும் சட்டத்தை மீறியதற்கான தண்டனை உயர்த்தப் பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களனைவரும் நிலக் கிழார்கள். எனவே, நிலம் வைத்திருந்தவரது அக்கறையைத்தான் பாராளுமன்றம் பிரதிபலித் தது. தாழ்ந்த வகுப்பினருக்கு அரசியல் உரிமை கிடைக்கவில்லை. எனவே, நிலக்கிழாரின் அக்கறைதான் நாட்டில் முக்கியமானதாக அப்போது கருதப் பட்டது. எனவே, தொழிலாளர் சட்டத்தை ஒரு வகுப்பினர் மற்றொரு வரைப் பாதிக்குமாறு நிறைவேற்றும் சட்டத்துக்கு (class legislation) உதாரணமாகக் கொள்ளத் தோன்றுகிறது. ஆனால், இன்றைய பொருளா தாரக் கொள்கைகளைப் பதினான்காம் நூற்றாண்டின் சூழ்நிலையில் பொருத் தினால் இச் சட்டத்தின் நோக்கம்பற்றித் தவறான கருத்து ஏற்படுவது இயற்கையே. தொழிலாளர் போதுமளவுக்குக் கிடைக்காதபோது கூலி நிறையக் கேட்பது பிறருடைய கஷ்டத்தினால் தான் நன்மை பெற முயல்வ தாகும்; இது அநியாயமாகவும் கிறித்துவப் பண்பாட்டுக்கு ஒவ்வாத தாகவும் கருதப்பட்டது. இந் நூலில் வேறு இடத்தில் குறிப்பிட்டுள்ளபடி எப் பொருளுக்கும் ஒரு நியாயமான விலை உண்டு என்றும், அவ் விலைக்குத் தான் அதை விற்கவேண்டும் என்றும் கருதப்பட்டது. கூலி, தொழிலா ளியின் சேவையின் விலை. அதன் தேவை மாறும்போது அதன் விலையும் மாறலாகாது. இச் சட்டம் ஏழைகளைக் கட்டுப்படுத்திப் பணக்காரருக்கு நன்மை தருவதுபோல் தோன்றினாலும், அதே சமயம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தித் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பளிக்க முயற்சித்திருப் பதையும் நோக்கவேண்டும். கொள்ளை நோய்க்கு முன் இருந்த ஊதியத் தைப் பெற்று அப்போதிருந்த விலைகளையே கொடுத்துப் பொருள் வாங்கிய தொழிலாளிக்கு முன் இருந்ததைவிட இலாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை.

இடைக் காலத்தில் மாற்றமின்மை (stability) நல்லதொரு கொள்கை யாகக் கருதப்பட்டது. இம் மாற்றமின்மைக்கு வழி செய்வதே இச் சட் டத்தின் நோக்கம். விலைவாசிகளைப் பழைய நிலையிலேயே நிறுத்திவைக்க முடிந்திருந்தால், இச் சட்டத்தினால் அவ்வளவு அதிருப்தி விளைந்திருக்காது. ஆனால், விலைகள் உயர்ந்தன. முன் தம் தேவைகளைப் பூர்த்தி செய்யுமள வுக்கு இருந்த ஊதியம் பின்னர் போதாமற் போயிற்று. சட்டத்தை மீறிக் கூலி உயர்ந்தது இவ் விலை உயர்வின் தவிர்க்க முடியாத விளைவுதான்.

[1] குடியானவர் புரட்சியின் முக்கிய காரணங்களைச் சுருக்கமாகப் பின் வருமாறு கூறலாம்:

(1) மாற்றுகை அனுமதிக்கப் பிரபுக்கள் மறுத்ததால் வில்லின்களின் வருத்தம். தம் வேலையின் பண மதிப்பு உயர்ந்ததையும் தம் கடமை களின் பளுவையும் அவர்கள் மேலும் மேலும் உணர்ந்துவந்தனர்.

(2) கூலியாட்கள் தம் ஊதியம் அதிகமாக உயராதபடி, தொழி லாளர் சட்டம் போன்ற முயற்சிகள் செய்யப்பட்டது குறித்து அதிருப்திகொண்டது.

(3) கில்டுக் கொள்கைகள்மீது நகரத்துத் தேர்ந்த கூலியாட்கள் கொண்ட அதிருப்தி. (கென்டைச் (Kent) சேர்ந்த புரட்சியாளர் களை லண்டன் பட்டணத்துப் (City of London) பொதுமக்கள் ஆதரித்து, அவர்களை லண்டன் பாலத்தைத் தாண்டிப் பட்டணத் துக்குள் நுழைய விடாதவாறு நகராட்சியினர் செய்த முயற்சி

வகை மக்களும் இதில் கலந்துகொண்டனர். மாற்றுகை அனுமதிக்கப்படாதது தவிர, வேறு பல குறைகளும் எடுத்துரைக்கப்பட்டன. எனினும், பெரும்பாலும் இது விடுதலை நாடிய பண்ணையாட்களின் எழுச்சியே என்பது நிச்சயம். எசெக்ஸ் (Essex) குடியானவர்கள் மைல் எண்டை (Mile End) அடைந்ததும், விடுதலை, ஏகருக்கு நான்கு பென்னியென வாடகை நிர்ணயம், மன்னிப்பு ஆகியவற்றைக் கோரியதாக ஆவணங்களில் பதிவாகியுள்ளது. பிரபுக்களுக்குச் செய்யவேண்டிய கட்டாய வேலையினின்று விடுதலை, தாம் வைத்திருந்த நில அளவுக்கேற்ப மாற்றுகைத் தொகை நிர்ணயம் ஆகியவற்றை அவர்கள் கேட்டதாகத்தான் பொருள் கொள்ள வேண்டும். அப்போது எடுத்துக் கூறப்பட்ட தொகை அளவின்படி ஒரு சாதாரண வர்கேட் நிலம் வைத்திருப்பவன் ஆண்டுக்குப் பத்து ஷில்லிங் செலுத்தித் தன் கடமைகளினின்று விடுதலை பெறமுடியும்.

புரட்சி செய்த குடியானவர்கள் வாக்குறுதிகள் பெற்று வீடு திரும்பினர். ஆனால், அவ் வாக்குறுதிகள் செயலாற்றப்படவில்லை. அடுத்த ஆண்டு அவர்களில் பலர் கொல்லப்பட்டனர்; அல்லது வேறு வழியில் தண்டிக்கப்பட்டனர். அவர்களது இயக்கம் தோல்வியுற்றதாகத் தோன்றியது. எனினும், மாற்றுகை வழக்கம் தொடர்ந்து நடந்தது. ஆண்டுதோறும் பல பண்ணையாட்களுக்கு விடுதலை கிட்டியது. ஓரளவுக்கு, இன்னொரு புரட்சி ஏற்படக்கூடும் என்ற பயம் இதற்குக் காரணமாக இருக்கலாம்; மறுமுறையும் பண்ணையாட்களை வாக்குறுதிகளால் ஏமாற்றுவது எளிதல்ல. மாற்றுகை தொடர்ந்து கோரப்பட்டதற்கு மற்றொரு காரணம் உண்டு. மாற்றுகை மறுக்கப்பட்ட வில்லின்கள் பலர் மேனரையும் தம் நிலங்களையும் விட்டு ஓடினர். எங்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக் குறைவாக இருந்ததால், எங்குப் போனாலும் அவர்களுக்குக் கூலிக்கு வேலை கிடைத்தது. ஒரு வருடம் ஒரு நாளுக்குள், அவர்களைத் துரத்தி, அவர்கள் அகப்பட்டால் பிடித்துக்கொண்டு வந்துவிடலாம். ஆனால், இடைக் காலச் சூழ்நிலையில் அவர்களைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. எனவே, மாற்றுகை தர மறுத்த

களைத் தடுத்தனர் என்பது ஃப்ராயிசார்ட் (Froissart) எழுதிய அப்புரட்சியின் வரலாற்றிலிருந்து தெரிகிறது.

(4) தலை வரி (poll tax) விதிக்கப்பட்டதை மக்கள் வெறுத்தனர்.

(5) போரில் வெற்றி பெறாததாலும், ஜான் ஆப் காண்ட்டை (John of Gaunt) மக்கள் விரும்பாததாலும் ஏற்பட்ட அரசியல் அதிருப்தி.

(6) விக்ளிப்பைப் (Wycliffe) பின்பற்றியவர்களாக இருக்கக்கூடிய 'ஏழை குருமாரின்' (poor priests) (பொது உடைமைச் பிரசாரம் அல்லது) சமுதாய வாதம்.

பிரபுவின் மேனரில் பண்ணையாட்கள் இருக்கமாட்டார்கள் ; சாகுபடி யின்றி நிலம் பாலைவனமாகிவிடும்.

உள்ள நிலைமையில் கூடுமானவரை நன்மைபெறப் பிரபுக்கள் முயலவேண்டியதாயிற்று. எனவே, தம் பண்ணையாட்கள் விருப் பத்துக்கு அவர்கள் இணங்கவேண்டியதாயிற்று. அப்போதும் மாற்றுகை வெகு வேகமாக நடக்கவில்லை. பதினைந்தாம் நூற் ருண்டின் மத்தியிலும் சிலர் தளையுற்றிருந்தனர். டியூடர் காலத்தின் தொடக்கத்தின்போதுதான் கட்டாய வேலைப் பிரச்சினை அடியோடு மறைந்தது.[1]

மாற்றுகை தரப்பட்டவுடனே வில்லினுடைய அந்தஸ்து மாறி விடவில்லை. ஆனுல், கட்டாய வேலை நின்று ஓரிரு சந்ததிக் காலத்தில் வில்லின்கள் தம் நிலத்துக்கு வாடகை செலுத்திய சுதந்திரக் குடியான வர்களாகக் கருதப்பட்டனர். டியூடர் மன்னர்கள் காலத்தில் வில்லின் அந்தஸ்தின் முக்கிய அம்சம், அவர்களிடமிருந்து பிரபுக்கள் பணம் பறிக்க வாய்ப்பு இருந்ததுதான்; உதவித் தொகைகள், ஹெரியட், மெர்ச்செட் போன்றவற்றை மிக அதிகமாகப் பிரபுக்கள் கோரினர். வில்லின் அந்தஸ்து சம்பந்தமான வழக்குகள் நீதிமன்றங் களுக்கு வந்தால், நீதிபதிகள் வில்லின்களை விடுதலை பெற்றவர்களா கவே கருதலாயினர். அரசாங்க நிலங்களில் வில்லின் முறையை எலிசபெத் அரசி ஒழித்தாள். கடைசியாக, 1617-ல், காலீக்கு எதிர் பிக் (Pigg v. Caley) வழக்கில் பழைய முறைப்படி பிரதிவாதி யான காலி (Caley) பிரபு, பிராது கொடுத்தவன் தன் வில்லின் ஆகை யால் வழக்குச் செல்லாது என்று வாதிட்டார். நீதிமன்றம் வில்லின் முறை மறைந்துவிட்டது என்று கூறியது.[2]

பிரபுவுக்கும் பண்ணையாளுக்கும் இடையே மாற்றுகை ஒப்புக் கொள்ளப்பட்டபோது பண்ணையாள் செலுத்தவேண்டிய தொகை அவன் பிரபுவுக்கு இனிச் செய்யாமற்போகும் வேலையின் மதிப்பை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டது; அது அக் கடமை

[1] எலிசபெத்தின் (Elizabeth) ஆட்சியின்போதுகூட ஒரு சில குடி யானவர்கள் பிரபுவுக்கு வேலை செய்யக் கடமைப்பட்டிருந்தது தெரிய வருகிறது.

[2] 1500-க்கு முன் இங்கிலாந்தின் விவசாயிகளில் பெரும்பாலோர் விடுதலை பெற்றனர். 1617-ல் நாடு முழுவதுமே தளைகள் நீங்கின. ஃபிரான் ஸில் (France) பதினெட்டாம் நூற்ருண்டுவரை அடிமைத் தளைகள் மறைய வில்லை. 1789-ல்தான் சட்டம் அவற்றை ஒழித்தது. பிரஷ்யாவில் (Prussia) அவை 1807-ல் ஒழிக்கப்பட்டன. ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி யில் (Hungary) 1848-லும், ருஷ்யாவில் (Russia) 1861-லும், போலந்தில் (Poland) 1864-லும்தான் இத் தளைகளைச் சட்டம் நீக்கியது.

களின் 'விடுதலைப் பண'மாகும் (quittance). நாளடைவில் இதன் தோற்றத்தை மறந்து, அல்லது அது தெளிவாகப் புலனாகாது, குடியானவன்வசம் இருந்த நிலத்துக்கான வாடகையாகக் கருதப்படலாயிற்று. ஆனால், அது போட்டியின் அடிப்படையில் வாரக்காரரிடம் அவர் எவ்வளவு தரமுடியுமோ அவ்வளவையும் வசூலிப்பதாகாது (competitive rent or rack rent). அது நிலத்தின் மதிப்பையோ அதைப் பெற வாரக்காரர் கொண்ட விருப்பத்தையோ அடிப்படையாகக் கொள்ளவில்லை. அது 'விடுதலை-வாரம்' (Quit-rent) ஆகும்; அதன் அளவு மாறாது; அதைச் செலுத்திவந்த வரை அக் குடியானவனை நிலத்தைவிட்டு வெளியேற்ற முடியாது. அவன் வழக்கமான குடிவாரதாரன் (customary tenant) என்றும், அதைவிட அதிகமாக, 'படிக்காரன்' (copyholder) என்றும் அழைக்கப்பட்டான்.[1] பிற்காலத்தில் படிக்காரர்களுக்கும் சொந்த நிலக்காரர்களுக்கும் (freeholders) பின்வரும் அமிசங்களில்தான் வேறுபாடு இருந்தது. சொந்த நிலக்காரன் விடுதலைவாரம் செலுத்தவில்லை; தன் நிலத்துக்காக உரிமைப் பத்திரங்களை வைத்திருந்தான். படிக்காரன் விடுதலைவாரம் கட்டிவந்தான்; தன் நிலம் என நிரூபிக்க மேனர் புத்தகத்திலிருந்த குறிப்பின் படி (copy) ஒன்றைமட்டும் வைத்திருந்தான்.

இடைக்கால மேனர் முறையின் வீழ்ச்சிக்கு வழிசெய்த மற்றொரு இயக்கம் பிரபுவின் டிமீன் நிலம் பிறர் கைக்கு மாறியதாகும். பண்ணையாட்கள் டிமீன் நிலத்தைச் சாகுபடி செய்தனர். பெருங் கொள்ளை நோய் வந்துபோன பின், இதற்காகப் பண்ணையாளோ வேறு கூலியாளோ போதுமான எண்ணிக்கையில் கிடைக்கவில்லை. எனவே, இக் கஷ்டத்திலிருந்து மீற, தம் டிமீன் முழுவதையும் தானே வேலையாட்களைத் தேடியமர்த்திச் சாகுபடி செய்யப் பொறுப்பேற்கும் எவருக்கும் குத்தகைக்குப் பிரபுக்கள் விடலாயினர்.[2] சில சமயங்களில், தல அதிகாரி (bailiff), மேற்பார்வையாளன் (reeve) அல்லது வசதியுள்ள வில்லின்களில் ஒருவர் டிமீன் நிலத்தைப் பிரபுவிடமிருந்து பெற்று இலாபகரமாக நடத்த முயற்சி செய்வதுண்டு.

[1] தம் வாழ்நாள் மட்டுமே நில உரிமை பெற்றவர்களுட்பட வழக்கமான குடிவாரதாரர் அனைவரையும் முதலில் 'படிக்காரர்' என்றழைத்தனர். நாளடைவில் இச் சொல், தம் வாரிசுகள் நிலம்பெறக்கூடிய உரிமை பெற்றிருந்தவர்களை மட்டும் குறிக்கலாயிற்று. அவர்களுக்கு மட்டும் நீதிமன்றத்தின் பாதுகாப்பு கிடைத்தது.

[2] முதன் முதலில் டிமீன் சாகுபடி நிலம் திறந்த வயல்களில் சிதறியிருந்த பல துண்டுகள் கொண்டதாயிருந்தபோதிலும், பதினைந்தாம் நூற்றாண்டு வரும்போது பல டிமீன் நிலங்கள் ஒரு பெரிய வயலாகச் சேர்த்தமைக்கப்பட்டுவிட்டன. துண்டுகளை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்வதன்மூலம் இது ஏற்பட்டிருக்கவேண்டும்.

அவ் விடத்திலேயே வசிப்பதால் நிலத்தின் தன்மை அவர்களுக்கு நன்கு தெரியும்; கூலியாட்களுடன் அவர்கள் தொடர்புகொண்டிருந்தனர்; தம் குடும்பத்தினரையே அவர்கள் சாகுபடி வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடும். ஆனால், குத்தகை எடுக்க விரும்பியவர்களிடம் நிறைய இல்லாவிட்டாலும் சாகுபடிக்குப் போதுமான அளவும் மூலதனம் இல்லை. முதலில் குத்தகைக்கு நிலங்கள் விடப்பட்டபோது குதிரைகளும் எருதுகளும், கலப்பையும் பிற கருவிகளும் விதை தானியமும் சேர்த்து விடப்பட்டன. அதாவது, நடக்கும் நிறுவனமாக (going concern) அப்படியே குத்தகைக்கு விடப்பட்டது. அவற்றைக் கால்நடை, கலப்பையோடு நிலக் குத்தகைகள் (stock - and - land leases) என்றழைத்தனர்; சில வருஷங்களுக்காக முதலில் அக் குத்தகைகள் வரையப்பட்டன; பின்னர் சாதாரணமாக இன்னும் சில ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப் பட்டன. எந்தக் குத்தகையிலும் இந்த இயல்பு சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு இருந்தது. அதன் பின்னர் குடிவாரதாரன் (tenant) நிலத்தைமட்டும் குத்தகைக்கு எடுக்கமுடிந்தது. இம் முயற்சி நல்ல பயனளித்தது. குடிவாரதாரன் தன் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டதோடு வருஷா வருஷம் சிறிது சேமிக்கவும் முடிந்தது. சுமார் அரை நூற்றாண்டு கழிந்ததும் அவனிடம் நிலத்தைமட்டும் குத்தகை எடுத்து மீதிச் செலவுகளை மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு மூலதனம் சேர்ந்திருந்தது.

மேனரின் பிரபுவுக்கு டிமீன் நிலத்துக்குச் செலுத்திய வாரம் பொருளாகவோ பணமாகவோ கொடுக்கப்பட்டது.[1] வழக்கமான குடிவாரதாரர் செலுத்திய விடுதலைவாரத்துக்கும் இதற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. இது போட்டியின் விளைவாக நிர்ணயிக்கப்பட்ட வாரம். குத்தகைப் புதுப்பிக்கப்படும் காலம் வந்ததும் வாரத் தொகை மாற்றப்படலாம். இடைக் காலத்தில் திட்டமாக நிச்சயிக்கப்பட்ட கட்டணத்துக்கு ‘பெர்ம்’ (ferm) என்று பெயர். எனவே, டிமீன் குடிவாரதாரனை ‘fermor’ அல்லது ‘farmer’ (குடியானவன்) (பார்மர்) என்றழைத்தனர்.[2] அவன் டிமீன் நிலம் முழுவதையும் பயிரிட்டான். எனவே, வழக்கமான குடிவாரதாரர் எவரையும்விட அவன் அதிக நிலம் வைத்திருந்தான். ஆனால், நாளடைவில்

[1] மேனரில் வாழாத பிரபு விவசாயியாக இல்லாமல் வாரம் வாங்குபவராகிறார்.

[2] இன்று farmer என்பது விவசாயியைக் குறிக்கிறது. ஆனால், முதலில் திட்டமாக நிச்சயிக்கப்பட்ட வாரம் செலுத்துவோரைமட்டுமே அது குறித்தது.

டிமீன் நிலம் பல குடியானவர்களிடையே பிரித்தளிக்கப்பட்டது. இவ்வாறு அமைந்த நிலங்கள், படிக்காரர்களுடைய நிலங்களைவிடப் பெரியன. ஆனால், முழு டிமீனுக்கும் தேவையான அளவுக்கு இதற்கு மூலதனம் தேவையில்லை. எனவே, சாதாரண வசதியுள்ள குடியானவர்களும் அவற்றைச் சாதாரண குத்தகைக்கு எடுக்க முடிந்தது. இங்கிலாந்தின் கிராமச் சமுதாய அமைப்பில் இவ்வாறு குத்தகைக் காரக் குடியானவர்களின் வர்க்கம் தோன்றியது. கால்நடை, கலப்பையுடன் நிலக் குத்தகை எடுத்ததன் மொத்தக் காலம் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகள். பதினான்காம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிவரை[1] டிமீனை வாரத்துக்கு விடுவது இயல்பாயிற்று. ஆக, பதினாறும் நூற்றாண்டில் மடத்து மேனர்களில் தவிரப் பிற இடங்களில் பிரபுவே நேரிடையாக நிலத்தைச் சாகுபடி செய்ததைக் காண்பது அரிதாயிற்று. மடத்து மேனர்களில் (monastic manors) சிலவற்றில் மடங்கள் மறையும் வரை தல அதிகாரி சாகுபடியைக் கவனித்து வந்தார்.

விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் வழங்கிவந்த மூவகை நிலக் குடிமை வகைகள் பதினாறும் நூற்றாண்டு தொடங்கிய போது தோன்றிவிட்டன. சொந்த நிலக்காரர்கள் (freeholders) அரசாங்கத்திடமிருந்து நேராக நிலங்களைப் பெற்றனர். அவற்றுக்குப் பெரும் அளவுக்குப் பூரண சொந்தம் கொண்டாடினர். அவர்கள் உரிமையைச் சட்டம் பாதுகாத்தது. இந் நிலங்களில் சில பெரியவை, சில சிறியவை ; சில திறந்த வயல்களில் சிதறியிருந்தன; சில சேர்ந்திருந்தன. விடுதலைவாரம் செலுத்திப் படிக்காரர்கள் நிலச் சாகுபடி உரிமையைப் பெற்றனர். பதினாறும் நூற்றாண்டு வந்த போது நீதிமன்றங்கள் அவர்கள் உரிமையை ஒப்புக்கொள்ளலாயின. படிக்காரர் நிலங்கள் சாதாரணமாகத் திறந்த வயல்களில் இருந்தன. ஒரு சொந்த நிலக்காரனிடமிருந்து வாரக்காரர்கள் நிலத்தை ஒரு சில ஆண்டுக் காலத்துக்குக் குத்தகைக்கு எடுத்தனர். அவர்களது வாரம் போட்டியைப் பொறுத்து நிச்சயிக்கப்பட்டன. அவர்களது நிலம் சாதாரணமாக ஒன்றாகச் சேர்ந்து வேலியிடப்பட்டிருந்தது.

இடைக் கால மேனர் முறையின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த மூன்றாவது இயக்கம், ஆடு வளர்ப்பதற்காக நிலங்களை வேலியிட்டு அடைத்தது. இங்கிலாந்து, நெதர்லாந்து (Netherlands) இரு

[1] பெருங் கொள்ளை நோய்க்கு முன்னரே கால்நடை கலப்பையுடன் நிலம் குத்தகை எடுக்கும் வழக்கம் சிறிதளவு இருந்தது. பதினாறும் நூற்றாண்டிலும் அதற்கு ஒரு சில சான்றுகள் இருந்தன.

நாடுகளிலும் கம்பளித் துணிகள் நெய்யப்பட்டன. உள்நாட்டுத் தொழிலுக்கும் ஏற்றுமதிக்கும் ஆட்டு ரோமத்துக்கு நல்ல தேவை இருந்தது;[1] நல்ல விலையும் நிலையான விற்பனையும் அதற்கு நிச்சயமாக இருந்தன. தானியங்களின் விலை அவ்வாறு நிலையாக இல்லை; ஏற்றுமதிகள் கட்டுப்படுத்தப்பட்டபடியால் விளைச்சல் அதிகமான ஆண்டுகளில் விலை மிகவும் விழுந்தது. கூலிகளோ அதிகமாகி வந்தன. பெருங் கொள்ளைநோயுடன் தொடங்கிய கூலி ஏற்றம் பதினைந்தாம் நூற்றுண்டிலும் தொடர்ந்தது. அதே சமயம் ஆடு வளர்ப்பதற்கு நிலச் சாகுபடியைவிடத் தொழிலாளிகளின் உழைப்புக் குறைவாகவே தேவைப்பட்டது. இக் காரணங்களால் எஞ்சிநின்ற பண்ணையாட்கள் மாற்றுகை கோரித் தொந்தரவு செய்தபோது பல பிரபுக்கள் விவசாயத்தைக் கைவிட்டுத் தம் நிலங்களில் புல் வளர்க்கலாயினர். டிமீன் நிலங்கள் துண்டு துண்டாகச் சிதறியிருந்தால் ஆடு மேய்க்க அவற்றைப் பயன்படுத்துவது கஷ்டம். ஆனுல், இடைக் காலத்தின் இறுதியில் ஏற்பட்டதுபோல டிமீன் நிலங்கள் ஒரே இடத்தில் அமைந்து வேலியிடப்பட்டிருந்ததால் இது மிக எளிதாயிற்று. பிரபுவின் விருப்பம்போல மேய்ச்சல் தொழிலைத் துவக்கலாம். மிகுதியிருந்த பண்ணையாட்களுக்கும் மாற்றுகை அளிக்கலாம். இதனுல் வருந்தியவர்கள் கூலியாட்களே; அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் இல்லாது போயின.

கணிசமான அளவுக்கு மேய்ச்சல் தொழில் நடத்த டிமீன் நிலம் போதாது. எனவே, பொது மேய்ச்சல் நிலம், பாழ்நிலம், காடுகள் இவற்றில் ஒரு பகுதியையோ, சில சமயம் முழுவதையுமோ பிரபுக்கள் அதனுடன் சேர்த்து வேலியிட்டுக்கொண்டனர். பிற கிராம மக்களின் உரிமையை இது தீவிரமாகப் பாதித்தது. விவசாயத்துக்குத் தேவையான தம் காலைகளைக் காப்பாற்றும் ஒரே வழியை அவர்கள் இழந்தனர், அவர்களுக்கு இதற்காக ஒரு பரிகாரமும் இல்லை; அவர்கள் உரிமைகள் வழக்கத்தை அனுசரித்தவை, சட்டத்தை அல்ல. எனவே, அரசாங்க நீதிமன்றங்களால் அவர்களது குறையை நீக்க முடியவில்லை.[2] சில நாட்களில் வேலியற்ற சாகுபடி நிலங்களையும்

[1] மற்றொரு அதிகாரத்தில் குறிப்பிட்டபடி பதினைந்தாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் கம்பளி நெசவுத் தொழில் வளர்ந்ததனுல் உரோம ஏற்றுமதி குறைந்து வந்தது.

[2] மெர்ட்டன் சட்டம் (Statute of Merton) வழக்கமான குடிவாரதாரர்களின் உரிமையைப் பாதுகாக்கவில்லை. 1235-ல் நிறைவேறிய இச் சட்டப்படி திருவீரர்கள், சொந்த நிலக்காரர் ஆகியோரின் தேவைக்குப் போதுமான அளவு விட்டுவிட்டுப் பாழ் நிலங்களை வேலியிட்டுக்கொள்ள மேனர் பிரபு அனுமதிக்கப்பட்டார். எப்படியிருப்பினும், போதுமான அளவு எது என்பதை நிர்ணயிப்பது பிரபுவே ஆதலின் இச் சட்டம் பயனற்றதே.

புல் வெளிகளையும்கூடத் தம் மேய்ச்சல் நிலத்தோடு சேர்த்துத் தம் வேலையை முடிக்கப் பிரபுக்கள் துணிந்துவிட்டனர். வில்லின்கள் வழி யற்றுப்போயினர். பல நூற்றுண்டுகளாகப் பிரபுக்களது அக்கறை அதை அனுசரிப்பதில் இருந்தவரை நாட்டு வழக்கம் வில்லின்களது உரிமைகளைப் பாதுகாத்தது; மாறிய சூழ்நிலையில் பிரபுக்களின் அக்கறை வேறு வழியில் இருந்தபோது இப் பாதுகாப்பு எவ்வளவு பலனற்றது என்பதை வில்லின்கள் உணர்ந்து கொண்டனர்.

மேனரில் வசித்த சுதந்திரக் குடியானவர்களின் நிலங்களை இவ்வாறு கேட்பாரற்ற முறையில் எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஆயினும், சாகுபடி நிலத்துக்கும் ஒருவேளை, புல் வெளிக்கும் அவர் களுக்கிருந்த உரிமையை நீதிமன்றங்களில் நிலைநாட்ட முடியுமாயினும் மேய்ச்சல் நிலம், காடு ஆகியவற்றின் மறைவினுல் அவர்கள் பாதிக்கப்பட்டனர். ஆதலின், மேனரின் பிரபுவுடன் அவர்கள் ஓர் உடன்பாட்டுக்கு வர விரும்பினர். அதன்படி அவர்கள் நிலத்தைப் பிரபு வாங்கிக்கொண்டார். மேனர் முழுதும் ஆடு மேய்க்கும் வெளியாயிற்று. பிரபுவே அதன் சொந்தக்காரர். சில ஆடு மேய்ப் பவர்கள் அவருக்கு உதவினர்.

இம் மாறுதல் எவ்வளவு இடங்களில் நடந்தது என்பதை மிகை படக் கூறல் எளிது. சாகுபடி நிலத்தை மேய்ச்சல் நிலமாக மாற்றியது கிழக்கிலும், கிழக்கு மிட்லண்டிலும் உள்ள சில மாவட் டங்களில்தான் நடந்தது. அவற்றிலும் ஒரு சில மேனர்களில்தான் நடந்திருக்கக்கூடும். அதன் சமூக - பொருளாதார விளைவுகளுடன் நில அடைப்பு இயக்கத்தின் முழு இயல்புகளையும் பின்னர் ஓர் அதிகாரத்தில் விவரிக்கலாம். இங்கு மேனர் முறையின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகத்தான் இது குறிப்பிடப்படுகிறது.

மற்ருெரு காரணமும் இவ் வீழ்ச்சிக்கு அடிகோலியது. ஆனுல், அது பொருளாதாரம் சம்பந்தப்பட்டதல்ல. மேனர் முறைப்படி பிரபுவுக்கு மேனரின் குடிமக்களுக்கு நீதி வழங்கும் அதிகாரம் இருந்தது. அவரோ, அவரது நிர்வாக அதிகாரியோ காலந்தோறும் மேனர் நீதிமன்றங்களை நடத்தினர். அம் மன்றங்களின் ஆதிக்கத்தில் அனைவரும் இல்லை; பண்ணையாட்கள் அதற்குட்பட்டனர்; பல மேனர் களில் சாக்மென்னும் அதற்குட்பட்டனர். ஆனுல், சுதந்திர மக்கள் மேனர் பிரவுவின் நீதிமன்றத்துக்கு வரக் கடமைப்பட்டவரா என்பது அவ்வளவு நிச்சயமில்லை. நீதிமன்றத்தை நடத்துவதனுல் பிரபு பெறும் நன்மை அதன் ஆதிக்கத்தைப் பொறுத்தது. பண்ணையாட்கள்

பலர் விடுதலைபெற்று வந்தபோது இவ் வாதிக்கமும் அதனுல் வரும் அபராதப் பணங்களும் குறைந்தன. மேனர் வழக்கங்களை மீறிய குற்றங்கள் குறைந்தன. நீதிமன்றம் நடத்தும் உரிமையின் முக்கியத்துவம் குறைந்துபோயிற்று. மேலும், அஞ்சுவின் (Angevin) அரசர்கள் அரசாங்கத்தின் ஆதிக்கத்தை நாடெங்கும் விஸ்தரித்து, அதை வலியுறுத்தும் கொள்கையையும் கொண்டிருந்தனர். சுதந்திர மக்கள் அனைவரும் அரசனது நீதிமன்றங்களின் தீர்ப்புக்குத் தம் வழக்குகளைக் கொண்டுவர உரிமை பெற்றனர் என்பது நிச்சயமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. நீதிபதிகளை நாடு முழுதும் அனுப்பிய முறை மேனர் மன்றங்கள் கிரிமினல் வழக்குகளை நடத்துவதைக் குறைத்துவிட்டது. மேனர் நீதிமன்றங்கள் தாழ்வடைந்தன. அவற்றின் வருவாய் குறைந்ததும் அவற்றை நடத்துவது பயனில்லாது போயிற்று. அவற்றின் ஆதிக்கம் அரசாங்க நீதிமன்றங்களைச் சார்ந்தது. மேனரின் அமைப்பைக் கட்டுக்கோப்பாக வைத்திருந்த ஓர் அம்சம் அதனுடன் மறைந்தது.

எனவே, பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் இடைக்கால மேனர்முறையின் பல முக்கிய இயல்புகள் மறைந்து போயின. வேலியற்ற வயல்களில் சாகுபடி இன்னமும் நடந்துவந்தது. ஆனுல், வில்லின்முறை மறைந்துபோயிற்று அல்லது அநேகமாக மறைந்து போயிற்று. கடமை வேலைக்குப் பதில் கூலிவேலை நடந்தது. பிரபுவின் டிமீனுக்குப் பதில் குத்தகைக் கெடுத்த பெரிய வேலியிட்ட நிலங்களில் சாகுபடி நடந்தது. சில இடங்களில் சாகுபடிக்குப் பதில் மேய்ச்சல் நடந்தது. பொருளும் சேவைகளும் பண்டமாற்று முறையில் மாற்றப்பட்ட இயற்கைப் பொருளாதார நிலை (natural economy) மறைந்து, பொருளாதார விவகாரங்கள் பணத்தைப் பயன்படுத்தி நடந்தன. சொந்த அக்கறையின் முக்கியத்துக்கு முன் பழக்க வழக்கங்களின் சக்தி குறைந்தது. வாணிபப் போட்டி மனப்பான்மை வளர்ந்தது. மக்களது வாழ்க்கையில் ஒரு புது யுகம் தோன்றலாயிற்று.

5. கம்பளி நெசவுத் தொழிலின் வளர்ச்சி

(The Growth of the Manufacture of Woollen Cloth)

மிகப் பண்டைக் காலந்தொட்டு இங்கிலாந்தின் நாட்டுப்புறக் குடிசைகளில் கம்பளி நூற்பும் நெசவும் நடந்துவந்தன. இக் குடிசைகளில் தயாரான துணி வசீகரமாகவோ, மெல்லியதாகவோ இல்லை; அது விற்பனைக்காகவன்றிக் குடும்பத்தினர் உடுத்திக்கொள்வதற்காக உற்பத்தி செய்யப்பட்டது.[1]

நாட்டில் நிறைய உரோமம் கிடைத்ததால் விற்பனைக்காகத் துணி நெய்யப்படுவதற்கு வழி உண்டாயிற்று.[2] நார்மன் வெற்றிக்குப் பின் ஒரு நூற்றுண்டுக்குள் இத் தொழில் இருந்ததற்குத் திட்டமான சான்றுகள் உள்ளன. முதலாம் ஹென்ரியின் (Henry I) காலத்திலேயே நெசவாளிகளின் கில்டுகள் இருந்ததாகத் தெரிகிறது. நாளடைவில் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் இத் தொழில் நடந்து வந்தது. சில நகரங்களில் துணி வியாபாரத்தில் முற்றுரிமை பெற விரும்பிய வணிக கில்டுக்கும் நெசவாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டது. இறுதியில் தங்கள் நிலையை நெசவாளிகள் பாதுகாத்துக் கொள்வதில் வெற்றிபெற்றனர்.

நாளடைவில் நெசவாளிகளது கில்டுகள் விதித்தவற்றைத் தவிரச் சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் புகுத்தியது; அல்லது புகுத்த

[1] அக்காலத்து விவசாயமும் இதுபோலவே விற்பனைக்கன்றிச் சொந்த உபயோகத்துக்காகப் பயிர் விளைவித்தது.

[2] துணி உற்பத்தியில் பல தனிக் கட்டங்கள் உள்ளன. உரோமத்தைச் சிக்கெடுத்துத் தயாரித்தல் (Carding or combing), நூற்றல், நெய்தல், சாயமேற்றல் (Dyeing), மெருகிடுதல் (Finishing) ஆகியவை. இத் தொழிலில் வேலைப் பகிர்வு (Division of labour) நன்கு கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

முயன்றது எனலாம். 1197-ல் துணி அசைஸ் சட்டத்தின்படி (The Assize of Cloth) விற்பனைக்கு வந்த எல்லாத் துணியும் ஒரே அகலம் கொண்டதாக இருக்கவேண்டும் என உத்தரவிடப்பட்டது. ஆனால், அதை அமல் செய்வது எளிதாக இல்லை; பல நகரங்கள் தம் துணிகளுக்கு விதிவிலக்கு கோரிப் பெற்றன. பதின்மூன்றும் நூற்றாண்டில் ஆல்நெஜர் (Aulnager) என்ற அதிகாரி துணி விற்பனைக் கட்டுப்பாடு, மேற்பார்வை இவற்றை நடத்த நியமிக்கப்பட்டார். விற்பனைக்கு வந்த துணியின் தரமும் நீளமும் சரியாக உள்ளனவா என்று பார்ப்பது அவர் கடமை.

ஏற்றுமதிக்குத் துணி மிச்சப்படும் அளவுக்கு இங்கிலாந்தில் இத் தொழில் பதின்மூன்றும் நூற்றாண்டில் வளர்ந்தது. ஆனால், ப்ளாண்டர்ஸில் தயாரான மெல்லிய துணிகளை (Flemish)விட இங்கிலாந்தின் துணிகள் தரத்தில் குறைந்திருந்தன. ஃப்ளெமிஷ் துணிகள் பணக்காரர்களின் உபயோகத்துக்காக இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டன. வெளிநாட்டுத் துணியுடன் போட்டியிடும் அளவுக்குத் திண்மையும் திறமையும் ஆங்கில நெசவுத் தொழில் அப்போது பெற்றிருக்கவில்லை. பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியில் உரோம ஏற்றுமதியையும், துணி இறக்குமதியையும் தடுத்து ஆங்கில நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க முயற்சிகள் பல செய்யப்பட்டன. இக் கட்டுப்பாடுகள் ஓரளவுக்குத்தான் பலன் தந்தன. பொருளாதாரக் காரணங்களோடு அரசியலும் இதற்குக் காரணமாக இருந்தது. மூன்று எட்வர்டு அரசர்களும் வியாபாரத்தின் போக்கில் குறுக்கிடுவதன்மூலம் அந்நிய அரசாங்கங்களைத் தம் வழிக்குக் கொண்டுவர முடியும் என்பதை அறிந்திருந்தனர். சாதாரணமாக, இக் கட்டுப்பாடுகள் எந்தக் குறிக்கோளுடன் விதிக்கப்பட்டனவோ அது வெற்றி பெற்றதும் நீக்கப்பட்டன.

பதின்மூன்றும் நூற்றாண்டு முடியுமுன்னரே, நெசவுத் தொழிலில் மந்தம் ஏற்பட்டது. இது மூன்றும் எட்வர்டின் ஆட்சி வரை நீடித்தது. இவ் அரசன் இத் தொழில் தாழ்வதை நிறுத்தி வெளிநாட்டிலிருந்து தேர்ச்சி பெற்ற நெசவாளிகளைக் கொண்டு வருவதன் மூலம் இதை இங்கிலாந்திலேயே தலையாய தொழிலாக ஆக்குவதென முடிவு செய்தான். ஹாலந்து நாட்டில் நிலவிய அரசியல் குழப்பம் அக் கொள்கைக்கு உதவி செய்தது. ஃப்ளாண்டர்ஸ் கோமகனுக்கும் (Count of Flanders) அந் நாட்டின் பெரிய நகரங்களுக்கும் தகராறுகள் இருந்தன. நெசவாளிகளுக்கிடையேகூட தகராறுகள் இருந்திருக்கலாம். ஃப்ளெமிஷ் நெசவாளிகளை இங்கி

லாந்துக்கு மூன்றும் எட்வர்டு மன்னன் அழைத்து அரசாங்கப் பாது காப்பை அவர்களுக்கு அளிப்பதாக வாக்களித்தான். சில ஆண்டு களுக்குள் நூற்றுக்கணக்கானவர்கள் இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இங்கிலாந்தில் வந்து குடியேறினர்.

எதிர்பார்க்கக் கூடியவாறு, இவ் அயல் நாட்டாரின் வருகையை உள்ளூர் நெசவாளிகள் விரும்பவில்லை. ஃப்ளாண்டர்ஸின் நெச வாளிகள் பல நகரங்களில் குடியேறித் தம் திறமை காரணமாகத் துணி உற்பத்தியில் பெரும் பங்கைக் கைப்பற்றினர்.[1] நகரத்தார் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்த முயன்றனர். அரசனது குறுக் கீட்டால்தான் தகராறுகள் தவிர்க்கப்பட்டன. லண்டனில் இவ் அயல்நாட்டு நெசவாளிகள் தனி கில்டு ஒன்றை அமைத்தனர். அது 1352-ல் அங்கீகாரம் பெற்றது. லண்டனிலிருந்த ஆங்கில நெச வாளிகளின் கில்டு இப் போட்டி நிறுவனம் இருப்பதைக் கண்டு வருந்தி அதை அடக்கியாள முயன்றது. அரசனுக்கு நெசவுத் தொழி லில் இருந்தவர் முழுவதும் சேர்ந்து செலுத்தவேண்டிய கப்பத் (ferm) தொகைக்காக இவ் வெளிநாட்டார்கள் பணம் ஏதும் செலுத்தவில்லை என்பது அவர்கள் கூற்று. இறுதியில் அவர்கள் இக் கட்டணத்தில் அவர்களது பங்கைச் செலுத்த வேண்டியதாயிற்று.

வேறு இடங்களில் கூறியுள்ளபடி, சாதாரணமாக, இடைக் காலத்தில் தொழில்களை நடத்துவதில் மூலதனத்தின் பங்கு மிகக் குறையவே, தொழில் முதல்வன் தன் கருவிகளைத் தவிர வேறு மூலதனம் சேர்த்திருக்க வேண்டியதில்லை. தன் திறமையையும், தனது வாடிக்கைக்காரர்கள் சிலரது தொடர்பையுமே நம்பி அவன் தொழில் நடத்தினான். ஆனால், ஃப்ளெமிஷ் நெசவாளிகளில் சிலர் பணம் படைத்தவர்கள். பல கூலியாட்களை வைத்துத் துணி தயாரிக்க அவர்களால் முடிந்தது. நாளடைவில் இத் தொழில், முதல் படைத்த துணி வணிகர்களால் நடத்தப்படலாயிற்று. பதினைந்தாம் நூற்றாண்டில் உரோமத்தை வாங்கி கூலியாட்களைக் கொண்டு துணி தயாரித்த துணி வணிகர்களின் வர்க்கம் ஒன்று தோன்றிவிட்டது. இவர்களில் சிலர் மேய்ச்சல் தொழிலையும் நடத்திப் போதுமான அளவு உரோமம் நிலையாகத் தம் தொழிலுக்குக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்துகொண்டனர்.

[1] நார்விச்சிலும் (Norwich) நார்பக் (Norfolk) மாவட்டத்தின் பிற ஊர் களிலும் ஊஸ்டட் (Worsted) துணி நெசவை அவர்கள் மிகவும் வளர்த்தனர். ஊஸ்டட் துணி நீளிழை உரோமத்திலிருந்து (long-staple wool) நெய்யப்படு கிறது. உல்லன் (woollen) துணியைவிட இது லேசானது, விலை குறைந் தது, பிற சில விஷயங்களிலும் உயர்ந்தது.

பதினாறும் நூற்றாண்டில் அநேகமாக இத் தொழில் முழுவதும் முதலாளித் தொழிலதிபர்களால் நிர்வகிக்கப்பட்டது.[1] துணியில் பெரும் பகுதியை இல்லத் தொழில்முறையில் (domestic system) நெசவாளிகள் தம் வீடுகளில், தம் கருவிகளைப் பயன்படுத்தி, சில சமயம் தேர்ந்த கூலியாட்களையும் பயன்படுத்தி, கூலி பெற்றுத் தயாரித்தனர். பல தொழிலாளர்கள் சேர்ந்து உழைத்த தொழிற் கூடங்களும் (workshops) இருந்தன. அவற்றில் வேலைப் பகிர்வு முறை கடைப்பிடிக்கப்பட்டது. ஜான் விஞ்ச்கூம் (John Winchcombe) [ஜாக் ஆப் நியூபரி (Jack of Newbury) என்பது அவரது பிரசித்தமான பெயர்] பல கூலியாட்களுக்கு வேலையளித்தார். மடங்கள் ஒழிக்கப்பட்ட பின் அரசாங்கத்திடமிருந்து மாம்ஸ்பரி மடத்தை (Malmesbury Abbey) வாங்கிய வில்லியம் ஸ்டம்ப் (William Stumpe) அந்தக் கட்டடத்திலும் ஆஸ்னி மடத்திலும் (Osney Abbey) பல கூலியாட்களை அமர்த்தித் துணி உற்பத்தி செய்தார். இவை விதிவிலக்குகள். தொழில் புரட்சி தோன்றும்வரை துணி வணிக முதலாளிகளுக்கடங்கி இல்லத் தொழில்முறையில்தான் துணி நெசவு அநேகமாக நடந்தது.

அடிக்கடி துணி வணிக முதலாளிகளுக்கும், பிற வகுப்பினர்களுக்கும் பூசல்கள் மூண்டன. துணி வணிகர்களுக்கிடையே போட்டியிருந்தது. அது தவிர, முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் கூலி விஷயமாகத் தகராறுகள் ஏற்பட்டன. சொந்தமாகத் துணி நெய்யும் தொழிலாளர்கள் இப் பணக்கார முதலாளிகளின் போட்டியை வெறுத்தனர். துணி வணிகர்கள் மூலப்பொருளை (உரோமத்தைப்) பதுக்குவதாக சுதந்திர நெசவாளிகள் மீது குற்றம் சாட்டினர்.[2] அவர்கள் விற்ற துணிகளின் தரம் குறைவாக இருந்தது என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இதைவிடப் பெரிய தகராறு இத் துணி வணிக முதலாளிகளுக்கும், துணிகர வியாபாரிகளுக்கும் (Merchant Adventurers) இடையே ஏற்பட்டது. துணி வணிகர் பக்குவம் செய்யப்படாத துணியை விற்க விரும்பவில்லை. அவர்கள் அதற்குச் சாயமேற்ற விரும்பினர். துணிகர வியாபாரிகள் சாய மேற்றாமல் அதை ஏற்றுமதி செய்ய விரும்பினர். இங்கிலாந்தில் சாய மேற்றும் தொழில் முன்னேறினால் ஐரோப்பிய நாடுகளில் சில இடங்

[1] இடைக் காலத்தின் முடிவில் முதலாளித்துவ தொழில்முறை, வேறு தொழில்களிலும் தோன்றலாயிற்று. இதுபற்றித் தொழில் கில்டுகள் பற்றிய அதிகாரத்தில் கூறப்பட்டது.

[2] இடைக் காலத்தில் வழக்கமான வணிக நேர்மையை மீறியதுபற்றிய இக் குற்றச்சாட்டுக்கு யாரும் செவி சாய்க்காதது காலத்தோடு மக்களது மனப்பாங்கும் மாறிவிட்டதற்கு ஒரு தெளிவான சான்றாகும்.

களில் இருந்த இத் தொழில் பாதிக்கப்படும். அப்போது அதற்குப் பழி தீர்க்குமாறு வேறு நடவடிக்கைகளை அந் நாடுகள் மேற் கொள்ளக்கூடும் என அவர்கள் பயந்தனர்.[1]

1350-க்குப்பின், இங்கிலாந்தில் கம்பளித் துணி உற்பத்தி பெருகி, இந் நாட்டு உரோம உற்பத்தியில் பெரும் பகுதியைப் பயன்படுத்திக் கொண்டது. பதினன்காம் நூற்ருண்டின் மத்திக்கு முன் ஆட்டு ரோமம் இந் நாட்டின் முக்கிய ஏற்றுமதியாக இருந்தது. இதற்குப் பின் உள்நாட்டு நெசவுத் தொழிலின் தேவை காரணமாகப் பதினைந்து, பதினரும் நூற்ருண்டுகளில் மேய்ச்சல் தொழில் விஸ்தரிக்கப்பட்ட பின்னரும் உரோம ஏற்றுமதி குறையலாயிற்று. ஆனல், உரோம ஏற்றுமதி குறைந்த அதே சமயம் அதைவிடக் கம்பளித் துணி ஏற்றுமதி அதிகரித்தது.

[1] ஆங்கில வியாபாரிகள் தம் நாட்டில் இருப்பதால், துணிக்குச் சாய மேற்றிப் பக்குவப்படுத்தும் தொழில்கள் தம் நாடுகளில் வளரும் என்பதற் காக ஐரோப்பிய நாடுகளின் அரசர்கள் துணிகர வியாபாரிகளுக்குப் பண்டசாலைகள் அமைக்க அனுமதி அளித்தனர். எனவே, துணிகர வியாபாரிகள் இங்கிலாந்திலிருந்து சாயமேற்றிய துணியை இறக்குமதி செய்தால் இத் தொழில்கள் நசித்துப்போகும். அப்போது தம் சலுகைகளை இழக்கவேண்டிவரும் என இவ் வியாபாரிகள் பயந்தனர்.

6. இங்கிலாந்தின் வெளிநாட்டு வாணிபத்தின் வளர்ச்சி

(English Overseas Trade)

நார்மன் வெற்றிக்கு முன்னர் ஓரளவுக்கு இங்கிலாந்துக்கும் அருகிலிருந்த ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே வியாபாரம் நடந்து வந்தது. எட்டாவது நூற்றூண்டிலேயே மகா சார்லெஸ் (Charles the Great) என்ற முதல் புனித ரோமானியப் பேரரசர் (Holy Roman Emperor), மெர்சிய அரசரான (King of Mercians) ஒஃபாவிற்கு (Offa) எழுதிய கடிதம் ஒன்றில், இங்கிலாந்துக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் நடந்த வாணிபத்தைப்பற்றிய குறிப்புக் கிடைக்கிறது. ஒரு நூற்றூண்டு கழித்து, ஆல்ஃபிரெடு மன்னன், வெளிநாட்டு வாணிபத்தை வளர்ப்பதற்காக மும்முறை தன் கப்பலில் வெளிநாடு செல்லத் துணியும் வணிகன் தேனராகும்[1] (thegnworthy) தகுதி பெறுகிறுன் என அறிவித்தார். டேனர்கட்கும் (Danes) இங்கிலாந்துக்கும் இருந்த தொடர்பு காரணமாக ஸ்காண்டிநேவிய நாடுகளுடன் வாணிபம் தோன்றியது. நார்மன் வெற்றியின் விளைவாக, ஃபிரான்ஸுடனும் நெதர்லாந்துடனும் இங்கிலாந்தின் வாணிபம் பரவியது.

இடைக் காலம் முழுவதும் இங்கிலாந்தின் வாணிபத்தை வெளிநாட்டாரே அநேகமாக நடத்தினர். தம் பொருள்களை விற்கவும், ஆங்கிலப் பொருள்களை வாங்கவும் அவர்கள் இங்கிலாந்துக்கு வந்து போயினர். ஆங்கில வணிகர்கள் வெளிநாடு சென்று வரத் தயாராக இல்லை. எனவே, இவ் வெளி வணிகர்கள் வந்து போகாமலிருந்தால் இங்கிலாந்துக்கும் பிற நாடுகளுக்கும் தொடர்பற்றுப்

[1] அரசனது கிழார்.

போயிருக்கும் ; எனினும், இவ் வணிகர்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கவில்லை. அவர்கள்மீது பல கட்டுத்திட்டங்கள் விதிக்கப்பட்டன. அவர்கள் வந்து பார்த்த நகரங்களின் மக்கள் அவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். அவர்கள் மிக அதிகமான சுங்கவரி செலுத்தவேண்டியிருந்தது. எந்த நகரிலும் சாதாரணமாக நாற்பது நாட்களுக்குமேல் தங்க அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. (சில்லறை வாணிப முற்றுரிமையை நகர வணிககில்டு பெற்றிருந்ததால்) அவர்கள் மொத்த வியாபாரத்தில் மட்டும் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். ஏதாவது ஓர் ஆங்கில வணிகனுடன் தான் அவர்கள் தங்கவேண்டும். அந்த ஆங்கில வணிகன் அவர்களது வியாபாரத்துக்குச் சாட்சியாக இருக்கவேண்டும் ; அவர்கள்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மீருது பார்த்துக்கொள்ளவேண்டும். இங்கிலாந்தில் பொருள் விற்ருல் அதற்கு ஈடான மதிப்புக்காவது இந் நாட்டில் பொருள்களை அவர்கள் வாங்கிச் செல்லவேண்டும். இங்கிருந்து பணத்தை வெளியே எடுத்துச் சென்றுவிடக்கூடாது.[1]

ஓரளவுக்காவது அந்நிய வணிகர்களுக்கு அரசாங்கத்தின் பாதுகாப்புக் கிடைத்தது. அரசனது அக்கறையும் நகரங்களின் அக்கறையும் இவ் விஷயத்தில் மாறுபட்டிருந்தன. இறக்குமதி, ஏற்றுமதி வரிகளால் அரசன் இலாபமடைந்தான். எனவே, வெளிநாட்டு வாணிபத்தைப் பெருக்குவதில் நேரில் அக்கறை காட்டினன் ; நகராட்சிகள் தம் முற்றுரிமையைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டின. இம் முரண்பாட்டின் விளைவாக அரசனுக்கும் பெரிய நகரங்களுக்கும் இடையே விளைந்த தகராறு இடைக் காலத்தின் முடிவு வரை நீடித்தது.

வெளிநாட்டு வணிகர்களின் சங்கங்களில் சிலவற்றுக்கு விசேஷ சலுகைகள் அளிக்கப்பட்டன. இவற்றுள் முக்கியமானவை ஹான்ஸியாடிக் லீக் (Hanseatic League) என்ற சங்கம்.[2] ஹாம்பர்க் (Hamburg), கொலோன் (Cologne), லூபெக் (Lubeck), டான்ஸிக் (Danzig) போன்ற ஜெர்மானிய, ஸ்காண்டிநேவிய (Scandinavian)

[1] இக் கட்டுப்பாடுகள் செயலாற்றப்பட்ட அளவு காலத்துக்குக் காலம் மாறியது. முதலாம் எட்வர்ட் இவற்றைக் கட்டாயமாக அமல் செய்ய மறுத்தார். அவர் மகனர் அமல் செய்தார். மூன்ரும் எட்வர்ட் அந்நிய வணிகர்களுக்குப் பாதுகாப்பளித்தார். ஆனல், அவர் ஆட்சிக் காலத்தின் இறுதியில் நகரங்கள் மேற்கூறியவாறு அந்நிய வணிகர்மீது கட்டுப்பாடு விதிக்கும் உரிமையை ஒப்புக்கொண்டார்.

[2] மிகப் பல நகரங்கள் இச் சங்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்தன. பெர்கன் (Bergen), நோவ்கொராட் (Novgorod), ப்ருஜஸ் (Bruges) போன்ற நகரங்களிலெல்லாங்கூட அவர்களது பண்டகசாலைகள் அமைந்திருந்தன.

நகரங்களினின்று வந்த வணிகர்கள் இவர்கள். இப் பெரிய சங்கம் பல சலுகைகளைப்பெற்று வட ஐரோப்பாவின் பெரும் பகுதியுடன் வர்த்தக உறவை ஏற்படுத்தியது. இந்த ஹேன்ஸ் (Hanse) வணிகர்கள் இங்கிலாந்தில் அந்நியர்கள்மீது விதிக்கப்பட்ட பல கட்டுப்பாடுகளினின்றும் விதிவிலக்குப் பெற்றனர். ஆங்கில வணிகர்களைவிட அதிகமாக வரிச்சலுகைகள் (preferential tariffs) பெற்றனர்.[1] பல கிழக்குக் கடற்கரை நகரங்களில் அவர்கள் பண்டக சாலைகள் அமைத்தனர்; லண்டனில் அவர்கள் அமைத்ததற்கு ஸ்டீல் யார்டு (Steelyard) என்று பெயர்.[2] அவர்கள் பல பொருள்களில் வியாபாரம் செய்தனர். அவற்றில் ஹெர்ரிங்கு மீனும், கம்பளித் துணியும் முக்கியமானவை.[3] இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்திலேயே அவர்கள் லண்டனில் இருந்ததாகத் தெரிகிறது. அவர் அவர்களுக்கு ஒரு சலுகைப் பட்டயம் அளித்தார். இச் சலுகைகளை 1474-ல் நான்காம் எட்வர்டு உறுதி செய்தார். அஞ்சுவின் மார்கரெட், வார்விக் ஆகியோருக்கு (Warwick and Margaret of Anjou) எதிராக அவன் நடத்திய போருக்கு அவர்கள் பண உதவி செய்ததே இதற்குக் காரணமாகும்.

இரண்டாம் ஹென்றியின் பேரரசில் காஸ்கனி (Gascony) ஒரு மாநிலப் பகுதியாக இருந்தபோது, அவன் ஆட்சிக் காலத்திலேயே காஸ்கன் மது இங்கிலாந்தில் இறக்குமதி ஆயிற்று. இங்கிலாந்துக்கும் காஸ்கனிக்கும் மூன்று நூற்றாண்டுகளாக இவ் அரசியல் உறவு இருந்தது. அதனால், விளைந்த வாணிபத் தொடர்பு அம் மாநிலப் பகுதியை இங்கிலாந்து இழந்த பிறகும் தொடர்ந்து இருந்தது.[4]

வெனிஸுடனும் (Venice) வாணிப உறவு ஏற்பட்டது. கீழை நாட்டு வாசனைத் திரவியங்களுக்கு இங்கிலாந்தில் நல்ல தேவை இருந்தது. பல நூற்றாண்டுகளாக இப் பெரிய வணிக நகரம் கீழை நாட்டுப் பொருள்களை விநியோகிக்க ப்ரூஜஸில் (Bruges) ஒரு பண்டக

[1] நாட்டின் எந்தப் பகுதியிலும் மொத்தம் அல்லது சில்லறை விற்பனையில் ஈடுபடக்கூடிய உரிமை பெற்றிருந்தனர். காலவரையறையின்றி அவர்கள் தங்க அனுமதிக்கப்பட்டனர். இச் சலுகைகளை ஆங்கில வணிகர்கள் விரும்பவில்லை என்பது கூறத் தேவையில்லை.

[2] இப்போது கானன் ஸ்ட்ரீட் (Cannon Street) ரெயில் நிலையம் உள்ள இடத்தில் ஸ்டீல்யார்டு இருந்தது.

[3] ஹேன்ஸ் வணிகர்கள் இங்கிலாந்துக்குப் பிராணிகளின் மிருதுவான உரோமத் தோல் (furs), ஹெர்ரிங் மீன், தார் முதலியவற்றையும் நாளடைவில் வேறு பல பொருள்களையும் கொண்டு வந்தனர். இங்கிலாந்திலிருந்து உரோமம், கம்பளித் துணி, தோல் ஆகியவற்றை ஏற்றுமதி செய்தனர்.

[4] காஸ்கனியை இங்கிலாந்து 1453-ல் கடைசியாக இழந்தது.

சாலை நடத்திவந்தது. வெனிஸுக்கும் ப்ரூஜஸுக்கும் நில மார்க்கமாகத்தான் சாதாரணமாகப் போக்குவரவு நடந்தது; அதாவது ப்ரென்னர் கணவாய் (Brenner Pass), ரைன் பள்ளத்தாக்கு (Rhine valley) வழியாக. ஆனால், பதினான்காம் நூற்றாண்டின்போது ஆங்கிலக் கால்வாய்க்கு ஆண்டுதோறும் ஒரு கப்பல் தொகுதியை அனுப்பிவைக்கும் பழக்கம் தோன்றிவிட்டது.[1] இக் கப்பல்கள் ஃப்ளாண்டர்ஸ் (போர்க்) கப்பல்கள் (Flanders galleys) என்றழைக்கப்பட்டன. இவை வெனிஸ் அரசாங்கத்துக்குச் சொந்தமானவை. வாணிப வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பிய வெனிஸ் நாட்டு வர்த்தகர்கள் இவற்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டனர். அரசாங்க நிர்வாகம், மற்றும் மேற்பார்வையில்தான் இக் கப்பல்கள் பயணம் செய்தன. எனவே, தனியார் முயற்சியில் இருக்கக்கூடியதை விட அதிகக் கட்டுப்பாடுடன் கப்பல்கள் ஓடின. வெனிஸ் அரசாங்கம் கப்பல்கள் சென்ற நாட்டு மக்களுடன் வாணிப ஒப்பந்தங்கள் செய்துகொள்வது இதனால் சாத்தியமாயிற்று. ஆங்கிலக் கால்வாய் (English Channel) வந்ததும் இக் கப்பல்கள் பல பகுதிகளாகப் பிரிந்து, ஹாலந்து, வட ஃபிரான்ஸ், தென் இங்கிலாந்து ஆகியவற்றின் துறைமுகங்களை நோக்கிப் பயணமாயின.[2]

இடைக் காலத்தின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் ஏற்றுமதி வணிகத்தின் போக்கைக் கட்டுப்படுத்த ஆதார (staple) அங்காடி நிறுவப்பட்டது.[3] உரோமம், கச்சாத் தோல், பதனிடப்பட்ட தோல், வெள்ளீயம் (Tin), காரீயம் (Lead) போன்ற ஆதாரப் பொருள்களின்

[1] இடைக் காலத்தின் பிற்பகுதியில் வெனிஸ், தென் ஐரோப்பாவில் வாணிபத்துக்கு மிகவும் பிரசித்தமான கேந்திரமாக விளங்கியது. வெனிஸ் வர்த்தகர்கள் சென்ற மார்க்கங்கள் பின்வருமாறு:

மேற்கே, போ பள்ளத்தாக்கு (Po valley) வழியாக.

கிழக்கே, டான்யூப் பள்ளத்தாக்கு (Danube valley) வழியாகவும், கடல் மார்க்கமாகக் கான்ஸ்டாண்டிநோபிலுக்கும் (Constantinople), கருங் கடலுக்கும் (Black Sea).

வடக்கே, ப்ரென்னர் கணவாயைத் தாண்டி, ரைன் பள்ளத்தாக்கு வழியாக.

ஜிப்ரால்டர் ஜலசந்தியைத் தாண்டி (Strait of Gibraltar) ஆங்கிலக் கால்வாய்க்கும் ஹாலந்துக்கும்.

கீழை நாடுகளுக்கு (Orient): (அ) லிவான்ட் (Levant) வழியாக, சிரியா (Syria), மெசபொடேமியாவைத் (Mesopotamia) தாண்டி, பாரசீக வளைகுடா (Persion gulf) மூலம் இந்தியாவுக்கு; (ஆ) அலெக்ஸாண்டிரியா (Alexandria) போய், எகிப்து (Egypt) வழியாகச் சென்று செங்கடலைக் (Red Sea) கடந்து இந்தியாவுக்கு.

[2] முக்கியமாக, சௌதாம்ப்டன் (Southampton), சாண்ட்விச் (Sandwich) மற்றும் லண்டனுக்கு.

[3] மூன்றாம் ஹென்ரியின் ஆட்சிக் காலத்தினின்று ஆதார அங்காடி முறை நடந்தது.

(staple commodities) வெளிநாட்டு வாணிபம் நடக்கும் கேந்திரங்களாக நியமிக்கப்பட்ட அங்காடி இது. இவற்றுள் உரோமம்தான் மிக முக்கியமானது ; ஆதாரப் பண்டம் (The staple commodity) என்றே அது சாதாரணமாகக் கூறப்பட்டது. பல்வேறு சமயங்களில் ஆன்ட்வர்ப் (Antwerp), ப்ருஜஸ் (Bruges), செயின்ட் ஓமர் (St. Omer) போன்ற பல்வேறு நகரங்களில் ஆதார அங்காடி நியமிக்கப்பட்டது. மூன்ரும் எட்வர்டு மன்னன் ஆதார அங்காடி அமைக்கும் முறையில் பல மாறுதல்கள் செய்தான். ஒரு சமயம் பல ஆங்கில நகரங்களை ஆதார அங்காடிகளாக நியமித்தான். மறுபடி இங்கிலாந்துக்கு வெளியே ஆதார அங்காடி அமைக்கப்பட்டது. இறுதியில் அது கலேயில் (Calais) அமைந்தது. 1348-ல் ஈயத்துக்கும் வெள்ளீயத்துக்கும், 1363-ல் உரோமத்துக்கும் இவ்வூர் ஆதார அங்காடி ஆயிற்று. வேறு பல மாறுதல்கள் செய்யப்பட்டபோது கலே நகரம் 1399-லிருந்து 1558-ல் அதை இங்கிலாந்து இழக்கும் வரை ஆதார அங்காடியாக விளங்கியது.

இடைக் காலப் பொருளாதாரக் கொள்கைக்கு வெளிநாட்டு வாணிபக் கட்டுப்பாடு இசைந்ததே. அங்கீகரிக்கப்பட்ட வழிகளில் வாணிபம் முழுவதும் செல்வதனுல், பல நன்மைகள் எதிர்பார்க்கப் பட்டன. அதனுல், கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்து நன்கு பாதுகாப்பளிக்கவும், எளிதில் கடற் சுங்க வரிகளை வசூலிக்கவும் முடிந்தது. தவிர, ஒரே இடத்தில் விற்பவர்களும் வாங்குபவர்களும் கூடினுல், விலைகள் ஸ்திரமாக இருக்கும். இடைக் காலத்தில் விலைகள் ஸ்திரமாக இருப்பது மிக அவசியமாகக் கருதப்பட்டது. ஆதார அங்காடியை இடத்துக்கு இடம் மாற்றுவது ஓரளவு அரசியல் விவகாரங்களைப்பொறுத்த கொள்கையாக இருந்தது. எனினும், எது மிக நல்ல இடம் என்று தெரியாமல் இருந்தது என்பதையும் அது குறிக்கிறது. இறுதியில், கலே நகரைத் தேர்ந்தெடுத்தது இரு மாறுபட்ட நோக்கங்களுக்குச் சமரசமாக அமைந்தது எனலாம். கலே, ஐரோப்பியக் கண்டத்தில் இருந்தது. இங்கிலாந்துக்கு வெளியே ஆதார அங்காடி இருந்தால்தான் ஆங்கிலக் கப்பல் தொழில் வளரும். அதே சமயம் கலே ஆங்கில ஆட்சியின்கீழ் இருந்தது. எனவே, வாணிபத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் முடியும். கோட்டைப் பாதுகாப்புக்கான செலவையும் சுங்கத்தினின்று ஈடு கட்டலாம் ; அச் செலவை அரசாங்கக் கஜானுவிலிருந்து எடுக்க முடியாது.

ஆதாரப் பொருள்களை ஏற்றுமதி செய்த ஆங்கில வணிகர்களே ஆதார அங்காடியின் வியாபாரிகள் (The Merchants of the Staple),

வெளிநாட்டாருக்கு ஆதார அங்காடி நகரில் அவர்கள் அப் பொருள்களை விற்றனர். ஒரே பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் சங்கம் ஒன்று அமைத்துக்கொள்வது இயல்பே. அரசாங்கத்துக்கும் அதை ஆதரிப்பது நன்மை பயக்கும் என்பது தெளிவு. மூன்றும் எட்வர்டின் ஆட்சி காலம் வரும்போது ஆதாரத்தாரின் (Staplers) சங்கம் திட்டமாக அமைக்கப்பட்டுவிட்டது. முதலில், அவர்கள் எண்ணிக்கை அதிகமாக இல்லை. ஆனால், அடிப்படையில் அது முற்றுரிமைச் சங்கம் அல்ல. புதிதாக வாணிபத்தில் ஈடுபடும் எந்த ஆங்கில வியாபாரிக்கும் அதில் சேருவதில் கஷ்டம் ஏதும் இருக்கவில்லை என்று தோன்றுகிறது.

பதின்மூன்றும் நூற்றுண்டிலேயே துணிகர வியாபாரிகள் சங்கம் (The Merchant Adventurers) தோன்றியிருந்தது.[1] மூன்றும் எட்வர்டின் ஆட்சியின்போது ஆதாரத்தாரைப் போல இவர்களது சங்கமும் திட்டமாக அமைக்கப்பட்டுவிட்டது. கொஞ்ச காலத்துக்காவது இவர்கள் சங்கங்கள் பல தனித்தனியாக இருந்தன. வட ஜெர்மனியுடன் வியாபாரம் செய்த லண்டன் நகரத் துணிகர வியாபாரிகள் சங்கம்[2] 1404-ல் நான்காம் ஹென்ரியிடம் பட்டயம் பெற்றது. ஸ்காண்டிநேவியாவுடன் வியாபாரம் செய்த அதன் துணைச் சங்கம் ஒன்று, 1408-ல் தன் பட்டயத்தைப் பெற்றது. நியூகாஸிலில் (New castle), பிரிஸ்டல் (Bristol), யார்க் (York) போன்ற நகரங்களின் துணிகர வியாபாரிகள் தனித்தனியாக, ஆனால், ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய சங்கங்களை அமைத்திருந்தனர். ஆனால், அவை லண்டன் கம்பெனியின் (London Company) வெறும் மாகிலக் கிளைகள் என்று கூறுவது தவருகலாம்.

பின்னல் தோன்றிய துணிகர வியாபாரிகளின் சங்கம் 1505-ல் ஏழாம் ஹென்ரி அளித்த பட்டயத்தின் அடிப்படையில் அமைந்தது. அவர்களுக்குத் தலைவர் ஒரு கவர்னர். அவருக்கு உதவ இருபத்து நான்குபேர் கொண்ட உதவியாளர் மன்றம் இருந்தது. அதன் உள் அமைப்பு கில்டுகளைப் போன்றுதான் இருந்தது. சாதாரணமாக, உறுப்பினராவதற்கு யோக்கியதாம்சம் பயிற்சி பெறுவதுதான். அது

[1] அவை எப்போது முதலில் தோன்றின என்பதைத் திட்டமாகக் கூற முடியவில்லை.

[2] லண்டன் மெர்சர்ஸ் கில்டி (London Mercers' Gild)லிருந்து துணிகர வியாபாரிகள் சங்கம் தோன்றியிருக்கலாம். அச்சிடுபவரான வில்லியம் காக்ஸ்டன் (William Caxton) துணிகர வியாபாரிகள் சங்க கவர்னராக (Governor) இருந்தார். அவர் துணி வணிகராகப் (Mercer) பயிற்சி பெற்றவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒரு கட்டுப்பாடு விதித்த கம்பெனி (regulated company);[1] அது தானே வாணிபத்தில் ஈடுபடவில்லை. அதன் உறுப்பினர்கள் தனியாகவோ, கூட்டு நிறுவனங்களாகவோ வியாபாரம் செய்தனர். தாம் ஈடுபட்ட வியாபாரத்தின் இலாப நஷ்டங்களைத் தாமே அனுபவித்தனர். அனைவரும் கம்பெனியின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டும். கம்பெனி பெற்ற சலுகைகளை அனைவரும் பெற்றனர். 1564-ல் எலிசபெத் அரசி துணிகர வியாபாரிகளுக்கு மற்றொரு பட்டயமளித்தாள். அதன்படி எட்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்கள், உறுப்பினர்களின் பிள்ளைகள், அல்லது மிகையான ஒரு நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தியவர்கள் இவர்கள் மட்டுமே அச் சங்கத்தில் சேர முடியும்.

ஹேன்ஸ் வணிகர்கள் இங்கிலாந்தில் பெற்ற மாதிரியே துணிகர வியாபாரிகள் வெளி நாடுகளில் சலுகைகளைப் பெற்றுப் பண்டக சாலைகள் அமைத்தனர். சில காலம் ப்ரூஜஸில் (Bruges) கூட அவர்கள் தொழில் நடத்தினார்கள்; ஆனால், வெனிஸ் வணிகர்களின் விரோதம் காரணமாக ஆன்ட்வர்ப்புக்கு (Antwerp) தம் பண்டக சாலையை மாற்றிக்கொண்டனர். அந் நகரம் கம்பளித் துணிக்கு ஆதார ஆங்காடி ஆயிற்று. அதனால், அதன் செல்வம் பெருகியது. பதினாறும் நூற்றாண்டில் போர்த்துகீசிய வணிகர்கள் ஆன்ட்வர்ப்பில் கீழ்நாட்டு விளைச்சல்களை விற்கப் பண்டகசாலை அமைத்திருந்தனர். இவ் வணிகர்கள் துணிகர வியாபாரிகளினின்று பெரும் அளவில் ஆங்கிலத் துணியை வாங்கிக் கீழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். 1444-லிருந்து 1564 வரை துணிகர வியாபாரிகள் ஆன்ட்வர்ப்பில் தொழில் நடத்தினர். 1567-ல் அவர்கள் ஹாம்பர்க் (Hamburg) நகரத்துக்கு வரவழைக்கப்பட்டனர். அங்கிருந்த ஹேன்ஸ் வணிகர்கள் 1578-ல் வெளியேற்றப்பட்டனர். வேறு பல சமயங்களில் அவர்கள் எம்டெனிலும் (Emden), ஸ்டேடிலும் (Stade) பண்டக சாலை நடத்தினர். 1611-ல் மறுபடி ஹாம்பர்க்கில் குடியேறினர். 1806-ல் நெபோலியன் (Napoleon), ஐரோப்பியக் கண்ட முறை (Continental System) செயலாற்றப்படும் வரை அவர்கள் வெளியேற்றப்படவில்லை. 1688-9-ல் தோன்றிய புரட்சியால் அவர்களது ஆங்கில முற்றுரிமை ஒழிக்கப்பட்டது.

துணிகர வியாபாரிகள் ஆங்கிலக் கம்பளித் துணி ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் சிலரது வியாபாரம் குறிப்பிடுமாறு

[1] அதிகாரம் 9 பார்க்கவும்.

பெருகியிருந்தது. கில்டு வணிகர்களின் உள்நாட்டு வாணிபத்திற்குத் தேவையானதைவிடப் பன்மடங்கு அதிகமாக மூலதனம் இதற்குத் தேவைப்பட்டது. பல துணிகர வியாபாரிகளிடம் நிறைய மூலதனம் இருந்தது என்பது உண்மை. ஆனால், எப்படி இப் பணம் சேர்ந்தது என்பதை ஆராய்வது சுவையாக இருக்கும். இதற்குப் பல யூகங்கள் செய்யப்பட்டுள்ளன. உள்நாட்டு வணிகத்தின் இலாபத்திலிருந்து சேமித்த தொகையே துணிகர வியாபாரிகள் மூலதனமாக அமைந்திருக்கலாம்.

பதினைந்தாம் நூற்றுண்டின்போது துணிகர வியாபாரிகளுக்கும் ஆதாரத்தாருக்கும் தகராறு விளைந்தது. ஆதாரத்தார் சிலர் துணி ஏற்றுமதி செய்தனர். இது துணிகர வியாபாரிகளின் முற்றுரிமையை மீறியது. எனவே, அவர்கள் செலுத்திவந்த அபராதத்தை (நுழைவுக் கட்டணம்) ஆதாரத்தாரும் கட்டவேண்டும் என்று அவர்கள் கூறினர். உரோமத்தை ஏற்றுமதி செய்யத் தாம் பெற்றிருந்த உரிமை, துணி ஏற்றுமதிக்கும் பொருந்தும் என்று ஆதாரத்தார் விடையளித்தனர். ஆனால், கடைசியில் துணிகர வியாபாரிகள் வெற்றி பெற்றனர். ஏனெனில், அவர்கள் ஆதாரத்தாரைவிடச் சக்தி வாய்ந்திருந்தனர்; ஆதாரத்தார் சங்கம் தேய்ந்துகொண்டு வந்தது. அதற்குக் காரணம், இங்கிலாந்தில் கம்பளித் துணி உற்பத்தி பெருகியதும் உரோம ஏற்றுமதி குறைந்துவந்ததும்தான்.

இதைவிட அதிகமான விரோதம் துணிகர வியாபாரிகளுக்கும் ஹேன்ஸ் வணிகர்களுக்கும் இடையே ஏற்பட்டது. ஹேன்ஸ் வணிகர்கள் இங்கிலாந்தில் பெற்றதுபோன்ற சலுகைகளை ஆங்கில வணிகர்கள் ஜெர்மானிய நகரங்களில் முயன்று பெற்றனர். இப் போட்டியாளர்கள் பால்டிக் நாடுகளில் வேரூன்றிவிடுவார்களோ என்று ஹேன்ஸ் வணிகர்கள் பயந்தனர். இதுவே விரோதத்துக்குக் காரணம். லண்டனில் இருந்த ஹேன்ஸ் வணிகர்கள் பழிவாங்கப் படுவர் என்ற பயமுறுத்தலின் விளைவாக இருவருக்குமிடையே ஒப்பந்தங்கள் உண்டாயின. ஆனால், அவை பெருந்தன்மையுடன் கடைப்பிடிக்கப்படவில்லை. 1468-ல் இங்கில்ாந்தில் ஹேன்ஸ் வணிகர்கள் பெற்றிருந்த சலுகைகள் தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன. ஆனால், மேலே கூறியபடி, ஆங்கில வணிகர்களும் வெளிநாடுகளில் நன்கு நடத்தப்படுவர் என்ற வாக்குறுதியின்பேரில் 1474-ல் அவை மீண்டும் அளிக்கப்பட்டன. எனினும், புகார்கள் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தன. முதல் இரண்டு டியூடர் மன்னர்களும் ஹேன்ஸ் வணிகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தபோதும், ஆரும்

எட்வர்ட் 1553-ல் மறுபடியும் அவர்கள் சலுகைகளை நிறுத்திவைத்தார். மேரி அரசி மீண்டும் ஒருசில சலுகைகளை மட்டும் அளித்தாள். ஆனால், அவர்களது இறுதி நாள் நெருங்கிவிட்டது. 1578-ல் இறுதியாக லண்டனிலிருந்த ஜெர்மானிய வணிகர்களின் சலுகைகளை எலிசபெத் அரசி ஒழித்துவிட்டாள். இந் நீண்ட பூசல் இவ்வாறு முடிந்தது; நிச்சயமாக ஏற்படக்கூடியவாறு ஆங்கில வணிகர்களுக்கு வெற்றி கிட்டியது. 1597-ல் ஸ்டீல்யார்டு மூடப்பட்டதும் ஆங்கில வியாபாரத்தை அயல் நாட்டார் நிர்வகித்தது அடியோடு நின்றது.

7. பதினாறும் நூற்றாண்டில் விவசாயப் புரட்சி

(The Agrarian Revolution of the Sixteenth Century)

இடைக்காலம் முடிந்து நவீன காலம் வந்தபோது கிராமப் பொருளாதார அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இவை விவசாயத்தை அடியோடு மாற்றியதால் இவற்றை 'விவசாயப் புரட்சி' என்று கூறுவது தவறாகாது. இதன் ஓர் இயல்பான நிலம் அடைக்கும் (வேலியிடும்) இயக்கத்தைப் (enclosure movement) பற்றி மேனர் முறையின் வீழ்ச்சியை விவரிக்கும்போது குறிப்பிடப் பட்டது. இவ் அதிகாரத்தில் இதைப்பற்றி விவரமாகக் கூறப்படும். பதினாறும் நூற்றாண்டில்– அதைவிடப் பதினைந்தாம் நூற்றாண்டின் இடையிலிருந்து பதினாறுவதன் முடிவு வரை எனலாம்—ஏற்பட்ட விவசாயப் புரட்சியினால் கிராமப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்களை நில அடைப்பு இயக்கத்தை மட்டும் ஆராய்ந்து, அதன் அடிப்படையில் அளவிடக்கூடாது. இம் மாறுதல்கள் அதைவிடப் பரந்தவையாகவும் ஆழ்ந்தவையாகவும் இருந்தன. மனித சமுதாயத்தின் பொதுநோக்கையே அப்போது ஏற்பட்ட சக்திகள் மாற்றிவிட்டன.

இடைக் கால வாழ்க்கை, கூட்டுறவு, மக்கள் அனைவரும் சேர்ந்து உழைப்பது போன்ற கொள்கைகளின் அடிப்படையிலேயே பெரிதும் இருந்தது. அநேகமாக எல்லாத் துறைகளிலும் ஒருவன் ஒரு கூட்டத்தின் பகுதியாகத்தான் இருந்தான். அதற்கு அடங்கியும், அதற்கு உண்மையாகவும் அவன் நடக்கவேண்டியிருந்தது. சமயத் துறையில் மக்கள் அனைவரும் கத்தோலிக்கத் திருச்சபையைச் (Catholic Church) சேர்ந்தவர்கள். அவர்கள் தம் விதிகளுக்குக் கட்டுப்படுவார்கள்.

தாம் சொல்லிக் கொடுத்ததில் நம்பிக்கை வைப்பார்கள் என்று திருச்சபை எதிர்பார்த்தது. அவ்வாறு நடந்தால்தான் அவர்களுக்கு உய்வுண்டு என்று திருச்சபை மக்களிடம் கூறியது. கைவினைஞர்கள் தம் கில்டுகளில் அங்கம் வகித்தனர். தம் சொந்த நலனைவிடத் தம் கில்டின் நற்பெயரைக் காப்பதில் அதிக அக்கறை காட்டவேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கப்பட்டனர். வியாபாரிகள் வணிக கில்டில் உறுப்பினர். வெளி நாடு செல்லும் வணிகர்கள் இடைக் கால இறுதியில் தோன்றிய பல கம்பெனிகளில் ஏதாவதில் சேர்ந்திருக்கக் கூடும். மக்களில் பெரும்பாலோர் நிலத்தைப் பண்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். நிலமானியச் சமுதாய அமைப்பில் (feudal system) உயர்ந்ததோ தாழ்ந்ததோ ஓர் இடத்தை ஒவ்வொருவரும் வகித்தனர். வாழ்க்கைத் தொடர்புகள் அனைத்திலும் ஏதாவதொரு கில்டு அல்லது சங்கம் அல்லது வேறு அமைப்பிலே ஒவ்வொருவனும் ஒரு பகுதியாக இருந்தான். மக்களது இத்தகைய தொகுதி எந்தத் தனி மனிதனையும் விட முக்கியமாகக் கருதப்பட்டது. அவன் அத் தொகுதிக்குத் தலை பணிந்து வாழவேண்டியிருந்தது.

இடைக் காலம் கழிந்ததும் இச் சமுதாய நோக்கு மறையலாயிற்று. அவ் இடத்தைத் தனியாள் நோக்கு (individualation) ஆக்கிரமித்துக் கொண்டது; கில்டுகளும் மேனர்களும் வீழ்ச்சியடைந்தன; பிராட்டஸ்டென்டுகள் (Protestants) திருச்சபையின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள மறுத்தனர். தானே எண்ணிப்பார்க்கவும், அதன்படி நடக்கவும் மக்கள் அறிந்துகொண்டுவிட்டனர். தமக்காகவும் பிறருக்காகவும், தம்மைவிட அதிகமாகப் பிறருக்காகவும் கூட்டாகச் சேர்ந்து உழைத்து, அக் கூட்டமைப்பின் சிறு அலகுகளாக வாழ்வதில் அவர்கள் திருப்தி அடையவில்லை. தன் சொந்த நலனைப் பற்றிய கோரிக்கைகளை எடுத்துரைக்க அவர்கள் தயங்கவில்லை. கூட்டுறவு மனப்பான்மைக்குப் பதில் போட்டி மனப்பான்மை வளர்ந்தது. வழக்கத்தின் சக்தி மறைந்து அவ் இடத்தில் பணத்தின் சக்தி தழைத்தோங்கியது.

ரோஜா யுத்தங்களினால் (Wars of the Roses) பிரபுக்களின் வலிமை குன்றியதால் நாட்டில் அமைதி நிலவலாயிற்று. புதுத் தொழில்கள் தோன்றின. தொழில்கள் வளர்ந்தன; வாணிபம் பெருகியது; கப்பல் பயணங்கள் அதிகரித்தன; டியூடர் ஆட்சி முடியுமுன் உலகின் எல்லாக் கடல்களிலும் ஆங்கிலக் கப்பல்கள் ஓடின. நாட்டின் முக்கியத் தொழில் விவசாயமாகவே இருப்பினும், மக்களது கவனம் முழுதும் அதன்பால் இல்லை. இங்கிலாந்தின் பல

பொருளாதார நடவடிக்கைகளில் அதுவும் ஒன்று என்ற நிலை ஏற்பட்டது. பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்கள் தம் குடும்பத்திற்காக மட்டுமன்றி, நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவுப் பொருள் உற்பத்தி செய்தளித்தனர். இடைக் காலத்தின் இறுதியில் விவசாயப் பொருள்கள் அங்காடியில் விற்கப்பட்டன என்பதும், பதினாறும் நூற்றாண்டுக்குப் பின்னரும் உற்பத்தியில் ஒரு பகுதியை விவசாயிகள் பயன்படுத்தினர் என்பதும் உண்மை. ஆயினும், பொதுவாக, இடைக் காலத்தில் தானியங்கள் சொந்த உபயோகத்துக்காகப் பயிரிடப்பட்டன என்றும், பதினாறும் நூற்றாண்டுக்குப்பின் இலாபத்துக்காகப் பயிரிடப்பட்டன என்றும் கூறலாம்.

நிலங்களை ஒன்றுசேர்த்து வேலியிடும் இயக்கத்தைப்பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. உண்மையில் இவ் இயல்பையுடைய இரண்டு அல்லது மூன்று தனி இயக்கங்கள் நிகழ்ந்தன எனப் பாகுபடுத்திக் கூறலாம். இடைக் காலத்தின் பின் பகுதியில் சாகுபடி நிலங்களை ஒன்றாகச் சேர்க்கும் (consolidation) இயக்கம் ஒன்று தொடங்கியது. அது டியூடர் காலத்தில் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. சிதறிக் கிடந்த துண்டுகளின் சொந்தக்காரர்கள், தம் நிலங்களை ஒன்றுசேர்த்துச் சுற்றி வேலி வளர்த்துக்கொள்வதற்காக ஒருவர் துண்டுக்கு மற்றொன்றை மாற்றிக்கொள்ள ஒப்புக்கொள்ளலாம். சாதாரணமாக டிமீன் நிலமும், ஓரளவுக்கு வழக்கமான குடியானவர்களின் நிலமும் இவ்வாறு ஒன்றுசேர்க்கப்பட்டன. இவ்வாறு ஒன்றுசேர்த்து அமைக்கப்பட்ட நிலங்களின் அளவு மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. எனினும், சாகுபடி நிலங்களில் பெரும்பகுதி திறந்த வயல்களில் தொடர்ந்து இருந்துவந்தது. இவ்வியக்கம் பரவிய இடங்களில் வழக்கத்தின் கடுமை மறைந்தது. விவசாயத்தில் புத்தம் புது முறைகளைக் கையாள முடிந்தது. நிலங்கள் ஒன்றுசேர்க்கப்பட்டபோது, வயல்களைப் பெரிதாக்குவதற்காகச் சிறு குடியானவர்களின் நிலங்கள் வாங்கப்பட்டிருக்கலாம், அல்லது அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கலாம். ஒன்றுசேர்ந்த வயல்களின் சாகுபடிக்குச் சிதறிய துண்டுகளின் சாகுபடியைவிடக் குறைவாகவே வேலையாட்கள் அவசியமாதலின் சிலருக்கு வேலை போயிருக்கலாம். எனினும், பொதுவாக விவசாயத்தைச் சீர்படுத்த நிலங்கள் அடைக்கப்பட்டதனால் நன்மையே விளைந்தது என நிச்சயமாகக் கூறலாம்.

இதைவிடத் தீவிரமான விளைவுகள் மேய்ச்சல் தொழிலின் விஸ்தரிப்பினால் ஏற்பட்டது. முதலில் டிமீன் நிலம்தான் மேய்ச்சலுக்கு மாற்றப்பட்டது. பதினான்கு, பதினைந்தாவது நூற்றாண்டுகளில்

பொதுவாக நடந்ததுபோல், டிமீன் நிலங்கள் ஏற்கெனவே ஒன்று சேர்த்து வேலியிடப்பட்டிருந்த இடங்களில் கஷ்டமின்றி இம் மாற்றம் நிகழ்ந்தது. அதன் பின்னர் பொது மேய்ச்சல் நிலம், மேன ரின் 'பாழ் நிலங்கள்' இவற்றையும் பிரபுக்கள் அதனுடன் சேர்த்துக் கொண்டனர். சட்டப்படி தன் குடியானவர்களுக்குப் போதுமான அளவு பொது நிலங்களைப் பிரபு விட்டுவைக்கவேண்டும்;[1] ஆனால், போதுமான அளவு எது என்று நிர்ணயிப்பது அவரே. எப்படி இருப்பினும், இக் கடமையை அவர் மீது கட்டாயப்படுத்த வழி ஒன்றும் இல்லை. வழக்கமான குடியானவர்கள் பிறகு பாதிக்கப் பட்டனர். அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டு மேனரிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்;[2] அல்லது படிக்காரன் ஒருவன் இறந்தால் அவனது வாரிசானவன் செலுத்தவேண்டிய அபராதத் தொகை மிக அதிகமாக இருந்ததால், அவன் தன் நிலத்தைக் கைவிட்டு விட்டான்.[3] கடைசியாக, வெளியேற்ற முடியாத சொந்த நிலக் காரர்களின் நிலம் வாங்கப்பட்டு விட்டது.[4]

மேனர் பிரபுக்களுக்கு நேரிடையாகச் சொந்தமாக இருந்த நிலங் களில் மட்டுமன்றிப் பல குத்தகைக்காரர்களின் நிலத்திலும் மேய்ச் சல் நடந்தது. வாரத்துக்குப் பெரிய நிலங்களைக் குத்தகை எடுத்த பலர் சாகுபடியைவிட ஆடு மேய்ப்பது இலாபகரமானது என்பதை உணர்ந்துகொண்டனர். அவ்வாறு செய்வதைத் தடுக்க வழக்கத்தின் கட்டுப்பாடு ஏதும் இல்லை. வாரங்கள் போட்டி முறையில் நிர்ண யிக்கப்பட்டதால் நிலத்தினின்று எவ் வழியில் நல்ல வருவாய் கிடைக் குமோ அது கையாளப்பட்டது.

[1] மெர்ட்டன் சட்டம் திருவீரர்கள், சொந்த நிலக்காரர் இவர்களுக்காக மட்டும் வழிசெய்திருப்பினும், பின் ஆண்டுகளில் வழக்கமான குடியான வர்களுக்கும் இச் சட்டம் பொருந்தும் எனப் பொருள்கொள்ளப்பட்டது.

[2] சில படிக்காரர்கள் எப்போது வேண்டுமானாலும் வெளியேற்றப் படலாம்; வேறு சிலரின் உரிமை சில ஆண்டு காலத்துக்குச் செல்லும்; வேறு சிலர் மூன்று உயிர்களின் காலத்துக்கு உரிமைகொண்டிருந்தனர் (குறிப்பிடப்பட்ட மூவரில் கடைசியாக இறப்பவரின் மறைவுக்குப்பின் நில உரிமை முடிந்துவிடும்). வாரிசுகள் குறிப்பிட்ட நிலையான அபராதங் களைச் செலுத்தி நிலத்தை அடையலாம் என்ற உரிமையுடன் இருந்த படிக்காரக் குடியானவர்களைத்தான் வெளியேற்ற முடியாது.

[3] வழக்கமான குடியானவர்களிடம் அதிகப்படியான அபராதத் தொகை வசூலிப்பதினின்று 1781 வரை சட்டம் அவர்களுக்குப் பாது காப்பு அளிக்கவில்லை.

[4] வழக்கமான குடியானவர்களை எவ்வளவு தூரம் நீதிமன்றங்கள் பாதுகாத்தன என்பதுபற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. படிக்காரர் களின் உரிமையை பதினைந்தாம் நூற்றாண்டிலேயே சில நீதிமன்றங்கள் அங்கீகரித்தன. படிக்காரர்களின் உரிமைபற்றிய நிலைமை குடியானவ னுக்குக் குடியானவன் மாறுபட்டது. எல்லோரும் ஒரே மாதிரி உரிமை கொண்டிருந்தனர் என்று எண்ணுவதால்தான் தவறான கருத்துக்கள் தோன்றியிருக்கக்கூடும். பெரும்பாலும், இக் காலத்தில் படிக்காரர்கள் ஆதரவற்ற நிலையில் இருந்தனர்.

நிலங்களில் மேய்ச்சல் தொடங்கியபின் மேனர்களைவிட்டுப் பலர் வெளியேற நேர்ந்தது. முன்னரே கூறியபடி, சிலர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்; வேறு சிலர், பொது மேய்ச்சல் வெளிகளும் அடைக்கப்பட்ட பின், பழைய முறையில் வாழ்க்கை நடத்துவது இயலாது என்பதை அறிந்து வெளியேறினர். தாழ்ந்த அந்தஸ்தில் இருந்த கூலியாட்கள் பலர் வேலை வாய்ப்புகளை இழந்து வேலை நாடி மேனரைவிட்டு வெளியேறினர். இவ்வாறு கிராமப் புறங்களினின்று மக்கள் வெளியேறியது இவ் இயக்கத்தின் மிகக் கெட்ட விளைவுகளில் ஒன்றாகும்.

மேய்ச்சல் அதிகரித்ததன் விளைவு, சாகுபடியைத் தொடர்ந்து செய்த இடங்களிலும் உணரப்பட்டது. நிலத்தின் மதிப்பு உயர்ந்தது; வாரங்கள் உயரலாயின; படிக்காரர்களை (குறைந்த பட்சம் வாரிசுரிமையால் படிக்காரர்களை) அது பாதிக்கவில்லை. ஆனால், குத்தகைக்கு நிலம் எடுத்தவர்கள் தமது குத்தகைகளின் காலம் முடிந்ததும் நிலச் சொந்தக்காரர்கள் அதிக வாடகை கேட்டனர் அல்லது நிறைய அபராதம் செலுத்தினாலொழிய அவற்றைப் புதுப்பிக்க மறுத்தனர் என்பதை உணர்ந்துகொண்டனர். புது ஷரத்துக்களை இவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், வேறு குடியானவர்கள் நிலத்தைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர், அல்லது நிலச் சொந்தக்காரன் நிலத்தை மேய்ச்சலுக்குப் பயன்படுத்தி அதிக இலாபம் பெறக் கருதினான்.

கலந்த சாகுபடி அல்லது சாகுபடி மாற்ற முறை ஒன்று நாட்டின் சில பாகங்களில், முக்கியமாக, மிட்லண்ட் கவுன்டிகளில் (Midland counties) கையாளப்பட்டது. பண்ணை பல வயல்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் ஆறு, ஏழு ஆண்டுகளுக்குப் புல்லும், பின்னர் இரண்டு மூன்று வருஷங்களுக்குத் தானியங்களும் பயிரிடப்படும். இவ்வாறு, ஒன்பது, பத்து ஆண்டுகளுக் கொருமுறை பயிர்ச் சுழற்சி (rotation) ஏற்படுத்தப்பட்டது. இம் முறையைப் பெரிய நிலங்களில்தான் கையாள முடியும். அது வெற்றிகரமாக நடக்க நிறைய மூலதனமும் தேவை.

பதினாறும் நூற்றாண்டில் நிலச் சொந்தக்காரர்கள் அப்போது இருந்த சூழ்நிலையைப் பயன்படுத்திப் பேராசையுடன் அதிக வாரம் கேட்பதற்காகக் கண்டிக்கப்பட்டனர். ஆனால், வாரங்கள் உயர்ந்ததற்கு இவர்களது பேராசைமட்டும் காரணமல்ல. டியூடர் ஆட்சிக் காலத்தில் விலைவாசிகள் ஏறுமுகமாக இருந்தன. அமெரிக்காவிலிருந்து விடாது பொன்னும், வெள்ளியும் இறக்குமதியாகி ஐரோப்பா

முழுதும் பணத்தின் அளவு அதனால் பெருகியதும், விலைகள் மெது வாக, ஆனால் தொடர்ச்சியாக ஏறத் தொடங்கின. இவ் விலையேற்றம் பிற நாடுகளில்போல் இங்கிலாந்திலும் ஏற்பட்டது. எட்டாம் ஹென்றி நாணயத்தின் பொன் அளவைக் குறைத்ததனாலும் (debasement of coinage) விலைகள் உயர்ந்தன.[1] பிற மக்களைப் போல நிலம் உடையோரும் விலையேற்றம் காரணமாகத் தம் வருவாயின் வாங்கும் திறன் குறைந்ததைக் கண்டனர். எனவே, கூடுமானபோதெல்லாம் நில வாரத்தை அவர்கள் உயர்த்த முயன்றனர். தம் தானிய, உரோம உற்பத்திக்கு உயர்ந்த விலை பெறும் குடியானவர்கள், அதே சமயம் வாரம் மட்டும் உயரக்கூடாது என்று எதிர்பார்த்தது நியாயமற்றதே. படிக்காரர்களுக்கு மட்டும் இதனால் இலாபம் அடைய முடிந்தது; நிலச் சொந்தக்காரர்கள் குத்தகைக்காரர்களிடந்தான் வாரத்தை உயர்த்தி வருவாயைக் கூட்டிக்கொண்டனர்.[2] குத்தகைக்காரர், படிக்காரர் இருவருக்குமிடையே இருந்த இந்த வித்தியாசந்தான் இதைப்பற்றிய புகார்கள் நிறையவும் பலமாகவும் எழுந்ததற்குக் காரணமாகும்.

தம் மேனர்களை விட்டு வேலை தேடி வெளியேறியவர்கள் பிற இடங்களிலும் நிலைமை அதே போல மோசமாக இருக்கக் கண்டு, பிச்சை எடுக்கத் தொடங்கினர். மக்கள் நாடோடிகளாகத் திரிந்ததற்கு வேறு காரணங்களும் இருந்தன. முதல் டியூடர் மன்னர்களால் பிரபுக்களின் பரிவாரங்கள் கலைக்கப்பட்டதும் போரிடுவதன்றி, வேலை செய்வதறியாத மக்கள் பெரிய அளவில் நாட்டுப் புறங்களில் அலையலாயினர். மடங்கள் இருந்தவரை இந் நிலைமை மோசமாக இல்லை. கேட்ட அகதிகளுக்கெல்லாம் ரொட்டியும் மதுவும் பெரிய மடங்களின் பிச்சையளிக்கும் அதிகாரிகளும் (almoners), பிற மடத் தலைவர்களும் அளித்து வந்தனர். மடங்கள் ஒழிக்கப்பட்ட பின், அவற்றை அண்டி வாழ்ந்த பலர், ஏற்கெனவே திரிந்து வந்த நாடோடிகளின் எண்ணிக்கையை அதிகரித்தனர். இரவலர் பிரச்சினை மோசமாகி அதைச் சமாளிக்க அரசாங்கம் சில திட்டங்களை மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

டியூடர் காலத்தின் மத்தியில் ஏழைகளின் அதிருப்தி காரணமாகச் சில புரட்சிகள் நடந்தன. ஒரு புரட்சியின் காரணங்களைச் சுலபமாக எடுத்துக் கூறிவிட முடியாது. புரட்சிகளைத் துவக்கியவர்களின் குறிக்கோள் என்னவாயிருப்பினும், அதிருப்தியில் ஆழ்ந்த மக்களை புரட்சி

[1] 31-ம் அதிகாரத்தைப் பார்க்கவும்.
[2] சில படிக்காரர்கள், தம் படிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டுக் குத்தகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தூண்டப்பட்டார்கள்.

யில் கலந்துகொள்ளத் தூண்டுவது கடினமாக இல்லை. கெட்டின் புரட்சி (Kett's rebellion) 1549-ல் நார்ஃபக் (Norfolk) மாவட்டத்தில் நடந்தது. வேலியிடல் விஸ்தரிக்கப்பட்டது; மேய்ச்சல் தொழில் வளர்ந்தது; வாரங்கள் உயர்த்தப்பட்டன ஆகியவையே இப் புரட்சிக்குக் காரணம். 1536-ல் நடந்த அருள் நாடிய யாத்திரைப் புரட்சி (Pilgrimage of Grace) சிறு மடங்களை ஒழித்ததனாலும், 1549-ல் நடந்த மேனாட்டுப் புரட்சி (Western revolt) முதல் பொது வழிபாட்டு நூலை (First Book of Common Prayer) எதிர்த்தும் நடந்தவையாயினும், இவ்விரண்டிலும் விவசாயிகளின் அதிருப்தி புரட்சியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவியது என்பதில் ஐயமில்லை.

நில அடைப்பு இயக்கமானது அரசாங்கத்தின் கவனத்தைக் கவராமற் போகவில்லை. சாகுபடி நிலத்தை மேய்ச்சலுக்குப் பயன்படுத்துவதை டியூடர் மன்னர்கள் விரும்பவில்லை. இதுபற்றிப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. 1487-ல் வைட் தீவில் (Isle of Wight) மேய்ச்சல் காரணமாக மக்கள் வெளியேறியதால், அதை எதிரிகளினின்று பாதுகாக்கப் போதுமான மக்கள் தொகை இல்லை என்ற காரணத்தால் மேய்ச்சல் தொழிலைப் பரப்பக்கூடாது என்று ஒரு சட்டம் வந்தது. 1489-ல் நாட்டின் எந்தப் பகுதியிலும் மேலும் சாகுபடி நிலங்களை மேய்ச்சலிடமாக்குவது மற்றொரு சட்டத்தினால் தடுக்கப்பட்டது. மற்றுமொரு சட்டம் புதிதாக மாறிய மேய்ச்சல் வெளிகளை மறுபடியும் சாகுபடிக்குப் பயன்படுத்தவேண்டும் என்று கூறியது. இந்தக் கட்டுப்பாட்டினின்று தப்ப வயலில் ஒரு மூலையினின்று மற்றொரு மூலைக்கு ஒரு ஏர்க்கால் உழுதுவைத்தால் போதும்; நிலம் ஏரடியில் (under the plough) திரும்ப வந்துவிட்டது எனக் கூறிவிடலாம். மற்றொரு வகையில் இப் பிரச்சினைக்கு ஒரு முடிவுண்டாக்க முயற்சி செய்யப்பட்டது. எந்த ஒருவனும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல் (2,000) ஆடுகள் வைத்திருக்கக்கூடாது என்று சட்டமியற்றப்பட்டது. இச் சட்டத்தினின்று தப்ப மந்தையில் சில பகுதிகள் குடும்பத்தில் உள்ள பிறருக்குச் சொந்தம் என்று கூற முடிந்தது. எப்படியும், இச் சட்டங்களை அமல் செய்யச் சரியான நிர்வாக அமைப்பு இல்லை. இச் சட்டங்களை செயலாற்ற வேண்டியவர்கள் அமைதி காக்கும் நீதிபதிகள். இச் சட்டங்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு எதிரானவை. இந் நீதிபதிகளோ நிலச் சொந்தக்காரர்கள். எனவே, அவர்களே அவற்றைப் பல முறை மீறினர்.[1]

[1] 1549-ல் பொதுநல உரையில் (Discourse of the Common Weal) மேய்ச்சலின் இலாபத்தின் அளவுக்கு விவசாயத்திலும் இலாபம் ஏற்படச்

மடங்கள் ஒழிக்கப்பட்டதில் பொருளாதார விளைவுகளும் மிக முக்கியமானவை. நாட்டில் உள்ள நிலங்களில் பெரியதொரு பகுதி-மூன்றிலொரு பங்கு இருக்கலாம் — சில ஆண்டு காலத்தில் கை மாறியது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மடத்தார் கையில் இருந்த மேனர் நிலங்கள் சமய அமைப்புகளைச் சேராத சாதாரண மக்களின் கைக்கு மாறின. இப் புது நிலச் சொந்தக்காரர்கள் பலர் தம் நிலங்களை மற்றவர்களுக்கு விற்றனர். இதனால், இடைக் காலத்தைவிட அதிகமாக நில விற்பனை அதிகமாயிற்று.[1] மடத் துறவிகள் உழைப்பாளிகளல்ல; கஷ்டமற்ற வாழ்க்கையை விரும்பிய வர்கள். அவர்கள் முறைகளும் பழமையானவை. காலத்துக்கேற்ற வாறு அவர்கள் மாறவில்லை. ஏற்கெனவே கூறியபடி பிற இடங் களில் பல ஆண்டுகளாகக் கைவிடப்பட்ட முறையான தல அதி காரியின் பண்ணை நிர்வாகம் **(bailiff farming)** மடத்து நிலங்களில் மடங்கள் கலைக்கப்படும்வரை தொடர்ந்து நடந்தது. ஆனால், புதிதாக அந் நிலங்களைப் பெற்றவர்களது நோக்கம் வேறு. நிலத்தினின்று எவ்வளவு வருவாயைப் பெற முடியுமோ அவ்வளவையும் அவர்கள் பெற விரும்பினர். சில நிலங்களின் வாரங்கள் உயர்த்தப்பட்டன. சில மேய்ச்சலுக்கு விடப்பட்டன. வேறு சிலவற்றில் பழைய

செய்வதுதான் இப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று வற்புறுத்தப்பட்டது. தானிய ஏற்றுமதியின்மீதிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கி விடுமாறு யோசனை தெரிவிக்கப்பட்டது.

[1] எசெக்ஸில் பார்க்கிங் மேனரின் வரலாறு இதற்கு ஒரு நல்ல உதாரணம். டமீன் நிலம் போக இம் மேனரின் பிற நிலங்கள் அரசன் வசமிருந்தன. 1628-ல் முதலாம் சார்லஸ் அவற்றை சர் தாமஸ் பான்ஷாவுக்கு (Sir Thomas Fanshawe) விற்றார். ஆனால், டிமீனை பார்க்கிங் மடத்தின் இடம், வீடு இவற்றோடு எட்டாம் ஹென்றி சர் தாமஸ் டென்னிக்குக் (Sir Thomas Dennye) குத்தகை விட்டார். 1551, நவம்பர் 6ஆம் நாள் ஆறாம் எட்வர்டு அதைக் கிளிண்டன் பிரபுவான எட்வர்ட் பைன்ஸுக்குக் (Edward Fynes, Lord Clinton) குத்தகைக்கு விட்டார். அவர் அதை மறு நாள் சர் ரிச்சர்ட் சாக்வில்லுக்கு (Sir Richard Sackville) மாற்றினார். அடுத்த சில ஆண்டுகள் என்னவாயிற்று என்று தெளிவாகத் தெரிய வில்லை. நாளடைவில், ஜான் ஸ்டோனர்டின் (John Stonard) வசம் வந்தது. 1565-ல் அதை அவர் வில்லியம் அவெரிக்கு (William Avery) விற்றார். 1583-ல் ஜார்ஜ் ஹார்வி (George Harvey) அதைப் பீடர் பாம ருக்கு (Peter Palmer) விற்றார். பின்னர், அதை அரசாங்கம் மீண்டும் பெற்றுக்கொண்டது. 1605-ல் அதை முதலாம் ஜேம்ஸ் (James I) அகஸ்டஸ் (அல்லது அகஸ்டின்) ஸ்டூவர்டுக்கு [Augustus (or Augustine) Steward] அளித்தார். 1628-ல் அவர் மறைவுவரை அது அவர்வசம் இருந்தது. அவரது மகன் மார்ட்டின் ஸ்டுவர்டு (Martin Steward) அதை மாத்தியூ ஸ்டில்ட்டுக்கு (Matthew Stilte) விற்றதாகத் தோன்றுகிறது. அதை அவர் 1631-ல் வில்லியம் பான்ஷாவுக்கு (William Fanshawe) விற்றார். பான்ஷா குடும்பம் டிமீன், மேனரின் பிற பகுதிகள் இரண்டையும் பல ஆண்டுகள் வைத்திருந்தது.

டிமீனோடு மேனரை பார்க்கிங் மடம், 689-ல் தோன்றியது முதல் 1539-ல் கலைக்கப்பட்டதுவரை இடைவிடாது எண்ணூற்றைம்பது ஆண்டுகள் வைத்திருந்தது. அடுத்த நூறு ஆண்டுகளில் டிமீன் நிலம் ஆறேழு கைகளுக்குமேல் மாறிவிட்டது.

சலுகைகள் குடியானவர்களுக்கு மறுக்கப்பட்டன. அக் காலத்தில் வாழ்ந்தவர்களும் வரலாற்று ஆசிரியர்களும் அவர்களை இதற்காகக் கண்டித்துள்ளனர். அக் காலத்தின் தீய விளைவுகளுக்கு அவர்கள் மீது பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், எல்லாப் பழியையும் அவர்கள்மேல் சுமத்துவது நியாயமன்று. திருச்சபையைச் சேராத மேனர்களில் வெகு காலமாக நடந்துவந்த வழக்கங்களைத்தான் அவர்கள் கடைப்பிடித்தனர். தம் சொத்துக்களை அன்றைய நிலைக் கேற்றவாறு மாற்றுவதில்தான் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.[1]

விவசாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களை மிகைப்படுத்துவது எளிது. அக்காலத்து ஆசிரியர்கள் அவற்றை மிகைப்படுத்தியது உண்மையே.[2] மேய்ச்சலுக்காக வேலியிடப்பட்ட நிலங்களின் அளவு முன் எண்ணப்பட்டதைவிட மிகக் குறைவே என்று புள்ளி விவரங்களைச் சேர்த்ததில் தெரிந்தது. நாட்டின் முக்கியத் தொழில் சாகுபடியாகத்தான் இருந்தது. பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் கூடத் திறந்த வயல்களில்தான் சாகுபடி பெரும்பாலும் நடந்தது. வேலியிட்ட வயல்கள்தாம் விதிவிலக்குகள். மேய்ச்சல் இயக்கம் மிகவும் அதிகமாகிவிட்டதனால், எலிசபெத் அரசியின் காலத்தில் சில நிலங்களில் மேய்ச்சலை நிறுத்தி மீண்டும் பயிர்கள் விளைவிக்கப்பட்டன என்று எண்ண உண்மையில் இடமுள்ளது. ஆனால், இவற்றை யெல்லாம் ஒப்புக்கொண்டாலும், டியூடர் ஆட்சியில் விவசாயத்தில் முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன என்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். விவசாயத்தின் முறைகளிலும், அமைப்பிலும், குறிக் கோளிலும் ஏற்பட்ட இம் மாற்றங்கள் இடைக் காலம் மறைந்து நவீன காலம் தோன்றிவிட்டது என்பதைக் குறிப்பிடும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றவை எனலாம்.

[1] பல நிலங்கள் பணத்துக்கு விற்கப்பட்டன. நல்ல வருமானத்தைத் தரக்கூடிய முதலீடுகளாக நிலங்களை, அவற்றை வாங்கியவர்கள் கருதியதில் வியப்பில்லை.

[2] புரட்சிகள் தோன்றியதினின்று ஒரு தவறான கருத்து ஏற்படலாம். இன்று பொதுமக்கள் கருத்து பத்திரிகைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் எடுத்துரைக்கப்படுகிறது. தேர்தல் சமயங்களில் அதன் சக்தி தெரிகிறது. நானூறு ஆண்டுகளுக்கு முன் செய்தித் தாள்கள் இல்லை. பாராளுமன்றம் எப்போதாவதுதான் கூடிற்று. அதிலும் சாதாரண மனிதனுக்கு வாக்குரிமையில்லை. ஆகையால், அதிருப்தியைத் தெரிவிக்கும் ஒரே வழி புரட்சிதான்.

8. வர்த்தகத் தத்துவம் (மெர்க்கன்டலிசம்)

(Mercantilism)

இடைக் காலப் பொருளாதார வாழ்க்கையின் இயல்புகள் இந் நூலின் ஆரம்ப அதிகாரங்களில் விவரிக்கப்பட்டன. அவற்றை மீண்டும் சுருக்கமாக நினைவுபடுத்திக் கொள்வோம். விவசாயம், தொழில், வாணிபம் ஆகிய எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாடுகள் நிலவின; மக்கள் ஓர் அமைப்பின் சிறு பகுதிகளாகத் திட்டமிட்டனர், உழைத்தனர். மேனர், கில்டு அல்லது கம்பெனி ஆகியவை இவ் வமைப்புக்கள். மேனர் அல்லது நகரம் ஆகிய பிரதேசத்துக் குள்ளேயே பொருளாதார விவகாரங்கள் நடந்தன. நகரங்களுக்கு இடையிலும், நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலும், இங்கி லாந்துக்கும் வெளி நாடுகளுக்கும் இடையிலும் சிறிது வாணிபம் நடந்தது. அது ஒரு தீமை எனக் கருதப்படாவிட்டாலும், தல சுய தேவைப் பூர்த்தி அவ்வளவு நல்லதாக இல்லை என எண்ணப்பட்டது. தவிர, செல்வத்தைச் சேர்ப்பதே நோக்கமாக வாழ்வது இகழப்பட்டது; இடைக் காலப் பொருளாதார விவகாரங்கள் கிறித்துவச் சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பொறுத்து நடந்தன. அற வழிக்கும் பொருளாதாரத்துக்கும் இன்றுபோல அன்று தொடர்பற்றுப் போய்விடவில்லை.

அக் காலத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவு. மக்கள் பயணஞ்செய்வது அரிது. தேசீய மனப்பான்மை சிறிதும் அவர்கள் உள்ளத்திலே வளரவில்லை. இத்தகைய சூழ்நிலையில் மேற் கூறிய கோட்பாடுகள் நிலவியதில் வியப்பொன்றுமில்லை. மேற்கு ஐரோப்பா, மத்திய ஐரோப்பா நாடுகளிலிருந்த மக்கள், தாம் ஒரு தேசத்தவர் என்பதைவிடத் தாம் ஒரு கிறித்துவ சமயத்தைச் சேர்ந்தவர்

என்பதையும், தாம் திருச்சபையின் உறுப்பினர்கள், ரோமாபுரிக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதையும் பெரிதாக உணர்ந்தனர். அவர்கள் எந்த நாட்டவர்கள் என்பதை அவர்கள் அடியோடு உணராமல் இல்லை. ஆனால், அந்த எண்ணம் அவர்கள் உள்ளத்தில் மேற்பரப்பில் இல்லை. இடைக் காலச் சமுதாயத்தில் பிரிவுகள் 'படிமுறையாக அமையாமல் பக்கமுறையாக' அமைந்தன (horizontal rather than vertical). தங்களைத் திருவீரர்கள், வியாபாரிகள், பாதிரிகள், கைவினைஞர்கள், பண்ணையாட்கள் என்று எண்ணிக் கொண்டனரே தவிர, ஃபிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர், ஜெர்மானியர் என்ற பாகுபாடு அவர்கள் உள்ளத்தில் எழவில்லை. ரைன்லண்டைச் (Rhineland) சேர்ந்த ஒரு திருவீரனுக்கும், தன் பண்ணையாள் ஒருவனுக்கும் இருந்ததைவிட அதிகமாக அந்தத் திருவீரனுக்கும், காஸ்டைலைச் (Castile) சேர்ந்த மற்றொரு திருவீரனுக்கும் பொதுவான விஷயங்கள் இருந்தன ; கிழக்கு ஆங்கிலியாவின் (East Anglia) ஒரு பாதிரியும் இத்தாலியின் ஒரு பாதிரியும் தம்மைச் சுற்றியுள்ள சாதாரண மக்களிடம் கொண்டிருந்ததைவிட ஒருவருக்கொருவர் அதிக அனுதாபம் கொள்ளுவர்.

இடைக் காலத்தின் இறுதியில் தேசிய மனப்பான்மை கண்ணுக்குப் புலனாகத் தொடங்கியது. நூற்றாண்டுப் போரின் (Hundred Years War) முக்கிய விளைவு, ஆங்கிலேயர்களிடம் இவ்வுணர்ச்சியைத் தோற்றுவித்ததாகும். ஃபிரெஞ்சுக்காரர்களிடம் இம் மனப்பான்மை ஜோன் ஆப் ஆர்க்கின் (Joan of Arc) சாகசச் செயல்களுக்குப் பின் தோன்றியது. பதினைந்தாம் நூற்றாண்டில் 'மறு மலர்ச்சி' (Renaissance) ஏற்பட்டது. இங்கிலாந்தில் நில மானியப் பிரபுக்களின் ஆதிக்கம் வீழ்ந்தது. உலகத்தின் புதுப் பகுதிகள் கண்டுபிடிக்கப்படலாயின. சமயத் துறையில் 'சீர்திருத்தம்' (Reformation) ஏற்பட்டது. கிறித்துவ உலகின் பெரும் பகுதியில் தேசிய உணர்ச்சி வளர்ந்தது. அரசியலிலும், சமயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் தாம் தனித் தனியான அமைப்புக்கள் என்று உணர்ந்த நாடுகள் தோன்றியது, இடைக் காலம் போய் நவீன காலம் வந்ததைக் குறித்தது.

இவ்வாறு, தனிமை உணர்ச்சியுடன் வளர்ந்த ஒரு நாடு, அதே போலப் பிற நாடுகள் இருப்பதை உணர்ந்ததும், அவை தன் எதிரிகளாகக்கூடும் என்று கொள்ளலாயிற்று. தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்வதே ஒரு நாட்டின் குறிக்கோளாக இருந்தது. இந்த நோக்கத்துக்கு ஏற்றவாறு மக்களது எல்லா நடவடிக்கை

களையும் கட்டுப்படுத்தவேண்டியதாயிற்று. தனி மனிதனுடைய உரிமையாகப் பிற்காலத்தில் கருதப்பட்ட செயல் சுதந்திரம் (**freedom of action**) அரசின் தேவைக்கு அடங்கி நிலவவேண்டியதாயிற்று. நாடு முழுவதற்கும் நன்மை பயக்கக்கூடிய விஷயங்களுக்குமுன் தனிப்பட்டவருக்கு நன்மை செய்யக்கூடிய விஷயங்களுக்கு ஆதரவு அளிக்கப்படவில்லை. இடைக் காலத்தில் எல்லா விஷயங்களிலும் நிலவிவந்த மனப்பான்மையைப் போலத்தான் இதுவும் உள்ளது. ஆனால், மேனர் அல்லது கில்டின் நலத்தைப் பாராது நாடு முழுவதின் நலத்தையும் கருதியதுதான் இவ் இரண்டுக்குமுள்ள வேறுபாடாகும். அப்போதைய சூழ்நிலையில் நாட்டு நன்மைக்கு ஏற்றவாறு அரசியல், பொருளாதார விவகாரங்களை நடத்துவது மிகவும் அவசியமாக இருந்தது. அதிகார அமைப்பு வலிமை பெற்றிருந்ததால்தான் அது முடிந்தது. அப்போது அதிகாரத்தைச் செலுத்தியது முடி மன்னர்கள். சக்தி வாய்ந்த எதேச்சாதிகார மன்னர்கள் ஐரோப்பாவின் பல நாடுகளில் பதினாறிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலும் (சிலவற்றில் பத்தொன்பதாவதில்கூட) ஆண்டுவந்தனர்.

இவ்வாறு தோன்றிய முறையை இங்கிலாந்தில் மெர்க்கன்டலிசம் (**Mercantilism**) என்றழைத்தனர். அம் முறை நடந்துவந்தபோது இச் சொல் பொது வழக்கில் இல்லை. பல நூற்றாண்டுகளுக்குப் பின் இம் முறையின் குறிக்கோள்களை ஆய்ந்து, குறைகளை எடுத்துக்கூறி, பயன்களை மதிப்பிடும்போது அதற்கொரு பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். அக் காலத்தில் வாழ்ந்த மக்களுக்குக் குறிப்பான குறிக்கோள்களை உடைய ஒரு தனிப்பட்ட முறையாக நமக்குத் தோன்றுமளவுக்கு அது தோன்றியிராது; அதை அவர்கள் புதிதாக நினைத்திருக்க மாட்டார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில்தான் அதன் கொள்கைகளுக்கு எதிர்ப்பு உண்டாயிற்று.

மெர்க்கன்டலிச முறைப்படி இங்கிலாந்தைச் சக்தி வாய்ந்த நாடாக்குவதற்காக அதன் அரசியல், பொருளாதார விவகாரங்களைக் கட்டுப்படுத்தவேண்டியிருந்தது. முன்னரே கூறியபடி, நூறாண்டுப் போரின்போதே ஆங்கில மக்களுக்குத் தேசிய உணர்ச்சி தோன்றிவிட்டது; மூன்று எட்வர்டு மன்னர்கள் காலத்திலும் தலக் கட்டுப்பாடுகளுக்குப் பதில் தேசியக் கட்டுப்பாடுகள் தோன்றியிருந்தன. டியூடர் மன்னர்கள் உள் நாட்டில் செலுத்திய எதேச்சாதிகாரம், ரோம், ஸ்பெயின் ஆகிய வெளி நாடுகளின்மேல் எழுந்த எதிர்ப்பு இவை காரணமாக நாட்டில் முழுமையாகத் தேசிய உணர்ச்சி வளர்ந்திருந்தது. பதினாறு முதல் பதினெட்டாம் நூற்றாண்டுவரை நன்கு

நிலவிய மெர்க்கன்டலிசக் கொள்கை இத் தேசீய உணர்ச்சியின் ஒரு விளைவாகும். ஜார்ஜ் மன்னர்கள் காலம் வந்தபோது தேசீயக் கட்டுப்பாட்டின் நன்மைகளில் வெற்றி தோன்றலாயிற்று. தனியார் அக்கறைகள் நாட்டு நன்மைக்குமுன் முக்கியமாகக் கருதப்படலாகாது என்று அப்பொழுதும் கொள்ளப்பட்டது. ஆனால், தனியார் அக்கறையும், நாட்டின் அக்கறையும் விரோதமானவையாகத்தான் இருக்கவேண்டுமா? தனியார் தம்மை முழுவதும் அபிவிருத்தி செய்து கொள்ளும்போது நாட்டு நலனும் உச்ச நிலையடையாதா என்ற கேள்விகள் ஓரளவுக்குத் தோன்றி வந்தன. மெர்க்கன்டலிசக் கொள்கை அழிந்ததும் (சுதந்திர வாணிப) தலையிடாக் கொள்கை வெற்றிகொள்ளலாயிற்று. நாட்டின் வலிமை பெருகவேண்டும் என்ற கொள்கைக்குப் பதில், நாட்டில் உற்பத்தி பெருகவேண்டும் என்ற கொள்கை தோன்றியது.

நாட்டின் வலிமையைப் பெருக்கவேண்டும் என்ற மெர்க்கன்டலிசக் குறிக்கோளை அடையப் பல துறைகளில் அரசாங்க நடவடிக்கைகள் தேவைப்பட்டன. நாட்டின் வலிமைக்கு ஒரு முக்கிய காரணம், பெரிய, உடலுறுதி படைத்த மக்கள் தொகை. இங்கு விவரிக்கப்படும் காலத்தில் இக் குறிக்கோள் முற்றிலும் பூர்த்தியாகவில்லை; மருத்துவ அறிவு வளர்ந்திருக்கவில்லை; நோயற்ற வாழ்வு வாழ என்ன தேவை என்பதை மக்கள் அறியவில்லை. ஆனால், நகர வாழ்க்கையைவிட நாட்டுப்புறத்தில் வாழ்வதால் உடல் நலம் பெருகும் என்பது உணரப்பட்டது. மேய்ச்சலைப் போன்று கிராமப்புற மக்கள் தொகை வெளியேற்றத்துக்கு ஏதுவானவற்றை அரசாங்கம் தடுத்தது. விவசாயி வர்க்கம் நிலச் சாகுபடியில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பது மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டது. கோதுமை உற்பத்தியைவிட உரோம உற்பத்தி இலாபம் அதிகமே எனினும், நாட்டு நலத்துக்குமுன் தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களின் நலன் முக்கியமாகக் கருதப்படவில்லை.

மற்றொரு காரணத்துக்காகவும் மேய்ச்சலைவிடப் பயிர் விளைவித்தல் நல்லதெனக் கருதப்பட்டது. நாட்டு உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய, வெளி நாடுகளின் நல்லெண்ணத்தை நம்பியிருப்பது நல்லதல்ல. உணவு விஷயத்தில் தன் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இயலாத நாடு, தன் கப்பற்படை வலியதாக இருப்பினன்றிப் போர்க் காலங்களில் எதிரிகள் கையில் மிகவும் அவதிப்படும். வெளியிலிருந்து வரும் உணவை நம்பியிருக்கும் நாட்டை எதிரிகள் எளிதில் பட்டினி போட முடியும்.

வலிமை பெற்ற கப்பற் படையின் அவசியத்தை வர்த்தகத் தத்துவத்தை ஆதரித்தவர்கள் உணராமல் இல்லை. இங்கிலாந்தின் பூகோள அமைப்பும், அதைச் சுற்றி அரண்போலக் கடலும் அமைந்துள்ளமையால், எதிரிகள் கடலாதிக்கம் பெற்றுவிட்டிருந்தாலொழிய, ஐரோப்பாவிலிருந்து இங்கிலாந்தைத் தாக்க இயலாது. இடைக் காலத்தின் பிற்பகுதியில் இது நன்கு உணரப்பட்டது. டியூடர், ஸ்டூவர்ட் மன்னர்கள் நாட்டின் கப்பற் படையின் வலிமையைப் பெருக்கப் பல முயற்சிகள் எடுத்தனர். அப்போது வணிகக் கப்பல்களுக்கும், போர்க் கப்பல்களுக்கும் குறிப்பாக வேறுபாடு ஏதும் இல்லை; சில பீரங்கிகளை அமைப்பதன்மூலம் வணிகக் கப்பலைப் போர்க் கப்பலாக்கிவிடலாம். உண்மையில், சாதாரணமாகக் கடற் கொள்ளையர்களினின்று பாதுகாத்துக்கொள்ள வணிகக் கப்பல்களில் பீரங்கிகள் வைத்திருந்ததும் உண்டு. அரசாங்கம் அதற்கென்று தனியாகப் போர்க் கப்பல்கள் வைத்திருக்கவில்லை; அவ்வாறு, அவற்றைக் கட்டுவதற்கும் வைத்திருப்பதற்கும் மிகுந்த செலவாகியிருக்கும். ஆனால், 1381-லிருந்தே பல பாராளுமன்றச் சட்டங்கள்மூலம் வணிகக் கப்பல்கள் கட்டுவது ஊக்குவிக்கப்பட்டது. தேவைப்படும்போது நாட்டுப் பாதுகாப்புக்காக அரசன் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது அதன் நோக்கம். கப்பல் ஓட்டத் திறமையான மாலுமிகள் வேண்டுமல்லவா? அதற்காக ஆழ்கடலில் மீன் பிடிப்பதை அரசாங்கம் வளர்த்து மாலுமிகளுக்குப் பயிற்சி அளித்தது. கடற் படைக்குத் தேவையான பலவகைப் பொருள்களை உற்பத்தி செய்வதுபற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

இடைக் காலத்தில் இருந்தவாறு தொழில்களைத் தல அதிகாரிகள் கட்டுப்படுத்துவது நின்றது. அதை அரசாங்கமே மேற்கொண்டது. 1563-க்குப் பின் எலிசபெத்தின் தொழிற் கலைஞர்கள் சட்டத்தின் (Statute of Artificers) அடிப்படையில் இக் கட்டுப்பாடு நடந்தது. வேறு இடத்தில் இச் சட்டத்தைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. இவ் விஷயத்தில் மன்றம் (Council) அடிக்கடி வெளியிட்ட உத்தரவுகளை அமைதி நீதிபதிகள் (Justices of the Peace) நிறைவேற்றினர்.

வெளிநாட்டு வாணிபமும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. உள்நாட்டு வாணிபத்தைக் கட்டுப்படுத்துவது சுலபம். அதில் வாங்குபவர், விற்பவர், முதலாளி, தொழிலாளி ஆக இது சம்பந்தப்பட்ட அனைவரும் அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ளனர். ஆனால், தூர தேசங்களிலிருந்து வாணிபஞ் செய்யும் வெளிநாட்டார்மீது ஆங்கில அரசாங்கத்துக்கு ஆதிக்கம் இல்லை.

முற்றுரிமை பெற்ற பட்டயக் கம்பெனிகளை வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபடப் பணிப்பதன்மூலம் இக் கட்டுப்பாடு எளியதாயிற்று. மற்றொரு அதிகாரத்தில் இவ்வகைக் கம்பெனிகள் இங்கிலாந்தின் வாணிபத்தை வளர்த்ததைப்பற்றிப் பார்க்கலாம். வர்த்தகத் தத்துவத்துக்கும், வெளிநாட்டு வாணிபம், பொன்னின் அளிப்பு இவ்விரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை இங்குக் குறிப்பிட்டால் போதுமானது.

டியூடர், ஸ்டூவர்ட் காலங்களில் பொன், வெள்ளிபற்றிப் பொருளாதாரத் துறையினர் பெரிதும் கவனம் செலுத்தினர். வர்த்தகத் தத்துவத்தின்மீது அமைந்த கண்டனங்கள் பல, பொன், வெள்ளிக் கொள்கையைப்பற்றியதே. நாட்டின் பாதுகாப்புக்குக் கட்டியாகவோ நாணயமாகவோ போதுமான அளவு பொன்னும் வெள்ளியும் கையில் இருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. வேறெந்தப் பொருளையும் இவற்றைக்கொண்டு வாங்க முடியுமாதலின், போர் நடத்த இவை தேவைப்பட்டன. மெக்சிகோ (Mexico), பெரு (Peru) நாடுகளிலிருந்த வெள்ளிச் சுரங்கங்கள் ஸ்பெயின் (Spain) வசம் இருந்தன. ஆதலின், ஸ்பெயினிடம் இவ் உலோகங்கள் நிறைய இருந்தன. ஆண்டுக்கொரு முறை இச் சுரங்கங்களின் வருடாந்திர உற்பத்தியை ஏற்றிக்கொண்டு ஸ்பெயினுக்கு கப்பல் கூட்டம் ஒன்று வரும். இங்கிலாந்துக்குப் பொன், வெள்ளிச் சுரங்கங்கள் ஏதும் இல்லை. ஆதலின், வேறு வழிகளில் இவற்றைச் சம்பாதிக்க வேண்டியிருந்தது. பொன்னும் வெள்ளியும் ஏற்றுமதியாகாமல் தடுத்து, அவற்றின் இறக்குமதியை ஆதரிப்பதன்மூலம் இவற்றைச் சேர்க்கலாம் எனப் பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் பண்படாத ஒரு கருத்து நிலவியது. சட்ட விரோதமாக அவை ஏற்றுமதி செய்வதைக் கண்காணிக்க சரியான வழியில்லை. அதனால், கடும் தண்டனை விதிக்கப்பட்டாலும், பொன், வெள்ளி ஏற்றுமதியைத் தடுக்க இயலவில்லை என்பது அனுபவத்தினால் புலனாயிற்று. பொன்னும் வெள்ளியும் இயற்கையாகவே நாட்டுக்குள் வருமாறு வெளிநாட்டு வாணிபத்தைக் கட்டுப்படுத்தினால், இதைவிட நல்ல பலன் கிடைக்குமென்பது வர்த்தகத் தத்துவ வாதிகளின் கருத்து. இறக்குமதிகளுக்கு ஈடாக ஏற்றுமதிகள் அளிக்கப்படுகின்றன; இறக்குமதி மதிப்புக்கும் ஏற்றுமதி மதிப்புக்கும் உள்ள வித்தியாசத்தைத்தான் பொன்னாகக் கொடுக்கவேண்டும். ஏற்றுமதியின் மதிப்பு இறக்குமதியின் மதிப்பைவிட அதிகமாக இருந்தால், வாணிப நிலை இந் நாட்டுக்குச் சாதகமாக இருக்கும்; பொன் நாட்டுக்குள் வரும். சில

நாடுகளுடன் இங்கிலாந்தின் செலுத்து நிலை சாதகமாகவே இருந்தது. வேறு சிலவற்றுடன் அதன் செலுத்து நிலை பாதகமாக இருந்தது. வாணிபக் கட்டுப்பாட்டின் குறிக்கோள்களில் ஒன்று, முதல் வகை நாடுகளுடன் வாணிபத்தைப் பெருக்குவதும், இரண்டாவது வகை நாடுகளுடன் வாணிபத்தைக் குறைப்பதுமாகும். பதினேழாவது நூற்றூண்டு வரை ஒரு நாட்டுடன் இருந்த பாதகச் செலுத்து நிலையை விட, மிக அதிகமாக மற்றொன்றுடன் சாதகச் செலுத்து நிலை இருக்க முடியும் என்பது ஒப்புக்கொள்ளப்படவில்லை. இந்தியாவினின்று செய்த இறக்குமதியின் பெரும் பகுதிக்கு ஈடாகக் கிழக்கிந்தியக் கம்பெனி (East India Company) பொன்னோ, வெள்ளியோ செலுத்த வேண்டியிருந்தது; அதற்காக அது கண்டனத்துக்குள்ளாயிற்று. கொடுத்த விலைக்கு மிக அதிகமாகக் கீழை நாட்டுப் பொருள்களை ஐரோப்பாவில் விற்றதனுல், ஏற்றுமதி செய்வதைவிட அதிகமாகப் பொன் இறக்குமதி ஆயிற்று என்று கம்பெனியின் ஆதரவாளர்கள் எடுத்துரைத்த கருத்து அதற்கு நல்ல விடையாக அமைந்தது.

இன்றைய பொருளாதார அறிவின் அடிப்படையில் நோக்கினல், வர்த்தகத் தத்துவவாதிகள் பொன், வெள்ளி சேர்க்கச் செய்த முறைகளுக்கு ஆதரவு கிடைக்காது. முதலாவதாக, எல்லா நாடுகளும் தம் இறக்குமதியைவிட ஏற்றுமதியை அதிகரிக்க முனைந்தால் பன்னுட்டு வாணிபமே நடக்காது. மேலும், வர்த்தகத் தத்துவவாதிகள் வழியை விளைவாகக் கொண்டனர்; பொன், வெள்ளியின் வரவை ஏற்றுமதிகள் இறக்குமதியைவிடப் பெருகியதின் விளைவாக அவர்கள் கருதினரேயன்றி, அப் பொன் வெள்ளியின் இறக்குமதிக்காக அவர்கள் அம் மதிப்புக்கு, பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டியிருந்தது என்பதைக் கருதிப் பார்க்கவில்லை. தவிர, அக் காலத்தில் இவ் விலையுயர்ந்த உலோகங்கள் பணமாகப் பயன்பட்டன. தேவை அளிப்பு விதிகள், பிற பொருள்களைப் போலவே பொன், வெள்ளிக்கும் அவை எவ்வுருவிலிருப்பினும் பொருந்தும் என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. இவ் விதிகளின்படி, வேறு எதுவும் மாருதிருந்து நாட்டில் பொன், வெள்ளியின் அளவு மட்டும் அதிகரித்தால் அவற்றின் விலை, அதாவது மதிப்பு குறைந்தது. அதாவது பொன், வெள்ளியில் அளவிட்டால், பிற பொருள்களின் விலை உயர்ந்தது. விலைவாசிகள் உயர்ந்ததால், வெளிநாட்டு வணிகர்கள் இந்நாட்டுப் பொருள்களை அவ்வளவாக வாங்க விரும்பவில்லை. ஆனல், முன்னிலும் அதிகமாக இங்குப் பொருள்களை விற்க விரும்பினர். இதனுல், ஏற்றுமதி குறைந்து இறக்குமதி பெருகியது. வந்த பொன்

மறையலாயிற்று. எப்படிப் பொன், வெள்ளியைச் சேர்ப்பது? அவை நாணயமாதலின் விலை நிலவரத்தின்மீது அதன் விளைவு என்ன? என்ற விஷயங்களில் இருந்த தவருன கருத்துக்கள்தாம், ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைத்துக் கருவூலத்தைப் பெருகச் செய்யப்பட்ட அறிவுக்குப் புறம்பாக இப்போது கருதப்படும் முயற்சிகளுக்குக் காரணமாகும்.

வெவ்வேறு வகைப் பொருள்களின் வாணிபத்தினுல், நாட்டு நலன் விஷயத்தில் ஏற்படும் விளைவுகள் மாறுபடுகின்றன என்பதை வர்த்தகத் தத்துவவாதிகள் ஒப்புக்கொண்டனர். மூலப் பொருள்களை இறக்குமதி செய்தால், அவற்றை வைத்து ஆங்கிலத் தொழிற் கலைஞர்கள் வேறு பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யக் கூடும். அதன் விளைவாகச் செலுத்துநிலை சாதகமாவதோடு ஆங்கிலத் தொழிலும் வளருகிறது; எனவே, கச்சாப் பொருள் இறக்குமதியை ஆதரிக்கவேண்டும். வாணிப நிலையில் நல்ல விளைவு ஏற்படக் கூடுமாயினும், கச்சாப் பொருள் ஏற்றுமதி விரும்பப்படவில்லை; அப் பொருள்களைக்கொண்டு வேறு பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவேண்டும் எனக் கருதப்பட்டது.

வர்த்தகத் தத்துவக் கொள்கைகளுக்கு அனுசரணையாக இருந்தால் தான், ஆங்கிலேயர் வெளி நாடுகளில் குடியேறுவது அனுமதிக்கப் பட்டது. வெப்ப நிலை அல்லது வேறு காரணங்களால் இங்கிலாந்தில் சில பொருள்களை உற்பத்தி செய்ய முடியாது; ஆனுல், வேறு சூழ் நிலையிலுள்ள வேறு இடங்களில், அவற்றை நிறைய உற்பத்தி செய்ய முடியும். எனவே, குடியேற்றங்கள் அனுமதிக்கப்பட்டன. ஆனுல், குடியேற்றங்கள் வர்த்தகத் தத்துவக் கொள்கைப்படி கட்டுப்படுத்தப் பட்டால்தான் இதன் முழு இலாபமும் நாட்டைச் சாரும். எனவே, ஆங்கில அரசாங்கம் குடியேற்ற நாடுகளுடைய வியாபாரத்தின்மீது கட்டுப்பாடுகளை விதித்தது. இங்கிலாந்தில் விளையாத, ஆனுல் இங்கிலாந்துக்குத் தேவையான பொருள்களைக் குடியேற்ற நாடுகள் இங்கிலாந்துக்குத்தான் அனுப்பவேண்டும். அத்தகைய பொருள்கள் இதற்காகக் 'கணக்கிடப்பட்டன' (enumerated). (இங்கிலாந்துக்கு அவற்ருல் ஒரு பயனும் இல்லை என்பதற்காக) அவ்வாறு கணக்கிடப்படாத பொருள்களைக் குடியேற்ற நாடுகள் வேறு நாடுகளுக்கு விற்கலாம். ஆனுல், கணக்கிடப்பட்டவையாயினும் படாதவையாயினும் சரி, எந்தப் பொருளையும் ஆங்கில அல்லது குடியேற்ற நாடுகளின் கப்பல்களில்தான் அனுப்பவேண்டும்.

இம் முறைபற்றி வேறு இடத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பழைய குடியேற்றத் திட்டம் (Old Colonial System) என்று பெயர். இதன்படி குடியேற்ற நாடுகள் தம் விவகாரங்களைத் தாமே நடத்தும் வலிமை பெறும் அளவுக்கு வளர்ச்சியுறும் வரை தாய் நாட்டின் ஆதரவிலும் அரவணைப்பிலும் இருக்கவேண்டிய குழந்தைகள் எனக் கருதப்படாமல், பொருளாதார நோக்கப்படி அதற்கு அடங்கி நடக்கவேண்டிய புற ஸ்தலங்களாகக் (outpost) கருதப்பட்டன.[1] குடியேற்ற நாடுகளின் அக்கறை தாய் நாட்டின் அக்கறைக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று கூறியதற்காகப் பழைய குடியேற்றத் திட்டம் கண்டிக்கப்படுகிறது. ஆனால், அதுதான் மெர்க்கண்டலிசத்தின் அடிப்படைத் தத்துவமாகும். அதாவது, நாடு முழுவதின் நலனுக்குமுன் எந்த மனிதன் அல்லது மக்கள் தொகுதியின் நலனும் முக்கியமாகக் கருதப்படலாகாது. பழைய குடியேற்றத் திட்டத்தை ஆதரித்து வேறு சில காரணங்களையும் கூறலாம். இக் குடியேற்ற நாடுகளை அமைப்பதில் ஆங்கிலேயர்கள் நிறையச் செலவு செய்துள்ளனர். அந் நாடுகளோ பல ஆண்டுகளுக்கு அங்குச் செய்யப்பட்ட செலவுக்குத் தேவையான வருவாயைச் சம்பாதிக்கவில்லை. தவிர, அவற்றின் பாதுகாப்புத் தொடர்ந்து இங்கிலாந்தின் பொறுப்பாக இருந்துவந்தது. இக் காரணங்களால் இங்கிலாந்து தனக்கு இலாபகரமாகக் குடியேற்ற நாடுகளின் வியாபாரத்தை அமைக்க முயன்றது நியாயமே எனக் கூற முடியும்.

இன்றைய பொருளாதாரக் கோட்பாடுகளை உள்ளத்தில்கொண்டு மெர்க்கண்டலிசத்தை பலர் வன்மையாகக் கண்டித்துள்ளனர். எல்லா மக்களும் தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்ள முனைவதாகக் கொள்வோம். ஒவ்வொருவனும் தன் வீட்டைத் தானே கட்டிக்கொள்கிறான்; தனக்கு வேண்டிய உணவைத் தானே பயிரிட்டுக்கொள்கிறான்; தன் துணியைத் தானே நெய்துகொள்கிறான். இவ்வாறாயின், சமுகம் வளர்ச்சியே அற்ற பழைய நிலைக்குத் திரும்பி, மக்களது வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்துபோகும். ஆனால், மக்கள் தனித்தனித் தொழில்களில் ஈடுபட்டுத் தங்கள் பொருள்களையும் சேவைகளையும் பணத்துக்கு மாற்றிக்கொண்டால் அனைவரும் நன்கு வாழலாம். இதுதான் வேலைப் பகிர்வு (division of labour) என்பது. மக்கள் மட்டுமன்றி இடங்களும் நாடுகளுங்கூட வேலைப்

[1] பொருளாதாரத் துறையில் பழைய குடியேற்றத் திட்டத்தின்படித் தாய் நாட்டை நம்பியிருந்த குடியேற்ற நாடுகள், அதற்கு வித்தியாசமாக அரசியல் துறையில் சுதந்திரமாக இருந்தன. இவற்றுள் சிலவற்றின் அரசியல் நிலவரம், தாய் நாட்டைவிட முன்னேறியிருந்தது.

பகிர்வு செய்துகொள்ளலாம். ஒவ்வொரு தலமும் சில பொருள்கள் அல்லது சேவைகளையே உற்பத்தி செய்து, அத் தலங்களின் உபரி உற்பத்தி மாற்றிக்கொள்ளப்பட்டால் ஏற்படக்கூடிய நிலை, ஒவ்வொரு தலமும் தன் தேவையனைத்தையும் தானே பூர்த்தி செய்துகொள்ளும் நிலைமையைவிட எல்லோருக்கும் நல்லதாக இருக்கும். ஆனால், மெர்க்கண்டலிசம் நாட்டுச் சுய தேவைப் பூர்த்தியைக் குறிக்கோளாகக் கொண்டது; அதற்காகக் கண்டிக்கப்பட்டது.

இந்தக் கண்டனத்துக்கு விடையாக அக் காலத்துச் சூழ்நிலையைக் கருதிப் பார்க்கவேண்டும். நாடுகள் இருந்தன; அதே சமயம் பிற நாடுகள் இருந்ததை உணர்ந்தன; அவை எதிரிகளாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டன. பொருள் வளத்தைவிடப் பாதுகாப்பு முக்கியமாகக் கருதப்பட்டது. அடுத்திருந்த நாடுகள்மீது எந்த நாட்டுக்கும் நம்பிக்கையில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு உணர்ந்தால் மெர்க்கண்டலிசத்தைத் தவிர, அந்தக் காலத்தில் செயலாற்றக் கூடிய கொள்கை வேறொன்றும் இருந்திருக்க முடியாது என்பது புலப்படும்.

9. கம்பெனி வாணிபம்

(Company trading)

இடைக் காலத்தின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் வெளிநாட்டு வாணிபத்தை அநேகமாக அயல் நாட்டினரே நடத்தினர்; பதினாரும் நூற்றாண்டில் அதில் பெரும்பகுதி ஆங்கில வணிகர்களின் கைக்கு மாறியது. ஆங்கில வாணிபத்தை நடத்திய வெளிநாட்டு நிறுவனங்கள் கஷ்ட நஷ்டத்துக்கு உள்ளாயின. நன்னம்பிக்கை முனை வழியாக கீழை நாடுகளுக்குக் கடல்வழி கண்டுபிடிக்கப்பட்டபின், வெனிஸ் வணிகர்களுடன் போர்த்துகீசியர் போட்டியிட்டனர். இதுமட்டுமன்றி, துருக்கியர்களின் முன்னேற்றத்தால் கிறித்துவ உலகினுக்கு ஏற்பட்ட அபாயத்தைச் சமாளித்து ஒழிக்கவும் வெனிஸ் உதவிபுரிய வேண்டியிருந்தது. மால்டாவுக்குக் (Malta) கிழக்கே மத்தியதரைக் கடல் (Mediterranean Sea) அநேகமாகத் துருக்கியர்களின் ஆதிக்கத்திலிருந்தது. எனினும், சில காலம் வெனிஸ் அப் போட்டியைச் சமாளித்துப் பார்த்தது. ஆனால், அதன் பிறகு, இங்கிலாந்தின் கடற்கரைக்குப் பிளாண்டர்ஸ் கப்பல்கள் ஆண்டுதோறும் சரியாக வருவதில்லை. அதன் முக்கியத்துவமும் குறைந்து 1587-ல் அவை வருவதும் நின்றுவிட்டது. ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் ஹேன்ஸ் வணிகர்களும் பல அவதிகள் உற்றனர்; முன்னரே கூறியபடி எலிசபெத் அரசி அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளை ரத்து செய்துவிட்டாள்.

பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசிச் சில ஆண்டுகளிலும் பதினாரும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகில் புது இடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், அவற்றைக் கண்டுபிடித்தவர்கள் ஏழாம் ஹென்றியின் ஆதரவில் பிரஸ்டலிலிருந்து (Bristol) நியூபவுண்ட்லண்டுக்குக் (Newfoundland) கப்பலில் சென்ற இரு

கேபட்டுகளையும் (Cabots) தவிர[1] பிற நாட்டவர்களே. பிற நாடுகளின் மாலுமிகள் புது இடங்களைக் கண்டுபிடித்ததன் நன்மைகளை நன்கு பயன்படுத்தக்கூடிய நிலைமையில் இங்கிலாந்து இருந்தது. ஆங்கிலேயர்கள் உள்ளத்தில் பரந்த நோக்கம் தோன்றலாயிற்று. பல்லாண்டுகளாக வீட்டைவிட்டு வெளியேறாத குடியானவர்களின் சந்ததிகளான ஆங்கில மக்கள், அதுவரை தம் நாடு கலாசாரத்தின் கேந்திரத்திலிருந்து வெகு தூரத்திலிருந்த ஒரு சிறிய தீவு என்று எண்ணியிருந்தார்கள். ஆனால், அவர்கள் திடீரென உலகம் முன் எண்ணியிருந்ததைவிடப் பெரிது, அதில் கண்டுபிடிக்க வேண்டிய புது நாடுகளும் விநோதமான பொருள்களும் பல இருந்தன என்பதைத் திடீரென உணர்ந்துகொண்டனர். புது இடங்களைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு நல்ல வசதியிருந்தது. அந்தச் சமயத்தில் ஆங்கிலேயர்களின் உள்ளத்தில் வீரச் செயல்கள் புரியவேண்டுமெனத் தோன்றிய உணர்ச்சி இன்றும் மறையவில்லை. ஆங்கிலக் கப்பல்கள் நெடுந் தூரம் செல்லலாயின. டியூடர் ஆட்சிக் காலத்திலேயே ஆங்கிலேயர்கள் உலகம் சுற்றி வந்துவிட்டனர்.

எலிசபெத் அரசியின் காலத்தில் கப்பல் ஓட்டுவதில் ஈடுபட்டவர்களின் முக்கிய நோக்கம் வாணிபம் மட்டுமல்ல. பதினாறும் நூற்றாண்டில் சமயச் சீர்திருத்தம் (Reformation) தோன்றியது. இங்கிலாந்து இடைக் காலத்தில் போப்பிடம் வைத்திருந்த விசுவாசத்தை விட்டுவிட்டது. ஸ்பெயின் அவ்வாறு செய்யவில்லை; அமெரிக்கக் கண்டத்தில் குடியேற்றம் அமைப்பதில் முன் நின்ற நாடு அது. ரோமுக்கு இங்கிலாந்தினை அடிபணியச் செய்யவேண்டும் என்று ஸ்பெயின் முடிவு செய்தது. ஆகையால், ஆங்கில மாலுமிகள் உலகெங்கிலும் ஸ்பானிய ஆதிக்கத்தைத் தாக்க முடிவு செய்தனர். இன்று பன்னாட்டுச் சட்டமாகக் கருதப்படும் விதிகளின்படி பார்த்தால், அப்போது நடந்த பல செயல்கள் கடற் கொள்ளையன்றி வேறல்ல; ஆனால், அது தேசீய சமய உணர்ச்சிகளால் விளைந்த கடற் கொள்ளையாகும். பிராட்டெஸ்டென்டுகளான (Protestant) ஆங்கிலேயருக்கும் கத்தோலிக்கர்களான ஸ்பானியருக்குமான இப் பூசல்கள் ஆங்கிலக் கால்வாயிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும், பசிபிக் பெருங் கடலிலும், இந்தியப் பெருங்கடலிலும் ஆக எல்லா இடங்களிலும் நடந்தன. இவ்வாறு, வீரச் செயல்கள், புது இடங்களைக் கண்டுபிடித்தல், கடற் கொள்ளை, சமயப் போர் ஆகியவை கலந்த கதம்பத்திலே வாணிபத்துக்கான வாய்ப்புகள் எழுந்தன. அவற்றை

[1] ஜான் கேபட், ஸெபாஸ்டியன் கேபட்.

ஆங்கிலேயர்கள் நன்கு பயன்படுத்தினர். ஆனால், அப்போது வாணிபத்தில் தனி வியாபாரிகளுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டுவரை வியாபாரம் பெரிய கம்பெனிகளால் நடத்தப்பட்டது. இக் கம்பெனிகள் இதற்காக அரசனிடம் பட்டயங்கள் பெற்றிருந்தன ; இப் பட்டயத்தைப் பெற்ற ஒரு கம்பெனிக்கு, இங்கிலாந்திற்கும் உலகில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் இடையே நடந்த வியாபாரத்தில் முற்றுரிமை கிடைத்தது.

தனியார் முயற்சியைவிடக் கம்பெனி வாணிபம் மேலானது என்று பல காரணங்களால் கருதப்பட்டது. பன்னாட்டு வாணிபத்தின் பெரும் பகுதி, தூரமான நாடுகளில் புது மொழியும் பண்பாடும் கொண்ட மக்களுடன் நடந்தது. தன் இலாபத்தைப் பெருக்குவதற்காக ஏமாற்றுவது, மோசடி செய்வது, இம்சை செய்வது போன்ற கெட்ட வழக்கங்களையும் இப் பகுதிகளில் வாணிபம் செய்யப் போகும் அங்கீகரிக்கப்படாத ஒரு தனி வியாபாரி செய்யத் துணியலாம். இவ்வாறு ஒரு பிரயாணத்திலேயே அவன் பெருஞ் செல்வத்தை ஈட்டிவிடலாம். இச் செயல்களால் தனது இனத்துக்கே மாசு கற்பிக்கிறோமே என்ற அச்சம் அவனிடம் இருக்காது. ஏனெனில், மறுபடி அவ்விடத்துக்குச் சென்று அவனது கெட்ட செயல்களின் பயனை அனுபவிக்கப்போவது வேறொரு வணிகனேயன்றி அவனல்ல. ஆனால், கம்பெனிகள் அவ்வாறு செய்யமாட்டா. அவை வருடந்தோறும் அப் பகுதியில் வாணிபம் செய்யவேண்டும். நேர்மைக்கும் உண்மைக்கும் ஆங்கிலேயர்கள் ஓர் உதாரணம் என்ற நற்பெயரை ஏற்படுத்தவும் காப்பாற்றவும் அவை பாடுபடும். அங்கீகரிக்கப்படாத தனி வணிகர்கள் இந் நற்பெயருக்குக் களங்கம் தேடிவிடக்கூடாது என்று அவை கோரின; அக் கோரிக்கையில் நியாயமிருந்தது. தவிர, தனி வியாபாரியைவிடக் கம்பெனிக்கு ஆற்றல் அதிகம். தாம் சென்று பார்த்த நாடுகளின் அரசர்களிடமிருந்து அவை விசேஷச் சலுகைகள் பலவற்றைப் பெறக்கூடும். தனி வியாபாரிக்கு அது இயலாது. கடல் வணிகத்தில் பல இடையூறுகள் இருந்தன. உலகெங்கிலும் கடற் கொள்ளையர் பலர் இருந்தனர். அவ் வபாயம் இல்லாத பயணமில்லை. கம்பெனியாயின், இவ் வபாயத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வது சுலபம். கப்பல்களில் பீரங்கிகள் வைத்தும் கப்பல்களைச் சேர்த்து அனுப்பியும் தற்காப்புக்கு ஏற்பாடு செய்யலாம். எண்ணற்ற பல தனி வணிகர்களுக்குப் பதில், ஒரு சில கம்பெனிகள் இருந்ததால் அரசாங்கத்துக்கும் சௌகரியமாக இருந்தது. வரிகள் வசூலிக்கப்பட வேண்டியிருந்தன. விதிகள் அமல் செய்யப்பட வேண்டியிருந்தன. கம்பெனிகள் விஷயத்தில் இவை

எளிதாக முடிந்தன. பொருள்களை ஒளித்து எடுத்துப் போவது, வரி கொடாது பொருள் கொண்டுவருதல் போன்றவற்றில் கம்பெனிகள் ஈடுபடமாட்டா. அரசாங்கத்தைக் கோபமூட்டினால் தன் பட்டயம் ரத்தாகிவிடும் என்ற பயம் கம்பெனிக்கு உண்டு.

ஆனால், அங்கீகரிக்கப்படாத தனி வணிகரின் காலம் முடிவடைந்து விடவில்லை.[1] நாட்டின் துணிவு உணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அவர்கள் விளங்கினர். கம்பெனி வாணிகம் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்காகவும் நடந்தது. ஒரு வரம்புக்குள் வாணிபத்தை நிலை யாகவும் ஒழுங்காகவும் செய்ய அது வழி செய்தது. ஆனால், அம் முறையில் தொழில் துணிவுக்கு இடமில்லை. கம்பெனிகள் திட மானவை, மதிப்புக்குரியவை; ஆனால், தனி வணிகனே சமயம் நேர்ந் தால் சிறிதளவு கொள்ளையும் செய்வான். கம்பெனிகள் செல்லாத பல இடங்களுக்குத் தனி வணிகர்களின் கப்பல்கள் சென்றன. இத் துணிவினால் வியாபாரம் மேலும் வளர்ந்தது. இதன் விளைவாகப் புதுக் கம்பெனிகள் தோன்றின. எனவே, தனி வணிகர் சில கம்பெனி களுக்கு முன்னோடிகளாக இருந்தனர். பதினேழாம் நூற்றாண்டில் கம்பெனிகளின் வாணிபம் நல்ல நிலையில் இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் அது குறையலாயிற்று. வாணிபம் மேலும் மேலும் தனிப்பட்ட வியாபாரிகளின் கைக்கு மாறிற்று.

இக் கம்பெனிகள்மீது அடிக்கடி சாட்டப்பட்ட முக்கியக் குற்றச் சாட்டு அவற்றின் சர்வாதீனம்பற்றியதாகும். அவற்றின் முற் றுரிமை உண்மையில் எத்தகையது என்பதை உணரவேண்டியது முக்கியமாகும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துடனான வாணிபத்தின் முற்றுரிமையை ஒரு கம்பெனி பெற்றிருப்பது தவிர்க்க முடியாத தாகும்; தூரப் பிரதேசங்களுடன் போட்டி வாணிபம் நன்கு நடக்காது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், தம் சலுகைகளை எந்த முறையில் கம்பெனிகள் பிரயோகித்தன என்பதுதான் குற்றச் சாட்டின் முக்கிய அமிசமாகும். மிக அதிகமான நுழைவுக் கட்டணம்

[1] லண்டனுக்கும் பிற மாநிலத் துறைமுகங்களுக்கும் இடையே இருந்த போட்டிக்கும், கம்பெனிகளுக்கும் தனி வணிகருக்கும் இருந்த போட்டிக்கும் தொடர்பு உண்டு. கம்பெனி உறுப்பினரில் பெரும்பாலோர் லண்டன் வணிகர்கள். கப்பல்கள் சேர்ந்து செல்லவேண்டியிருக்கையில், லண்டன் வணிகர்களின் சௌகரியத்தின்படி இதற்கு ஏற்பாடு நடந்தது இயற்கையே. பிற ஊர் வணிகர்களுக்குக் கம்பெனியிடம் செல்வாக்கில்லை. கம்பெனி களின் கட்டுப்பாட்டை அவர்கள் வெறுத்தனர். சில சமயம் சொந்தமாக வாணிபம் செய்ய முயன்றனர். அதன் அளவு, செல்வம், அந்தஸ்து இவை காரணமாக எந்த முறையின் அடிப்படையிலும் லண்டன் நகரம் இங்கி லாந்தின் வெளிநாட்டு வாணிபத்தில் முதலிடம் வகிக்கும் என்பதை இங்குக் கூறத்தான் வேண்டும்.

விதிப்பதன்மூலம் கம்பெனியை நிர்வகிக்கும் சிறு கூட்டம், வாணிபத்தில் ஈடுபட விரும்பிய பிறர் கம்பெனியில் சேருவதைத் தடுத்து, விலைகளை மாற்றியும், அளிப்பைக் குறைத்தும், பொதுநலனைக் கருதாது உறுப்பினர்களது இலாபத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகரித்ததால், சர்வாதீனத்தின் தீங்குக்கு அது சான்முகக் கருதப்பட்டது. இவ்வாருயின், தனி வணிகரும் வாணிபத்தில் ஈடுபடுவதில் நியாயமிருந்தது. ஆனுல், அவ்வாறின்றி, நுழைவுக் கட்டணம் அதிகமாக இல்லாதிருப்பின் தனி வணிகர் இருப்பதில் நியாயமில்லை; நியாயமாகத் தேவைப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட விரும்பாததால்தான் ஒருவன் தனி வணிகனுக இருக்கிருன்; எனவே, பொது நலத்துக்குத் தீங்கிழைப்பவன் அவனேயன்றிக் கம்பெனியல்ல என்று கொள்ளலாம்.

கம்பெனியில் சேர ஏதாவதொரு யோக்கியதாம்சம் நிர்ணயிக்கப் படவேண்டும். கம்பெனியில் சேருவோரின் எண்ணிக்கைக்கு ஏதாவதொரு வரம்பு குறிக்கவேண்டும் என்ற கொள்கைகள் அக்காலத்து நிலவரத்துக்குப் பொருத்தமானதே. வியாபாரம் செய்யப் பயிற்சி தேவை. எனவே, சில கம்பெனிகள் ஏற்கெனவே வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஒரு வணிகனிடம் பயிற்சி பெற்றவர்களைத்தான் உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டன.

வாணிபக் கம்பெனிகளில் இரு தனி வகைகள் இருந்தன. அவை கட்டுப்பாட்டுக்கம்பெனியும் (regulated), கூட்டுப் பாங்குக் கம்பெனியும் (joint-stock) ஆகும். தன் உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட வியாபாரத்தில் ஈடுபடலாம் என்ற அனுமதி தரும் பட்டயத்தைப் பெற்ற ஒரு வணிகர் சங்கம் கட்டுப்பாட்டுக் கம்பெனியாகும். கம்பெனி, விதிகளை அமைத்தது. நாட்டு அரசாங்கத்துடனும் அந்நிய அரசாங்கங்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தியது. உறுப்பினராவதற்கு வேண்டிய யோக்கியதாம்சத்தை நிர்ணயித்தது. உறுப்பினர்கள் ஒழுங்கு முறைப்படி நடக்குமாறு பார்த்துக் கொண்டது. தான் வியாபாரம் செய்த நாடுகளில் பண்டகசாலைகளை அமைத்தது. தம் உறுப்பினர்களின் அக்கறையைப் பாதுகாக்கத் தன் பிரதிநிதிகளை அந்நாடுகளில் நியமித்தது. ஆனுல், தானே வாணிபத்தில் நேரிடையாக ஈடுபடவில்லை. உறுப்பினர்கள் தனித்தோ கூட்டாகவோ ஒவ்வொரு வாணிப விவகாரத்தையும் மேற்கொண்டனர். அவ் விவகாரத்தின் இலாப நஷ்டத்தை அதில் ஈடுபட்டவர் மட்டுமே ஏற்றுக்கொண்டனர். கம்பெனி விதிகளுக்கு இணங்கி எல்லா உறுப்பினரும் நடக்கவேண்டும் என்பது தவிர, உறுப்பினர்

களின் நடவடிக்கைகள்மீது வேறு கட்டுப்பாடு ஏதும் இல்லை. இக் கம்பெனியின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மேற்கொண்டிருந்த வியாபாரத்தின் அளவு மிகவும் வேறுபட்டிருக்கவேண்டும்.[1] நுழைவுக் கட்டணம் மிக அதிகமாக இருந்த கட்டுப்பாட்டுக் கம்பெனி களின் விஷயத்தில்தான் சர்வாதீனத்தின் தீங்குகள்பற்றிய பிரச்சினை எழுந்தது.

கூட்டுப் பங்குக் கம்பெனிகள் பெரிய அளவில் இன்று காணப்படு கின்றன. எனவே, அவற்றின் அமைப்பைப் புரிந்துகொள்வது வாசகர்களுக்கு மிகவும் சுலபமாக இருக்கும். இந் நிறுவனங்களில் உறுப்பினர்கள் மூலதனத் தொகையைச் செலுத்துகின்றனர். சம்பளம் வாங்கும் அலுவலர்கள்மூலம் கம்பெனி நேரிடையாக வியாபாரம் செய்கிறது; உறுப்பினர்கள், அதாவது பங்குதாரர்கள், இலாபத்தில் தமக்குச் சேரவேண்டிய பகுதியைத் தம் பங்குகளின் இலாப ஈவாகப் (dividend) பெறுகின்றனர். கம்பெனி விவகாரங் களின் நுட்பங்களை அறியவோ, அவற்றில் அக்கறை காட்டவோ உறுப்பினருக்குத் தேவையில்லை; முதலீடு செலுத்துவதோடு அவர் களது பணி முடிந்தது. கட்டுப்பாட்டுக் கம்பெனிகளில் போலன்றிக் கூட்டுக் கம்பெனிகளில் கம்பெனியின் ஒவ்வொரு விவகாரத்தின் வெற்றி அல்லது தோல்வியினால் முறையே ஏற்படும் இலாபமும் நஷ்டமும் உறுப்பினர் அனைவரையும் சார்கிறது. கம்பெனி தன் வியாபாரத்தைப் பரப்புவதற்காகப் புதுப் பங்குகளை வெளியிட்டா லொழிய, புதிதாக உறுப்பினராகச் சேர ஒரே வழி, மற்றொரு பங்குதாரரிடமிருந்து கூட்டுப் பங்குக் கம்பெனியின் பங்குகளை வாங்குவதுதான். இக் கம்பெனிகளின் அமைப்பைப்பற்றிச் சுருக்க மாக இங்குக் கூறப்பட்டதினின்று டியூடர், ஸ்டுவர்ட் மன்னர்களின் காலத்தில் கட்டுப்பாட்டுக் கம்பெனிகளைவிடக் கூட்டுப் பங்குக் கம்பெனிகள்தாம் முற்றுரிமைபற்றிய குற்றச்சாட்டுக்கு அதிகம் இலக்காகின என்பதை உணரலாம்.

[1] வெளிநாட்டு வாணிபத்தில் தற்போது இத்தகைய சங்கம் ஏதும் ஈடுபடவில்லை. எனினும், லாயிட்ஸ் (Lloyd's) நிறுவனத்தை கட்டுப் பாட்டுக் கம்பெனியுடன் ஒப்பிடலாம். இன்ஷூரன்ஸ் வணிகர்களின் சங்கம் லாயிட்ஸ். அவர்கள் பலவகை அபாயங்களுக்கு ஈட்டுறுதி அளிக் கின்றனர். ஒவ்வொரு இன்ஷூரன்ஸ் விவகாரத்துக்குமான தவணைக் கட்டணத்தை அவர்கள் கூறுகின்றனர். ஈட்டுறுதித் தொகை அதிகமாக இருந்தால், தவணைத் தொகையையும் (அத்துடன் அவ் வினை நேரக்கூடிய அபாயத்தையும்) பலர் பங்கிட்டுக்கொள்கின்றனர். நஷ்டம் ஏற்பட்டால், தவணைத் தொகையைப் பங்கிட்டுக்கொண்டவர் மட்டுமே நஷ்டத்தை ஈடுகட்டவேண்டும். லாயிட்ஸ் அமைப்புத் தன் உறுப்பினர்களிடம் நுழைவுக் கட்டணம் வாங்குகிறது; உறுப்பினர்கள் தம் விவகாரங்களில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளை வரைகிறது; ஆனால், தானே நேரிடை யாக எந்த ஈட்டுறுதியும் செய்வதில்லை.

ஆதார வணிகர்களையும் துணிகர வியாபாரிகளையும்பற்றி முன்னொரு அதிகாரத்தில் கூறப்பட்டது. கட்டுப்பாட்டுக் கம்பெனிகளில் மிகப் பெரியது துணிகர வியாபாரிகள் சங்கமே. ஆதார வணிகர்கள், ஹேன்ஸ் சங்கம் இவற்றுடன் அது போட்டியிட்டு வென்றது. ஹாம்பர்கில் (Hamburg) அதன் குடியேற்றம் தோன்றிய பின், வட ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் இருந்த வாணிபத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அது நடத்தியது. முக்கியமாக, கப்பல் சாமான்கள், அதாவது தார், பாய் மரங்கள் (masts), ஹெம்ப் சணல் (hemp) ஆகியவைபற்றிய பால்டிக் (Baltic) நாடுகளுடன் நடந்த வாணிபத்தை ஹேன்ஸ் வணிகர்களிடமிருந்து பறிக்க ஈஸ்ட்லண்டு (Eastland) வணிகர்களின் கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு 1579-ல் எலிசபெத் அரசி ஒரு பட்டயம் வழங்கினாள். பதினாறும் நூற்றாண்டில் தோன்றிய வேறு சில கம்பெனிகளைப் போல இது பிரசித்தமாகவே இல்லை. ஏனெனில், சில ஆண்டுகளில் வட அமெரிக்காவிலிருந்து கப்பல் சாமான்கள் (naval stores) வாங்கப்பட்டன. 1672-ல் பால்டிக் வியாபாரத்தில் யார் வேண்டுமாயினும் ஈடுபட முடிந்தது. நாற்பதே ஷில்லிங்கு ஆன நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தி யாரும் அக் கம்பெனியில் சேர முடிந்தது.

மஸ்கோவி கம்பெனி (Muscovy Company) என்று பின்னர் அழைக்கப்பட்ட கம்பெனியொன்று, கீழை நாடுகளுக்கு வடகிழக்கு மார்க்கம் ஒன்று கண்டுபிடிப்பதற்காக 1553-ல் அமைக்கப்பட்டுப் பட்டயம் பெற்றது. ஸர் ஹ்யூ வில்லபியும் (Sir Hugh Willoughby), ரிச்சர்டு சான்சலரும் (Richard Chancellor) இதற்காக ஒரு பிரயாணம் கிளம்பினர்; வில்லபி குளிர் தாங்காது மாண்டார். ஆனால், சான்சலர் ஆர்கேஞ்சல் (Archangel) வரைபோய் அங்கிருந்து நில மார்க்கமாக மாஸ்கோ போய்ச் சேர்ந்தார். அங்கு ரஷ்ய அரசருடைய (Tsar) நல்ல வரவேற்பு அவருக்குக் கிடைத்தது. ரஷ்யாவுடன் வாணிபம் நடத்தும் வாய்ப்பு இருப்பது உணரப்பட்டது. 1555-ல் அக் கம்பெனிக்குப் புதுப் பட்டயம் ஒன்று அளிக்கப்பட்டது. ரஷ்யாவுடனான வியாபாரத்தின் முற்றுரிமையை அது பெற்றது. பின்னர், தென் கிழக்கில் தன் வியாபாரத்தைப் பரப்பும் நம்பிக்கை அதற்கிருந்தது. சில காலத்துக்குப் பாரசீகத்துடனான வாணிபத்தில் ஒரு பகுதி அதற்குக் கிடைத்தது. இவ் வாணிபத்தில் முக்கியப் பங்கை லெவாண்டு (Levant) கம்பெனியும், கிழக்கிந்தியக் கம்பெனியும் பெற்றிருந்தன. பதினேழாம் நூற்றாண்டில் மஸ்கோவி கம்பெனியின் வளம் குன்றியது. டச்சுக்காரரின் போட்டியாலும்

சொந்த வாணிபம் செய்து பெருஞ்செல்வம் சேர்த்த தன் தரகர்களின் மோசடியாலும் அது நஷ்டமடைந்தது. ஆர்க்கேஞ்சலில் அதன் பண்டகசாலை அழிந்தபோது, ஃஸார் (Tsar) அதன் சலுகைகளைப் புதுப்பிக்க மறுத்தார். கட்டுப்பாட்டுக் கம்பெனியாக அது மாற்றியமைக்கப்பட்டது. ஆனால், நுழைவுக் கட்டணத்தை அதிகமாக வைத்து உறுப்பினர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இது ஐந்து பவுனாகக் குறைக்கப்பட்டது. இதனால், ரஷ்யாவுடனான வாணிபம் பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு சிலரின் முற்றுரிமையாக இருந்தநிலை மாறியது.

மத்தியதரைக் கடலை அடுத்திருந்த முகமதிய நாடுகளுடன் நடந்த வாணிபத்தை இரு கம்பெனிகள் நடத்தின. ஆப்பிரிக்காவின் வட கடற்கரையிலிருந்த நாடுகளுடன் வாணிப உறவை வளர்க்க முயன்ற பார்பரி கம்பெனி (Barbary Company) அம் முயற்சியில் வெற்றி பெறவில்லை. ஆனால், கிழக்கு மத்தியதரைக் கடலையடுத்த நாடுகளுடன் பெருமளவுக்கு வாணிபத்தை லெவாண்ட் கம்பெனி (Levant) வளர்த்தது. அதுவரை இவ் வாணிபம் வெனிஸ் வர்த்தகர்கள் வசம் இருந்தது. ஆனால், சுல்தானுடன் (Sultan) முதலாம் பிரான்ஸிஸ் (Francis I) வாணிப உடன்படிக்கை செய்துகொண்டதும், பதினாறும் நூற்றாண்டில் ஃபிரஞ்சுக்காரர்கள் இவ் வாணிபத்தில் ஒரு இடம் பெற்றனர். ஸ்பானியர்கள் 1571-ல் லெபாண்டோ போரில் (Battle of Lepanto) துருக்கியர்களைத் தோற்கடித்தனர். அச் சமயம் இங்கிலாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இடையே மிகுந்த விரோதம் இருந்ததால், ஆங்கில வணிகர்களுக்குச் சுல்தான் வாணிபச் சலுகைகளை அளித்துவிட்டான். 1581-ல் எலிசபெத் அரசி லெவாண்ட் வணிகத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்களின் கம்பெனிக்கு ஏழு ஆண்டுகளுக்கு ஒரு பட்டயம் வழங்கினாள். அக் கம்பெனிக்குத் துருக்கிக் கம்பெனி (Turkey Company) என்று பெயர். அதன் பட்டயம் புதுப்பிக்கப்படவில்லை. ஆனால், அது மூடப்படவில்லை. 1592-ல் அது புதிய அமைப்பான லெவாண்ட் கம்பெனியுடன் கலந்தது. நாளடைவில் அங்குச் சீராகக் கப்பல்கள் சென்று வந்தன. மத்தியதரைக் கடலில் கடற் கொள்ளை அதிகம். எனவே, தனியாகக் கப்பல்கள் செல்வது உசிதமாகப்படவில்லை. எனவே, ஸ்மிர்னாவுக்கும் (Smyrna), சுல்தானின் நாடுகளின் பிற துறைமுகங்களுக்கும் கப்பல்கள் ஒரு தொகுதியாகச் சென்று வரலாயின. முதலில் அது கூட்டுப் பங்குக் கம்பெனியாக இருந்தது. ஆனால், முதலாம் ஜேம்ஸின் ஆட்சிக் காலத்தில் கட்டுப்பாட்டுக் கம்பெனியாக மாற்றியமைக்கப்பட்டது. மஸ்கோவி

கம்பெனி, கிழக்கிந்தியக் கம்பெனி ஆகியவற்றின் போட்டியால் இக் கம்பெனி சில சமயம் வருந்தியது. அவை இரண்டுமே பாரசீகப் பட்டை இறக்குமதி செய்தன. 1754-ல் இக் கம்பெனியில் சேருவது எளிதாக்கப்பட்டது. 1825-ல் தன் சலுகைகள் அனைத்தையும் இக் கம்பெனி விட்டுக் கொடுத்துவிட்டபோது எவரும் இவ் வாணிபத்தில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டது.

பெரிய வணிகக் கம்பெனிகளில் மிகவும் பிரசித்தமானது கிழக்கிந்தியக் கம்பெனி. பதினாறும் நூற்றாண்டில் கீழை நாடுகளுடன் நடைபெறும் வியாபாரத்தில் வெனிஸ் வணிகர்களும் போர்த்துகீசியரும் பங்கு கொண்டிருந்தனர். வெனிஸ் வணிகர்கள் எகிப்து வழியாக நில மார்க்கமாகச் சென்றுவந்தனர். போர்ச்சுக்கீஸியர் நன்னம்பிக்கை முனை வழியாகச் சென்றுவந்தனர். 1580-ல் ஸ்பெயின் மன்னன் இரண்டாம் பிலிப் போர்ச்சுகல்மீது ஆதிக்கம் செலுத்தினான். போர்ச்சுகல் ஸ்பெயினுடன் சம்பிரதாயப்படி ஒன்று சேர்க்கப்படாவிட்டாலும், நடைமுறையில் போர்த்துகீசியரைச் சேர்ந்த நாடுகள் ஸ்பானியர் நாடுகளாயின; போர்த்துகீசிய வாணிபம் ஸ்பானிய வாணிபம் ஆயிற்று. அமெரிக்கக் கண்டத்திலே ஸ்பெயினின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது; கீழை நாடுகளிலும் அதன் ஆதிக்கம் அவ்வாறே பெருகும்போலிருந்தது. வெள்ளியும் வாசனைத் திரவியமும் கூட, ஸ்பெயினின் செல்வத்தைப் பெருக்கக் கூடும் நிலை ஏற்பட்டது. பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் சமயச் சீர்திருத்தத்திற்குப் பரிந்து இங்கிலாந்து போராடத் தொடங்கியதும் கிழக்கிலும் மேற்கிலும் ஸ்பானியர் வலிமையை முறியடிப்பதென ஆங்கில மாலுமிகள் முடிவு செய்தனர்.

கிழக்கிந்தியக் கம்பெனி தோன்றுவதற்கு உடனடியான காரணம் டச்சுக்காரரின் நடவடிக்கைகள்தான். டச்சு வணிகர்கள் கீழை நாடுகளுக்கு ஏற்கெனவே சென்றுவரத் தொடங்கிவிட்டனர். அவர்களது முற்றுரிமையை லண்டன் வணிகர்கள் எதிர்த்தனர். 'அக்கிருத்துவமான மிளகு விலையைப்பற்றிப் பேச என் மேயர் பிரபுவின் வீட்டுக் கூடத்தில்' (in my lord mayor's parlour, to consider the unchristian price of pepper) வணிகர்களின் கூட்டமொன்று கூடி இந்தியாவுடன் நேரிடையாக வாணிபம் செய்ய ஒரு கம்பெனி அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

1600 டிசம்பர் 31-ந் தேதி கிழக்கிந்தியக் கம்பெனி தன் முதல் பட்டயத்தைப் பெற்றது. முதலில் லெவாண்ட், மஸ்கோவி கம்பெனி

களின் அப்போதிருந்த உரிமைகளுக்கு எழுத்துமூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டபோதிலும், இப் புது அமைப்பின் முற்றுரிமை நன்னம்பிக்கை முனையிலிருந்து (Cape of Good Hope) மகெல்லன் ஜலசந்தி வரை (Strait of Magellan) செல்லுமென்று நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு பயணத்துக்கும் தனியாக ஒரு பங்குக் கூட்டு (joint-stock) அமைப்பது என்ற முறையில் முதல் சில ஆண்டுகளுக்குக் கம்பெனியின் விவகாரங்கள் நடந்தன. பிரயாணம் முடிந்ததும் மூலதனம் பங்குதாரருக்குத் திருப்பி அளிக்கப்பட்டது. அத்தனை நெடுந்தூரப் பிரயாணத்தில் செலவும் நஷ்ட பயமும் அதிகமாதலின், பல வணிகர்கள் கூட்டுச் சேருவது அவசியமாயிற்று. ஒவ்வொரு பயணத்துக்கும் தனிக் கணக்கு வைக்கப்பட்டது. பணப் பட்டுவாடா இறுதியாக முடிய வெகுகாலம் சென்றது. 1612-ல் பல பயணங்களுக்குச் சேர்ந்து ஒரு பங்குக் கூட்டு அமைக்கப்பட்டது. 1657-ல் நிரந்தரமான, திருப்பித் தராத பங்குக் கூட்டு ஏற்படுத்தப்பட்டது. தோன்றிய நாள் முதல் நூறு ஆண்டுகளில் இக் கம்பெனி பல தடங்கல்களை எதிர்த்து வெற்றி கொண்டது. இவற்றுக்கு உதாரணம், டச்சுக் கம்பெனியின் போட்டி,[1] தனி வணிகர்களின் நடவடிக்கைகள், இங்கிலாந்தில் அதற்கு விரோதமான கண்டனங்கள், 1698-ல் இதற்குப் போட்டியாக ஏற்படுத்தப்பட்ட கம்பெனி ஆகியவை. (பத்து ஆண்டுகள் கழித்து இப் போட்டிக் கம்பெனி முதலில் தோன்றிய அமைப்புடன் ஒன்றியது). கிழக்கிந்தியக் கம்பெனி வாணிபம் சீனக் கடற்கரை வரை பரந்து இருந்தது. பாரசீக ஷாவிடமிருந்தும் சில சலுகைகளை அது பெற்றது. இதன் விளைவாக, லெவாண்ட் கம்பெனியின் வாணிப எல்லை எதுவரை இருந்தது என்பதுபற்றி அதற்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் தகராறு எழுந்தது.

பதினெட்டாம் நூற்றுண்டின் மத்தியிலிருந்து கிழக்கிந்தியக் கம்பெனியின் வரலாறு இந்தியாவின் பிரிட்டிஷ் ஆதிக்கம் பரவியதைச் சுட்டிக் காட்டுகிறது. வாணிபம் செய்ததோடு ஆளும்

[1] தொடக்கத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்பைஸ் தீவுகளுடன் (Spice Islands) வாணிபத்தைப் பெருக்க முயன்றது. இந்தியக் கண்டத்திலிருந்து வந்த பொருள்களுக்கு இங்கு நல்ல தேவையிருந்தது. இந்தியாவில் வாணிப நிலையங்கள் அமைத்து அங்கிருந்து பட்டு, காலிகோ துணிகள் (calicos), நீலி (indigo) ஆகியவை கொண்டுவரப்பட்டு, ஸ்பைஸ் தீவுகளில் விற்கப்பட்டன. ஆங்கில வர்த்தகர்களின் வாணிப விவகாரங்கள் டச்சுக்காரர்களுக்கு ஆத்திரமூட்டின. பல ஆங்கில வணிகர்களை 1623-ல் அம்போய்னுவில் அவர்கள் கொன்றுவிட்டனர். ஐரோப்பாவின் அரசியல் சூழ்நிலை காரணமாக இதற்குப் பழிவாங்க முடியவில்லை. கிராம்வெல் (Cromwell) இக் கொலைகளுக்கு நஷ்டஈடு வசூலித்தார். இதற்கிடையில் ஸ்பைஸ் தீவுகள்மீது இங்கிலாந்தின் ஆதிக்கம் முடிந்தது. ஆங்கில வணிகர்கள் இந்தியாவோடு நேரடியாக வியாபாரம் செய்யலாயினர்.

தொழிலையும் அக் கம்பெனி செய்தது. அதன் ஆட்சிப் பணியை ஆங்கில அரசாங்கம் 1773-ம் ஆண்டு ரெகுலேடிங் சட்டம் (Regulating Act), 1784-ம் வருஷத்திய இந்தியா சட்டம் (India Act) ஆகியவைமூலம் கட்டுப்படுத்தியது. 1813-ல் கிழக்கிந்தியத் தீவுகளுடன் நடந்த வாணிபத்தில் அது தன் முற்றுரிமையை இழந்தது. அதன்பிறகு யாரும் அவ் வாணிபத்தில் பங்கு பெறக்கூடும். சீன வாணிபத்தை மட்டும் 1833 வரை அது தொடர்ந்து நடத்தியது. 1835-ல் அது வியாபாரம் செய்வதை நிறுத்தியது. அதற்குப்பின் இந்தியாவை ஆளும் அமைப்பாக மட்டும் இருந்தது. 1858-ல் அது கலைக்கப்பட்டது.

தொடக்கத்தில் கிழக்கிந்திய கம்பெனி வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. நாட்டுக்குள் பொன் வருமாறு ஆங்கில வாணிபத்தின் போக்கை மாற்றுவது வர்த்தகத் தத்துவத்தின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாகும் என்று ஏற்கெனவே கூறப்பட்டது; இதற்காக, சாதகமான செலுத்தல் நிலையைத் தோற்றுவிக்க முயற்சி செய்யப்பட்டது. அதாவது, இறக்குமதிகளை வீட ஏற்றுமதிகளை அதிகமாக்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால், கிழக்கிந்திய வாணிபம் இக் குறிக்கோளுக்கு ஏற்றவாறு அமையவில்லை என்பதுதான் கண்டனத்துக்குக் காரணம். கீழை நாடுகளில் ஆங்கிலப் பொருள்களின் தேவை அதிகமாக இல்லை. எனவே, அங்கிருந்து கொண்டுவந்த வாசனைப் பொருள்களுக்கும் பிறவற்றிற்கும் ஈடாக இங்கிலாந்திலிருந்து பணம் வெளியே சென்றது.[1] வெனிஸ் அல்லது போர்ச்சுகலைச் சேர்ந்த வணிகர்களைவிடத் தன்னால் குறைந்த விலைக்கு வாசனைப் பொருள்களைக் கொண்டு தர முடிவதால் நாட்டுக்கு நன்மையுண்டாகிறது என்றும், இவ் வாணிபத்தினால் விளையும் இலாபம் ஆங்கில வர்த்தகர்களையே சேருகிறது என்றும் கிழக்கிந்தியக் கம்பெனி இதற்கு விடையளித்தது. தவிர, இறக்குமதியான கீழை நாட்டுப் பொருள்களில் பெரும்பகுதி மறுபடி ஏற்றுமதி செய்யப்பட்டதால், வெளியே சென்றதைவிட அதிகமாகப் பணம் நாட்டுக்குள் திரும்பிவந்தது.[2] இங்கிலாந்தின் கப்பல் தொழிலுக்குப் பாதகமாகக் கம்பெனி விவகாரங்கள் அமைந்தன என்பது மற்றொரு குற்றச்சாட்டு. இங்கிலாந்தின் தற்காப்பு அதன் கப்பல்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. பல மாதங்களாகப் பெரிய கப்பல்கள் நெடுந்தூரப் பயணம்

[1] ஒவ்வொரு பயணத்துக்கும் 30,000 பவுன் மதிப்புக்கு மிகாமல் வெள்ளி ஏற்றுமதி செய்யக் கம்பெனி அனுமதி பெற்றது.

[2] அதாவது, இந்தியாவிடம் வாணிபத்தில் பாதகச் செலுத்தல் நிலை கொள்வதன்மூலம் சில ஐரோப்பிய நாடுகளுடன் சாதகச் செலுத்தல் நிலை ஏற்படுகிறது.

செய்துகொண்டிருந்தால், அருகினில் உள்ள கப்பல்களின் எண்ணிக் கையும் அதனுல் கப்பற் படையின் துணைப் பலமும் குறைகின்றன. ஆனல், நெடுந்தூரம் செல்லக்கூடிய பெருங் கப்பல்களைக் கட்டுவதை வாணிப வளர்ச்சி தூண்டுகிறது என்றும், தன் கப்பல்களில் ஒரு பகுதி எப்போதும் இங்கிலாந்தின் துறைமுகங்களிலோ அவற்றிற் கருகிலோ இருக்கிறது என்றும் இதற்குக் கம்பெனி விடையளித்தது. கிழை நாடுகளில் ஆங்கில உற்பத்திகளுக்குத் தேவையில்லையாதலின் கம்பெனியின் வாணிபத்தினுல் ஆங்கிலத் தொழில் வளர்ச்சிக்கு ஒரு நன்மையும் இல்லை என்பது மூன்ருவது குற்றச்சாட்டு; இதைத் தவிர்ப்பதற்காகப் பல ஆசிய நாடுகளில் ஆங்கிலப் பொருள்களின் தேவையை அதிகரிக்கக் கம்பெனி முயற்சிகள் செய்து அவற்றில் ஓரளவு வெற்றியும் பெற்றது.

ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையுடனுன வாணிபத்தை ராயல் ஆப்பிரிக்கன் கம்பெனி (Royal African Company) நடத்தியது. எலிசபெத் காலத்திலும், ஸ்டூவர்ட் மன்னர்கள் ஆட்சியின் தொடக்கத்திலும் இவ் வாணிபத்தை நடத்தக் கம்பெனிகள் அமைக்கப் பல முயற்சிகள் செய்யப்பட்டன.[1] ஆனுல், இரண்டாம் சார்லஸின் காலத்தில்தான் ராயல் ஆப்பிரிக்கன் கம்பெனி அமைக்கப்பட்டது. முக்கியமாக, மேற்கிந்தியத் தீவுகளில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய நீக்ரோ அடிமைகளைப் பிடித்து விற்பதே இக் கம்பெனியின் முக்கியத் தொழிலாகும். பிற அயல் நாட்டினரும் தனி வணிகரும் போட்டியிட்டதன் விளைவாக இக் கம்பெனி மிகவும் கஷ்டப் பட்டது. 1750-ல் இதற்குப் பதில் ஒரு புது கட்டுப்பாட்டுக் கம்பெனி அமைக்கப்பட்டது. அதில் சேருவது மிக எளிதாக இருந்ததால்,

[1] மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுடனுன வாணிபத்தில் பின்வரும் கம்பெனிகள் ஒன்றன்பின் ஒன்ருக ஈடுபட்டிருந்தன:

1588. தந்தத்திலும் தேங்காய் எண்ணெயிலும் வாணிபம் செய்த கினி (Guinea) கம்பெனி, தனி வணிகர் போட்டியால் நஷ்டமடைந்தது.

1618. புதுக் கம்பெனி ஒன்று, தனி வணிகர் போட்டியால் நஷ்டமடைந்தது.

1631. மற்றுமொரு புதுக் கம்பெனி. இதுவும் தனி வணிகர் போட்டியால் நஷ்டமடைந்தது.

1662. ஆண்டுக்கு 3,000 அடிமைகளை அமெரிக்கக் கண்டத்தில் பிரிட்டனது குடியேற்றங்களுக்கு அனுப்புவதற்காக அமைக்கப் பட்ட கம்பெனி.

1672. ராயல் ஆப்பிரிக்கக் கம்பெனி. இதன் சலுகைகள் பெரும் புரட்சியின்போது (Revolution) ரத்தாகி ஓரளவுக்கு 1698-ல் மீண்டுமளிக்கப்பட்டன. இதுவும் தனி வணிகர்களால் மிகவும் அவதியுற்றது. இதனுல், இதன் இலாப நிலையும் திருப்திகரமாக இல்லை.

1750. ராயல் ஆப்பிரிக்கக் கம்பெனியின் சொத்துப் பொறுப்புகளை மேற்கொண்ட மற்ருெரு புதுக் கம்பெனி.

இவ் வாணிபத்தில் யாரும் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டது. 1821-ல் இக் கம்பெனி மூடப்பட்டது.

இரண்டாம் சார்லஸின் ஆட்சிக் காலத்தில் 1670-ல் ஹட்சன் வளைகுடாக் கம்பெனி (Hudson's Bay Company) அமைக்கப்பட்டது. இரண்டாம் சார்லஸின் அத்தை மகனான ரூபர்ட் இளவரசன் (Prince Rupert) இதைத் தோற்றுவிப்பதில் அக்கறை காட்டினான். ஹட்சன் வளைகுடாவைச் சுற்றிய பகுதிகளுடன் வாணிபம் செய்யும் முற்றுரிமையை இது பெற்றது. (மேற்கு) இந்தியருக்குச் சில ஆங்கிலப் பொருள்களை விற்று, அதற்கீடாக மிருகங்களின் மிருதுவான ரோமத் தோல்களை (furs) வாங்கி, இங்கிலாந்துக்கு இக் கம்பெனி கொண்டுவந்தது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இப் பிரதேசத்தின்மீது ஃபிரஞ்சுக்காரர் படையெடுத்தனர். ஆனால், யுட்ரெக்ட் (Utrecht) உடன்படிக்கையின்படி தாங்கள் பிடித்த பகுதிகளை அவர்கள் திருப்பித் தந்ததோடு இக் கம்பெனியையும் அங்கீகரிக்க வேண்டியதாயிற்று. ரோமத் தோல் வியாபாரம் மிக இலாபகரமாக இருந்தது; ஆகையால், பிற பட்டயக் கம்பெனிகளோடு இதன்மீதும் சாட்டப்பட்ட பல குற்றச்சாட்டுக்களினின்று இது தப்பியது. 1869-ல் தன் முற்றுரிமையை இது விட்டுக்கொடுத்து விட்டபோதும் இன்றும் அது வாணிபத்தில் ஈடுபட்டுள்ளது.

1711-ல் தென் கடல் கம்பெனி (South Sea Company) பட்டயம் பெற்றது. அமெரிக்காவில் ஓரினோகோ (Orinoco) வுக்குத் தெற்கில் உள்ள பகுதிகளுடன் வாணிபம் செய்யும் முற்றுரிமையை இது பெற்றது. அரசாங்கத்துக்குக் கொடுத்த கடன்களுக்கு ஈடாக இச் சலுகையை இக் கூட்டுப் பங்குக் கம்பெனி பெற்றது. 1713-ல் யுட்ரெக்ட் உடன்படிக்கைப்படி இக் கம்பெனிக்கு மேலும் சில உரிமைகள் வழங்கப்பட்டன. முப்பது ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு 4,800 நீக்ரோ அடிமைகளை ஸ்பானிய குடியேற்றங்களுக்குக் கப்பல் ஏற்றும் உரிமையான ஆசியண்டோவை (Asiento) இது பெற்றது. பொது வணிகத்துக்காக, போர்டோ பெல்லோவுக்கு (Porto Bello) அறுநூறு டன் எடைகொண்ட கப்பலை ஆண்டுக்கு ஒன்று அனுப்பும் உரிமையையும் இது பெற்றது. முன் எதிர்பார்த்த அளவுக்கு இச் சலுகைகளினின்று இலாபம் கிடைக்கவில்லை; எனவே, இவற்றை அதிகரிக்கவேண்டுமெனக் கம்பெனி கோரியது. ஐரோப்பா தவிர, பிற இடங்களுடன் நடந்த வாணிபமனைத்துக்குமான முற்றுரிமையைத் தனக்கு அளித்தால், அரசாங்கக் கடன்கள் அத்தனையும் மேற்கொள்வதாக அக் கம்பெனி கூறியது. இதை அரசாங்கம் ஒப்புக்

8

கொண்டது. இக் கம்பெனியின் இலாபம் பன்மடங்கு பெருகுமெனப் பொதுமக்கள் எதிர்பார்த்தனர். கம்பெனிப் பங்குகளில் துணிகர வாணிபம் (speculation) தோன்றியது; முட்டாள்தனமாகப் பலருடைய செல்வம் இதில் மறைந்தது; பல மோசக்காரர்களுக்குப் பணம் சேர்ந்தது. குமிழிபோல் பெருத்த இவ் வாணிபம் உடைந்ததும் கம்பெனி பழைய வியாபாரம்மட்டும் செய்யுமாறு கட்டுப் படுத்தப்பட்டது. 1748-ல் ஆசியண்டோ உரிமையின் காலம் நீடிக்கப்பட்டபோதும், ஸ்பெயின் 1,00,000 பவுன் கொடுத்து அதைப் பெற்றுக்கொண்டுவிட்டது. 1807 வரை கம்பெனி முதன் முதலில் தான் பெற்ற உரிமைகளை வைத்திருந்தது.

பதினேழாம் நூற்ருண்டில் பலத்த கண்டனத்துக்கு ஆளாகியும் இக் கம்பெனிகள் தொடர்ந்து தம் வணிகத்தைச் செய்துவந்தன. அப்போது வெளிநாட்டு வாணிபம் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று கருதப்பட்டது. பதினெட்டாம் நூற்ருண்டில், கம்பெனிகள் தம் கட்டுப்பாடுகளையும் விதிகளையும் நிறைவேற்றத் தவறியது புலனுயிற்று. கம்பெனிகளின் அலுவலர்களே சொந்த வாணிபத்தின் மூலம் பொருளீட்டிப் பணக்காரராயினர். தாம் வேலை பார்த்த கம்பெனிகளின் நலத்தை அவர்கள் பொருட்படுத்தவில்லை. போட்டியிடும் தனி வணிகர்களை அகற்றவும் முடியவில்லை. வியாபாரிகள் மீது கட்டுப்பாடு தேவையா என்ற கேள்வியும் எழுந்தது. வியாபாரத்தைக் கட்டுப்படுத்திஞல் அதன் அளவு குறையும். ஆனுல், சரியோ தப்போ, கட்டுப்பாடுகள் விதிப்பதைவிட அவையின்றி வியாபாரத்தின் அளவு பெருகுவதை மக்கள் ஆதரித்தனர். மெர்க்கன்டலிசக் கொள்கைக்கு எதிராகத் தலையிடாமைக் கொள்கையின் கோட்பாடுகளுக்கு ஆதரவு பெருகியபோது கம்பெனிகள் தம் உரிமைகளை நிலைநாட்ட முடியாமல் கஷ்டப்பட்டன. விசேஷ காரணங்களுக்காகச் சில கம்பெனிகள்மட்டும் தொடர்ந்து நடந்தன; பெரும்பாலானவை மூடப்பட்டு வாணிபத்தில் அனைவரும் ஈடுபட வழி உண்டாயிற்று.

10. கப்பல் போக்குவரவு ஏற்பாடுகள்

(The Navigation System)

நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையான அளவு கப்பற்படை வலிமை பெறுமாறு ஆங்கிலக் கப்பல் தொழிலை வளர்ப்பது வர்த்தகத் தத்துவத்தின் ஒரு குறிக்கோளாகும். இதற்காக, வரிசையாக இயற்றப்பட்ட பல சட்டங்கள் இக் குறிக்கோளை அடைய அரசாங்கம் கொண்டிருந்த உறுதியைக் காட்டுகின்றன. இச் சட்டங்களில் இதற்கான பல வழிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முதற் கடற்கடவுச் சட்டம் (Navigation Act) *1381*-ல் இரண்டாம் ரிச்சர்டின் ஆட்சிக் காலத்தில் வெளிவந்தது. ஏற்றுமதி இறக்குமதிகள் அனைத்தும் ஆங்கிலக் கப்பல்களிலேயே எடுத்துச் செல்லப்படவேண்டும் என்று அது கூறியது. இச் சட்டம் நிச்சயமாக அமல் செய்யப்படவில்லை; போதுமான ஆங்கிலக் கப்பல்கள் இல்லாமையால் அதைச் செயலாற்றுவதும் முடியாமல் இருந்தது. *1382*-ல் ஆங்கிலக் கப்பல்கள் இல்லாவிடில் வெளிநாட்டுக் கப்பல்களில் பொருள் ஏற்றச் சட்டம் அனுமதி தந்தது. உடனே செயலாற்றப்படவேண்டிய சட்டம் என்பதைவிட, எதிர் காலத்தில் இங்கிலாந்து அடைய முயலவேண்டிய ஒரு குறிக்கோள் என்பதுதான் இச் சட்டத்தின் பெருமையாகும்.

1485-ல் மற்றொரு சட்டம் வந்தது. காஸ்கனியிலிருந்து (Gascony) இறக்குமதி செய்யப்பட்ட மதுவை ஆங்கிலக் கப்பல்களில்தான் ஏற்றி வரவேண்டும் என்று அது கூறியது. மூன்று ஆண்டுகளுக்குப் பின் அத்தகைய கப்பல்கள் ஆங்கில மாலுமிகளால்தான் இயக்கப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டது. இச் சட்டங்களும் தீவிரமாகச் செயலாற்றப்படவில்லை. ஆனால், *1381*ஆ

சட்டத்தைப்போல அடியோடு புறக்கணிக்கப்படவில்லை. 1532, 1540 ஆண்டுகளில் மேலும் இரு சட்டங்கள் வந்தன. ஆனால், அவை இரு காரணங்களால் பலனளிக்கவில்லை. எட்டாம் ஹென்ரி இச் சட்டத்தை மீறுவதற்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கிப் பணம் சேர்த்தார். தவிர, அந்நிய நாடுகளின் மன்னர்கள் இச் சட்டங்களை விரும்பாததால், ஆங்கிலக் கப்பல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கலாயினர். இதனால், எலிசபெத் அரசி இச் சட்டங்களின் கொள்கைகளைத் தொடர்ந்து ஆதரிக்க மறுத்தாள். 1569-ல் அவை ரத்தாயின.

ஆனால், அக் காலத்தில் கட்டுப்பாடுகளுக்கு மக்களது ஆதரவு இருந்தது. எனவே, ஒரு கொள்கை கைவிடப்பட்டதும் உடனே வேறொரு கொள்கை மேற்கொள்ளப்பட்டது. 1559-ல் ஆங்கிலக் கப்பல்களில் வந்தவற்றைவிடப் பிற கப்பல்களில் வந்த பொருள்கள் மீது சுங்கவரி அதிகமாக வசூலிக்குமாறு உத்தரவு இடப்பட்டது. 1563-ல் கரையோரக் கப்பல் போக்குவரத்து ஆங்கிலக் கப்பல்களுக்காக ஒதுக்கப்பட்டது. ஆறும் எட்வர்டு துவக்கிவைத்த 'மீன் நாட்கள்' (இறைச்சியை உண்ணக்கூடாத நாட்கள்) முறை எலிசபெத் காலத்திலும் தொடர்ந்து நடந்தது; இதனால், ஆழ்கடல் மீன் பிடிப்பு வளர்ந்து மாலுமிகளுக்கு நல்ல பயிற்சி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இவ் விதிகள் பல சமயங்களில் மீறப்பட்டிருக்கலாம்.

ஸ்டுவர்ட் மன்னர்கள் காலத்தில் ஆங்கிலக் கப்பல்கள் மேலும் பயன்படுத்தப்படுமாறு சில முயற்சிகள் செய்யப்பட்டன. அடிக்கடி இதுபற்றி அரசாங்க அறிக்கைகள் வெளிவந்தன. ஆனால், அவற்றை மீறும் வழக்கமும் தொடர்ந்து நடந்தது. குடியேற்றங்கள் முன்னேறத் தொடங்கியதும் அவற்றின் வாணிபத்தின்மீது கவனம் செலுத்தப்பட்டது. ஆங்கிலக் கப்பல்கள்தான் குடியேற்ற நாடுகளின் பொருள்களை ஏற்றிச் செல்லலாம் என விதிக்கப்பட்டது. குடியேற்ற நாடுகளிலிருந்து புகையிலை இங்கிலாந்துக்கு மட்டும்தான் ஏற்றுமதி செய்யப்படவேண்டும் என்று உத்தரவாயிற்று.

காமன்வெல்த் (Commonwealth) அமைக்கப்படும் வரை இந் நாட்டின் கப்பல் போக்குவரவுக் கொள்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன; அது நல்ல பலனளிக்கவும் இல்லை. பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட்டன; அறிக்கைகள் வெளிவந்தன; மன்றத்தினின்று (the Council) உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன;

ஆனால், அவை செயலாற்ற இயலாதவை எனப் புறக்கணிக்கப் பட்டன; அல்லது அவற்றை அமல் செய்யும் திறமை அரசாங்கத்துக்கு இல்லாததால் அவை மீறப்பட்டன; அல்லது அவற்றிலிருந்து விதி விலக்குப் பெற அனுமதிச் சீட்டுகளை அரசாங்கம் வழங்கி அவற்றைப் பயனற்றவையாக்கிவிட்டது.

அரசாங்க மன்றத்தின் (Council of State) அனுமதிச் சீட்டின்றி வெளிநாட்டுக் கப்பல்கள் இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளுடன் வாணிபம் செய்யலாகாதென 1650-ல் எச்சப் பாராளுமன்றத்தின் (Rump) ஒரு சட்டம் விதித்தது. இது டச்சுக்காரர்களுக்கு எதிராக வரையப்பட்ட சட்டம். இதன் பின்னர் 1651-ல் மேலும் பல நாட்டுக் கப்பல்களுக்கும் சேர்த்து மற்றொரு கடற்கடவுச் சட்டம் இயற்றப்பட்டது. முடியரசின் மீட்சிக்குப் (restoration) பின் இச் சட்டம் மாற்றப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இம் முறை கைவிடப்பட்ட வரை நாட்டின் கப்பல் போக்குவரவுக் கொள்கைக்கு இச் சட்டங்களே அடிப்படையாக அமைந்தன.

1651ஆம் ஆண்டுக் கடற்கடவுச் சட்டத்தில், வியாபார விஷயத்தில், ஐரோப்பாவுக்கும் தூரத்திலுள்ள பிற கண்டங்களுக்கும் ஒரு வேறுபாடு செய்யப்பட்டிருந்தது. ஐரோப்பிய நாடுகள் அல்லது அவற்றில் சில இங்கிலாந்துக்கு வியாபாரத்தில் போட்டியாளர்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் விதிகள் அமைக்கப்பட்டன. சில அவசியமான பொருள்களை இறக்குமதி செய்யக்கூடிய பிரதேசங்களாக ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா கண்டங்கள் கருதப்பட்டன. (ஐரோப்பியர்களின் குடியேற்ற நாடுகளின் கப்பல்களைத் தவிர) ஆசியக் கப்பல்களோ, ஆப்பிரிக்கக் கப்பல்களோ, அமெரிக்கக் கப்பல்களோ இங்கிலாந்தின் கப்பல்களுக்குப் போட்டியாக ஓடக்கூடும் என்ற எண்ணம் எழவேயில்லை.

இங்கிலாந்து, அயர்லாந்து (Ireland) அல்லது குடியேற்ற நாடுகளுக்கு (plantations) ஆசியா, ஆப்பிரிக்கா அல்லது அமெரிக்காவினின்று வரும் இறக்குமதிகளை ஆங்கிலக் கப்பல்கள் அல்லது குடியேற்ற நாடுகளின் கப்பல்களில்தான் ஏற்றி வரவேண்டும் என்று அச் சட்டம் விதித்தது. கப்பலின் சொந்தக்காரன், தலைவன், மாலுமிகளில் பெரும்பாலோர் இங்கிலாந்து அல்லது குடியேற்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அக் கப்பல் ஆங்கிலக் கப்பல் அல்லது குடியேற்ற நாட்டின் கப்பல் என அச் சட்டம் இலக்கணம்

கூறியது. அச் சமயம், உதாரணமாக, சீனப் பொருள்களை இங்கிலாந்துக்குச் சீனக் கப்பல்களில் ஏற்றிவரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படக் கூடும் என்பது எண்ணியே பார்க்கப்படவில்லை. அதைத் தடுக்கவும் இவ் விதி வரையப்படவில்லை. ஆங்கில வியாபாரத்தை டச்சுக்காரர் அல்லது பிற ஐரோப்பியர்களின் கப்பல்களில் ஏற்றி வருவதைத் தடுப்பதே இதன் நோக்கம். அயர்லாந்து இதில் சேர்க்கப்பட்டிருப் பதையும் ஆங்கிலக் கப்பல்களுக்குக் கிடைத்த உரிமைகளைக் குடியேற்ற நாடுகளுக்கும் அளிக்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். ஐரோப்பிய நாடுகளிலிருந்து இங்கிலாந்து, அயர்லாந்து அல்லது குடியேற்ற நாடுகளுக்கு இறக்குமதியாகும் பொருள்கள் ஆங்கிலக் கப்பல்களிலோ, பொருள்கள் வந்த நாட்டின் கப்பல்களிலோ அல்லது சில சமயம் எந்தத் துறைமுகத்தில் அப் பொருள்கள் ஏற்றப்படுகின்றனவோ அந்த நாட்டின் கப்பல்களிலோ ஏற்றிவரப் படலாம். எனவே, ஃபிரெஞ்சுப் பொருள்கள் ஆங்கிலக் கப்பல் களிலோ ஃபிரெஞ்சுக் கப்பல்களிலோ கொண்டுவரப்படலாம்; ஸ்வீடிஷ் பொருள்கள் ஆங்கிலக் கப்பல்களிலோ ஸ்வீடன் நாட்டுக் கப்பல்களிலோ கொண்டுவரப்படலாம். இதற்கு முந்தியதைப் போலவே இவ் உட்பிரிவின் நோக்கமும் பதினேழாம் நூற்றுண்டில் கப்பல் தொழிலில் பெருமளவுக்கு ஈடுபட்டிருந்த டச்சுக்காரரின் வியாபாரம் பெருகவொண்ணுமல் தடுப்பதுதான். ஆங்கிலக் கப்பல்களில் வரும் சரக்குகள் உற்பத்தியான நாடுகளிலிருந்தோ சாதாரணமாக அனுப்பப்படும் துறைமுகங்களிலிருந்தோ நேராக இங்கிலாந்துக்கு வரவேண்டுமேயன்றி, இடையில் எத் துறைமுகத் திலும் கப்பலுக்குக் கப்பல் மாற்றப்படக்கூடாது என்றும் உத்தர விடப்பட்டது. கப்பல்கள் நீண்ட தூரப் பயணங்களை மேற் கொள்ள ஊக்கமளிப்பதும் இச் சட்டத்தை மீறுவதைத் தடுப்பதுந் தான் இதன் நோக்கங்கள். இவ்வாறில்லாதிருந்தால், டச்சுக்காரர்கள் கீழைநாட்டுப் பொருள்களைத் தம் கப்பல்களில் தம் நாட்டுத் துறை முகங்களுக்குக் கொண்டுவந்துவிட்டு அவற்றுக்கும் இங்கிலாந்துக்கு மிடையே உள்ள குறுகிய கடலைக் கடக்கமட்டும் ஆங்கிலக் கப்பல் களில் அப் பொருள்களை ஏற்றிவிடுவர்; சட்டத்தின் குறிக்கோள் சிறிதும் நிறைவேருது போய்விடும். இவ் விதிக்குச் சில விலக்குகள் அளிக்கப்பட்டன. லெவாண்ட் சரக்குகளும் கிழக்கிந்தியப் பண்டங் களும் உற்பத்தியான நாடுகளினின்றே நேராகக் கப்பலில் வர வேண்டுமென்பதில்லை; அவை ஆங்கிலக் கப்பல்களில் கொண்டு வரப்பட்டால் போதும். ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகளின் குடி யேற்ற நாடுகளின் பொருள்களை முறையே அவ்விரு நாடுகளினின்று

ஆங்கிலக் கப்பல்களில் இங்கிலாந்துக்குக் கொண்டுவரலாம். இந் நாடுகள் தம் குடியேற்றங்கள் அயல் நாடுகளுடன் நேரிடையாக வாணிபம் செய்யலாகாது என்று தடை செய்திருந்ததால் இவ் விதி விலக்கு அவசியமாயிற்று. இத்தாலியிலிருந்து பட்டை (silk) நில மார்க்கமாக ஹாலந்து நாட்டுத் துறைமுகங்களுக்கு எடுத்துவந்து அங்கிருந்து இங்கிலாந்துக்குக் கொணரலாம். ஏற்கெனவே நடந்து வந்த மார்க்கத்தில் தொடர்ந்து வியாபாரம் நடக்கச்செய்த வழி இது. திமிங்கலக் கொம்பு (whalebone), எண்ணெய், காட் (cod), லிங்கு (ling), ஹெர்ரிங்கு (herring), பில்சர்டு (pilchard) மற்றும் பிற உப்பிட்ட மீன்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி இறக்குமதிக்கு ஆங்கிலக் கப்பல்களைத்தான் பயன்படுத்தவேண்டும் என்று இச் சட்டம் கட்டுப்படுத்தியது. இதன் விளைவாக, டச்சுக்காரர்களின் மீன் பிடிக்கும் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. கடைசியாக, கரை யோர வாணிபத்தில் அந்நியக் கப்பல்கள் ஈடுபடலாகாது என்றும் விதிக்கப்பட்டது.

1651ஆம் ஆண்டுக் கடற்கடவுச் சட்டத்தை ஓரளவுக்குச் செயலாற்ற முடியவில்லை. ஆகையால், அதன் விதிகள் சிலவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஸ்பெயினுடன் போர் மூண்ட போது யாருக்கெதிராக அச் சட்டம் இயற்றப்பட்டதோ அதே டச்சுக்காரர்களுக்கு அச் சட்டத்தை மீற ஆங்கிலேயர்கள் திருட்டுத் தனமாக உதவினர். டச்சுக் கப்பல்களில் இங்கிலாந்தின் வணிகப் பொருள்களை ஏற்றிச் சென்றால், ஸ்பானியர்களின் தாக்குதலுக்கு அது இலக்காகாது என்பது அதன் நோக்கம். மாலுமிகள் 'பெரும் பாலும்' (most part) ஆங்கிலேயர்களாக இருந்த கப்பல் ஆங்கிலக் கப்பல் என்ற இலக்கணம், திட்டமாக அவர்களது விகிதத்தைக் குறிப்பிடவில்லை. பொதுவாக அவ் விதியை யாரும் பொருட் படுத்தவில்லை. இவ்வாறு சட்டம் புறக்கணிக்கப்படுவதைக் கண்டு மக்கள் வருத்தம் கொண்டனர். 1660-ல் 1651-வது ஆண்டுச் சட்டத்தை மறுபடி நிறைவேற்றவேண்டி வந்தபோது அதன் நடை முறையின் அனுபவத்தில் அதைத் திருத்தியமைக்க முயற்சி செய்யப் பட்டது.

1660ஆம் வருஷத்துக் கடற்கடவுச் சட்டம் பல முக்கியமான புது விதிகளைக் கொண்டிருந்தது.[1] ஆங்கிலக் கப்பலின் இலக்கணம்

[1] அரசாங்கம் மாறியதால், சட்டத்தின் வாக்கியத்திலும் 1650ஆம் சட்டத்திலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. உதாரணமாக, 'மாட்சிமை தங்கிய மன்னருக்குச் சொந்தமான பிரதேசங்கள்' என்பதற்குப் பதிலாக

மேலும் தெளிவாகக் கூறப்பட்டது. ஒரு கப்பலின் சொந்தக்காரன், தலைவன், மற்றும் அதன் மாலுமிகளில் நான்கில் மூவர் ஆங்கிலேயர்களானால் அது ஆங்கிலக் கப்பலாகும். சிலவற்றைப் பொறுத்தவரை அவை இங்கிலாந்தில் கட்டப்பட்ட கப்பல்களாக இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டது. குடியேற்ற நாடுகளின் ஏற்றுமதி இறக்குமதிகள் ஆங்கிலக் கப்பல்களிலாவது, குடியேற்ற நாடுகளின் கப்பல்களிலாவது ஏற்றிச் செல்லப்படலாம்.[1] இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளில் அயல்நாட்டு வணிகர்களோ அவர்களது முகவர்களோ (agents) வசிக்கலாகாது என்று விதிக்கப்பட்டது. அந் நாடுகளிலிருந்து இங்கிலாந்து, அயர்லாந்து அல்லது மற்றுமொரு குடியேற்ற நாட்டுக்குமட்டுமே அனுப்பப்படக்கூடிய பொருள்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன. இப் பட்டியலில் சர்க்கரை, புகையிலை, பஞ்சு, நீலி, இஞ்சி, மஞ்சள் மரம் (fustic)[2] பிற சாய மரங்கள் ஆகியவை சேர்ந்திருந்தன. இப் பட்டியலில் சேராத பொருள்களை ஆங்கில அல்லது குடியேற்ற நாட்டுக் கப்பலில் வேறு நாடுகளுக்கு அனுப்பலாம்.[3]

ஐரோப்பாவிலிருந்து பொருள்கள் இறக்குமதிபற்றிய விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. பட்டியலில் கணக்கிடப்பட்ட சில (பாய்மரம், மரம், உப்பு, தார், கீல் (pitch), ரோசினம் (resin), ஹெம்ப் நார் (hemp), ஃபிளாக்ஸ் நார் (flax), உலர்ந்த திராட்சை, அத்திப் பழம், ப்ரூன் பழவற்றல் (Prunes), ஆலிவ் எண்ணெய், கோதுமையும் பிற தானியங்களும், சர்க்கரை, பொடாஷ் உப்பு (potash), மது வகைகள் (wines), காடி (vinegar), சாராயங்கள் (spirits) ஆகிய பொருள்களை இங்கிலாந்துக்கு ஆங்கிலக் கப்பல்களில்தான் எடுத்துவரவேண்டும். ரஷ்யாவிலிருந்து எந்தப் பொருளையுமே ஆங்கிலக் கப்பல்களில்தான் கொண்டு வர வேண்டும். துருக்கியப் பேரரசைச் சேர்ந்த நாடுகளின் பொருள்களை ஆங்கிலக் கப்பல்களிலோ அல்லது அந் நாட்டுக் கப்பல்களிலோ கொண்டு வரலாம். ஆனால், அக் கப்பல்கள் அவற்றின் சொந்தக்காரர், மாலுமிகள்பற்றிச் சட்டம் கூறும் ஷரத்துக்கு ஏற்றதாக

'காமன்வெல்த்துக்குச் சொந்தமான பிரதேசங்கள்' என்று எழுதப்பட்டது.

[1] எனவே, குடியேற்றத் துறைமுகங்களில் புயல் காரணமாகச் சென்றாலொழிய அன்னியக் கப்பல் ஏதும் இருக்கப் பிரமேயமில்லை.

[2] 'பஸ்டிக்' என்பது லேசான மஞ்சள் சாயம் தரும் ஒருவகை மரம்.

[3] ஃபினிஸ்டர் முனைக்குக் (Cape Finisterre) கீழுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதியான பொருள்களுக்குமட்டும் இச் சலுகை உண்டு எனப் பின்னர் வந்த சட்டமொன்று விதித்தது.

இருப்பதோடு இங்கிலாந்திலோ அத் துருக்கிய நாடுகளிலோ கட்டப்பட்டிருக்கவேண்டும். இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் ஆங்கிலக் கப்பல்களில் வரும் பொருள்களைவிட, வேறு கப்பல்களில் வருவனவற்றுக்குச் சுங்க வரி அதிகமாக விதிக்கப்படும்.[1] அந்நியர் கப்பல்களால் பிடிக்கப்பட்ட காட் (cod), பிற ஆழ்கடல் மீன்கள், எண்ணெய், திமிங்கலக் கொம்பு, திமிங்கலக் கொழுப்பு (blubber) ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டால், அவற்றுக்கு இரு மடங்கு அந்நியர் வரி (aliens duty) செலுத்தப்படவேண்டும். ஆங்கிலக் கப்பல்களே மீன் பிடிக்கவும் அதை ஏற்றிவரவும் பயன்பட்டால் டச்சுக்காரருக்கு இத் துறையில் ஒரு வாய்ப்பும் இல்லாது போய் விடும் என்று கொண்டு டச்சுக்காரரின் ஆழ்கடல் மீன் பிடிப்பை மேலும் ஒடுக்க இவ் விதி கொண்டுவரப்பட்டது.

1660ஆம் வருடத்துச் சட்டத்தின் அடிப்படையில் ஆங்கிலக் கப்பல் தொழில் சுமார் இரு நூற்றுண்டுகளுக்குக் கட்டுப்படுத்தப் பட்டது. ஆனால், அடிக்கடி இக் கப்பல் சட்டத்துக்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன ; புதுச் சேர்க்கைகளும் செய்யப்பட்டன. பட்டியலில் சேர்ந்த பொருள்களிலும் சில மாற்றங்கள் செய்யப் பட்டன. 1662-ல் இங்கிலாந்திலோ அல்லது ஒரு குடியேற்ற நாட்டிலோ கட்டப்பட்டு, குடிகளுக்குச் சொந்தமாகவும் அவர்களால் இயக்கப்படுவதாகவும் உள்ள கப்பல்தான் ஆங்கிலக் கப்பல் என்று கருதப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. 1651, 1660 வருடத்துச் சட்டங்களின்படி குடியேற்றக் கப்பல்கள் அல்லது ஆங்கிலக் கப்பல்களில் ஐரோப்பாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட குடியேற்ற நாடுகள் இனிமேல் அவற்றை நேராக வாங்காது, இங்கிலாந்திலிருந்துதான் பெறவேண்டும் என்று 1664-ல் விதிக்கப்பட்டது. 1673-ல் குடியேற்ற நாடுகள் ஒன்றுக்கு ஒன்று பட்டியலில் சேர்ந்த பொருள்களைச் சுங்க வரி செலுத்தித் தான் அனுப்பவேண்டுமென உத்தரவாயிற்று. குடியேற்ற நாட்டுப் பொருள்களின் பட்டியலில் முதலில் குறிப்பிடப்பட்டவையோடு மேலும் பல பொருள்கள் பதினெட்டாம் நூற்றுண்டில் சேர்க்கப் பட்டன. அவற்றில் முக்கியமானவை அரிசி, சர்க்கரைப் பாகு (molasses), கப்பல் சாமான்கள் (naval stores) ஆகியவை. ஆனால், வால்போலின் (Walpole) காலத்தில் இக் கட்டுப்பாட்டிலிருந்து ஓரளவுக்கு அரிசி நீக்கப்பட்டது ; மத்தியதரைக் கடல் நாடுகளுக்கு

[1] ஸ்காட்லாந்தின் கப்பல்கள் அந் நாட்டின் உற்பத்தியை எடுத்து வந்தால் அதிக வரி விதிக்கப்படுவதில்லை. வேறு விஷயங்களுக்கு ஸ்காட்லாந்து அந்நிய நாடாகக் கருதப்பட்டது.

அதை நேரிடையாக அனுப்ப அனுமதிக்கப்பட்டது, 1739-ல் சர்க்கரை அப் பட்டியலினின்று நீக்கப்பட்டது. 1651, 1600 ஆகிய வருடங்களில் வந்த சட்டங்களில் அயர்லாந்தின் பெயரும் சேர்க்கப் பட்டிருந்தது. ஆனால், குடியேற்ற நாட்டு வாணிபத்தைப்பற்றிய 1663ஆம் வருடத்துச் சட்டத்தில் அதன் பெயர் குறிப்பிடப்பட வில்லை. 1660ஆம் வருடச் சட்டத்திலிருந்து அயர்லாந்தின் பெயரை 1670ஆம் வருடச் சட்டம் சொல்லி நீக்கியது. அப்போதைக்கப் போது சில சிறு உரிமைகள் அதற்குக் கிடைத்ததே தவிர, அயர்லாந்து இங்கிலாந்துக்குச் சமமாக 1779 வரை கருதப்படவில்லை.

1660ஆம் வருடத்துக் கடற்கடவுச் சட்டம் ஸ்காட்லாந்தை அந்நிய நாடாகக் கருதியது. ஆனால், இங்கிலாந்துக்கு ஸ்காட்லந்தைச் சேர்ந்த பொருள்கள் அந் நாட்டுக் கப்பல்களில் வந்தால், அந்நியர் வரி செலுத்த வேண்டியதில்லை. 1661-ல் ஸ்காட்லாந்தின் பாராளு மன்றம் ஒரு கடற்கடவுச் சட்டத்தை இயற்றியது. அதன்படி ஸ்காட் லாந்தின் இறக்குமதிகள் அவை உற்பத்தியான நாட்டின் கப்பல் களிலோ ஸ்காட்லாந்தின் கப்பல்களிலோதான் கொண்டுவரப்பட வேண்டும். அன்றி, இங்கிலாந்து உட்பட வேறு நாடுகளின் கப்பல் களில் கொண்டுவரப்பட்டால், அந் நாட்டின் துறைமுகங்களில் ஸ்காட்லாந்தின் கப்பல்களுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டா லொழிய, அப் பொருள்கள்மீது இரு மடங்கு வரி விதிக்கப்படும் என்று அச் சட்டம் கூறியது. 1663-ல் இங்கிலாந்திலிருந்து வந்த இறக்குமதிகள்மீது மேலும் வரி விதிக்கப்பட்டது. ஸ்காட்லாந்தின் வணிகக் கப்பல் தொழிலைப் பெருக்குவதில் இக் கொள்கை பலனளிக்க வில்லை; இதனால், ஸ்காட்லாந்துக்குத்தான் நஷ்டம். 1707-ல் ஸ்காட் லாந்து இணைந்த பின், இங்கிலாந்தின் கப்பல் போக்குவரவு விதிகள் கிரேட் பிரிட்டன் முழுவதற்கும் பொருந்தின.

'இந் நாட்டின் செல்வம், பாதுகாப்பு, வலிமை ஆகியவற்றுக்கு மிகவும் அவசியமான இந் நாட்டுக் கப்பல் தொழிலை ஊக்குவித்தலும், கப்பல்களின் எண்ணிக்கையைப் பெருக்குவித்தலும்' கடற்கடவுச் சட்டங்களின் நோக்கம் என்று 1660ஆம் வருடத்துச் சட்டத்தின் முக வுரை கூறிற்று. இத்தகைய குறிக்கோள் வர்த்தகத் தத்துவத்தின் பொதுக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் பொருந்திற்று. எவ்வள வுக்கு இக் கடற்கடவுச் சட்டங்கள் பலனளித்தன என்பது நவீன பொருளாதார வரலாற்றில் மிகத் தீவிரமாக விவாதிக்கப்பட்ட பிரச் சினைகளில் ஒன்றாகும்.

பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும், பதினெட்டாம் நூற்றுண்டு முழுவதிலும் ஆங்கிலக் கப்பல்களின் மொத்த எடையின் (tonnage) அளவு பெருகி வந்ததில் ஐயமில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆங்கிலக் கப்பல் தொழில் உலகில் முதலிடம் பெற்றது. எனவே, கடற்கடவுச் சட்டங்களின் முக்கியக் குறிகோள் பூர்த்தியாகிவிட்டது என்று கூறப்படுகிறது. 'முன்னுல் நடந்த நிகழ்ச்சி பின்னுல் நிகழ்ந்ததற்குக் காரணம்' (post hoc ergo propter hoc) என்ற வாதம் எப்போதும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் கவர்ச்சிகரமாக இருக்கும். அதனுலேயே அதை அவசரப்படாமல் ஆய்ந்து பார்க்கவேண்டும். ஆனுல், அவ்வாறு நிகழவில்லை என்று நிரூபிப்பது அதை எதிர்ப்பவர்களின் கடமையாகும். அதற்கு அவர்கள் தயாராக உள்ளனர். கடற்கடவுச் சட்டங்களால் கப்பல்களின் அளவு அதிகரிக்கவில்லை; கடற்கடவுச் சட்டங்கள் இருந்தபோதும் அதை மீறிக் கப்பல்களின் எண்ணிக்கை உயர்ந்தது என்பது அவர்கள் கூற்று.

முதலாவதாக, பதினேழாம் நூற்றுண்டில் கப்பல் தொழிலில் டச்சுக்காரர் அடைந்த மேன்மை தாற்காலிக சந்தர்ப்பங்களின் விளைவேயன்றி, அது நிரந்தரமாக இருந்திருக்க முடியாது என்பது அவர்களது கருத்து.[1] இந் நூற்றுண்டின் முதற் பகுதியில் முப்பதாண்டுப் போரில் (Thirty Years War) மேற்கு ஐரோப்பாவின் பல நாடுகளும் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்தபோது, அவர்களது போட்டியின்றிக் கப்பல் தொழிலைப் பெருக்கக்கூடிய வாய்ப்பை டச்சுக்காரர் பயன்படுத்திக்கொண்டனர். இதே சமயத்தில் அரசியலமைப்புபற்றிய தகராறு ஒன்று இங்கிலாந்தில் நடந்துகொண்டிருந்தது. அதன் முடிவில், மாபெரும் புரட்சியும் முடியாட்சியின் ஒழிப்பும் ஏற்பட்டன. முப்பதாண்டுப் போரினுல் களைப்படைந்தபோதும் அதனின்று மீண்ட ஐரோப்பிய நாடுகளும், தம் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்ட இங்கிலாந்தும் மீண்டும் வாணிபப் போட்டியில் பங்கு கொண்டன. கோல்பர்ட் (Colbert) காலத்தில் ஃபிரான்சும், கடைசி ஸ்டூவர்ட் மன்னர்கள், விக்குகள் (Whigs) ஆகியோரின் காலத்தில் இங்கிலாந்தும் வாணிபத்தைப் பெருக்கத் தொடங்கியபோது, டச்சுக்காரர்கள் கப்பல் துறையில் தாம் அடைந்திருந்த முன்னேற்றத்தை இழந்தனர்.

[1] மிகவும் பாடுபட்டபோதும் டச்சுக்காரர்கள் 1652—74 காலத்தில் நடந்த மூன்று ஆங்கிலோ-டச்சுப் போர்களிலும் இங்கிலாந்திடம் தோற்றனர். அக் காலத்தில் ஆங்கிலக் கப்பற் படையின் வலிமைக்குக் கடற்கடவுச் சட்டங்களைக் காரணமாகக் காட்டமுடியாது.

அப்போது வியாபாரத்தின் அளவு, முக்கியமாகத் தானிய ஏற்று மதியின் அளவு பெருகிவந்தது. அதன் விளைவாகவே ஆங்கிலக் கப்பல்களின் எண்ணிக்கை உயர்ந்தது என்றும் வாதிடப்படுகிறது. பிற நாடுகளிலும், முக்கியமாக ஃபிரான்சிலும், கடற்கடவுச் சட்டங்களின் உதவியின்றியே கப்பல்களின் டன் அளவும் வியாபாரமும் பெருகியதை இங்குக் கவனிக்கவேண்டும்.

பால்டிக் நாடுகளுடன் இங்கிலாந்து நடத்திய வாணிபத்துக்குக் கடற்கடவுச் சட்டங்கள் தீங்கிழைத்தது உண்மையே. அநேகமாக வெளி நாடுகளில் கட்டப்பட்ட கப்பல்களிலேதான் ஈஸ்ட்லண்டு கம்பெனியின் வாணிபம் நடந்துவந்தது. 1662-க்குப் பின், அக் கப்பல்களைப் பயன்படுத்த முடியவில்லை. ஆனால், இங்கிலாந்தில் கட்டப்பட்ட கப்பல்கள் பால்டிக் வாணிபத்தின் விசேஷ தேவைகளுக்கு ஏற்றவாறு அமையவில்லை. இவ் வாணிபம் ஸ்வீடன், டென்மார்க், ஹாலந்து நாடுகளைச் சேர்ந்தவர்கள் கைக்கு மாறியது. அங்கிருந்து இங்கிலாந்து இறக்குமதி செய்த கப்பல் சாமான்களின் விலையை அவர்கள் உயர்த்தினர். எனவே, கப்பல் போக்கு வரவுக் கொள்கை நடைமுறையில் பால்டிக் வணிகத்தைப் பொறுத்தவரை இங்கிலாந்துக்குப் பாதகமாகவும் அதன் போட்டியாளருக்குச் சாதகமாகவும் அமைந்தது எனலாம்.

ஆங்கிலக் கப்பல்கள் போதுமான அளவு இல்லாமையால், கடற்கடவுச் சட்டங்களை நிறைவேற்றியதால், பொதுவாகக் கப்பல் கட்டணங்கள் உயர்ந்தன என்றும் அவற்றைக் கண்டிப்பவர்கள் கூறினர். கட்டணங்கள் உயர்ந்ததால், ஆங்கிலத் தொழில்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களின் அடக்கச்செலவு அதிகமாயிற்று. இதன் விளைவாக ஏற்றுமதி செய்யப்பட்ட ஆங்கிலப் பொருள்களின் விலை உயர்ந்து அவற்றின் விற்பனை குறைந்தது. இச் சட்டங்களின் காலத்தில், ஆங்கில வாணிபம் வளர்ந்தது உண்மையே; ஆனால், கப்பல் வாணிபத்தின்மீது இத்தகைய தளைகள் இல்லாமல் இருந்தால் இவ் வளர்ச்சி மேலும் அதிகமாக இருந்திருக்கும் என்று கூறப்பட்டது.

கப்பற் போக்கு வரவுக் கொள்கையால் குடியேற்ற நாடுகளுக்கு ஏற்பட்ட விளைவுகளைக் கருதவேண்டும். பதினேழாம் நூற்றுண்டில் இங்கிலாந்தின் மக்கள் குடியேற்ற நாடுகளைப் புதிதாகத் தோன்றி வளரும் தனி நாடுகளாகக் கருதாது, தாய் நாட்டின் புற ஸ்தலங்களாகவே கருதினர். வெப்ப நிலை அல்லது வேறு காரணங்களால் இங்கி

லாந்தில் உற்பத்தி செய்ய முடியாத முக்கியமான பொருள்களை உற்பத்தி செய்ததாலும், வளர்ச்சி பெற்றபின் ஆங்கிலத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளை வாங்கிக்கொண்டதாலும் அவை மதிக்கப்பட்டன. அவற்றின் வாணிபத்தை இங்கிலாந்து கட்டுப்படுத்துவது நியாயமாகக் கருதப்பட்டது. எனவே, முன்னரே கூறியபடி 1660ஆம் வருடத்துச் சட்டத்தின்படி, பட்டியலில் சேர்க்கப்பட்ட பொருள்களின் வாணிபம் கட்டுப்படுத்தப்பட்டது. குடியேற்றங்களைத் தோற்றுவிக்கச் செலவு செய்ததாலும் அவற்றின் பாதுகாப்புக்குத் தொடர்ந்து பொறுப்பேற்றிருப்பதாலும் தாய்நாட்டுக்கு அதன் குடியேற்ற நாடுகளின் வாணிபத்தின் விசேஷ உரிமைகள் இருப்பது நியாயமாகக் கொள்ளப்பட்டது. அந்நிய நாடுகள் குடியேற்ற நாட்டுப் பொருள்களை நேராக வாங்க அனுமதிக்கப்படவில்லை. அவற்றை ஆங்கில வணிகர்கள் வாங்கி, அந்நிய நாடுகளுக்கு விற்று, அதனாலான இலாபத்தைச் சம்பாதித்தனர். இம் முறையினால் அப் புதுப் பகுதிகளில் குடியேறியவர்களுக்கும் சில நன்மைகள் இருந்தன. ஸ்பெயினும் போர்ச்சுகலும் தம் குடியேற்ற நாடுகளின் மீது விதித்தது போல, முழுக் கட்டுப்பாட்டை இங்கிலாந்து தன் குடியேற்ற நாடுகளின்மீது விதிக்கவில்லை. தானியம், மரம் போன்ற பல முக்கியமான பொருள்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. 1739-க்குப் பின், சர்க்கரையும் பட்டியலினின்று நீக்கப்பட்டது. பட்டியலில் சேர்க்கப்பட்ட பொருள்கள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட போது அந்நிய நாட்டுப் பொருள்களைவிடக் குறைவாக வரி செலுத்தின. சில பொருள்களை, முக்கியமாகப் புகையிலையைப் பொறுத்த வரை இங்கிலாந்தின் போட்டியினின்றுகூடக் குடியேற்ற நாடுகள் பாதுகாக்கப்பட்டன. இவற்றைவிட முக்கியமாகப் பட்டியல் பொருள்களின் (enumerated goods) வாணிகம் செய்தவனுக்குக் கட்டுப்பாடுகள் இருந்தபோதும் நேர்மையான விலையும் நிச்சயமான விற்பனையும் கிடைத்தது. பதினேழாம் நூற்றாண்டில் வாணிபத்துக்கு இவையே மிக முக்கியத் தேவைகளாகக் கருதப்பட்டன.

குடியேற்ற நாடுகள் சிறியவைகளாக இருந்த வரை, இப் 'பழைய குடியேற்றத் திட்டம்' நன்கு நடந்துவந்தது. குடியேறியவர்கள் தாய் நாட்டிடம் பேரன்பு கொள்ளாவிடினும் மிக்க அதிருப்தியும் கொள்ளவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் விக்குகளின் (Whigs) ஆட்சிக் காலத்தில் குடியேற்ற நாடுகளுக்கு உள்ளும் வெளியிலும் கள்ளக் கடத்தல் நடந்துவந்தது. இச் சட்டங்கள் தீவிரமாக அமலாக்கவும்படவில்லை.

1764-ல் குடியேற்ற நாடுகளைப்பற்றிய கடற்கடவுச் சட்ட விதிகளைத் தீவிரமாக அமல் செய்யவேண்டுமென கிரென்வில் (Grenville) உத்தரவிட்டார். இதற்கு வன்மையான எதிர்ப்பு இருந்தது. அமெரிக்கக் குடியேற்றங்களுக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்பட்ட தகராறுக்குக் காரணமாக இருந்தவற்றில் வரிப் பிரச்சினை மிகவும் பிரசித்தமாகத் தெரிந்தாலும், குடியேற்ற வாசிகளின் அதிருப்திக்கு முக்கியக் காரணம் மறையும் தருவாயிலிருந்த இவ் வாணிப விதிகளைப் புதுப்பித்ததுதான் என்பதில் ஐயமில்லை.

'பழைய குடியேற்றத் திட்டத்தின்' (Old Colonial system) தோல்வியை அமெரிக்கப் புரட்சியின் வெற்றி நிரூபித்தது. இதற்குள், வர்த்தகத் தத்துவத்தின் அடிப்படையே தவறு என்று கண்டனம் எழுந்தது. கட்டுப்பாடுகளின் அமைப்பே பயனற்றது என்று அதன்மீது மக்கள் அவநம்பிக்கை கொள்ளலாயினர். உடனே கடற்கடவுச் சட்டக் கொள்கை தளர்த்தப்படவில்லை. ஆனால், அடுத்த சில ஆண்டுகளில் பல சில்லறை மாறுதல்கள் செய்யப்பட்டுவிட்டன. ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களினின்று பொருள்கள் ஆங்கில அல்லது காலனிக் கப்பல்களில்தான் வரவேண்டும் என்ற விதி, அமெரிக்கப் பொருள்கள் இங்கிலாந்துக்கு ஆங்கிலக் கப்பல்களைத் தவிர பிறவற்றில் வருவதைத் தடுத்தது. 1796-ல் ஐரோப்பியக் கப்பல்களுக்குப் பொருந்திய அதே விதிகளின்படி, அமெரிக்கக் கப்பல்கள் ஆங்கிலத் துறைமுகங்களுக்கு வர அனுமதிக்கப்பட்டன. முதலில் ஏற்பட்ட விதியின் மாற்றம் என்று இதைச் சொல்வதைவிட அமெரிக்க ஐக்கிய நாடுகள் விடுதலை பெற்றதன் விளைவாக மாறிய சூழ்நிலைக்கேற்பச் செய்யப்பட்ட திருத்தம் என்று இதைக் கொள்ளலாம். முன்னரே கூறியபடி, அக் கடற்கடவுச் சட்டம் வரையப்பட்டபோது ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் அமெரிக்கக் கண்டங்களிலிருந்து பொருள்களை (ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களன்றிப் பிற) உற்பத்தி செய்த நாடுகளின் கப்பல்களில் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படக்கூடும் என்று எண்ணப்படவே யில்லை. 1796-ல் மேற்கிந்தியத் தீவுகளுடனும், 1808-ல் கனடாவுடனும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பல்களில் வாணிபம் நடத்த அனுமதித்தது, பழைய குடியேற்றத் திட்டத்தில் தோன்றிய பிளவாகும். 1808-ல் தீபகற்பப் போர் (Peninsular War) மூண்டதும் போர்ச்சுகீசிய ராஜ குடும்பம் பிரேசில் (Brazil) நாட்டுக்கு ஓடிவிட்டது. பிரேசில் விஷயமாகவும் கடற்கடவுச் சட்டத்தில் ஒரு மாறுதல் செய்யப்பட்டது; இங்கிலாந்துக்கும் பிரேசிலுக்கும்

இடையே நடந்த வாணிபத்தை இவ்விரண்டு நாட்டுக் கப்பல்களும் ஏற்றிச் செல்லலாம் என்று விதிக்கப்பட்டது.

1820-ல் சிடி ஆப் லண்டனிலிருந்து (City of London) வியாபாரத்தின்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கவேண்டுமென்று சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்றை, காமன்ஸ் சபையின் கமிட்டி ஒன்று ஆராய்ந்தது. அதன் விளைவாக 1822-ல் பழைய குடியேற்றத் திட்டத்தில் பெரிய மாறுதல்கள் செய்யப்பட்டன. ஆனால், அப்போதைக்குக் கப்பல் போக்குவரவுக் கட்டுப்பாடுகள் பெரும்பாலும் முன்னிருந்தபடியே விட்டுவைக்கப்பட்டன. குடியேற்ற நாடுகளின் பொருள்களின் பட்டியல் தயாரிப்பது அடியோடு நிறுத்தப்பட்டது. அந் நாடுகளில் உற்பத்தியான எந்தப் பொருளையும் எந்த அயல் நாட்டுக்கும் அனுப்பலாம். ஆனால், அவற்றை ஆங்கிலக் கப்பல்கள் அல்லது குடியேற்ற நாடுகளின் கப்பல்களிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பொறுத்தவரை 1796-ல் அனுமதிக்கப்பட்டவாறு அமெரிக்கக் கப்பல்களிலும் மட்டுமே ஏற்றிச் செல்லவேண்டும். மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் ஸ்பானிய ஆட்சியை எதிர்த்துச் சுதந்திரம் அடைந்தவையென அப்போது ஒப்புக்கொள்ளப்பட்ட நாடுகளின் கப்பல்களும் அவற்றுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடந்த வாணிபத்தில் ஈடுபடலாம். 1660-ல் சில ஐரோப்பிய நாடுகளின் வாணிபத்தின்மீது விதிக்கப்பட்ட விசேஷ கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. ஆனால், ஐரோப்பியப் பொருள்களின் பட்டியல் தொடர்ந்து இருந்து வந்தது.

காலம் மாறியதால் முன் இருந்திருக்கக்கூடிய நன்மைகளைத் தொடர்ந்து அக் கப்பல் போக்குவரவுக் கட்டுப்பாடுகளினின்று அடைய முடியாதென்பதை அனைவரும் உணர்ந்தனர். அக் கட்டுப்பாடுகளை இங்கிலாந்து தொடர்ந்து செயலாற்றியது பிற நாடுகளுக்கு ஆத்திரமூட்டியது. சில நாடுகள் இதற்குப் பழிவாங்கும் திட்டங்களை அமல் செய்யத் தொடங்கின. 1823-ல் வரிச் சலுகைகள் பரிமாற்றச் சட்டம் (Reciprocity of Duties) ஒன்றை அரசாங்கம் இயற்றியது. அந்நிய நாடுகளுடன் அந் நாட்டுத் துறைமுகங்களில் ஆங்கிலக் கப்பல்கள் பெறும் சலுகைகளுக்கு ஈடான உரிமைகளைத் தன் துறைமுகங்களில் அந் நாட்டுக் கப்பல்களுக்குத் தருவதாக இங்கிலாந்து அரசாங்கம் உடன்படிக்கை செய்துகொள்ள இச் சட்டம் வழி செய்தது. அடுத்த சில ஆண்டுகளில் வணிகக் கப்பலோட்டிய நாடுகள் பெரும்பாலானவற்றுடன் இத்தகைய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அயல் நாட்டுக் கப்பல்களில் பெரும் பகுதியை கடற்கடவுச் சட்டங்கள் கட்டுப்படுத்தாமையால் அச் சட்டங்களின் அழிவு காலம் இவ்வாறு நெருங்கியது. 1845-ல் அவற்றைச் சீராகச் சேர்ப்பதாகக் (codification) கூறிப் புதுப்பிக்க ஒரு முயற்சி செய்யப்பட்டது. அதைக் குடியேற்ற நாடுகள் தீவிரமாக எதிர்த்தன. அமெரிக்க ஐக்கிய நாடு தன் கப்பல்களின் எண்ணிக்கையை மிகவும் பெருக்கி வந்தது. அந் நாட்டுடன் தன்னால் நன்கு போட்டியிட முடியாமல், தன்னைக் கடற்கடவுச் சட்டங்கள் தடுப்பதாகக் கனடா (Canada) குறை கூறியது. கட்டுப்பாடின்றிப் போட்டியை அனுமதித்தால் இருக்கக்கூடியதைவிட அதிகமாகக் கப்பற் கட்டணங்கள் இருந்தன வாக மேற்கிந்தியத் தீவுகளும் புகார் செய்தன. இம் முறையீடுகளுக் குச் செவி சாய்க்கப்பட்டது. அப்போது தடையிலா வாணிபக் கொள்கைக்கு ஆதரவு வளர்ந்திருந்தது. கரையோரப் போக்குவரவு பற்றிய விதியைத் தவிர கடற்கடவுச் சட்டங்கள் 1849-ல் ரத்தாயின. 1854-ல் கரையோரப் போக்குவரவும் அனைவருக்கும் பொதுவாக்கப் பட்ட பின், இப் பிரசித்தமான கப்பல் போக்குவரவுச் சட்டங்கள் அடியோடு மறைந்தன.

11. தொழில்கள்மீது அரசாங்கக் கட்டுப்பாடு

(The Regulation of Industry by the State)

இடைக் காலத்தின் பிற்பகுதியில் தொழில்களைக் கில்டுகள் கட்டுப் படுத்தின. கில்டுகளோ அவை இருந்த ஊரின் நகராட்சியின் ஆதிக் கத்துக்கு ஏறக்குறைய உட்பட்டிருந்தன. பெரும்பாலும் தன் தேவை யனைத்தையும் அத் தலமே பூர்த்தி செய்யவேண்டியிருந்த காலம் அது. போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. பிற ஊர்களி லிருந்து வந்தவர்கள் 'அந்நியர்களாக'க் கருதப்பட்டுச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்பட்டனர். இந்தச் சூழ்நிலையில் தொழில்களை அவ்வத் தல நிருவாகமே கட்டுப்படுத்துவது இயல்பானது மட்டு மன்றித் தவிர்க்க முடியாததுமாகும். இடைக் காலத்தில் தேசிய உணர்ச்சி மிகவும் குறைவாக இருந்தது என்பது ஏற்கெனவே கூறப் பட்டது. அக் காலத்தின் இறுதியில் இங்கிலாந்தில் தேசிய உணர்ச்சி சிறிது தோன்றலாயிற்று. இது பல துறைகளில் காணப் பட்டது. தொழில் கட்டுப்பாட்டிலும் இது நன்கு புலப்பட்டது.

இடைக் காலத் தேவைகளுக்குத் தொழில்களைக் கில்டுகள் கட்டுப் படுத்துவது பொதுவாகப் போதுமானதாக இருந்தது. ஆனல், பதி னாறும் நூற்றாண்டில் கில்டுகள் நலியலாயின. ஏற்கெனவே குறிப் பிட்டபடி, அவற்றால் தொழில்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவற்றின் குறுகிய சர்வாதீன மனப்பான்மை காரணமாகத் தொழில் கள் பட்டயம் பெற்ற நகரங்களைவிட்டு வெளியேறின. அந் நகரங் களின் மக்கள் தொகையும் முக்கியத்துவமும் குறைந்துபோயின. பல தொழிற் கலைஞர்கள் புது நகரங்களில் குடியேறினர். அவற்றில் கில்டு ஆதிக்கம் இல்லை. வேறு சிலர், கிராமங்களில் குடியேறினர். இத்தகையவர்மீது எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. தத்தம் தொழில்

களில் அவர்கள் நல்ல பயிற்சி பெற்றிருந்தனர் என்பது நிச்சய மில்லை. அவர்களது பொருட்களின் தரம் குறைவு எனக் குறை கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலை தொடர்ந்து வழங்கி வருவதில் நியாயமில்லை. தொழில்கள் விஷயத்தில் அரசாங்கம் குறுக்கிட லாகாது என்ற கொள்கை அதற்கு வெகு காலத்துக்குப் பின்தான் தோன்றியது. ஆனால், அப்போதைய சூழ்நிலைக்கோ மேற்பார்வை யும் கட்டுப்பாடும் அவசியமாக இருந்தது. எனவே, தல அதிகாரிகள் தொடர்ந்து செய்ய முடியாத பணியை மத்திய அரசாங்கம் மேற் கொண்டது.

பிளான்டஜனட்ஸ் (Plantagenets) வம்சத்தினரைவிட டியூடர் மன்னர்கள் வலிமை மிக்கவர்கள். இவ் வல்லாட்சியின் காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். பிரபுக்கள், திருச்சபையினர் இவர் களின் சக்தியை இடைக் காலத்தில் அரசன் சமாளித்து நிற்கவேண்டி யிருந்தது. ரோஜப் போரில் பிரபுக்களின் வலிமை சிதறிப் போயிற்று. அவர்களது எண்ணிக்கை குறைந்தது. நாளடைவில் அரசனால் நியமிக்கப்பட்டு அவனுக்குக் கீழ்ப் படிந்து நடக்கும் புதுப் பிரபுத்துவம் ஒன்று தோன்றியது. ரோமுடனிருந்த உறவு பிளவு பட்டதும் தன் சுதந்திரத்தில் பெரும் பகுதியையும் செல்வத்தில் ஒரு பகுதியையும் திருச்சபை இழந்தது. சமயப் பிரபுக்கள், லௌகிகப் பிரபுக்கள் (lords spiritual and temporal) இருவருடைய வலிமை குன்றியதும் மன்னனது அதிகாரம் மேலோங்கியது. அதை எதிர்க்கு மளவுக்குப் பாராளுமன்றம் பலம் பெறவில்லை. டியூடர் ஆட்சியில் அவ்வாறு செய்ய அது சிறிதும் விரும்பவுமில்லை. அழைக்கப்பட்ட போது அப்போதைக்கப்போது பாராளுமன்றம் கூடிற்று; அரசனால் கொண்டுவரப்பட்ட சட்டங்களை இயற்றியது. அரசனது ஆதிக்கத் தின்கீழ் நாட்டை ஆண்ட அமைப்பு, ஒருசில பிரபுக்களையும் தலைமை அலுவலர்களையும் கொண்ட மன்றமாகும் (The Council). மன்றத் தின் உத்தரவுகளை அமைதிகாக்கும் நீதிபதிகள் நிறைவேற்றினர். மன்றம் மிகவும் பரிசீலித்த விஷயங்களில் தொழில் கட்டுப்பாடு ஒன்றாகும்.

இடைக் காலத்தில்கூட ஓரளவு தொழில்களை அரசாங்கம் மேற் பார்வை செய்து கட்டுப்படுத்தியது. ஃபிரான்சிலும் புனித ரோமப் பேரரசிலும், சாதாரணக் கோமக்களும் பெரிய பிரபுக்களுங்கூட, தம் மானிலங்களின் பணத்தைத் தாமே உண்டாக்கி வெளியிட்டனர். ஆனால், இங்கிலாந்தில் நார்மன் வெற்றிக்குப் பிறகு நாணய வெளியீடு அரசனின் முற்றுரிமையாயிற்று. நாணயம் உண்டாக்கிய முறை

மிக உயர்வாக இல்லை. மோசக்காரர்கள், அவற்றைக் கத்தரித்தும் பைகளில் போட்டுக் குலுக்கியும் ஒவ்வொன்றினின்றும் சிறிது பொன்னை அபகரித்துக்கொண்டனர். கூடுமானவரை இக் குற்றங்களைத் தடுக்கவும் நாணயத்தின் தரத்தை ஒரே நிலையில் வைத்திருக்கவும் அரசாங்கம் முயன்றது. எடை, அளவை முறைகள் நாடு முழுதும் ஒன்றேபோல் இருக்கவேண்டும் என்று முதலாம் ரிச்சர்டின் காலத்திலேயே அரசாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அதைச் செயலாற்றுவது எளிதாக இல்லை.

1351-லேயே கூலி விகிதங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சி செய்தது. அவ்வாண்டில் வந்த தொழிலாளர் சட்டம் பெருங்கொள்ளை நோய்க்கு முன்னிருந்த அளவிலேயே கூலி கொடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. அடுத்த தலைமுறையிலிருந்த சூழ்நிலைக்கு இச் சட்டம் போதுமானதாக இல்லை. இதற்குப் பல மாற்றங்களும் துணைச் சட்டங்களும் நிறைவேற்றப்பட்டதே அதற்குச் சான்றாகும். இறுதியில், எல்லாக் காலத்துக்கும் ஒரே நிலையில் ஊதியத்தைக் கட்டிப்பிடித்து வைப்பது இயலாது என்று அம் முயற்சி கைவிடப்பட்டது. 1388-ல் தத்தம் மாவட்டங்களில் கூலி விகிதங்களை நிருணயிக்க அமைதி நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது; அப்படியும் தொடர்ந்து கூலி அதிகரித்துவந்தது. 1388-லிருந்ததற்கு இருமடங்குக்குமேல் கூலி உயரலாகாது என்று 1444-ல் விதிக்கப்பட்டதினின்று இது தெரிகிறது. 1444-ல் விதிக்கப்பட்ட கூலி அளவை மறுபடி கட்டாயமாக அமல்படுத்த 1495-ல் செய்யப்பட்ட முயற்சி தோற்றது. இச் சட்டம் அதற்கடுத்த ஆண்டே நீக்கப்பட்டதால் இம் முயற்சி தோற்றது. 1514-ல் வந்த மற்றொரு சட்டமும் பயனற்றுப்போயிற்று. டியூடர் ஆட்சியின் மத்தியில் கூலி அளவின்மீது உண்மையில் எவ்வகைக் கட்டுப்பாடும் இருக்கவில்லை.

பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில், குறிப்பிட்ட சில தொழில்கள் சம்பந்தமாக வரிசையாகச் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. வேறு இடங்களில் தொழில்களைக் கட்டுப்படுத்துவது அல்லது தடுப்பதன்மூலம் பட்டய நகரங்களின் தேய்வை நிறுத்தலாம் என்று எண்ணப்பட்டது. இச் சட்டங்களனைத்தும் பயனற்றுப்போயின. பொருளாதார ஓட்டத்தை எதிர்த்துச் சட்டங்களைச் செயலாற்றுவது கடினம் என்பதற்கு இவை தெளிவான எடுத்துக்காட்டுகளாகும்.

கில்டுகளின் உரிமைகளைப்பற்றிய சட்டங்களின் தொகுதி ஒன்றும் இக் காலத்தில் வெளிவந்தது. இவ் அமைப்புகளின் ஆதிக்கம்

விஸ்தரிக்கவும்பட்டது. ஆனால், இதுவரை அவை பெற்றிருந்த சுதந்திரத்தை அவை கைவிட வேண்டியதாயிற்று. கவுன்டிகளில் நீதிபதிகளுக்கும், நகரங்களில் நகராட்சி அதிகாரிகளுக்கும் தம் ஒழுங்கு விதிகளைத் (ordinances) தொழில் கில்டுகள் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று *1437*-லேயே ஒரு சட்டம் விதித்தது.[1] கில்டுகள் தம் விதிகளை நீதிபதிகளின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், நீதிபதிகள் தாம் ஒப்புக்கொள்ளாதவற்றை நீக்கிவிடலாம் என்றும் *1504*-ல் வந்த சட்டம் விதித்தது. இதன் பிறகு, மத்திய அரசாங்கம் அங்கீகரிக்கக்கூடிய கொள்கைகளைத்தான் கில்டுகள் கொண்டிருக்க முடிந்தது. இதுவரை அவற்றின் ஆதிக்கத்தினின்று தப்பியிருந்தவர்களையும் அடுத்துள்ள கிராமங்களில் இருந்த தொழிலாளர்களையும் அவை கட்டுப்படுத்தக்கூடுமாறு அவற்றின் அதிகாரம் சில சமயம் விஸ்தரிக்கப்பட்டது. ஆனால், கில்டுகள் தேய்ந்து வரலாயின. அரசாங்கத்தின் ஆதரவுகூட அவற்றுக்குப் புத்துயிர் அளிக்க முடியவில்லை. திறமையுடன் தொழில்களை அவற்றால் கட்டுப்படுத்த முடியவில்லை. எலிசபெத்தின் ஆட்சி தொடங்கிய போதுகூட இப் பிரச்சினைக்கு முடிவு ஏதும் ஏற்படவில்லை.

இப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு முடிவு காணவேண்டியிருந்தது. டியூடர் ஆட்சிக் காலத்தின் மத்தியில் விலைவாசிகள் மிக உயர்ந்தன. விலைகள் உயர்ந்ததற்கேற்ப ஊதியத்தையும் உயர்த்துவதுதான் தொழிற் கலைஞர்கள் சட்டம் (Statute of Artificers) இயற்றப்பட்டதின் உடனடியான காரணமாக இருந்திருக்கலாம்.

இம் முக்கியமான சட்டம் [சில சமயம் பயிற்சியாளர்கள் சட்டம் (Statute of Apprentices) என்று அழைக்கப்படும்] *1563*-ல் நிறைவேற்றப்பட்டது. சாசனம் பெற்ற நகரங்கள் தேய்வடையாது தடுப்பது, கிராமத் தொழிற் கலைஞர்களுக்கு நல்ல பயிற்சி யளிப்பது, தேவையான அளவு விவசாயத் தொழிலாளிகள் நாட்டில் இருக்குமாறு செய்வது, கூலி விகிதங்களைச் சீராக்குவது, பொதுவாக அக்காலத்தின் தேவைகளுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்றவாறு ஒரு பூரணமான தொழிற் சட்டமொன்றை அமைப்பது ஆகியவையே இதை வரைந்தவர்களின் நோக்கமாகும். இதன் கோட்பாடுகளில் பல புதியவை யல்ல. சில பழைய சட்டங்களின் விதிகள் இதில்

[1] அரசாங்கப் பட்டயங்கள் பெற்று, அதனால் நகராட்சியின் ஆதிக்கத்திலிருந்து விலக்கு பெற்ற கில்டுகளுக்காக *1437*ஆம் வருடத்துச் சட்டம் ஏற்பட்டதெனத் தோன்றுகிறது என முன்னரே குறிப்பிடப்பட்டது. நகர அதிகாரிகளுக்குக் கில்டுகளின்மீது மேற்பார்வை செய்யும் உரிமையை மீண்டும் அளித்ததே இச் சட்டத்தின் விளைவாகும்.

சேர்ந்திருந்தன; தொழில் வாழ்க்கையில் ஏற்கெனவே இருந்த சில இயல்புகளுக்குச் சட்டபூர்வமான அங்கீகாரத்தை அது அளித்தது; மேலும், தொழிற் சட்டத்தைச் செயலாற்ற ஒரு சாதனத்தை இது நிறுவியது. கூலி, தொழிலாளர்களையும் வேலைக்காரர்களையும் வேலைக்கு அமர்த்துதல், இவைபற்றிய விதிகள் இதில் இருந்த அளவுக்கு இதற்கு முன் வந்த முப்பத்துநான்கு சட்டங்கள் விலக்கப்பட்டன. அவற்றின் விதிகளுக்குப் பதிலாக இப் புதுச் சட்டத்தின் விதிகள் வரையப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் சொத்து வைத்திருந்தாலொழிய, விதிவிலக்கு அளிக்கப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்ட தொழில்களில் ஏதாவதொன்றில் ஈடுபட்டிராத, பன்னிரண்டுக்கும் அறுபதுக்கும் இடையான வயதுடைய, உடலுறுதி பெற்ற எவரும் விவசாயத் தொழிலாளியாக இருக்கக் கடமைப்பட்டனர் என்று இச் சட்டம் விதித்தது. விவசாயத்துக்கும் போதுமான அளவு தொழிலாளிகள் இருக்குமாறு பார்த்துக்கொள்வதே இதன் நோக்கமாக இருக்கலாம். தொழிற் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கும் அறுவடைக் காலத்தில் செல்லாது என்பது, இக் கருத்துக்கு மேலும் ஆதரவளிக்கிறது. ஆனால், அக் காலத்தில் விவசாயத்தில் வேலையாட்கள் பற்றாக்குறை மிக அதிகமாக இருந்ததாக எண்ண இடமில்லை. நாடோடிகள் எந்தத் தொழிலையும் தாங்கள் சேர்ந்தவர்கள் அல்ல என்ற சாக்குச் சொல்லி எவரும் திரியாது தடுப்பதற்காக இவ் விதி கொண்டுவரப் பட்டிருக்கலாம்; வேறு தொழில் எதையும் சேர்ந்திராத எந்த மனிதனும் நாட்டின் முக்கியத் தொழிலாகத் தொடர்ந்து விளங்கிய விவசாயத் தொழிலைச் சேர்ந்தவனாக எண்ணப்பட்டான்.

விவசாயத்திலோ வேறு தொழில்களிலோ ஒருவனைக் கூலி வேலைக்கு வைத்துக்கொள்ளும் காலம் ஓர் ஆண்டுக்குக் குறைவாக இருக்கலாகாது என்று உத்தரவிட்டதன்மூலம் வேலைத் தொடர்ச்சிக்கு வழி செய்யப்பட்டது. வேலையினின்று நீங்கவோ நீக்கவோ மூன்று மாதத்துக்கு முன்னறிவிப்பு (notice) தரவேண்டும். இதற்கு முன் தான் வேலை செய்த இடத்தில் தன் கடமைகள் முற்றிலும் செய்து முடித்துவிட்டதாக அம் முதலாளியிடம் சான்றிதழ் (certificate) கொண்டு வராத எவரையும் புதிதாக வேலைக்கு வைத்துக்கொள்வது தடுக்கப்பட்டது.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எல்லாத் தொழில்களிலும் தொழிற் பயிற்சி கட்டாயமாக்கப்பட்டது. இதன்மூலம் தொழி

லாளர்கள் தம் தொழிலில் நன்கு தேர்ச்சி பெற வழியுண்டாயிற்று. இதனால், கில்டுகளால் சாசனம் பெற்ற நகரங்களில்மட்டும் அமலாக்கப்பட்ட ஒரு வழக்கத்தைக் கட்டாயமாக எந்த இடத்தைச் சேர்ந்த எந்தத் தொழிலும் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. பயிற்சிக் காலம் ஏழு ஆண்டுகளென நிருணயிக்கப்பட்டது.[1] இதன்படி லண்டனிலிருந்த வழக்கம் நாடு முழுவதற்கும் பொதுவாயிற்று. இதைவிடக் குறுகிய பயிற்சிக் காலத்தை வழக்கமாகக் கொண்டிருந்த உள்நாட்டு நகரங்களிலும், தொழிற் பயிற்சியே இல்லாத கிராமங்களிலுங்கூட ஏழாண்டுக் காலப் பயிற்சி கட்டாயமாக்கப்பட்டது. பயிற்சி முடித்த இளைஞன் உடனடியாகத் தொழில் முதல்வனாகவும் இல்லத் தலைவனாகவும் இருக்கத் தேவையான அனுபவத்தைப் பெற்றிருக்கவேண்டும் என்பதில்லை; எனவே, இருபத்திநான்கு வயதுக்கு முன் ஒருவன் தொழில் முதல்வனாக முடியாது என்று இச் சட்டம் கூறியது.

தான் புகுவதற்காக எந்தத் தொழிலை வேண்டுமாயினும் ஒருவன் தேர்ந்தெடுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவு செல்வமோ அந்தஸ்தோ பெற்ற குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தாம் ஒருசில தொழில்களில் புக முடியும். சாசனம்பெற்ற நகரங்களில் வியாபாரி, பட்டு வணிகன், துணி விற்பவன், பொற் கொல்லன், இரும்பு வணிகன், துணி செய்பவன் போன்ற தொழில்களில் ஆண்டுக்கு நாற்பது ஷில்லிங் மதிப்புடைய நிலம் வைத்திருப்பவரின் மக்களே பயிற்சி பெறத் தகுதி பெற்றனர். வேறு இடங்களில் ஆண்டுக்கு அறுபது ஷில்லிங் மதிப்புள்ள நிலமுடையோர் மக்களே இத் தொழில்களில் பயிற்சி பெற முடியும். விவசாய வேலை, பிற முரட்டு வேலைகளான கொத்தன், சுண்ணம் பூசுவோன், சக்கரம் அமைப்போன், கொல்லன் போன்ற தொழில்களில் அந்தஸ்து குறைந்த குடும்பங்களின் இளைஞர்கள் புக முடிந்தது.[2]

நன்கு பயிற்சி பெற்ற கூலியாட்களுக்கு வேலை நிச்சயமாகக் கிடைக்கப் போதுமான வாய்ப்பை ஏற்படுத்த ஒரு தொழில் தலைவனிடம் உள்ள பயிற்சியாளருக்கும் (apprentices), தேர்ந்த கூலியாட்களுக்கும் (journeymen) இடையே இருக்கவேண்டிய விகிதம் நிருணயிக்கப்பட்டது. மூன்றுபேர் ஒரு தலைவனிடம் தொழில் பயின்றால் ஒரு

[1] தொழில் பயிலச் சேருவோரின் வயது இருபத்தொன்றுக்கதிகமாக இருக்கலாகாது.

[2] 1563-ல் இருந்த தொழில்களுக்குமட்டுமே பயிற்சி அவசியம் எனப் பின்னர் விதிக்கப்பட்டது; தொழிற் கலைஞர் சட்டத்தை வரைந்தவர்கள் இதுபோல வரம்பமைக்க விரும்பினர் என்று எண்ண இடமில்லை.

கூலியாளையாவது அவன் வேலைக்கு வைத்திருக்கவேண்டும். அதற்கு மேல் ஒவ்வொரு பயிற்சியாளனுக்கும் ஒவ்வொரு தேர்ந்த கூலியாள் வீதம் அவன் வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும். சில தொழில்களுக்குத்தான், முக்கியமாகத் துணி உற்பத்தி சம்பந்தப்பட்ட தொழில்களுக்குத்தான் இவ்வாறு விதிக்கப்பட்டது.

கூலி அளவை நிருணயிப்பது தொழிற் கலைஞர் சட்டத்தின் முக்யமானதொரு அம்சம் ஆகும்.[1] இப் பணி நீதிபதிகளைச் சார்ந்தது. ஒவ்வொரு கவுன்டியிலும் நகரிலும் நீதிபதிகள் ஈஸ்டர் (Easter) காலத்தில் கூடி வேலைகளுக்கான கூலியை நிருணயிக்கவேண்டும். இவ் விகிதத்தில் கூலி கொடுக்கவும் வாங்கவும் முறையே தலைவனும் கூலியாட்களும் கடமைப்பட்டிருந்தனர்.[2] இம் முறை நடந்துவந்த போது முன் ஆண்டின் கூலிப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மாற்றங்களுடனோ இன்றியோ அடுத்த ஆண்டுக்கும் அது நிருணயிக்கப்பட்டிருக்கலாம். பலமுறை, ஓர் ஆண்டின் கூலிப்பட்டியல் மாற்றமின்றி வருடாவருடம் புதுப்பிக்கப்பட்டது. தொழிலாளிகளை விட முதலாளிகளை ஆதரிக்கக்கூடிய வர்க்கத்தை நீதிபதிகள் சேர்ந்தவராதலின் இக் கூலி நிருணயமுறை ஊதியங்களை மிகத் தாழ்வாக வைத்திருந்தது என்று சிலர் கூறியுள்ளனர். ஆனால், நீதிபதிகள் வேண்டுமென்றே நேர்மையற்று நடந்ததாக எண்ண இடமில்லை. தொழிலாளிகளும் கூலி நிருணயம் அக்கிரமமாக உள்ளது என்ற புகார் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. ஆனால், இக் கூலி நிருணய முறை கைவிடப்பட்டபோது அதைத் திரும்பப் புகுத்தவேண்டுமெனப் பாராளுமன்றத்திடம் விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டன. கூலியும், உயிர் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளைமட்டும் பெறும் அளவுக்கு நிருணயிக்கப்படவில்லை. கோடைக் காலத்தில் நாளுக்குப் பன்னிரண்டு மணி நேர வேலை; குளிர் காலத்தில் பகல்பொழுது மட்டும்தான் வேலை.[3] எனவே, குளிர் காலத்தில் ஊதியம் குறைவு. ஆனால், குளிர் காலத்தில் அக் கூலி உயிர் வாழப் போதுமானதாக இருக்கும். கோடையில் ஊதியம் அதிகம், வாழ்க்கைத் தரம் குறைவு ; எனவே, அத்தியாவசியமான தேவைகளுக்கானது போகச் சிறிது மிச்சம் இருக்கும்.

[1] கூலி நிருணயம் எல்லா இடத்திலும் நடந்தது என்றோ அது எல்லா இடத்திலும் கட்டாயமாக்கப்பட்டதென்றோ முடிவாக நிரூபிக்கப் படவில்லை.

[2] குறிப்பிட்ட கூலிக்கு அதிகமாகக் கொடுத்தால் ஐந்து பவுன் அபராதமும் பத்து நாள் சிறைவாசமும் தண்டனை; அதிகமாக வாங்கிக் கொள்ள இருபத்தொருநாள் சிறைவாசத் தண்டனை.

[3] மார்ச்சிலிருந்து செப்டம்பர்வரை காலை 5 மணியிலிருந்து இரவு 8 வரை வேலை நேரம். உண்பதற்காக 2½ மணி நேரம் ஓய்வு.

தொழில்களைக் கட்டுப்படுத்த இதற்கு முன் செய்யப்பட்ட பல முயற்சிகளின் வெற்றி தோல்வியின் அனுபவத்தினின்று வரையப் பட்ட ஒரே சட்டமாகிய இப் பெரும் சட்டம் குறிப்பிடத்தக்க வெற் றியை அடைந்தது. நாடு முழுதும் பயிற்சித் தரம் ஒன்றேபோல் அமையவில்லையாயினும் இதில் அபிவிருத்தி உண்டாயிற்று. இன் றும் பிரசித்தமான ஆங்கிலேயர்களின் உயர்ந்த தொழில் திறனுக்கு இச் சட்டம் நன்கு அடிகோலியது. இச் சட்டம் வந்தபின் பதினே ழாம் நூற்றாண்டில் கூலி நிருணயம் ஆண்டுதோறும் நடந்தது. பதி னெட்டாம் நூற்றாண்டில் தலையிடாமைக் கொள்கை வழங்கலான தும் கூலி நிருணயம் செய்வது மறைந்தது. தொழில் வளர்ந்து வேலைப் பகிர்வு (division of labour) பெருகிய பின், ஒவ்வொரு வேலைக்கும் ஊதியம் நிருணயிப்பது மிகக் கடினமாயிற்று. பதி னெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் கூலி நிருணயம் செய்வது அடி யோடு நின்றது. குறைந்த ஊதியம், பாரிஷின் பயிற்சியாளர்களின் போட்டி இவற்றால் வருந்திய கூலியாட்கள், கூலி நிருணயம், கூலி யாள்—பயிற்சியாளர் விகிதம் ஆகியவைபற்றிய விதிகளை மீண்டும் செயலாற்றுமாறு அடிக்கடி விண்ணப்பித்தனர். 1813-ல் கூலி நிருணயம்பற்றி இச் சட்டத்திலிருந்த விதிகளை நீக்கியதும், 1814-ல் பயிற்சியாளர்களைப்பற்றிய விதிகளை நீக்கியதும்தான் இவ் விண்ணப் பங்களுக்குப் பாராளுமன்றம் தந்த விடை.

12. 1688-9 புரட்சிக்குமுன் அரசாங்கத்தின் நிதிநிலைமை

(National Finance before the Revolution of 1688-9)

இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றைப்பற்றிய நூலில் அரசாங்கத்தின் நிதி நிலைமையைப்பற்றி விவரித்திருப்பதற்குக் காரணம் கூறுவது அவசியம். நாட்டு மக்களின் வருமானத்தின் ஒரு பகுதியை அரசாங்கம் பெறுகிறது அல்லது எடுத்துக்கொள்கிறது. அதை நாட்டுச் செலவுகளுக்காகப் பயன்படுத்துகிறது. அரசாங்கத்தின் இந்த வரவும் செலவும் அந் நாட்டின் பொருளாதார வரலாறு, அரசியல் வரலாறு இரண்டுடனும் சம்பந்தப்பட்டிருக்கிறது. பண்டைய சமூகங்களில் சமூகக் கால்நடைகளிலோ அல்லது விளைச்சலிலோ, போரில் எதிரிகளிடம் சூறையாடிய சொத்திலோ ஒரு பகுதியை சமூகத் தலைவன் பெற்றான். பணத்தைப் பயன்படுத்துமளவுக்குப் பண்பாடடைந்த சமூகத்தில் தலைவனின் வருமானம் பணமாகக் கிடைக்கிறது. நாட்டை ஆளுபவன் அரசன் ஒருவனே ஆயினும் அவன் செய்யும் செலவுகளுக்கும் பணம் தேவைப்படுகிறது. அரசாங்கத்தின் பணிகள் வளர வளர, அதன் செலவுகளும் அதிகரிக்கின்றன.

அரசாங்கத்தின் வருமானத்துக்குப் பல வகையிலும் மக்கள் பணம் செலுத்தவேண்டியிருக்கும். வரிகள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ வசூலிக்கப்படலாம்.[1] காலத்துக்குக் காலம் வரிபற்றிய கோட்பாடுகள் எப்படி மாறிவந்தன, பலவகை வரிகளால் மக்களது பொருளாதார நடவடிக்கைகள் எப்படிப் பாதிக்கப்பட்டன,

[1] வருமானம் பெறுவதன்றி வேறு நோக்கத்தோடும் அத்தகைய வரிகள் விதிக்கப்படலாம்.

மக்கள் நலனை மிகக்குறைவாகவே பாதிக்குமாறு எவ்வாறு தனக்குத் தேவையான வருமானத்தை அரசாங்கம் வசூலித்தது என்பனவற்றைக் கவனிப்பது முக்கியமாகும்.

நார்மன் ஆட்சியில் அரசனது 'பண்டைக் காலத்தினின்று வாழையடி வாழையாக வந்த வருமானமே' அரசனுடைய முக்கிய வருவாயாக இருந்தது. நாட்டின் முக்கிய நில முதலாளியாக அரசன் விளங்கியதால் இவ்வருவாய் கிடைத்தது.[1] அரசன்வசம் சுமார் 1,600 மேனர்கள் இருந்தன. அவற்றின் டிமீன் நிலங்களின் உற்பத்தி பொருளாகவோ பணமாகவோ அரசனைச் சார்ந்தது. மிகப் பண்டைக் காலத்தினின்றே அரசனது டிமீன் நில அறுவடையை விற்றுப் பணத்தை அவனுக்கு அனுப்பிவைப்பது மேனரின் தல அதிகாரியின் கடமையாகும். தவிர, நிலமானிய முறைப்படி நில முதலாளிகளின் மேற்பிரபுவாக (overlord) அரசன் விளங்கினான். அதனால், அவனுக்கு நிலமானியச் சில்லறைக் கட்டணங்களாக (feudal incidents) பலவகையில் பணம் கிடைத்தது. தாங்கள் போர்ப்படையில் சேர்ந்து ஆற்றவேண்டிய கடமைக்குப் பதிலாக, நில முதலாளிகள் ஸ்கூடேஜ் (scutage) என்ற அபராதத் தொகையைப் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து செலுத்தியது அரசனது வருமானத்தில் சேர்ந்தது.

அரசன் தன் பரிவாரங்களுடன் நாட்டில் பல இடங்களுக்குச் சென்று பார்வையிட்டபோது, அவற்றின் தேவைக்காக அரசவையின் அலுவலர்கள் பொருள்களைக் கைப்பற்றக்கூடும். அரசனது இவ்வுரிமைக்குப் பர்வேயன்ஸ் (purveyance) என்று பெயர். பொருள்கள் கட்டாயமாக வாங்கலாம்; இவ்வுரிமைக்குப் பிரியம்ஷன் (preemption) என்று பெயர். பணம் கொடுத்தோ கொடுக்காமலோ நாட்டுக்குள் வரும் பொருள்களைக் கைப்பற்றலாம்; இவ்வுரிமைக்குப் பிரிசேஜ் (prisage) என்று பெயர்.[2] நாட்டிலிருந்த வண்டிகளையும் குதிரைகளையும் அரசன் பயன்படுத்திக் கொள்ளலாம்; இவ்வுரிமைக்கு வெயினேஜ் (wainage) என்று பெயர்.

நேர்முக வரிகளில், தொன்மையான டேன்கெல்டு (Danegeld) முக்கியமானது. அது தொடர்ந்து விதிக்கப்பட்டு நாளடைவில்

[1] பறிமுதல்களும் வாரிசற்ற நிலங்களும் அரசனது நிலத்தோடு சேருகின்றன. அரசனது நிலங்கள் மானியங்கள் அளிக்கப்பட்டால் குறையும்.

[2] இருபது டன்னுக்கு அதிகமான சரக்கு ஒவ்வொன்றுக்கும் பாய்மரத்துக்கு முன்பகுதியில் ஒரு டன் மதுவும், பின்பகுதியில் ஒரு டன் மதுவும் அரசனுக்குப் பிரிசேஜாகத் தரவேண்டும் என்று சீராக நிருணயிக்கப்பட்டது.

சாதாரணமான நிலவரியாக மாறியது. சில பண்ணைகளுக்கு வரியில்லாமலும், சிலவற்றுக்குக் குறைவான வரியும், பிறவற்றுக்கு அதிகமான வரியும் இருந்ததால், இது மிக அதிருப்திகரமான வரியாயிருந்தது. இரண்டாம் ஹென்ரி இதை ஒழித்து இதற்குப் பதில் ஒரு புது வகை நிலவரி விதித்தான். மாவட்டங்களில் செலுத்தப்பட்ட டோனமும் (donum), நகரங்களில் செலுத்தப்பட்ட ஆக்ஸிலியமும் (auxilium) இவ் வரியில் சேர்ந்தவை. பன்னிரண்டாம் நூற்றுண்டு முடிவதற்குள் டோனத்துக்குப் பதில் காருகேஜ் (carucage) என்ற வரி வசூலிக்கப்பட்டது. நூறு ஏக்கராக் கொண்ட நில அலகுக்குக் காருகேட் (carucate) என்று பெயர். காருகேட்டின்மீது விதிக்கப்பட்டது காருகேஜ் ஆயிற்று. ஆக்ஸிலியம் வரியும் டாலேஜ் (tallage) என்றழைக்கப்பட்டது. பணம், பொருள்கள், விளைச்சல், கையிருப்புச் சரக்குகள் இவைமீது 1188-ல் விதிக்கப்பட்ட ஸாலடின் டைத்துதான் (பத்தில் ஒன்று — Saladin tithe) ஜங்கம சொத்துக்கள்மீது விதிக்கப்பட்ட முதல் வரியாகும். இத்தகைய பலவகை வரிகளை ஒவ்வொரு கவுன்டியிலும் ஷெரீப்பு வசூலித்தார். சிலவகை வரிகளின் மொத்தத் தொகை நிருணயிக்கப்பட்டது. ஒரு மாவட்டம் இதற்காகச் செலுத்தவேண்டிய தொகையை அம் மாவட்டத்தின் 'ஃபெர்ம்' (ferm) என்று அழைக்கப்பட்டது. இத் தொகையை (ஆண்டுக்கு இரு முறையாக) அதன் ஷெரீப்பு வெஸ்ட்மினிஸ்டரில் அரசாங்கக் கருவூலத்தில் கட்டவேண்டும். தன்னால் கூடுமானவரை நிறைய வரிகளை வசூலித்த ஷெரீப்பு ஒரு நிலையான குறிப்பிட்ட தொகையை மட்டும் கட்டியதற்கு வெளிப்படையாக ஆட்சேபம் இருந்தது. நகரங்கள் அரசனுடன் சாசனம் பெறப் பேச்சு வார்த்தைகள் நடத்தியபோது ஷெரீப்பின் அதிகப்படித் தண்டலினின்று தப்பிக்கத் தனியாகத் தமது கப்பம் (ferm) நிருணயிக்கப்படவேண்டும் என்று கோரியதில் வியப்பில்லை. வேறு சில வரிகளில் எவ்வளவு வசூலாயிற்றோ அவ்வளவும் கருவூலத்தில் ஷெரீப்பு கட்டவேண்டும்.

நார்மானியர் காலம், அஞ்சுவினர் ஆட்சியின் முதற்பகுதி ஆகியவற்றில், அரசாங்க வருமானம்பற்றி இதுவரை கூறியதினின்று, அரசனது வருவாய் இரு வழிகளில் வந்தது என்று முடிவு செய்யலாம். ஒன்று, அரசனது சொத்துக்கள், மற்றது பிறருடைய சொத்துக்கள். கூடுமானவரை அரசன் தன் சொந்த வருமானத்திலேயே வாழவேண்டுமென்றும்[1] அது போதாமல் போனால்தான் வரிகளை வசூலிக்கவேண்டும் என்றும் எண்ணப்பட்டது. வரி விதிப்பதாக

[1] 'The king should live of his own'.

இருந்தால் வரி செலுத்துவோர்களில் மிக முக்கியமானவர்களாவது ஒப்புக்கொண்டால்தான் அவ்வாறு செய்யலாம் என்றும் திட்டமான கருத்து ஒன்று நிலவியது. இதைத்தான், 'கிராம மன்றத்தின் (Commune Concilium) ஒப்புதலின்றி......எவ்வித ஸ்கூடேஜ் அல்லது வரியையும் விதிக்கலாகாது......' என்று மகாசாசனம் (Magna Carta) கூறியது. நாளடைவில் பாராளுமன்றம் அமைக்கப்பட்டபின் அதன் அனுமதியின்றி வரிகள் விதிக்கப்படலாகாது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.[1]

இடைக் காலத்தின் பிற்பகுதியில், பத்திலொன்றோ பதினைந்திலொன்றோ ஜங்கம சொத்துக்கள்மீது வரி விதிக்கப்பட்டது. அத்தகைய சொத்துக்களின் வருடாந்திர மதிப்பில் நகரங்களில் பத்தில் ஒரு பங்கும், மாவட்டங்களில் பதினைந்தில் ஒரு பங்கும் வசூலிக்கப்பட்டன. சொத்தை மதிப்பிடுவதில் இருந்த கஷ்டங்களைத் தவிர்க்க 1332-ல் செய்யப்பட்ட மதிப்பையே நிரந்தரமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. பத்திலொன்று அல்லது பதினைந்திலொன்றாகக்கொள்ளப்பட்ட தொகையும் நிலைப்பட்டது. அது மொத்தம் சுமார் 39,000 பவுனுக்கு வந்தது. பாராளுமன்றம் அனுமதித்த வரி அளவு (grant) சாதாரணமாகப் பத்தில் இரண்டும், பதினைந்தில் இரண்டும் கொண்டிருக்கும். ஒரு நகரத்தின் செல்வமும் முக்கியத்துவமும் குறைந்து போனால் வரித் தொகையில் விலக்குகளும் தள்ளுபடியும் சில சமயம் அளிக்கப்பட்டன. இவற்றுக்கு இணையாகப் பிற இடங்களினின்று வருமானம் உயராததால், இவ் வரியின் அளவு குறையலாயிற்று. அதன் பளுவும் (நகரங்களிடையே) சமமாக இல்லை. வரி வருவாய் குறைந்ததால், சாதாரணமாகப் பாராளுமன்றம் பத்தில் இரண்டு, பதினைந்தில் இரண்டோடு நிலத்தின் வருடாந்திர மதிப்பில் பவுனுக்கு நான்கு ஷில்லிங்கும், ஜங்கம சொத்துக்களின் மதிப்பில் பவுனுக்கு இரண்டு ஷில்லிங் எட்டுப் பென்னியும் கூடுதலாக வசூலிக்க அனுமதித்தது. நிலவரி செலுத்தியவர்கள்மீது ஜங்கம சொத்து வரி விதிக்கப்படவில்லை. முதலில் இவ் வரிக் கொடையினால் 1,00,000 பவுன் வருவாய் கிடைத்தது. ஆனால், நாளடைவில் சொத்துக்கள் பேரளவுக்கு மதிக்கப்பட்டதால் டியூடர் காலத்தின் முடிவில் அதிலிருந்து 80,000 பவுனுக்குமேல் கிடைக்கவில்லை. ஸ்டூவர்ட் காலத்தின் தொடக்கத்திலும் தொடர்ந்து இக் கொடை வரி (Subsidy)[2]

[1] இக் கொள்கை அரசியலமைப்பில் பெற்றுள்ள முக்கியத்துவத்தை ஆராய்வது இவ்வதிகாரத்தின் வரம்புக்கு அப்பாற்பட்டது.

[2] பாராளுமன்றம் அரசனுக்கு வரி விதிக்கும் உரிமையைக் கொடுப்பதால் இப் பெயர்.

விதிக்கப்பட்டது; ஆனால், காமன்வெல்த் நடந்தபோது இது விதிக்கப்படவில்லை. முடியாட்சி மீண்டதும் இது மறுபடி விதிக்கப்பட்டது; 1663-ல் இறுதியாகக் கைவிடப்பட்டது.

இடைக் காலத்தின் பிற்பகுதியில் விதிக்கப்பட்ட மற்றொரு நேர்முகவரி தலைவரியாகும் (Poll-tax). 1377-ல் பதினாறு வயது கடந்த ஒவ்வொருவர்மீதும் பவுனுக்கு நான்கு பென்னி [ஒரு குரோட் (a groat)] வரி விதிக்கப்பட்டது. பலர் இவ் வரியை ஏமாற்றினர். இதன் மொத்த வருவாய் மிகக் குறைவே. இரண்டு ஆண்டுகள் கழித்துப் படிப்படியாக உயரும் தலைவரி ஒன்று விதிக்கப்பட்டது. ஆனால், அதன் அமைப்பிலிருந்த சிக்கல் காரணமாக அதைப் பலரும் கொடுக்காமல் ஏமாற்றினர். 1380-ல் அதைவிட எளிதாகத் தரமமைந்த மற்றொரு தலைவரி விதிக்கப்பட்டது. அதன் மக்கள் தொகையில் வயது வந்தவர் (adults) அனைவருக்கும் ஆளுக்கு ஒரு ஷில்லிங் (மூன்று குரோட்டுகள்) என்ற கணக்கில் மொத்த வரித் தொகையை ஒவ்வொரு பாரிஷும் வசூலிக்க வேண்டியிருந்தது. ஆனால், ஒவ்வொரு பாரிஷிலும் ஒவ்வொருவரும் கொடுக்கவேண்டிய வரி அவனது வருமானத்தைப்பொறுத்து மாறுபட்டது. தலைவரி விதித்ததை மக்கள் விரும்பவில்லை. 1380-ல் விதிக்கப்பட்ட வரியினால் விளைந்த அதிருப்தி குடியானவர் புரட்சியைத் தோற்றுவித்தது. தலைவரிகள் நல்ல வருவாய் அளிக்காததால் கைவிடப்பட்டன. இது போன்ற பொதுவரி 1513 வரை மறுபடி விதிக்கப்படவில்லை. ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டில் வெளிநாட்டார்மீதுமட்டும் எப்போதாவது தலைவரி வசூலிக்கப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் மறுபடி தலைவரிகள் விதிக்க முயற்சி செய்யப்பட்டன. இதற்கான கடைசி முயற்சி 1698-ல் நடந்தது.

இடைக் காலத்தின் பிற்பகுதியில் வியாபாரம் வளர்ந்ததால் மறைமுகவரி (indirect tax) விதிக்க வழி உண்டாயிற்று. மகாசாசனத்தில் 'பழைய சுங்கங்களை'ப்பற்றி (Ancient Customs) ஒரு குறிப்பு உள்ளது. ஆனால், 1275-லிருந்து உரோமம், உரோமம் எடுக்காத தோல் (woolfells), தோல், பதனிடப்பட்ட தோல் ஆகியவைமீது விதிக்கப்பட்ட வரிகளைத்தான் இச் சொற்கள் பொதுவாகக் குறிக்கின்றன. ஒரு கோணி உரோமத்துக்கு அரை மார்க்கும் (mark) ஒரு 'லாஸ்டு' தோலுக்கு[1] ஒரு மார்க்குமாக இவ் வரி வசூலிக்கப்பட்டது. 1303-ல் மேலும் சில சரக்கு வரிகள் விதிக்கப்பட்டன.

[1] லாஸ்டு (Last) = பன்னிரு டஜன்.

ஒரு புது விகிதத்தில் ஏற்றுமதி இறக்குமதி வரிகள் செலுத்துவதற்கு ஈடாக இங்கிலாந்துக்கு வரும் அந்நிய வியாபாரிகளுக்குப் பிற கட்டணங்கள், பிரிசேஜ் ஆகியவற்றினின்று அவ் வருடத்து வியாபாரிகள் சாசனம் (Carta Mercatoria) விலக்கு அளித்தது. இவ் வரி விகிதம் ஆங்கில வணிகர்கள் செலுத்தியதைவிட அதிகமாக இருந்தது.[1] 1275-ல் விதிக்கப்பட்டவை 'பெரிய, பழைய சுங்கம்' (Magna et Antiqua Custuma) எனவும் இவற்றைப் 'புதிய சுங்கம்' (Nova Custuma) என்றும் அழைத்தனர்.

பதினான்காம் நூற்றூண்டில் டன்னேஜ் (tunnage), பவுண்டேஜ் (poundage) வரிகள் தோன்றின. இறக்குமதியான மதுவின்மீது டன்னுக்கு இரண்டு ஷில்லிங் டன்னேஜ் விதிக்கப்பட்டது. அரசனது பழைய உரிமையான பிரிசேஜுக்குப் பதிலாக அது விதிக்கப்பட்டது. புதுச் சுங்கமும் டன்னேஜும் செலுத்தாத வேறு எல்லாச் சரக்குகள்மீதும் அவற்றின் மதிப்பின்படி (ad valorem) பவுனுக்கு மூன்று பென்னி வீதம் பவுண்டேஜ் வசூலிக்கப்பட்டது. இது பின்னர் பவுனுக்கு ஆறு பென்னி ஆயிற்று. பதினான்காம் நூற்றூண்டில் டன்னேஜ், பவுண்டேஜ், உரோமத்தின்மீது வரிகள் ஆகியவை அரசாங்கத்தின் ஒரு முக்கிய வருவாயாக இருந்தன. 1373-க்குப் பின் டன்னேஜ், பவுண்டேஜ் வரிகளை விதிக்கப் பாராளுமன்ற அனுமதி தேவைப்பட்டது. இரண்டாம் ரிச்சர்டு காலத்தினின்று பாராளுமன்றம் அரசனுக்கு அவனது வாழ்நாள் காலத்துக்கு டன்னேஜ், பவுண்டேஜ் வரிகளை விதிக்கும் உரிமையை வழங்கியது. நான்காம் எட்வர்டின் காலத்திலிருந்து ஒவ்வொரு அரசனின் ஆட்சிக் காலம் தொடங்கும்போதும் இவ்வுரிமை வழங்கப்பட்டது. 1625 வரை இவ் வழக்கம் தொடர்ந்து நடந்தது. 1625-ல் இவ்வுரிமையை முதலாம் சார்லஸுக்கு ஒரு வருட காலத்துக்குமட்டும் வழங்கப்பட்டது. அப்போது இவ் வரிகள் டன்னுக்கு மூன்று ஷில்லிங்காகவும், பவுனுக்கு ஒரு ஷில்லிங்காகவும் இருந்தன.

டியூடர் காலத்திலும் ஸ்டூவர்டு மன்னர்கள் ஆட்சியின் முதற் பகுதியிலும் அரசனது முக்கிய வருமானங்கள் அரசனது நிலத்தின் வருவாயும், சில்லறை நில மானிய வருமானங்களும், ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட நேர்முக மறைமுக வரிகளும்தான். [சில்லறை நில மானிய வருமானங்களில் அச் சமயம் பாதுகாப்புக் கட்டணமும்

[1] இரண்டுக்கும் இருந்த வித்தியாசம், மதுவுக்கு டன்னுக்கு 2 ஷில்லிங், உரோமத்துக்கு கோணிக்கு நாற்பது பென்னி, ஒரு லாஸ்டு தோலுக்கு அரை மார்க்.

(wardship), திருமணக் கட்டணமும்தான் நிறைய வருவாயளித்தன.] (முன் கூறிய நேர்முக மறைமுக வரிகள் பத்திலொன்றும், பதினைந்திலொன்றும், வரிக்கொடை, சுங்கங்கள், டன்னேஜ், பவுண்டேஜ் ஆகியவையும் ஆகும்). ரோமாபுரியின் ஆதிக்கத்திலிருந்து ஆங்கிலத் திருச்சபை (Church of England) பிரிந்ததும் முன்னர் போப்பாண்டவருக்கு அனுப்பப்பட்ட சமயவழி வருமானங்கள் பல அரசனைச் சார்ந்தன.[1] டியூடர் ஆட்சியில் அமைக்கப்பட்ட [விண்மீன் மன்றம் (Star Chamber), வட மன்றம் (Council of the North), உயர்ந்த ஆணையாளர் (High Commission) மன்றம் ஆகிய] சிறப்புரிமை மன்றங்கள் (prerogative courts) குற்றவாளிகள்மீது விதித்த அபராதங்களும் அரசனைச் சார்ந்தன. இவ்வபராதங்களில் பல முழுவதுமோ பகுதியாகவோ தள்ளுபடி செய்யப்பட்டன என்று எண்ண இடமுள்ளது. எப்படியிருந்தாலும், இதன்மூலம் அரசன் பெற்ற வருவாய் அதிகமில்லை. 1491-லேயே கூடுதலாக இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன. இவற்றை இம்போஸிஷன்ஸ் (impositions) என்று அழைத்தனர். அவை அடிக்கடி மாற்றப்பட்டன. வருமானம் பெறுவதைவிட வியாபாரத்தைக் கட்டுப்படுத்தவே அவை விதிக்கப்பட்டனபோலும். ஆனால், விற்பனை முற்றுரிமைகள், உற்பத்தி (patent) உரிமைகள், அனுமதிச் சீட்டுகள் (licences) ஆகியவற்றை அளிப்பதன்மூலம் எலிசபெத்துக்கும் அவளுக்குப் பின் வந்த மன்னர்களுக்கும் நல்ல வருவாய் கிடைத்தது.

அரசன் சில சமயம் நன்கொடைகளையும் (benevolences) கடன்களையும் வாங்கினான். அரசன் பணக் கஷ்டமுறும்போது அதைப் போக்கக் குடிமக்கள் தாமே கொடுப்பது நன்கொடை. சிலசமயம் இதற்காக நேரிடையாகவோ மறைமுகமாகவோ அவர்கள் நெருக்கப்படுவதுண்டு; சில சமயம் அரசனிடமிருந்து ஒரு விருது அல்லது பட்டம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சிலர் தயக்கமின்றிப் பணம் கொடுப்பதுமுண்டு. நன்கொடைகள் வசூலிப்பதை அரசனை ஆதரித்தவர்கள், எதிர்த்தவர்கள் இருவருமே வெறுத்தனர்; பின்னவரைவிட முன்னவர்களுக்கு இதன் சுமை அதிகம். ஏனெனில், பிறருக்கு வழிகாட்டவேண்டி முடியாட்சியை ஆதரித்தவர்கள் தயங்காமல் நிறைய நன்கொடையளிக்க வேண்டியிருந்தது. நான்காம் எட்வர்டு காலத்தில் முதலில் நன்கொடைகள் கேட்கப்பட்டன. மூன்றும் ரிச்சர்டின் காலத்தில் அவை சட்டவிரோதமானவை என்று

[1] இச் சமயவழி வருமானங்களைக் கொண்டு ஆன் அரசி (Queen Anne) ஏழைகளுக்கு மேலும் திருச்சபை உதவி செய்யப் பயன்படுமாறு ஆன் அரசிக் கொடை (Queen Anne's Bounty) என்ற நிதியை நிறுவினாள்.

அறிவிக்கப்பட்டன. ஏழாம் ஹென்ரி அவற்றை மீண்டும் பெற்ருர். டியூடர் ஆட்சியில் அபூர்வமாக அவை வாங்கப்பட்டன. முதலாம் ஜேம்ஸ், 1614-லும் 1620-லிலும் மீண்டும் 1622-லும் நன்கொடைகள் வசூலித்தார். முதலாம் சார்லஸும் நன்கொடைகள் வாங்க முயன்ருர்; ஆனல், நிறையக் கிடைக்கவில்லை. பணத்தை நன்கொடையாக வசூலிப்பது இவரது காலத்துக்குப் பின் உபயோகிக்கப்படவில்லை.

இடைக் காலத்தில்கூட, கடன்களை அபூர்வமாக அரசன் வாங்கினன். எட்டாம் ஹென்ரி கடனகப் பணத்தை வாங்கினர்; 1529-லும் 1544-லிலும் இருமுறை பாராளுமன்றம் இவரது கடன்களை ரத்து செய்தது. எலிஸபெத் அரசி வரிச் சுமையை உயர்த்த விரும்பாது சில சமயம் கடன் வாங்கினள். கடன்களைத் திருப்பித் தர திடமாக அவள் முயற்சி செய்தாள். ஆனல், எல்லாச் சமயங்களிலும் குறித்த தவணையில் திருப்பித் தர அவளால் இயலவில்லை. முதல் ஸ்டுவர்ட் அரசர்களும் பலமுறை கடன்கள் வாங்கினர்.

டியூடர் ஆட்சியின் பிற்பகுதியிலும் ஸ்டுவர்ட் ஆட்சியின் முற்பகுதியிலும் விலைவாசிகள் பொதுவாக உயர்ந்துவந்ததுபற்றி மற்ருெரு அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டது. இங்கிலாந்தின் அரசர்களையும் இவ் விலை உயர்வு பாதித்தது. அரசாங்கச் செலவுகள் உயர்ந்துகொண்டே வந்தன. ஆனல், வருவாயில் பெரும்பகுதி அதிகரிக்க முடியாதிருந்தது அல்லது செலவைவிட மிக மெதுவாகப் பெருகிற்று. எனவே, சாதாரணச் செலவுகளுக்குக்கூட அரசனிடம் பணம் போதவில்லை. இதனல்தான் அடிக்கடி கடன்கள் வாங்கப்பட்டன. சிக்கனத்தைக் கடைப்பிடித்துத் தீவிரமான நிதி நெருக்கடி ஏற்படுவதை எலிஸபெத் அரசி தவிர்த்தாள். முதலாம் ஜேம்சுக்கும் முதலாம் சார்லசுக்கும் தம் வருவாய்க்கு ஏற்றபடி செலவைக் குறைத்துக்கொள்ள முடியவில்லை; எனவே, ஊதாரிகளாகக் கருதப்பட்டனர். சார்லசைவிட ஜேம்சுக்கு இந்தக் குற்றச்சாட்டு மிகப் பொருந்தும். ஆனல், உண்மையில் அவர்களது ஊதாரித்தனமான செலவைவிட விலைவாசிகள் உயர்ந்ததுதான் அவர்களது பணக் கஷ்டத்துக்குக் காரணமாகும். அரசன் தன் வருமானத்தினின்றே தன் செலவைச் சரிக்கட்ட வேண்டுமென்ற அரசியலமைப்புக் கோட்பாடு இன்னமும் வழக்கத்திலிருந்தது. சாதாரண அரசாங்கச் செலவுகளுக்காக அரசன் பாராளுமன்றத்தை மேலும் பணம் வேண்டி அணுகும்போதெல்லாம் பாராளுமன்றம் அதுபற்றித் தன் வெறுப்பைக் காட்டியது. அரசனது பண நெருக்கடி, முடியாட்சியை எதிர்த்தவர்களுக்கு அதைத் தாக்க வாய்ப்பளித்தது. அக் காலத்து அரசியல்

அமைப்புப்பற்றிய தகராறில் அரசாங்க நிதி நிலைமையைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினையாகும்.

பெரும் புரட்சியின்போது (Great Rebellion) நிதி வசூலிக்கச் செய்யப்பட்ட முறைகளையெல்லாம் இங்கு விவரமாகக் கூறத் தேவையில்லை. ஆனால், ஆயத் தீர்வையை (உற்பத்தி வரி-excise-tax) 1643-ல் நீண்ட பார்லிமெண்டு (Long Parliament) விதித்ததை இங்குக் குறிப்பிடவேண்டும். நாட்டில் உற்பத்தியான பொருள்கள் மீது இது விதிக்கப்பட்டது. சுங்க வரியோ இறக்குமதியான பொருள்கள்மீது விதிக்கப்பட்டது. முதலில் ஆயத் தீர்வையை மக்கள் விரும்பவில்லை. 1649-ல் சில பொருள்கள் ஆயத் தீர்வையினின்று விலக்கப்பட்டன. இறக்குமதியான வேறு சிலவோ சுங்கமும் செலுத்தி, ஆயமும் செலுத்தவேண்டியிருந்தது.

1660-ல் முடியாட்சி மீண்டபோது நாட்டு நிதியமைப்பை நன்கு ஒழுங்காக அமைக்க முயற்சி செய்யப்பட்டது. ஆட்சிக் கால முழுமைக்கும் ஒருவகை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அரசாங்கத்தின் சாதாரணச் செலவுகளுக்கு ஆண்டுக்கு 12,00,000 பவுன் போதுமானதாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டது.[1] இத்தொகையை அளிக்கக்கூடிய அளவுக்கு வரிவகைகள் அங்கீகரிக்கப்பட்டன. அரச நிலங்கள் மீண்டும் அரசருக்கு அளிக்கப்பட்டன. ஆனால், நில மானியக் கட்டணங்கள் ஒழிக்கப்பட்டன. புரட்சிக்காரர்கள் விதிக்கத் தொடங்கிய ஆயத் தீர்வை தொடர்ந்து வசூலிக்கப்பட்டது; அவரது வாழ்நாள்வரைக்கும் இவ்வரிவிதிக்கும் உரிமையை அவர் பெறுவதோடன்றி, அவருக்குப் பின் வரும் அரசர்களும் அதைப் பெறலாம் என்று பாராளுமன்றம் முடிவு செய்தது. டன்னேஜும் பவுண்டேஜும் விதிக்கும் உரிமையைத் தன் வாழ்நாள் முழுவதற்கும் அரசன் பெற்றான். ஒரு வீட்டிலிருந்த ஒவ்வொரு கணப்பு அடுப்புக்கும் இரண்டு ஷில்லிங்காக, ஒரு கணப்படுப்பு வரி (hearth-tax) 1662-ல் விதிக்கப்பட்டது; குடிசைகளுக்கு இதனின்று விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அப்படியும் எதிர்பார்த்த அளவுக்கு அரச வருமானம் வரவில்லை; மொத்தம் ஆண்டுக்கு ஒரு மில்லியன் பவுன்கூட வரவில்லை.

வருவாயைச் சரியாக மதிப்பிட முடியாதது முடியாட்சி மீட்சியின் அரசாங்க நிதி அமைப்பில் ஒரு குறையாகும். அதில் மற்றொரு

[1] போர்க் காலத்தில் தேவைப்படும் பணத்துக்கு விசேஷமான வரிகளை வசூலிக்க பார்லிமெண்டுக்கு முன்போல விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டியது என்று கொள்ளப்பட்டது.

குறையுமிருந்தது. நிலமானியக் கட்டணங்களைப் (feudal incidents) பல நூற்றாண்டுகளாக நில முதலாளிகள் செலுத்திவந்தனர். அவை ஒழிக்கப்பட்டதால் நில முதலாளி இனத்துக்கு இலாபம். ஆனால், ஆயத் தீர்வை போட்டதால் தாழ்ந்த வகுப்பினரின் வரிச் சுமை அதிகமாயிற்று. ஏழைகள் வருந்த, பணக்காரர்கள் சுகமடைந்தனர். ஆனால், இம்மாறுதலுக்கு இதுதான் நோக்கம் என்று கொள்ள வேண்டியதில்லை.

இரண்டாம் சார்லஸ் பண நெருக்கடியைப்பற்றிக் கவலையே கொள்ளவில்லை. எப்போதாவது பாராளுமன்றத்திடமிருந்து விசேஷ வரிகளுக்கு அனுமதி பெற்றதோடு, தனது உறவினரான பதினான்காம் லூயியிடமிருந்து (Louis XIV) அவர் பெருந் தொகைகளைப் பெற்றார். லண்டன் பொற்கொல்லர்களிடமிருந்தும் அன்றாடச் செலவுகளுக்குக் கடன் வாங்கினார். இப் பொற்கொல்லர்கள் அந் நூற்றாண்டில் பாங்குத் தொழிலை வளர்த்திருந்தனர். 1672-ல் அவர் இப் பொற்கொல்லர்களுக்குக் கருவூலத்திலிருந்து பணம் தருவதை நிறுத்தியபோது ஒரு நிதி நெருக்கடி விளைந்தது.

இரண்டாம் ஜேம்ஸ் அரசரின் ஆட்சியின்போது அரச நிதி நிலைமையைப்பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை. அவரது ஆட்சியின் தொடக்கத்தில் விசுவாசமான ஒரு பாராளுமன்றம் அரசனது வருவாயை ஆண்டுக்கு 19,00,000 பவுனாக நிருணயித்தது. இத்தொகை மிகப் பெரிதாதலின், தன் சகோதரனைப் போலப் பாராளுமன்றத்துக்கு விண்ணப்பிக்கவோ, ஃபிரெஞ்சு அரசனின் உதவியை நாடவோ அவருக்கு வேண்டியிருக்கவில்லை. அவர் ஆட்சிக் காலம் நான்கு ஆண்டுகளைவிடக் குறைவே. அவர் 1688-ல் ஃபிரான்சுக்கு ஓடி, மூன்றாம் வில்லியம் இங்கிலாந்தின் அரியணை ஏறியதும் தேசிய நிதியமைப்பின் அடிப்படையே மாற்றியமைக்கப்பட்டது.

13. பதினெட்டாம் நூற்றாண்டில் விவசாயப் புரட்சி

(The Agrarian Revolution in the Eighteenth Century)

பதினாறும் நூற்றாண்டின் விவசாயப் புரட்சியின்போது பல நிலங்கள் வேலியிட்டு அடைக்கப்பட்டன என்றும், கிராமச் சமுதாயத்தின் நோக்கம் முழுதுமே மாறியது என்றும் இதற்குமுன் ஓர் அதிகாரத்தில் கூறப்பட்டது. அதன் விளைவாகச் சொந்த உபயோகத்துக்குப் பயிரிடுவதற்குப் பதில் இலாபத்துக்காக விவசாயம் செய்யப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மற்றொரு விவசாயப் புரட்சி தொடங்கியது. மிகுதி இருந்த திறந்த வயல்களும் அடைக்கப்பட்டன. மூவயல் முறையைவிட விஸ்தாரமான பயிர் சுழற்சி முறை (rotation of crops) ஒன்று கையாளப்பட்டது. சிறு வயல்கள் இருந்த இடத்தில் பெரிய பண்ணைகள் நடந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டின் விவசாயப் புரட்சியை விவரிக்குமுன், இதற்கும் இதன் முந்திய புரட்சிக்கும் இடையில், அதாவது 1600-லிருந்து 1750 வரையான நூற்றைம்பது வருடத்தில் ஆங்கில விவசாயத்தின் நிலையைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவது அவசியம். கிராம விவகாரங்களில் தேக்கம் (stagnation) தோன்றிய காலம் என்று சில சமயம் பதினேழாம் நூற்றாண்டு கருதப்பட்டது. நாட்டின் சக்தி அப்போது வேறு துறைகளில் பிரயோகிக்கப்பட்டது. ஸ்டுவர்ட் மன்னர்களின் காலத்தில் முக்கியமாக விளங்கிய சமய, அரசியல் உரிமைப் போராட்டங்களில் மக்களது கருத்து முழுதும் ஈடுபட்டிருந்தது. வெளி நாடுகளில் குடியேற்றங்கள் தோன்றின. வாணிபம் வளர்ந்துவந்தது.

விவசாயத்தின் வளர்ச்சி அக்காலத்தில் தளர்ந்து இருந்தது உண்மை. ஆனால், அது அடியோடு நின்றுவிடவில்லை. சில சமயம் விவசாயத்தை விருத்தி செய்யவும், அதைவிட அதிகமாக மேய்ச்சலுக்காகவும் வேலியிடல் தொடர்ந்து நடந்தது. டியூடர்கள் எதிர்த்த அளவுக்கு, நில அடைப்பை முதல் ஸ்டுவர்ட் மன்னர்கள் எதிர்த்தனர். அவர்கள் அதில் அதிக வெற்றியும் கண்டனர் எனலாம். ஆனால், இவ்வியக்கத்தைப்பற்றி அரசாங்கம் கொண்டிருந்த கருத்து இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் மாறியது. திறந்த வயல் சாகுபடி ஒரு பழங்காலத்து விரயமான இலாபமற்ற முறை என்பதும், நிலத்தை வேலியிட்டு அதில் தானியமோ, அன்றி உரோமமும் இறைச்சியுமோ உற்பத்தி செய்வது அதிகப் பலன்தரும் என்பதும் ஒப்புக்கொள்ளப் பட்டன. கிராமத்தினின்று மக்கள் தொகையின் வெளியேற்றம், ஏழ்மை, பஞ்ச அபாயம் ஆகியவற்றை மேய்ச்சல் தொழில் தோற்றுவிக்கும் என்ற பழைய ஆட்சேபங்களுக்கு ஆதரவு குறைந்துவிட்டது. நாட்டுத் தேவைக்கு அதிகமாகக் கோதுமை பயிரிடப்பட்டது. ஏற்றுமதிக்கு உபரித் தானியம் இருந்தது. நெசவுத் தொழில் வளர்ந்ததால் அதில் வேலை வாய்ப்புகள் பெருகின. அதற்குமுன் இல்லாத பல புதுத் தொழில்களில் பலருக்கு வேலை கிடைத்தது. நில அடைப்புக்கு எதிராகக் கூறப்பட்ட பழைய ஆட்சேபங்கள் இடைக்கால மனப்பான்மையின் எஞ்சிநின்ற அமிசங்கள். வளர்ச்சிபற்றிய புதுக் கொள்கைகளுக்கு ஆதரவு பெருகியதும் இந்த ஆட்சேபங்கள் மறைந்து போயின. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாவதன் முற்பகுதியிலும் ஓரளவுக்கு நில அடைப்பும், நிலங்கள் ஒன்றுசேர்க்கப்படுவதும் ஏற்பட்டன. ஆனால், மூன்றாம் ஜார்ஜின் காலம்வரை இவ்வியக்கம் தன் உச்ச நிலையை அடையவில்லை.

ப னேழாம் நூற்றாண்டில் மற்றொரு வழியில் முன்னேற்றம் காணப்பட்டது. நாட்டின் சில பகுதிகளில் புதர் நிலம், காடுகள், சதுப்பு நிலம், தாழ்ந்த நிலம் (fen) போன்று சாகுபடி செய்யப்படாததும் பெரும்பாலும் மக்கள் வாழாததுமான பெரிய நிலப் பரப்புக்கள் இருந்தன. இப் பாழ் நிலங்களில் பெரும்பகுதி பதினேழாம் நூற்றாண்டில் உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டது. தாழ் நிலங்களினின்று நீரை வடிக்கும் வேலையை பெட்ஃபோர்டு கோமகன் (Earl of Bedford) மேற்கொண்டார். தாழ்ந்த நிலக்காரர்களின் (fenmen) எதிர்ப்பைச் சமாளித்து டச்சுக்கார இஞ்சினீயர்களையும் ஆட்களையும் வைத்துக்கொண்டு மிகுந்த பணச் செலவில் இவ்வபிவிருத்தியை அவர் செய்தார். நீர் தேங்கிநின்று பயனற்றுக்கிடந்த

நிலங்கள் பயனுள்ள விவசாய, மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட்டன. பென்னைன் (Pennine) பிராந்தியத்திலிருந்த புதர் நிலங்கள் வேலி யிடப்பட்டுச் சாகுபடி செய்யப்பட்டன. காடுகளை வெட்டுவதன் மூலம் நிலம் சாகுபடிக்குக் கிடைத்தது.

இக் காலத்தில் சாகுபடி முறைகளிலும் முன்னேற்றம் சிறிது இருந்தது. இத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு பதினெட் டாம் நூற்றுண்டின் பிரசித்தமான விவசாயிகளுக்குத்தான் எல்லாப் புகழையும் அளிப்பது வழக்கம். ஆனுல், பதினேழாம் நூற்றுண்டில் கூட ஒருசில இடங்களில் விவசாய முறைகளைச் சீரமைக்கச் சில முயற்சிகள் செய்யப்பட்டன. திறந்த வயல்களில் எந்த முன்னேற்ற மும் சாத்தியமில்லை. குத்தகைக்காரர்கள் பயிரிட்ட அடைக்கப்பட்ட பெரிய நிலங்களில்தான் பரிசோதனைகள் செய்ய முடிந்தது. சாஸ்தி ரீய முறையில் கால்நடைகளின் இனவிருத்தி நடப்பதுப்பற்றியும் சில சுறுசுறுப்பான விவசாயிகள் கவனம் செலுத்தினர். சாகுபடி நிலங்களின் நீரை வடிப்பதுபற்றி பிளித் (Blith) என்ற விவசாயி முயற்சிகள் செய்தார். எருவிட்டு நிலத்தின் சத்தை அதிகரிப்பதும் மேற்கொள்ளப்பட்டது. டர்னிப்பும் பிற கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டன. ஆனுல், பதினெட்டாம் நூற்றுண்டுவரை இவ் வழக்கம் நாடு முழுதும் பரவவில்லை. நவீன முறைப் பண்ணை களில் உருளைக் கிழங்கு, ஹாப்கொடி (hops), க்ளோவர் மணப்புல் (clover) ஆகியவை பயிரிடப்பட்டன.

விவசாயப் புரட்சிக்குச் சற்று முன்னுல் இங்கிலாந்தில் கிராமப் பொருளாதார அமைப்பு இருந்த நிலையைச் சுருக்கமாக இங்குக் கூற லாம். நாட்டின் மேனர்களில் சுமார் பாதியில் திறந்த வயல்முறை 1750-லும் காணப்பட்டது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கையாளப்பட்டுவந்த எளியதொரு பயிர் சுழற்சி முறைப்படி அவ்வவ் வூர் வழக்கத்தின் அடிப்படையில் இங்கெல்லாம் சாகுபடி நடந்து வந்தது. இவ் வழக்கத்தை மீற யாரும் விரும்பவில்லை. திறந்த வயல் களில் இருந்த துண்டுகளில் சில சொந்தக் குடியானவர்களுடையன ; வேறு சில படிக்காரர்களுடையன. மேனரின் பிரபுவுக்கு உழைக்கக் கடமைப்பட்டிருந்த பண்ணையாட்களின் சந்ததிகளே இப் படிக்காரர் கள். இக்கடமை மறைந்து பல ஆண்டுகளாயினும், கட்டாய சேவைக்கு ஈடாக ஒரு விடுதலை வாரத்தை அவர்கள் தொடர்ந்து பிரபுவுக்குச் செலுத்திவந்தனர். தன் பண்ணையாள் மூதாதையரைப் போலன்றிப் படிக்காரர்களது உரிமை நிச்சயமாக இருந்தது. மேனர் புத்தகத்தில் பதிவான குறிப்புடைய படியை (copy) அவர்கள்

வைத்திருந்தனர். அதை ஓர் உரிமைப் பத்திரத்துக்கு ஈடாக நீதி மன்றங்கள் கருதின. படிக்காரனை அவனது நிலத்தைவிட்டு வெளியேற்ற முடியாது. அவ்வாறு வெளியேற்ற யார் முயன்றாலும் அத்தகைய ஆக்கிரமிப்பாளர்மீது வரம்பு மீறியதற்காகப் படிக்காரன் வழக்குத் தொடரலாம். பிற விவசாயிகளோ குத்தகைக்காரர்கள்.[1] தம் நிலத்துக்காக ஒரு சாதாரண வாரம் செலுத்தினர். அவர்கள் நிலங்கள் திறந்த வயல்களில் இருந்தது அரிது. திறந்த வயல் முறை மறைந்துபோன கிராமங்களில் இவர்கள் காணப்பட்டனர். இவர்களது நிலங்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு வேலியிடப்பட்டிருந்தன. இந் நிலங்கள் பெரிய எஸ்டேட்டுகளின் (Estates) பகுதிகளாகும். வேலியிட்ட குத்தகை நிலங்கள் திறந்த வயல் கிராமங்களிலும் இருந்தன. இடைக் காலத்தில் பிரபுவின் டிமீன் நிலமாக இருந்தவையே அந்நிலங்கள். திறந்த வயல்களைவிட வேலியிட்டவற்றின்மீது கிராம வழக்கத்தின் ஆதிக்கம் குறைவு. முன்னரே கூறியபடி அவற்றில் பரிசோதனைகள் செய்யப்பட்டன. ஆனால், வேலியிட்ட வயல்களும் நாட்டின் சில பகுதிகளைவிட வேறு பகுதிகளில் அதிக அபிவிருத்தி அடைந்திருந்தன. பழைய முறை தொடர்ந்து காணப்பட்ட மேனர்களில் வழக்கப்படி குடியானவர்களின் ஆடுமாடுகள் மேயப் பொதுப் புல்வெளியும், விறகும் மரமும் வெட்டிக்கொள்ளக்கூடிய வன நிலமும் நிறைய இருந்தன. இதற்குச் சட்டப்படி உரிமை ஏதுமில்லாவிடினும், இவ்வுரிமைகள் தொன்றுதொட்டு இருந்திருக்கின்றன. அவற்றை ஆட்சேபிக்கவேண்டுமென்று யாருக்கும் தோன்றவில்லை.

[1] குத்தகைக் குடிமை தோன்றிய கட்டங்களைச் சுருக்கமாகத் திரும்பக் கூறலாம்.

(அ) டிமீன் நிலத்தைக் கால்நடைக் கருவிகளுடன் குத்தகை.

(ஆ) டிமீன் நிலத்தைச் சாதாரணக் குத்தகை.

(இ) டிமீன் நிலத்தின் பகுதிகளைச் சாதாரணக் குத்தகை.

(ஈ) 15, 16ஆம் நூற்றாண்டுகளில் சில திறந்த வயல்கள் சாகுபடிக்காக அமைக்கப்பட்டன. சிலவற்றில் குத்தகைப் பண்ணைகள் தோன்றின. பெரும்பாலான நிலங்கள் படிக்காரர்களுடையவை.

(உ) சில படிக்காரர்கள் தம் 'படிகளைக்' கொடுத்துவிட்டு குத்தகைகளை ஒப்புக்கொண்டதால், மேலும் குத்தகைப் பண்ணைகள் தோன்றின.

(ஊ) டியூடர் காலத்தின் பின்பகுதியில் மேய்ச்சல் நிலம் சாகுபடிக்கு மாறியபோது திறந்த வயல்கள் முறை மீண்டும் தோன்றவில்லை. அத்தகைய நிலங்கள் குத்தகைப் பண்ணைகளாகப் பிரிக்கப்பட்டன.

(எ) பதினேழாம் நூற்றாண்டில் சாகுபடிக்காக நில அடைப்புத் தொடர்ந்து நடந்தது. அந் நிலங்கள் குத்தகைப் பண்ணைகளாயின.

(ஏ) தாழ் நிலங்களில் நீர்வடித்தும், புதர்களை ஒழித்தும் சாகுபடி நிலம் அதிகரிக்கப்பட்டது. அந்நிலங்களும் குத்தகைப் பண்ணைகளாகப் பிரிக்கப்பட்டன.

(ஐ) மிகுதியிருந்த திறந்த வயல்கள் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஒன்றுசேர்க்கப்பட்டு வேலியிடப்பட்டன. பல குத்தகை நிலங்களாகப் பிரிக்கப்பட்ட பெரிய எஸ்டேட்டுகளின் தோற்றம்.

கிராமத்துக் குடியானவர்கள் மிக்க ஏழ்மையினால் வருந்தவில்லை. அவர்களது வாழ்க்கைவளம் சுமாராகத்தான் இருந்தது. ஆனால், அந்த வளத்துக்கும் விவசாயம்மட்டுமே காரணம் என்று கூற முடியாது. குடியானவன் வசித்த குடிசை அவனுடையதே அல்லது அதற்கான வாடகை மிகக் குறைவே; எனினும், பழையதொரு முறைப்படி பயிரிடப்பட்ட இருபது, முப்பது ஏக்கரா நிலத்தின் விளைச்சல் ஒரு குடும்பத்தைச் சுகமாக வைத்திருக்கப் போதுமானதாக இல்லை. மற்றொரு வகை வருவாய் இருந்ததால்தான் அவன் ஏழ்மைத் துயரினின்று காப்பாற்றப்பட்டான். அவனது மனைவியும் பெண்களும் நூற்றுத் தந்த நூலை நெய்வதில் தன் நேரத்தில் ஒரு பகுதியை அவன் செலவழித்தான். விளைச்சல் மோசமாக இருந்ததால் நெசவு அவனைக் காப்பாற்றியது; நெசவுத் தொழில் மந்தமாக இருந்தால் அவனது நிலத்தின் விளைச்சல் அவனைக் காப்பாற்றும். அந்நிலையில் வயோதிகத்தின் வருகை கண்டு அவன் அதிகமாகப் பயப்படவில்லை. இன்றைய தொழிலாளியைப்போல எப்போது வேலை போய்விடுமோ என்ற பயமுமில்லை. தகப்பன் இறந்துவிட்டால் கூடக் குடும்பம் கதியற்றுப் போகவில்லை. குடும்பம் முழுதும் வயலில் உழைத்தது; குடும்பம் முழுதும் நெசவில் ஈடுபட்டது.

திறந்த வயல் சாகுபடி முறையில் பெருமை ஏதும் இல்லை. அது நிலத்தை முழுதும் பயன்படுத்தாது வீணடித்தது. ஏனெனில், எந்த ஓர் ஆண்டிலும் மூன்று வயல்களில் ஒன்று தரிசாக இருந்தது. தவிர, ஒருவனுடைய துண்டுகள் பல இடங்களில் சிதறியிருந்ததனால் தூரத்திலிருந்த துண்டுகளுக்குப் போக நெடுந்தூரம் நடக்கவேண்டியிருந்தது. அதனால், நேரம் விரயமாயிற்று. ஊர் வழக்கத்தை அப்படியே பின்பற்றவேண்டியிருந்ததால் சாகுபடி முறையில் பரிசோதனைகள் செய்ய முடியவில்லை. குடியானவர்களுள் மிகக் கடுமையாக உழைப்பவர்களது வருமானம் மிகச் சோம்பேறிகளது உழைப்பைப் பொறுத்திருந்தது. ஏனெனில், பின்னவர்களின் நிலத்தில் வளர்ந்த களைகள் முன்னவரது நிலத்திலும் பரவியது. எனினும், அதன் காலத்தில் அம்முறை நாட்டுக்கு நன்மை பயந்தது. ஆனால், அது நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வழங்கிவந்தது. அது இருந்தவரை எந்த அபிவிருத்தியும் தோன்ற முடியவில்லை. சாகுபடி முறையில் அவ்வப்போது தோன்றிய அபிவிருத்திகள் அனைத்தும் வேலியிட்ட நிலத்தில் தான் தோன்றின.

மேலும் பல மாறுதல்கள் பின்னர்த் தோன்றுவதற்கிருந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் மக்கள் தொகை பெருகிவந்தது.

அந்நூற்றுண்டின் இறுதியில் இப்பெருக்கம் மிக அதிகமாக இருந்தது. எனவே, உணவு அதிகமாகத் தேவைப்பட்டது. பழைய முறையில் விளைச்சலைப் பெருக்க வழியில்லை. ஆகையால், பழைய முறை கழிந்து புதிய முறை புகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உணவுப் பற்றுக்குறை காரணமாக விலைவாசிகள் உயரலாயின. நிறைய விளைவித்தால் நிறைய வருவாய்வரும் என்ற எண்ணம் பழமையை மிக விரும்பிய குடியானவனையும் புது முறைகளைக் கையாளச் செய்ய வல்லது. தவிர, தொழிற்சாலை முறை வளர்ந்தபோது கிராம நெசவுத் தொழில் தேயலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை அது அடியோடு மறையாவிட்டாலும், குடிசை நெசவில் வேலை குறைந்துகொண்டே வந்தது. சில சமயம் பல நாட்கள் ஒரு வேலையும் இல்லாதிருந்தது. ஆகையால், குடிசைத் தொழிலாளி மேலும் மேலும் நிலத்தை நம்பி வாழவேண்டியிருந்தது. நெசவுத் தொழிலும் பயிர்த் தொழிலும் பிரியலாயின. குடியானவன் விவசாயத்தையே நம்பி வாழ்ந்தான்; அல்லது தன் வீடு, நிலங்களை விற்றுவிட்டுக் கிராம வாழ்க்கையைத் துறந்து, புதிய தொழிற்சாலை நகரமொன்றில் குடிபுகுந்து நெசவுத் தொழிலையே மேற்கொண்டான். கலப்பை, கைத்தறி இரண்டையும் ஒருங்கே கையாண்ட காலம் மறைந்துவந்தது. ஆனால், திறந்த வயல் சாகுபடியைக் கொண்டு விவசாயிகள் வாழ முடியாது. எனவே, விவசாயத்தை நம்பி வாழ்ந்தவன் கட்டாயமாகச் சாகுபடி முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டியதாயிற்று.

திறந்த வயல்களைத் துண்டித்து வேலியிடக்கூடிய ஒன்றுசேர்த்த நிலத் தொகுதிகளாக (blocks) மக்களுக்கு மறுபடி பிரித்தளிப்பது மிகவும் அவசியமாக இருந்தது. பதினெட்டாம் நூற்றுண்டில் இப்பிரச்சினை நூற்றுக்கணக்கான கிராமங்களில் விவாதிக்கப்பட்டது. கிராம மக்கள் இயல்பாகவே பழமையை விரும்புபவர்கள்; மெதுவாகவே மாறுபவர்கள். எனவே, நில அடைப்புக்கு ஒருமனப்பட்ட உடன்பாட்டைக் காட்டிய கிராமம் அரிது. பொது உடன்பாட்டுக்குப்பின் நிலங்களை ஒன்றுசேர்த்தலும் வேலியிடலும் செய்யப்பட்டாலும், அவற்றை மறுபடி யாருக்கு, எவ்வளவு என்று நேர்மையுடன் பிரித்தளிப்பதில் கருத்து வேறுபாடு இருந்தது. சில மேனர்களில் தான் மக்களே உடன்பட இம்மாற்றம் ஏற்பட்டது. பெரும்பாலான திறந்த வயல் மேனர்களில் இம்மாற்றத்தை அரசாங்கம் தன் அதிகாரத்தைச் செலுத்திக் கட்டாயப்படுத்திச் செய்யவேண்டியிருந்தது. இதுபற்றிப் பாராளுமன்றத்துக்கு விண்ணப்பிக்கப்பட்டபோது,

அது, மேனரின் பிரபுவும், அதில் அக்கறையுள்ள மக்களில் ஐந்தில் நால்வரும் விரும்பிய ஒவ்வொரு மேனருக்கும், சிறுபான்மையோரின் ஆட்சேபத்தைப் பொருட்படுத்தாது, இம்மாற்றத்தை அம்மேனரில் அனுமதித்து ஒரு சட்டத்தை இயற்றியது. இரண்டாம் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தில் இத்தகைய சில பாராளுமன்றச் சட்டங்கள் இயற்றப்பட்டன. மூன்றும் ஜார்ஜ் மன்னரின் காலத்தில் இத்தகைய பல சட்டங்கள் வந்தன.[1] 1801-ல் வந்த பொதுப்படையான நில அடைப்புச் சட்டம் (Enclosure Act) இதுபற்றிய நடைமுறையை எளிதாக்கியது. ஆனால், ஒவ்வொரு மேனரிலும் நில அடைப்புச் செய்யுமுன் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறும் அவசியம் தொடர்ந்து இருந்துவந்தது. நான்காம் ஜார்ஜ், நான்காம் வில்லியம் மன்னர்களின் ஆட்சியில் நிலஅடைப்புச் சட்டங்களின் எண்ணிக்கை மறுபடி குறைந்தது. ஆனால், பெரும்பாலான நிலங்கள் அடைக்கப்பட்டு இனிச் செய்யவேண்டியது சிறிதளவாகவே இருந்தமையால் தான் அவற்றின் எண்ணிக்கை குறைந்தது. திறந்த வயல்கள் மறைந்தன; இன்று நாட்டுப்புறத்தில் பிரதானமாகத் தோன்றும் வேலிகள் தோன்றின.

நிலங்களை ஒன்றுசேர்ப்பதும் வேலியிடுவதும் முற்றிலும் அவசியமாக இருந்தன. இச்சீர்திருத்தம் மிக நல்ல முறையில் செய்யப்பட்டது என்று சொல்ல முடியாது. ஒரு நில அடைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும், கிராமத்துக்குச் சென்று நிலத்தைப் பகுத்து மறுபடி பிரித்தளிக்க ஓர் ஆணையாளர் நியமிக்கப்பட்டார். எல்லாருடைய உரிமைக் கோரிக்கைகளையும் அவர் கவனித்தார். அவர் நேர்மையுடன் தன் பணியை ஆற்றவில்லை என்று எண்ண இடமில்லை. ஆனால், அவர் சட்டப்படியான உரிமைகளைத்தான் ஒப்புக்கொண்டார். குடியானவர்களோ சட்டப்படியின்றி மேனரின் பண்டைய வழக்கின்படிச் சில உரிமைகளை அனுபவித்துவந்தார். ஒரு குடியானவன் விட்டுக்கொடுத்த துண்டுகளுக்கு ஈடாக ஒன்று சேர்த்த ஒரு நிலத் தொகுதியை ஆணையாளர் அளிக்க முடியும். அவ்வாறு அளிக்கவும் செய்தார். ஆனால், அவன் இழந்த மேய்ச்சல், வனநில 'உரிமைகளுக்கு' நஷ்டஈடு ஏதும் அவரால் தர முடியவில்லை. பிற குடியானவர்கள் பெருத சொத்தனைத்தும் பிரபுவைச் சார்ந்துநின்றது.

[1] இரண்டாம் ஜார்ஜ் காலத்தில் சுமார் கால் மிலியன் ஏக்கராவும், மூன்றும் ஜார்ஜ் காலத்தில் ஆறு மிலியனுக்கு அதிகமாகவும், நான்காம் ஜார்ஜ் காலத்தில் சுமார் 3,50,000 ஏக்கராவும், நான்காம் வில்லியம் காலத்தில் கால் மிலியனுக்குக் குறைவாகவும் வேலியிடப்பட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அதுவரை கிராமத்தார் அனைவரும் பொதுவாகப் பயன்படுத்திய வன நிலமும் மேய்ச்சலும் பிரபுவுக்குச் சொந்தமாயிற்று. சில ஏக்கர் பரப்புள்ள ஒரு வயலைப் பெற்ற குடியானவன் முன்னைவிட மோசமான நிலையில் இருந்தான். அதைச் சுற்றித் தடுப்பும் வேலியும் அமைக்கப் பணம் தேவைப்பட்டது. தன் ஏர்க்காளைகள், பன்றிகள், கோழி, வாத்துக்கள் ஆகியவற்றை மேய்க்க அவனுக்கு இடமில்லை. தவிர, இம்மாற்றத்துக்கான வழக்குச் செலவுகளில் தன் பங்கையும் அவன் செலுத்தவேண்டியிருந்தது. என்ன செய்வதென்று தெரியாத நிலையில் தன் சிறு நிலத்தை நியாயமான விலைக்கு முதலில் கேட்ட எவருக்கும் அவன் விற்கத் தயாரானான். நிலங்களை வாங்கப் பலர் முன்வந்தனர். தொழிற்சாலை நகரங்களில் பலர் பணக்காரராகி வந்தனர். அவர்களில் சிலர் பாராளுமன்ற உறுப்பினர் அல்லது கவுன்டி நீதிபதிகளாக விரும்பினர். எவ்வளவு பணக்காரராக இருந்தாலும், நிலம் இல்லாமல் தேசிய அரசாங்கத்திலோ, தலஆட்சியிலோ பங்கு பெற அவர்களால் முடியாது.[1] அதே அளவுக்கோ, அதைவிட அதிகமாகவோ சமுதாய அந்தஸ்துக்கும் நிலம் படைத்திருப்பது முக்கியமாக இருந்தது. நிலமற்ற பணக்கார ஆலை முதலாளிகளுக்குப் பேரில்லை. அவன் திடீரென மேல்நிலைக்கு வந்தவன் (upstart). ஆனால், அவன் நிலம் வாங்கியதும் மிக முக்கியமான கனவான் ஆகிறான். பிற மாவட்டப் பெருநிலக் கிழார்கள் அவனைத் தம் நிலைக்குச் சமமானவனாக மதிக்கிறார்கள். இவ்வாறு, வாங்க ஆள் இருந்ததால் நிலத்தை உடனடியாக விற்க முடிந்தது. ஒன்று சேர்ந்த தம் நிலத் தொகுதிகளை இப் புதுப் பணக்காரர்களுக்கு (nouveaux riches) விவசாயிகள் தயக்கமின்றி விற்றனர்.

கிராமவாசிகளான 'யோமென்' (yeomen)[2] என்றழைக்கப்பட்ட சுயேச்சைக் குடியானவர்களின் வகுப்பு இவ்வாறு மறைந்தது.

[1] ஆண்டுக்கு 600 பவுன் மதிப்புள்ள நிலத்தின் சொந்தக்காரர்கள் தாம் கவுன்டிகளின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் புக முடியும். பரோ (borough) உறுப்பினராக, ஆண்டுக்கு 300 பவுன் மதிப்புள்ள நிலம் படைத்தவரே தகுதி பெற்றனர். கவுன்டின் நீதிபதிகளுக்கு ஆண்டுக்கு 100 பவுன் மதிப்புள்ள நிலம் தேவை.

[2] சிலர் 'யோமென்' என்ற சொல் சிறு சொந்த நிலக்காரரை மட்டும் குறிக்கிறது என்பர். படிக்காரரையும் குத்தகைக்காரரையும்கூட இவ்வாறு அழைக்க இடமிருக்கிறது. ['அதிகபட்சம் ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு பவுன் மதிப்புள்ள பண்ணையை வைத்திருந்தாரேயன்றிச் சொந்தமாக நிலம் ஏதுமற்ற யோமென் (yeoman)' என்று தன் தகப்பனைப்பற்றி ஆறும் எட்வர்டின்முன் செய்த தன் பிரசித்தமான, அடிக்கடிக் குறிக்கப்படும் பிரசங்கத்தில் பிஷப் லாடிமர் (Bishop Latimer) கூறினார். தந்தை லாடிமர் ஒரு குத்தகைக்காரராக இருந்திருக்க வேண்டும்.] ஒருவனது நிலவார உரிமையின் இயல்பைவிட அவனது சமுதாயப் பொருளாதார நிலையே அவன் யோமெனா அல்லவா என்பதை நிருணயிக்

குறைகளைவிடப் பெருமைகளை அதிகமாக உடையவர்கள்[1] என்ற கீர்த்தி பெற்ற இவ்வகுப்பின் மறைவு மிகுந்த மனவருத்தத்தைத் தோற்றியிருக்கிறது. சொந்த நிலத்தைப் பயிரிடும் இவ் விவசாயிகளின் இனம் இருப்பதனால் ஒரு நாட்டின் வலிமையும் செல்வமும் பெருகுகிறது என்று அடிக்கடிச் சொல்லப்படுகிறது.[2] ஆனால், இங்கிலாந்தின் யோமென் வகுப்பினர் காலங்கடந்த ஒரு விவசாய முறையின் வாரிசுகள் என்பதையும் அவ்வகுப்பினால் முன்னேற்றத்துக்குத் தடை யுண்டாயிற்று என்பதையும் மறக்கக்கூடாது.

யோமென் வகுப்பினரில் சிலர் என்ன செய்வதென்று தெரியாது வளர்ந்துவரும் தொழிற்சாலை நகரங்களுக்கு வந்து சேர்ந்தனர். நிலத்தை விற்ற பணம் கரைந்ததும் ஆலைத் தொழிலாளிகளாக மாறினர். எச்சரிக்கை மிக்க வேறு பலர் தம் சிறு மூலதனத்தைப் பெருக்கிச் சிறு தொழிற்சாலைகளை அமைத்தனர். நாளடைவில் அவர்கள் தம் வாழ்நாளிலேயே மிகுந்த செல்வர்களாயினர். இன்றேல், அவர்கள் சந்ததிகள் அவ்வாறு மிகுந்த செல்வராயினர் (முதன் முதலில் வெற்றிகரமாகத் தொழிற்சாலை நடத்திய பலர் யோமென் வகுப்பினர் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை). தம் மூதாதையர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்பி வாழ்ந்த நிலத்தைவிட்டு வேறு பலர் அகலவில்லை. இவர்களுள் சிலர் கூலியாட்களது நிலைமைக்குத் தாழ்ந்தனர். பெரும்பாலானவர் கதி இப்படித்தான் ஆகியிருக்க வேண்டும். மிகவும் திறமையும் சுறுசுறுப்பும் படைத்தவர்கள் குத்தகை விவசாயிகளாயினர். இருநூறு, முந்நூறு ஏக்கர்[3] பரப்புள்ள பெரிய பண்ணைகளை ஏற்கெனவே விவரித்தவாறு தோன்றிய பெரிய நிலத்தொகுதிகளின் சொந்தக்காரர்களிடமிருந்து வாரத்துக்குப் பெற்று தம் சொந்தப் பணத்தை முதலாகக் கொண்டு விவசாயம் செய்தனர்.

கிறது. அவர்கள் அந்தஸ்தில் நிலமற்ற தொழிலாளிகளைவிட உயர்வாகவும், உழைக்காத நில முதலாளிகளைவிடத் தாழ்வாகவும் இருந்தனர். திறந்த வயல்களில் நிலம் படைத்த சிறு சொந்த நிலக்காரர்களும் படிக்காரர்களுமே 'மறைந்துபோன' யோமென் ஆவர்.

[1] திடமான (stout), வலிமை பெற்ற (sturdy), நேர்மையான (honest) மதிப்புக்குரிய (worthy) என்ற புகழ்ச்சி அடைமொழிகளுடன் சம்பந்தப்பட்டு யோமென் (yeomen) என்ற சொல் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டதால் அவ்வர்க்கத்தினரின் பெருமைகளைப்பற்றிப் பாரபட்சமான முடிவுக்கு வரத் தோன்றுகிறது.

[2] இதற்குச் சான்று ஏதும் இல்லை. ஃபிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் சொந்த நிலம் படைத்த விவசாயிகள் பழைய முறைகளில் விவசாயம் செய்கின்றனர். அவர்களது மூலதனம் குறைவு. அவர்கள் மிகவும் பாடுபடுகின்றனர். அவர்களைச் செல்வந்தர்கள் எனச் சொல்லவே முடியாது.

[3] எனினும், *19, 20*ஆம் நூற்றாண்டுகளில் பல பண்ணைகளின் பரப்பு இதைவிட மிகக் குறைவாக இருந்தது.

இங்கிலாந்தின் விவசாயப் புரட்சிக்கு முன் கிராமச் சமுதாய அமைப்பின் மூன்று படிகளாக மேனர் பிரபுக்களும், சுயேச்சைக் குடியானவர்களான 'யோமென்'னும், தொழிலாளர்களும் இருந்தனர். பத்தொன்பதாம் நூற்றுண்டில் இதற்கிணையான படிகள், பெருநிலக் கிழாரும் (squires), குத்தகைக் குடியானவர்களும் (tenant farmers), தொழிலாளர்களும் ஆவர்.

நிலங்களை ஒருங்கு சேர்த்து வேலியமைத்ததில் பரிசோதனைகள் செய்ய வாய்ப்பு உண்டாயிற்று. தரிசு நிலங்கள் மறைந்தன; புதிய, விஸ்தரிக்கப்பட்ட பயிர்ச் சுழற்சி முறை பயன்படுத்தப்பட்டது. நாட்டின் பல பகுதிகளில் தட்பவெப்ப நிலையும் மண் வளமும் குறிப்பிடத்தக்கவாறு வேறுபட்டதால் எல்லா மாவட்டங்களிலும் ஓரே மாதிரி சாகுபடி முறையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. டவுன்சென்டு பிரபு (Lord Tounshend) புகுத்திய புதுச் சாகுபடி முறையாகிய 'நார்ஃபக் முறை' (norfolk course) மிகவும் விரும்பப்பட்டு பல இடங்களில் கையாளப்பட்டது. நான்கு ஆண்டுப் பயிர் முறையான இதன் அடிப்படைக் கொள்கைகள் பின்வருமாறு:

(1) எந்த ஆண்டிலும் நிலம் தரிசாகக் கிடக்காது.

(2) தானியம் ஒன்றுவிட்டு ஓர் ஆண்டில் பயிரிடப்பட்டது.

(3) தானியம் பயிரிடாத ஆண்டுகளில் மணப்புல்லும் (clover), கிழங்கு வகையும் பயிரிடப்பட்டன.

அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட நார்ஃபக் முறை வகையில் அடுத்தடுத்த ஆண்டுகளில் கோதுமை, மணப்புல், பார்லி, டர்னிப்புகள் ஆகியவை இவ்வரிசையில் பயிரிடப்பட்டன. மணப்புல்லும் கிழங்குகளும் பயிரிட்ட ஆண்டுகளில் தானியம் விளைந்ததனுல் இழந்த சத்தை நிலம் மீண்டும் பெற்றது.[1] ஏற்ற எருவிட்டால் விசேஷமாக இவ்வாறு நிலம் வளம் பெறுகிறது. இதனுல், நிலத்தை எந்த ஆண்டும் தரிசாகப் போடாமலே தானியம் விளைவிக்க முடிந்தது. டர்னிப்புகள், ஸ்வீடுகள் (swedes)[2] மாங்கல்-வர்சல்கள் (mangel-wurzels)[3] ஆகிய கிழங்குகள் பனிக்காலத்தில் கால்நடைத் தீவனமாயின. இடைக் கால விவசாயியைத் திகைக்கவைத்த ஒரு

[1] மணப்புல்லின் வேரிலிருந்த நைட்ரேட்டுகள் மண்ணோடு சேர்ந்து உழப்பட்டதால் நிலம் சத்துப்பெற்று அடுத்த தானியப் பயிர் நன்கு விளைய வழியுண்டாயிற்று.

[2] ஸ்வீடன் நாட்டு டர்னிப்பு.

[3] கால்நடைகள் உண்ணும் பெரிய பீட் கிழங்கு.

பிரச்சினைக்கு இதனுல் ஒரு முடிவு ஏற்பட்டது. பனிக்காலத்தில் கொட்டில்களில் கால்நடைகளை வைத்திருந்ததால் நிலத்துக்குப் போடச் சாணி எரு கிடைத்தது. இதனுல், நான்கு ஆண்டுப் பயிர்ச் சுழற்சியின் வெற்றி நிச்சயமாயிற்று.

பதினெட்டாம் நூற்றுண்டில் கால்நடை வளர்ச்சிபற்றி முக்கிய மாகக்கவனம் செலுத்தப்பட்டது. இதற்கு முன் ஆங்கிலப் பண்ணை களின் கால்நடைகளின் தரம் மிகக் குறைவாக இருந்தது. காளைகள் நீண்ட கால்களும், எலும்பும் தோலுமான ஒல்லியான உருவமும் படைத்திருந்தன. எடைக்காகவன்றி இழுக்கும் சக்திக்காகவே அவை மதிக்கப்பட்டன. ஆடுகளும் மெலிந்திருந்தன. அவற்றின் உரோமத்தின் எடையும் குறைவு. எல்லாவகைக் கால்நடைகளும் தொத்துநோய்களால் பாதிக்கப்பட்டிருந்தன. பதினேழாம் நூற் ருண்டில் முற்போக்குக் கருத்துகள் கொண்ட கால்நடை விருத்தி செய்வோர் சிலர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைத் தவிர, விவசாயப் புரட்சிக்கு முன் கால்நடைகளின் இனப்பெருக்கத்தைச் சாஸ்திரீய முறையில் கட்டுப்படுத்தி நல்ல கால்நடைகளைத் தோற்றுவிக்க எதுவும் செய்யப்படவில்லை. மேலும், அப்போதெல்லாம் பனிக் காலத்தில் உணவளிக்க முடியாததால் எண்ணற்ற கால்நடைகள் சாகடிக்கப்பட்டன. டர்னிப்புகளும் பிற கிழங்குகளும் பனிக்காலத் தீவனப் பிரச்சினைக்கு ஒரு முடிவுண்டாக்கின. டிஷ்லி (Dishley) யைச் சேர்ந்த ராபர்ட் பேக்வெல் (Robert Bakewell), டர்ஹாமைச் (Durham) சேர்ந்த காலிங் சகோதரர்கள் போன்ற பல கால்நடை விருத்தி செய்வோர், ஆடு மாடுகளில் நல்ல இனங்களைத் தோற்று வித்தனர். காளைகள் இறைச்சிக்காக விருத்தி செய்யப்பட்டன. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் அதன் தொடக்கத்தில் இருந்ததற்கு இரு மடங்குக்கு அதிகமாகக் காளைகளின் எடை உயர்ந் தது. ஆட்டிறைச்சிக்காகவும் உரோமத்துக்காகவும் ஆடுகள் விருத்தி செய்யப்பட்டன. அந் நூற்றுண்டில் ஆடுகளின் எடை மும்மடங் காக உயர்ந்தது. அவற்றின் உரோமத்தின் எடை அதைவிட அதிக மாக உயர்ந்தது.

ஜெத்ரோ டல் (Jethro Tull) கண்டுபிடித்த 'டிரில்' (drill) விதை விதைப்பதில் ஒரு புதிய முறையைத் தோற்றுவித்தது. பதினெட் டாம் நூற்றுண்டுக்கு முன் ஒரு பெரிய தட்டில் தானியத்தைத் தூக்கிக்கொண்டு இப்புறமும் அப்புறமும் அதைத் தூவி விதைப்பர். விவிலிய நூலின் (bible) காலத்தினின்று இம்முறை மாருது வழங்கி வருகிறது. விதை சீராகத் தூவப்படுவதில்லை. அதில் பெரும்பகுதி

வீணாயிற்று. டிரில் என்னும் கருவி நிலத்தில் பள்ளம் செய்து வரிசையாக அதில் விதைகளைப் போட்டது; இதனால் விதையும் குறைவாகத் தேவைப்பட்டது. பயிரும் நன்றாக விளைந்தது. மண்ணை நன்றாக உடைத்துப் பயிரிடவேண்டும் என்றும் டல் சொன்னார். அதற்காக மண் கொத்தும் கருவியைக் குதிரைகள் இழுக்கும் முறையை (horse-hoeing) அவர் புகுத்தினார்.

விவசாய முறைகளை அபிவிருத்தி செய்யும் இயக்கத்துக்கு அரசரது ஆதரவு கிடைத்தது. மக்கள் அன்புடன் 'உழவர் ஜார்ஜ்' (Farmer George) என்றழைத்த மூன்றாம் ஜார்ஜ் மன்னன் வின்ட்ஸரில் (windsor) ஒரு மாதிரிப் பண்ணையை நிறுவினார். விவசாயக் கழகச் செயலாளர் (Secretary to the Board of Agriculture) ஆர்தர் யங்கும் Arthur young) இவ்வியக்கத்தின் வெற்றிக்கு ஒரு முக்கியக் காரணமாக இருந்தார். அவர் இங்கிலாந்திலும் ஃபிரான்சிலும் விஸ்தாரமாகப் பயணம் செய்தார். பல மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்ட முறைகளையும் கருவிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தார். விவசாய முறைகள்பற்றிய செய்திகளைச் சேகரித்துப் பரப்பினார். ஆர்தர் யங் கருத்தளவில் ஆதரித்துப் பேசிய புது முறைகளை நடைமுறையில் செய்து காட்டும் பணி ஹோாக்கமின் (Holkham) பெருநிலக்கிழாரான தாமஸ் கோக்கைச் (Thomas Coke) சார்ந்தது. இவர் பிற்காலத்தில் லெஸ்டர் கோமகனானார் (Earl of Leicester). சிறு வயதிலேயே ஹோாக்கம் பண்ணையை வாரிசாகப் பெற்ற கோக், அது மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருப்பதைக் கண்டார். மணற்பாங்கான நிலத்தை உப்புக் களிமண் கலந்தும் எருவிட்டும் சத்தான கோதுமை வயலாக அவர் மாற்றினார். புதுக் கருவிகளை அவர் பயன்படுத்தினார். புது விவரங்களைச் சேகரித்தார். தம் குத்தகைக்காரர்களை நவீன முறைகளைக் கடைப்பிடிக்கத் தூண்டினார்.. மேற்கு ஐரோப்பா முழுவதிலும் பிரசித்தமான மாதிரிப் பண்ணையாக அவர் நிலம் விளங்கியது. அவர் 1842-ல் சாகுமுன் (அப்போது அவருக்கு வயது தொண்ணூறுக்குமேல் இருக்கும்) பண்ணை அபிவிருத்திக்காக அரை மிலியன் பவுனுக்குமேல் செலவழித்திருந்தார். செய்த செலவெல்லாம் நல்ல விளைச்சலாகவும், நிலத்தின் மதிப்பில் ஏற்றமாகவும் அவரை மீண்டும் வந்து அடைந்ததால், சாகும்போது நல்ல பணக்காரராக இருந்தார்.

இவ்வதிகாரத்தில் விவரிக்கப்பட்ட மாறுதல்களால் இங்கிலாந்தின் வளரும் ஜனத்தொகைக்கு உணவளிக்கும் பிரச்சினைக்கு ஓரளவுதான் தீர்வு காண முடிந்தது. 1750-க்குப் பின் மக்கள் தொகை

வெகு வேகமாக உயர்ந்தது. எனவே, பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் உணவைச் சிறிது இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. முதலில் இவ்விறக்குமதியின் அளவு அதிகமாக இல்லை. ஃபிரெஞ்சுப் போர்களின்போது தன் உற்பத்தியையேதான் இங்கிலாந்து பெரும்பாலும் நம்பியிருந்தது. பின்னர், சில அதிகாரங்களில் 1850-ல்கூட பிரிட்டனின் உணவுத் தேவையில் பெரும்பகுதி அங்கேயே விளைவிக்கப்பட்டதுபற்றிக் கூறப்படுகிறது. ஆனுல், பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட உணவை நாடு நம்பி வாழத் தொடங்கியது. தொழில் வளர்ந்த இடங்களில் மக்கள் தொகை பெரிதும் அதிகரித்ததால் உணவு இறக்குமதி அவசியமாயிற்று. ஆயினும், பதினெட்டாம் நூற்றுண்டின் விவசாயப் புரட்சி காரணமாகப் பிறநாட்டு விவசாயத் தொழில்களோடு ஒப்பிடும்போது ஆங்கில விவசாயம் முன்னணியில் நின்றது. ஐரோப்பாவிலேயே அது தலைசிறந்து நின்றது. பல ஆண்டுகளுக்கு ஐரோப்பிய நாடுகள் பின்பற்ற முயன்ற ஓர் இலட்சியமாக அது விளங்கியது.

14. தொழிற் புரட்சி

(The Industrial Revolution)

பதினெட்டாம் நூற்ருண்டின் இரண்டாவது பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்ருண்டின் முதல் பகுதியிலும் இங்கிலாந்தின் தொழிலமைப்பிலே பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டன. இவை மிகக் குறிப்பிடத்தக்கவை; தொழிலமைப்பின் எல்லா அம்சங்களையும் அவை மாற்றின. எனவே, இவை தொழிற் புரட்சி[1] என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளன. 'புரட்சி' (revolution) என்ற சொல் அடிப்படையான மாற்றத்தைக் குறிக்கிறது; அடியோடு அரசாங்கத்தை மாற்றுவது அரசியல் புரட்சி;[2] பன்னாட்டு உறவை அடியோடு மாற்றியமைப்பது அரசியல் தந்திரப் புரட்சி (diplomatic revolution); சாகுபடி முறைகளும் விவசாய அமைப்பும் மாறுவது விவசாயப் புரட்சி; சமூகத்தின் வகுப்புகளின் தராதர முக்கியத்துவத்தை மாற்றுவது சமுதாயப் புரட்சி. அதுபோலத் தொழில் முறையில் கைவேலைக்குப் பதில் விசைப் பொறிகளைப் பயன்படுத்துவது, தொழில் அமைப்பில் வீட்டு வேலைக்குப் பதில் தொழிற்சாலையில் வேலை செய்வது ஆகிய மாற்றங்கள் தொழிற் புரட்சி என்று

[1] ஆர்னல்டு டாயின்பீ (Arnold Toynbee) *1884*-ல் 'Industrial Revolution' என்ற சொல்லைப் புகுத்தியதாகக் கூறப்படுகிறது. *1837*-லேயே பிளாங்கி (Blanqui) என்ற ஃபிரெஞ்சு ஆசிரியர் இதைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. பின்னர், ஜெவன்ஸ் (Jevons), ஏஞ்சல்ஸ் (Engels), கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆகியோரும் இதைப் பயன்படுத்தினர்.

[2] ஃபிரான்ஸில் *1789*-லும், ரஷ்யாவில் *1917*-லும் தோன்றியவை போன்று பலாத்காரமானதும் வியக்கத்தக்கதுமான மாறுதல்களுக்குத்தான் 'புரட்சி' என்ற சொல் பொருந்தும் எனச் சாதாரணமாகக் கருதப்படுகிறது. பாராளுமன்றங்கள் உள்ள பிரிட்டன் போன்ற நாடுகளில் அரசாங்கங்கள் அடிக்கடி மாறுவதைப் புரட்சி என்று அழைப்பதில்லை. இத்தகைய மாற்றம் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடக்கிறது; பலாத்காரமின்றி, இரத்தம் சிந்தாது அரசாங்கத்தை மாற்ற வழி ஏற்படுத்துமளவுக்கு அரசியல் துறையில் இந்நாடு முன்னேறியுள்ளது. எனினும், அந்த மாறுதலும் ஒரு புரட்சிதான்.

அழைக்கப்படுகின்றன. புது அமைப்பில், மிக்க அளவில் உற்பத்தி செய்வது தொழிலின் நோக்கமாயிற்று. சிறிய, நிலையான அங்காடிக்காக உற்பத்தி செய்த பழைய நோக்கத்துக்குப் பதில் நிறையவும் விலை குறைவாகவும் பொருள்களை உற்பத்தி செய்து நாட்டு எல்லைக்கு அப்பாலும், சில சமயம் உலக முழுவதிலும் விற்கவேண்டும் என்ற உறுதி தோன்றியது.

புரட்சி என்பது திடீரெனத் தோன்ற வேண்டியதில்லை. அதில் பலாத்காரம் இருக்க வேண்டியதில்லை. அது மெதுவாக, அதன் போக்கைப் பிறர் உணரமுடியாதவாறும் தோன்றலாம். தொழிற் புரட்சிக் காலத்தில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோருக்கு அக் காலத்தில் தோன்றி வந்த மாற்றங்களைப்பற்றித் தெரியாமலேயே இருந்திருக்கலாம். எந்த ஆண்டிலிருந்து எது வரை இப்புரட்சி நடந்தது என்று திட்டமாகக் கூறுவதும் கடினம். 1765-85 ஆகிய இருபதாண்டுக் காலத்துக்குள் பல முக்கிய கண்டுபிடிப்புகள் நெசவுத் தொழிலில் ஏற்பட்டன; எனினும் தொழிற் புரட்சி முழுதும் இக்குறுகிய காலத்திலேயே நடந்தது என்று கூறலாகாது. 1765-க்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நெசவுப் பொறிகளைப்பற்றிச் சோதனைகள் நடத்தப்பட்டு வந்தன. 1785-க்குப் பின்னும் இப் பொறிகளில் அபிவிருத்திகள் செய்யப்பட்டு வந்தன. எனவே, நெசவுத் தொழிலின் முறை அடியோடு மாற நிச்சயமாக எழுபது வருடங்களாவது பிடித்திருக்கும். மற்றொரு துறையில் இம்மாற்றங்கள் நிகழ்வதற்கு இன்னும் அதிக காலம் ஆயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பொறிகளை இயக்க நீராவி எஞ்சின் (steam engine) தோன்றிவிட்டது; ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில்தான் நீர்ச் சக்கரத்துக்குப் பதிலாக நீராவி எஞ்சின் எல்லா இடங்களிலும் பயன்பட்டது. குடிசைத் தொழிலுக்குப் பதில் தொழிற்சாலையில் வேலை செய்வது எல்லா இடத்திலும் தோன்றியதற்குக்கூடப் பல ஆண்டுகள் பிடித்தன. பதினாறும் நூற்றாண்டிலேயே ஒரு முதலாளியின் வசமிருந்த ஒரு கட்டடத்தில் பல தொழிலாளர்கள் சேர்ந்து வேலை செய்யும் முறை சில இடங்களில் காணப்பட்டது; சில தொழில்களில் இன்றும் அடியோடு குடிசை வேலை மறையவில்லை. இக்காரணங்களால் தொழிற்புரட்சி என்ற பெயர் அதற்குப் பொருந்தாது என்று சில ஆசிரியர்கள் கூறுகின்றனர். காணப்பட்ட மாறுதல்கள் மெதுவான தொழில் வளர்ச்சியின் போக்கு என்றும் விரைவு, பலாத்காரம் ஆகிய இரு இயல்புகளும் கொண்ட 'புரட்சி' என்ற சொல் இவற்றுக்குப் பொருந்தாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால், 1770-ல் பிரிட்டனின்

தொழில் இருந்த நிலையையும் 1850-ல் இருந்த நிலையையும் ஒப்பிட்டால் இம்மாறுதல்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதை உணரலாம்; அப்போது இம்மாறுதல்கள் புரட்சிகரமானவைதான் என்பது ஒப்புக்கொள்ளப்படும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை பிரிட்டன் பெரும்பாலும் ஒரு விவசாய நாடாக இருந்தது. நகரங்கள் மிகச் சிலவே; இன்றைய நகரங்களோடு ஒப்பிட்டால் அவை சிறியவையே. மக்கள் தொகையில் ஐந்தில் நான்கு பங்கு நாட்டுப்புறக் கிராமங்களில் வசித்தனர்; விவசாயத்தையே முக்கியமாக நம்பி வாழ்ந்தனர். இன்றைய பெரிய தொழிற்சாலை நகரங்களில் காணப்படும் பருத்தி நெசவு, கம்பளி, எஃகு, இரும்புச் சாமான்கள், ஜாடிகள், கண்ணாடி போன்ற ஆலைத்தொழில்கள் பெரும்பாலும் அப்போது தோன்றவேயில்லை. அப்படி ஏற்பட்டிருந்தாலும் மாவட்டங்களில் சிறிய அளவில் அவை நடத்தப்பட்டு வந்தன. விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மக்களே தம் வீடுகளில் நூல் நூற்றுத் துணி நெய்தனர்; கையால் இயக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்திக் கைவினையாக அத்தொழில் நடந்தது. விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டு முழுதும் வேலை யிருக்காது. உழுதல், விதைத்தல், அறுவடை போன்ற முக்கிய வேலைகள் நடக்கும்போது குடியானவனுக்கும் அவனது தொழிலாளர்களுக்கும் முழு வேலை இருக்கும். ஆனால், சில சமயங்களில் பண்ணையில் அவ்வளவாக வேலை இருக்காது. வேறு சில சமயங்களில் வானிலை காரணமாகவும், (பனிக்காலத்தின் இடையில் உள்ளது போன்று) வெளிச்சம் போதாததாலும் வெளிவேலை அநேககமாகச் செய்ய முடியாமல் இருக்கும். எனவே, தொழில் புரட்சிக்கு முன் ஓய்வு நேரங்களில் விவசாயிகள் சாதாரணமாக வீட்டில் வேலை செய்தனர். சில ஏக்கரா நிலத்தின் வருவாய்க்குத் துணையாக வருமானம் கிடைக்கக் கூடிய உபதொழிலாக அதைக் கருதிய மக்களால்தான் பெரும்பாலும் கம்பளித் தொழில் நடந்தது. சிலர் கம்பளித் தொழிலை முக்கியமானதாகவும், விவசாயத்தை உபதொழிலாகவும் கருதியதும் உண்டு.

இந்தக் குடிசைத் தொழிலில் (வயல் வேலையில் உள்ளது போலவே) ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் ஈடுபட்டனர். குழந்தைகள் வாரிச் சிக்கெடுத்தனர் (carding). சிக்கு நீக்கிய உரோமம் அல்லது பருத்தியைப் பெண்டிர் நூற்றனர். கைத்தறியில் ஆண்கள் துணி நெய்தனர். பெண்களும் சில சமயம் தறிவேலை செய்தது உண்டு. இத்தொழிலைத் துணி வணிகர்கள் (dealers or clothiers) நடத்தினர். இவர்கள் மூலதனம் படைத்தவர்கள். அங்காடி நகரங்

களில் வசித்தவர்கள். அருகிலிருந்த கிராமங்களுச்குச் சென்று பருத்தியையும் உரோமத்தையும் கொடுத்து அடுத்த பயணத்தில் அவற்றினின்று செய்யப்பட்ட துணிகளை வாங்கிப் போயினர்.[1] அதற்குப் பின் நிகழ்ந்த வேலைகளான சாயம் தோய்த்தல் அல்லது வெளுத்தல், தோய்த்துக் கஞ்சி போடுதல், அச்சிடுதல், மெருகேற்று தல் ஆகியவற்றைத் துணி வணிகர்கள் நடத்திய தொழிற்கூடங்களில் அவர்களால் வேலைக்கமர்த்தப்பட்ட கூலியாட்கள் செய்தனர். நகரத்திலிருந்த தம் பண்டகசாலையிலிருந்து ஆறு வழியாகவோ வேறு வழியாகவோ ஒரு துறைமுகத்துக்கோ நதியின் கூடல் துறைக்கோ (river's mouth) துணியை அவர்கள் அனுப்புவர். அதை ஏற்றுமதிக்காக வியாபாரிகள் வாங்குவர்.

இம்முறையில் பல குறைபாடுகள் இருந்தன. காலந் தவருது வேலை நடக்கவில்லை; தொழிலாளி வேலை செய்வதை நிறுத்தி ஒருநாள் ஓய்வெடுத்துக் கொள்வது என்று நிச்சயித்தால் அதை யாரும் தடுக்க முடியாது. எனவே, அடுத்த முறை துணி வணிகன் வந்து பார்த்த நாளன்று அத்துணி தயாராக இல்லை என்ருல் அவனுல் ஒன்றும் செய்ய முடியவில்லை. நெசவாளிகள் சிலர் நேர்மையற்றிருந்தனர். கொடுத்த மூலப் பொருள் அனைத்தையும் கொண்டுதான் இத்துணி தயாரிக்கப்பட்டதா என்று ஆய்ந்து பார்க்க முடியவில்லையாதலின் துணி வணிகர்கள் கஷ்டப்பட்டனர்.

பதினெட்டாம் நூற்ருண்டில் இங்கிலாந்தின் வாணிபம் அதிகரித்து வந்தது. ஆங்கிலத் துணிகளுக்கு வெளிநாடுகளில் தேவை நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது. வணிகர்கள் அத்தேவையைச் சமாளிப்பதில் அக்கறை கொண்டனர். நிறையத் துணிகள் தரச் சொல்லி அவர்கள் துணி வணிகர்களை வற்புறுத்தினர். துணி வணிகர்களோ தொழிலாளிகளை மேலும் உழைக்கத் தூண்டினர். அப்போதிருந்த நிலைமையில் உற்பத்தி அதிகம் பெருக வழியில்லை. நூல் போதாது. நெசவாளிகளுக்கு முழு வேலையில்லை. ஆனல், நூற்பவர்களுக்கோ எப்போதும் முழு வேலையிருந்தது. ஐந்து அல்லது ஆறு பேர் ஒரு நாளில் நூற்ற நூலை முழு நாளும் வேலை செய்தால் ஒரு நெசவாளி நெய்து முடித்து விடுவான். எனவே, உற்பத்தி பெருக வேண்டுமாயின் நூற்பு முறையில் மாறுதல் செய்ய வேண்டியிருந்தது. நூற்பு முறையில் அபிவிருத்திக்கு ஏற்பட்ட அவசியம் தான் தொழிற் புரட்சியாகப் பரிணமித்த மாற்றங்களுக்கு முதல்

[1] 5ஆம் அதிகாரத்தைப் பார்க்க.

ஊக்கம் கொடுத்தது. நாளடைவில் பல பொறிகள் கண்டு பிடிக்கப் பட்டதால் நெசவுத் தொழில் அடியோடு மாற்றியமைக்கப்பட்டது. இவற்றைத் தனியாக ஓர் அதிகாரம் விவரிக்கிறது.

குடிசைத் தொழில் முறை வழங்கியபோது பருத்தியைவிட உரோமமே அதிகம் பயன்படுத்தப்பட்டபோதும், பருத்தித் துணி உற்பத்தியில்தான் முதன் முதலில் எந்திர சாதனங்கள் பயன்படுத்தப் பட்டன. இதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். கம்பளித் துணித் தொழில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வந்தது. மாறுதல்கள் செய்யப்படுமுன் அத்தொழிலில் நெடுநாளாக அக் கறை கொண்டிருந்தவர்களது ஆட்சேபத்தைச் சமாளிக்கவேண்டி யிருந்தது. ஆனால், பருத்தித் துணி உற்பத்தி கம்பளித் தொழிலை விடப் புதியது. இதில் எந்திர சாதனங்களைப் புகுத்துவதற்குத் தடங்கல் ஏதுமில்லை. மேலும், உரோமம் அதிகமாகக் கிடைக்க வில்லை. பிரிட்டனின் மேய்ச்சல் நிலங்களினின்று அதன் உற் பத்தியை அதிகமாகப் பெருக்க முடியவில்லை. ஆனால், பருத்தியோ லெவாண்ட், மேற்கிந்தியத் தீவுகள், 1794-ல் கொட்டையைப் பிரிக் கும் எந்திரம் (gin) கண்டு பிடிக்கப்பட்டபின் அமெரிக்க ஐக்கியநாடு ஆகிய இடங்களினின்று நிறையக் கிடைத்தது. தவிர, கம்பளி இழையைவிடப் பருத்தி இழை எந்திர உபயோகத்துக்கு இணக்க மாக இருந்தது. இதனால், பருத்தித் துணி உற்பத்தி மிகவும் முன் னேற்றமடைந்தது. இங்கிலாந்தின் துணிவகைகளில் பருத்தித் துணி முதலிடம் வகித்தது. (ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாதி கழியும் முன்னரே ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளிலிருந்து நிறைய உரோமம் இறக்குமதியாயிற்று. கம்பளி நெசவுத் தொழி லும் உடனே பெரு முன்னேற்றம் அடைந்தது.)

எந்திர சாதனங்கள் முதலில் நீரின் சக்தியால் இயக்கப் பட்டன. பிரிட்டனில் பல இடங்களில் நீர் விசையைப் பயன் படுத்த முடிந்தது. நாட்டுப்புறங்களில் ஓடைகளுக்குப் பக்கத்தில் தான் முதன்முதலில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. தொழி லாளர்கள் வசிப்பதற்காக ஆலை முதலாளிகள் குடிசைகள் கட்டித் தந்தனர்; இவ்வாறு தொழிற்சாலை நகரங்கள் தோன்றின.[1] ஆனால்,

[1] அத்தகைய மாவட்டங்களில் சாதாரணமாக ஆலை முதலாளியின் கடை ஒன்றுதான் இருக்கும். இக்கடையிலேயே சாமான் வாங்குமாறு தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். பொருள்கள் கடனுக்குக் கொடுக்கப்பட்டன. இக்கடன்களும் குடிசை வாடகையும் வார முடிவில் ஊதியத்தினின்று பிடித்துக்கொள்ளப்பட்டன. முதலாளிக்கு அவர்கள் கொடுக்கவேண்டிய தொகை அதிகமாக இருந்ததால் அவர்கள் என்றும்

நீர் விசை திருப்தியாக வேலை செய்ய வில்லை ; சிலசமயம் ஓடையில் நீர் மிக அதிகமாக இருக்கும் ; சிலசமயம் மிகக் குறைவாக இருக்கும். பனிக் காலத்திலோ நீர் உறைந்து விடுவதால் வேலை நின்று விடும். இருந்தபோதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம்வரை நீர் விசை பல இடங்களில் உபயோகிக்கப் பட்டது. பின்னர் நீராவிப் பொறி கண்டுபிடிக்கப்பட்டது. நீரை விட விசையளிப்பதற்கு நீராவியை உபயோகிப்பது மேலான முறை யாக இருந்தது. நீராவிப் பொறியின் விசையைத் திட்டமாகக் கட்டுப்படுத்தலாம் ; தேவையான அளவு விசையை அது உற்பத்தி செய்தது ; அதை எங்கும் பயன்படுத்தலாம். நீராவிப் பொறி தோன்றியதும் கரி நிறையக் கிடைத்த இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்க வழி உண்டாயிற்று. தொழிற்சாலைச் சிற்றூர்கள் கைவிடப் பட்டு லங்காஷயர் (Lancashire), யார்க்ஷயர் (Yorkshire), கிளைடு பள்ளத்தாக்குப் (Clyde Valley) போன்ற இடங்களில் பெரிய தொழிற்சாலை நகரங்கள் தோன்றின.

குடிசைத்தொழில் முறைக்குப் பதிலாகத் தொழிற்சாலைகளில் வேலை நடந்தது, எந்திர சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் தவிர்க்க முடியாத விளைவாகும். எந்திரங்கள் பெரியவை, விலை உயர்ந்தவை, விசையால் இயங்கியவை. குடிசைத் தொழிலாளி யிடமோ அவற்றை வாங்கப் பணமுமில்லை; அவற்றை அமைக்க இடமுமில்லை. இந்தக் கஷ்டங்கள் தீர்ந்தாலும், அவற்றை ஓட்ட விசைக்கு அவன் எங்கே போவான்? மேலும், இடைவிடாமல் முழுதும் பயன்படுத்தப்பட்டாலொழியக் கையால் இயக்கப்பட்ட உபகரணங்களைவிட எந்திரங்களை உபயோகிப்பதால் உற்பத்தி யாகும் பொருள்களின் அடக்கச் செலவு அதிகமாகும். எந்திரங் களில் போட மூலப்பொருள்கள் பெரிய அளவுக்குத் தேவைப்படும். குடிசைத் தொழிலாளி வைத்திருந்த மூலப் பொருள்களின் அளவோ சிறிது. இக்காரணங்களால், எந்திரங்களை வாங்கியமைக்கவும் கூலி யாட்களை வேலைக்கமர்த்தவும் போதுமான அளவு மூலதனம் படைத்த

அவனுக்குக் கடன்பட்டு வேலையினின்று நீங்கமுடியாது கட்டுப்பட்டிருந் தனர். வேறு சில முதலாளிகள் ஊதியத்தை முழுதுமோ பகுதியோ பொருளாகக் கொடுத்தனர். கூலிக்குப் பொருள் கொடுப்பது பண்டக் கூலி (truck) என்றழைக்கப்பட்டது. பாராளுமன்றச் சட்டத்தால் நாள டைவில் இது தடைசெய்யப்பட்டு மீறுபவருக்குப் பலத்த தண்டனை விதிக்கப்பட்டது. 1887-ல் இப் பண்டமாற்றுத் தடைச் சட்டத்தை அமல் செய்யும் பொறுப்பு தொழிற்சாலைக் கண்காணிப்பாளர்களுக்கு (factory inspectors) அளிக்கப்பட்டது.

வர்கள் மட்டுமே இப் புது முறையைக் கையாள முடியும். இம் முறைப்படி ஒருபுறம் தொழிலாளியும் மறுபுறம் முதலீடு செய் பவனும் தனித்தனியாக இருப்பதால்தான் இதை முதலாளித்துவ முறை என்கிறோம்.

எனினும், தொழிலமைப்பில் மாறுதல் விரைவாக ஏற்படவில்லை. துணி உற்பத்தியில் இம்மாறுதல் மெதுவாக நிகழ்ந்ததுபற்றி மற் றொரு அதிகாரத்தில் கூறப்படுகிறது; வேறு பல தொழில்களில் இதைவிட மெதுவாக நிகழ்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியும்வரை, உடைகள் தயாரிப்பது துணி தைப்பது, காலணிகள் தயாரிப்பது, தோல் உற்பத்தி, கடிகாரங்கள் தயாரிப்பது, வத்திப் பெட்டி தயாரிப்பது போன்ற பல தொழில்களில் கணிசமான வேலை தொழிலாளர்களின் வீடுகளிலேயே நடந்தது. இத்தொழில்களில் தொழிற்சாலை முறை தோன்றவேயில்லை என்பது இதன் பொருள் அல்ல. இவ்விருமுறைகளும் பல ஆண்டுகள் ஒன்றாக இருந்து வந்தன. சில தொழில்களில் குடிசை வேலை இன்றும் அடியோடு மறையவில்லை.

முதலாளிகள், தொழிலாளிகள் இருசாராருமே மேற்கொள்ளத் தயங்கியதால் இம்மாற்றம் ஏற்படுவதில் ஓரளவு தாமதம் ஏற்பட்டது. புதுத்தொழில்கள் அமைக்கப்பட்டபோது அவற்றுக்காகத் தொழிற் சாலை முறையைக் கையாளுவது கடினமாக இல்லை. ஆனால், ஏற் கெனவே நிலைத்திருந்த தொழில்களில், நன்கு தெரிந்திருந்த பழைய முறையைக் கைவிட்டு இறுதியில் இதைவிட மேலானதாக இருக்கக் கூடிய, ஆனால், அவ்வாறிருக்குமென நிச்சயமாகக் கூறமுடியாத ஒரு புது வாழ்க்கை முறையை மேற்கொள்ளப் பலர் தயங்கினர். புது முறையிலோ, கட்டடம், எந்திரங்கள் இவற்றுக்கான பெருஞ்செல வோடு அவற்றின் பராமரிப்புக்காக மிக அதிகமான பொதுச்செலவும் செய்யவேண்டியிருந்தது. தொழில் மந்தமாயிருக்கும் காலத்திலும் இச்செலவுகள் செய்யப்படவேண்டும். ஆனால், குடிசைத் தொழில் முறையில் வியாபார மந்தம் தொழிலாளிகளைப் பாதித்ததேயன்றி முதலாளிகளை அல்ல. எனவே, குடிசைத் தொழில் முறையில் வேலையாட்களது சோம்பல், நேர்மையின்மை, திறனின்மை இவற்றால் வருந்திய துணிவணிகர்கூட இச்செலவுகளுக்குப் பயந்து புது முறையைக் கையாளத் தயங்கினர். குடிசை வேலை முறையின் குறை களைத் தாங்கமுடியாமற் போனால்தான் அதை மாற்ற முதலாளிகள் துணிந்தனர்.

அயர்லாந்தின் குடியானவரின் பெண்கள் பிளாக்ஸ் நூற்றது, 1815க்குப் பின்[1] இங்கிலாந்தில் கம்பளி நெசவு, இவை போன்ற சில தொழில்களில் கைவேலைக்கு மிகக் குறைவான ஊதியமே அளிக்கப் பட்டதால் எந்திரங்கள் அமைப்பது இலாபகரமாக இல்லை. ஆதலின், அவை அத் தொழில்களில் பயன்படுத்தப்படப் பல ஆண்டுகள் சென்றன.

தொழிலாளர்களும் இந்த மாறுதலை விரும்பவில்லை. தொழிற் சாலையில் வேலை செய்தால் கூலிக்காக 'அடிமை' ஆகிவிட்டதுபோன்ற (wage-slavery) உணர்ச்சி வருகிறது. வீட்டு வேலையில் அது போன்ற உணர்ச்சியில்லை. தொழிற்சாலையில் செய்யுமளவோ அல்லது அதைவிட அதிக நேரமோ வீட்டில் வேலை செய்யவேண்டி யிருக்கலாம். ஆனால், வீட்டில் விருப்பம்போல வேலை நேரத்தை அமைத்துக் கொள்ளலாம். ஒரு மணி நேரம் வெளியே போய் வர வோ, ஒரு நாள் ஓய்வெடுக்கவோ யாருடைய அனுமதியும் தேவை யில்லை. வீட்டிலே சுதந்திரமிருந்தது ; அதற்கு மாறாகத் தொழிற் சாலையில் அதன் ஒழுங்கு விதிகளின்படிக் கட்டாயமாக நடக்கவேண்டி யிருந்தது. தவிர, வீட்டிலே உழைப்பதன் வருவாயோடு தன் சிறு துண்டு நிலத்தினின்று கிடைத்த விளைச்சலும் தொழிலாளிக்கு வந்தது. தொழிற்சாலையில் கூலியாளாகச் சேர்ந்தால் ஆயிரமாண்டு களுக்கு மேலாகத் தன் மூதாதையரைக் காப்பாற்றிய நிலத்தினின்று அவன் விலகி வாழ வேண்டும்.

நாளடைவில் தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலையில் வேலை செய்வதே மேலானதாக ஆயிற்று. அப்போது வீட்டில் செய்ததை விடத் தொழிற்சாலையில் அதிக நேரம் உழைக்கவேண்டியதில்லை. வேலைச் சூழ்நிலையும் முதலில் வெறுக்கத்தக்கதாக இருப்பினும் பின்னர் வீட்டுச் சூழ்நிலையைவிட மேலாக இருந்தது. வீட்டிலோ உணவு சமைப்பது, துணி தோய்ப்பது, நோயாளிக் குழந்தைகள் படுத்திருப்பது, வேலை செய்வது எல்லாம் ஒரே அறையில் நடந் திருக்கும். தவிர, நாளடைவில் பல தொழிலாளர்கள் ஓரிடத்தில் சேர்வதால் தொழிலாளர் சங்கங்களை அவர்கள் அமைக்க முடிந்தது. அதன்மூலம் வேலைச் சூழ்நிலையை அபிவிருத்தி செய்துகொள்ள முடிந்தது. சங்கங்களால் சமுதாய, அரசியல் துறைகளில் சாதிக்கப்

[1] 1815-ல் அமைதி தோன்றியபின் ராணுவத்தினின்றும் கப்பற்படை யினின்றும் ஆயிரக்கணக்கான வீரர்கள் வீட்டுக்கனுப்பப்பட்டனர். அவர் களில் பலர் கைத்தறி வேலைக்கு வந்து சேர்ந்தனர். நெசவாளிகளின் ஊதி யம் அதனால் மிகக் குறைந்தது.

பட்டது கொஞ்சமல்ல. அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளை ஆய்ந்தறிந்து அவற்றில் அக்கறைகொள்ளத் தொழிலாளர் வர்க்கம் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டது. பின்னர் ஓட்டுரிமையைப் பெற்றது. அரசாங்க அமைப்பிலே பங்கு கொண்டது. இறுதியில் இந்நன்மைகள் உண்மையில் விளைந்தபோதும் இவற்றைக் குடிசைத் தொழிலாளர்கள் எண்ணிப் பார்த்திருப்பர் என்று எதிர்பார்த்திருக்க முடியாது; எனவே, அவர்கள் தம் சுதந்திரத்தைக் கூடுமானவரை காப்பாற்றிக்கொள்ள விரும்பினர்.[1]

எந்திர சாதனங்களுக்கும் (machinery) பொறிகளுக்கும் (engines) இரும்பு நிறைய வேண்டியிருந்தது. அது இரும்புத் தொழிலுக்குப் புத்துயிர் அளித்தது. நிலக்கரிக்கு உண்டான தேவை சுரங்கத் தொழிலில் பெரு முன்னேற்றத்தைத் தோற்றுவித்தது. இவை பற்றி வேறு இடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சிக்கு நிறையக் கரியும் இரும்புக் கனியும் (iron ore) ஒரே மாவட்டங்களில் கிடைத்தது முக்கிய காரணமாகும்.

பிறநாடுகளில் தோன்றுவதற்கு முன்னரே பிரிட்டனில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. இவ்வதிகாரங்களில் குறிப்பிடப்பட்டு வேறு அதிகாரங்களில் விவரிக்கப்பட்ட மாறுதல்கள் யாவும் பதினெட்டாம் நூற்றுண்டிலும் பத்தொன்பதின் முன்பகுதியிலும் ஏற்பட்டன. பேரரசர் நெப்போலியனது (Napoleon) காலத்திலேயே எந்திரத் தொழில்கள் அமைக்க ஃபிரான்ஸில் முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், 'பூர்ஷ்வா மன்னன்' (bourgeois king) லூயி பிலிப்பின் (Louis Philippe, *1830-48*) ஆட்சியில்தான் தொழிற்சாலை முறை ஃபிரான்சு நாடெங்கும் பழக்கத்தில் வந்தது. மேலும், அபிவிருத்திகள் மூன்றும் நெப்போலியன் காலத்தில் (*1852-70*) தோன்றின.

1871-ல் ஜெர்மானியப் பேரரசு தோன்றும்வரை நவீனத்தொழில் வளர்ச்சி ஜெர்மனியில் ஏற்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசிப் பத்து ஆண்டுகளில்தான் ரஷ்யாவில் இம்மாறுதல் தோன்றலாயிற்று. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்நாட்டுப் போருக்குப் (*1861-5*) பின்னர்தான் பேரளவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது.

[1] தொழிற்சாலைகளில் சிறுவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள முதலாளிகள் துணிந்ததற்கு ஓரளவுக்கு ஆட்கள் கிடைக்காதது காரணமாக இருந்திருக்கக்கூடும்.

ஏன் பிரிட்டனில் தொழில் வளர்ச்சி முதலில் ஏற்பட்டது என்பதை இங்கு ஆராய வேண்டும். தொழிற்புரட்சிக்கு முன் சில ஆண்டுகளில் இங்கிலாந்துக்குத் தொழில் துறையில் போட்டியாக ஃபிரான்சுதான் முக்கியமாக இருந்தது ; உண்மையில் பிரிட்டனை விடத் தொழில் துறையில் ஃபிரான்சு மிகவும் முன்னேறியிருந்தது. ஆனால், நவீனத் தொழில்களின் வளர்ச்சியில் பிரிட்டன் முந்தியதற்குப் பல காரணங்கள் கூறலாம். இவ்வளர்ச்சி பல காரணங்களின் கூட்டான விளைவு என்பதில் ஐயமில்லை. பிரிட்டனின் அரசியல் நிலைமையும் நிதி நிலைமையும் ஸ்திரமாக இருந்தது இதற்கொரு முக்கிய காரணம். 1688-க்குப் பின் இங்கிலாந்தின் அரசியலமைப்பின் அடிப்படையாக இருந்த கொள்கைகள் ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை ஒப்புக்கொள்ளப்படவில்லை. அரசியலில் பழைய நிலைமையை மீண்டும் கொண்டுவரச் செய்யப்பட்ட ஜேகொபைட் (Jacobite) முயற்சிகளின் தோல்வி பிரிட்டிஷ் அரசியல் அமைப்பின் திண்மைக்குச் சான்றுகும். வால்போலின் (Walpole) புத்திசாலித்தனமான கொள்கைகள் நாட்டு வளத்தை மிகவும் பெருக்கின ; அரசியல் நிருணய ஏற்பாட்டோடு பொருளாதாரத் திண்மையும் தோன்றியது. பதினெட்டாம் நூற்றுண்டில் பிரிட்டன் பல போர்களில் ஈடுபட்டிருந்தது உண்மை. ஆனால், அப்போர்கள் ஐரோப்பாவிலோ, கடலிலோ, ஆசியாவிலோ, அமெரிக்காவிலோதான் நடந்தன. இங்கிலாந்து இவ்வாறு படையெடுப்பினின்று தப்பியிருந்தது அதன் தொழில் வளர்ச்சிக்கு வழி செய்தது.

பதினாரும் நூற்றுண்டிலிருந்தே ஆங்கிலேயர்கள் சுதந்திர மக்களாக விளங்கினர்.[1] பிறநாடுகளில் மக்களைப் பிணைத்திருந்த தளைகள் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. ஃபிரஞ்சுப் புரட்சிக்கு (French Revolution) முன்னரே ஃபிரான்சில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டபோதும் ஐரோப்பாவின் பிற நாடுகளில் அது பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் தொடர்ந்து இருந்தது. சட்டப்படித் தொழிலாளர்களில் பெரும்பகுதி நிலத்தோடு இணைக்கப்பட்டிருந்தபோது அவர்கள் நகரங்களுக்குச் சென்று தொழிற்சாலைகள், பொறி உற்பத்திச் சாலைகள், சுரங்கங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றில் பணியாற்றுவது இயலாது. எல்லா நாடுகளிலும் அடிமைத்தளைகளை அகற்றிய பின்னரே உண்மையான தொழில் வளர்ச்சி ஏற்பட்டது.

[1] இல்லாவிடினும் 1617-ல் காலிக்கு எதிர் பிக்கு (Pigg v. Caley) தீர்ப்புக்குப் பின்னராவது.

தொழில்கள் வளர மூலதனம் அவசியம். பிரிட்டனின் சூழ்நிலை மூலதனச் சேர்க்கைக்கு ஆதரவாக இருந்தது. பெரிய வாணிபக் கம்பெனிகள் வெற்றிகரமாக வியாபாரம் செய்ததால் அதன் உறுப்பினர்களுக்குச் செல்வம் சேர்ந்தது. இவ்வாறு பன்னாட்டு வாணிபத்தின் லாபங்கள் தொழிலில் முதலீடு செய்யப் பயன்பட்டன. சமயநெறியாகக் கடைப்பிடிக்கப்பட்ட சிக்கனம், சுகம் விரும்பாமை போன்ற வழக்கங்களின் விளைவாகவும் பணம் சேர்ந்தது. பதினேழாம் நூற்றாண்டில் ப்யூரிடானிசக் கோட்பாடுகள் (Puritanism), பதினெட்டாம் நூற்றாண்டில் மெதாடிசக் கொள்கைகள் (Methodism) ஆகியவற்றின் செல்வாக்கு இவ்விஷயத்தில் மிக முக்கியமாக இருந்தது. உலக சுகங்களில் ஈடுபடுவது விரும்பப்படவில்லை. ஆனால், வியாபாரத்தில் வெற்றி தெய்வபக்தி உள்ளவர்க்குச் சாதாரணமாகக் கிட்டும் என்று கருதப்பட்டது. 'சுவர்க்கம் பூமியில் தோற்றவர்களைக் கொண்டு குவிக்கும் இடமல்ல' என்ற அபிப்பிராயம் நிலவியது. வியாபாரத்திலே வெற்றி தேடிய மனிதர்கள் அதே சமயம் அனாவசியச் செலவுகளைச் செய்யாதிருந்ததால் மூலதனம் தானாகச் சேர்ந்தது. அவ்வாறு சேர்ந்த பணம் தொழிற்சாலைகளுக்கு மூலதனமாயிற்று.

பிரிட்டனுக்கு இயற்கையன்னையின் பூரண கடாட்சம் இருந்தது. அதன் புவியியல் அமைப்பு உலக வாணிபத்துக்கு மிகவும் ஏற்றதாக இருந்தது; அதன் கப்பல்கள் செல்ல முடியாத நாடு எங்குமில்லை. அதன் கடற்கரையிலே அருமையான கப்பல் தங்குமிடங்கள் இருந்தன. உள்நாட்டுப் போக்குவரவுக்குப் பல ஆறுகளில் படகோட்ட முடிந்தது. இங்கிலாந்தின் உற்சாகமூட்டும் வெப்பநிலை மக்களைச் சுறுசுறுப்பாக இருக்கச் செய்தது. உற்பத்திமுறைக் காரணங்களுக்காக, அதன் சில பாகங்களில் வெப்பநிலை துணி நெய்யும் தொழிலுக்கு விசேஷமாகப் பொருந்தியது. இயற்கை வளம் அளவற்றிருந்தது. கரியும் இரும்பும் அருகருகில் நிறையக் கிடைத்தன. அவை கடற்கரைக்கும் மிக அருகில் இருந்தன. இது தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமாகும். எந்திர சாதனங்களையும் நீராவிப் பொறிகளையும் செய்ய இரும்பும், இரும்பை உருக்கவும் பொறிகளை இயக்கவும் கரியும் கிடைத்திராவிட்டால் அக்காலத்தில் இங்கிலாந்தில் தொழில் வளர்ந்தே இருக்கமுடியாது என்பது திண்ணம்.

தொழிற்புரட்சி என்றழைக்கப்படும் இயக்கத்தில் சேர்ந்த, தொழில்வினை முறைகளிலும் அமைப்பிலும் ஏற்பட்ட பெரு மாறுதல்களினால் பல முக்கிய விளைவுகள் தோன்றின. உண்மையில், வினைத் தொழில் முறையின் சில இயல்புகளைத் தொழிற் புரட்சியின்

'விளைவுகள்' என்று கூறமுடியாது. ஒரு காரணிக்கும் மற்றொன்றுக்கும் உள்ள தொடர்பை ஆராய்வது கடினம். எது காரணம், எது விளைவு என்று துல்லியமாகக் கூற முடியாது. ஆனால், இவ்வியக்கத்தோடு இணைந்த சில விஷயங்களைப்பற்றி இங்குக் கூறலாம்.

முதலீட்டுக்குப் (capital) பிரதானமான இடம் அமைந்தது; நவீனத் தொழிலமைப்பின் முக்கியமானதொரு இயல்பாகும். இடைக்காலத் தொழிலமைப்பு இன்று கூறும் பொருளில் 'முதலாளித்துவ முறையில்' அமையவில்லை. கில்டுக்காரனுக்குத் தேவையாக இருந்த மூலதனம் அவன் கருவிகள் மட்டுமே. பதினாறாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாவதுக்குமிடையே துணி உற்பத்தி அதைவிட அதிகமாக முதலாளித்துவ முறையில் நடந்து வந்தபோதும் அப்போது தேவைப்பட்ட மூலதனம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெரும் ஆலைகளுக்குத் தேவைப்பட்ட முதலீட்டுடன் ஒப்பிட்டால் மிகக் குறைவே.

தொழிற் புரட்சியின்போது இங்கிலாந்தின் மக்கள் தொகை குறிப்பிடுமளவுக்கு அதிகரித்தது. 1801-ல் முதல் மக்கள் கணக்கெடுப்பு (census) நடந்தது. எனவே, வெவ்வேறு காலங்களில் வசித்து வந்த மக்கள் தொகையின் எண்ணிக்கைபற்றிய சரியான விவரங்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டிற்கும் இருபதாவதிற்கும் தான் கிடைக்கின்றன. 1700-ல் நாட்டில் ஐந்தரை மிலியன் மக்கள் வசித்ததாக மதிப்பிடப்படுகிறது. 1750-ல் அது ஆறு மிலியனாக உயர்ந்தது. அதன் பின்னர் மக்கள் தொகை பெருக்கத்தின் வேகம் மிக அதிகமாக இருந்தது. அடுத்த ஐம்பது ஆண்டுகளில் அது ஐம்பது சதவிகிதம் அதிகரித்தது. ஏனெனில், 1801ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு, மக்கள் தொகையை ஒன்பது மிலியன் எனக் கூறியது. 1851-ல் அது இருமடங்காகியது. 1901-ல் மறுபடி இருமடங்கு ஆகியது. தொழிற் புரட்சிக்கு முன் பெரும்பாலான மக்கள் நாட்டுப்புறத்தில் வசித்தனர். தெற்கிலும் கிழக்கிலும் இருந்த கவுன்டிகளில் (counties) தான் ஜனநெருக்கம் மிக அதிகமாக இருந்தது. டைன் (Tyne) நதியைச் சார்ந்த சில மாவட்டங்கள், வெஸ்ட்ரைடிங் (West Riding), லங்காஷயர் (Lancashire) ஆகிய இடங்களில் தவிர, வட இங்கிலாந்தில் மக்கள் தொகை நெருக்கம் மிகக் குறைவாகவே இருந்தது. பெரும்பாலும் அது கரம்பு நிலம், தொழில் முறை மாற்றங்களால் வடக்கிலிருந்த கரி, இரும்புப் பிரதேசங்கள், தென் வேல்ஸ், மிட்லண்டு கவுன்டிகளில் சில பகுதிகள் ஆகியவற்றில்

ஜனநெருக்கம் அதிகமாயிற்று. இன்று மக்கள் தொகையில் நூற்றுக்கு எண்பது பேர் 10,000 பேருக்கு மேல் வசிக்கும் நகரங்களில் வாழ்கின்றனர்.

புதிய தொழில் முறைகளின் விளைவாக எல்லாவிதமான ஆலைப் பொருள்களின் உற்பத்தியும் மிகவும் அதிகரித்தன. எந்திர சாதனங்களைப் பயன்படுத்தியதன் இயல்பான விளைவு இது. ஏனெனில், எந்திரங்கள் சளைக்காமல் மனிதனைவிடப் பன்மடங்கு வேகமாக வேலை செய்கின்றன. ஒரு யந்திரம் கண்டு பிடிக்கப்படுமுன் உற்பத்தி செய்ததைப் போலப் பத்து மடங்கு அல்லது நூறு மடங்கு அதைப் பயன்படுத்தி ஒரு மனிதன் உற்பத்தி செய்ய முடியும். வேலையின்மையை விளைவிக்கின்றன என்று எந்திரங்களை அறியாமையால் பல தொழிலாளர்கள் வெறுத்தனர். சில சமயம் இதனால் கலகங்கள் விளைந்தன ; தொழிற்சாலைகள் முற்றுகையிடப்பட்டு எந்திரங்கள் உடைத்தெறியப்பட்டன. ஆனால், யந்திர உற்பத்தியால் இறுதியில் பொருள்களின் விலை குறைந்தது ; விற்பனை அதிகமாயிற்று ; இறுதியில் முன்னைவிட அதிகமான மக்களுக்கு வேலை கிடைத்தது. தவிர, எந்திரங்களை அமைக்க எஞ்சினியர்கள் (பொறியாளர்கள்) என்ற புதுவகைத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது.

இவ்வாறு பெருமளவில் உற்பத்தியான பொருள்கள் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. பிற நாடுகளை விட முதலில் தொழிலபிவிருத்தி பெற்றதனால் வெகு தூரத்திலுள்ள பல நாடுகளில் இங்கிலாந்தின் வாணிபம் நன்கு இடம் பிடித்துக் கொண்டது. புது இடங்களில் எல்லாம் விற்பனை பெருகியது. வெளிநாடுகளில் பிரிட்டனின் பொருள்களுக்கு நல்ல மதிப்புக் கிடைத்தது. அந்த மதிப்பை அவை இன்னமும் இழக்கவில்லை.

மெர்க்கண்டலிசக் கொள்கையின் அடிப்படைத் தத்துவங்களுக்கு ஆதரவு மறைந்து அதன்மீது பலத்த கண்டனம் எழுந்த சமயத்தில் தொழிற்புரட்சி தோன்றியது. தலையிடாமைக் கொள்கைக்கு (Laissez-faire philosophy) அப்போது மதிப்பு உயர்ந்து வந்தது. பொருளாதார நடவடிக்கைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தலாகாது என்று எண்ணினர். வெளிநாட்டு வாணிப முற்றுரிமையைப் பெரும் பட்டயக் கம்பெனிகள் இழந்தன. அரசாங்கம் தொழில்களைக் கட்டுப்படுத்துவதை நிறுத்தியது. இக்கொள்கை மாற்றத்தினால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். தொழிற் கலைஞர்கள் சட்டம் அவர்களுக்குப் பாதுகாப்பளித்தது நின்று விட்டது. தொழி

லாளர் சங்கங்களைத் தோற்றுவிக்க முதன்முதலில் செய்யப்பட்ட முயற்சிகளைச் சட்டம் அடக்கியதால் அவர்கள் தம்மைத்தாமே பாது காத்துக்கொள்ள இயலாத நிலையில் முதலில் இருந்தனர்.

போக்குவரத்துச் சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படாதிருந்தால் பெரிய அளவில் பொருளாதார வளர்ச்சி தோன்றியிருக்க முடியாது. இதுபற்றிய செய்தி வேறு அதிகாரங்களில் கூறப்படுகிறது. ஆனால், இங்கு ஒன்று கூற வேண்டும். நாடு முழுவதும் சிறிய அளவில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டபோது அவை அருகிலேயே பயன்படுத்தப்பட்டன. அல்லது, அவை ஏற்றுமதி செய்யப்பட்டால் அவற்றை எடுத்துப் போக ஆறுகளே போதுமான சாதனமாக இருந்தன. உற்பத்தியின் அளவு பெருகியதும் அதைவிடத் திறமை யான போக்குவரத்துச் சாதனங்கள் தேவைப்பட்டன. ஒரே ஊரில் பல தொழிற்சாலைகள் பெரிய அளவில் உற்பத்தி செய்த பண்டங்கள் அனைத்தையும் அக்கம் பக்கத்திலேயே விற்கமுடியவில்லை ; அவற்றை விற்க வேறு பல இடங்களைத் தேட வேண்டியிருந்தது. உற்பத்தி பெருகப் பெருக அங்காடியும் (market) விஸ்தாரமாக வேண்டிய தாயிற்று. உச்சமான உற்பத்தி நிலையில் உலக முழுவதிலும் விற்க வேண்டியிருக்கும். எடையும், பரிமாணமும் அதிகமாக உள்ள பொருள்களை நெடுந் தூரத்துக்குக் குறைந்த செலவில் எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் சாதனங்கள் இருந்தால்தான் இது சாத்திய மாகும் ; எனவே, தொழிற் புரட்சி ஏற்பட்டபோது, அதே சமயத் தில் கால்வாய்களும், இருப்புப்பாதைகளும், நீராவிக் கப்பல்களும் கட்டப்பட்டன.

உண்மையில், போக்கு வரத்து வசதிகளின் வளர்ச்சி அளவைப் பொறுத்துத் தொழிற்புரட்சியின் போக்கை இரு கட்டங்களாகப் பிரிக்க முடியும். புரட்சியின் முதல் கட்டத்தில் சாலைகள், ஆறுகள், கால்வாய்கள் ஆகியவற்றை மட்டுமே தொழிற்சாலைகள் நம்பி யிருந்தன. ஒருவனால் அல்லது ஒருசிலரின் கூட்டு நிறுவனங்களால் (partnerships) நடுத்தரமான அளவில் தொழிற்சாலைகள் அமைக்கப் பட்டன. இக்காலத்தில் இருந்த எந்திரங்கள் இன்றையவற்றோடு ஒப்பிட்டால் பண்படாதவை; நீராவியைவிட அதிகமாக நீர் விசை யால் இயக்கப்பட்டவை. இருப்புப் பாதைகளும் நீராவிக் கப்பல் களும் தோன்றியபின் பெரிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. அவற்றுக்குத் தேவையான மூலதனம் அதிகமாதலின் கம்பெனிகளாக அவை அமைக்கப்பட்டன. கம்பெனிகளின் தோற்றத்துக்குப் பாங் கித் தொழிலின் வளர்ச்சியும் கம்பெனிச் சட்டத்தின் தோற்றமும்

வழி செய்தன. சக்திவாய்ந்த சிக்கலான எந்திரங்கள், நீராவியால் இயக்கப்பட்டு, உலக முழுவதுக்கும் ஏற்றுமதி செய்யப் பெரிய அளவில் பொருள்களை உற்பத்தி செய்தன.

தொழிற் புரட்சியின் அரசியல் விளைவுகள் முக்கியமானவை. பதினெட்டாம் நூற்றுண்டின் இடைக் காலத்திற்கு முன் ஒரு நியாய மான அளவுக்கு நாட்டு மக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் விளங்கியது. பொது மக்களின் பிரதிநிதியாக இராவிட்டாலும் நிலம் படைத்தவர்களின் பிரதிநிதியாக இருந்தது; அக்காலத்தில் விவசாயமோ நாட்டு வளத்தின் முக்கிய காரணமாக இருந்தது. ஆனுல், தொழிற்சாலைகளுடன் தோன்றிய புது ஆலை நகரங்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இல்லை. தேய்ந்து மறைந்து வரும் கிராமங்களும் சிற்றூர்களும் காமன்ஸ் சபைக்கு உறுப்பினர்களை அனுப்ப, மக்கள் பெருமளவுக்கு வாழும் முக்கியமான இடங்களுக்கு அவ்வுரிமையில்லாத விநோதமான நிலையின் ஒழுங்கீனம் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகத் தெரிந்தது. பணக்கார வியாபாரிகளும் தொழி லதிபர்களும்கூட, அந்த அந்தஸ்தில் காமன்ஸ் சபையில் உறுப்பின ராகும் தகுதிபெறவில்லை. அரசியல் அதிகாரத்தில் தொழிலதிபர்கள் பங்குபெறக் கூடாது என நில முதலாளிகள் நெடுநாள் பாடுபட் டனர். ஆனுல், பாராளுமன்ற அமைப்பில் சீர்திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கை நாளடைவில் மிகவும் அதிகமாகியதால் அதை மறுக்க முடியாமல் போய்விட்டது.

15. துணி உற்பத்தித் தொழிலில் ஏற்பட்ட புரட்சி

(The Revolution in the Textile Industries)

இங்கிலாந்தில் தொழிற்புரட்சிக்கு முன் விவசாயத்துக்கு அடுத்த படியாகக் கம்பளித் துணி உற்பத்திதான் முக்கியத் தொழிலாக விளங்கியது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, பதினாறும் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாவதுவரை நிறைய மூலதனம் பெற்றிருந்த துணி வணிகர்களின் ஆதீனத்தில் குடிசைத் தொழிலாகத் துணி உற்பத்தி நடந்து வந்தது. கிராமக் குடிசைகளில் வசித்த பெண்கள் துணி வணிகர்களிடமிருந்து மூலப் பொருள்களைப் பெற்று நூலாக நூற்றனர். இந்நூல் சேகரிக்கப்பட்டு நெசவாளிகளிடம் அளிக்கப் பட்டு நெய்யப்பட்டது. பல இடங்களில் இவ்வினைகள் பலவும் ஒரே குடிசையில் நடந்தது. குழந்தைகள் சிக்கெடுக்க, பெண்கள் நூற்க, குடும்பத்தில் தந்தை துணியை நெய்தான். சில சமயம் மிக்க அளவில் கூலியாட்கள் வேலை செய்த நிறுவனங்களில் துணிகளைச் சாயமிடவும் அழகுபடுத்தவும் துணிவணிகர்கள் ஏற்பாடு செய்தனர்.

நாட்டின் சில பாகங்களில் முக்கியமாக யார்க்ஷயரில் (Yorkshire) இத்தொழிலின் அமைப்பு மாறுபட்டிருந்தது. நெசவாளிகளே மூலப் பொருள்களை வாங்கினர். அவர்களிடம் பண வசதி இருந்தது. ஓரிரு கூலியாட்களையும் வேலைக்கு வைத்துக்கொண்டனர். சாயமிடல், அழகு செய்யல் உட்பட அடுத்தடுத்த வினைகளைத் தாமே செய்து, முடித்த துணித் துண்டுகளை அத்தகைய துணிகள் விற்பனைக்கு வைக்கப்பட்ட உள்ளூர் துணிக்கூடத்தில் (cloth hall) அவற்றை விற்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் உரோமப் பற்றுக்குறை இருந்தது. அளிப்புக் குறைவதால் உள்நாட்டுத் தொழில் வருந்தக்கூடாதென 1660-லேயே உரோம ஏற்றுமதி இங்கிலாந்தில் தடை செய்யப்பட்டது. சன்னத் துணி நெய்ய ஸ்பெயினிலிருந்து மெரீனோ (merino) உரோமம் இறக்குமதி செய்யப்பட்டது. அயர்லாந்திலிருந்தும் உரோமம் இறக்குமதி ஆயிற்று. அயர்லாந்தினர் உரோமத்தை வேறெந்த நாட்டுக்கும் அனுப்பக்கூடாது என்று தடை செய்யப்பட்டனர். இருப்பினும், ஃபிரான்சில் உரோமப் பற்றுக்குறை மிகவும் அதிகமாக இருந்ததால் இங்கிலாந்தினின்றும் அயர்லாந்திலிருந்தும் அதைக் கள்ளக் கடத்தல் செய்வது லாபகரமாக இருந்தது.[1] இக்குற்றத்துக்குப் பலத்த தண்டனை விதிக்கக்பட்டது. ஏற்றுமதித் தடை 1825வரை அகற்றப்படவில்லை.

1685-ல் நான்டே அறிக்கை (Edict of Nantes) ரத்தான பின் பல ஹ்யூஜினுட் (Huguenot) நெசவாளர்கள் ஃபிரான்சிலிருந்து குடி வந்தனர். அவர்கள் ஈடுபட்டிருந்த பட்டுத் தொழிலில் பதினெட்டாம் நூற்றுண்டின் முதல் பாதியில் குறிப்பிடத்தக்கவாறு முக்கியத்துவம் அடைந்தது. இத்தாலியிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பட்டு இறக்குமதியாயிற்று. கிழக்கு இந்தியக் கம்பெனி இந்தியாவில் அதன் உற்பத்திக்கு ஊக்கமளித்தது. முக்கியமாக ஸ்காட்லாந்தில் லினன் தொழில் ஓரளவுக்குப் பிரசித்தமாயிற்று. 1707-க்குப் பின் அதற்கு அயர்லாந்துக்காரரின் போட்டியினின்று பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பருத்தித் துணி உற்பத்தி முக்கியமான ஒரு தொழில் அல்ல. பருத்தி, லெவாண்டிலிருந்தும் (Levant), மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் வந்தது. லெவாண்டில் கிடைத்த சரக்குக்கு ஃபிரெஞ்சு வணிகர், டச்சுக்காரர், ஆங்கில வியாபாரிகள் அனைவரும் போட்டியிட்டனர். மேற்கிந்தியத் தீவுகளில் 1763 வரை ஆங்கில வணிகரது நிலை திடமாக இல்லை. பருத்தி சீராகக் கிடைக்கவில்லை; எனவே, அத்தொழிலின் வளர்ச்சி தடைப்பட்டது. கம்பளி, பட்டுத் துணிகளைத் தயாரித்தவர்களின் விரோதமும், தொடங்கியதுமுதல் இந்தியாவிலிருந்து பருத்தித்துணி இறக்குமதி செய்து வந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் எதிர்ப்பும் இத்தொழிலின் வளர்ச்சியைத் தாமதப்படுத்திய வேறு காரணங்களாகும்.

[1] ஐரிஷ் கடலில் கப்பலைவிட்டுக் கப்பல் மாற்றி அயர்லாந்திலிருந்து ஃபிரான்சுக்கு உரோமம் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டது.

கிழக்கிந்தியப் பருத்தி நெசவுகளுக்கு இங்கிலாந்தில் நல்ல விற்பனை இருந்தது. இங்கிலாந்தின் கம்பளி, பட்டுத் துணித் தொழில்களைக் காக்க 1700-ல் கீழ்நாடுகளினின்று அச்சிட்ட பருத்தி நெசவுகளை உடைக்காகவோ வீட்டு அலங்காரத்துக்காகவோ (furnishing) இறக்குமதி செய்வது தடுக்கப்பட்டது.[1] அச்சிடப்படாத வெள்ளைத் துணி இறக்குமதி செய்யப்படலாம். இதனால், இங்கிலாந்தில் காலிகோ-அச்சுத் தொழில் (calico-printing) தோன்றியது. இந்தியப் பருத்தித் துணியின் இறக்குமதி தொடர்ந்து நடந்தது. எனவே, 1721-ல் இங்கிலாந்தில் அச்சிடப்பட்டாலும் வெளியில் அச்சிடப்பட்டாலும் 1722 டிசம்பரிலிருந்து ஆடையாகவோ (நாற்காலி, கட்டில், சன்னல் போன்று) வீட்டலங்காரத்துக்காகவோ அச்சிட்ட பருத்தித் துணிகள் உபயோகிக்கப்படக்கூடாது என்று சட்டமியற்றப் பட்டது. பருத்தித் துணி உபயோகிக்க விரும்பிய ஆங்கிலப் பெண் மணிகள் வெள்ளைத்துணி (calico காலிகோ) அல்லது மஸ்லின் (muslin) இவ்விரண்டைத்தான் பயன்படுத்த முடிந்தது. மறுபடி ஏற்றுமதி செய்வதற்காக இங்கிலாந்துக்கு அச்சிட்ட பருத்தித் துணி களை இறக்குமதி செய்வது 1700-ல் தடைசெய்யப்படவில்லை. எனவே, ஆங்கில வணிகர்கள் அவற்றை வரவழைத்து மேற்கு ஆப்பிரிக்கா மேற்கிந்தியத் தீவுகள், அமெரிக்காவின் தென்புறக் குடியேற்றங்கள் ஆகிய இடங்களில் விற்றனர்.

1720-க்குப் பின் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக லினனும் பருத்தியும் கலந்த துணி ஒன்று இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப் பட்டுவந்தது. இங்கிலாந்தில் பாவுக்குத் (warp) திடமான பருத்தி நூல் உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே, பருத்தியை ஊடை நூலாக் (weft) உபயோகித்துப் பாவுக்கு லினனைப் பயன் படுத்தினர். 1721-ல் நிறைவேற்றப்பட்ட சட்டப்படி இது சட்ட விரோதமானதா என்பதுபற்றிச் சந்தேகம் இருந்தது. 1736-ல் வந்த மாஞ்செஸ்டர் சட்டம் இம்முறை சட்டத்துக்கு உட்பட்டதே என்று கூறிவிட்டது. துணித்தொழிலின் இப்பகுதி நன்கு வளர ஏற்ற சூழ்நிலை இங்கு இருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பருத்தித் துணிகள், மஸ்லின்கள் ஆகியவற்றின் போட்டி மிகக் குறைவே. அவற்றின்மீதோ பலத்த இறக்குமதி வரி விதிக்கப்பட்

[1] கிழக்கிந்தியப் பருத்தித் துணிகள் வராமல் தடுத்த இப் பாதுகாப்புக் கொள்கை ஆங்கிலக் கம்பளி, பட்டுத்துணித் தொழில்களுக்காகக் கடைப் பிடிக்கப்பட்டது. ஆனால், இறுதியில் இங்கிலாந்தில் இதன் விளைவாகப் பருத்தித் துணித் தொழில் வளர்ச்சிபெற்றது. தடையின்றி இந்தியப் பருத்தித் துணி இறக்குமதி ஆகியிருந்தால் இங்கிலாந்தில் இத் தொழில் அவ்வளவு துரிதமாக வளர்ந்திருக்காது.

டிருந்தது. எனவே, இங்கிலாந்தில் இவ்வகைத் துணியின் விற்பனையில் இத்தொழிலுக்கு முற்றுரிமை கிடைத்தது. இதன் ஏற்றுமதியை அதிகரிக்கவும் அரசாங்கம் பண உதவி அளித்தது.

பருத்தித் தொழிலுக்கு முன்னைவிட அதிகமான முக்கியத்துவம் ஏற்படப் பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் சில புதுக் காரணங்கள் தோன்றின. 1707-ல் மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் இறந்த பின் இந்தியாவில் நெடுநாளைக்கு உள்நாட்டு அரசியலில் குழப்பம் இருந்துவந்தது. அப்போது அந்நாட்டில் தம் அதிகாரத்தைப் பரப்புவதற்கு ஃபிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் போட்டி எழுந்தது. இந்தச் சூழ்நிலையில் ஒழுங்காகத் தொடர்ந்து வாணிபம் நடக்க வழியில்லை. இந்தியத் துணிகளை வாங்கி மறுபடி ஏற்றுமதி செய்த ஆங்கில வணிகர்கள், அவற்றின் இறக்குமதி சீராகத் தொடர்ந்து நடக்காமற்போகவே, இங்கிலாந்தின் பருத்தித் துணித் தொழிலை நம்பத்தொடங்கினர். அதேசமயம் 1769-ல் ஆர்க்ரைட் (Arkwright) கண்டுபிடித்த நீர்ச் சட்டம் (water frame) பாவுக்குத் தேவையான அளவு திடமான நூலை உற்பத்தி செய்தது. இதனால், இங்கிலாந்தில் பருத்தித் துணி செய்ய வினைமுறைப் பிரச்சினை (technical difficulty) ஏதும் இல்லை. இங்கிலாந்தில் அச்சிட்ட பருத்தி நெசவுகளைப் பயன்படுத்துவதுபற்றி 1721-ல் விதிக்கப்பட்ட தடை 1774-ல் நீக்கப்பட்டது. எனவே, பருத்தி நெசவுத் தொழிலின் வளர்ச்சியைத் தடுத்திருந்த சட்டப் பிரச்சினை, வினைமுறைப் பிரச்சினை இரண்டும், ஏறக்குறைய ஒரே சமயத்தில் தீர்ந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் தெற்கு நாடுகளில் (Southern States) பருத்தி பயிரிடப்படலாயிற்று. அந்நூற்றாண்டு முடிவதற்குள் கச்சாப் பருத்தி எவ்வளவு வேண்டுமாயினும் கிடைக்கலாயிற்று. இது பருத்தித் தொழிலை இங்கிலாந்தில் ஊக்குவித்த நான்காவது காரணமாகும்.

பருத்தித் துணி உற்பத்தி செய்தவர்கள் சமாளிக்கவேண்டியிருந்த முக்கியப் பிரச்சினை நூற்பதைப்பற்றியது. நூற்பவர்கள் சிலரே. எனவே, நெசவாளிகளுக்குத் தேவையான அளவு நூல் இல்லை; நெசவாளிகள் சோம்பியிருக்கவேண்டியிருந்தது. இப்பிரச்சினைக்கு முடிவுகாணப் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் பல முயற்சிகள் செய்யப்பட்டன. வியாட் (Wyatt), பால் (Paul), ஹைஸ் (Highs) போன்ற சிலர் இதற்காகப் பல எந்திரங்களை அமைத்தனர். இம்முயற்சிகள் நல்ல பலன் அளிக்கவில்லை. ஆனால், 1767-ல் பிளாக்பர்னைச் (Blackburn) சேர்ந்த ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ்

(James Hargreaves) என்ற நெசவாளி ஒரு நூற்கும் ஜென்னியைக் (spinning jenny) கண்டுபிடித்தார்.[1] அது ஒரே சமயத்தில் பதினெரு கதிர்களை (spindles) இயக்கியது. அது மெல்லிய நூலை நூற்றது. அந்நூல் ஊடைக்கு ஏற்றதாக இருந்ததே தவிர, பாவுக்கு ஏற்ற வாறு பலமானதாக இல்லை. அடுத்த சில ஆண்டுகளில் பல இடங் களில் ஜென்னி பயன்படுத்தப்பட்டது; அது கையால் இயக்கப் பட்டது. அதைக் குடிசைகளிலேயே வைத்து உபயோகிக்கலாம். எனவே, நூல் உற்பத்தியைப் பெருக்கியபோதும், அதன் உபயோகம் குடிசைத் தொழில் முறையை மாற்றவில்லை.

1769-ல் ரிச்சர்ட் ஆர்க்ரைட் (Richard Arkwright) முற்றிலும் புதிய வினை முறை கொண்ட நூற்பு எந்திரம் ஒன்றைக் கண்டுபிடித் தார். இதில் நூல் இரண்டு ஜதை உருளைகளுக்கிடையே செல்லு கிறது. இரண்டாவது ஜதை முதலதைவிடச் சிறிது வேகமாகச் சுற்றுகிறது. வியாட் கண்டுபிடித்ததைச் சிறிது மாற்றியமைக்கப் பட்டதே ஆர்க்ரைட்டின் புத்தமைப்பு என்று கூறப்பட்டது. அதற் காக வழக்குத் தொடரப்பட்டு ஆர்க்ரைட்டின் பேடன்டு (patent) ரத்தாயிற்று. பிற புத்தமைப்பாளர்களைப் போலன்றி ஆர்க்ரைட் டுக்கு வியாபார நுணுக்கம் தெரிந்திருந்தது. தன் கருவியைப் பயன் படுத்தப் பல முதலாளிகளின் கூட்டுறவை அவர் பெற்ருர்.

இந்த எந்திரத்தைக் கையால் இயக்க முடியாது. நீர் விசையால் தான் இயக்க முடியும். எனவே, இதற்கு நீர்ச் சட்டம் என்று பெயர் வந்தது. இதைக் குடிசைகளில் பயன்படுத்த முடியாது. ஏனெனில் அது பெரிது. அதன் விலையும் குடிசைத் தொழிலாளியால் வாங்க முடியாதவாறு அதிகமாக இருந்தது. அதற்காகத் தனியாகக் கட்டடங்கள் தேவைப்பட்டன. எனவே, அதன் உபயோகம் பருத் தித் துணித் தொழிலில் தொழிற்சாலை முறையின் தோற்றத்தின் முதற்படி எனலாம். பலமுள்ள தடித்த நூலை அது உற்பத்தி செய்தது. அந் நூலைப் பாவுக்குப் பயன்படுத்த முடிந்தது. 1771-ல் ஜெடிடையா ஸ்ட்ரட்டுடன் (Jeded ah Strutt) இணைந்து ஆர்க்ரைட் டார்பிஷயரில் (Derbyshire) கிரோம்ஃபர்டில் (Cromford) ஒரு தொழிற்சாலை அமைத்து ஸ்ட்ரட் தயாரித்த காலுறைகளுக்கு (Stock-ings) நூல் உற்பத்தி செய்தார். 1776-ல் சாமுவல் கிராம்டன் (Samuel Crompton) தன் 'மியூல்' (mule) எந்திரத்தைக் கண்டு

[1] சில ஆராய்ச்சியாளர்கள் ஹார்கிரீவ்ஸின் புத்தமைப்பு 1764-ல் செய் யப்பட்டது என்கின்றனர். கிராம்டன் 1779-ல் தான் தன் புத்தமைப்பைச் (invention) செய்தார் என்றும் பலர் கூறுகின்றனர்.

பிடித்துவிட்டிருந்தார். இந்த எந்திரம், ஜென்னி, நீர்ச்சட்டம் இரண்டின் முறைகளையும் சேர்த்தமைக்கப்பட்டிருந்தது. மெல்லிய ஆனால் திடமான நூலை அது நூற்றது.[1] எனவே, அதற்குப் பின் (அதுவரை இந்தியாவினின்று இறக்குமதியான) மஸ்லின்களை இங்கிலாந்திலேயே செய்ய முடிந்தது.[2] வெகு நாட்கள் கழிவதற்கு முன்னரே நூற்றுக்கணக்கான கதிர்களைச் சுற்றவைக்கும் மியூல்கள் அமைக்கப்படலாயின. குடிசைத் தொழில் மெதுவாகவே மறைந்ததால் மேலும் பல ஆண்டுகளுக்கு ஜென்னி பயன்படுத்தப்பட்டது. 'தொழிற்சாலை' நூல் பாவுக்கும், 'கை நூல்' ஊடைக்குமாகப் பல இடங்களில் அப்போது உபயோகப்பட்டன.

முதலில் செய்யப்பட்ட மியூல் எந்திரங்கள் கையால் இயக்கப்பட்டதால் ஜென்னிகளைப் போலத் தொழிலாளர்களின் வீடுகளில் அவற்றை அமைக்க முடிந்தது. ஆனால், வேலை இடைவிடாது சீராக நடக்க ஜென்னிகளையும் மியூல்களையும் தொழிற்கூடங்களில் (workshop) சேர்த்து அமைப்பது நல்லது என்பதை முதலாளிகள் அறிந்துகொண்டனர்.[3] அந்நூற்றுண்டு முடியுமுன்னரே அவை பொதுவாக நீர் விசையால் இயக்கப்படலாயின. சில இடங்களில் அவற்றை இயக்க நீராவி எந்திரங்கள் அமைக்கப்பட்டன. விசைக்காக நீருக்குப் பதில் நீராவியைப் பயன்படுத்தியது மெதுவாக ஏற்பட்ட ஒரு மாற்றமே ஆகும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்திவரை நீராவி விசையை எல்லாப் பருத்தி ஆலைகளிலும் பயன்படுத்தவில்லை. முதலில் தோன்றிய நூற்பு எந்திரங்களைத் தொழிலாளர்கள் நிறையக் கவனித்துக்கொண்டே இருக்கவேண்டியிருந்தது. 1825-ல் ரிச்சர்ட் ராபர்ட்ஸ் (Richard Roberts) தானே இயங்கும் மியூலைப் (self-acting mule) புதிதாக அமைத்தார். 1830-ல் அதில் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

நூற்புக்கும் அதன் துணைவினையான நெசவுக்குமிடையே இருந்த சமநிலையை இப் புது நூற்பு எந்திரங்கள் மாற்றிவிட்டன. இப்

[1] ஒரு பவுண்டு எடைக்கு எத்தனை கழி (சிட்டம்) (hank) நூல் வரும் என்ற அளவில் நூலின் தரம் மதிப்பிடப்படுகிறது. சிட்டம் என்பது திட்டப்படுத்தப்பட்ட ஒரு நீளத்தைக் குறிப்பதால், நூலின் எண்ணிக்கை அதிகமானால் நூல் மெல்லியதாகும். பழைய நூற்பு முறையில் 30—40-க்கு மேல் மெல்லிய நூல் செய்ய முடியவில்லை. மியூல் 60ஆம் எண்ணுள்ள நூலைத் தயாரித்தது, நாளடைவில் மிக மெல்லிய 350ஆம் எண் நூல்கூட நூற்கப்பட்டது.

[2] 1763-லேயே போல்டனில் (Bolton) மஸ்லின்கள் இந்தியாவினின்று இறக்குமதியான நூலைக்கொண்டு நெய்யப்பட்டன.

[3] தொழிற்கூடத்தில் கையால் இயக்கப்பட்ட கருவிகள் பயன்படுத்தப்பட்டன. தொழிற்சாலையில் விசையால் இயக்கப்பட்ட எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது இவ்விரண்டுக்குமுள்ள மாறுபாடு.

போது நூல் நிறையக் கிடைத்தது;[1] நெசவாளிகளின் தேவை மிகவும் அதிகரித்து அவர்களது வருமானம் உயர்ந்தது. இதுவரை விட்டு விட்டு வேலை கிடைத்ததால் மிகத் தாழ்ந்த வருவாய் பெற்ற முழு நேர நெசவாளர்களது வருமானம் பெருகியது. விவசாயம், நெசவு இரண்டிலும் ஈடுபட்டிருந்த பகுதி நேர நெசவாளர்கள் சாகுபடி வேலையை அடியோடு விட்டுவிட்டு நெசவிலேயே முழுதும் ஈடு படலாயினர். திறமையான நெசவாளர்களது பற்றுக் குறையும் இக் கைவினைஞர்கள் கோரிய அதிகக் கூலியும் நெசவிலும் எந்திரங் களைப் புகுத்த ஊக்கமளித்தது.

1733-லேயே ஜான் கே (John Kay) எறி நாடா (flying-shuttle) ஒன்றைக் கண்டுபிடித்திருந்தார். முன்னும் பின்னும் நாடாவைக் கைக்குக் கை மாற்றிக் கொள்வதற்குப் பதில் நெசவாளி கயிறுகளை இழுத்து நாடாவை இயக்கினுன். இதை உபயோகித்ததால் ஒரே ஆள் 'அகலத் துணி' (broadcloth) நெய்ய முடிந்தது. இதற்குமுன் அரு கருகில் இரண்டு பேர் நின்று இதை நெய்யவேண்டியிருந்தது. எறி நாடா முதலில் புகுத்தப்பட்டபோது நூல் தட்டுப்பாடு இருந்தது. எனவே, நூற்பு எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டவரை அது முக்கியத்துவம் அடையவில்லை. 1785-ல் எட்மண்டு கார்ட்ரைட் (Edmund Cartwright) ஒரு விசைத் தறியை அமைத்தார். ஆனுல், அது விகாரமாக இருந்தது. திறமையோடு இயங்கவில்லை. அதில் அபிவிருத்திகள் செய்யப்பட்டன. 1815-க்குப்பின் பரவலாக உப யோகிக்கப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட விசைத் தறியின் அமைப் பில் ராட்க்ளிஃப் (Radcliffe), ஹாரக்ஸ் (Horrocks) உட்படப் பல புது அமைப்பாளர்களும், பொறி விற்பன்னர்களும் அளித்த பல கருத் துகளும் புகுத்தப்பட்டிருந்தன. எனினும், பல ஆண்டுகளுக்குக் கைத்தறிகள் தொடர்ந்து இயங்கின. விசைத் தறி வந்தபின், கைத் தறித் தொழிலாளியின் கூலி விழலாயிற்று. 1815-க்குப்பின் ராணு வத்தினின்று நீக்கப்பட்ட பல போர் வீரர்களும் இவ் வேலைக்கு வந்து சேர்ந்தனர். நெசவாளர்களின் ஊதியம் மேலும் விழுந்தது. அவர் களது கூலி மிகக் குறைவாக இருந்ததால் முதலாளிகள் எந்திரங்கள் அமைப்பதை இலாபகரமாகக் கருதவில்லை. அந் நூற்றுண்டின் இடைக் காலம் வரை வீட்டிலும் தொழிற் கூடங்களிலும் கைத்தறி நெசவு தொடர்ந்து நடந்தது.

[1] உபரி நூலின் ஏற்றுமதி ஐரோப்பாவில் நெசவுத் தொழிலை ஏற் படுத்திவிடுமோ என்ற பயமும் சிறிது இருந்தது.

நாட்டின் பிற பகுதிகளைவிட லங்காஷயர் பருத்தி ஆலைகளுக்கு ஏற்ற இடமாக அமைந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. வரண்ட சூழ்நிலையில் நூற்ருல் பருத்தி நூல் அறுந்து போகும். லங்காஷயரில் மழை அதிகம்; வளி மண்டலத்தில் ஈரப்பதம் அதிகம். பென்னைன் (Pennine), ரோசண்டேல் (Rossendale) பள்ளத்தாக்குகளில் இருந்த நீரோடைகள் முதலில் வந்த எந்திரங்களை இயக்கப் பயன்பட்டன. நீராவி எந்திரங்கள் வந்தபின் அம் மாவட்டத்திலிருந்த கரி அவற்றை இயக்கப் பயன்பட்டது. லங்காஷயர் மாவட்டத்திலிருந்த லிவர்பூல் துறைமுகம் பருத்தி இறக்கவும் துணி ஏற்றுமதி செய்யவும் மிகவும் வசதியாக இருந்தது. நாட்டின் பிற இடங்களில் இத்தகைய சாதகமான காரணங்களில் ஏதாவது ஒன்றுதான் காணப்பட்டன. இம் மூன்று சௌகரியங்களும் ஒன்ருக இங்கும் கிளைட் பள்ளத்தாக்கிலும் (Clyde Valley) தவிர, நாட்டில் வேறெங்கும் காணப்படவில்லை. கிளைட் பள்ளத்தாக்கில் பருத்தி ஆலைக்கு வேண்டியதைவிட அதிக வசதிகள் கப்பல் கட்டும் தொழிலுக்கு இருந்ததால், அது லங்காஷயருடன் போட்டியிடாமல் கப்பல் கட்டுவதில் ஈடுபட்டது. எனவே, பருத்தித் துணி நெய்ய லங்காஷயர் மிகவும் நல்ல இடமாக அமைந்தது. இங்கு இத் தொழில் நன்கு அமைக்கப்பட்டுள்ளது. அதன் விற்பனையும் வியாபார மார்க்கங்களும் ஸ்திரப்படுத்தப்பட்டுவிட்டன.[1] அதன் தொழிலாளர்கள் வேறெங்கும் இல்லாத அளவுக்கு இவ் வேலையில் திறமை பெற்றுள்ளனர். பல துணைத் தொழில்களும் இம் மாவட்டத்தில் தோன்றியுள்ளன.

எந்திரங்கள் கம்பளித் துணித் தொழிலில் புகுத்தப்பட நாளாயிற்று. பருத்தித் துணித் தொழில் பதினெட்டாம் நூற்ருண்டில்

[1] உலகின் மிக முக்கியமான பருத்தி அங்காடியாகிய லிவர்பூல் காட்டன் எக்ஸ்சேஞ்சு (Liverpool Cotton Exchange) பருத்தி இறக்குமதியை நிருவகிக்கிறது. வியாபாரிகள், நூற்புத் தொழிலதிபர்கள், தரகர்கள் ஆகியோர் இதில் அங்கம் வகிக்கின்றனர். பிரிட்டிஷ் பேரரசு, மற்றும் காமன்வெல்த்தைச் சேர்ந்த பல நாடுகளிலிருந்தும், அமெரிக்கா, எகிப்து, சூடான் போன்ற பிற வெளி நாடுகளிலிருந்தும் அவர்கள் பருத்தி இறக்குமதி செய்கின்றனர். ஏற்கெனவே கிடங்குகளில் உள்ள பருத்தியை வாங்கி விற்பதோடு இன்னும் வந்து சேராத, சில சமயம் இன்னும் அறுவடையே ஆகாத பருத்தியை வாங்கி விற்கும் 'எதிர்கால வாணிப' விவகாரங்களும் (futures) இங்கு நடக்கின்றன. பருத்தியின் பல தரங்களைப்பற்றி அங்காடி உறுப்பினர்கள் நன்கு அறிவர். பவுண்டுக்கு இவ்வளவு பென்னி என்று (இரண்டு தசாம்ச எண்கள் வரை) விலை கூறப்படுகிறது. வியாபாரத்தில் பெரும் பகுதி தரகர்கள் மூலம் (brokers) நடக்கிறது. இறக்குமதியாளர் சார்பில் விற்பனைத் தரகர்களிருக்க, அவர்களிடமிருந்து தொழிலதிபர்கள் உத்தரவுப்படி வாங்கும் தரகர்கள் பருத்தி வாங்குகின்றனர்.

இரண்டாம் உலகப் போரின்போது இவ் அங்காடி மூடப்பட்டது. பருத்தி, துணி ஆகியவற்றின் வாணிபத்தை அரசாங்கம் தானே மேற்கொண்டது. 1953-ல் வியாபாரக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன. பருத்தி அங்காடி மீண்டும் திறக்கப்பட்டது.

தான் தோன்றியது. அதில் நெடுநாட்களாக அக்கறை கொண்டிருந்த வர்கள் யாரும் இல்லை. கம்பளித் துணித் தொழிலோ நூற்றுக்கணக் கான ஆண்டுகளாக நடந்துவருகிறது. அதன் நடைமுறை ஸ்திர மாகிவிட்டது; மாறுதல் விரும்பப்படவில்லை. பருத்தித் தொழிலுக்கு இருந்தது போல மாற்றத்துக்கு அவசியமான காரணங்களும் கம்பளித் தொழிலில் இல்லை. உரோம அளிப்பு நிறைய இல்லை. துணியைத் தயாரிக்க வேண்டிய அளவு ஊழியர் இருந்தனர். உரோமத்தைவிடப் பருத்தியின் விலை குறைவு. பருத்தியை ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து கொண்டுவர வேண்டி யிருப்பினும் அது ஏராளமாகக் கிடைத்தது.

உரோமத்தைச் சிக்கெடுப்பது, இதற்காக 1790-ல் கார்ட்ரைட் (Cartwright) ஒரு பொறியை அமைக்கும்வரை, கைத் தொழிலாகவே இருந்தது. பதினெட்டாம் நூற்றூண்டின் கடைசியில் கையால் இயக்கப்பட்ட ஜென்னி கம்பளி நூற்கப் பயன்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் நீளிழை (long staple) உரோமம் (worsted ஊர்ஸ்டட்) நூற்க விசைக் கருவிகள் பயன் படுத்தப்பட்டன. குற்றிழை (short staple) உரோமத்தை நூற்க விசை எந்திரங்கள் மெதுவாகவே உபயோகிக்கப்பட்டன. பருத்தித் தொழிலில் இருந்தது போலவே பல இடங்களில் முதலாளிகள் பல தொழிலாளர்களைக்கொண்டு ஒரு தொழிற்கூடத்தில் பல ஜென்னிகளை இயக்கி நூல் உற்பத்தி செய்தனர். இதற்குப்பின் நீர் சக்தியோ நீராவிச் சக்தியோ இக் கருவிகளுக்குப் பயன்படுத்துவதற்கு அதிக நாட்கள் பிடிக்கவில்லை. வெகு நாட்களுக்குப் பின்னரே உரோமம் நூற்க மியூல்கள் பயன்படுத்தப்பட்டன. 1824-க்குப்பின் ஊர்ஸ்டட் நெய்ய விசைத்தறிகள் ஓரளவுக்கு உபயோகிக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றூண்டின் பாதிக்குமேல்வரை கைத்தறிக் கம்பளி நெசவு தொடர்ந்து நடந்தது.[1]

நியூ சவுத் வேல்ஸில் (New South Wales) 1805-க்குமேல் அரசாங்கத்திடமிருந்து மேய்ச்சல் உரிமை பெற்றவர்கள் பெரிய ஆட்டு மந்தைகளை வளர்த்ததனுல் உரோம உற்பத்தி மிகவும் பெருகி யது.[2] 1817-க்குப்பின் நியூஸிலாந்திலும் பெரும் அளவில் ஆடு வளர்க்கப்பட்டது. 1830 வாக்கில் இங்கிலாந்துக்கு நேரெதிர் மூலையி

[1] விசேஷமான சில துணிகளை நெய்ய இன்றும் கைத்தறி பயனுகிறது. ஆனுல், அது அவ்வளவு முக்கியமானதல்ல.

[2] 1805-ல் ஆடு வளர்க்க முப்பது கைதிகளும் 5,000 ஏக்கரா நிலமும் ஜான் மக்கார்தர் (John Macarthur) பெற்றூர்.

லிருந்த நாடுகளினின்று கணிசமாக உரோமம் இறக்குமதி ஆயிற்று.[1] புதிதாக வந்த பருத்தித் தொழில் தொன்மையான கம்பளித் தொழிலைத் தள்ளிவிட்டுப் பதினெட்டாம் நூற்றாண்டில் அதன் இடத்தில் அமர்ந்தது; 1830-க்குப்பின் ஒவ்வொரு ஆண்டும் கம்பளித் தொழிலின் முக்கியத்துவம் பெருகியபோதும் இன்றும் பருத்தி நெசவே இங்கிலாந்தின் தலையாய துணித் தொழிலாக விளங்குகிறது.

இங்கிலாந்தில் கம்பளி, பருத்தித் துணிகளைப் போல லினன் (linen) நெசவு, என்றும் அவ்வளவு முக்கியமானதாக இருந்ததில்லை. அயர்லாந்தின் குடியானவர் குடும்பங்களில் பெண்கள் லினன் நூலைக் கையால் நூற்றனர். அவர்களுக்கு மிகக் குறைவாகக் கூலி தரப்பட்டதால் இதற்கு எந்திரங்களைப் பயன்படுத்துவது இலாபகரமாக இருந்திருக்காது. ஃபிளாக்ஸ் (flax—ஆளிச்செடி) நாரிலிருந்து லினன் நூற்க 1840-ல் எந்திரங்கள் எங்கும் பயன்படுத்தப்பட்டன; லினன் நெசவுக்கு 1860 வரை எந்திரங்கள் எல்லா இடத்திலும் உபயோகிக்கப்படவில்லை. பெல்ஃபாஸ்டும் (Belfast), டண்டீயுமே (Dundee) பிரிட்டிஷ் தீவுகளில் லினன் தொழிலின் முக்கிய கேந்திரங்களாவன.

பட்டுத் தொழிலைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது. பல நூற்றாண்டுகளாக இங்கிலாந்தில் அது இருந்துவந்தது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் ஹ்யூஜினட் அகதிகள் பெரும் அளவில் இந் நாட்டுக்குக் குடிவந்தபோது அது மிகவும் பிரசித்தமான தொழிலாயிற்று. முன்னரே குறிப்பிட்டபடி, பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கம்பளி நெசவோடு சேர்ந்து பருத்தித் தொழிலைப் பாதிக்குமாறு சட்டங்களை இயற்றுவிக்குமளவுக்குப் பட்டுத்தொழில் செல்வாக்குப் படைத்திருந்தது. பதினெட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் பட்டுத் துணி உற்பத்தியில் எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இத்தொழிலுக்குப் பாதுகாப்பு

[1] ஆஸ்திரேலிய உரோமத்தையே இன்று இங்கிலாந்து பூரணமாக நம்பியிருக்கவில்லை. தென் ஆஃப்ரிக்கா, தென் அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்துக்கு உரோமம் வருகிறது. ஸ்பெயினிலிருந்தும் ஓரளவுக்கு மெல்லிய உரோமம் இறக்குமதியாகிறது. ஆஸ்திரேலிய உரோம உற்பத்தியில் நவீன சாதனங்கள் உபயோகிக்கப்படுகின்றன. பெரிய ஆட்டுப் பண்ணைகளில் கத்தரிப்பதும் அதற்குப் பின்னருள்ள வினைகளும் மின்சார எந்திரங்களால் செய்யப்படுகின்றன. உரோமம் நன்றாகச் சுத்தப்படுத்தப்பட்டு நீளம், மென்மை இவற்றுக்கேற்றவாறு தரம் பிரிக்கப்படுகிறது. ஆங்கில உரோமத்தைவிட இதன்விலை அதிகம். ஆங்கில மேய்ச்சல் தொழிலின் ஆட்டுப் பண்ணைகளின் அளவு சிறிதாதலின் ஆஸ்திரேலியப் பண்ணைகளில் உள்ளது போன்ற நவீன முறைகளைக் கையாள முடியவில்லை. ஆஸ்திரேலிய உற்பத்தியில் பெரும்பகுதி இப்போது அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குப் போகிறது.

அளித்து இறக்குமதித் தடைகளும் நிறைய இறக்குமதி வரிகளும் விதிக்கப்பட்டன. கள்ளக் கடத்தல் காரணமாக இக்கட்டுப்பாடுகள் முழுப் பலனையும் அளிக்கவில்லை. ஹஸ்கிஸ்ஸன் (Huskisson) இவ் வரிகளைக் குறைத்த பின்னும் தொடர்ந்து பட்டு உற்பத்தி நல்ல நிலையில் இருந்துவந்தது. 1860-ல் அவ் வரிகள் ஒழிக்கப்பட்ட போது ஃபிரெஞ்சுப் பட்டின் போட்டியால் இத் தொழில் சிதைந்தது.

பருத்தியோ, கம்பளியோ, லினனே நெய்யப்பட்ட பின் துணி அங்காடிக்குப் போகுமுன் வேறு பல வினைகளுக்குட்பட வேண்டும். வெளுத்தல், சாயமேற்றல், அச்சிடல், மெருகேற்றுதல் ஆகியவை உதாரணங்கள். கையால் நூற்று நெய்யப்பட்டபோது துணியை வெய்யிலில் சில மாதங்கள் காற்றுடவிட்டு அதை வெளுத்தனர். பெரும் அளவில் உற்பத்தியான துணியை இம்முறையில் வெளுக்க முடியாது என்பது தெளிவு; இதற்காக ஒவ்வொரு தொழிற்சாலையும் நூற்றுக்கணக்கான ஏக்கரா நிலத்தை வெளுக்கும் திடலாகப் பெற்றிருக்கவேண்டும். அதிருஷ்டவசமாகக் குளோரின் (chlorine) (ஹரிதகம்) உபயோகித்துத் துணியை வெளுக்கும் முறை கண்டு பிடிக்கப்பட்டது; இவ்வாறு சில நாட்களிலேயே துணியை வெளுக்க முடிந்தது. தொழிற்புரட்சி நாளிலிருந்து இன்றுவரை புதுச் சாயங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தாமஸ் பெல் (Thomas Bell) அச்சு உருளை முறையை (cylinder printing) கண்டுபிடித்த பின் பருத்தித் துணிகளை அச்சிடுவதில் ஒரு புரட்சியே உண்டாயிற்று. ஓர் உலோக உருளையின்மீது அச்சிடவேண்டிய பூக்கோலம் பதிக்கப்பட்டது. உருளையின்மீது துணி ஓடுவதனுல் துணி முழுவதும் திரும்பத்திரும்ப அப் பூக்கோலம் (design) அமைந்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதல் அறுபது ஆண்டுகளில் துணித் தொழில்கள் தொடர்ந்து முன்னேறியதைப் புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பத்தொன்பதாம் நூற்றுண்டில் துணி உற்பத்தியில் பயனுன எந்திரப் புத்தமைப்புகளையெல்லாம் இவ் வதிகாரத்தில் விவரிக்க இயலாது. ஆனுல், 1830-ல் கண்டுபிடிக்கப் பட்ட (ஆனுல் 1860-ல்தான் முழு உபயோகத்துக்கு வந்த) கதிர் வளையச் சட்டம் (ring-spinning frame), ஹில்மன் (Heilmann 1847-லும், ஹோல்டன் (Holden) 1848-லும் கண்டுபிடித்த பருத்திச் சிக்கு வாரும் எந்திரங்கள், அந் நூற்றுண்டில் பின்னர் வந்த நார்த்ராப் தறி (Northrop loom) ஆகியவற்றை இங்குக் குறிப்பிடவேண்டும். துணி உற்பத்தியில் ஒவ்வொரு வினையிலும் எந்திரங்கள் பயன்

படுத்தப்படுகின்றன. உற்பத்தி வேலையில் நிறைய வேலைப் பகிர்வும் உள்ளது. தனித்தனித் தொழிற்சாலைகளில் நூற்பும், நெசவும் நடக்கிறது. சில நூற்பு ஆலைகள் சில தரங்களைச் சேர்ந்த நூலை மட்டுமே உற்பத்தி செய்கின்றன. யார்க்ஷயரில் தலத்துக்குத்தலம் விசேஷமான வேலைகளில் ஈடுபட்டுள்ளன. ஊர்ஸ்டட் நூற்புக்குக் கேந்திரம் பிராட்ஃபர்டு (Bradford); அந்நூலில் பெரும் பகுதி லெஸ்டருக்குப் (Leicester) பின்னல் துணித் தொழிலுக்காக (hosiery) அனுப்பப்படுகிறது. ஊர்ஸ்டடல்லாதக் கம்பளி நூற்பு, நெசவு வேலைகள் ஹட்டர்ஸ்ஃபீல்டில் (Huddersfield) செய்யப்படுகின்றன. டியூஸ்பரியில் (Dewsbury) 'ஷாடி'த் (shoddy) துணி தயாராகிறது. கோன் பள்ளத்தாக்கில் (Colne valley), டுவீடு (tweed) துணிகள் தயாரிக்கப்படுகின்றன. பருத்தித்துணி, கம்பளித்துணி இரண்டிலும் வெளுப்பதும் சாயமேற்றுவதும் தனித்தனித் தொழில்களாக நடக்கின்றன.

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது பருத்தித் துணித்தொழில் தீவிரமாகப் பாதிக்கப்பட்டது. சமஷ்டிக் கப்பற்படை (Federal Navy) தெற்கு நாடுகளின் துறைமுகங்களின் வாணிபத்தைத் தடை செய்ததால் லங்காஷயருக்குக் கச்சாப் பருத்தி கிடைக்கவில்லை. வேறு இடங்களிலிருந்து வந்த பருத்தியைப் பயன்படுத்தித் தொழிலை நடத்த முயலப்பட்டது. ஆனால், அது போதவில்லை. பல ஆலைகள் மூடப்பட்டன. ஆலை முதலாளிகள் பணக் கஷ்டமடைந்தனர். வேலைபோன தொழிலாளிகள் மிகவும் வருந்தினர். அமெரிக்கப் போரின் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து தம் வருத்தத்தைத் தீரத்துடன் பொறுத்து ஒழுங்காக இருந்த அவர்களை மெச்சத்தான்வேண்டும். இத்தொழில் மீண்டும் பழைய நிலையை அடையப் பல ஆண்டுகளாயின. தேர்ச்சிபெற்ற பல தொழிலாளர்கள் வேறு வேலைகளில் சேர்ந்தனர்; சிலர் வெளிநாடுகளில் குடியேறினர். சில ஆண்டுகளுக்குப் பின் பருத்தி நிறையக் கிடைத்துப் புதுத்தொழிலாளர்கள் வேலை ஏற்றபோது முன்னர் இருந்தவர்களைப் போல அவ்வளவு தேர்ச்சியும் திறமையும் இவர்களிடம் இல்லை. பிற துணித் தொழில்களின் வளம் பெருகியது; ஆனால், லங்காஷயரின் தொழில் வருந்தியது. அல்ஸ்டரில் (Ulster) லினன் தொழிலும், வெஸ்ட் ரைடிங்கில் (West Riding) கம்பளி நெசவும் நல்ல முன்னேற்றம் அடைந்தன.

பருத்திப் பஞ்சத்தின் விளைவாக, ஒரு தொழில் தன் மூலப் பொருளுக்காக ஒரே இடத்தை நம்பியிருப்பது நல்லதல்ல என்பது

உணரப்பட்டது. இந்தியா, நேட்டால் (Natal), ஆஸ்திரேலியா ஆகியவற்றில் நிறையப் பருத்தி உற்பத்தியை ஊக்குவதுபற்றி அமெரிக்க உள்நாட்டுப் போருக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் லங்காஷயர் ஆலே முதலாளிகள் ஆராய்ந்திருந்தனர். ஆனுல், அங்கெல்லாம் போக்குவரத்து வசதி சீராக இல்லாததால் இவ்விஷயத்தில் ஒரு முயற்சியும் செய்ய முடியவில்லே. இந்தியாவிலும் குடியேற்றங்களிலும் இருப்புப் பாதைகள் கட்டப்பட்டதும் இத்தடங்கல் நீங்கியது. அந்நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்தியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் நிறையப் பருத்தி இறக்குமதி ஆயிற்று. எகிப்தியப் பருத்தி நீண்ட இழைகளைக் கொண்டது; அமெரிக்கக் கடல்-தீவுப் பஞ்சுக்கு (sea-island cotton) அது இணையாக இருந்தது. லங்காஷயர் ஆலேகளுக்கு ஏற்றதாகவும் இருந்தது.

மறுபடி பருத்தி அளிப்புக் குறையுமோ என்ற அச்சம் காரணமாக 1902-ல் பிரிட்டிஷ் பருத்தி உற்பத்திச் சங்கம் (British Cotton-Growing Association) தோன்றியது. வெப்ப மண்டலத்திலிருந்த (tropical) பிரிட்டிஷ் பேரரசு நாடுகளில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க அச் சங்கம் நிறையப் பணம் செலவழித்திருக்கிறது. இந்தியாவில் ஒரு வகை உயர்ந்தரகப் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. மேற்கிந்திய உற்பத்தி அதிகரித்துள்ளது. நைஜீரியா, உகாண்டா, சூடான் நாடுகளில் பருத்தி உற்பத்தித் தொழில் செழித்து வளர்ந்திருக்கிறது.

சமீப காலத்தில் செயற்கைப்பட்டு, நைலான் (nylon), டெரிலீன் (terylene) போன்ற வேறு பல துணிப் பொருள்கள் நிறைய உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பஞ்சு, காகிதம், மரக்கூழ் (wood pulp) போன்ற பலவகைப் பொருள்களினின்று இவை செய்யப்படுகின்றன; அவை பார்க்கப் பகட்டாக உள்ளன; நீடித்து உழைக்கின்றன; அவற்றின் விலேயும் அதிகமில்லே. பிற துணி வகைகளுக்குப் பதில் இப் புதுத்துணிகள் ஆடையாகவும் அலங்காரத் துணியாகவும் மேலும் மேலும் பயன்படுத்தப்படுவதால் பிற துணிகளின் தேவை குறைந்துள்ளது.

1959-ன் போது தூரக்கிழக்கிலிருந்து விலே மலிந்த பருத்தித் துணி இறக்குமதியால் இங்கிலாந்தின் பருத்தி நெசவாலேகள் மிகவும் பாதிக்கப்பட்டன. பருத்தித் துணித் தொழிலே அடியோடு மாற்றியமைக்க அரசாங்கம் ஒரு திட்டம் கொண்டுவந்தது. எந்திரங்களேக் கழித்துவிட்டு நவீன சாதனங்களே உபயோகித்து உபரி உற்பத்தித்

திறனை அகற்றிவிடுவதே இதன் நோக்கம். ஜப்பான், ஹாங் காங் (Hong Kong) போன்ற கூலி மிகக் குறைவாகப் பெறும் தொழிலாளர்கள் உள்ள நாடுகள் போட்டியிட முடியாத உயர்ந்த ரகத் துணி வகைகளையே ஆலைகள் உற்பத்தி செய்யப் பார்க்கவேண்டும் என்று அத்திட்டம் கூறியது. அதிகமாக உள்ள பழைய எந்திரங்களை அகற்றிவிட நஷ்டஈடு கொடுக்க ஒரு நிதி நிறுவப்பட்டது. அந்நிதியில் மூன்றிலொரு பங்கு மிகுதியுள்ள ஆலை முதலாளிகளிடம் வசூலிக்கப்பட்டது; இரண்டு பங்கை அரசாங்கம் மானியமாக அளித்தது. புது எந்திரங்களின் விலையில் நான்கில் ஒரு பங்கைத் தரவும் அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இத்திட்டம் கண்டனத்துக்குள்ளான போதும் செயலாற்றப்பட்டது; நன்கு நடந்து வருகிறது எனத் தோன்றுகிறது.

16. நிலக்கரி

(Coal)

கைவேலைக்குப் பதிலாக எந்திரங்களை உபயோகித்துப் பொருள்களைச் செய்வது தொழிற்புரட்சியில் விளைந்த அடிப்படை மாறுதல்களில் ஒன்றாகும். எந்திரங்கள் விசையால் இயங்கின; முதலில் ஓடும் நீர் இவ்விசையை அளித்தது; நாளடைவில் அதைவிட நீராவி மேலானது என்பது உணரப்பட்டது. நீராவியைப் பயன்படுத்துவதற்காக எஞ்சின், எந்திரங்கள் ஆகியவற்றை அமைக்க இரும்பும் அவற்றை இயக்க நிலக்கரியும் தேவைப்பட்டன.[1] பிரிட்டனில் ஏராளமாகக் கரியும் இரும்பும் கிடைத்தன. இவ்வசதி மட்டும் இல்லாதிருந்தால் பிரிட்டன் தொழில் துறையில் அடைந்துள்ள பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்காது.

பல நூற்றாண்டுகளாக நிலக்கரி வீடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது; போக்குவரத்து வசதிகள் சரியாக இருந்தால் இன்னும் அதிகமான இடங்களில் அது பயன்பட்டிருக்கும். பதினெட்டாம் நூற்றாண்டில் வேறுவகை எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் கரியின் தேவை அதிகமாயிற்று. நாளடைவில் பிற வழிகளிலும் அதைப் பயன்படுத்த முடியும் என்பது தெரிந்தது.

[1] ரோமானியர் காலத்தில் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி எடுக்கப்பட்டது. ஒரு வேளை கரி வயல்களிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டிருக்கலாம் (quarried). சாக்ஸானியர் காலத்திலும் நார்மானியர் காலத்திலும் சுரங்கத் தொழில் அதிகம் இல்லை. ஆனால், பதின்மூன்றாம் நூற்றாண்டில் டைன் (Tyne) பிரதேசத்தில் இத்தொழில் வளர்ந்தது. கடல் வழியாக நிலக்கரி லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு முக்கியமாக வீடுகளில் உபயோகிக்கப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டில் நார்த்தம்பர்லாந்து (Northumberland), டர்ஹம் (Durham), யார்க்ஷயர், லங்காஷயர், ஸ்டாஃபர்டுஷயர் (Staffordshire), தென் வேல்ஸ் (South Wales) ஆகிய இடங்களில் நிலக்கரி எடுக்கப்பட்டது. நாளடைவில் கரி ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி ஆயிற்று.

நகரங்கள் வளர்ந்தபோது வீட்டில் எரிபொருளாக அதன் தேவை உயர்ந்தது; நீராவி எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபோது அதை ஓட்ட அது மிகவும் தேவைப்பட்டது. நிலக்கரியில்லாமல் பத்தொன்பதாம் நூற்றூண்டில் புகை வண்டிகளும் நீராவிக் கப்பல்களும் ஓடியிருக்க முடியாது. அதிலிருந்த கந்தகம் இரும்போடு கலந்தால் இரும்பு உடையும் இயல்பைப் பெற்றுவிடும் என்பதற்காக அது இரும்பு உருக்க ஏற்றதல்ல என்று வெகுநாட்களாகக் கருதப் பட்டது. ஆனல், அடுத்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி, தன் இரும்பு உலைகளில் பயன்படுத்துமுன் நிலக்கரியைக் கோக்காக (coke) டார்பி (Darby) மாற்றியதும் இப்பிரச்சினை தீர்ந்தது.

கோக் தயாரிப்பிலே துணைப் பொருளாக (by-product) நிலக்கரித் தார் (coal-tar) கிடைக்கிறது. இதில் உள்ள பல ரசாயனப் பொருள்களைத் தனியாக்கிப் பயன்படுத்துவதில் பத்தொன்பதாம் நூற்றூண்டின் இடைக்காலத்திலிருந்து பெரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1856-ல் நிலக்கரித் தாரிலிருந்து அனிலீன் சாயங்களைத் (aniline dyes) தயாரிக்க வில்லியம் ஹென்ரி பெர்கின்ஸ் (William Henry Perkins) ஒரு முறையைக் கண்டுபிடித்தார். துணித் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் துணையாக இருந்த மற்றெரு தொழிலை இது துவக்கி வைத்தது. நிலக்கரியிலிருந்து இப்போது எண்ணற்ற சாயங்கள், மருந்துகள், மணச்சாரங்கள் (essences), வாசனைகள், கரைப்பான்கள் (solvents), எண்ணெய்கள், உரங்கள் போன்ற பலவகைப் பொருள்கள் தயாராகின்றன. கூரை, சாலைகள் இவைகளுக்காகவும், படமெடுப்பதிலும் (photography), வேறுபல தொழில்களிலும்கூட, கரியிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்கள் பயன்படுகின்றன.

கரிச் சுரங்கத் தொழில் முதல்தரமாக ஆகுமுன்னர் பல தடங்கல்களை அகற்றவேண்டியிருந்தது. சுரங்கக் குழி வெட்டுவது கிணறு வெட்டுவதாகும். சுற்றியுள்ள ஊற்று நீர் குழிக்குள் வந்துவிடும். அந்நீரைத் தொடர்ந்து வெளியேற்றினலன்றிக் கரியை வெட்டியெடுப்பது இயலாது. பதினெட்டாம் நூற்றூண்டில் அந்நீரைத் தொழிலாளர்களே கையால் இறைத்து வெளியேற்றினர். பதினெட்டாம் நூற்றூண்டின் முதல் ஆண்டுகளில் நியூகமன் (Newcomen) அமைத்த நீராவி எந்திரம் ஒன்று நீரிறைக்கப் பயன்பட்டது; அந்நூற்றூண்டின் இறுதியில் அதற்குப் பதிலாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஜேம்ஸ் வாட்டின் (James Watt) எஞ்சின் பயன்பட்டது. நீராவி எந்திரத்தால் நீரெடுப்பதால் சுரங்கக் குழாய்களை ஆழமாக வெட்ட வழி உண்டாயிற்று.

நிலக்கரி, படைகளாகக் (seams) காணப்படுவதை யாவரும் அறிவர். கரிப்படை முழுவதையும் வெட்டி எடுப்பது சுரங்கத் தொழிலாளியின் வேலை. அவ்வாறு செய்தால் படையின் மேல்தளம் தாங்கப்பட்டாலொழியச் சரிந்துவிடும். பதினெட்டாம் நூற்றுண்டில் சுரங்கப் பிரிவுகளில் கம்பம் அமைக்கும் முறை (pillar and stall system) சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது. அங்கும் இங்கும் கரியைக் கம்பம் போல விட்டுவைத்து, கரிப்படை துளைக்கப் பட்டது. படை முழுவதையும் வெட்டி எடுத்த பின் கம்பங்களும் வெட்டி எடுக்கப்பட்டன. கம்பமுறை இன்னும் உபயோகத்தில் உள்ளது. ஆனுல், பல இடங்களில் இதற்குப் பதிலாக நெடுஞ்சுவர் முறையும் (long-wall system) உபயோகிக்கப்படுகிறது. இம்முறைப் படி படைமுழுவதும் வெட்டி எடுக்கப்படுகிறது. ஆனுல், இதிலும் கூரை விழுவதைத் தடுக்க வழிசெய்ய வேண்டும். 1810-க்குப் பின் கரிவெட்டுமிடத்தில் கூரையைத் தாங்க மர உத்தரங்கள் அமைக்கப் பட்டன.

சுரங்கத்தில் காற்ருேட்டம் ஏற்படச் செய்வதுபற்றிய பிரச்சினை 1837-ல் கெட்ட காற்றைப் புறமகற்றும் விசிறி (exhaust fan) கண்டு பிடிக்கப்படும்வரை மிகக் கடினமாக இருந்தது.[1] ஒவ்வொரு சுரங்கத்திலும் மேலிருந்து கீழ் செல்லும் வழிகள் (shafts) இரண்டிருக்கும்.[2] தளங்கள் (galleries) அனைத்தும் இவ்விரண்டுக்கும் இணைக்கப்பட்டிருக்கும். ஒரு வழியில் விசிறிகள் காற்றை மேலே ஓடவைக்கின்றன. அதன் விளைவாகக் காற்று மற்ருென்றின் வழியாகப் புகுந்து தளங்கள் வழியாக ஓடுகிறது. காற்ருேட்டத்தோடு இணைந்த மற்ருெரு பிரச்சினை வெளிச்சம் தருவது. கரிப்படைகளினின்று வெளி

[1] கரிப்படைகளினின்று வெளிவரும் வாயுக்களில் மீதேன் (methane) ஒன்று. சதுப்பு வாயு [marsh gas (CH_4)] என்பது இதன் பொதுப்பெயர். சுரங்கத் தொழிலாளர்கள் இதை ஃபயர்-டாம்ப் (fire-damp) என்று அழைக்கின்றனர். காற்றில் 5 அல்லது 6 சதவிகிதம் இவ்வாயு கலந்தாலே இக் கலவை வெடிக்கும். வெடிக்கும்போது கரியமில வாயு [carbon dioxide (CO_2)] தோன்றுகிறது. இது மூச்சை முட்டவைக்கும். இதை ஆஃப்டர்-டாம்ப் (after-damp) என்று அழைக்கின்றனர். கார்பன் மோனுக்ஸைடு [carbon monoxide (CO)] வாயு அல்லது கரியமிலவாயுவைக் கொண்டது. சோக்-டாம்ப் (choke-damp) கார்பன் மோனுக்ஸைடு விஷ வாயு. அது இருப்பதைப் புலன்களால் சட்டென உணரமுடியாது. சுவாசிப்பது அபாயகரமானது; அனேகமாக மரணம் ஏற்படும். காற்றில் கரித்தூள் கலந்திருப்பதாலும் வெடிவிபத்து நேரலாம். மெல்லிய பொடியாகக் கால்சியம் கார்பனேட்டைத் ($CaCo_3$) தூவுவதன்மூலம் இந்தக் காரணத்தால் ஏற்படும் வெடி விபத்தைத் தடுக்கலாம்

[2] ஒவ்வொரு சுரங்கத்துக்கும் இரண்டு வழிகள் வைப்பது 1862-க்குப் பிறகு கட்டாயமாக்கப்பட்டது. 1887-ல் இதுபற்றிய சட்டம் பலப்படுத்தப் பட்டு விஸ்தரிக்கப்பட்டது. பல சுரங்கங்களில் இரண்டுக்கு மேற்பட்ட வழிகள் உள்ளன.

வரும் சதுப்பு வாயு வெடிக்கக்கூடியது. ஆதலின், சுரங்கத்தில் திறந்த விளக்குகளைக் கொண்டுபோவது அபாயகரமானது. விளக்கை முழுதும் மூடவும் முடியாது. ஏனெனில், விளக்கெரியப் பிராணவாயு வேண்டும். இப்பிரச்சினையைத் தீர்க்க சர் ஹம்ப்ரி டேவி (Sir Humphry Davy) ஒரு விளக்கைக் கண்டுபிடித்தார். அதற்கு அவரது பெயரே சூட்டப்பட்டுள்ளது. விளக்கைச் சுற்றிக் கம்பி வலை (wire gauze) அமைக்கப்பட்டுள்ளது. அதனால் காற்று விளக்குக்குள்ளே போகமுடியும். ஆனால், சுடர் குளிர்ந்த வலைமூலமாக வெளிவந்து வெளியில் உள்ள வாயுக்களைப் பற்றவைக்க முடியாது. சமீப காலத்தில் முக்கியமான தளங்கள் அனைத்திலும் ஒளிவீச மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மின்சாரக் கம்பிகள் பொருத்தப்படாத பகுதிகளுக்கு மின் விளக்குகள் கையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால், ஓரிரு சுடர் விளக்குகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன. அவற்றில் வலைக்குள் விளக்கின் தலைப்புறத்தில் வாயு எரிவதைக் கொண்டு சதுப்பு வாயு இருப்பதைக் கண்டுபிடிக்க முடிகிறது.

நிலக்கரியைப் பூமி மட்டத்துக்குக் கொண்டுவருவது மற்றொரு கடினமான பிரச்சினையாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திவரை இதற்குத் திருப்திகரமான முடிவு ஏதும் ஏற்படவில்லை. இதற்காகச் சில சமயம் நீராவி எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.[1] ஆனால், இதற்குத் தேவையாக இருந்த சணல் கயிறுகளின் (hempen cables) விலை மிக அதிகம். அவை நீடித்து உழைக்கவும் இல்லை. பல சுரங்கங்களில் குழிகளின் இருபுறமும் ஏணிகள் கட்டப்பட்டிருந்தன. பெண்களும் குழந்தைகளும் தோளில் கரிக் கூடைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு ஏணிகளில் ஏறிக் கரியை மேலே கொண்டு வந்தனர். 1839-ல் கம்பிக் கயிறு (wire cable) கண்டுபிடிக்கப்பட்டபின் அநாகரிகமான இம்முறை கைவிடப்பட்டது. 1842-ல் பெண்களும் குழந்தைகளும் சுரங்கத்தில் வேலை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது.

மற்றொரு பிரச்சினை சுரங்கத்தின் ஆழம் அதிகமாகும்போது அங்கு வெப்பமும் அதிகமாகும். வெப்பம் அதிகமாவது ஒரே விகிதத்தில் அல்ல; சராசரி இருபது கஜ ஆழத்துக்கு ஒரு ஃபாரென்ஹீட்

[1] 1784-ல் சுரங்கக் குழியினின்று கரியை வெளியே கொண்டுவரும் வேலைக்காக அமைக்கப்பட்ட பௌல்டன்-வாட் பொறியொன்று (Boulton and Watt engine) எண்பது ஆண்டுகளுக்குப் பயன்பட்டதாகக் கூறப்படுகிறது.

(Fahrenheit) டிகிரி அது அதிகமாயிற்று. இதன் காரணமாக ஓரளவுக்குமேல் சுரங்கத்தின் ஆழத்தை அதிகரிக்க முடியாது. ஆனால், சுரங்கத்துக்குள் செல்லும் காற்றைச் செயற்கை முறையில் குளிர்ப் படுத்தி வெப்பத்தைக் குறைக்க முடியும்.

முதன் முதலில் போக்குவரத்துக் கஷ்டத்தினால் செலவு அதிகமானதால் கரிக்குத் தேவை அதிகமாகவில்லை. கூடுமானவரை கரி கடல் வழியாக அனுப்பப்பட்டது; நியூகாஸிலிலிருந்து (Newcastle) லண்டனுக்கு நிலக்கரி அனுப்புவதில் கஷ்டம் ஏதும் இல்லை. ஆனால், படகு போகக்கூடிய ஆறுகள் அல்லது கடற்கரையினின்று வெகு தூரத்தில் உள்ள நகரங்களுக்குக் கரி கிடைப்பது கடினமாக இருந்தது. இருபுறமும் இரு கூடைகளில் கரியைக் குதிரைகள்மீதும் கோவேறு கழுதைகள்மீதும் ஏற்றிச் சென்றனர். இம் முறையால் போக்குவரத்துச் செலவு அதிகமாகிக் கரியின் விலை உயர்ந்தது. கால்வாய்களும் பின்னர் இருப்புப் பாதைகளும் அமைக்கப்பட்டபின் குறைந்த செலவில் எல்லா இடங்களுக்கும் கரியை எடுத்துச் செல்ல முடிந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பூமி மட்டத்துக்குக் அருகிலிருந்த கரிப் படிகளை வெட்டி எடுத்துவிட்டதால் இப்போது சுரங்கத்தை ஆழமாக்கவேண்டியிருக்கிறது.[1] ஆனால், லாபகரமாகக் கரி எடுக்கக்கூடிய ஆழத்தை எல்லாச் சுரங்கங்களும் தாண்டிவிட்டதாகச் சொல்லமுடியாது. சுரங்கங்களில் பக்கவாட்டில் விஸ்தாரமாகத் தோண்டப்பட்டிருக்கிறது. இரண்டு மைல் நீளக் குகை வழிகள் கூடத் (tunnels) தோண்டப்பட்டுள்ளன. கரி வெட்டி எடுக்க எந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மனித உழைப்பைக் குறைக்கப் பல் வேறு சாதனங்களும் உபயோகிக்கப்படுகின்றன.

பதினெட்டாவது நூற்றாண்டிலும் பத்தொன்பதாவதின் தொடக்கத்திலும் சுரங்கங்களின் வேலைச் சூழ்நிலைபற்றி அரசாங்கமோ, பொதுமக்களோ, சுரங்க முதலாளிகளோ சிறிதும் அக்கறை காட்டவில்லை. நாளுக்குப் பதின்மூன்று பதினான்கு மணி நேரம்கூட ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பூமிக்கு அடியில் வேலை செய்தனர். ஆண்கள் கரியை வெட்டி எடுக்கக் குழந்தைகளும்

[1] நியூகமனின் பொறி கண்டுபிடிக்கப்படுமுன் சுரங்கம் எதுவும் நூற்றிருபது அடிக்குமேல் ஆழமாக இல்லை. இன்று ஆயிரம் கஜ ஆழமான சுரங்க வழிகள் பல உள்ளன. இங்கிலாந்தில் ஆயிரத்து இருநூறு கஜ ஆழம் சுரங்க வழி வெட்டப்பட்டுள்ளது. பெல்ஜியத்தில் நான்காயிரம் அடி ஆழத்தில்கூடச் சுரங்கவேலை நடக்கிறது.

பெண்களும் அதைக் குகை வழிகளில் இழுத்துச் சென்று சுரங்கத்துக்கு மேலே தூக்கிச் சென்றனர். பிற தொழில்களைவிட இத் தொழிலில் வேலையாட்கள் அதிகக் கூலி பெற்றனர். பிற வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களைப் போலப் போஷாக்கு இன்மையால் இவர்கள் அவ்வளவாக வருந்தவில்லை. சுரங்கத்தொழில் உடலுக்குக் கெடுதியாகக் கருதப்படவில்லை. ஆனால், அதில் அபாயம் அதிகம்; மோசமான விபத்துகள் நடப்பது சகஜம்.[1]

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தைவிட ஸ்காட்லாந்தில் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைச் சூழ்நிலை மோசமாக இருந்தது. குடும்பத்தோடு சுரங்கங்களில் வேலை செய்ய அவர்கள் கட்டாயப் படுத்தப்பட்டனர். அவர்கள் அவ் வேலையை விட்டுப் போகக் கூடாது. ஓடிப் போனவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டனர். அவர்களது கழுத்தைச் சுற்றி முதலாளிகளின் பெயர்கள் பொறித்த பித்தளை வளையங்கள் பூட்டப்பட்டன. ஒரு புது முதலாளிக்குச் சுரங்கம் விற்கப்பட்டால் அதனுடன் தொழிலாளர்களும் விற்கப்பட்டனர். இவர்களது நிலைமை இடைக்கால ஆங்கிலப் பண்ணையாட்களுடையதைவிட மோசமாக இருந்தது. பண்ணையாட்கள் ஓடிப்போய் ஓராண்டும் ஒருநாளும் தலைமறைவாக இருந்தால் விடுதலைபெற்றுவிடுகிறார்கள். இந்த வழியில் ஸ்காட்லாந்தில் சுரங்கத் தொழிலாளர் விடுதலை பெற முடியாது. பண்ணையாள் நிலைமையைவிட அடிமை நிலையிலேதான் அவர்கள் இருந்தனர் எனலாம். சாதாரணமாக அவர்கள் பெற்ற கூலி, ஆணுக்கு நாளுக்குப் பத்து பென்னியும் பெண்ணுக்கு மூன்று பென்னியும் ஆகும். இம் முறை பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசிக் கால்பாகத்தில் தளர்த்தப்பட்டது; ஆனால், அந் நூற்றாண்டு முடியும் வரை அடியோடு மறையவில்லை.

முன்னரே கூறியபடி 1842-ல் பத்து வயதுக்குக் குறைந்த பையன்கள், எந்த வயதையும் சேர்ந்த பெண்கள் ஆகியோர் பூமிக்கடியில் வேலை செய்வது தடை செய்யப்பட்டது. 1850-ல் சுரங்கங்களைக் கண்காணிக்கும் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கரிச் சுரங்கங்கள் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் (Coal Mines Regulation Acts) 1860-லும் 1872-லும் அதன் பின்னர் சில ஆண்டுகளிலும் நிறைவேற்றப்பட்டன. சுரங்கங்களில் ஏற்பட்ட விபத்துகளின் காரணங்களை ஆராய, விசாரணை நடத்த 1881-ல் உள்நாட்டுத்துறைச்

[1] 1815 வரை, பூமிக்கடியில் கொல்லப்பட்ட தொழிலாளர்களின் பிரேத விசாரணை நடத்துவது வழக்கமாக இல்லை.

செயலாளர் (Home Secretary) உரிமை பெற்ருர். பிளப்பதற்கு வெடி மருந்துகளைப் பயன்படுத்துவதுபற்றி 1896-ல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. சுரங்கங்களில் நாளொன்றுக்கு எட்டு மணி நேரத்துக்குமேல் வேலை கொடுக்கக்கூடாது என்று 1908-ல் ஓர் எட்டு மணிநேரச் சட்டம் (Eight Hours Act) வந்தது. பையன்கள் சுரங்கத்தில் வேலை செய்ய வேண்டிய குறைந்தபட்ச வயது அதிகரிக்கப்பட்டு வந்தது.[1] கரிச் சுரங்கங்கள்பற்றிய எல்லாச் சட்டங்களையும் தொகுத்து கரிச்சுரங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Coal Mines Regulation Act) 1911-ல் அமைக்கப்பட்டது. இச் சட்டத்தில் 1914-ல் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. வழிகள் அமைத்தல், கூரையைத் தாங்க ஏற்பாடுகள், எந்திரங்கள், வெடி மருந்தின் உபயோகம், காற்ருேட்ட வசதி, விபத்துகளைத் தடுப்பது, விபத்து நடந்தால் செய்யவேண்டியவை, சுரங்கக் கண்காணிப்பு போன்ற பல விஷயங்களைப்பற்றி இச்சட்டத்தில் விதிகள் உள்ளன.

இதனுல் சுரங்கத் தொழிலாளிகளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. 1914-18 போருக்குப்பின் உயர் நீதிமன்ற நீதிபதி ஸர் ஜான் ஸாங்கியின் (Sir John Sankey) தலைமையில் அரசர் ஆணைக்குழு ஒன்று இத் தொழிலில் இருந்த வேலைச் சூழ்நிலையைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டது. 1919-ல் இக் குழுவின் பிரிவுகள் மூன்று இடைக்கால அறிக்கைகளை வெளியிட்டன. உடனடியாக வேலை நேரத்தை நாளுக்கு ஏழு மணி நேரமாகவும் இறுதியில் ஆறு மணி நேரமாகவும் குறைக்க வேண்டுமென்று யோசனை தெரிவித்ததோடு, அப்போதைய சுரங்க உடைமை முறையை முதல் அறிக்கை கண்டித்தது. மிக ஜாக்கிரதையான வார்த்தைகளில் சுரங்கங்களை அரசாங்க உடைமையாக்க வேண்டுமென்று யோசனை கூறியது. இரண்டாவது அறிக்கை இதற்கும் ஒரு படி மேலே போய் உடனடியாக ஆறு மணிநேர வேலையும், முப்பது சதவிகிதக் கூலி உயர்வும் வேண்டுமெனக் கூறியது. சுரங்கங்களை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டுமெனத் தெளிவாகக் கூறியது. மூன்ருவது அறிக்கை நாட்டுடைமையாக்குவதையும் வேலை நேரத்தைக் குறைப்பதையும் எதிர்த்தது; ஊதியங்கள்பற்றி அது ஒன்றும் கூறவில்லை. 1920-ல் வெளியான தன் இறுதி அறிக்கையில் குழுவின் தலைவர் அரசாங்க உடைமையாக்குவதை ஆதரித்தார். அரசாங்கம் சுரங்கங்களை வாங்கிவிட வேண்டுமென யோசனை கூறினுர்.

[1] 1872-ல் அது பன்னிரண்டாக உயர்த்தப்பட்டது. 1900-ல் அது பதின்மூன்று ஆயிற்று; 1911-ல் பதினுன்காயிற்று. 1944-ல் வந்த கல்விச் சட்டப்படி (Education Act) பள்ளிக்கூட வருகை (attendance) பற்றிய விதிகள் முழுவதும் செயலாக்கப்பட்டதும் பதினுறு வயதுக்குட்பட்ட பையன்கள் சுரங்கத்தில் வேலை செய்வது சட்ட விரோதமாகிவிடும்

இந்த யோசனைகள் எதன்படியும் அரசாங்கம் நடக்கவில்லை. அதன் செயலற்ற நிலை அது மூன்றுவது இடைக்கால அறிக்கையை மறைமுகமாக ஒப்புக் கொண்டதற்கு அடையாளமாகும். ஆதலின், பல ஆண்டுகளுக்குச் சுரங்கத் தொழில் தெளிவற்ற சூழ்நிலையில் நடந்து வந்தது.

1920-ஐத் தொடர்ந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் விளைவாக நிலக்கரியின் விற்பனை குறைந்தது; சுரங்கத் தொழிலாளர் சிலர் வேலையிழந்தனர். சுரங்க முதலாளிகள் சிலர் கரியின் விலையைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்றும்; அதற்காகக் கூலியைக் குறைக்க வேண்டும் என்றும் கூறினர். இதைத் தொழிலாளர்கள் எதிர்த்தது இயல்பே. அப்போதிருந்த நிலையிலேயே கூலிகள் கொடுக்கப்பட வழி செய்ய 1925 ஜூலையினின்று 1926 ஏப்ரல் வரை சுரங்கங்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்ததன் விளைவாக அப்போது வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது. சுரங்கத் தொழிலைப்பற்றி மறுபடி விசாரிக்க மற்றும் ஓர் அரசர் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. இம்முறை [பின்னர் சாமுவல் பிரபு ஆன (Lord Samuel)] ஸர் ஹெர்பர்ட் சாமுவல் (Sir Herbert Samuel) அதற்குத் தலைமை தாங்கினுர்; அரசாங்கப் பண உதவியைக் கண்டித்து அதை நிறுத்த வேண்டுமென்று அது யோசனை கூறியது. யார் நிலத்தில் கரி எடுக்கப்படுகிறதோ அந்நில முதலாளிகள் பெறும் ராயல்டி உரிமையை (royalty) அரசாங்கம் விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டுமென்று தன் கருத்தை அக் குழு தெரிவித்தது. ஏழரை மணி நேர வேலை நாள், சுரங்க வாயிலில் குளியலறைகள், ஆண்டுக்குச் சில நாள் சம்பளத்தோடு விடுமுறை, இலாபத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறும் திட்டம் ஒன்று ஆகியவை இக் குழுவின் பிற யோசனைகள். சுரங்கங்களைத் தனியாரே உடைமை பெற்று நிருவகிக்க வேண்டுமென்று கூறி அவற்றை நாட்டுடைமையாக்குவதை அது ஆதரிக்க மறுத்தது.

சாங்கி குழு அமைக்கப்பட்டதிலிருந்தே தனியார் உடைமை நீங்கிவிடும் என எதிர்பார்த்திருந்த சுரங்கத் தொழிலாளர்களுக்கு, சுரங்கங்களை அரசாங்க உடைமையாக்குவதை ஸாமுவல் குழு ஆதரிக்காதது ஏமாற்றத்தை அளித்தது. அதே சமயம் 1926 ஏப்ரல் முடிவிலிருந்து அரசாங்கப் பண உதவி நின்றுவிடும் எனப் பிரதம மந்திரி திரு. பால்ட்வின் (Mr. Baldwin) அறிவித்தார். சுரங்க முதலாளிகள் கூலிகள் குறைக்கப்படும் என அறிவித்தனர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

நாட்டின் பெருந் தொழில்களில் எல்லாம் சுரங்கத் தொழிலாளரை ஆதரித்துப் பொது வேலை நிறுத்தம் நடந்தது. ஆனால், ஏழெட்டு நாட்களில் பொது வேலை நிறுத்தம் முடிவடைந்துவிட்டது. சுரங்கத் தொழிலாளர்கள் பல வாரங்கள் வேலையற்றிருந்தனர். இறுதியில் தம் கையிருப்பெல்லாம் தீர்ந்ததும் வேறு வழியின்றி முதலாளிகளின் ஷரத்துகளை ஒப்புக்கொண்டு, திரும்பவும் வேலைக்கு வந்து சேர்ந்தனர். 1926-ல் வந்த கரிச் சுரங்கங்கள் சட்டம் (Coal Mines Act) பூமிக்கடியில் வேலை நேரத்தை நாளுக்கு ஒருமணி நேரம் அதிகப்படுத்த அனுமதி தந்தது. ஆனால், அதே ஆண்டில் வந்த மற்றொரு சுரங்கத் தொழில்கள் சட்டத்தின்படி (Mining Industries Act) சாமுவல் குழுவின் சில யோசனைகள் அமல் செய்யப்பட்டன.

நாளடைவில் சுரங்கங்களில் வேலைச் சூழ்நிலை அபிவிருத்தி அடைந்தது. ஆனால், தொழிலாளர்கள் திருப்தி அடையவில்லை. சுரங்கங்கள் தனியார் உடைமைகளாக இருக்கும்வரை தொழிலாளர்கள் திருப்தி கொள்ளமாட்டார்கள் என்பது தெளிவாகப் புலப்பட்டது. 1945-ல் தொழிற்கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்ட போதுதான் அவர்களது நெடு நாளைய எண்ணம் நிறைவேறியது. 1946-ல் கரிச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கல் சட்டம் (Coal Mines Nationalization Act) ஒன்று இயற்றப்பட்டது. எரிபொருள், விசை மந்திரி (Minister for Fuel and Power) நியமித்த ஒன்பதுபேர் கொண்ட தேசிய நிலக்கரிக் கழகம் (National Coal Board) ஒன்று சுரங்க நிர்வாகத்தை மேற்கொண்டது. சுரங்க முதலாளிகளுக்கு நஷ்டஈடு அளிக்கவும் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டது. சுரங்கங்களை நடத்துவது, தொழிற்சாலைகளுக்கும் வீடுகளுக்கும் நிலக்கரி சப்ளை செய்வது, பிற துணைத் தொழில்களை மேற்கொள்வது ஆகியவை தேசிய நிலக்கரிக் கழகத்தின் பணிகளாவன. இச் சட்டம் 1947 ஜனவரி முதல்நாள் அமலுக்கு வந்தது. தாங்கள் வெறுத்த ஒரு முறையின் தளைகளினின்று விடுதலை கிடைத்த திருநாளாக அதைச் சுரங்கத் தொழிலாளர்கள் கொண்டாடினர்.

சுரங்கங்கள் தனியார் உடைமையாக இருந்தபோது சில தொழிலாளர்கள் வாரம் ஓரிரு நாட்கள் அல்லது அதற்கதிமாக வேலைக்கு வராமல் நின்றுவிடுவர். 'வேலைக்கு வராமை' (absenteeism) ஒரு பிரச்சினை ஆகியது. அதனால் வெட்டி மேலே கொண்டுவரப்பட்ட கரியின் அளவு மிகவும் குறைந்தது. 1947 மே மாதத்தில், கரிச் சுரங்கங்கள் நாட்டுடைமையாகி நான்கு மாதங்களில் அத்தொழிலில் வாரம் ஐந்து நாள் வேலை என்ற ஏற்பாடு புகுத்தப்பட்டது. சுரங்கத்

தொழிலாளர்கள் வாரத்துக்கு ஐந்து நாட்கள் வேலை செய்தால் போதும். முன்னர் ஆறு நாட்களில் சம்பாதித்ததை இப்போது ஐந்து நாட்கள் முழுமையாக வந்தவருக்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டது. இதனால் வேலைக்கு வராமை அடியோடு நின்றுபோகா விட்டாலும் குறையும் என்றும், எடுக்கப்பட்ட கரியின் அளவு குறையாது என்றும் எதிர்பார்க்கப்பட்டது. 1947-ன் இலையுதிர் காலத்தில் கரி மிகவும் அவசரமாகவும் அதிகமாகவும் தேவைப்பட்டதால் தாற்காலிகமாகவும் கட்டாயமின்றித் தொழிலாளர்களே ஒப்புக்கொண்டும் இருவாரங்களுக்குப் பதினோரு நாள் வேலை என்ற திட்டம் அமலுக்கு வந்தது.

இன்னும் சமீபகாலத்தில் கரியின் தேவை குறைந்தது. அதை உபயோகிப்பவர்களுக்கு அதன் விலை அதிகமாக இருந்தது. கரிக்குப் பதிலாகக் கணப்புக்காகவும் விசைக்காகவும், மின்சாரம், எண்ணெய் போன்றவை நாளுக்கு நாள் அதிகமாக வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் பயன்பட்டு வருகின்றன. இருப்புப் பாதைகளின் சீரமைப்புத் திட்டப்படி மின்சாரமும் டீசல் எண்ணெயும் உபயோகிக்கும் புது எஞ்சின்கள் புகுத்தப்படுகின்றன. இதனால் பிரிட்டனது இருப்புப் பாதைகளின் கரித் தேவை குறைந்து வருகிறது. தேசிய நிலக்கரிக் கழகம் தன் முக்கிய வாடிக்கைக்காரரை இழக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதை இது காட்டுகிறது.

சில முக்கிய நகரங்களில் 'புகையற்ற பிராந்தியங்கள்' (smokeless zones) அமைக்கப்பட்டதும் கரித் தேவையை மேலும் குறைத்தது. பிரிட்டிஷ் கரியைவிட ஐரோப்பாவின் கரி, முக்கியமாகப் போலந்தின் கரி, மலிவாக இருந்ததால் ஏற்றுமதிகளும் குறைந்தன. 1958-ல் இரு வாரத்துக்கொருமுறை சனிக்கிழமை வேலை செய்வது நிறுத்தப்பட்டது. அப்போதிருந்து இலாபம் குறைவான சுரங்கங்களை மூடிவிடக் கழகம் நிச்சயித்தது. இம்முறைகள் கடைப்பிடிக்கப்பட்ட பின்னும் விற்காமல் கரி இருப்புக் குவிந்து கிடக்கும் பிரச்சினை தொடர்ந்து இருக்கிறது.

அரசாங்கம் சுரங்கங்களை மேற்கொண்டபின் வேலைச் சூழ்நிலையில் அபிவிருத்தி உண்டாயிற்று. ஊதியம் மேலும் மேலும் உயர்த்தப்பட்டது; சுரங்க வாயிலில் குளியல் வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன; கரி வெட்டவும் பிற வேலைகளுக்கும் எந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

ஆனால், சுரங்கத் தொழிலாளர்கள் எதிர்பார்த்த எல்லா நன்மைகளும் நாட்டுடைமையாக்கியதால் கிட்டிவிட்டதாகச் சொல்ல முடியாது. எங்கோ தூரத்திலிருந்து அதிகாரிகள் நிருவகிப்பது தனியார் நிருவாகத்தைவிட அதிகத் திருப்திகரமாகத் தோன்றவில்லை. தொழிலாளர் தகராறுகளைத் தீர்க்கும் ஏற்பாடுகள் சரியாக நடப்பதில்லை. அதிகாரபூர்வமற்ற வேலை நிறுத்தங்கள் சில தளங்களில்மட்டும் அடிக்கடி நடப்பது இதற்குச் சான்று. தொழிலாளர்கள் பூரண திருப்தி அடையவேண்டுமானால் நிருவாகத்துக்கும் வேலை செய்வோருக்குமுள்ள உறவில் அபிவிருத்தி உண்டாக வேண்டும்.

17. இரும்பு, எஃகு, மற்றும் பொறிகளின் உற்பத்தி

(Iron, Steel and Engineering)

இந் நாட்டில் மிகப் பழைய காலம்தொட்டே இரும்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்திருக்கிறது.[1] ரோமானியர்கள் காலத்திலும் ஆங்கிலோ சாக்சானியர் காலம் முழுவதிலும் இரும்புக் கனி உருக்கி எடுக்கப்பட்டது.[2] டூம்ஸ்டே புத்தகத்தில் நாட்டில் பல பாகங்களில் இரும்புப் பட்டறைகள் இருந்ததுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இடைக்காலத்தில் இத் தொழில் செழித்து இருந்தது. இரும்பும் எஃகும் சங்கிலிக் கவசத்துக்கும், தகட்டுக் கவசத்துக்கும் அதிகமாகப் பயன்பட்டது. பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின் பீரங்கி செய்யவும் பயன்பட்டது.[3] இவ்வுலோகத்தின் தேவைக்கு உள்நாட்டு உற்பத்தி போதாமல் வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டது.

அநேகமாகப் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை இரும்பை உருக்கி எடுக்க மரக்கரி (charcoal) பயன்படுத்தப்

[1] பிராணவாயு, சிலிகான் (silicon), கந்தகம், பிற பொருள்கள் ஆகியவற்றுடன் பல விகிதங்களில் கலந்து தாதுக்களாக இரும்பு இயற்கையில் கிடைக்கிறது. நல்ல கனியில் எழுபது சதவிகிதம் இரும்பு கூட இருக்கும். இருபத்தைந்து சதவிகிதத்துக்குக் குறைவாக இரும்பு உள்ள கனியை உருக்குவது இலாபகரமாக இருக்காது. கரி பக்கத்தில் கிடைப்பது போன்று சாதகமான சூழ்நிலைகள் இருப்பின் முப்பது சதவிகிதக் கனியை உருக்குவதும் இலாபம் தரும்.

[2] பிற கனிப்பொருள்களினின்று இரும்பைத் தனியாகப் பிரிப்பதையே உருக்கி எடுத்தல் (smelting) என்கிறோம். ஊது உலையில் (blast furnace) கனி எரி பொருளுடன் கலக்கப்படுகிறது. உலையின் மிக அதிகமான சூட்டில் இரும்பு உருகி அச்சுக்களில் (moulds) வடிக்கப்படுகிறது. இவ்வாறு வார்ப்பிரும்பு (Pig-iron) கிடைக்கிறது.

[3] கிரெசிப் போரில் (Battle of Crecy) 1346-ல் பீரங்கிகள் உபயோகப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பட்டது. இதற்காக மிக அதிகமாக மரக் கட்டைகள் வெட்டப்பட்டதனுல் நாடு முழுவதும் பரந்திருந்த காடுகள் அழியலாயின. மரத்தை இரும்பு வயலுக்கு எடுத்துப் போவதைவிட இரும்புக் கனியைக் காட்டுக்கு எடுத்துப்போவது சௌகரியமாக இருந்தது. இரும்பு உருக்கி எடுக்கும் தொழில் நாட்டின் பல்வேறு பாகங்களில் நடந்தது. வீல்டு (the Weald)[1], டீன் காடு (the Forest of Dean), ஷ்ராப்ஷயரின் ரீகின் ஜில்லா (Wrekin district of Shropshire) ஆகியவை அவற்றுள் முக்கியமானவை. கப்பல் கட்ட மரம் மிகவும் தேவைப்பட்டது. எனவே, டியூடர் ஆட்சிக் காலத்தில் இரும்பு உற்பத்தி செய்யும் பிராந்தியங்களில் காடு முழுவதும் அழியாமல் தடுக்கப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை முதலில் தீவிரமாக அமல் செய்யப்படாவிடினும், பதினெட்டாம் நூற்ருண்டில் இரும்பு தயாரிக்க மரம் உபயோகிப்பதுபற்றிய கட்டுப்பாடுகள் மிகவும் திட்டமாக்கப்பட்டதன் விளைவாக அடியோடு மறையுமளவுக்கு இத்தொழில் நலிந்தது. 1740-ல் பிரிட்டனின் இரும்பு உற்பத்தி ஆண்டுக்கு 18,000 டன்களைவிடக் குறைவே. எனவே, ஸ்வீடன், ரஷ்யா, அமெரிக்கக் குடியேற்றங்கள், பிற நாடுகள் ஆகியவற்றினின்று இரும்பு இறக்குமதி செய்யப்படலாயிற்று.

வெட்டி எடுக்கப்பட்ட நிலக்கரியை (pit-coal) மரக்கரிக்குப் பதிலாக இரும்புத் தொழிலில் பயன்படுத்துவதுபற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. ஆனுல், முன் அதிகாரத்தில் கூறியபடி நெடுநாட்களுக்கு நிலக்கரி இதற்கேற்றதாகக் கருதப்படவில்லை. ஏனெனில், அதில் இருந்த கந்தகம் இரும்போடு கலந்து அதற்கு உடையும் இயல்பை (brittle) அளித்தது. பதினேழாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் டட் டட்லி (Dud Dudley) என்ற ஒருவர் இக் கஷ்டத்துக்கு ஒரு பரிகாரம் கண்டு பிடித்துவிட்டதாக அறிவித்தார். இம் முயற்சியில் அவர் உண்மையில் வெற்றி அடைந்தாரா என்பது சந்தேகம். அப்படி இருந்தாலும் அந்த இரகசியம் அவரோடு மறைந்தது.

கரியைக் கோக்காக (coke) மாற்றி அக் கோக்கை இரும்பு உருக்கி எடுக்கப் பயன்படுத்தும் முறையைக் கோல்ப்ரூக்டேலைச் (Coalbrookdale) சேர்ந்த ஏப்ரஹாம் டார்பி (Abraham Darby) என்பவர் பதினெட்டாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் கண்டுபிடித்தார் (அல்லது மறுபடி கண்டுபிடித்தார்). அவரது மகன் ஏப்ரஹாம் டார்பி 1730-க்குப் பின் இம் முறையைத் தொடர்ந்து கையாண்டார்;

[1] முன்னர் புனிதர் பாலின் மாதாக் கோவிலைச் (St. Paul's Cathedral) சுற்றியிருந்த இரும்பு வேலி வீல்டில் உருக்கி எடுத்த இரும்பாலானது.

அச்சுக்களில் சேற்றுக்குப் (loam) பதில் மணலைப் பயன்படுத்தினர். டார்பி வம்சத்தினர் இம்முறையை இரகசியமாக வைத்து அதை வேறு ஒருவரும் செய்யவிடாமல் பார்க்க முயன்றனர். அதில் நெடுநாட்கள் வெற்றியும் கண்டனர். ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் இம் முறை எல்லாருக்கும் தெரிந்துவிட்டது. வார்ப்பிரும்பு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தது. பொறி உற்பத்திக்காக நிறைய இரும்பு மலிவாகக் கிடைக்கலாயிற்று. இம் முறையின் முக்கிய விளைவாக இரும்புப் பட்டறைகள் காடுகளுக்கு அருகில் அமையாமல் கரிச் சுரங்கங்களுக்கருகில் அமையலாயின. முக்கியமாக, கிளைட் பள்ளத்தாக்கு, யார்க்ஷயர், தென் வேல்ஸ், கருப்புப் பிரதேசம் (The Black Country) ஆகிய இடங்களில் அவை அமைந்தன. எனினும் மரக்கரி உபயோகம் உடனே நிற்கவில்லை;[1] பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அம் முறையில் இரும்பு தயாராகி வந்தது; ஆனால், அதன் அளவு ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வந்தது.[2]

வார்ப்பிரும்பிலிருந்து தகடாக அடிக்கக் கூடிய தேனிரும்பு (wrought iron) நிறையவும் மலிவாகவும் உற்பத்தி செய்யப்பட்டதற்கு ஹென்றி கார்ட்டு என்பவர் காரணமாக இருந்தார். அவர் 1784-ல் (உலையில் இரும்பைக்) கலக்குவது (puddling), உருளைகள் மூலம் செலுத்தி இரும்பைத் தட்டையாக்குவது (rolling) ஆகிய வினை முறைகளைச் சரியாகக் கண்டுபிடித்தார். உருளைகளை முதலில் உபயோகித்தவர் கார்ட் அல்ல. ஏற்கெனவே பரிசோதனைகளின் விளைவாகத் தோன்றியிருந்த கருத்துகளின் குறைகளை நீக்கித்தான் இம் முறையை அவர் அமைத்தார். வார்ப்பிரும்பைக் கரியோடு கலந்து சூடேற்றி நன்கு கலக்கினால் கசடு முழுவதும் நீங்குகிறது. பின்னர் உருளைகள்மூலம் செலுத்தப்பட்டு உலோகம் தகடாக்கக் கூடிய நிலையை அடைகிறது. இம் முறையில் எந்தப் பருமனளவுக்கும் தகடுகள் செய்ய முடிந்தது. கப்பல்கள், தொட்டிகள் முதலியவற்றைக் கட்ட இவை பயன்பட்டன.

திறம்பட வேலை செய்யுமாறு அனற் காற்றை உலைக்குள் செலுத்த (blast) ஏற்பாடு செய்வது பதினெட்டாம் நூற்றாண்டில் இரும்புத் தொழில் வினைஞர்களது (ironmasters) முக்கிய கஷ்டங்

[1] அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான கருவிகளைச் செய்ய மரக்கரியால் உருக்கிய இரும்பு ஏற்றதென நம்பப்பட்டது; அதனால் அத் தொழில் தொடர்ந்து நடந்துவந்தது.

[2] 1827-ல் சஸெக்ஸில் (Sussex) கடைசி மரக்கரி இரும்பு உலை மூடப்பட்டது.

களில் ஒன்றாக இருந்தது. இதற்காக டார்பி சில பரிசோதனைகளைச் செய்தார். காரன் இரும்புப் பட்டறையில் (Carron Ironworks) 1760-ல் ரூபக் (Roebuck) அபிவிருத்தி செய்யப்பட்ட பிளாஸ்டு (blast) முறை யொன்றைப் பயன்படுத்திவந்தார். 1790-ல் அனற் காற்றைச் செலுத்த நீராவி எந்திரம் உபயோகிக்கப்பட்டது. வேறு அபிவிருத்திகள் பல தொடர்ந்து செய்யப்பட்டன; 1828-ல் நீல்சன் (Neilson) மிகச் சூடான காற்றைச் செலுத்தும் முறையைக் (hot blast) கண்டு பிடித்தார். இதனால் இன்னும் விரைவாக இரும்பை உருக்க முடிந்தது; எரிபொருளும் குறைவாகத் தேவைப்பட்டது. சில ஆண்டுகளுக்குள் 570 ஃபாரன்ஹீட் டிகிரி சூட்டுக்குக் காற்று செலுத்தப்பட்டது. 1860-ல் இவ்வுஷ்ணம் 1,600 ஃபாரன்ஹீட் டிகிரியாக உயர்ந்தது. ஊதுலையினின்று வெளிவந்த கழிவு வாயுக்களையே (waste gases) பயன்படுத்திச் செலுத்தப்பட்ட காற்று சூடாக்கப்பட்டது.[1]

பொது மக்களுக்குத் தம் உற்பத்தியின் புது உபயோகங்களைப் பற்றித் தெரிவிக்கப் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் பல இரும்பு உற்பத்தியாளர்கள் முனைந்தனர். இவர்களுள் பெர்ஷம் (Bersham), பிராஸ்லி (Broseley) ஆகிய இடங்களில் உலைகள் வைத் திருந்த வில்கின்ஸன் (Wilkinson) பிரசித்தமானவர். அவருடைய கருத்துகள் அப்போது விசித்திரமான கற்பனையாக எண்ணப்பட்ட போதும் பின்னர் உண்மையில் கடைப்பிடிக்கப்பட்டன. அவர் இரும்பினால் பாலங்களையும் படகுகளையும் கட்டினார். வீடுகள், கப்பல்கள், சாலைகள் ஆகியவற்றைக்கூட இரும்பால் கட்டலாம் என்று அவர் கூறினார்; சாகும்போது தன்னை இரும்பாலான சவப்பெட்டியில் வைத்துப் புதைக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு இறந்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் ஸ்வீடனிலிருந்தும் ரஷ்யாவிலிருந்தும் இறக்குமதியான இரும்பின்மீது வரி விதிக்கப் பட்டது. பிரிட்டனில் இரும்புத் தொழிலை வளர்க்க அது உதவி செய்தது. இவ் வரிகள் கடைசியில் மிக அதிகமாகி அன்னிய இரும் பையே வாங்க முடியாமற் செய்துவிட்டது. 1825-ல் ஹஸ்கிஸ்ஸன் இவ் வரிகளைக் கணிசமாகக் குறைத்தார். ஆனால், அதற்குள் இங்கி லாந்தில் இத் தொழில் ஸ்திரமாகிவிட்டிருந்ததால் இவ் வரி குறைப்பும்

[1] நவீன இரும்பு, எஃகு ஆலைகளில் உலையினின்றும் வெளிவரும் 'கழிவு' வாயுக்களை (waste gases) பல வினைகளுக்கு வெப்பம் உற்பத்தி செய்வதற்காகக் கூடுமானவரை பயன்படுத்துகின்றனர். இதனால் எரி பொருள் குறைவாகச் செலவாவதோடு உலோகத்தின் அடக்கச் செலவும் குறைகிறது.

(பின்னர் வரி ஒழிப்பும்) இத் தொழிலைப் பாதிக்கவில்லை. இங்கிலாந்திலும் பிற நாடுகளிலும் இருப்புப் பாதைகள் கட்டவும்,[1] மரத்துக்குப் பதில் கப்பல்களை இரும்பு, எஃகால் கட்டவும், நாளுக்கு நாள் அதிகமாகிவரும் எந்திர சாதனங்களையும் பொறிகளையும் அமைக்கவும் இரும்பு எஃகுப் பொருள்களின் தேவை பிரமாதமாக அதிகரித்தது. 1890 வரை இரும்பு, எஃகு உற்பத்தியில் இங்கிலாந்து உலக நாடுகள் அனைத்திலும் முதலிடம் வகித்தது. அவ் வாண்டு அதன் மொத்த உற்பத்தியைவிட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உற்பத்தி அதிகமாயிற்று. 1903–ல் ஜெர்மனியின் உற்பத்தியும் இங்கிலாந்தின் உற்பத்தி அளவை மிஞ்சியது.

ஊதுலையில் (blast furnace) கனியிலிருந்து இரும்பு எடுக்கப்படுகிறது என்று ஏற்கெனவே கூறப்பட்டது ; இதன் விளைவாகக் கிடைக்கும் வார்ப்பிரும்பைக் குபோலா உலையில் (cupola) இட்டு மறுபடி உருக்கி வார்ப்புகளைத் தயாரிக்கின்றனர்; அல்லது கலக்கும் உலையிலிட்டு (puddling furnace) உருக்கி உருளைகளில் செலுத்தித் தட்டக்கூடிய பொருள்களான நீண்ட துண்டுகள் (bars), தண்டவாளங்கள் (rails), தகடுகள் (plates) ஆகியவற்றைச் செய்கின்றனர் ; வார்ப்பிரும்புக்கும் தேனிரும்புக்கும் அவற்றில் உள்ள கரியின் அளவில்தான் வித்தியாசம். தேனிரும்பில் அநேகமாகக் கரியே இல்லை. எனவே, அதைத் தகடாகத் தட்ட முடிகிறது (malleable). கரியின் விகிதம் (இரண்டிலிருந்து ஐந்து சதவிகிதம் வரை) அதிகமாக உள்ள உலோகம் உடைந்துவிடும் தன்மையைப் பெற்றது. அதற்கு வார்ப்பிரும்பு என்று பெயர். ஒன்றுமுதல் ஒன்றரை சதவிகிதம், சுமாரான அளவு கரியோடு இரும்பிலிருந்து எஃகு செய்யப்படுகிறது. இது பல நூற்றாண்டுகளாகத் தெரிந்த விஷயமே ; ஆனால், கரியின் விகிதத்தைக் கட்டுப்படுத்தும் வழிதான் உலைக்காரர்களுக்குத் தெரியாமல் இருந்தது. அதனால் அவர்களின் உற்பத்தியில் குறைகள் இருந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எஃகு உற்பத்தி விஷயத்தில் மிக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. 1855-6-ல் ஹென்ரி பெஸிமர் (Henry Bessemer) கலக்கும் முறையைப் பயன்படுத்தாமல் தகடாக்கக்கூடிய இரும்பு எஃகை உற்பத்தி செய்யும் முறையைக் கண்டு பிடித்தார். உருகிய வார்ப்பிரும்பிலிருந்து அசுத்தங்களை எரித்து அகற்ற மிகச் சக்திவாய்ந்த அனல் காற்று உலைக்குள் செலுத்தப்பட்டது. இதனால் கரி, ஸிலிகான், மாங்கனீஸ் ஆகியவை சட்டெனப் பிராண

[1] பல வெளிநாட்டு இருப்புப் பாதைகளும், பல குடியேற்ற நாடுகளின் இருப்புப் பாதைகளும் பிரிட்டனில் தயாரான பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்டன.

வாயுவுடன் கலந்து எரிந்தன. இதனால் விளைந்த தூய இரும்போடு ஒரு குறிப்பிட்ட அளவு ஸ்பீகலிஸன் (spiegeleisen) கலக்கப்பட்டது.[1] ஸ்பீகலிஸன் என்பது இரும்பு, மாங்கனீஸ், கரி (carbon) மூன்றும் கொண்ட கலப்பு உலோகமாகும். இதன் முடிவில் தோன்றிய எஃகில் எத்தனை சதவிகிதம் கரி இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. உலோகத்தின் உபயோகத்துக்குத் தக்கவாறு இவ் விகிதத்தை மாற்ற முடிந்தது.[2]

தட்டக்கூடிய தேனிரும்பைவிட பெஸிமர் எஃகு மிகவும் மேலானது. தேனிரும்பைவிட அதன் தரம் ஒரே மாதிரியிருந்தது; அதன் உழைப்பு நிச்சயமானது; அது திடமானது; மலிவானது; விரைவில் பெரிய அளவில் அதை உற்பத்தி செய்ய முடிந்தது. நாளடைவில் தண்டவாளங்கள், விட்டங்கள் (girders), தகடுகள் போன்ற பல பொருள்கள் தேனிரும்புக்குப் பதில் எஃகினால் செய்யப்பட்டன. எனவே, பெஸிமர் எஃகின் உற்பத்தி பெருகி தேனிரும்பின் உற்பத்தி குறைந்தது. இந்த வினை முறை அபிவிருத்தியின் விளைவாக இரும்பு ஆலைகளை எஃகு ஆலைகளாக மாற்றியதில் பல மிலியன் பவுன் மதிப்புள்ள பழைய முதலீடுகள் வீணாயின.

பெஸிமர் தம் மாற்றுலையின் (converter) உட்சுவராக (lining) அமிலப் பொருளை வைத்திருந்தார். இரும்பிலிருந்து பாஸ்பரஸை (phosphorus) இது நீக்கவில்லை. எனவே, அமில எஃகு (acid steel) என்றழைக்கப்பட்ட இதை உற்பத்தி செய்ய பாஸ்பரஸ் கலவாத கனிகள் (non-phosphoric ores) தேவைப்பட்டன.[3] கம்பர்லந்து (Cumberland), வட லங்காஷயர், டீன் காடு (Forest of Dean) இவ்விடங்களில் கிடைத்த ஹேமடைட் (hematite) கனிகளைத் தவிர பிரிட்டனில் கிடைத்த வேறு இரும்புக் கனிகளில் பாஸ்பரஸ் நிறைய இருந்ததால் ஸ்வீடனிலிருந்தும் ஸ்பெயினிலிருந்தும் பாஸ்பரஸ் கலவாத கனியை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று.[4]

[1] பின்னர் ஸ்பீகலிஸனுக்குப் பதில் பெர்ரோ-மாங்கனீஸ் (ferro-manganese) பல இடங்களில் உபயோகிக்கப்பட்டது.

[2] பின் ஆண்டுகளில் எஃகோடு வேறு உலோகங்கள் சிறிய அளவில் கலக்கப்பட்டன. டைடேனியம் (titanium), வெனேடியம் (vanadium) ஆகியவை உலைக்குழம்பில் பிராணவாயு, நைட்ரஜன் ஆகியவற்றுடன் கலந்து இரும்பில் காற்றுக் குமிழிகள் வராது தடுக்கும். ஸிலிகானும் (silicon) அலுமினியமும் பிராணவாயுவுடன் கலந்து மிச்சமிருக்கக்கூடிய கரி மோனக்ஸைடைக் கரியாக மாற்றும்.

[3] ·03 சத விகிதத்துக்கும் குறைவாகப் பாஸ்பரஸ் கொண்டது பாஸ்பரஸ் கலவாத கனியாகும்.

[4] பாஸ்பரஸ் கலவாத கனிகள் ஸ்பெயின், ஸ்வீடன் நாடுகளிலும் வட அமெரிக்காவில் சுபீரியர் ஏரிக்கு (Lake Superior) அருகிலும் கிடைக்கிறது. கிடைக்கும் கனிகளில் பாஸ்பரஸ் கலந்தவையே அதிகம். அவை பிரிட்டிஷ்

இங்கிலாந்தில் கிடைக்கும் பாஸ்பரஸ் கலந்த கனிகளிலிருந்து எஃகு செய்ய அப் பாஸ்பரஸை நீக்கும் ஒரு முறையைக் கண்டுபிடிக்கப் பல ஆண்டுகளாக உலோக இயல் நிபுணர்கள் முயற்சி செய்து வந்தனர். உட்சுவரில் காரப் பொருள்களை (basic meterials-சுண்ணும்பு, மக்னீஷியா மற்றும் களிமண்) அமைத்த மாற்றுலையைப் பயன்படுத்த ஸ்னீலஸ் (Snelus) முயன்ருர். அம்முயற்சி வெற்றிபெறவில்லை. உலோக இயல்பற்றி நடைமுறை விஷயங்களை அறியாத, பொழுதுபோக்குக்கு ரசாயனத்தில் ஈடுபட்ட சிட்னி கில்கிரிஸ்டு தாமஸ் (Sidney Gilchrist Thomas) என்பவர் தம் உறவினரான (cousin) பெர்சி கில்கிரிஸ்டு (Percy Gilchrist) என்ற உலோக இயல் நிபுணரோடு சேர்ந்து இப் பிரச்சினைக்கு ஒரு வழி கண்டுபிடித்தார். மாற்றுலையின் உட்சுவரில் மற்ருெரு காரப் பொருளான (basic substance) டாலமைட்டும் (dolomite) களிமண்ணும் அமைத்தனர். 1878-ல் இம் முறையின் வெற்றியைக் காட்ட வேண்டிய அளவு பரிசோதனை வேலை நடந்துவிட்டிருந்தது. லோரேன், லக்ஸம்பர்கில் கிடைத்த மினெட் கனிகளில் (minette ores) நிறைய பாஸ்பரஸ் இருந்தது. எனவே, அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. ஆனுல், கில்கிரிஸ்டு - தாமஸ் முறை தோன்றியபின் இக் கனிகளைக் கொண்டு ஜெர்மனியில் பெரிய எஃகுத் தொழில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. கார எஃகு (basic steel) செய்யப் பிற நாடுகளிலும் பாஸ்பரஸ் கலந்த கனிகள் பயன்பட்டன. எஃகு தயாரிக்க நிறைய கனி கிடைக்கவே எஃகின் விலை விழுந்து, அதன் உபயோகம் பெரிய அளவுக்கு பரப்பப்பெற்றது.[1]

எஃகு செய்ய மற்ருெரு முறையை 1867-ல் ஸர் வில்லியம் சீமன்ஸ் (Sir William Siemens) கண்டுபிடித்தார். சிலிகாச் செங்கல் உட்சுவராய் அமைந்த ஆழங் குறைந்த (shallow) உலையில் கனியோடு வார்ப்பிரும்பை உருக்கி அவர் அமில எஃகு தயாரித்தார். இதே வழியில் வேறு பரிசோதனைகள் ஃபிரான்சில் சிரீலில் (Sireuil) பியரி மார்ட்டினுல் (Pierre Martin) செய்யப்பட்டன. கனிக்குப் பதில் வீணுன இரும்பு எஃகுத் துண்டுகளை (scrap) அவர் உப

தீவுகளில் கிளீவ்லாந்து (Cleveland) ஜில்லா, லிங்கன்ஷயர், ரட்லாந்து (Rutland), வட, தென் வேல்ஸ், ஸ்டாஃபர்ட்ஷயர் (Staffordshire), நார்த்தாம்டன்ஷயர் (Northamptonshire) உட்படப் பல இடங்களில் கிடைக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தில் லொரேன் (Lorraine), லக்சம்பர்க் (Luxemburg), ஸ்டிரியா (Styria), ரஷ்யா, ஸ்பெயின், ஸ்காண்டினேவியா (Scandinavia) பகுதிகளில் கிடைக்கிறது.

[1] கில்கிரிஸ்டு-தாமஸ் முறையின் துணை உற்பத்தியான காரக் கசடு (basic slag) பொடி செய்யப்பட்டு நல்ல எருவாக உபயோகிக்கப்படுகிறது

யோகித்தார். உலையில் போடப்பட்ட பொருள்களின் அளவை மாற்றி எஃகின் கரி விகிதத்தை அவர் கட்டுப்படுத்தினார். கில் கிரிஸ்டு-தாமஸ் புத்தமைப்புகள் பெசிமர் முறைக்கு மட்டுமன்றி சீமன்ஸ்—மார்டின் முறைக்கும் உபயோகிக்கப்பட்டன. திறந்த உலையின் (open hearth furnace) உட்சுவரில் காரப் பொருள்களை அமைத்துக் கார எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

பெசிமர் முறைக்குப்பதில் திறந்த உலை முறை அதிகமாகப் பயன் படுவதாகத் தோன்றுகிறது. பெசிமர் முறைப்படித் தொடர்ந்து லாபகரமாக எஃகு தயார் செய்ய முடியும் என்றால் புது முறைக்கு மாற்றுவதற்காகப் பெரும் செலவு செய்ய உற்பத்தியாளர்கள் தயங்குவார்கள். ஆனால், புது ஆலைகளில் சீமன்ஸ்—மார்டின் திறந்த உலைமுறைதான் பயன்படுத்தப்படுகிறது; எனவே, மாற்றுலை காலங் கடந்த சாதனமாக மாறும் நாள் வெகு தூரத்திலில்லை. இனி உற் பத்தியாகும் எஃகு பெரும்பாலும் கார எஃகாகவே இருக்கும் என் பதிலும் ஐயமில்லை. ஏனெனில், பாஸ்பரஸ் கலந்த கனிதான் மலி வாகவும் நிறையவும் கிடைக்கிறது. தவிர, இம் முறையில் கிடைக் கும் துணைப் பொருள்களின் (by products) மதிப்பும் அதிகம். பல ஆண்டுகளாக உலகெங்கும் உற்பத்தியாகும் அமில எஃகின் அளவு அதிகரிக்கவில்லை; ஆனால், கார எஃகின் அளவோ பெருகி வருகிறது.

1878-லேயே சர் வில்லியம் சீமன்ஸ் இரும்பை உருக்கி எடுக்க மின்சார உலை ஒன்றை அமைத்திருந்தார். பெரிய அளவில் இல்லா விடினும் பல இடங்களில் எஃகு உற்பத்திக்கு இம் மின்சார உலை (electric furnace) பயன்பட்டு வருகிறது. இதில் மிக அதிகமான சூடு உண்டாக்க முடியும்; இதில் 3,500 செண்டிகிரேடு டிகிரி வரை வெப்பம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் மிக மலிவாகக் கிடைத்தால்தான் ஊதுலையோடு இது போட்டியிட முடியும். எனினும், குறைந்த அளவில் மிக உயர்ந்த தரமுடைய எஃகு செய்ய இது மிகவும் பயனாகும்.

எஃகு என்றைக்கும் இதே அளவு பிரசித்தமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. தனி எஃகைவிட (pure steel) மேலான இயல்புடைய பல உலோகக் கலவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எஃகுடன் நிக்கல், குரோமியம் (chromium), மாங்கனீஸ், டங்ஸ் டன் (tungsten), மாலிப்டீனம் (Molybdenum), வெனேடியம் (vanadium) போன்றவற்றைச் சிறிது கலந்தால் அது மேலும்

உறுதியாகிறது. வெட்டுவதற்குக் கூரான முனையுடைய எந்திரக் கருவிகள் (machine tools) செய்ய இது பயன்படுகிறது. எஃகுடன் குரோமியத்தைக் கலந்தால் துருப்பிடிக்காத உலோகம் கிடைக்கிறது. எஃகும் அலுமினியமும் கலந்த உலோகம் எடை குறைவாக, ஆனால், மிக உறுதியாக இருக்கும். அதை விமானங்கள் கட்ட விசேஷமாக உபயோகிக்கிறார்கள். உலோக இயலில் இன்னும் பலப்பல புத்தமைப்புகள் தோன்றிக்கொண்டே யிருக்கின்றன.

தண்ணீர் இறைக்க நீராவியால் இயங்கிய ஒருவகை எந்திரத்தைத் (pump) தாமஸ் சவேரி (Thomas Savery) 1698-ல் கண்டுபிடித்தார். ஆனால், அது அதிகம் பயன்படுத்தப்படவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தாமஸ் நியூகமனின் (Thomas Newcomen) பொறி கண்டுபிடிக்கப்பட்டது. அவரது முதல் பேடன்டு (உற்பத்தி உரிமைப் பத்திரம்—patent) 1705-ல் பெறப்பட்டது. அப் பொறியில் பல குறைகள் இருந்தன. அதன் திறமை குறைவு; அது நிறைய எரிபொருளை வீணாக்கியது; அது சீராக வேலை செய்யும் என்ற நம்பிக்கையில்லை ; அதை இயக்குவதும் ஆபத்தாக இருந்தது. இருந்தபோதிலும் நியூகமனின் பொறிகள் பல இடங்களில் பல வேலைகளுக்குப் பயன்பட்டன. முக்கியமாகச் சுரங்கங்களினின்று நீரை இறைக்கப் பயன்பட்டன. இந்த எந்திரத்தில் ஜான் ஸ்மீட்டனும் (John Smeaton), ஜேம்ஸ் வாட்டும் (James Watt) அபிவிருத்திகள் செய்தனர்.

1782-ல் ஒரு புது முறையில் இயங்கிய பொறி ஒன்றுக்கு வாட்டு பேடன்டு பெற்றார். சுற்றுகின்ற முறை (Rotary) அல்லது கிரகசார முறைப்படி (planetary motion) இப்பொறி இயங்கியது. நியூகமன் பொறியைவிடக் குறைவாக எரிபொருளை இது உபயோகித்தது; இதன் செயல் திறனும் அதிகம். இதன் வெற்றியில் வாட்டின் கூட்டாளியான மாத்யூ பவுல்டனுக்கும்[1] (Matthew Boulton) ஒரு பங்கு உண்டு. அவர்தான் பொறியின் சிலிண்டர் உருளைகளைத் (cylinders) துல்லியமாகத் துளையிட்டவர்.[2] வாட்டின் பொறி நீரிறைக்கவும் எந்திரங்களை ஓட்டவும் பயன்பட்டது.

[1] மாத்தியூ பவுல்டன், ஜேம்ஸ்வாட்டு இருவருடைய கூட்டமைப்பு partnership) நன்கு நடந்தது. வாட்டின் புத்தமைப்புத் திறனும் தொழிலாளர்களைத் துல்லியமாக வேலை செய்யுமாறு பவுல்டன் பயிற்சி அளித்ததும் ஒன்று சேர்ந்தன. பவுல்டனுக்கு நல்ல வணிகத் திறன் இருந்தது. பர்மிங்ஹாமில் (Birmingham) சோஹோவில் (Soho) தொழிற்சாலையை அமைத்து அதை அவர் நன்கு நடத்தினார்.

[2] இதைச் செய்த பெருமை வில்கின்ஸனைச் (Wilkinson) சாரும் என்று கூறுவோருமுள்ளனர்.

ஆனால், எல்லா இடங்களிலும் அது உடனே பயன்படுத்தப்படவில்லை. ஏனெனில், பொறியமைப்பை பவுல்டன்–வாட்டு நிறுவனம் மட்டுமே செய்தது.[1] அதற்கான (பேடன்டு) உற்பத்தி முற்றுரிமையை அது பெற்றிருந்தது. ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைதான் பொறிகளைச் செய்ய அதனால் முடிந்தது.

நீராவிப் பொறியின் (steam engine) முக்கியத்துவத்தை மிகைபடக் கூற முடியாது. திறம்படவும், குறைந்த செலவிலும், தடங்கலின்றியும் அதனால் வேலை செய்ய முடியும். அதன் வெற்றிக்கு வெளிக் காரணங்கள் பல சாதகமாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. நீர்ச் சக்கரமும், காற்றுடி எந்திரமும் கூட விசையை உற்பத்தி செய்கின்றன; ஆனால், நீர் உறைந்தாலோ வற்றிப் போனாலோ முன்னது உதவாது; காற்று நின்றால் பின்னது உதவாது; ஆனால், நீராவி எந்திரம் களைக்காது உழைக்கும். ஓய்வளிக்க நிறுத்த வேண்டிய அவசியமின்றி எத்தனை நேரம் வேண்டுமாயினும் அதை ஓட்டலாம். அது உண்டாக்கிய விசையைப் பல வகைகளில் பயன்படுத்தலாம். சுரங்கங்களிலிருந்து நீரிறைக்கவும், பொருள்களை மேலே தூக்கும் எந்திரங்களை (cranes) இயக்கவும், எந்திர சாதனங்களை ஓட்டவும், சாலையிலும் இருப்புப் பாதைகளிலும் வண்டியிழுக்கவும், கப்பல்களை ஓட்டவும் நீராவியைப் பயன்படுத்தலாம்.

முதலில் வேலைத்தரம் குறைவாக இருந்ததால் எஞ்சின்களும் எந்திர சாதனங்களும் (machinery) சரியாக அமைக்கப்படவில்லை. முதல் எந்திரத் தொழிலாளர்கள் (mechanics) கொல்லர், சக்கரம் வடிப்போர், அல்லது தச்சராகப் பயிற்சி பெற்றவர்கள். ஓரளவுக்குக் கருவிகளை உபயோகிக்கத் தெரிந்த எவரும் பொறி செய்வதில் ஈடுபட முடிந்தது. ஆனால், நாளடைவில் தொழில் நுட்பத் திறமை மிகவும் பெற்ற பொறியாளர்கள் (engineers) பலர் தோன்றலாயினர். பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு தொழிற்சாலையில் ஓர் எந்திரம் பொருத்தப்பட்டால் அதை ஓடவைக்க முழுதும் பிரித்துப் பழுது பார்த்துச் சேர்க்க வேண்டியிருக்கும்; அல்லது மறைகளைக் கெட்டியாகத் திருகவோ தளர்த்தவோ வேண்டியிருக்கும்; மூட்டுகளில் பஞ்சடைக்க வேண்டியிருக்கும்; அல்லது சில பாகங்களை அராவ வேண்டியிருக்கும்; அப்படியும் அது நின்றுவிடுவது இயல்பே.

[1] உரிமம் பெற்று பொறிகளையும் அவற்றின் பாகங்களையும் தயாரித்த வேறு மூன்று நான்கு நிறுவனங்களும் இம் முற்றுரிமையில் பங்கு பெற்றன. 1800-ல் பிரிட்டனில் எண்பத்து நான்கு பவுல்டன்-வாட்டுப் பொறிகள் உபயோகத்திலிருந்தன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இரண்டாவது கால் பகுதியில் லேத்துகள் (lathes), நீராவிச் சுத்திகள் (steam hammers), இழைக்கும் எந்திரங்கள் (planning machines), துளையிடும் எந்திரங்கள் (punching machines) போன்ற எந்திர சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின் பொறிகளின் பாகங்கள் ஒன்ருேடொன்று உடனடியாகப் பொருந்துமாறு மிகத் துல்லியமாகச் செய்ய முடிந்தது. எனவே, சேர்த்து அமைக்கப்பட்டஉடனே எந்திரம் தடங்கலின்றி வேலை செய்ய ஆரம்பிக்கும். உதிரி உறுப்புகளும் (spare parts) அதே துல்லியத்துடன் செய்யப்பட்டன. ஆகையால், எந்திரத்தின் ஓர் உறுப்புப் பழுதுபட்டால் அதை மட்டும் விரைவில் மாற்றிவிடலாம்; எந்திரம் பல நாட்கள் வேலை செய்யாது நிற்க வேண்டியதில்லை.

பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் இருபதாம் நூற்றுண்டின் முதற் பகுதியிலும் கிரேட் பிரிட்டனில் தொழிற்சாலைகளில் விசைக்கு முக்கியமாக நீராவிப் பொறிகள்தான் பயன்பட்டன. ஆனல், என்றும் இம் முக்கியத்துவம் நீடிக்கும் என்று சொல்லமுடியாது. இந் நூற்றுண்டில் நீராவிக்குப் பதில் மின்சாரத்தைப் பயன்படுத்துவது ஆண்டு தோறும் அதிகமாகி வருகிறது. புதுத் தொழிற்சாலைகளில் பெரும்பாலும் மின்சாரத்தால் இயங்கும் எந்திரங்களே பொருத்தப்படுகின்றன. பல பழைய ஆலைகளும் மின்சார விசைக்கு மாற்றப்படுகின்றன. கூடிய சீக்கிரம் பெரிய அளவில் அணு மின்சாரம் உற்பத்தியாகும்போது நீராவி எஞ்சின் முற்றிலும் பயனற்றுப்போய் தொல்பொருள் காட்சிசாலையில் ருசிகரமான ஓர் அம்சமாக இடம்பெற்றுவிடும்.

18. சாலைகளும் கால்வாய்களும்

(Roads and Canals)

பல நூற்றுண்டுகளாக இங்கிலாந்தின் சாலைகள் மிகவும் மோசமாக இருந்தன. இடைக்காலத்தில் மக்கள் பயணம் செய்தது மிகக் குறைவாக இல்லை; ஆனால், எல்லா இடங்களிலும் நல்ல சாலைகள் அமைக்க வேண்டிய அளவுக்கு அதிகமாகவும் இல்லை. சாலை அமைப்பைப்பற்றித் தேசீய அரசாங்கமோ தல அதிகாரிகளோ தீவிரமாகக் கவனம் செலுத்தவில்லை. சாலைப் பராமரிப்பைத் திருச்சபை ஊக்குவித்தது. சில சமயம் மடங்கள் சாலைகளைப் பழுதுபார்த்தன. 1555 வரை சாலைகளைச் செம்மைப்படுத்த அரசாங்கம் முயற்சி ஏதும் செய்யவில்லை. அவ்வாண்டு ஒவ்வொரு பாரிஷிலும் உள்ள சாலைகளை அப் பாரிஷ்காரர்கள் நியமித்த இரு சர்வேயர்கள் (surveyors) பழுது பார்க்க வேண்டுமென்று அச் சட்டம் கூறியது. ஐம்பது பவுன் மதிப்புள்ள நிலம் உடைய ஒவ்வொருவரும் அதற்கான சாமான்களையும், கருவிகளையும், ஆண்டுக்கு ஆறு நாட்கள் உழைப்பையும் தரவேண்டியிருந்தது. இச் சட்டம் தீவிரமாகச் செயலாற்றப்படவில்லை. பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில், இந் நாட்டுச் சாலைகள் இடைக் காலத்தில் இருந்ததைவிட நல்ல நிலையை அடையவில்லை. அபிவிருத்தி இருந்த இடங்களிலும் அவ்வபிவிருத்தி மிகக் குறைவே.

பதினெட்டாம் நூற்றுண்டுக்குமுன் நாடு முழுதும் நல்ல சாலைகளை அமைப்பது வினைமுறையில் சாத்தியமாக இல்லை. அப்போது அதற்கேற்ற பொருளாதார வசதியுமில்லை.[1] சாலை அமைப்பின்

[1] இவ்வாதத்தைக் கவனித்தால் ரோமானியப் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் நல்ல சாலைகள் அமைந்தது வியக்கத்தக்கதாகத் தோன்றும். ஆனால், ரோமானியர்கள் அனுபவத்தினால் அக் கலையில் தேர்ச்சிபெற்றனர். அவர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினையும் இல்லை. புதிதாக வெற்றி கொண்ட இடங்களில் அடிமைகளது உழைப்புப் பயன்படுத்தப்பட்டது. பொருள்களும் நிலமும் அவற்றை உடையவர்களிடமிருந்து நஷ்ட ஈடின்றிக் கட்டாயப்படுத்திப் பெறப்பட்டன.

வினைநுட்பம் அப்போது வளர்ந்திருக்கவில்லை. அதை வேண்டுமாயினும் அனுபவத்தினுல் வளர்த்திருக்கலாம். ஆனுல், மக்கள் தொகையும் மக்களது செல்வமும் குறைவாக இருந்த அக் காலத்தில் அதற்கான செலவை மேற்கொண்டிருக்க முடியாது. நாடு முழுவதையும் இணைக்குமாறு ஒரு சாலை அமைப்பை, அதற்கான தேவை தெளிவாக உணரப்பட்டு, அதற்கான வசதியும் ஏற்பட்ட பின்தான் ஏற்படுத்த முடிந்தது.

பின்னுல் விவரிக்கப்படும் முன்னேற்றம் தோன்றும் வரை, முக்கிய நகரங்களை இணைத்த பெருஞ்சாலைகள்கூட மழைக் காலத்தில் சேருகி வண்டிகள் செல்ல முடியாத நிலையில் இருந்தன. சாலைகளைப் பழுதுபார்த்தபோது தவருன கருத்தின் அடிப்படையில் மிகச் சாய்வான குவிவோடு சாலைகள் அமைக்கப்பட்டன. சாலையைச் செப்பனிட்டவர்கள் மழைநீர் சாலையின் இருபுறமும் வழிந்தோடுவதற்குச் சாய்வு அதிகமாக இருப்பது நல்லது எனக் கருதினர் போலும். ஆனுல், சாலை மத்தியிலேயே எல்லா வண்டிகளும் போக வேண்டியிருந்ததால் பிரயாணி வண்டிகள், பார வண்டிகள் இவையனைத்தின் சக்கரங்களும் சாலையின் ஒரே பகுதியில் ஓடின. அதனுல் பள்ளங்கள் ஏற்பட்டு அவற்றின் ஆழம் அதிகரித்தது. மறுபடி அது சேருயிற்று. எனவே, வண்டிகளில் போவதைவிடக் குதிரைகளில் சவாரி செய்வது ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்குப் போக எளிதான வழியாக இருந்தது. சாமான்களைப் பாரவண்டியில் ஏற்றிச் செல்வதைவிட, முடியுமானுல் படகுகளில் அனுப்புவது மேலாக இருந்தது; இல்லாவிட்டால் அவை குதிரைகள் முதுகிலும், கோவேறு கழுதைகள் முதுகிலும் ஏற்றி அனுப்பப்பட்டன. உள்நாட்டுப் போக்குவரவுக்குப் படகுகள் செல்லக்கூடிய ஆறுகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

பதினெட்டாம் நூற்ருண்டின் வாழ்க்கை முறைக்கு மிக இயல்பான வழியில் சாலை அபிவிருத்தி தோன்றியது. இன்று சாலைகளைப் பராமரிப்பது அரசாங்கத்தின் கடமையன்று என யாரும் கூற மாட்டார்கள்; ஆனுல், அரசாங்கத்தின் பணிகளை அதிகரிக்கலாகாது, பொருளாதார விவகாரங்களில் அரசாங்கம் தலையிடலாகாது என்னும் கொள்கைகள் மிகவும் பரவியிருந்த அக்காலத்தில், சாலைகளைத் தனியார் நிறுவனங்களே பராமரிக்க வேண்டுமெனக் கருதப்பட்டது. ஆதலின், சுங்கப்பாதை டிரஸ்டுகள் (Turnpike Trusts) தோன்றின. பணக்காரன் ஒருவனே அல்லது பணக்காரர் பலரின் ஒரு தொகுதியோ சாலையின் ஒரு பகுதியை நிருவகிக்கும் உரிமையைப்

பெற்றனர். அதைச் செப்பனிட்டு ஏறக்குறைய திருப்திகரமாக அவர்கள் வைத்திருந்தனர். அப்பகுதியின் இரு முனைகளிலும் சாலைக் கதவுகள் அமைக்கப்பட்டன. அச் சாலையைப் பயன்படுத்தும் மனிதர்கள், கால்நடைகள், மற்றும் வண்டிகளுக்காகச் சுங்கம் வசூலிக்கப்பட்டது. இவ்வாறு பெற்ற தொகையில் சாலையைப் பராமரிக்கச் செலவழித்தது போக மிஞ்சியது சுங்கப்பாதை டிரஸ்டின் இலாபமாகும். சாலையைப் பராமரிப்பதற்கு அதை உபயோகிப்பவர் பணம் தரவேண்டுமேயன்றிப் பொதுமக்கள் அல்ல 'என்ற கொள்கை இதனுல் ஏற்பட்டது.

1663-ல் முதல் சுங்கப்பாதைச் சட்டம் இரண்டாம் சார்லஸின் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனுல், இரண்டாம் ஜார்ஜின் காலத்தில்தான் சுங்கப்பாதைகள் நாடெங்கும் தோன்றின. 1745-ல் இளைய புரட்டன் (Young Pretender) டார்பிக்குப் படையெடுத்ததை, போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லாமையால் அரசாங்கத்தால் தடுக்க முடியவில்லை. ஜேக்கோபியர் கலகத்தினுல் (Jacobite revolt) ஏற்பட்ட அச்சம் சாலைப்பராமரிப்பின் அவசியத்தை நாட்டு மக்களது கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கக்கூடும். இந் நிகழ்ச்சி நடந்த பின் சுங்கப்பாதைச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. 1760-லிருந்து 1774 வரை இத்தகைய சட்டங்கள் நானூற்று ஐம்பது நிறைவேற்றப் பட்டன. இம் முறையில் நாட்டுக்கு நல்ல பெருஞ்சாலைகள் கிடைத்தன. எனினும், பத்தொன்பதாம் நூற்ருண்டின் முதல் சில ஆண்டுகள் வரையில்கூட சாலைகளின் நிலைபற்றிப் புகார்கள் வந்து கொண்டே இருந்தன. ஓரளவுக்கு இக்குற்றச்சாட்டுகள் கிளைப் பாதைகளையும், நாட்டுப்புறச் சிறுவழிகளையும் பற்றியன. இவற்றில் போக்குவரத்து மிகக் குறைவு. சுங்கப்பாதை டிரஸ்டுகளுக்கு இவற்றில் எவ்வித அக்கறையும் இல்லை. அக் காலத்தின் பிரசித்த மான யாத்ரிகரான ஆர்தர் யங் (Arthur Young) சில சுங்கப்பாதை களையும் குறைகூறியிருக்கிருர். அவைகளில் சிலவற்றில் நான்கடி ஆழத்துக்குப் பள்ளங்கள் இருந்ததாக அவர் கூறியிருக்கிருர். எனினும், முக்கிய சாலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டதன் விளைவாகப் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பெரிய நகரங்களுக் கிடையில் கோச்சு வண்டிகள் ஒழுங்காகப் போய்வந்தன.

பதினெட்டாம் நூற்ருண்டின் முடிவிலும் பத்தொன்பதாவதின் தொடக்கத்திலும் சாலை அமைப்பதில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. [நேஸ்பரோவின் குருட்டு ஜாக் (Blind Jack of Knaresborough) என்றழைக்கப்பட்ட] ஜான் மெட்காலஃப் (John

Metcalf) வட இங்கிலாந்தில் பல மைல்கள் நீளமுள்ள சாலைகளை அமைத்தார்; நூற்றுக்கணக்கான மைல்கள் நீளத்துக்குச் சாலைகளும், பாலங்களும், கால்வாய்களும், துறைமுகங்களும் வடஇங்கிலாந்திலும் ஸ்காட்லந்திலும் தாமஸ் டெல்ஃபர்டினுல் (Thomas Telford) கட்டப் பட்டன. நல்ல அடித்தளத்தின்மீது சிறு கற்களைப் பரப்பி அவற்றின்மீது உருளைகளை ஓட்டி அழுத்திச் சாலை அமைக்கும் முறையை ஜான் மகாடம் (John McAdam) புகுத்தினர். 'மகடமைஸ்' செய்யப்பட்ட சாலைகளின் (macadamised roads) குவிவு (camber) அதிகச் சாய்வாக இல்லை. ஆதலின் சாலை முழுவதிலும் வண்டிகள் பரவலாக ஓட முடிந்தது; எனவே, சாலையின் தேய்வு நடுப்பகுதியில் மட்டுமின்றி முழுப் பாதையிலும் ஏற்பட்டது. இம் முறையில் சாலை அமைப்பது சமீப காலம்வரை கையாளப்பட்டு வந்தது. இன்றும் பல கிளைப் பாதைகள் மகாடம் முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், சாலைத் தளத்தைப் பிணைக்கத் தார் உபயோகிக்கப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதல் பாதியில் சுங்கப்பாதை டிரஸ்டுகளை இணைக்கும் இயக்கம் ஒன்று தோன்றியது. நிறையப் பணவசதி பெற்ற பெரிய ஸ்தாபனங்கள் மேலும் தேர்ச்சி பெற்ற சர்வேயர்களை வேலைக்கு வைத்து மேலும் திறமையுடன் சாலைகளை அமைக்க முடிந்தது. ஆனால், அவற்றுக்குக் கஷ்டகாலம் விரைவில் வரவிருந்தது. 'இருப்புப்பாதைக் கேட்டை' (the calamity of the railways) சுங்கப்பாதைகள் சமாளிக்க வேண்டியிருந்தது. சாலைகளின் போக்குவரத்துக் குறைந்தது. டிரஸ்டுகளின் வருமானம் குறையலாயிற்று. ஒன்றன்பின் ஒன்ருக அவை மறைந்தன. சாலைப் பராமரிப்பு தல அதிகாரிகளின் பொறுப்பாயிற்று.

இருபதாம் நூற்றுண்டில் மோட்டார் போக்குவரவின் வளர்ச்சியினுல் சாலைகளுக்கு ஒரு புது முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. மோட்டார் போக்குவரவு அளவிலும் எடையிலும் வேகத்திலும் மிகவும் அதிகரித்துள்ளதால் பழைய முறைகளில் சாலை அமைப்பது இன்றைய சூழ்நிலைக்குச் சரிவராது. எனவே, சாலை அமைப்பிலும் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறைவாகத் தேயும் சாலைத் தளத்தை அமைக்க வேண்டிப் பல புதுப் பொருள்கள் பயன் படுத்தப்படுகின்றன; நல்ல அடித்தளத்தின்மீது காங்கிரீட் சாலை அமைப்பது நன்கு பலன்தருகிறது.

இருபதாம் நூற்றுண்டில் மோட்டார் போக்குவரத்தின் அளவு அதிகரித்துள்ளதைக் கண்டு பிரிட்டனுடைய சாலைகளில் பொது

மக்கள் அக்கறை கொள்ள ஆரம்பித்துள்ளனர். பழைய சாலைகளை அகலப்படுத்தியும், வளைவுகளை நீட்டியும், புதுத் தளம் வேய்ந்தும், புதுச் சாலைகளைக் கட்டியும் நாட்டுச் சாலைகளை அபிவிருத்தி செய்யப் பொதுஜன ஆதரவு நிறைய உள்ளது. இக் குறிக்கோளை அடைவதில் பல வினைமுறைப் பிரச்சினைகளும் நிதிப் பிரச்சினையும் உள்ளன. இவற்றைத் தீர்ப்பது எளிதல்ல. போக்குவரத்து நெரிசல் பெரும்பாலும் பெருஞ்சாலைகளில் ஏற்படவில்லை; நகரங்களில் குறுகிய தெருக்களில்தான் ஏற்படுகிறது. அவற்றை அகலப் படுத்த ஏராளமான பணம் செலவழிக்க வேண்டியிருக்கும். 'வண்டிகளை இங்கே நிறுத்தக்கூடாது' (no parking), ஒருவழிப் பாதைகள் (one way streets), 'சுற்று வட்டம்' (roundabouts), தானே இயங்கும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்குகள், ஊருக்குள் வராது நேரே செல்லும் வண்டிகளுக்கு ஊருக்கு வெளியே இணைப்புப் பாதைகள் (by-pass roads) போன்ற சாதனங்களால் ஓரளவுதான் நெரிசலைத் தவிர்க்கமுடிகிறது. நகரத்திலும் நாட்டுப் புறத்திலும் உள்ள சாலைகள் அனைத்தையும் மோட்டார் ஓட்டுவோர் எதிர் பார்க்கும் நிலைமைக்குக் கொண்டுவரக் கோடானு கோடி பவுன் பிடிக்கும். அதற்குப் பல ஆண்டுகளும் பிடிக்கும்.

1909-லிருந்து 1937வரை மோட்டார் வரிகளில் கிடைத்த பணம் தொகுநிதியில் (Consolidated Fund)[1] சேர்க்கப்படாமல் தனியான சாலைநிதியில் (Road Fund) சேர்க்கப்பட்டது. சாலைநிதி சாலை அமைக்கவும் பராமரிக்கவும் செலவழிக்கப்பட்டது. (போருக்குத் தளவாடம் சேர்க்கவும், போரை நடத்தவும், போருக்குப்பின் விளைந்த பிரச்சினைகளைச் சமாளிக்கவும்) அரசாங்கத்துக்குப் பணம் தேவைப்பட்டதால் 1937-ல் இவ் வழக்கம் கைவிடப்பட்டது. அதன் பிறகு பாராளுமன்றம் தொகுநிதியிலிருந்து அளித்த பணம் மட்டுமே சாலைநிதியில் சேர்ந்தது. 1955-க்குப் பின்தான் அரசாங்கம் சாலை அபிவிருத்திக்காக நிறையப் பணம் ஒதுக்க ஒப்புக்கொண்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் தல நிர்வாகம் திருத்தி அமைக்கப்பட்டது. அப்போது சாலைப் பராமரிப்பு, கவுன்டி மன்றங்கள், நகரமன்றங்கள், மாவட்ட மன்றங்கள் இவற்றிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. இப்போது போக்குவரத்து அமைச்சகம் (Ministry of Transport) பொதுச் சாலைகளை நெடுஞ்சாலைகள் (trunk roads), பகுக்கப்பட்ட சாலைகள் (classified

[1] 24ஆம் அதிகாரத்தைப் பார்க்க.

roads, இவை மூன்று வகை), பகுக்கப்படாத சாலைகள் (unclassified roads) என மூன்று வகையாகப் பிரிக்கிறது. சாலைப் பராமரிப்புக்கும் புதுச் சாலை அமைக்கவும் செலவழிக்கப்படும் பணத்தில் ஒரு பகுதியைப் போக்குவரத்து அமைச்சகமும் மற்றதைத் தல ஆட்சி மன்றங்களும் அளிக்கின்றன. (எனவே, சாலைகளின் செலவில் ஒரு பகுதி தேசிய வரிகளினின்றும், மீதி தல வரிகளினின்றும் கிடைக்கிறது. 1937லிருந்து நெடுஞ்சாலைகளை (trunk roads) அமைப்பதும், பழுது பார்ப்பதும் போக்குவரத்து அமைச்சகத்தின் முழுப் பொறுப்பாயிற்று. ஆனால், சாலை வேலையை உண்மையில் அமைச்சகத்துக்காக கவுன்டி மன்றங்களே பல இடங்களில் நடத்துகின்றன. செய்யப்படும் வேலை, கருவூலம் இதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கும் தொகையைப் பொறுத்தது. 1929ஆம் ஆண்டின் தல ஆட்சிச் சட்டப்படி பகுக்கப்பட்ட சாலைகள், கவுன்டி மன்றங்கள் மற்றும் கவுன்டி பரோ மன்றங்களின் (county borough councils) பொறுப்பாகும். நாட்டுப்புற மாவட்டங்களிலுள்ள பகுக்கப்படாத சாலைகளின் பொறுப்பையும் கவுன்டி மன்றங்கள் ஏற்றுள்ளன. ஆனால், கவுன்டி பரோ, கவுன்டியைச் சேராத பரோ, நகர்ப்புற மாவட்டங்கள் ஆகியவற்றிலுள்ள பகுக்கப்படாத சாலைகளை அவ்வத் தலங்களின் மன்றங்கள் கவனித்துக் கொள்கின்றன. சாலை அதிகாரிகளாகப் பணியாற்றும் பல்வேறு மன்றங்களுக்குப் போக்குவரத்து அமைச்சகம் பணவுதவி அளிக்கிறது.

தொழில் வளர்ச்சி ஏற்பட்டதால் எடையும் பரிமாணமும் அதிகமுள்ள பல பொருள்களுக்கு நல்ல போக்குவரவு வசதி தேவைப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் சாலை அபிவிருத்தி ஏற்பட்ட போதும் இத் தேவைக்கு அது போதுமானதாக இல்லை. தொழிற் புரட்சியின் முன் கட்டங்களில் இத் தேவையைக் கால்வாய்கள் பூர்த்தி செய்தன. அயரையும் (Aire), கால்டரையும் (Calder) இணைத்த கால்வாய் முதன் முதலில் கட்டப்பட்டவற்றுள் ஒன்று. இது பதினேழாம் நூற்றாண்டு முடிவதற்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டது. அச் செயற்கை நீர்வழியில் தட்டைப் படகுகள் (barges) இழுக்க முடிந்தது. அதில் பல கால்வாய்க் கதவுகள் (locks) இருந்தன. அது எப்போதும் நல்ல நிலைமையில் வைத்திருக்கப்பட்டு வந்தது. இன்றும் அது பயன்படுகிறது. 1720-1-ல் இர்வெல் (Irwell), மெர்ஸி (Mersey) ஆறுகளில் வளைவுகளுக்கிடையே நேர் வழிகள் அமைக்கப்பட்டன. இதனால் லிவர்பூலுக்கும், மாஞ்செஸ்டருக்குமிடையே நீர்வழிப் போக்குவரவு எளிதாயிற்று. இம் மாதிரி வேறு பல வேலைகள் அடுத்த முப்பது நாற்பது ஆண்டுகளில் மேற்

கொள்ளப்பட்டன. ஆனால், அவை அனைத்தும் ஆறுகளை அகலப்படுத்துவது, ஆழப்படுத்துவது அல்லது வளைவு நீக்குவது ஆகியவை சம்பந்தப்பட்ட வேலைகள்தாம்.

1759-க்கும் 1761-க்கும் இடையே பிரிஜ்வாட்டர் கோமகனது (Duke of Bridgewater) பணவுதவியோடு ஜேம்ஸ் பிரிண்லே (James Brindley) என்பவர் பிரிஜ்வாட்டர் கால்வாயை (The Bridgewater Canal) திட்டமிட்டுக் கட்டினார். ஆறுகளோடு தொடர்பு கொள்ளாமல் கால்வாய் கட்ட பிரிண்லே விரும்பினார். அப்போது தான் வெள்ளம் அல்லது வரட்சியால் கால்வாய் பாதிக்கப்படாமல் இருக்கும். ஒரு வழியில் அது ஒரு பரிசோதனைக் கால்வாய். இதைக் கட்டும்போது பல பெரும் வினைமுறைப் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. கோமகனின் உர்ஸ்லி (Worsley) கரிச்சுரங்கத்தை மாஞ்செஸ்டரோடு (Manchester) இக் கால்வாய் இணைத்தது. சுரங்கத்தினின்று இப்பெரிய நகரத்துக்குக் கரி ஏற்றிச்செல்வதே இதன் நோக்கம். எல்லா விதத்திலும் இது வெற்றிகரமான கால்வாயாகும். இதனால் மாஞ்செஸ்டரில் கரி விலை குறைந்தது. பின்னர் ஆண்டுகளில் கரி விற்றுக் கோமகனுக்குப் பெருஞ்செல்வம் சேர்ந்தது. மாஞ்செஸ்டரை ரன்கார்னோடும் (Runcorn), லிவர்ப்பூலோடும் (Liverpool) இணைத்து இரண்டாவதொரு கால்வாய் கட்டப்பட்டது. இதில் வினைமுறைப் பிரச்சினைகளோடு நிதிப் பற்றாக்குறையையும் சமாளிக்க வேண்டியிருந்தது. லங்காஷயரில் பெரும்பாலோர் இதைக் கட்டி முடிக்க முடியும் என்று நம்பவில்லை. யாரும் இம் முயற்சியில் பணம் போடத் துணியவில்லை. வேலையை நடத்த நிதி திரட்ட பிரிஜ்வாட்டர் கோமகன் லண்டனுக்குப் போகவேண்டியிருந்தது.

பிரிண்லேயின் வெற்றி நாட்டின் பிற பாகங்களில் கால்வாய்கள் அமைப்பதை ஊக்குவித்தது. அடுத்த நாற்பது ஆண்டுகளில் (1760—1800) வெட்டப்பட்ட கால்வாய்களின் பெயரனைத்தையும் இங்குக் கூற வேண்டியதில்லை. அதுவும் (1791—7) 'கால்வாய்ப் பித்து'க் (canal mania) காலத்தில் இன்னும் அதிகமாக அவை வெட்டப்பட்டன; பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் பின்னல் வேலைபோலக் கால்வாய்த் தொகுதி கட்டப்பட்டு விட்டது என்று கூறினால் போதுமானது. ஏற்கெனவே இருந்த நீர் வழிகளான ஆறுகள் கூடுமானவரை பயன்படுத்தப்பட்டன; கால்வாய்களினின்று பிரித்து உள்நாட்டு நாவாய் வழிகள் (inland navigation) என்று அவை அழைக்கப்பட்டன. ஆறுகளில்

படகுகள் செல்ல முடியாத இடங்களினின்று கால்வாய்களை அமைக்கத் திட்டமிடப்பட்டது. எனவே, ஆற்றுப் போக்குவரவைச் சீராக்க நிறைய வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

கால்வாய்கள் அமைப்பதற்கு அரசாங்கம் ஓர் உதவியும் செய்ய வில்லை;[1] அவ்வேலையைத் தனியார் கம்பெனிகள் மேற்கொண்டு அதற்காகப் பணம் செலவழித்தன. தலையிடாமைக் கொள்கை நிலவிய காலத்தில் இவ்வாறு நிகழ்ந்ததில் வியப்பில்லை. இதன் விளைவாக இக்கால்வாய்கள் ஒரே சீராக இல்லை. இது மிக வருந்தத்தக்க விநோதமான இயல்பாகும். கால்வாய்களின் அகலமும் ஆழமும், பாலங்களின் உயரமும், கதவுகளின் அளவும் கால்வாய்க்குக் கால்வாய் மாறுபட்டன. இதனால் ஒரே படகு நேராகப் பல கால்வாய்கள் வழியாகப் போவது கடினமாயிற்று. சரக்குகளைச் சிறிய படகுகளை விடப் பெரிய படகுகளில் ஏற்றிச் செல்வது சிக்கனமானது. ஆனால், இருபது டன் வரையுள்ள தட்டைப் படகுகள்தாம் அப்போது எல்லாக் கால்வாய்களிலும் போகமுடியும். பெரிய படகுகளில் இருந்த சரக்குகளைப் பிரயாணத்தின் இடையில் வேறு படகுகளுக்கு மாற்றவேண்டியிருந்தது.

கால்வாய்க் கம்பெனிகள் தாமே சரக்கேற்றிச் செல்லும் வேலையை மேற்கொள்ளவில்லை. சுங்கப்பாதை டிரஸ்டுகளைப்போல சுங்கம் செலுத்திய எவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஒரு வழியைமட்டும் அவை ஏற்படுத்தின.[2] கால்வாய்க் கம்பெனிகள் சரக்குப் போக்குவரத்தை முதலிலேயே தாமே மேற்கொண்டிருந்தால், கால்வாய்கள் ஒரே சீராக அமைய வேண்டியதன் அவசியத்தை அவை உணர்ந்திருக்கும். மேலும், அபிவிருத்தி வேலை செய்ய வசதி இருந்த அச்சமயத்தில் சிறு கால்வாய்களை அகலப்படுத்தி, ஆழப் படுத்தியிருக்கலாம். ஆனால், அதன் தேவை சமீப காலத்தில்தான் உணரப்பட்டது. ஆனால், இப்பொழுதோ கால்வாய்களைச் செம்மைப் படுத்த ஏராளமான பொருள் செலவாகும்.

[1] ஸ்கார்ட்லந்தில் அரசாங்கமே காலிடோனியன் கால்வாயையும் (Caledonian Canal), கிரினன் கால்வாயையும் (Crinan Canal) கட்டியது. ஆனால், இவற்றின் முதல் நோக்கம் வியாபாரத்துக்குப் பயன்படுவதல்ல.

[2] சுங்கமுறை முதலில் மிக எளியதாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அது மேலும் சிக்கலாக மாறியது. இருப்புப்பாதைகள் கொண்ட பாகுபாடே இல்லாவிட்டாலும், அவை கொண்டுள்ளது போன்ற ஒரு சரக்குப் பாகுபாடு (classification of goods) செய்யப்பட்டது. இருப்புப்பாதைக் கட்டணங்களைப்போலச் சுங்க வீதமும் தூரம் அதிகரித்தால் குறைவாக அதிகரிக்கும்.

கால்வாய்களில் குறைகள் இருந்தன. எனினும் அதுவரை கிடைத்ததைவிட மேன்மையான போக்குவரத்து வசதிகளை அவை அளித்தன; கால்வாய்கள் இன்றேல் தொழில் வளர்ச்சி நடந்திருக்க முடியாது. தெற்கிலும் கிழக்கிலும் விவசாயம் பிரதானமாக இருந்த இடங்களிலிருந்து வடக்கிலும் மேற்கிலும் இருந்த முக்கிய நகரங்களுக்கு உணவு தானியங்களை அவை எடுத்துச் செல்ல உதவின.[1] தொழிற்சாலை ஜில்லாக்களுக்குக் கால்வாய் வழியாக மூலப் பொருள்கள் சென்றன. உதாரணமாக, பீங்கான் செய்யக் களிமண் ஒரு பகுதி தூரத்துக்கு, அதாவது, கார்ன்வாலிலிருந்து (Cornwall) பீங்கான் தொழிற்சாலைகளுக்குக் கால்வாய் வழியாகச் சென்றது. நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் துறைமுகங்களுக்கும் ஆலைகளில் உற்பத்தியான பொருள்களை எடுத்துச் செல்லவும் கால்வாய்கள் உதவின. கரியைக் கடல் மார்க்கமாக எடுத்துச் செல்ல வேண்டியிருந்த பிரச்சினைக்கும் இதனால் ஒருமுடிவு உண்டாயிற்று. அதுவரை கடல் வழியாகச் சென்ற பல பொருள்கள் இப் புதுக் கால்வாய்கள் வழியாக அனுப்பப்பட்டன.

பல ஆண்டுகளுக்குக் கால்வாய்க் கம்பெனிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்தது.[2] தம் சாதாரணப் பங்குதாரர்களுக்கு அவை கணிசமான இலாப ஈவை அளித்தன. எனவே, கால்வாய்களை அபிவிருத்தி செய்ய, அவற்றை ஊக்க ஒரு காரணமும் இருக்கவில்லை. இருப்புப்பாதைகள் தோன்றியபின் கால்வாய்களின் முக்கியத்துவமும் வருவாயும் நலியலாயின; சில கால்வாய்க் கம்பெனிகள் இணைந்தன; வேறு சில தாமே போக்குவரத்தை மேற்கொண்டன. ஆனால், கால்வாய்கள் தம் நிலைமையைச் செம்மையாக்க வேண்டிய காலம் கடந்துவிட்டது. செம்மைப்படுத்தப்பட்டிருந்தாலும் அதிக வேகமானவையும், குறித்த காலத்தில் செல்லக்கூடியவையும், பல வழிகளில் வசதியானவையுமான இருப்புப் பாதைகளின் போட்டியை அவை தாங்கியிருக்க முடியுமா என்பது சந்தேகமே. இருப்புப்பாதை வாகன்கள் சுரங்க வாயிலினின்று நேராகக் கப்பல் துறைகளுக்குப் போகமுடியும். எனவே, கப்பல்களில் கரி ஏற்றுவது மிக எளிதான வேலையாகிவிட்டது. நிலக்கரியைக் கால்வாய்களில் எடுத்துச் சென்ற போது இவ்வளவு எளிதாக இது முடிந்திருக்காது. மற்றொரு திசை

[1] விவசாயப் பொருள்களின் விற்பனையை இவ்வாறு விஸ்தரித்ததனால் விவசாயத்துக்கு மிகவும் நன்மை விளைந்தது.

[2] 1845-ல் எல்லாக் கால்வாய்க் கம்பெனிகளுக்கும் தாமே பொருள் போக்குவரத்தை மேற்கொள்ள அனுமதி தரப்பட்டது. ஆனால், அச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டவை மிகக் குறைவே.

யிலும் கால்வாய்கள் போட்டியால் வருந்தின. பதினெட்டாம் நூற்றாண்டில் கரையோரம் சென்ற கப்பல்களின் போக்குவரத்திலிருந்து பெரும் பகுதியைக் கால்வாய்கள் மேற்கொண்டன; ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் கரையோரமாக நீராவிக் கப்பல்கள் செல்லத் தொடங்கியதும், அப்போக்குவரத்தைக் கால்வாய்கள் இழந்துவிட்டன.

கால்வாய்கள் சமாளிக்க வேண்டியிருந்த போட்டியில் ஒரு பகுதி 'அநியாயமானது' (unfair) என்று சில சமயம் அழைக்கப்படும் வகையைச் சேர்ந்தது. (ஆனால், அறநூலில் இச்சொல் கொண்ட பொருளில் அதை இங்கு பிரயோகிக்கவில்லை.) போட்டியை ஒழிக்க இருப்புப்பாதைக் கம்பெனிகள் சில கால்வாய்களையே வாங்கிவிட்டன. நடுநடுவே இருந்த முக்கியமான இணைப்புக்கால்வாய்களை இரயில் வேக்கள் வாங்கினால் ஒருவேளை அவற்றை மூடியும் விடலாம். அதனால், பிற கால்வாய்கள் பாதிக்கப்பட்டன. கால்வாய் அமைப்பு முழுவதுமே பலவீனமடைந்தது. கால்வாய்களை மற்றொரு வகையிலும் இது பாதித்தது. கால்வாய்களைச் செம்மைப்படுத்துவதும், கால்வாய்க் கம்பெனிகளை இணைப்பதும், நேராகப் போகும் போக்குவரத்துக்குத் தனிச் சுங்கங்கள் (through tolls) கூறுவதும் இதனால் தடைப்பட்டன. மொத்தக் கால்வாய்களின் நீளத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கு இருப்புப்பாதைகளின் உடைமை ஆயிற்று.

இந்த அநியாயப் போட்டி எப்படிப்பட்டது, எவ்வளவு தூரம் கால்வாய்க் கம்பெனிகளைப் பாதித்தது என்பது பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிறைய விவாதம் நடந்தது. இருப்புப்பாதைகளின் சார்பாக அவை தற்காப்புக்காக இதைச் செய்தனவேயன்றி வேறொன்றுமில்லை எனக் கூறப்பட்டது. ஓர் இருப்புப்பாதையை அமைக்க ஒரு திட்டம் தோன்றினால் தன் எதிர்ப்பைத் தவிர்க்கத் தன் கால்வாயை இருப்புப்பாதைக் கம்பெனி வாங்கிவிடும் என்று எதிர்பார்த்து அத்திட்டத்தைக் கால்வாய்க் கம்பெனி எதிர்த்தது. சில கால்வாய்க் கம்பெனிகள் தம் நிறுவனங்களை இருப்புப்பாதைகளாக மாற்றவேண்டுமென எண்ணின. பல கம்பெனிகள் அதற்காகப் பாராளுமன்றத்தினின்று உரிமை பெற்றன. ஓரிரு கம்பெனிகள் அதுபோல மாற்றவும் செய்தன. மிகச் சில கால்வாய்களே இருப்புப்பாதைகளால் மூடப்பட்டன. பொதுவாகத் தனித்திருந்த கால்வாய்களைவிட இருப்புப்பாதைகள் வசம் இருந்தவை நன்கு பராமரிக்கப்பட்டுவந்தன.

கால்வாய்களின் வருமானம் குறைவதற்கு இருப்புப்பாதைகளின் நியாயமற்ற நடவடிக்கை காரணமாகாது என இருப்புப்பாதைகளை ஆதரித்தவர்கள் கூறினர். அது ஓரளவு நியாயமாகத் தோன்றுகிறது. இருப்புப்பாதைகள் கால்வாய்களைவிட இயல்பாகவே மேலானவை; தவிர, கால்வாய்களை நல்ல நிலைமையில் வைத்து நவீன காலத்தின் தேவைக்கேற்றவாறு அவற்றைச் செம்மைப் படுத்தக் கால்வாய்க் கம்பெனிகள் தவறிவிட்டன. அவற்றின் நிருவாகத் திறமை மிகக் குறைவு. அவை சுறுசுறுப்பாக இயங்கவில்லை. தம் நிருவாகத்திலிருந்த போக்குவரத்துச் சாதனத்தின் மீதே அவற்றுக்கு நம்பிக்கையில்லை. இக் காரணங்களால்தான் கால்வாய்க் கம்பெனிகள் நலிந்தன என்பது அவர்கள் கூற்று.

சட்டப்படி அனுமதி பெருது மேலும் கால்வாய்களை இருப்புப் பாதைகள் வாங்குவது 1888-ல் தடுக்கப்பட்டது. அதற்குள் பல கால்வாய்கள் வாங்கப்பட்டுவிட்டன. எனவே, இருப்புப்பாதைகளோடு போட்டியிடக்கூடிய தனிக் கால்வாய்த் தொகுதி ஒன்றைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்பது அச்சட்டத்தின் விருப்பமானுல், அது காலங் கடந்து வந்த சட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். கால்வாய்கள் அனைத்தையும் இருப்புப்பாதைகள் மேற்கொள்வதைத்தான் அது தடுத்தது. அவ்வாறன்றி, இருப்புப்பாதைகள் கால்வாய்களை வாங்குவதை அச் சட்டம் தூண்டியிருக்குமாயின், அதனுல் கால்வாய்கள் திருத்தப்பட்டு ஒருசீராக அமைக்கப்பட்டிருக்கும்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் மாஞ்செஸ்டரில் சரக்கேற்றுவதிலிருந்த கஷ்டங்கள் காரணமாகப் பல லங்காஷயர் வியாபாரிகள் கூடி லிவர்ப்பூலிலிருந்து மாஞ்செஸ்டருக்குக் கப்பல்கள் செல்லும் பெரிய கால்வாய் ஒன்றைக் கட்டுவதற்காக ஒரு கம்பெனியை அமைத்தனர். முப்பத்தாறு மைல் நீளமுள்ள இக்கால்வாயைக் கட்ட ஆறு ஆண்டுகளாயின. இது நவீனப் பொறியியல் துறையின் ஒரு வெற்றியாகும். இதில் எல்லாச் சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன. கடலில் போகும் கப்பல்கள் சரக்கோடு நேராக மாஞ்செஸ்டருக்கு வர இதனுல் வழி உண்டாயிற்று. மாஞ்செஸ்டர் கப்பல் கால்வாயில் செல்லும் சரக்குகளின் அளவைக் கவனித்தால்,[1] ஆங்கில அரசில் மூன்ருவது பெரிய துறைமுகமாக மாஞ்செஸ்டர்

[1] நடக்கும் வாணிபத்தின் மதிப்பின்படி 1957-ல் மாஞ்செஸ்டர் மூன்ருவது பெரிய துறைமுகம்; வாணிபத்தின் டன் அளவின்படி (tonnage) நான்காவது பெரிய துறைமுகம் ஆகும்.

விளங்குகிறது. லிவர்ப்பூலில் நடக்கும் வாணிபத்தின் அளவைக் குறைக்காது இங்கிலேக்கு மாஞ்செஸ்டரின் வாணிபம் பெருகியது குறிப்பிடத்தக்கது. 1955-ல் மாஞ்செஸ்டர் கப்பல் கால்வாயிலும், பிரிஜ்வாட்டர் கால்வாயிலும் சென்ற சரக்கின் டன் அளவு 19,000,000 விட அதிகம்.

நாட்டின் கால்வாய்கள் அடியோடு பயனற்றுப்போகவில்லை. வேகம் அவசியமில்லாத எடையும் பரிமாணமும் அதிகமாக உள்ள சரக்குகளின் போக்குவரத்துக்குக் கால்வாய்கள் இன்றும் பயன்படுகின்றன. இருப்புப்பாதைகளுடைய முன்னேற்றத்தோடு ஒப்பிட்டால் கால்வாய்களின் போக்குவரத்து குறைவே, தவிர அவற்றின் போக்குவரத்தைமட்டும் ஆண்டுக்கு ஆண்டு ஒப்பிட்டால் அது குறையவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆனல், கால்வாய்ப் போக்குவரவு பற்றிய புள்ளிவிவரங்களினின்று முடிவாக ஒன்றும் கூறமுடியாது. முன் ஆண்டுகளில் எல்லாப் புள்ளிவிவரங்களும் சேகரிக்கப்படவில்லை. அதே சமயம் இரண்டு மூன்று கால்வாய்கள் வழியாகச் செல்லும் சரக்குகளின் விவரங்கள் அவ்விரண்டு மூன்று கம்பெனிகளது கணக்கிலும் சேர்க்கப்பட்டிருந்தன; அதனல் போக்குவரத்துப் புள்ளி விவரங்கள் இரட்டிப்பாகிப் பெருகின. இக்காரணங்களால் பத்தொன்பதாம் நூற்ருண்டின் புள்ளிவிவரங்களோடு இன்றைய போக்குவரத்து விவரத்தை ஒப்பிடுவதில் பயனில்லை.

1906 மார்ச்சு மாதத்தில் இங்கிலாந்தில் கால்வாய்கள், உள்நாட்டு ஆற்றுப் போக்குவரவு ஆகியவற்றைப்பற்றி விசாரித்து அரசாங்கத்துக்கு யோசனைகள் கூற ஓர் அரச ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவின் இறுதி அறிக்கை 1909-ல் வெளிவந்தது. எதிர்காலத்தில் கால்வாய்களை அபிவிருத்தி செய்தால் மெர்ஸி (Mersey), ஹம்பர் (Humber), தேம்ஸ் (Thames), செவர்ன் (Severn) நதிகளின் கழிமுகங்களை (estuaries) இணைக்கும் 'சிலுவை அமைப்பை'ச் ('cross') சீர்செய்வது மிக அவசியமாகும் என்று அவ்வறிக்கை கூறியது. சிலுவை அமைப்பைச் சேர்ந்த கால்வாய்களில் முந்நூறு டன் எடை ஏற்றும் தட்டைப் படகுகளும், ஆறுகளில் எழுநூற்றைம்பது டன் எடை ஏற்றும் தட்டைப் படகுகளும் செல்லுமளவுக்கு அந் நீர்வழிகளைப் பெரிதாக்க வேண்டும் என்று ஆணைக்குழுவினர் சிலர் கருதினர்; பிற குழுவினர் கால்வாய்களில் நூறு டன் படகுகளும், ஆறுகளில் அதைவிட அதிக எடை ஏற்றுபவையும் செல்வதற்கு ஏற்பாடு செய்தால் போதுமெனக் கருதினர்; இக்கருத்துதான் இது பற்றிய குழுவின் அறிக்கைக்கு அடிப்படை

யாக இருந்தது. அப்போதிருந்த கம்பெனிகளால் கால்வாய்களை அபிவிருத்தி செய்ய முடியாதென்றும், கால்வாய்களை எடுத்துக் கொண்டு அவற்றை விருத்தி செய்ய நீர்வழிகள் கழகம் (Waterways Board) ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் அக்குழு கருதியது. (கழகம் வெளியிட்ட பத்திரங்களைக் கால்வாய்க் கம்பெனியின் பங்குதாரர்கள் நஷ்ட ஈடாகப் பெறுவர்.) ஆனால், அதன் யோசனைகளை நிறைவேற்ற முழுவதும் என்ன செலவாகும் என்று அதிகார பூர்வமாக ஆணைக்குழு மதிப்பிடவில்லை. அரசாங்கம் பணவுதவி அளிக்காவிட்டால், கால்வாய்களின் உபயோகத்தின்மீது நம்பிக்கை வைத்து அவற்றின் அபிவிருத்திக்காகப் பொதுமக்கள் தேவையான முதலீட்டைச் செலுத்துவார்களா என்பது ஆணைக்குழுவுக்குச் சந்தேகமாக இருந்தது. உடனடியாக இலாபம் வரும் என்று எதிர்பார்க்காமல் பொதுக் கொள்கையாகக் கால்வாய்களின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குழு யோசனை கூறியது.[1]

அரச ஆணைக் குழுவின் சிபாரிசுகள் செயலாற்றப்பட்டிருந்தால் அங்கங்கிருந்த தொழிற்சாலைகளுக்கு நன்மை விளைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மிட்லண்ட் கவுன்டிகளில் சில பொருள்களின் போக்குவரத்துச் செலவு மிகவும் குறைந்திருக்கும். ஆனால், கால்வாய்கள் பெற்ற இலாபத்தை இருப்புப்பாதைகள் இழந்துவிட்டிருக்கும். எனவே, கால்வாய்களின் போட்டியைத் தவிர்க்க இருப்புப்பாதைகள் அப்பகுதியில் கட்டணங்களைக் குறைத்திருக்கும். அவற்றின் இலாப-ஈவும் அதனால் குறைந்திருக்கும். கால்வாய்களில் ஏற்பட வேண்டும் என்று கூறப்பட்ட அபிவிருத்தி, தொழில்களை வளர்த்துப் புதுப் போக்குவரத்தை அதிகரித்திருக்குமானால், கால்வாய்களால் முழுமையாகவும் நிரந்தரமாகவும் நாட்டுக்கு நன்மை உண்டாகியிருக்கும்.

1947ல் வந்த போக்குவரத்துச் சட்டத்தின்படி போக்குவரத்துக் கமிஷனின் (Transport Commission) கப்பல் துறை, மற்றும் உள்

[1] அரச ஆணைக்குழுவின் சிபாரிசுகள் செயலாற்றப்படவேயில்லை. [ஆனால், கால்வாய்களுக்காக ஒரு நிருவாகக் கழகம் (Board of Management) 1953-ல் அமைக்கப்பட்டதைக் குழுவின் நீர்வழிகள் கழகம் பற்றிய சிபாரிசைப் போன்றதாகக் கருதலாம்.] அறிக்கை வந்த சில ஆண்டுகளுக்கு அரசாங்கம் மிக முக்கியமான அரசியல் விஷயங்களில் ஈடுபட்டிருந்தது. பின்னர் ஐரோப்பியப் போரும், அதற்குப்பின் பணக்கஷ்டங்களும் ஏற்பட்டன. 1930-ல் போக்குவரவு பற்றி ஓர் அரச ஆணைக்குழு தன் அறிக்கையை வெளியிட்டது. பொதுவாகக் கால்வாய்களைச் செம்மைப்படுத்துவதை இது ஆதரித்தது. 'தேசீயப் போக்குவரவு அமைப்பின் ஓர் உபயோகமான உறுப்பாக அவை இருக்க முடியும்' என்று அது நம்பியது.

நாட்டு நீர்வழி நிர்வாகத் துறையானது (Docks and Inland Waterways Executive) எல்லாக் கால்வாய்களின் நிர்வாகத்தையும் (மாஞ்செஸ்டர் கப்பல் கால்வாயையும், பிரிஜ்வாட்டர் கால்வாயை யும் தவிர) ஏற்றுக்கொண்டது. ஹம்பர், மெர்ஸி, செவர்ன், தேம்ஸ் ஆகிய நான்கு நதிகளில் ஒவ்வொன்றின் கழிமுகத்துக்கும் ஒன்றாக நான்கு 'செயலாற்றும் பிரிவுகள்' ('operating divisions') அமைக்கப் பட்டன. இத்துறைக்குச் சரக்குகளை ஏற்றிச் செல்லும் உரிமையும் அளிக்கப்பட்டது; ஆனால், கால்வாய்ப் போக்குவரத்தில் பத்தில் ஒன்பது பங்கு தனியார் படகுகளில்தான் சென்றது.

1953 அக்டோபரில் கப்பல் துறைகள், மற்றும் உள்நாட்டு நீர் வழிகள் நிருவாகத்துறை மூடப்பட்டது. கால்வாய்களையும் கப்பல் துறைகளையும் நிருவகிக்க ஒரு நிருவாகக் கழகம் (Board of Management) அமைக்கப்பட்டது. மூடப்பட்ட நிருவாகத் துறையில் இருந் தவர்களே இந்த நிருவாகக் கழகத்திலும் அங்கம் வகித்தனர்.

ஐந்து ஆண்டுகளுக்குள் 5,500,000 பவுன் செலவில் கால்வாய் களை அபிவிருத்தி செய்யும் திட்டமொன்றைப் போக்குவரத்துக் கமிஷன் 1956-ல் அறிவித்தது. ஆறுகள், கால்வாய்கள் இரண்டிலும் மிக முக்கியமான நீர்வழிகளை அபிவிருத்தி செய்ய இப்பணத்தைச் செலவழிப்பதென்றும், முக்கியமற்ற சிறு கால்வாய்களை மூடி விடுவதென்றும் முடிவாயிற்று.

கால்வாய்களின் நிலைமையை ஆராய 1956-ல் ஒரு விசாரணைக் கமிட்டி நிறுவப்பட்டது. 1958-ல் அதன் அறிக்கை வெளியாயிற்று. கால்வாய்களை மூன்று வகைகளாகப் பிரித்து அவற்றை அக்கமிட்டி ஆராய்ந்தது. முதல் வகுப்புக் (Class A) கால்வாய்கள், போக்கு வரத்துக் கமிஷனின் 5,500,000 பவுன் திட்டத்தால் ஏற்கெனவே நன்மை பெற்றுவிட்டன. இலாபத்தில் நடக்கின்றன. இரண்டாம் வகுப்புக் (Class B) கால்வாய்கள் குறுகலாகவோ, நிறைய கதவு கள் கொண்டவையாகவோ இருப்பவை அல்லது சுற்று வழியில் செல்பவை. அவற்றை நஷ்டத்தில்தான் நடத்த முடியும். இவ் வகுப்புக் கால்வாய்களை விருத்தி செய்யப் பல யோசனைகளைக் கூறிய தோடு அதன் செலவை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமெனவும் கமிட்டி கூறியது. 1959 மார்ச்சில் அரசாங்கம் மற்றொரு விசாரணைக் கமிட்டியை நியமித்தது. முக்கியமாகக் கைவிடப்பட்ட அல்லது அநேகமாகக் கைவிடப்பட்ட மூன்றும் வகுப்புக் (Class C)

கால்வாய்களை விருத்தி செய்வது பற்றி ஆராய்வது இதன் பணி. இரண்டாம் வகுப்புக் கால்வாய்களும் இக்கமிட்டியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

1960 டிசம்பரில் அரசாங்கம் வெளியிட்ட வெள்ளை அறிக்கை ஒன்றில் புது உள்நாட்டு நீர்வழிகள் அதாரிடி (Inland Waterways Authority) ஒன்றை நிறுவப்போவதாக அரசாங்கம் தெரிவித்தது. இதற்கான சட்டம் 1961—2-ன் பாராளுமன்றக் கூட்டத்தில் கொண்டு வரப்படும் என்று அரசாங்கம் கூறியது.

19. தொன்மைப் பொருளியலார்

(The Classical Economists)

இங்கிலாந்தின் வரலாற்றில் பல்வேறு சமயங்களில் வழங்கி வந்த பொருளாதாரக் கோட்பாடுகளைப்பற்றி இந்நூலின் முதல் அதிகாரங்களில் ஓரளவுக்கு விவரிக்கப்பட்டது. இடைக்காலப் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் அறவியலுக்கும் (ethics) தொடர்பிருந்தது. அக் கொள்கைகள் சமய நெறிக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. இடைக்காலம் மறைந்த பின் வளர்ந்த தேசிய உணர்ச்சிக்கு ஒத்த பகுதியாகப் பொருளாதாரத் துறையில் மெர்க்கன்டலிசத் தத்துவம் தோன்றிற்று. அது பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாவதுவரை கடைப்பிடிக்கப் பட்டது. இடைக்காலப் பொருளாதாரக் கொள்கைகளையோ மெர்க்கன்டலிசக் கொள்கைகளையோ அரசாங்கம் ஒப்புக்கொள்ள, எந்த ஒரு பெரிய அறிவாளியோ அல்லது பொருளியல் கருத்தினரோ (school of economists) காரணமாக இல்லை. இடைக்காலக் கோட்பாடுகளைத் திருச்சபை தன் அதிகாரம் முழுவதையும் பிரயோகித்துப் புகுத்தியது. மெர்க்கன்டலிசமோ அக் காலத்துச் சூழ்நிலையின் இயல்பான விளைவாகும்.

'அரசியல் நூலின் தந்தை'யாகிய (Father of Political Science) அரிஸ்டாடிலுக்குத் (Aristotle) தான் மிகவும் கடமைப்பட்டிருப்பதை அரசியலைப் படிக்கும் ஒவ்வொரு மாணவனும் உணருகிறான். அரிஸ்டாடில் தொடங்கிவைத்ததைத் தொடர்ந்து செய்தவர்கள், அவரது கருத்தைக் கண்டித்தவர்கள், அதைத் தவறாகப் புரிந்து கொண்டு சில காலம் அதைவிட்டு விலகிச் சிந்தித்தவர்கள், அவரது கருத்தோடு புதியவற்றைச் சேர்த்தவர்கள், அக் கருத்தை மதிக்கக் கற்றவர்கள் போன்ற சிந்தனையாளர்களின் நூல்களால்தான் அரசியல் நூல் வளர்ச்சி பெற்றது. அதேபோலப் பொருளாதார நூலைப்

பொறுத்தவரை, பழங்காலத்தில் இருந்த ஒரு பேரறிவாளியின்[1] கருத்துகளின் அடிப்படையில் தம் கருத்துகளை வெளியிட்டுப் பொருளியலை வளர்த்த பொருளாதார நிபுணர்களின் வரிசை ஏதும் இல்லை.[2]

எனினும், ஒரு நூற்றாண்டுக் காலத்துக்குள், ஏறக்குறையத் தொழிற் புரட்சி நடந்த காலத்தில், பல பொருளாதார அறிஞர்கள் தம் கருத்துக்களை உலகுக்குச் சீரான முறையில் தந்தனர். ஃபிரான்ஸில் பிஸியோக்ராட்டுகள் (Physiocrats) என்றழைக்கப்பட்ட சிந்தனையாளர்கள் பொருளியலின் பல அம்சங்களைப் பற்றி விவரித்தனர். அவர்களுள் குவிஸ்னே (Quesnay) என்பவர் முக்கியமானவர். [ஃபிரெஞ்சுப் புரட்சியின் பிரசித்தமான மிரபூவின் (Mirabeau) தந்தையான] மிரபூ, தெ லா ரிவீர் (De la Riviere), தெ நெமூர் (De Nemours), டர்கட் (Turgot), லெ ட்ரோன் (Le Trosne) ஆகியவர்கள் குவிஸ்னேயின் துணைவர்கள் அல்லது சீடர்கள். இவர்களுடைய நூல்கள் சமூகம் ஓர் 'இயற்கை ஒழுங்கில்' (natural order) அமைய வேண்டும் என்று கூறின. அப்போது ஃபிரான்ஸில் பொருளாதார, அரசியல் இயல்புகளில் செயற்கையாக அமைந்த சமூகத்துக்கும், இங்கிலாந்தில் ஒப்புக்கொண்டவாறு மெர்க்கன்டலிச முறைக்கும் இவ் 'இயற்கை ஒழுங்கு' முற்றிலும் மாறுபட்டது. அப்போது தோன்றியிருந்த பல கட்டுப்பாடுகளை அகற்றினால்தான் 'இயற்கை ஒழுங்கு' மறுபடி ஏற்படும் என்பது அவர்களது கருத்து. அவர்கள் ஆதரித்த கொள்கைக்குப் பின்னர் தலையிடாமைக் கொள்கை (*laissez - faire*) என்று பெயர் வந்தது. செல்வம் முழுவதும் விவசாயத்தினின்றுதான் தோன்றுகின்றது என்று அவர்கள் கருதினர். விவசாயத்தில்தான் இட்டதைவிட அதிகம் பெற முடிகிறது. நிலத்தில் இட்ட ஒவ்வொரு வித்துக்கும் முப்பது, அறுபது அல்லது நூறு மடங்கு பலன் கிடைக்கிறது. வாணிபமும் தொழில்களும் தேவையே. ஆனால், அவை செல்வத்தை

[1] செல்வம் சேர்க்கும் கலையைப் பற்றி அரிஸ்டாட்டில் சில இடங்களில் குறிப்பிடுகிறார். செல்வம் சேர்ப்பது வாழ்க்கையின் குறிக்கோளல்ல. அது பொதுவாகச் சமூக வாழ்க்கைக்கு ஒரு துணைச் செயலன்றி வேறில்லை என அவர் கருதுகிறார். பண்டமாற்று, பணம் இவை பற்றியும் அவர் சில கருத்துகளை வெளியிட்டார். நவீனப் பொருளாதாரக் கோட்பாடுகளின்படி, இக்கருத்துகளைச் சரியானவையாகக் கருத முடியாது.

[2] ஸ்மித்துக்கு முன், சைல்டு (Child), பெட்டி (Petty), நார்த் (North), கிரகரி கிங் (Gregory King) போன்ற பல பொருளாதார எழுத்தாளர்கள் இருந்தனர். அவர்களது நூல்கள் அநேகமாக விவாத நூல்கள்; பொருளாதாரக் கோட்பாடுகளை முழுமையாக எடுத்துரைக்க அவர்கள் முயலவில்லை.

அதிகரிக்கவில்லை என்பது அவர்களது கருத்து; தொழிலில் உற்பத்தியான ஒரு பொருளின் மதிப்பு அதன் மூலப்பொருள், அதைச் செய்த உழைப்பு இவற்றின் மதிப்பைப் பொறுத்தது; எனவே, அதில் 'நிகரமாக உயர்வு' (net increase) இல்லை. ஆகையால், அத்தகைய தொழில்கள் மலட்டுத் தன்மை பெற்றவை (sterile) என்று அவர்களால் இகழப்பட்டன. இவ்வியற்கை முறை வாதிகளின் (Physiocrats) கோட்பாடுகளில் இருந்த தவறுகளை இங்குக் குறிப்பிடத் தேவையில்லை. ஆனால், நவீனப் பொருளாதார நூலின் முன்னோடிகள் அவர்களே என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இயற்கை முறை வாதிகளின் தத்துவத்தை ஆடம் ஸ்மித்தின் (Adam Smith) கருத்துகள் மிகவும் அனுசரித்திருந்தன. 1776-ல் வெளிவந்த அவரது பெருநூலான The Wealth of Nations (நாடுகளின் செல்வம்) 'பொருளியலின் விவிலிய நூல்'[1] என்ற பெருமதிப்பைப் பெற்றுள்ளது. இயற்கை முறை வாதிகளின் கருத்துகள் சிலவற்றை ஸ்மித் பின்பற்றினார். தான் அதற்காக அவர்களுக்குக் கடன்பட்டதைத் தெரிவிக்க அவர் தயங்கவில்லை. ஆனால், அவர்களோடு ஒப்பிடும்போது அவரது காட்சித் திறனும், கருத்தொழுங்கும், சொல்லழகும் மேம்பட்டன; எனவே, அனைவரும் பொருளியலின் உண்மையான தந்தை அவரே என்று ஒப்புக்கொண்டுள்ளனர். தாமஸ் மால்தஸ் (Thomas Malthus), டேவிட் ரிகார்டோ (David Ricardo), ஜேம்ஸ் மில் (James Mill), ஜே. ஆர். மெகலக் (J. R. McCulloch), நேசௌ சீனியர் (Nassau Senior) ஆகியோர் பொருளியலை மேலும் வளர்த்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்கின்றனர். அவர்களது கருத்துகளெல்லாம் மாற்றமின்றி இன்று ஒப்புக்கொள்ள முடியாது. ஆயினும், அக் கருத்துகள் பின் வந்த பொருளியலாரின் நூல்களுக்கு அடிப்படையாக விளங்கின. எங்கும் பொருத்தமாக இருக்கக்கூடிய அடிப்படை முடிவுகளைக் கொண்ட கோட்பாட்டளவான நூலாக (abstract science) அவர்கள் பொருளாதாரத்தைக் கருதினர். இம்முடிவுகளினின்று பிற துணை முடிவுகள் (corollaries) வருவிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட பொருளியல் அறவியலுடன் சிறு தொடர்பும் கொள்ளாததாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் கருத்துப்படி பொருளியல் சமுதாயச் சீர்திருத்தத்தைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஏனெனில், மாற்ற முடியாத விதிகளின்படி வாரம், கூலி போன்று

[1] The Bilble of Political Economy.

ஒவ்வொரு வர்க்கமும் சமூகத்தின் செல்வத்தில் பங்கு கொண்டால், அவற்றை மாற்ற முயல்வது வீணாகும்.[1] அவர்களது கருத்துகளின் பெருமை இயல்புகளால் இக்கூட்டத்தினருக்குத் தொன்மைப் பொருளியலார் (Classical Economists) என்ற பொதுப் பெயர் அளிக்கப்பட்டது.[2]

மெர்க்கன்டலிசத் தத்துவப்படி பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் ஆடம் ஸ்மித் வாழ்ந்தார். இக் கட்டுப்பாட்டு முறையை அவர் முற்றிலும் எதிர்த்தார். கட்டுப்பாடுகள், முற்றுரிமைகள், சலுகைகள் இவற்றை எங்கிருந்தாலும் நீக்கிப் பொருளாதாரச் சுதந்திரத்தை மக்களுக்கு அளிக்க வேண்டுமென அவர் வற்புறுத்தினார். தனி மனிதர்களிடையே தடையின்றிப் போட்டியிருந்தால் ஒவ்வொருவரும் தமக்கு முழு நன்மை பயக்கும் வழியையே கையாள்வர்.[3] ஒருவன் சுதந்திரமாக நடப்பதால் பிறருடைய சுதந்திரமோ, நாட்டின் பாதுகாப்போ, மக்களது நல்வாழ்வோ பாதிக்கப்பட்டால் அப்போதெல்லாம் ஓரளவுக்குக் கட்டுப்பாடு நிச்சயம் இருக்கலாம் என்பதை அவர் ஒப்புக்கொண்டார். நாட்டுப் பாதுகாப்புக்கு நல்லதாக இருக்கக்கூடும் என்ற காரணத்தினால்தான் கடற் கடவுச் சட்டங்களை

[1] அதே சமயம் பொருளாதாரத்தின் அடிப்படை முடிவுகளுக்கு முரண்பட்டிருந்த சமுதாய அமைப்பின் இயல்புகளைச் சுட்டிக்காட்டி அம்முடிவுகளுக்கேற்ப அவற்றை மாற்ற வேண்டும் என்று அவர்கள் கூறத் தயங்கவில்லை. உதாரணமாக, ஸ்மித் மெர்க்கன்டலிசத்தைத் தாக்கினார். மெகலக் கூட்டுச் சங்கச் சட்டங்களைக் கண்டித்தார். ஜேம்ஸ் மில் அதற்கும் ஒரு படி தாண்டிப் போய் வாரம் முழுவதையும் சமுதாயம் எடுத்துக்கொள்வதற்காக நிலவரி விதிக்க வேண்டும் எனக் கூறினார்.

[2] சில சமயம் இவ்வடைமொழிக்குக் கூறப்பட்ட பொருள் இவர்களுக்கு அவ்வளவு புகழளிக்கவில்லை. தொன்மைப் பொருளியலாரின் முடிவுகள் உண்மைக்குப் புறம்பானவை, மனிதர்களைப் பற்றி ஆராயாமல் பண்பியலான 'மனிதனை'ப் பற்றிக் கருதினார்கள், அவர்கள் விவரித்த 'பொருளாதார மனிதன்' உண்மையல்ல, ஒரு கோட்பாடுதான் என்றெல்லாம் கூறப்படுகின்றன. மக்களது சொந்த இயல்புகள் ஒருவருக்கொருவர் மிகவும் மாறுகின்றன என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒரே மாதிரி, தம் வர்க்க நலத்திற்கேற்றவாறே நடக்கின்றனர் என்று அவர்கள் எண்ணினர். இக்கோட்பாடு சரியல்ல. தனி மனிதனின் ஆசாபாசங்களையெல்லாம் கடந்த கோட்பாட்டளவேயான நூலாகப் பொருளியலை இவர்கள் கருதியதால்தான் அதற்கு 'இருள் மண்டிய நூல்' (dismal science) என்ற அவப்பெயர் வந்தது. ஆனால், ஸ்மித், மால்தஸ், ரிகார்டோ ஆகியோரின் பண்பியல் வாதம் அக்காலத்துச் சூழ்நிலையின் அடிப்படையில் இருந்தது. அவர்களைப் பற்றிக் கூறக்கூடிய ஒரே குறை தம்மைச் சுற்றியிருந்த நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டு அவர்கள் முடிவுகளைச் செய்தனரேயன்றிச் சூழ்நிலை மாறினால் என்ன நேரும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை என்பதுதான்.

[3] ஜெரமி பெந்தம் (Jeremy Bentham) தன் **Fragment on Government** என்ற நூலில் அரசாங்கம் எவ்வளவு பேருக்கு முடியுமோ அவ்வளவு பேருக்கும் எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்ய

அவர் ஆதரித்தார்.[1] திடீரென அரசாங்கக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால் நடைமுறையில் மக்களுக்குப் பெருங் கஷ்டம் விளையக்கூடும் என்பதையும் சுதந்திரம் சிறிது சிறிதாகத் தரப்பட வேண்டும் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். தன் கோட்பாடுகள் முழுவதையும், அதுவும் மிகக் குறுகிய காலத்தில் அரசாங்கம் ஒப்புக்கொண்டுவிடும் என்பதை அவர் எண்ணிப் பார்த்ததாகத் தோன்றவில்லை. தன் குறிக்கோளான முழுச் சுதந்திரம் நாட்டில் ஏற்படுத்தச் சிறிது சிறிதாக அபிவிருத்திகள் செய்யப்படும் என்று மட்டும் அவர் நம்பினார்.

செல்வம் உழைப்பின் பயனே என்ற கோட்பாட்டில் தொடங்கி உழைப்பைப் பகிர்வதனால் ஒவ்வொருவரும் ஒரு விசேஷத் தொழிலில் ஈடுபடுவதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை அவர் விவரித்தார். இவற்றை இங்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. ஒரே மனிதன் பல வினைகளைச் செய்வதற்குப் பதில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு வினையில்மட்டும் முழுக் கவனம் செலுத்தினால் மொத்த உற்பத்தி ஏராளமாகப் பெருகும் என்பதைமட்டும் இங்குக் குறிப்பிட்டால் போதும். அவரும் இதைத்தான் சொன்னார். இம்மாதிரி வேலைகள் அமைவதற்குப் பொருள்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ள வசதியிருக்க வேண்டும். தன் உழைப்பினால் செய்த பொருள் எவ்வளவு அதிகமாக இருப்பினும் அதைமட்டும் உபயோகித்து ஒருவன் வாழமுடியாது. சிக்கலான சமுதாய நடவடிக்கைகளில் ஒன்றில்மட்டும் அவன் ஈடுபட்டிருக்கிறான். தன் உற்பத்தியைக் கொடுத்துப் பிறரது உற்பத்தியை அவனால் வாங்க முடிய வேண்டும். வேலைப்பகிர்வுக் கோட்பாட்டிலிருந்து வரும் துணைமுடிவு பொருள்களை மாற்றிக்கொள்ளுதல். பொருள்களை மாற்றுவதன் மீதுள்ள ஒவ்வொரு கட்டுப்பாடும் வேலைப்பகிர்வின் அளவைக் கட்டுப்படுத்து

வேண்டும் என்ற கொள்கையை எடுத்துரைத்தார். இந்நூலும் 1776-ல் தான் வெளிவந்தது. இச்சூழலை அறிவுக்குப் புறம்பான கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்பது அவரது வாதமாகும்.

கட்டற்ற கடவுச் சட்டங்களை ஸ்மித் ஆதரித்ததைப் பலர் மேற்கோள் காட்டியுள்ளனர். இது பற்றிய அவரது கருத்து அவரது பொதுக் கோட்பாடுகளுக்கு முரணானது என்பதையும் இயல்பாகவே அது பலவீனமானது என்பதையும் பலர் உணரவில்லை. டச்சுக்காரரைவிட ஆங்கிலேயர் பதினேழாம் நூற்றாண்டின் போர்களில் வெற்றி அதிகமாகப் பெற்றிருந்ததற்குக் கட்டற்ற கடவுச் சட்டங்கள் காரணமல்ல என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். அதன் விளைவுகள் முழுமையாகத் தோன்றுமளவுக்கு அத்தனை நாள் அவை அமுலில் இல்லை. இதிலிருந்து நாம் இயல்பாகக் கொள்ளக்கூடிய முடிவு இதுதான்: ஸ்மித் கட்டற்ற கடவுச் சட்டங்களால் ஏற்பட்டதாகக் கூறும் கப்பற்படைப் பலமும் அவை செயற்படு முன்னரே இருந்தது.

கிறது. தனிப்பட்ட மக்களுக்கு எது பொருந்துமோ அது நாடு களுக்கும் பொருந்தும்; மக்களது திறமை மாறுபடுகிறது; அதே போல நாடுகளின் வளமும் மாறுபடுகிறது. ஒவ்வொரு நாடும் இயற்கையாக எந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய ஏற்ற சூழ் நிலையைக் கொண்டிருக்கிறதோ அவற்றை உற்பத்தி செய்து தன் உபரி உற்பத்தியைப் பிற நாடுகளின் உபரி உற்பத்திக்கு மாற்றிக் கொண்டால்தான் முழுப் பயனும் உண்டாகும். வாணிபத்தின் மீதுள்ள ஒவ்வொரு கட்டுப்பாடும் இம்முழுப் பயன் ஏற்படுவதைத் தடுக்கிறது; உலக முழுவதிலும் படைக்கப்படும் செல்வத்தைக் குறைக்கிறது.

தடையிலா வாணிபத்தை ஆதரிக்கும் வாயிலாக ஸ்மித் பொருள் களின் பரிவர்த்தனையின் (exchange) நடைமுறையை ஆராய்ந்தார்; பணத்தின் இயல்பையும், பணியையும் தெளிவாக எடுத்துரைத்தார். பொருளுக்குப் பொருள் நேரிடையாகப் பரிவர்த்தனையாகும் பண்ட மாற்று முறையில் பல குறைகள் உள்ளன. அவற்றை யாவரும் தெளிவாக உணரலாம். இக்குறைகளை நீக்கப் பண்டமாற்றை இரண்டு தனித்தனி வினைகளாக, விற்பதும் வாங்குவதுமாகப் பிரிக்க வேண்டும். இவ்விஷயங்களை விவரமாக ஆராய்ந்ததன் விளைவாக வர்த்தகத் தத்துவம் பொன் சேர்ப்பதுபற்றிக் கொண்டிருந்த கோட் பாடுகளின் தவற்றை ஸ்மித் வெளிப்படுத்தினார். பணத்தின் உண்மை யான இயல்புக்கும் செல்வத்துக்குமுள்ள வேறுபாட்டைக் காட்டி உலோகப் பணமாயினும் சரி, காகிதப் பணமாயினும் சரி, பணத்தின் அளவு அதிகமானால், வேறு ஒன்றும் மாறாமலிருப்பின், விலைகள் உயரும்; அது தவிர வேறொன்றும் விளையாது என்று அவர் சுட்டிக் காட்டினார். இது பின்னர் பலமுறை நிரூபிக்கப்பட்டுவிட்டது.[1]

சங். தாமஸ் மால்தஸ் (Rev. Thomas Malthus) பொருளாதார விஷயங்களைப் பற்றிப் பல நூல்கள் எழுதினார். ஆனால், அவற்றுள் பொருளியலின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியது அவரது 'Essay on Population' என்ற நூலாகும். அது 1798-ல் முதலில் வெளிவந்தது. நிறைய மாறுதல்களுடன் 1803-ல் அது மறுபடியும் வெளிவந்தது. அதன் பின்னர் வேறு பல பதிப்புகள் வெளியாயின. ஒவ்வொரு முறையும் திருத்தங்கள் அவற்றில் செய்யப்பட்டன.

அவர் காலத்துச் சூழ்நிலை மால்தஸின் கருத்துகளை மிகவும் பாதித்தன. அப்போது ஜனத்தொகை வேகமாக அதிகரித்தது

[1] 31ஆவது அதிகாரத்தைப் பார்க்க.

ஃபிரெஞ்சுப் போர்கள் நடந்துவந்ததனால் இதை ஒரு நிறைவாகவே அனைவரும் கருதினர். ஆனால், அறுவடைகள் சரியாக இல்லை. போர் காரணமாக நிறைய உணவை இறக்குமதி செய்வதும் இயலாதிருந்தது. பஞ்சமும் பட்டினியும் அடிக்கடி தோன்றின. ஏழை மக்களது துயரைத் துடைக்க 1795-ல் ஸ்பீன்ஹாம்லண்டில்' (Speenhamland) தொடங்கிய பணவுதவி முறை பெரும்பாலான இடங்களுக்குப் பரப்பப்பட்டது. தொழிலாளர்கள் இரவலராயினர்; பாரிஷிடம் பிச்சை பெறுதலை வெட்கக்கேடாக ஏழைகள் எண்ணவில்லை; பரம ஏழையும் குறைந்த வயதில் வாழ வழியில்லாதபோது திருமணம் செய்துகொண்டான்.

இந்த நிலைமையை மனநிறைவோடும் மனம் ஒப்பியும் மால்தஸால் காண முடியவில்லை. தனது 'Essay' என்னும் நூலில் முதலில் உணவு உற்பத்தியை அவர் ஆராய்ந்தார். நிறைய உணவு இறக்குமதி செய்யமுடியும் என்று அவருக்குத் தோன்றவில்லை. அவ்வாறிருக்க, வளர்ந்துவரும் மக்கள்தொகைக்கு உணவு உற்பத்தி செய்ய ஏற்கெனவே பயிராகும் நிலங்களை இன்னும் நன்கு பயிரிடவேண்டும், அல்லது புது நிலங்களைச் சாகுபடி செய்யவேண்டும். ஏற்கெனவே உள்ளவற்றில் மேலும் விளைச்சலை உண்டாக்க முயன்றால் குறைந்து செல் விளைவு விதியைக் (Law of Diminishing Returns) கண்கூடாகக் காணலாம். இதை மால்தஸ் தெளிவாக எடுத்துரைத்தார். ஆனால், இவ்விதிக்கு இப்பெயர் அப்போது வழக்கிலில்லை. அல்லாமல் புது நிலங்களைப் பயிரிட முயன்றால் அவை தரம் குறைந்தவையாக இருக்கும். ஏற்கெனவே சாகுபடிசெய்யும் நிலங்களைவிட அவற்றின் விளைச்சல் குறைவாக இருக்கும்.

பெருகிவரும் மக்கள்தொகையைப் பற்றிக் கூறுகையில், இன விருத்தியின் இயல்பான உணர்ச்சி மிகவும் பலமானதாகையால், மக்கள்தொகை இருபத்தைந்து ஆண்டுகளில் இரட்டிக்கக்கூடும் என்று மால்தஸ் முடிவு செய்தார்.[1] அவ்வாறு நேரக்கூடாதெனில், அதற்குச் சில தடைகள் தேவை. அவற்றைக் கீழே காணலாம். வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட ஒவ்வோர் உயர்வும் இத்தடைகளின் சக்தியைக் குறைக்கிறது; எனவே, நேரிடையாக மக்கள்தொகை அதிகரிப்பதற்கு ஊக்கமளிக்கிறது.

இந்த இரு கருத்துத் தொடர்களையும் மால்தஸ் இணைத்துக் கணிதச் சொற்களில் எடுத்துரைத்தார். மக்கள் தொகை பெருக்கல்

[1] மால்தஸைப் பற்றி எழுதிய சில திறனாய்வாளர் இருபத்தைந்து ஆண்டுகள் மிகக் குறுகிய காலம் என்று கண்டிக்கின்றனர். இக்காலத்தின் அளவு எதுவானாலும் மால்தஸின் வாதம் அதற்குப் பொருந்தும்.

விகிதத்தில் (Geometric ratio) அதிகரிக்கிறது. உணவின் உற்பத்தியோ கூட்டல் விகிதத்தில் (Arithmetical progression) தான் அதிகரிக்கிறது. வாழ்வுக்குத் தேவையான உணவை மக்கள் தொகை மிஞ்ச முயல்கிறது என்பதுதான் இதனின்று வரக்கூடிய முடிவாகும். இவ்வாறு ஏற்படாது தொடர்ந்து ஜாக்கிரதையாக அரசியல் வாதிகளும் பொருளியலாரும் கவனித்துக்கொள்ள வேண்டும். இவ்வியல்பை எவ்வாருயினும் தடுக்காவிட்டால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் நிச்சயம் விழுந்துவிடும்; கஷ்டமும் ஏழ்மையும் எங்கும் மலியும் என்று அவர் எச்சரித்தார்.[1]

மக்கள்தொகை மிகுவதைத் தவிர்க்கும் தடைகள் இருவகை. இயல்புத் தடைகள் (positive checks) ஏற்கெனவே இருக்கும் மக்கள் தொகைகளை அழிக்கும் சக்தியை உடையன. கொள்ளை நோய்களும், பஞ்சமும், போரும், வெள்ளமும், பூகம்பமும் இயல்புத் தடைகள்.[2] தவிர்ப்புத்தடைகள் (preventive checks) புதிதாக மக்கள் தோன்ருமல் தடுப்பன. புலனடக்கம் (moral restraint) தவிர்ப்புத் தடையாகும். திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பது, காலம் தள்ளி மணம் புரிந்துகொள்வது ஆகியவற்றை மால்தஸ் புலனடக்கம் என்று கூறினர்.

எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டவராகத்தான் தன்னை மால்தஸ் கூறிக்கொண்டார். அவரைத் தீமையே விளையும் என்று எண்ணுபவர் என்றும் சாதாரணமாகப் பிறர் கருதுவதில்லை. ஆனல், அவரது வாதம் முழுவதும் தீமையே விளையும் என்று எண்ணுவது போல்தான் அமைந்துள்ளது. அவரது முடிவுகளை அப்படியே ஒப்புக் கொண்டால் மக்களது வாழ்க்கைத்தரம் நிறையவோ நிரந்தரமாகவோ உயரவே முடியாது என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டும். அப்படியாயின் உடலிலே உயிரைத் தரிக்கவைக்கும் நிலையில்தான் பெரும்பாலான தொழிலாளர்கள் என்றும் வாழவேண்டும்; அவர்களது வாழ்க்கைத்தரம் உயரவே முடியாது; அப்படி உயர்ந்தால் அவர்களது எண்ணிக்கை பெருகி மறுபடி வாழ்க்கைத் தரம் குறைந்துவிடும். இத்தீய சூழலிலிருந்து தப்பிக்க வேண்டுமானல் புலனடக்கம் தேவை. புலனடக்கத்தை வெற்றிகரமாகக்

[1] ஆனல், மக்கள் தொகை அவர் பயந்ததுபோலப் பெருகினல் வேலைப் பகிர்வுக்கு அதிக வாய்ப்பு உண்டாகிறது. அதனல் செல்வம் பெருகக் கூடும். இதை மால்தஸ் கவனிக்கவில்லை.

[2] பண்பாடு வளராத மக்கள் விஷயத்தில், ஆட்களைக் கொன்று தின்பது, குழந்தைகளையும் கிழவர்களையும் கொல்வது ஆகியவையும் இயல்புத் தடைகள்.

கடைப்பிடிக்க முடியும் என்று மால்தஸே எதிர்பார்த்தாரா என்பது சந்தேகமே.

எனினும், கடந்த நூற்றைம்பது ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் மால்தஸின் கோட்பாடுகளுடன் ஒத்துவரவில்லை. அவரது 'வியாசம்' என்னும் நூல் வெளிவந்தபின் இங்கிலாந்தின் மக்கள் தொகை ஐந்து மடங்கு ஆகிவிட்டது. பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் நிறைய முன்னேறியுள்ளது. உண்மைக்கும் அவர் கூற்றுக்கும் உள்ள வித்தியாசம் காரணமாக மால்தஸின் கருத்தைப் பலர் எதிர்த்துள்ளனர். அவரது கருத்து முற்றிலும் தவறு என்று பலர் எண்ணுகின்றனர்.

மால்தஸ் தானிருந்த காலத்துச் சூழ்நிலையையே கருதினார்; எதிர்காலத்தில் அவரது முடிவுகளை மாற்றக்கூடிய புதுக் காரணிகள் தோன்றக்கூடும் என்பதை அவர் போதுமான அளவு எதிர்பார்க்கவில்லை என்பது அவர்மீது சாட்டப்பட்ட கண்டனங்களில் முக்கியமானது. விவசாய உற்பத்தி பற்றிய அவரது முடிவு சரியானதுதான். ஆனால், நாளடைவில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள் அவரது கருத்துகளில் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டன. மால்தஸின் காலத்திலேயே விவசாய முறைகளில் அபிவிருத்தி செய்ய நிலமுடையவர்கள் முயன்றனர். அதை அவர் ஒப்புக்கொண்டார். ஆனால், இவ்வபிவிருத்திகளும் மேலும் செய்யப்பட்ட முன்னேற்றங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிளைச்சலைக் 'குறைந்து செல் விளைவு' விதியின்படியன்றி வளர்ந்து செல் விளைவு' (increasing returns) விதிப்படி பெருக்கியதை அவர் எதிர்பார்க்கவில்லை. தவிர, இதுவரை பயிரிடப்படாத நிலம் ஏற்கெனவே சாகுபடியானவற்றைவிட மோசமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அது அருகில் இல்லாததால் அதுவரை யாரும் அதை உழாமல் இருந்திருக்கலாம். போக்குவரவு வளர்ச்சியால் அத்தகைய நிலங்களைப் பயிரிடுவது இலாபகரமாக ஆகலாம். அதேபோல, பத்தொன்பதாம் நூற்றாண்டில் போக்குவரத்துச் சாதனங்களில் அபிவிருத்தி ஏற்பட்டபின் அத்தகைய நிலங்களுக்கும், அங்காடிகளுக்கும் தொடர்பு உண்டாயிற்று. இதனால், இலாபத்தோடு பயிரிடக்கூடிய நிலங்களின் அளவு நிறைய அதிகரித்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் தொழிலும் வாணிபமும் அடியோடு மாறியதையும் மால்தஸ் எதிர்பார்க்கவில்லை. இங்கிலாந்து தன் ஆலை உற்பத்தி, கரி, கப்பல் வசதிகள், பாங்கி

வசதிகள் ஆகியவற்றை அளித்து அதற்குப் பதிலாகத் தன் உணவை நெடுந்தூரத்திலுள்ள கண்டங்களிலிருந்து இறக்குமதி செய்யும் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. பன்னாட்டு வாணிபம் சென்ற நூற்றாண்டில் பெருமளவுக்கு அதிகரித்தமையால் மால்தஸ் பயந்த நிகழ்ச்சிகள் நெடுங்காலத்துக்குத் தவிர்க்கப்பட்டுள்ளன. உலக மக்கள்தொகைக்குத் தேவையானதைவிட அதிகமாக உலகில் உணவு உற்பத்தி ஆகிறது.[1] சில பிராந்தியங்களும் சில வகை மக்களும் அடிக்கடி உணவுப் பற்றாக்குறையாலும், பஞ்சத்தாலும் வருந்தியிருக்கலாம். ஆனால், இதற்குப் போக்குவரத்துத் தட்டுப்பாடும், சமூகத்தின் பொருளாதார அமைப்பின் குறைகளுமே காரணம். இவை நிவர்த்தி செய்யமுடியாத குறைகளல்ல. மால்தஸூக்கு எதிரான வாதத்தைச் சுருக்கமாகக் கூறலாம். உணவு உற்பத்தி மக்கள்தொகையைவிடக் குறைவாகவே அதிகரிக்கும் என்று மால்தஸ் எண்ணினர். கடந்தகால அனுபவத்தினின்று நாம் அறிவது வேறு. மால்தஸின் காலத்தினின்று இன்றுவரை மக்கள் தொகை அதிகரித்ததைவிட அதிகமாக மக்களது வாழ்க்கைத்தரம் முன்னேறியிருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பற்றி மால்தஸ் கூறிய கருத்தை நமது அனுபவக் கண்கொண்டு பார்த்தால், அக் கருத்தை மாற்றமின்றி ஒப்புக்கொள்ள முடியாது. அதேபோல இன்றைய அனுபவப்படி, மக்கள்தொகை அதிகரிக்கும் காரணங்கள் பற்றிய அவர் கருத்தையும் அப்படியே ஒப்புக்கொள்ள முடியாது. பொதுவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து மத்தியதர வகுப்பினரும் தொழிலாளர்களும் பெற்றுள்ள வாழ்க்கைச் சுதந்தரம் நிறைய உயர்ந்

[1] 1945-ல் போர் முடிந்தபின் இருந்த உலகச் சூழ்நிலை இக்கருத்துக்கும் அடுத்த பக்கத்தில் காணப்படும் கருத்துக்கும் ஒவ்வாததாகத் தோன்றியது. சில ஆண்டுகளுக்கு உணவு விளைச்சல் உலக மக்கள்தொகைக்குப் போதாதோ என்று அரசியலாரும் பொருளியலாரும் பயந்தனர். ஆனால், இப் பற்றாக்குறை யுத்தத்தினால் தோன்றும் பொருளாதாரக் குழப்பத்தின் இயல்பான விளைவு என்று தெரிந்தது. போர் முடிந்து பத்து ஆண்டுகளுக்குள் நிறைய உபரி விளைச்சலை என்ன செய்வது என்ற பிரச்சினை சில நாடுகளுக்கு, முக்கியமாக அமெரிக்காவுக்கும் கானடாவுக்கும் எழுந்தது. உலக மக்கள்தொகையில் பெரும் பகுதிக்குப் போதுமான அளவு உணவு கிடைக்கவில்லை என்பது உண்மை. ஆனால், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மற்றொரு போருக்குத் தளவாடங்கள் சேர்ப்பதற்குப் பதிலாக பன்னாட்டு வாணிபத்தைப் பெருக்க அரசாங்கங்கள் முயன்றிருந்தால் இப்பிரச்சினை தீர்ந்திருக்கும்.

நிறையப் போர்வீரர்கள் யுத்தம் முடிந்து வீடு திரும்பியதும், இங்கிலாந்தில் பிறப்பு விகிதம் அதிகமாயிற்று (1914—18 போருக்குப் பின்னும் இதுபோல நிகழ்ந்தது). இவ் விகித உயர்வு சில காலத்துக்குத்தான் இருந்தது. சில ஆண்டுகளில் பிறப்பு விகிதம் பழைய நிலைக்கு விழுந்து விட்டது.

திருக்கிறது. சில சமயம் இவ்வுயர்வு தடைப்பட்டிருக்கலாம். வாழ்க்கை வசதி பெருகிய அதே அளவுக்குப் பிறப்பு விகிதம் அதிகரிக்கவில்லை. அதற்கெதிராக, பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இன்றைய சமுதாய அமைப்பில் விநோதமான ஒரு நிகழ்ச்சி இது. ஜனத்தொகை என்னவோ அதிகமாகிக்கொண்டு தான் வருகிறது. ஆனால், சாவு விகிதம் குறைந்ததுதான் இதன் காரணமாகும். முன்னைவிடக் குறைவாகக் குழந்தைகள் பிறக்கின்றன; ஆனால், முன்னைவிட அதிக நாள் மக்கள் வாழ்கின்றனர்; ஆகையால், மக்கள்தொகை நிலையாக அதிகரிக்கிறது. சாவு விகிதம் ஓரளவுக்கு மேல் குறைய முடியாது; பிறப்பு விகிதமோ தொடர்ந்து குறைந்துகொண்டே வரும்.[1] எனவே, மக்கள்தொகை இதற்குமேல் அதிகரிக்காது என்றநிலை விரைவில் வரக்கூடும். அப்போது நாளடைவில் மக்கள்தொகை குறையக்கூடும். மக்கள்தொகை பெருகும் விகிதம் குறைவது, மக்கள்தொகை எதிர்காலத்தில் குறைவது இவை பற்றி இங்கு விவாதிக்க இயலாது. ஆனால், மால்தஸின் தீர்க்க தரிசனத்துக்கு இவ்வுண்மைகள் முரண்படுவதை இங்குச் சுட்டிக் காட்டினால் போதும். ஒரு நூற்றாண்டுக்கு முன் இருந்ததை விட அதிகமாக வாழ்க்கைத்தரம் பெற்றவர்கள் அதைக் காப்பாற்றிக் கொள்வதிலும் உயர்த்திக்கொள்வதிலும் மிகவும் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். தாம் மட்டுமன்றித் தம் குழந்தைகளும் முன்னைவிடச் சுகமாக வாழவேண்டும் என்று எண்ணுகின்றனர். முன்காலத்தைவிடத் திருமண வயது அதிகரித்திருக்கிறது. மால்தஸ் தன் கருத்தைச் சொன்ன காலத்தில் இருந்ததைவிடக் குடும்பங்கள் இன்று சிறியவையாக இருக்கின்றன.

ரிகார்டோ, மால்தஸின் காலத்திலேயே வாழ்ந்த மற்றொரு தொன்மைப் பொருளியல் கருத்தினர். அவர் நூல்களில் மிக முக்கியமானது அவரது Principles of Political Economy. அது 1817-ல் அவர் இறப்பதற்குச் சில ஆண்டுகள் முன்புதான் வெளிவந்தது. இந்நூலில் நிலவாரம் பற்றிய கோட்பாட்டை அவர் விவரித்தார். அதை முதலிற் கூறியவர் அவரல்ல. எனினும் அக் கோட்பாடு அவர் பெயரால் வழங்கிவருகிறது. பொருள்களின் மதிப்பைப் பற்றியும் அவர் ஒரு கோட்பாட்டைக் கூறினார். ஒரு பொருளின் உற்பத்திக்கு வேண்டியிருந்த உழைப்பின் விகிதத்தில்தான் அதன் மதிப்பும் உள்ளது என்பதே அக் கோட்பாடு. அதற்குச் சில விதிவிலக்குகள் இருந்தன. பொருள் மதிப்பை மேலும் விஸ்தாரமாக ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) விவரித்தார்.

[1] முன் பக்கத்தின் அடிக்குறிப்பைப் பார்க்க.

'மண்ணுக்குத் தானேயிருந்த, அழிக்க முடியாத விளைச்சல் சக்திக்காக நிலமுதலாளிக்குக் கொடுக்கப்படும் சாகுபடிப் பங்கு' என்று வாரத்தின் இலக்கணத்தை ரிகார்டோ கூறினார்.[1] இவ்விலக்கணம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. எவ்வளவு தூரம் மண்ணுக்குத் தானே பயிர் விளைவிக்கக்கூடிய சக்தி உள்ளது என்பதை மதிப்பிட முடியாது. நிலத்தைக் கவனமாகப் பண்படுத்துவதனாலும் அவ்விளைச்சல் சக்தி உண்டாகிறது. நிலவளம் பல வகைகளில் மாறுபடுகிறது. குறிப்பாக இயல்பான வளப்பம், அங்காடிக்கு அருகில் இருப்பது ஆகிய விஷயங்களில் நிலத்துக்கு நிலம் மாறுபடுகிறது. மக்கள் அனைவருடைய உணவுத் தேவையையும் தீர்க்குமளவுக்கு நிலங்களைச் சாகுபடி செய்கிறோம். பொதுவாக நல்ல இலாபம் தரும் நிலங்கள் முதலில் பயிரிடப்படும். பிற நிலங்கள் தரிசாக இருக்கும் அல்லது வேறு பயன்களுக்கு உதவும். நல்ல இலாபம் தரும் நிலங்களிலும் வித்தியாசங்கள் இருக்கும். ஆனால், அவற்றுள் மோசமான நிலத்தைப் பயிர் செய்தாலும் இலாபம் வரவேண்டும். இல்லாவிடில் யாரும் அதைப் பயிர் செய்ய மாட்டார்கள். வளப்பம் குறைந்த நிலத்துக்கும் வளப்பம் அதிகமானவற்றுக்கும் உள்ள வித்தியாசமே வாரமாகும். இலாபம் நஷ்டம் இரண்டுக்குமான எல்லையில் (margin) உள்ள நிலங்கள், தானிய விலை அதிகரித்தால் பயிராகும்; தானிய விலை குறைந்தால் தரிசாக நிற்கும். அதாவது தானியத்தின் விலையை வாரம் பாதிக்காது; தானியத்தின் விலையைப் பொறுத்துதான் வாரம் நிர்ணயமாகிறது. மக்கள்தொகை தொடர்ந்து பெருகும்போது தரம் குறைந்த நிலங்களிலும் சாகுபடி நடக்கிறது. நல்ல நிலத்துக்கும் தரம் குறைந்ததற்கும் விளைச்சல் திறனில் உள்ள வித்தியாசம் அதிகமாகும் போது வாரமும் அதிகமாகிறது.

மூலதனம், உழைப்பு ஆகிய பிற உற்பத்திக் காரணிகளின் அளிப்பு மாறுபடுகிறது. அவற்றை அளிப்பதில் போட்டி உண்டு. ஆனால், மொத்த நிலத்தின் அளிப்போ மாறுவதது. ஆகையால், மக்கள் தொகை அதிகரிக்கும்போது உணவு விலை அதிகமாகிறது; கூலியும் இலாபமும் குறைகின்றன. நாட்டு வருமானத்தின் பெரும்பகுதி நிலமுதலாளிகளுக்கு வாரமாகக் கிடைக்கிறது என்று ரிகார்டோ எண்ணினார். உழைப்பும், மூலதனமும் பெறும் ஊதியத்தோடு ஒப்பிட்டால் வாரம் வீணுக்குத் தரப்படுவது என்பது அவர் கொள்கை.

[1] 'That portion of the produce of the earth which is paid to the landlord for the use of the original and indistructible powers of the soil.'

(ஆனால், அதை அவர் நிரூபிக்கவில்லை.) எனவே, தானியச் சட்டங்களை (Corn Laws) நீக்க வேண்டுமென்றும், தொழில் விவகாரங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்றும் அவர் கூறினார்.

மேலே குறிப்பிட்டது ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டின் சுருக்கமாகும். அதைப் பலர் பல காரணங்களால் குறை கூறியுள்ளனர். புதிதாக மக்கள் குடியேறிய நாட்டில் ஏதாவதொரு காரணத்துக்காக இயல்பாகவே நன்றாக உள்ள நிலத்தைவிட மோசமான நிலத்தை முதலில் மக்கள் சாகுபடி செய்யலாம். ஆனால், சாகுபடி வரிசையில் ஏற்படும் இம்மாற்றத்தினால் ரிகார்டோவின் முடிவு பாதிக்கப்படாது. மற்றொரு குறையாகக் கூறப்படுவது, வாரமில்லா நிலம் (no rent land) என்று ஒரு நிலம் எங்குமில்லை என்பது; ரிகார்டோவின் கோட்பாடு உண்மையாக இருப்பின் சாகுபடி எல்லையில் (margin) உள்ள நிலத்துக்கு வாரம் இல்லை. ஆனால், குத்தகைக்காரன் நில்முதலாளிக்குச் செலுத்தும் வாரமெல்லாம் ரிகார்டோ சொல்லுகின்ற பொருளாதார வாரம் (economic rent) ஆகாது. நிலத்தில் நிலமுடையவன் செய்திருந்த முதலீட்டுக்காகச் செலுத்தப்படும் தொகையும் இதில் சேர்ந்தது. சில நிலங்களுக்கு மிகக் குறைவான வாரமே செலுத்தப்படுகிறது. அவ்வாரம் முழுவதற்கும் மேற்கூறிய காரணத்தைக் காட்டலாம். தவிர, சில சமயம் பல வயல்களுக்குச் சேர்ந்து ஒரு குடியானவன் வாரம் செலுத்துகிறான். அவற்றில் பல்தரப்பட்ட நிலங்கள் சேர்ந்துள்ளன. அவற்றுள் மோசமான நிலத்தைமட்டும் தனியாக வாரம் செலுத்திப் பயிரிட யாரும் முன்வராமற் போகலாம். மேலும், வாரமற்ற எல்லை நிலம் இங்கிலாந்திலேயே இருக்க வேண்டுமென்பதில்லை. அது தூர தேசங்களான கானடாவிலோ ஆஸ்திரேலியாவிலோ இருக்கலாம்.

மால்தஸ்மீது கூறப்பட்டதற்கு இணையான குறையே ரிகார்டோவின் கருத்துகள்மீது சாட்டப்பட்ட குற்றங்களில் வலியதாகும். மால்தஸைப்போலவே ரிகார்டோவும் தன் காலத்துச் சூழ்நிலையைமட்டுமே கருதினார். தன்னைச் சுற்றியிருந்த நிலையின் அடிப்படையிலேயே தம் முடிவுகளைக் கூறினார். இம் முடிவுகளை மாற்றக்கூடிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்படக் கூடும் என்பதை அவர் போதுமான அளவு எண்ணிப் பார்க்கவில்லை. அவர் நூல் எழுதுவதற்குமுன் இருபத்தைந்து ஆண்டுகளில் பிரிட்டனின் மக்கள் தொகை நிலையாகப் பெருகிவந்தது. தன் உணவுத் தேவையைத் தானே பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு

இருந்தது. தானியவிலை அதிகரித்திருந்தது. புதுப்புது நிலங்கள் சாகுபடிக்கு வந்தன. வாரங்கள் உயரலாயின. ரிகார்டோவின் கருத்துகளுக்கு உதாரணமாகக் காட்டுவதற்கு மிகவும் ஏற்ற சூழ்நிலை அது. இன்னும் துல்லியமாகக் கூறினால் நாட்டின் அக்காலத்துச் சூழ்நிலையின் நியாயமான விளைவாக ரிகார்டோவின் கருத்துகள் அமைந்தன.

மனிதர்கள் தமக்கிடையே மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போட்டி மனப்பான்மையின் அடிப்படையில்மட்டுமே அமைந்திருந்தன என்று ரிகார்டோ நம்பினார். இதற்கு விதிவிலக்கு ஏதும் இல்லை என்பது அவர் கருத்து. அவர் காலத்தில் நல்ல ஆதரவு பெற்று இருந்த தலையிடாமைக் கொள்கை எந்த நாட்டுக்கும் எந்தக் காலத்துக்கும் ஏற்றது என்று அவர் கருதினார். ஆனால், இது உண்மையல்ல. நிலவாரமும் தடையற்ற போட்டியின் விளைவாகத் தான் எப்போதும் நிர்ணயிக்கப்படுகிறது என்பதும் தவறு. ஒரு வேளை ஆங்கில நில முதலாளிகளின் பதிலாட்கள் அயர்லந்தில் குடியானவர்களைக் கசக்கி யெடுத்து வாரம் வசூலித்ததற்கு இது பொருந்தக்கூடும். ஆனால், இங்கிலாந்திலே நிலப் பெருமக்கள் குடியானவர்கள் கொடுக்க முடியாத வாரத்தைக் கேட்டு வற்புறுத்துவது சாதாரணமாக நிகழ்ந்ததல்ல. மற்றொருவன் அதிக வாரம் தர முற்படுகிறான் என்பதற்காகத் திருப்திகரமாக உழைக்கும் குத்தகைக்காரனை வெளியேற்றுவதையும், அவனது வாரத்தை உயர்த்துவதையும் ஆங்கில நில முதலாளிகள் செய்வது இயல்பன்று.

வெளிநாடுகளிலிருந்து தானியம் இறக்குமதி செய்ததால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் நிலவாரம் இங்கிலாந்தில் பாதிக்கப்பட்டது. பல நிலங்களில் சாகுபடி கைவிடப்பட்டது. இதன் விளைவாக வாரங்கள் குறைந்தன. இம் மாதிரி ஏற்படக் கூடும் என்பதை ரிகார்டோ எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், இங்கிலாந்து தன் உணவுத் தேவை முழுவதையும் தானே உற்பத்தி செய்யும் என்று ரிகார்டோ நம்பினார். எந்திரப் போக்குவரத்துச் சாதனங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியபின் புது உலகத்தில் (அமெரிக்கக் கண்டம்) உள்ள நிலங்களுக்கும், பிரிட்டனிலிருந்த நிலங்களுக்கும் போட்டி உண்டாயிற்று. எனினும், இதனாலெல்லாம் ரிகார்டோவின் கருத்துகளின் அடிப்படை உண்மை பாதிக்கப்படவில்லை.

ரிகார்டோவின் நூலுக்குப்பின் ஜேம்ஸ் மில்லின் (James Mill) நூல் வெளிவந்தது. 1821-ல் வந்த இந் நூலின் பெயர் 'Elements

of Political Economy' ஆகும். ரிகார்டோவின் நிலவாரக் கோட்பாட்டை ஜேம்ஸ் மில் ஒப்புக்கொண்டார். ரிகார்டோவுக்கு ஒரு படி மேலே சென்று அக்கோட்பாட்டின் அடிப்படையில் நிலவாரத்தின்மீது விசேஷ வரி போட வேண்டும் என்று அவர் கூறினர். நிலத்தின் சொந்த வளத்தை நிலச் சொந்தக்காரன் உண்டாக்கவில்லை. எனவே, அவ்வளத்தின் விளைவாகத் தோன்றும் வாரம் முழுவதையும் வரியாக அரசாங்கம் பறிமுதல் செய்ய வேண்டும் என்பது அவருடைய கருத்து. இவ்வரியில் மற்ருெரு நன்மையும் இருந்தது. வார வரிச்சுமையைப் பிற வர்க்கத்தினர்மீது நில முதலாளிகள் தள்ளிவிட முடியாது. நில வாரத்தின் இயல்பு அது போன்றது. இவ்வாறு, நிலத்தை நாட்டுடைமையாக்கும் இயக்கத்துக்கு ஜேம்ஸ் மில் முன்னேடியாக விளங்கினர்.

ஜே. ஆர். மெகலக் (J. R. McCulloch) The Wealth of Nations என்னும் நூலையும் ரிகார்டோவின் நூல்களில் பெரும்பாலானவற்றையும் பதிப்பித்து மறுபடியும் வெளியிட்டார். 1825-ல் தன் Principles of Political Economy நூலை வெளியிட்டார். தலையிடாமைக் கொள்கையின் அடிப்படையில், கூட்டுச் சங்கச் சட்டங்களை ரத்து செய்வதை அவர் ஆதரித்தார். தொழிலாளர்கள் கூட்டுச் சேரவும், வேலை நிறுத்தம் செய்யவும் உரிமை பெறுவதால் தீங்கு ஒன்றும் விளையாது என்று அவர் கூறினர். சரியான நிலையை விட மிகவும் குறைவாயிருந்த கூலியை உயர்த்த வேலை நிறுத்தம் உதவக்கூடும்; ஆனல், நிரந்தரமாக அந்த நிலைக்கு மேல் அதை உயர்த்த முடியாது என்று அவர் கூறினர். ஒருவேளை தற்காலிகமாக ஊதியங்கள் அந்நிலையைத் தாண்டி அதிகரித்தால் வேலையின்மை ஏற்பட்டுக் கூலி மறுபடியும் குறைந்துவிடும் என்பது அவரது வாதம். அவரது கருத்தைச் சுருங்கச் சொன்னல், வேலை நிறுத்தத்தைவிட வேலைநிறுத்தம் செய்யும் உரிமைக்கு மதிப்பதிகம்.

நேசௌ சீனியர் (Nassau Senior) பொருளாதார விஷயங்களைப் பற்றி நிறைய எழுதினர்; நிறையப் பேசினர். 1836-ல் Encyclopaedia Brittannica-வில் Political Economy பற்றி அவரது கட்டுரை ஒன்று பிரசுரமாகியது. பின்னர் அது நூல் வடிவமாக வெளிவந்தது. பொருளியலின் வளர்ச்சிக்கு அவர் செய்த விஷய தானங்களில் இரண்டு மிக முக்கியமானவை. மூலதனம் சேர்க்கத் துய்ப்புத் தவிர்ப்பு (abstinence) வேண்டும். அதற்கு ஈடாக மூலதனத்துக்கு வட்டி கிடைப்பது நியாயமே என சீனியர் கூறினர். துய்ப்பதற்காகப் பொருளைச் செலவிடாதிருந்தால்தான் முதல் சேரும்.

மூலதனம் சேகரிப்பவன் தன் தேவைகளைத் தியாகம் செய்கிறான். எனவே, அம்மூலதனத்தினின்று விளையும் புதுச் செல்வத்தின் ஒரு பகுதியை அந்தத் தியாகத்திற்கு வெகுமதியாக அவனுக்கு அளிக்க வேண்டும். விவசாய நிலங்களுக்குத்தான் வாரம் செலுத்தப் படுகிறது என்பதில்லை; எங்கெல்லாம் இயற்கை வளத்தில் வேறு பாடு உள்ளதோ அங்கெல்லாம் வாரம் தோன்றுகிறது என்று சீனியர் கூறினார். சில கரிச் சுரங்கங்கள் மற்றவற்றைவிடக் குறைந்த செலவில் நிறைய நிலக்கரி ஈனலாம்; இவற்றின் நிகர உற்பத்தியில் உள்ள வேறுபாடு வாரத்தின் இயல்பை உடையது. நல்ல இடத்தில் அமைந்துள்ளதால் ஒரு கடை மற்றொன்றைவிட அதிக இலாபம் பெறலாம்; இந்த இலாபங்களின் வித்தியாசம் வாரமாகும். ஒரு தொழிலில் ஈடுபட்ட இருவருடைய திறமை மாறுபட்டால் அவ்விரு வருக்கும் கிடைக்கும் வருமானங்களின் வேறுபாடும் வாரமே. வாரம் இயற்கையான பொருளாதார நிகழ்ச்சியேயன்றி விதிவிலக் கன்று.

சீனியர், தொன்மைப் பொருளியலாரின் வேலையை முடித்து அவர்களது கருத்தைச் சுருக்கமாக்கித் தந்தார். அவர் கருத்துப்படி பொருளியல் நான்கு அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டது; தன்னலக் கோட்பாடு (principle of self-interest),[1] மக்கள்தொகைக் கோட்பாடு, தொழிலில் வளர்ந்துசெல் விளைவுக் கோட்பாடு, விவசாயத்தில் குறைந்து செல் விளைவுக் கோட்பாடு—இந் நான்கிலிருந்து பொருளியலின் எல்லா முடிவுகளையும் வரவழைக்க லாம். பொருளியல் முழுமைபெற வேறெதுவும் தேவையில்லை.

ஜேம்ஸ் மில்லின் மகன் ஜான் ஸ்டூவர்ட் மில். தந்தையின் மேற் பார்வையில் அவர் கல்வி கற்றார். எனவே, தொன்மைப் பொருளிய லாரின் தத்துவங்கள் அவருக்குப் புகட்டப்பட்டன. இளவயதில் அக்கருத்தினரைப் பின்பற்றினார். நாளடைவில் தொன்மைப் பொருளியல் கோட்பாடுகள் சிலவற்றை அவர் ஒப்புக்கொள்ள வில்லை. அவர் பின்னர் எழுதிய கருத்துகள் முன்னர் கொண்டிருந்த கருத்துகளினின்று முரண்பட்டன. ஆதலின், அவர் தொன்மைப் பொருளியலாருள் ஒருவராகச் சாதாரணமாகக் கருதப்படுவதில்லை. அவர் நூல்களில் தொன்மைப் பொருளியல் கோட்பாடுகள் நலிந்து

[1] மனிதன் தன் சுகம் மிகவும் பெருகுமாறும், தன் கஷ்டம் மிகவும் குறையுமாறும் தன் விவகாரங்களை அமைத்துக் கொள்கிறான் என்பது. இது 'இன்பம் நாடும்' (Hedonistic) கோட்பாடு.

காணப்பட்டன. ஆதலின், அவரது நூலைப்பற்றி இங்கே கூறலாம். ஒரு கருத்து மறைந்து மற்றொன்று தோன்றும் இயல்பை அதில் காணலாம். தொன்மைப் பொருளியலின் கோட்பாடுகள் தனியார் சுவாதீனத்தின் அடிப்படையில் அமைந்தவை. தனியார் சுதந்திரத்தில் ஆரம்பித்து வாழ்க்கையின் பின் கட்டங்களில் மில்லின் கருத்து பொதுவுடமைத் தத்துவத்தை நோக்கி மாறியது.

மில் பல நூல்களை எழுதினார். அவற்றில் முக்கியமானது 1848-ல் வெளிவந்த Principles of Political Economy. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவுவரை பொருளியலுக்குத் தரமான பாடப் புத்தகமாக அது கருதப்பட்டது. தொன்மைப் பொருளியலாரின் கருத்துகளை அவர் இந்நூலில் தொகுத்துச் சீராக அமைத்து ஒன்றுக்கொன்று தொடர்புகொண்ட முழுமைபெற்ற எண்ணத் தொகையாக அளித்தார். அதே சமயம், பொருளாதாரம், எங்கும் உண்மையாக இருக்கும் மாறாத இயல்புடைய அடிப்படைக் கொள்கைகள் கொண்டது என்ற அவர்கள் கூற்றைத் தவறெனக் கூறினார். செல்வத்தின் உற்பத்தி பற்றிய விதிகள் வேறு, செல்வத்தின் பங்கீடு பற்றிய விதிகள் வேறு என்று அவர் கூறினார். உற்பத்தி விதிகள் இயற்கை விதிகள்; அவற்றை மாற்ற முடியாது; ஆனால், பங்கீட்டு விதிகள் செயற்கை விதிகள்; சமூகத்தின் விசேஷ ஏற்பாடுகளின் விளைவுகள். நாட்டு உற்பத்தியை வாரமாகவும், கூலியாகவும், இலாபமாகவும் பங்கிடுவது உள்ளார்ந்த விஷயமல்ல. அதை மாற்ற முடியும் என்பது அவரது கொள்கை; அப்பங்கீட்டை மாற்ற வேண்டும் என்பதுதான் இதற்கு அடுத்த நிலை.

இதனால் மில் சமுதாயச் சீர்திருத்தத்தை ஆதரித்தார். அதற்காகப் பொருளாதாரக் கோட்பாடுகளில் அவர் ஆதரவு தேடினார். கூலி முறை ஒழியவேண்டும்; அதனிடத்தில் கூட்டுறவு உற்பத்திமுறை ஏற்படவேண்டும் என்று அவர் கருதினார். முழு வாரத்தையும் பறிமுதல் செய்யுமளவுக்கு நிலவரி விதிக்கவேண்டும் என்று அவர் தந்தை கூறியதை ஆமோதித்தார். தாம் ஏதும் செய்யாது, இயற்கையே அளித்த வளத்தில் பங்குகொள்ள நிலமுடையோருக்கு எந்தத் தார்மீக உரிமையும் இல்லை என்பது அவரது வாதம். இறுதியாக வாரிசுரிமையைக் கட்டுப்படுத்திச் செல்வ உடைமையிலுள்ள பெரிய வேறுபாடுகளைக் குறைக்கவேண்டும் என்று அவர் கூறினார்.

பிற்காலத்தில் பொருளியலைப் பற்றி எழுதியவர்களின் எண்ணிக்கை மிகவும் பெருகியது. அவர்கள் தொன்மைப் பொருளிய

லார் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் கொண்டிருந்த பங்கை ஒப்புக் கொண்ட போதிலும், அவர்களில் பெரும்பாலோர் தொன்மைப் பொருளியல் கோட்பாடுகளிலிருந்து சற்றோ நிறையவோ மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தனர். தலையிடாமைக் கொள்கையின் செல்வாக்கு இருந்தவரை சமூகச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளாதிருந்ததற்கு அரசியல்வாதிகள் அதை ஒரு காரணமாக, நொண்டிச்சாக்காகக் காட்டினர். ஆனால், செல்வமும் (wealth), நலனும் (welfare) வெவ்வேறு என்பது பின்னர் புலனாயிற்று. ரஸ்கின் (Ruskin) கூறியபடி செல்வம் தீங்காகவும் (illth) இருக்கலாம். இவ்வாறு செல்வத்துக்கும் பொதுநலனுக்கும் உள்ள வேறுபாடு தெளிவாகப் புலனானதும், அரசாங்க நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் குறைந்தது. பொருளாதார ஆசிரியர்களும் சமூகச் சீர்திருத்தத்தை ஆதரிக்கும் பொருளியல் கோட்பாடுகளைத் தயங்காது எடுத்துரைத்தனர். பொதுமக்களது நோக்கத்தில் தோன்றிய இம்மாறுதல் பொருளியலாரின் எழுத்திலும் பிரதிபலித்தது. ஆனால், சமீப காலத்தில் சில பொருளாதார நூலாசிரியர்கள் பொருளாதாரம் கோட்பாட்டளவிலேயே இருக்க வேண்டும் என்று கருதி வருகின்றனர். அவற்றின் இயல்புகளை எடுத்துரைப்பது தம் கடமையேயன்றி அவற்றைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதன்று என்று அவர்கள் எண்ணுகின்றனர். பொருளாதாரம் இருப்பதை விவரிக்க வேண்டுமே தவிர இருக்க வேண்டியதை விவரிக்கலாகாது என்று அவர்கள் கூறுகின்றனர். இவ்விஷயத்தில் மட்டும் தொன்மைப் பொருளியலார் இருந்த நிலைமைக்கு நாம் திரும்பிச் செல்லுகிறோம் எனலாம்.

20. பத்தொன்பதாம் நூற்ருண்டின் முதற் பாதியில் விவசாயத்தின் நிலைமை

(Agriculture in the First Half of the Nineteenth Century)

1793 முதல் 1815 வரை பிரிட்டன் பிரான்சுடன் அநேகமாக இடைவிடாது போரிட்டது; 1815-க்குப்பின் 1850 வரை எவ்வகைப் போரிலும் அது மீண்டும் ஈடுபடவில்லை. எனவே, போர்க் காலத்திலும் அமைதிக் காலத்திலும் விவசாயம் இருந்த நிலைகளின் வேறுபாட்டைப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் முதற் பகுதியின் வரலாற்றினின்று நன்கு உணரலாம்.

பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியனுடன் இட்ட போர் ஆகியவற்றின் காலத்தில் நில முதலாளிகளும், குடியானவர்களும் செழித்து வாழ்ந்தனர். 1750-க்கும் 1801-க்கும் இடையே மக்கள்தொகையும், அதனுல் உணவின் தேவையும் ஐம்பது சதவிகிதம் பெருகியது. இக் காலத்தில் விவசாய முறைகளின் அமைப்பிலும் பல அபிவிருத்திகள் தோன்றியபோதும், தேவைக்குத் தக்கவாறு உற்பத்தி பெருகவில்லை. பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதி ஆண்டுகளில் சராசரியாக விளைவதைவிட அறுவடைகள் குறைவாக இருந்தன. சாதாரண காலமாக இருந்தால், உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத உணவை ஐரோப்பிய நாடுகளினின்று இறக்குமதி செய்து தேவையைச் சரிக்கட்டியிருப்பர். நெப்போலியனுடன் போர் நிகழ்ந்த போது, உணவுப் பிரச்சினை மிகவும் மோசமாகியது. 1809-ல் இங்கிலாந்தின் அறுவடை தேவைக்குக் குறைவாக இருந்தது; 1810-ல் அதைவிட மோசமாக இருந்தது. 1812-ல் கோதுமை விலை குவார்டருக்கு (Quarter) 160 ஷில்லிங்காக உயர்ந்தது. பிரான்சிலிருந்து கோதுமை இறக்குமதி செய்ததால்தான் பஞ்சம் தவிர்க்கப்

பட்டது. பிரிட்டிஷ் தீவுகளின் வாணிபத்தை நெப்போலியன் (Napoleon) தடை செய்திருந்தபோதும், கோதுமை ஏற்றுமதிக்கு மட்டும் அனுமதிச் சீட்டுகள்[1] அளித்தார்.

உள்நாட்டில் உணவு உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்க வேண்டுமானால், மேலும் சாகுபடியை விஸ்தரிக்க வேண்டும்; புது நிலங்களைப் பயிரிட வேண்டும். பிற தொழில்களிலோ, உற்பத்தி அளவை அதிகரித்தால் பொருள்களின் விலை குறையும். ஆனால், விவசாயத்தின் ஒரு விநோதமான இயல்பு என்னவென்றால், சாகுபடிப் பரப்பை விஸ்தரித்தால் இதற்கு நேர் மாறான விளைவு உண்டாகிறது. (அப்போது, மலிவாக உணவை இறக்குமதி செய்தாலொழியத் தானிய விலை உயரும்). ஏனெனில், எல்லா நிலமும் சாகுபடிக்கு ஒரே மாதிரி ஏற்றதல்ல. எல்லா இடங்களிலும் வானிலை ஒரே மாதிரி இல்லை. மண்வளமும் நிலத்துக்கு நிலம் மாறுபடுகிறது. ஒரு நிலம் வசதியான இடத்தில் அமைந்துள்ளது; மற்றொன்று வெகு தூரத்தில் உள்ளது. பொதுவாக, ஏற்கெனவே பயிர் விளையும் நிலங்கள் சாகுபடிக்கு மிகவும் ஏற்றவை என்றும், ஏதாவதொரு வழியில் சாகுபடிக்கு அவ்வளவு ஏற்றவையல்லாத நிலங்கள்தாம் புதிதாகப் பயிரிடப்படுகின்றன என்றும் கொள்வதில் தவறில்லை; புதிதாக வந்த நிலங்களின் வளம் குறைவாக இருக்கும் அல்லது அவை வசதியான இடத்தில் இல்லாமல் இருக்கும். ஏற்கெனவே சாகுபடி செய்யப்பெற்ற நிலத்தோடு ஒப்பிட்டால், இப்புது நிலங்களின் நிகர வருமானம், அதாவது உற்பத்திச் செலவு போக மிஞ்சிய வருவாய், குறைவாக இருக்கும். ஆனால், எந்த நிலத்தின் வருமானமும் குடியானவனுக்குச் செலவு கட்டவேண்டும். எந்தக் குடியானவனும் நஷ்டத்துக்குப் பயிரிட மாட்டான். எனவே, தரம் குறைந்த நிலத்தை அவன் சாகுபடி செய்ய வேண்டுமானால், தானியத்தின் விலை உயர வேண்டும். போக்குவரத்து வசதிகள் நன்கு பெருகியிருந்தால், ஒரே பொருளுக்கு ஒரு நாட்டில் இருவிலைகள் இருக்க முடியாது. நல்ல நிலத்தில் விளைந்த கோதுமை, மோச

[1] நெப்போலியன் ஐரோப்பியக் கண்டமுறைப்படி (Continental system) கொண்டிருந்த குறிக்கோள் இங்கிலாந்தின் ஏற்றுமதி வாணிபத்தை அழிப்பதாகும். அது அழிந்தால் பிரிட்டனது வாணிபக் கொடுபண நிலை மோசமாகிப் பணமில்லாது பிரிட்டன் தன்னிடம் சரணடையும் என்று அவர் எதிர்பார்த்தார். ஏற்றுமதியின்றித் தொடர்ந்து இறக்குமதி மட்டும் செய்தால், இவ்வாணிப நிலை மேலும் மோசமடையும் என்பது அவர் கருத்து. ஆனால்தான் கோதுமையை இங்கிலாந்து இறக்குமதி செய்ய அனுமதித்தார். ஆனால், 1809—12 காலத்தில் பிரெஞ்சுக் கோதுமை ஏற்றுமதியை அவர் நிறுத்தியிருந்தால், ஆங்கில மக்கள் பட்டினியால் அவதியுற பிரிட்டன் சரணடைந்திருக்கும் என்பது நெப்போலியனுக்குப் புலனாகவில்லை.

மானதில் விளைந்தது ஆக எல்லாக் கோதுமைக்கும் ஒரே விலை உயர்வுதான் ஏற்படும். அதாவது, புது நிலங்களைக் குடியானவர்கள் பயிரிட வேண்டுமானால், அவற்றின் சாகுபடி இலாபகரமாக ஆகும் அளவுக்குத் தானிய விலை உயரவேண்டும். எனவே, நெப்போலியப் போர்க் காலத்தில் தொடர்ந்து சாகுபடிப் பரப்பு விஸ்தரிக்கப்பட்ட போது தானிய விலை படிப்படியாக உயர்ந்தது.[1] இதன் விளைவாக நிலவாரங்களும் உயர்ந்தன.

இந்தச் சூழ்நிலையால் நில முதலாளிகளுக்கும், அவர்களது குத்தகைக்காரர்களுக்கும் நல்ல வருமானம் வந்தது. ஒரு குத்தகை முடிந்ததும், அதைப் புதுப்பிக்க அதிக வாரம் தரச்சொல்லி முதலாளி கோரினர். நாளடைவில் எல்லா நில முதலாளிகளின் வருவாயும் கணிசமாக உயர்ந்தது. குத்தகை முடியும்வரை தானிய விலையுயர் வால் குடியானவனுக்கு இலாபம் உண்டாயிற்று; குத்தகை முடிந்ததும் அவன் அதிக வாரம் தர ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், மேலும் தானிய விலை உயர்ந்ததால் அவன் தொடர்ந்து இலாபமடைந்தான்.

சிறு நிலங்களின் சொந்தக்காரர்கள் இக்காலத்தில் அத்தகைய செழிப்பான நிலையில் இல்லை. திறந்த வயல்களில் அவர்கள் விளைவித்த தானியம் பெரும் அளவில் நிலம் குத்தகைக்கு வைத்திருந்தவர்களின் உற்பத்தியோடு ஒப்பிட்டால், அளவிலும் தரத்திலும் குறைவாக இருந்தது. நவீன முறைப்படி கால்நடைப் பண்ணை நடத்தியவர்கள் விற்ற விலங்குகளோடு ஒப்பிட்டால், திறந்த பொது நிலங்களில் மேய்ந்த அவர்களது கால்நடைகள் மிகவும் பலவீனமாக இருந்தன. தொழிற்சாலைகள் தோன்றியதால் அவர்கள் தறி வேலையைச் செய்ய முடியவில்லை. பரந்து கிடந்த பொது நிலங்கள் உழப்பட்டன. நில அடைப்பு தொடர்ந்து நடந்தது. இக்காரணங்களால் சிறு நிலக்காரர்கள் மிகவும் வருந்தினர். 1793-ல்கூட எண்ணற்ற சிறுநிலச் சொந்தக்காரர்களும், படிக்காரர்களும் இருந்தனர். முன்னேர் அதிகாரத்தில் இவர்களது மறைவுபற்றிக் கூறப்பட்டது. இம்மறைவை நெப்போலியப் போர் துரிதப்படுத்தியது. 1815-ல் ஆங்கிலக் கிராமங்களில் வேலியிட்ட பெரிய பண்ணைகள் தாம் பொதுவாகக் காணப்பட்டன.[2] திறந்த வயல் சாகுபடி எங்காவது சில இடங்களில்தாம் விதிவிலக்காகக் காணப்பட்டது.

[1] உண்மையில், தானிய விலைகளில் ஏற்ற இறக்கம் நிறைய இருந்தது.
[2] வேலியிட்ட பண்ணைகளெல்லாம் பெரியவை என்று சொல்வதற்கில்லை. சில நடுத்தரமாகவும், சில சிறியவையாகவும் கூட இருந்தன.

சமூக அந்தஸ்தில் தமக்கு மேலான நிலமுதலாளிகளும், குத்தகைக்காரர்களும் பெற்ற செழிப்பான நிலை விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மற்றொரு வர்க்கமான தொழிலாளருக்குக் கிட்டவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஒருபுறம் விவசாயத் தொழிலாளர்களின் ஊதிய விகிதங்கள் குறைந்துவந்தன; மறுபுறம் உணவின் விலை ஏறியதாலும், தறிவேலையை இழந்ததாலும் அவர்கள் வருந்தினர். அவர்களது நிலை மிகவும் மோசமாகிவிடவே, கூலிக்குத் துணையாக இரவலர் நிதியினின்று அவர்களுக்குப் பணவுதவி அளிக்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தைப் பற்றி வேறு அதிகாரத்தில் கூறப்படுகிறது. இது 1795-ல் ஸ்பீன்ஹாம்லண்டில் முதலில் தோன்றியது. ஓரிரு ஆண்டுகளிலெல்லாம் நாடு முழுவதிலும் இது கடைப்பிடிக்கப்பட்டது.

1815-ல் போர் முடிந்ததும், நிறையத் தானியங்களை மீண்டும் இறக்குமதி செய்ய முடிந்தது.[1] வெளிநாட்டிலிருந்து நிறையத் தானியங்கள் இறக்குமதியானால் தானிய விலை உயர்வது தடுக்கப்படும் என்பது தெளிவு. முக்கியமாக ஆங்கில அறுவடை குறைவாக இருந்த ஆண்டுகளில் இறக்குமதி விலையுயர்வைத் தடுக்கும். ஆனால், விலையும் வாரமும் அதிகமாக இருந்தால்தான் குத்தகைக்காரர்களுக்கும் நில முதலாளிகளுக்கும் நல்லது. எனவே, தானிய இறக்குமதி அவர்களைப் பாதித்தது. நிலத்தில் அக்கறை கொண்ட இவர்கள் தம் நலனைப் பாதுகாக்க முயன்றனர். பாராளுமன்ற உறுப்பினரனைவரும் நில முதலாளிகளே ஆதலின், இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு சட்டம் இயற்றுவது எளிதாகப் போயிற்று. 1815-ல் ஒரு தானியச் சட்டம் (corn law) இயற்றப்பட்டது. இங்கிலாந்தில் கோதுமை விலை குவார்டருக்குக் குறைந்தது 80 ஷில்லிங்காக இருந்தாலொழிய கோதுமையை இறக்குமதி செய்வதோ (சுங்கக் கிடங்கிலிருந்து (bond) வெளிவர அனுமதி தருவதோ) கூடாது என்று அச்சட்டம் கூறியது.[2] இச்சட்டம் பிற தானியங்களுக்கும் பொருந்தியது. பிற தானியங்களுக்கு இதற்கிணையான விலைகள் பின்வருமாறு: ரை, 53ஷி; பார்லி 40ஷி; ஓட்ஸ், 26 ஷி.

[1] போமரானியா (Pomerania), சென்ரஷ்யா ஆகிய இடங்களிலிருந்து தானியம் இறக்குமதி ஆயிற்று. டான்ஸிக் (Danzig), ஓடிஸ்ஸா (Odessa) துறைமுகங்களில் அவை கப்பலேற்றப்பட்டன.

[2] நவீன காலத்தின் முதல் தானியச் சட்டம் இதுவல்ல. நான்காம் எட்வர்டின் காலத்திலிருந்தே தொடர்ந்து இத்தகைய பல சட்டங்கள் வெளிவந்தன. 1689-ல் கோதுமை விலை குவார்டருக்கு 48 ஷில்லிங்கை விடக் குறைந்தால் கோதுமை ஏற்றுமதிக்குப் பணவுதவியளிக்கத் தானிய மானியச் சட்டம் (Corn Bounty Act) ஒன்று வந்தது. ரை (rye) விலை 32 ஷில்லிங்குக்குக் குறைந்தாலும், பார்லி விலை 24 ஷில்லிங்குக்குக் குறைந்

விவசாயம் செழித்தால்தான் நாடு செழிக்கும்; இச் சட்டம் பொதுமக்களுக்குத் தீங்கிழைக்காது நிலமுடையோருக்கும் குத்தகைக் குடியானவருக்கும் நன்மை விளைவிக்கும் என்று இதன் சார்பில் கூறப்பட்டது. இதனால் தானிய விலை ஓரளவுக்கு ஸ்திரமாகும், விலைகளின் ஏற்ற இறக்கம் அதிகமாக இராது என்றும் கூறப்பட்டது. கோதுமை விலை குவர்ட்டருக்கு 80 ஷில்லிங்குக்குக் குறைந்தால் இறக்குமதி நின்றுவிடும்; எனவே, விலை மேலும் அதிகமாக விழாது. அங்காடி விலை 80 ஷில்லிங்குக்கு அதிகமானால், கோதுமை இறக்குமதியாகி விலை உயர்வதைக் குறைக்கும்.

அது ஓர் இனத்தின் நன்மைக்காக நாடு முழுவதையும் வருத்தும் சட்டம் என்பது 1815ன் தானியச் சட்டத்திற்கு எதிராகக் கூறப்படும்

தாலும்கூட இப் பணவுதவி கிடைக்கும். தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், விலைகளை ஸ்திரமாக வைக்கவும் இச்சட்டம் உதவியது. (இச்சட்டத்தின் வெற்றிக்கும், கால்பர்ட்டின் (Colbert) உத்தரவின் (edict) தோல்விக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்க. பதினான்காம் லூயியின் ஆட்சியில் பிரான்சில் இருந்த நிதி வர்த்தகனும், பொருளாதார நிபுணனுமான கால்பர்ட்டின் உத்தரவுப்படி பிரான்சிலிருந்து தானிய ஏற்றுமதி தடுக்கப்பட்டது. பிரான்சில் எப்போதும் தானியங்கள் நிறையக் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இவ்வறிவிப்பு வெளியாயிற்று. ஆனால், இத்தடையின் விளைவாக அறுவடை மிகுந்த காலங்களில் தானியத்தை விற்க வழியின்றி நிலங்களில் சாகுபடி நின்றது). ஒரு நூற்றாண்டின் பெரும் பகுதிக்குத் தானிய மானியச் சட்டம் எதிர்பார்த்த விளைவை உண்டாக்கியது. ஆனால், ஜனத்தொகை வளர்ந்து உணவுப் பற்றாக் குறையும் தானிய விலையும் அதிகரித்ததும், 1773-ல் ஒரு தானியச் சட்டம் தோன்றியது. கோதுமை விலையைக் குவார்டருக்கு (Quarter) 48 ஷில்லிங்காக நிலைப்படுத்துவதே அதன் நோக்கம். கோதுமை விலை அதற்கதிகமானால் இறக்குமதி அனுமதிக்கப்பட்டது. இறக்குமதி வரி அதன்மீது பெயருக்குச் சிறிது விதிக்கப்பட்டது. அதேபோல ரை தானியத்துக்கு விலை 32 ஷி., பார்லிக்கு 24 ஷி., ஓட்ஸுக்கு 16 ஷி. கோதுமை விலை 40 ஷி.-க்குக் குறைந்தாலும், ரை விலை 28 ஷி.-க்கும், பார்லி விலை 22 ஷி.-க்கும் குறைந்தாலும், ஏற்றுமதி மானியம் தொடர்ந்து அளிக்கப்பட்டது. ஆனால் விலைகள் இவ்வளவு குறையவில்லையாதலின் மானிய முறை உபயோகமாகவில்லை. 1773-ஆம் ஆண்டைய சட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை; விலை அதிகமானபோதெல்லாம் இறக்குமதி அதிகரிக்கவில்லை. ஏனெனில், வெளிநாட்டு விவசாயிகள் நிச்சயமில்லாத ஓர் அங்காடியின் தேவைக்காக உற்பத்தியை அதிகரிக்க மறுத்தனர். 1791-ல் இச்சட்டத்தைத் திருத்தி மற்றொரு சட்டம் வெளிவந்தது. உள்நாட்டில் கோதுமை விலை குவார்டருக்கு 44 ஷி.-க்குக் குறைந்தால், ஏற்றுமதிக்கு மானியமளிக்கப்பட்டது. உள்நாட்டு விலை 50 ஷி-க்குக் குறைந்தால், இறக்குமதி மீது பலத்த சுங்கவரி விதிக்கப்பட்டது. உள்நாட்டு விலை 54 ஷி.-க்கு அதிகமானால், பெயரளவுக்குச் சுங்க வரி விதிக்கப்பட்டது. ஏற்றுமதி மானியமும் இறக்குமதி வரியும் சேர்ந்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதே சமயம் விலை அதிகமானால் இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் உணவுப் பற்றாக்குறை அதிகமாக இருந்த ஆண்டுகளில் இறக்குமதி பெருகி ரொட்டியின் விலை அதிகமாக உயராதவாறு தடுக்கும் என்றும் நம்பப்பட்டது. உண்மையில் இதனால் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தது; வேலியடைப்பு தொடர்ந்து நடந்தது; புது நிலங்கள் உழப்பெற்றன. ஆனால், போர் மூண்டதும் இறக்குமதி செய்வது நிச்சயமில்லாமற் போயிற்று; சில சமயம் முடியாமலும் போயிற்று. எனவே, போர்க்காலம் முழுவதும் உணவு விலை மிக அதிகமாக இருந்தது.

வாதங்களில் முக்கியமானதாகும். முற்காலத்தில் விவசாயத்தின் செழிப்பைப் பொறுத்துதான் நாட்டின் வளம் இருந்தது. ஆனால், தொழிலிலும் வாணிபத்திலும் கப்பல் ஓட்டுவதிலும் பெரிய அளவில் மக்கள் ஈடுபட்டுள்ள இக்காலத்துக்கு அக் கூற்றுப் பொருந்தாது. அத்தகைய மக்களுடைய நலத்தைத் தியாகம் செய்து நிலக்கிழார், குடியானவர் ஆகியோரின் நலத்தைமட்டும் பேணத் தானியச் சட்டம் முயன்றது என்பது தெளிவு. அடுத்த முப்பது ஆண்டுகளில் மலிவாக உணவை இறக்குமதி செய்து அதற்கு ஈடாக ஆலை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதால் நாட்டு நலம் பெருகும் என்பது நன்கு புலனாயிற்று. தவிர, அத்தகைய கொள்கையால் போகவும் வரவும் சரக்கு நிறையக் கிடைத்துக் கப்பல் தொழிலும் வளம் பெறும்.

1815ஆம் வருடத்துத் தானியச் சட்டம் அதை நிறைவேற்றி யவர்கள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. உணவு விலை அதிகரித்து ஏழைகள் கஷ்டப்பட்டனர்; தானிய விலையின் ஏற்ற இறக்கங்களும் குறையவில்லை; எனவே, நிலத்தில் அக்கறை கொண்டிருந்தவர் களுக்கும் எதிர்பார்த்த நன்மைகள் கிட்டவில்லை. நிச்சயமில்லாத ஒரு வெளிநாட்டு அங்காடிக்காகப் பிற நாட்டு விவசாயிகள் அதிக கோதுமை பயிரிட முன்வரவில்லை. எனவே, இங்கிலாந்தில் கோதுமை விலை உயர்ந்தபோது இறக்குமதி பெருகி விலையேற்றத் தைக் குறைக்கவில்லை. 1817ல் கோதுமை விலை 1/8 ஷி. 7 பென்னி யாக உயர்ந்தது. 1822-ல் 39ஷி. 4பெ. யாகக் குறைந்தது. இச்சூழ்நிலையில் விவசாயம் ஒரு சூதாட்டத்தின் இயல்பைப் பெற லாயிற்று. போர்க் காலத்தில் செலுத்திய அளவு உயர்ந்த வாரத்தைக் குடியானவர்களால் கட்டமுடியவில்லை. சாகுபடி இலாப எல்லையில் (margin of cultivation) அல்லது அதற்கு அருகில் இருந்த பல நிலங்கள் தரிசாக விடப்பட்டன. வாரங்கள் வேறு வழியின்றிக் குறைந்தன.

இதன்பின் ஏற்பட்ட மந்தத்தோடு வரிப்பளுவும் சேர்ந்து விவசாயத்தை அழுத்தின. தொழிலாளிகளுக்குப் பணவுதவி அளித்ததன் விளைவாக நாட்டின் பெரும்பகுதியில் இரவலர் வரிச் சுமை மிக அதிகமாக இருந்தது. தேசீயக் கடன் பெருகியதால் தேசீய அரசாங்கத்தின் வரிச்சுமையும் அதிகரித்தது.

நிலமுதலாளிகள், குடியானவர்கள் ஆகியோரின் வருமானத்தைத் தானியச் சட்டம் அதிகரிக்காததால், அதில் சில திருத்தங்கள் செய்யப்

பட்டன. 1822-ல் தானியங்களின் விலைகளுக்கு உச்ச வரம்புகள் புதிதாக நிர்ணயிக்கப்பட்டன.[1] 1828-ல் இறக்குமதி வரி படிக்குப் படி மாறும் விகிதத்தில் (sliding scale) அமைக்கப்பட்டன.[2] முன் சட்டங்களில் அடியோடு இறக்குமதியைத் தவிர்த்தற்குப் பதிலாக இம்மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால், இவ்வாறு அமைக்கப் பட்ட படிக்குப் படி மாறும் (sliding scale) வரி விகிதத்தால் விலை களை ஸ்திரமாக்க முடியவில்லை. எனவே, 1842-ல் இவ்வரிவிகிதங்கள் மாற்றப்பட்டன.[3] அதற்கும் பலன் ஒன்றுமில்லை.

ரிச்சர்ட் காப்டன் (Richard Cobden), ஜான் பிரைட் (John Bright). சார்லஸ் வில்லியர்ஸ் (Charles Villiers) ஆகியோர் தலைமை யில் லங்காஷயர் ஆலை முதலாளிகள் சிலர் கூடி 1838-ல் தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தைத் (The Anti-Corn Law League) தோற்று வித்தனர்.[4] 1815-லும், அதற்குப் பின்னரும் இயற்றப்பட்ட தானியச் சட்டங்களின் உண்மை விளைவுகளைப் பொதுமக்கள் உணரச் செய்வதே அதன் நோக்கமாகும். அதைத் தோற்றுவித்த லங்காஷயர் ஆலை முதலாளிகள், தடையின்றித் தானியம் இறக்குமதியானால் உணவின் விலை குறையும் என்பதை உணர்ந்தனர். தொழிலாளர் களின் கூலியோ உணவு விலையைப் பொறுத்தது. கூலி குறைவாக இருந்தாலோ, ஆலை உற்பத்தியின் அடக்க விலை குறையும். எனவே, இங்கிலாந்தின் ஆலைப்பொருள்கள் உலகெங்கும் அதிகமாக விற்பதற் காகத் தானியச் சட்டம் ஒழியவேண்டும் என்று காப்டனும், அவரது துணைவர்களும் விரும்பினர்.

1841-ல் நடந்த பொதுத்தேர்தலில் இச்சங்கத்துக்கு வெற்றி கிட்டவில்லை. காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் பெரும்பாலோர் தானியச் சட்டத்தைப் பாதுகாக்கக் கங்கணம் கட்டி யவர்கள். எனவே, ஸர் ராபர்ட் பீலைப் (Sir Robert Peel) பிரதம மந்திரியாகக் கொண்டு தொழிற் பாதுகாப்பை ஆதரிக்கும் மந்திரி சபை ஒன்று அமைக்கப்பட்டது. இருப்பினும், பீல் பிடிவாதக்

[1] கோதுமை, 70 ஷி.; ரை, 46 ஷி.; பார்லி, 35 ஷி.; ஓட்ஸ், 25 ஷி.

[2] கோதுமை விலை குவார்டருக்கு 64 ஷி.-க்குக் குறைந்தால், வரி 25 ஷி. 8 பெ.; விலை 64 ஷி.-க்கும் 69 ஷி.-க்கும் இடையே இருப்பின், வரி 16 ஷி. 8 பெ. ஆகக் குறைந்தது.; விலை 73 ஷி.க்கு அதிகமானால், வரி 1 ஷில்லிங்கு தான்.

[3] குவார்டருக்கு 51 ஷி. அல்லது குறைவாகக் கோதுமை விலை இருந் தால், 20 ஷி. இறக்குமதி வரி. விலை 60 ஷி. ஆனால், வரி 12 ஷி. ஆகக் குறைந் தது. விலை 73 ஷி. அல்லது அதற்கு அதிகமானால், வரி 1 ஷி.

[4] 1838 செப்டம்பரில் அது தனிப்பட (privately) அமைக்கப்பட்டது. 1839 ஜனவரிவரை பொதுமக்களுக்கு நோக்க அறிக்கை (manifesto) ஒன்றை யும் அது வெளியிடவில்லை.

காரரல்ல. நாட்டுக்குப் போதுமான அளவு உணவு உற்பத்தி செய்தால்தான் தானியச் சட்டக் கொள்கையைத் தொடர்ந்து மேற்கொள்வது நியாயமாகும் என்பதை அவர் இறுதியில் உணர்ந்தார். தானியச் சட்டமோ இக்குறிக்கோளை அடையத் தவறிவிட்டது; வருடாவருடம் இறக்குமதி தொடர்ந்து நடந்துவந்தது. *1845*-ல் அயர்லந்தில் உருளைக் கிழங்குப் பஞ்சம் தோன்றி, ஆங்கில அறுவடையும் குறைந்தபோது, இப்பிரச்சினை மிகவும் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. முடிவில் தானியச் சட்டங்களைத் தளர்த்தத்தான் வேண்டும் என்று பீல் ஒப்புக்கொண்டார். ஒருமுறை நிறுத்திவைக்கப்பட்டால், அவற்றை மறுபடியும் புகுத்த முடியாது என்பதையும் அவர் உணர்ந்தார். எனினும், *1846*-ன் தொடக்கத்தில் அவை ரத்து செய்யப்பட்டன. குறைவான இறக்குமதி வரி விகிதங்கள்[1] நிர்ணயிக்கப்பட்டன. இதற்குப் பதிலாக *1849*-ல் குவார்டருக்கு ஒரு ஷில்லிங்கெனப் பெயரளவுக்கு வரி விதிக்கப்பட்டது. *1869*ல் அதுவும் மறைந்தது. அதன் பின்னர் இறக்குமதி வரியின்றித் தானியம் நாட்டுக்குள் இறக்குமதி ஆயிற்று.

[1] கோதுமை விலை 48 ஷி.-க்குக் குறைவானால், 10 ஷி. வரி. விலையில் ஒவ்வொரு ஷில்லிங்கு உயர்வுக்கும் வரி 1 ஷி. குறைந்தது. ஆனால், குறைந்தபட்ச வரி குவார்ட்டருக்கு 4 ஷி. பிற தானியங்கள் மீதும் அதே விகிதத்தில் வரிகள் இருந்தன. பிரிட்டனின் குடியேற்றங்களினின்று வந்த தானியத்தின் மீது வரியில்லை.

சுருக்கங்கள்

1. மேனர் முறை

தோற்றம்:

தெரியவில்லை. இரண்டு காரணிகளினின்று அது தோன்றியிருக்கலாம்.

(1) ரோமானியரது 'வில்' அடிமைகளின் உழைப்பு.
(2) டியூடானியரது 'மார்க்' சுதந்திரக் குடியானவர்களுக்குச் சொந்தமாக இருந்து அவர்களால் பயிரிடப்பட்ட நிலப் பரப்பு.

மேனர்:

பெரிய நிலப்பரப்பு, ஒரு கிராமமும் அதைச் சுற்றியிருந்த நிலங் களும் கொண்டது.

பி.கு. (1) செடிகொடிகளான வேலியால் சூழப்பட்டது.
- (a) கொள்ளையர்களும் வனவிலங்குகளும் வராமல் தடுக்க.
- (b) அடுத்த மேனர் அல்லது பாழ்வெளிகளுக்கும், இந்த மேனருக்கும் இடையான எல்லையைக் குறிக்க.

(2) இங்கிலாந்தின் மேற்குப் பகுதியில் இருந்த சில மேனர்களில் மேய்ச்சல் தொழில் நடந்தது. நெருக்கமாக அமைந்த கிராமமின்றி வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த சிற்றூர்கள்.

மேனரின் பிரபு:

சொந்தக்காரரென்பதைவிட நிலத்தை வைத்திருப்பவர், அதில் குடியாண்மை கொண்டவர் எனலாம். அரசனைத் தவிர எவர்க்கும் நிலத்தின் முழு உரிமை யில்லை.

(1) அரசன் முழுநிலங்கள் நிறைய. பரிசு மானியங்களால் குறைந்தவை, பறிமுதல்கள், வாரிசில்லா நிலங்கள் மூலம்அதிகரிக்கும்.

(2) திருச்சபையைச் சேராத பிரபுக்கள் (Lay Lords)
- (a) பெரிய பிரபுக்கள். நாடு முழுதும் அங்குமிங்குமாகப் பல மேனர்கள்.
- (b) சிறிய பிரபுக்கள். ஓரிரு மேனர்கள் (கிராமப்புறப் பெரு நிலக்கிழார்).

(3) திருச்சபையினர். சமய மாவட்டத் தலைவர் (Bishop), மடத் தலைவர்கள் போன்று. திருச்சபை நிலங்கள் நாளுக்கு நாள் பெருகிவந்தன.

கிராமம்:

மேனர் வீடு. மரம் அல்லது கல். பெரிய கூடம், பிற அறைகள். வெளிவீடுகள்.

சிறு வீடுகள். மரம் அல்லது குச்சி முடைந்தது. ஓரிரு அறைகள். புல், ஓலைக்கூரை, மண் தரை.

மாதாகோயில்.
மதகுருவின் வீடு.
மாவரைக்கும் இயந்திர வீடு.

மேனரின் குறிக்கோள்:

சுயதேவைப் பூர்த்தி. முடியவில்லை; ஆனால், வெளியிலிருந்து பொருள் வாங்குவதைக் குறைப்பது நல்ல நிருவாகத்துக்கு அறிகுறி.

உணவு, உடை, கட்டடப் பொருள்கள் மேனரிலேயே உற்பத்தி.
வெளியிலிருந்து வந்த பொருள்கள்:
பட்டு, கரைகள், நாடாக்கள் முதலியன.
ஊசி, நூல்.
ஆணிகள்.
இரும்பு, எஃகுக் கருவிகள், ஆயுதங்கள்.
உப்பு, தார்.

மேனரின் உபரி உற்பத்தி அருகிருந்த நகர அங்காடியில் விற்கப் பட்டது.

பண்டமாற்று வாணிபம்:

மேனரின் உற்பத்தியை அப்படியே மாற்றிக் கொண்டனர், பணத்தைப் பயன்படுத்தாமல்.

பணம் (1) அடுத்த ஊர் அங்காடிகளில் பொருள் விற்றபோதும்
(2) ஊரூராய்த் திரிபவரிடம் பொருள் வாங்கவும் பயன் பட்டது.

மேனர் நிலங்களின் பாகுபாடு:

(அ) சொந்தத்தின் அடிப்படையில்:

1. டிமீன் (உள்நிலம்) பிரபுவின் நிலம்.
2. வில்லனேஜியம் (வெளிநிலம்) பண்ணையாள்களுடையது.
3. மேனரில் சுதந்திரக் குடியானவர்களின் நிலங்கள்.

பி. கு.—சட்டப்படி கண்டிப்பாகப் பார்த்தால் வில்லனேஜியம் பிரபுவுக்குச் சொந்தம்; டிமீனில் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது.

(ஆ) படுத்திய பயனின் அடிப்படையில்:

(1) சாகுபடி நிலம். இரண்டு அல்லது மூன்று வயல்கள். பர்லாங்குகளாகப் (ஷாட்டுகள்) பிரிக்கப்பட்டன.

துண்டுகளாக மேலும் பிரிக்கப்பட்டன. துண்டுமுறையின் தோற்றம் பற்றிய காரணம் நிச்சயமில்லை.

(2) புல்வெளி. வைக்கோலுக்காக.
(3) வேலியிட்டவை. நல்ல மகசூலுக்கு அல்லது வைக்கோலுக்கு.
(4) சாம்பியன் அல்லது பாழ்நிலம்.

(க) பொது மேய்ச்சலிடம். போதுமான அளவு அல்லது இல்லாமல்.
(ங) கரடுமுரடான மேய்ச்சலிடம்.
(ச) காடு.

குடிமக்கள்:

சுதந்திரமானவர் :

பிரபு (சில சமயம் அங்கே வசிக்கமாட்டார்).
தல அதிகாரி.
மதகுரு.
சுதந்திரக் குடியானவர்.

(க) சுதந்திர மக்கள்.
(ங) சாக்மென்.

தளையுற்றவர் :

பண்ணையாள்கள்:

(க) வில்லின்கள்.
(ங) போர்டர்கள் அல்லது கார்ட்டர்கள்.

அடிமைகள். மிகக் குறைவு. நொர்மன் வெற்றிக்குப் பின் போர்டர் வகுப்பில் ஒன்றிவிட்டனர்.

பண்ணையாள்கள்:

உரிமைகள். வழக்கத்தின்படி, சட்டத்தின்படி அல்ல.

(1) வீடும் தோட்டமும்.
(2) நிலம். சாதாரணமாக வில்லினுக்கு 30 ஏக்கர். போர்டருக்குக் குறைவு.
(3) புல் அறுவடையில் பங்கு.
(4) பொது மேய்ச்சல் உரிமை.
(5) பன்றிகள் கருவாலிக் கொட்டைகளைத் தோண்டித் தின்னலாம்.
(6) வீடு, தட்டுமுட்டுச் சாமான்கள், கருவிகள், அடுப்பெரித்தல் இவற்றிற்கு மரம் வெட்டுதல்.
(7) திருநாட்களில் விடுமுறை.

கடமைகள்: 'திட்டமாகத் தெரியாது'

(1) வார வேலை. சாதாரணமாக உழுதல்.
(2) தருமவேலை.
(3) வண்டியிலேற்றிச் செல்லுதல்.
(4) சில கட்டணங்கள், பொருளாகவோ, பணமாகவோ.

தளைகள்:

(1) மேனரைவிட்டு வெளியேறலாகாது (செவேஜ்).
(2) கிராம இயந்திரத்தில்தான் மாவரைக்க வேண்டும்.
(3) குதிரை, எருது விற்கலாகாது.
(4) கற்கலாகாது.
(5) மகள் திருமணத்தின்போது மார்ச்செட்.
(6) தந்தை சொத்தைப் பெறுங்கால் அபராதமும் ஹெரியட்டும்.
(7) மேனர் நீதிமன்றங்களுக்கு அடங்குதல்.
(8) வரி செலுத்துதல்.
(9) அரச நீதிமன்றங்களில் பிரபுவுக்கு எதிரில் வழக்காடலாகாது.

போர்டர்கள் (காட்டர்கள்):

(1) சட்டப்படி வில்லினுக்குச் சமம்.
பொருளாதார நிலையில் தாழ்வு.
(2) நிலம் குறைவு.
(3) காளை, கலப்பை இல்லை.
(4) வார வேலை ஒரு நாள்தான்.
(5) ஓய்வு நேரம் கூலிக்கு உழைப்பு.
(6) மேனரின் தொழில்வினைஞர்கள்.

விடுதலை:

(1) பிரபுவே விடுதலையளிப்பது
(2) காசு கொடுத்து
(3) மதகுரு ஆகி
} அரிது.
(4) ஓடிப்போய். இடைக்காலத்தின் பின்பகுதியில் அதிகம்.
(5) சேவையை ஒன்றுபடுத்தி. அதிகாரம் 4-ல் காண்க.

பொது நிலைமை:

சாதாரணமாக ஒடுக்கப்படவில்லை. சுமாரான சுபிட்ச நிலை. பொருளாதார நிலை ஒரே சீராக இருந்தது. பிரபுவுக்கு எதிராக வன்றிப் பிறர் அனைவருக்கும் எதிராகச் சுதந்திர நிலை.

தளையுற்ற நிலைக்கு அடையாளம்:

(1) மார்ச்செட், செவேஜ் கொடுக்கவேண்டியது. இதைமட்டும் கொண்டு சொல்ல முடியாது.
(2) வரிக்கு உட்படல்.
(3) பிரபு அனுமதியின்றி எருதினை விற்கமுடியாது.
(4) மேற்பார்வையாளராகப் பணியாற்றுதல்.
(5) இன்ன சேவை செய்ய வேண்டுமென்று தெரியாத நிலை.

சுதந்திரக் குடியானவர்:

சாக்மென், சுதந்திர மக்கள் இருவருக்கும் வேறுபாடு:

(1) பிரபு அனுமதியின்றிச் சாக்மென் நிலம் விற்கலாகாது.
(2) மேனர் நீதிமன்றங்களுக்குச் சாக்மென் கட்டுப்பட வேண்டும்.

சுதந்திரக் குடியானவருக்கும் பண்ணையாள்களுக்கும் வேறுபாடு :

(1) சுதந்திரக் குடியானவர் பிரபுவுக்கு வாரமாகத் தம் உழைப்பை அளித்தால் கடமை திட்டமாகத் தெரிகிறது.
(2) சுதந்திரக் குடியானவர் மேனரைவிட்டு வெளியேறலாம்.
(3) சுதந்திரக் குடியானவர் அரசனது நீதிமன்றங்களில் பிரபு மீது வழக்காடலாம்.
(4) (சாதாரணமாக) சுதந்திரக் குடியானவர் மர்ச்செட் செலுத்த வேண்டியதில்லை.

பி.கு.(அ) இவைமட்டும் கருதி முடிவாக ஏதும் சொல்லமுடியாது. சில சமயம் இவற்றிற்கெதிரான உதாரணங்களும் உண்டு.
(ஆ) பொருளாதார நிலையில் சுதந்திரக் குடியானவனும் வசதியுள்ள பண்ணையாளும் சமம்.

மேனர் நீதிமன்றம் :

பிரபு அல்லது அவரது நிருவாக அதிகாரியால் காலந்தோறும் நடத்தப்படும்.
மேனரின் ஆதிக்கத்தில் உள்ள அனைவரும் வரவேண்டும்.
சிறு குற்றங்கள்
மேனர் வழக்கங்களை மீறுதல் } அபராதத் தண்டனை.
நிலவுரிமை மாற்றங்களை மன்றப் புத்தகத்தில் பதிவு செய்தல்.
நடைமுறை மேனர் வழக்கத்தின்படி வழக்கத்தை எடுத்துரைக்க ஜூரர் குழு நியமிக்கப்படலாம்.

மேனர் விவசாயம்:

(1) இருவயல் அல்லது மூவயல் முறை. பயிர்கள் மாற்றி மாற்றி. ஓர் ஆண்டுத் தரிசு.
(2) உற்பத்திக் குறைவு. எருவிடல் இல்லை.
(3) சாகுபடி நிலத்தில் அறுவடைக்குப்பின் மேய்ச்சல். (காமன் ஆப் ஷேக்)
(4) பிரபுவும் பரிவாரமும் டிமீன் நில அறுவடையைப் பயன்படுத்துவர் அல்லது விற்கப்படும்.
(5) உழுதல்.

கால்நடைகள்;

(1) சிறியவை. தரம் குறைவு. வியாதிகள்; இனவிருத்திக்குக் கால்நடைகள் பொறுக்கி விடப்படுவதில்லை.
(2) எருதுகள் இழுப்பதற்காகவே.
(3) ஆடுகளுக்கு ஸ்காப் நோய். உரோமம் குறைவு.
(4) பன்றி, கோழி, வாத்துகள் மிக அதிகம்.
(5) பனிக்காலத் தீவனப் பிரச்சினை.

மேனர் நிருவாகம் :

நிருவாக அதிகாரி :
பல மேனர்களை மேற்பார்வையிட்டார்.

தல அதிகாரி :
நிருவாக அதிகாரிக்குப் பொறுப்புள்ளவர்.

ரீவ் :

வார வேலையை மேற்பார்வை செய்தார்.

ஹேவர்ட் :

தரும வேலையை மேற்பார்வையிட்டார்.

மேனர் முறையின் பொது இயல்புகள்:

(1) எல்லா மேனரிலும் அதே முறை.
(2) விவரங்கள் மாறினாலும் பொது அமைப்பு, நடைமுறை பெரிதும் ஒன்றே.
(3) பிரபுவுக்கு அனைவரும் அடங்கியிருந்தனர்.
(4) விவசாயத்துக்கான அமைப்பு.
(5) தம் தேவைக்காக உற்பத்தி; விற்க அல்ல.
(6) சுயதேவைப் பூர்த்திக் குறிக்கோள்.
(7) பழைய வழக்கங்கள் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டன.
(8) டிமீன் வேலையைப் பண்ணையாள்கள் செய்தனர்.

வேலியற்ற வயல் சாகுபடியின் குறைகள்:

(1) பரிசோதனை, அபிவிருத்தி இயலாது.
(2) களை பரவுதல்.
(3) வரப்புத் தகராறுகள்.
(4) காலவிரயம்.

2. இடைக்காலத்தில் நகரங்களும் வாணிபமும்

இடைக்கால நகரங்கள்:

சிலவே. சிறியவை. பெரும்பாலும் உண்மையில் பெரிய கிராமங்கள். கிராம இயல்புகள் அப்படியே இருந்தன. வேலிக்குப் பதில் சுவர்.

நகர வளர்ச்சியின் கட்டங்கள்:

(1) பெரிய கிராமம்.
(2) பட்டயம் பெறுதல். வணிகர் கில்டு.
(3) மேலும் வளர்ச்சி. தொழில் கில்டுகள்.
(4) மேலும் வளர்ச்சி. முதலாளித்துவத் தொழிற்சாலைகள்.

நகரங்கள் தோன்றச் சாதகமான காரணங்கள்:

(1) ரோமானிய நகரம் இருந்த இடங்கள். கட்டடப்பொருள்கள்.
(2) சாலைகள், ஆறுகளின் சந்திப்பு அல்லது ஒரு சாலையும் ஆறும் சந்திக்குமிடம்.
(3) கப்பல் தங்குமிடங்கள். ஆறுகளில் கப்பல் செல்லும் தலையிடங்கள்—துறைமுகங்களுக்காக.
(4) பிரதான திருக்கோயில் அல்லது மடத்துக்கு அருகே.

பட்டயங்கள்:

அரசனிடமிருந்து அல்லது மேனரின் பிரபுவிடமிருந்து சலுகைகள். நகரத்துக்கு நகரம் மாறின.

சாதாரணமாக

(1) நகரக் கப்பம்.
(2) நகர நீதிமன்றம்.
(3) தனிநபர் சுதந்திரம்.
(4 வணிகர் கில்டு.
(5) அங்காடி அல்லது திருவிழாச் சந்தை.

அங்காடிகள்:

உரிமை:

அரசர் (அ) நகர நிருவாகிகள்.
(ஆ) தனி நபர்.
(இ) திருச்சபைக்கு அளித்தார்.
அல்லது (ஈ) அவரே வைத்திருந்தார்.

வருமானம்:

சுங்கங்கள்.
கடை வாடகை.

முக்கியத்துவம்:

பொருள்கள் வாங்க, விற்க. சாட்சிகள்முன் பேரம்.

காலம்:

லண்டனில் தினமும். பிற இடங்களில் வாரம் ஒருநாள் (சில விதிவிலக்குகள்)

திருநாள் சந்தைகள்:

காலம் :

ஆண்டுக்கு ஒரு முறை. சில நகரங்களில் ஆண்டுக்கு இருமுறையும் மேலும் நடக்கலாம்.

திருச்சபையுடன் தொடர்பு:

திருச்சபை ஆதரவு.
புனிதர் நன்னுள்.
யாத்திரைகளினின்று தோற்றம்.

உரிமை:

அரசாங்க அனுமதி.

விவகாரங்கள்:

விசேஷமான பொருள்களில்; சில பொதுப் பொருள்களும் உண்டு.

நிருவாகம்:

சந்தை அதிகாரிகள்.

பைபௌடர் மன்றம்:

தகராறுகளைச் சட்டெனத் தீர்க்க வணிகர் விதிகள்.

முக்கியத்துவம்:

சில சந்தைகள் பிரசித்தி பெற்றவை. பெரும்பாலானவை அந்தப் பிராந்தியத்துக்குமட்டும் முக்கியம்.

வணிகர் கில்டு :

நகரத்தில் வாழ்ந்த வணிகர்களின் சங்கம், தமக்குள் உதவ, பாது காப்பளிக்க, சலுகைகளை விசேஷமாகப் பெற.

உறுப்பினர் :

நகரக் குடியுரிமையினரும், கில்டு உறுப்பினரும் ஒருவரே அல்ல. அவர்களில் சிலர் கில்டில் இல்லை. வெளியார் சிலர் கில்டில் இருந்தனர்.

சலுகை :

நகருக்குள் வியாபார முற்றுரிமை. வெளியார் நகருக்கு வந்து விற்கலாம் - மொத்தமாக-சுங்கம் செலுத்தி, கில்டுக்காரருக்கு மட்டும்.

இடைக்கால வாணிபத்தின் கொள்கை :

வழக்கமான விலைக்கு நியாயமான வியாபாரம். நியாயமான இலாபம். பற்றுக்குறை அல்லது தேக்கம் காரணமாக விலைகளை மாற்றக்கூடாது.

மொத்தமாக வாங்குதல், முந்தி வாங்குதல், இலாப வாணிபம் தடைசெய்யப்பட்டன.

வியாபாரத்தின்மீது கட்டுப்பாடுகள் :

கில்டு அதிகாரிகளால் பரிசோதனை. குற்றங்களுக்கு அபராதம் அல்லது தண்டனையாகக் கில்டினின்று நீக்கம்.

பண்டத் தொகுதியைப் பங்கிடும் உரிமை :

கடன்கள் செலுத்துதல்.
வாணிப ஒப்பந்தங்கள்.
தரும, சமயப் பணிகள்.

அமைப்பு :

முதுமக்கள், காவலர்.
கூட்டங்கள், விருந்துகள்.
கில்டு நீதிமன்றம்.

நகர நிருவாகத்துடன் தொடர்பு:

இரண்டும் ஒன்றன்று. நெருங்கிய தொடர்பு; சில சமயம் பேதம் கூறமுடியாது. இரண்டுக்கும் போட்டியில்லை.

3. தொழில் கில்டுகள்

விளக்கம் :

பொருள் உற்பத்தியில் ஈடுபட்ட, தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் சங்கங்கள்.

தோற்றம் :

(1) ஒரு குறிக்கோளுள்ள மக்கள் கூட்டுச் சேரும் இயல்பு.
(2) நகர அதிகாரிகளின் வற்புறுத்தல்.

தொழிலைக் கட்டுப்படுத்துதல் :

கில்டு செய்தது. கட்டாயமாக அங்கத்தினராதல். நகராட்சியின் (வணிகர் கில்டின்) அதிகாரத்துக்கு உட்பட்டது.

சில தொழில் கில்டுகள் அரசாங்கப் பட்டயம் பெற்றன.

கில்டின் நோக்கம் :

உற்பத்தியின் தரம் உயர்வாக இருக்கவேண்டும். நியாயமாக நடந்துகொள்கிறதென்ற நற்பெயர் பெறவேண்டும்.

அமைப்பு :

காவலர். வேலையை மேற்பார்க்க, பொருள்களைப் பரிசோதிக்க, குற்றங்களுக்குத் தண்டனை, அபராதம், சட்டத்திலேற்றுதல், கில்டினின்று நீக்கப்படல்.

மன்றம்:

பொதுச்சபை. விதிகள் செய்தது.

கைவினைஞர்களின் வகைகள் :

தொழில் முதல்வர்கள், தேர்ந்த கூலியாட்கள், தொழில் பயில்வோர்.

யாவரும் சேர்ந்து வேலைசெய்தனர். வாழ்க்கையின் பல கட்டங்கள்.

எல்லாரும் ஒன்றாகத் தொழில் முதல்வன் வீட்டில் வசித்தனர். கட்டுப்பாடு.

தொழிற் பயிற்சி:

தொழிலில் புகச் சாதாரணமான வழி. நன்னடத்தை, சமய நெறி, வேலை எல்லாவற்றிலும் பயிற்சி.

பயிற்சிக் காலம் மாறுபட்டது. லண்டன் வழக்கம் ஏழு ஆண்டுகள். பதிவு. வேறு முதல்வரிடம் மாற்றிக்கொள்ளலாம்.

கில்டு விதிப்படி எண்ணிக்கைக் கட்டுப்பாடு :

(அ) தகப்பனின் அந்தஸ்துப்படி.

(ஆ) நேரிடையாக எண்ணிக்கையை நிருணயிப்பது.

சமயம், தருமப் பணிகள்:

(சில சமயம் கில்டுக்குள்ளேயே விசேஷ அமைப்பு)

திருக்கோயில். சகாய புனிதரின் பீடம். மிஸ்டரி நாடகங்கள். நோய்வாய்ப்பட்டவர், ஏழை உறுப்பினர். இறந்தவரின் மனைவி மக்கள்.

இரவலர் இல்லங்களும் பள்ளிகளும்.

தொடர்புகள் :

கில்டின் ஓர் உறுப்பினருக்கும் மற்றொருவருக்கும்:

உடன்பிறந்தார் போல. ஒருவருக்கொருவர் உதவி. ஒருவர் நஷ்டத்தில் இலாபம் பெறலாகாது. தகராறுகளைக் கில்டு தீர்க்கும்.

ஒரு கில்டுக்கும் மற்றொன்றுக்கும்:

சில சமயம் தகராறுகள், முக்கியமாக இரண்டுக்குமிடையில் வரம்பு குறிப்பதில்.

தொழில் கில்டுக்கும் வணிக கில்டுக்கும்:

பல கருத்துக்கள் இருக்கக்கூடும். ஒவ்வொன்றிலும் ஓரளவு உண்மை.

(அ) விரோதம். ஏழைத் தொழிலாளிக்கும் பணக்கார வணிகருக்கும்.
(ஆ) இரண்டிலும் அங்கம். பலர் தொழிலாளிகள் மட்டுமன்றி வணிகருமாவர்.
(இ) ஒன்றன் வழித்தோன்றலாக மற்றது. பொருளாதார அமைப்பின் சிக்கல்.

அதிகரித்ததும் வணிககில்டு பல தொழில் கில்டுகளாகப் பிரிந்தது.

தொழில் முதல்வருக்கும் தேர்ந்த கூலியாட்களுக்கும்:

கில்டுமுறை உச்சநிலையில் இருந்தபோது உண்மையில் போட்டியில்லை. கூலிப்பிரச்சினை யில்லை. கூலியாட்கள் பின்னர் முதல்வராக எண்ணினர்.

கில்டுகளின் பின்வரலாற்றில் கூலியாட்களின் குற்றச்சாட்டுகள்:

(அ) முதல்வராகும் வாய்ப்புக் குறைந்தது.
(ஆ) கூலி, உழைப்பு நிலவரம்.
(இ) பயிற்சியாளர் ஒப்பந்தத்தில் கட்டுப்பாடுகள்.
(ஈ) பயிற்சியாளர் எண்ணிக்கை மிக அதிகம்.
(உ) கூலியாட்களுக்குக் கில்டில் தாழ்ந்த அந்தஸ்து.

தொழில் முதல்வர்களின் குற்றச்சாட்டுகள்:

கூலியாட்கள் சோம்பேறிகள், குடிகாரர்கள், நடத்தை கெட்டவர்கள்.

தேர்ந்த கூலியாட்கள் கில்டுகள்:

தொழில் கில்டுகளின் விரோதம். திறன் குறைந்தவர்களின் சங்கம். பணவசதி குறைவு. தொழிலில் திறமை மிக்கவர்கள் சேரவில்லை.

கில்டுகளின் நோக்கத்தில் மாறுதல்:

இடைக்காலத்தின் இறுதியில்:

(1) தன்னலம், நேர்மையைக் காப்பாற்றுவதைவிட அதிகமாக.
(2) புதிதாகச் சேருவோர் மீது கட்டுப்பாடு. அதிகமான நுழைவுக் கட்டணம்.
(3) சிலவற்றில் கூலியாட்கள் தலைவர்களாக முடியாது.
(4) உடுப்பு. உதவியாளரின் மன்றம்.
(5) சிலவற்றில் உடுப்பாளர், கில்டு உற்பத்தி விற்பனையின் முற்றுரிமை பெற்றனர்.

கில்டுகளின் மறைவு:

(1) தன்னலம் தொழில் வளர்ச்சியைப் பாதித்தது.
(2) புது நகரங்கள், கில்டு ஆதிக்கமின்றி.
(3) தொழில்கள் நகரச் சுவருக்கப்பாலும் கிராமங்களிலும் வளர்ந்தன. கில்டு கட்டுப்பாடுகளினின்றி விடுதலை. கிராமக் கைவினைஞன் திறன் குறைவு. சரியான பயிற்சியில்லை.
(4) ஆறாம் எட்வர்ட் ஆட்சியில் கில்டுகள் கொள்ளையடிக்கப்பட்டன. லண்டன் கம்பெனிகள் உயிர்பிழைத்து நின்றன.

கில்டுகளும் தொழிற் சங்கங்களும்:

வரலாற்றுத் தொடர்ச்சி ஏதுமில்லை.

கில்டுகள்	தொழிற் சங்கங்கள்	(குறிப்புகள்)
(1) ஒரு பிரதேசத்தில் மட்டும்	(1) நாடு முழுதும்	(1) தொழில் தேசிய வளர்ச்சி பெற்றதன் இயற்கையான விளைவு.
(2) முதல்வர்களும் கூலியாட்களும்	(2) தொழிலாளிகள் மட்டும்	
(3) இருவர் குறிக்கோளும் ஒன்றே	(3) அக்கறையில் விரோதம்	(3) எப்போதும் உண்மை அல்ல. பல சமயம் கூட்டுறவு.
(4) சமய, தருமப் பணிகள்	(4) அப்பணிகள் இல்லை	(4) பழைய சங்கங்கள் தோழமை உதவிகள் அளித்தன.
(5) தொழிலின் நற்பெயர்	(5) உறுப்பினரின் நலன்	(5) தொழிலாளர் சங்கங்களுக்கும் பொதுநலனிலும், தொழிலின் நற்பெயரிலும் அக்கறை உண்டு. கில்டுகளும் (பிற்கால வரலாற்றில்) தன்னலம் கருதியது உண்டு.

4. மேனர் முறையின் வீழ்ச்சி

மேனர் முறையின் மிக முக்கியமான அமிசம் டிமீன் நிலத்தைத் தளையுற்ற தொழிலாளர்கள் பயிரிடுவது. பண்ணையாள்களுக்கும் டிமீனுக்கும் உள்ள உறவைத் தகர்த்த காரணங்களே மேனர் முறையின் வீழ்ச்சிக்கு அடிகோலின.

(அ) மாற்றுகை:

கடமை வேலைக்குப் பதில் பணம் செலுத்துவது.

மாற்றுகைக்குத் தேவையான சூழ்நிலை:

(1) போதுமான அளவு பணம். தள்ளியிருந்த மேனர்களில் பணமின்மையால் மாற்றுகை செய்ய முடியாது.
(2) பணத்துடன் பழக்கம். அங்காடிக்கும் சந்தைக்கும் போய்.
(3) உபரி உற்பத்தி, பணத்துக்காக வெளியில் விற்கப்பட்டது. நகரங்களுக்கு அருகில் இருந்த மேனர்களில் பணவசதி மிக்க வில்லின்கள்தாம் முதலில் மாற்றுகை பெற்றனர்.

பிரபுவுக்கு நன்மைகள்:

(1) பண்ணையாள்களைவிடக் கூலியாள்கள் நன்கு உழைத்தனர்.
(2) பண்ணை நிருவாகச் செலவு குறைந்தது.

(3) பண்ணையாள்களைவிடக் குறைவாகக் கூலியாள்கள் தேவைப் பட்டனர்.

பண்ணையாள்களுக்கு நன்மைகள்:

(1) அந்தஸ்து உயர்வு. நிச்சயமற்ற கடமைக்குப் பதில் நிச்சய மான கடமை. முழு விடுதலைக்குச் செல்ல முதற்படி.
(2) தொகை மாறாது. நெடுங்காலத்தை எடுத்துக்கொண்டால் பண்ணையாளுக்கு நல்லது.

மாற்றுகை கடந்த முறை:

எல்லாச் சேவைகளும் ஒரேசமயத்தில் மாற்றப்படவில்லை. பிரபு, பண்ணையாள் இருவருக்கும் மாறுபட்ட அக்கறை.
முதலில் சில்லறைக் கடமைகள் மாற்றப்பட்டன.
பிறகு வாரவேலை. கடைசியில் வண்டி ஓட்டிச் செல்வதும் தரும வேலையும்.

கூலியாள்கள்:

போர்டர்கள்.
வில்லின்களின் இளைய மக்கள்.
மேனருக்குப் புதியவர்கள்.

மாற்றுகையின் வளர்ச்சி:

(1) 14ஆம் நூற்றாண்டின் மத்திவரை, ஒரே சீராக. நாட்டில் பாதிக்கும் குறைவான மேனர்களில் அவ்வழக்கம் இருந்தது.
(2) பெருங் கொள்ளைநோய். தொழிலாளிகள் ஊதிய உயர்வு. பிரபுக்கள் மேலும் மாற்றுகை அளிக்க மறுத்தனர். பண்ணை யாள்கள் தம் வேலையின் மதிப்பை நன்கு உணர்ந்தனர்.
(3) குடியானவர் புரட்சி (காரணங்கள்) அடக்கப்பட்டது.
(4) மேலும் மாற்றுகை தொடர்ந்தது. பிரபுக்கள் மறுத்ததால், பண்ணையாள்கள் தப்பியோடிவிட்டனர்.
(5) 1450-ன் போது இயல்பு.
1500-ன் போது அநேகமாக எல்லாரும் விடுதலைபெற்றனர்.
எலிசபெத் காலம் வரை ஒருசிலர் தளையுற்றிருந்தனர்.

வில்லின் அந்தஸ்து:

வேலைப்பொறுப்பு தீர்ந்து பல காலத்துக்கு வில்லின் அந்தஸ்து இருந்தது. கட்டணங்கள் ஹெரியட், மர்ச்செட், செவேஜ் ஆகியவை வசூலிக்கப் பிரபுவுக்கு உரிமை.
சந்தேகமான வழக்குகளில் நீதிமன்றங்கள் விடுதலையடைந்த தாகக் கருதின.

1617. காலிக்கு எதிர் பிக் வழக்கு:

படிக்காரர்கள்:

பண்ணையாள்களின் வாரிசுகள் மேனர் புத்தகப் பதிவுக்குறிப்பின் படி ஒன்றன் அடிப்படையில் நிலம் பயிரிட்டனர். விடு தலை வாரம் செலுத்தினர் (அவர்களது சேவைக்கு விடு தலைப் பணமாக). போட்டிவாரம் (நிலமதிப்பின் அடிப்படை யில்) அல்ல. விடுதலை வாரம் மாறாது.

(ஆ) டிமீன் கைமாறுவது:

காரணம்:

தொழிலாளர் இல்லாமை.

கால்நடை, கலப்பையோடு நிலக் குத்தகை:

(அ) பொருளாகவோ, பணமாகவோ வாரம் தரக்கூடிய எவருக்கும் (உதாரணமாகத் தலஅதிகாரி, பணக்கார வில்லின்) பிரபு டிமீன் நிலத்தைக் குத்தகைக்கு விட்டார்.

(ஆ) வாரக்காரனுக்கு மூலதனம் போதாது. பிரபு நிலத்தோடு கால்நடை, கருவிகள், விதை முதலியனவற்றைக் கொடுத்தார்.

(இ) போட்டியடிப்படையில் வாரம். நிலமதிப்பைப் பொறுத்து. குத்தகை புதுப்பிக்கப்படும்போது மாற்றப்படலாம்.

(ஈ) வாரக்காரன் farmer. (ferm என்றால் நிலையான கட்டணம் என்று பொருள்). வாரக்குடியுரிமை.

(உ) சுமார் 150 ஆண்டுகள் இம்முறை வழங்கியது.

சாதாரணக் குத்தகை:

கால்நடை, கலப்பையோடு குத்தகை முறைக்குப் பதில். எந்தக் குத்தகையிலும், சுமார் 50 ஆண்டுகளில். வாரக்காரனுக்கு இம்முறை சௌகரியம். தேவையான மூலதனத்தைச் சேர்த்துக்கொள்ள முடிந்தது.

டிமீன் பல குடியானவர்களுக்குப் பிரித்து வாரத்துக்கு விடப்பட்டது.

நிலக்குடிமை வகைகள்:

சொந்த நிலக்காரன்: பூரண உரிமை. அரசாங்கம் வழங்கியது. வெளியேற்ற முடியாமல் நீதிமன்றப் பாதுகாப்பு.

படிக்காரன்: விடுதலைவாரம், நந்தை நிலம் பெறுங்கால் அபராதம், ஹெரியட் முதலியன செலுத்தி, 16ஆம் நாற்றாண்டின் இறுதியில் நீதிமன்றங்கள் வெளியேற்றப்படாமல் பாதுகாப்பு அளித்தன. நிலம் சாதாரணமாகத் திறந்த வயல்களில்.

வாரக்காரன்: குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு. போட்டி வாரம். நிலம் சாதாரணமாக ஒரே இடத்தில் சேர்ந்து வேலியிட்டிருந்தது.

(இ) மேய்ச்சலுக்கு நில அமைப்பு:

காரணங்கள்:

(1) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரோமத்தின் தேவை அதிகரித்தது.

(2) வேலையாள்கள் குறைவாகத் தேவைப்பட்டனர். வேலையாள் பற்றாக்குறை. ஊதிய உயர்வு.

கட்டங்கள்:

(1) டிமீன் நிலங்களைத் துண்டுகள் மாற்றிக்கொண்டு ஒன்று சேர்த்துக் கொள்வது.

(2) பாழ் நிலங்களை அடைப்பது.

(3) பண்ணையாள்களை வெளியேற்றித் திறந்த வயல்களைப் பறிப்பது.
(4) சுதந்திரக் குடியானவர் நிலத்தை வாங்கிக்கொள்வது.

இயக்கம் பரவிய இடங்கள்:
கிழக்கு, கிழக்கு மிட்லண்டு மாவட்டங்களில் மட்டும். அவற்றிலும் சிறுபான்மை மேனர்களில்.

(ஈ) **மேனர் நீதிமன்றத்தின் தாழ்வு:**

(1) மாற்றுகை அதிகரிக்க, அதிகரிக்க மேனர் வழக்கத்தை மீறிய குற்றங்கள் குறைவு.
(2) அரசனது ஆதிக்கம் விஸ்தரிக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டது.

பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் விவசாய முறை:

(1) பெரும்பாலான மேனர்களில் திறந்த வயல்களில் தொடர்ந்து சாகுபடி.
(2) வில்லின் முறை அநேகமாக மறைந்தது.
(3) கூலிக்கு வேலை.
(4) டிமீன் நிலத்துக்குப் பதில் பெரிய அடைத்த வயல்களில் வாரத்துக்குப் பயிர். மேனர் பிரபு வாரம் பெறுபவன். அநேகமாக மேனரில் வசிப்பதில்லை.
(5) சில மேனர்களில் பயிருக்குப் பதில் மேய்ச்சல்.
(6) பண்டமாற்றுக்குப் பதில் பணத்துக்கு வாணிபம்.
(7) பழக்கவழக்கங்களின் சக்தி குறைந்தது.
(8) போட்டி மனப்பான்மை வளர்ந்தது.

5. கம்பளி நெசவுத் தொழிலின் வளர்ச்சி

தொழில் வளர்ச்சியின் கட்டங்கள்:

(1) வீடு: குடும்பத்தின் உபயோகத்துக்காக; விற்கவல்ல.
(2) கில்டு: ஏவியவாறு கைவினைஞர்கள் தயாரித்தனர்.
(3) இல்லத் தொழில் முறை: தொழிலாளிகள் தம் வீடுகளில் கைத்தறி நெசவு. முதலாளி கூலி தருகிறார்.
(4) தொழிற்கூடம்: முதலாளியின்கட்டடத்தில் கைத்தறிவேலை.
(5) தொழிற்சாலை: விசைப் பொறிகள்.

வீட்டு நெசவு:

முதன்முதலில் குடும்பத்துக்காகத் துணி. மேனர் விவசாயம் போல இக்கட்டம்.

கில்டு முறை:

நெசவாளிகள் கில்டுகள்:
முதலாம் ஹென்றி காலம்

ஆல்னேஜர்கள்:
மேற்பார்வை, துணியின் நீளம், தரம் இவற்றுக்குச் சான்று கூற

ஏற்றுமதி:

13ஆம் நூற். மட்டத்துணி. மூன்றுளட்வர்டுகளும் ஏற்றுமதியை ஊக்கினர். ஆனுல், வெளிநாட்டுத் துணியின் போட்டியைச் சமாளிக்க முடியாமல் தாழ்ந்தது.

14ஆம் நூற். பிளெமிஷ் நெசவாளிகள் குடிபுகல்: துணியின் தரம் உயர்ந்தது. ஆங்கில, அந்நிய நெசவாளிகளுக்குள் பூசல். சில சமயம் தனி கில்டுகள்.

மூலதனம்:

சில பிளெமிஷ் நெசவாளிகள் முதலாளிகள் வேலையாட்களை வைத்தனர். மேய்ச்சலிடங்களை வாங்கி உரோம அளிப்பை ஸ்திரப்படுத்திக்கொண்டனர்.

இல்லத் தொழில் முறை:

தொழிற்புரட்சி தோன்றுமுன்வரை துணிவணிக முதலாளிகளின் நிருவாகத்தில் நடந்தது.

தொழிற்கூட முறை:

சில தோன்றின. தொழிற் புரட்சிக்குமுன் இல்லத் தொழில் முறைதான் அநேகமாக இருந்தது.

துணிவணிகர்கள்:

தொழிலாளிகளுடன் தகராறு:

கூலிவிஷயம்

சொந்த நெசவாளிகளுடன்:

பதுக்குவது, தரம்குறைந்த துணி விற்றதாகக் குற்றச்சாட்டுகள்.

துணிகர வியாபாரிகளுடன்:

சாயமேற்றுவதுபற்றி.

6. இங்கிலாந்தின் வெளிநாட்டு வாணிபத்தின் வளர்ச்சி

பண்டைய வாணிபத் தொடர்புகள்:

(1) ஓபாவும் மகா சார்லஸும்.
(2) டேனியர்கள். வட ஐரோப்பாவுடன் வாணிபம்.
(3) நார்மன் வெற்றி. ஃபிரான்ஸ், ஹாலந்துடன் வாணிபம்.

இடைக்கால வாணிபத் தொடர்புகள்:

இங்கிலாந்தில் அந்நிய வணிகர்:

(1) சுங்கம்.
(2) நாற்பது நாள்கள்தாம் தங்கலாம்.
(3) மொத்த வியாபாரம் மட்டுமே.
(4) ஆங்கில வியாபாரிகளின் மேற்பார்வையில்.
(5) விற்பதற்கீடாக வாங்குவது.
(6) அரசாங்கப் பாதுகாப்பு. அரசனுக்கும் நகரங்களுக்கும் தகராறு.

ஹேன்ஸ் வணிகர்கள்:

(1) மிருதுவான உரோமத் தோல், ஹெர்ரிங் மீன், தார் இறக்குமதி.
(2) உரோமம், துணி, பதனிட்ட தோல் ஏற்றுமதி.
(3) விசேஷச் சலுகைகள்.
(அ) மேற்கூறிய கட்டுப்பாடுகள் பலவற்றுக்கு விதிவிலக்கு.
(ஆ) கடற் சுங்கவரிச் சலுகைகள்.
(இ) பண்டகசாலைகள் (உதாரணம்) ஸ்டீல்யார்டு.

காஸ்கானிய மது வியாபாரம்:
காஸ்கானிக்கும் இங்கிலாந்துக்குமிடையே அரசியல் உறவு.

வெனிஸுடன் வாணிபம்:
(1) கீழ் நாடுகளினின்று வாசனைத் திரவியங்கள்.
(2) பிளாண்டர்ஸ் கப்பல்களின் வருடாந்திர விஜயம்.

ஆதார அங்காடி:
ஏற்றுமதிக்கான ஆதாரப் பண்டங்களின் (முக்கியமாக உரோமம்) வெளிநாட்டு வியாபாரத்துக்கான அங்காடிக் கேந்திரம் அடிக்கடி மாற்றப்பட்டது. இறுதியில் கலேயில் அங்காடி.

ஆதார வணிகர்கள்:
ஆதாரப் பொருள்கள் ஏற்றுமதி செய்த வணிகர்களின் சங்கம் அல்லது கம்பெனி.

துணிகர வியாபாரிகள்:
பல தனி அமைப்புகள். பட்டயங்கள். அமைப்பு ஏழாம் ஹென்ரியின் பட்டயத்தின்படி முடிவாயிற்று. கட்டுப்பாடுகள் விதித்த கம்பெனி. வெளிநாட்டில் சலுகைகள். பல இடங்களில் பண்டகசாலைகள்; இறுதியில் ஹாம்பர்கில்.

ஆதாரக்காரருக்கு எதிராகத் தகராறு:
துணி ஏற்றுமதி செய்யும் உரிமை பற்றி.

ஹேன்ஸ் வணிகருடன்:
வடகடல், பால்டிக் நாடுகளில் வியாபாரத்தைக் கைப்பற்றப் போட்டி.

1578. துணிகர வியாபாரிகள் இறுதியில் வெற்றி பெற்றனர். இங்கிலாந்தில் ஹேன்ஸ் வணிகர்களின் சலுகைகள் ஒழிக்கப்பட்டன.

1597. ஸ்டீல்யார்டு மூடப்பட்டது.

7. பதினாறும் நூற்றாண்டில் விவசாயப் புரட்சி

பொது இயல்பு:

(சமுதாய நோக்கு, கூட்டுறவு வழக்கத்தின் அடிப்படையான முறைகள் கொண்ட) இடைக்கால முறைக்குப் பதில் நவீன முறை (தனியாள் நோக்கு, போட்டி மனப்பான்மை, தன்னலத்தின் அடிப்படையில்).

இடைக்காலத்தில் சொந்த உபயோகத்துக்காக விளைச்சல்; நவீன காலத்தில் விற்பனைக்காக.

நில அடைப்பும் நிலங்களை ஒன்றுசேர்த்தலும்:

(அ) சாகுபடிக்காக :

துண்டுகளை மாற்றி, சிறு நிலங்களைச் சேர்த்து வயல்கள் பெரிய வாயின.

தொழிலாளர் செலவு குறைவு. சாகுபடி முறையில் முன்னேற்றம்.

ஆனால், சாகுபடி நிலத்தில் பெரும் பகுதி திறந்த வயல்களிலேயே இருந்தன.

(ஆ) மேய்ச்சலுக்காக:

பல கட்டங்கள் : டிமீன்.
பாழ் நிலம்.
வழக்கமான குடியானவர் நிலங்கள்.
சொந்தக் குடியானவர் நிலங்கள்.

குத்தகை நிலங்களிலும் மேய்ச்சல்.

விளைவுகள் :

(1) சில மேனர்களினின்று மக்கள் வெளியேறினர்.

(2) நிலத்தின் மதிப்பு உயர்ந்தது. வாரம் (குத்தகை நிலங்களின் வாரம்; படிக்கார நிலங்களில் விடுதலை; வாரத்தை மாற்ற முடியாது) உயர்ந்தது. நிலச் சொந்தக்காரரின் பேராசைக்குக் கண்டனம். படிக்காரர் குத்தகைக்காரராகக் கட்டாயம்.

(3) நாடோடிகள்.

(4) இரவலர் பிரச்சினை மோசமாகி அரசாங்கம் கவனிக்க வேண்டியதாயிற்று.

டியூடர் கொள்கை:

சாகுபடி நிலத்தை மேய்ச்சலுக்கு மாற்றுவதை எதிர்த்தனர்.

1487 வைட் தீவில் மேய்ச்சல் கட்டுப்பாடு.

1489 மேலும் மேய்ச்சலுக்கு மாற்றுவது தடுக்கப்பட்டது.

புது மேய்ச்சல் நிலங்களில் மறுபடி பயிர் விளைவிக்க வேண்டும்.

ஆடுகளின் எண்ணிக்கைக்கு வரம்பு. சட்டத்திலிருந்து தப்புதல்.

மடங்கள் கலைக்கப்பட்டதன் விளைவுகள் :

(1) பெரும் அளவு நிலம் புதிய சொந்தக்காரர்களிடம்.

(2) நில விற்பனை அதிகரிக்கிறது.

(3) புது நிலக்காரர் புது முறைகளைக் கையாண்டனர். வாரம் உயர்ந்தது. மேய்ச்சல்.

8. வர்த்தகத் தத்துவம்

இடைக்காலச் சூழ்நிலை:

பொருளாதாரம் :

எல்லா நடவடிக்கைக்கும் கட்டுப்பாடு. தனி மனிதன் முயற்சி சிறிதே. தலங்களின் குறிக்கோள் சுயதேவைப் பூர்த்தி. அறநூலும் பொருளாதாரமும் நெருங்கிய தொடர்பு கொண்டன.

சமூகம் :

போக்குவரத்துக் குறைவு. வசதிகள் இல்லை. தேசிய மனப்பான்மை விழிப்புறவில்லை. பக்கமுறைப் பாகுபாடுகள்.

தேசீய உணர்ச்சி:

இடைக்காலத்தின் இறுதியில் வளர்ந்தது.

வர்த்தகத் தத்துவம்:

நாட்டு விடுதலையைப் பாதுகாத்து வலிமையைப் பெருக்குமாறு நாட்டில் உள்ள எல்லா நடவடிக்கைகளையும் அமைப்பது. நாட்டு நலனுக்குத் தனியார், தலங்கள், மக்கள் பகுதிகளுடைய நலனைக் கீழ்ப்படியச் செய்வது. வலிமை பெற்ற முடியாட்சிகள்.

மெர்க்கன்டலிச நடவடிக்கைகள்:

விவசாயம்:

மேய்ச்சலைவிடப் பயிர் விளைச்சலுக்கு ஆதரவு.

(அ) நாட்டுப்புறத்தில் உடலுறுதிமிக்க ஜனத்தொகை.

(ஆ) உணவு உற்பத்தி.

கப்பல் தொழில் :

1381 தொடங்கி (1) கப்பல் சட்டங்கள், கப்பல்களின் எண்ணிக்கையைப் பெருக்க.

(2) ஆழ்கடல் மீன்பிடிப்பு, மாலுமிகள் எண்ணிக்கையை உயர்த்த.

(3) கப்பல் பொருள்கள்.

தொழில் :

கில்டுகள் மறைவு. தொழில்கள்மீது தலக் கட்டுப்பாடுகளுக்குப் பதில் தேசீயக் கட்டுப்பாடு.

1563. தொழிற் கலைஞர்கள் சட்டம்.

வெளிநாட்டு வாணிபம் :

முற்றுரிமை பெற்ற வாணிபக் கம்பெனிகள்.

பொன்னும் வெள்ளியும் :

(1) இறக்குமதி வரிகள்.
(2) தடைகள்.
(3) பணஉதவி மூலம்.

வாணிபக் கட்டுப்பாடு. நாட்டுக்குள் பொன்னும் வெள்ளியும் இயற்கையாக வர வழி செய்ய.

இதில் உள்ள பொருளாதாரத் தவறுகள்.

வெளிநாடுகளில் குடியேற்றம் :

தாய்நாட்டுக்கேற்றவாறு குடியேற்றங்களின் வாணிபம் கட்டுப்படுத்தப்பட்டது.
கப்பல் கட்டுப்பாடுகள்.

வர்த்தகத் தத்துவத்தின் குறைவு, நிறைவுகள்:

குறைவு :

பன்னாட்டு வேலைப் பகிர்வு, பொருள்கள் மாற்றிக்கொள்ளுதல் ஆகியவற்றால் ஒவ்வொரு நாடும் சுயதேவைப் பூர்த்தியில் ஈடுபடுவதைவிட மனித சமூதாயத்துக்கு நல்லது.

நிறைவு :

அன்றைய சூழ்நிலையில் பொருள் வளத்தைவிடப் பாதுகாப்பு முக்கியம்.

9. கம்பெனி வாணிபம்

கம்பெனி வாணிபத்தின் நன்மைகள்:

(1) நற்பெயரைக் காப்பாற்றுவதில் தனி வணிகரைவிடக் கம்பெனி அக்கறை அதிகம் கொள்ளும். தனி வணிகர் ஒரே பயணத்தில் பெரு இலாபம் பெறவிரும்பினர்; மோசடியும் ஏமாற்றலும். கம்பெனி ஒழுங்காக வாணிபம் செய்ய விரும்பியது.

(2) வெளிநாட்டு மன்னர்களிடம் விசேஷ உரிமைகளைக் கம்பெனிபெறக்கூடும்

(3) கொள்ளையரிடமிருந்து கப்பல்களைக் கம்பெனி பாதுகாக்கக்கூடும்.

(4) அரசாங்கம் தனி வணிகர்களைவிடக் கம்பெனிகளை எளிதில் கட்டுப்படுத்தும்; எளிதில் வரி வசூலிக்கும்.

அங்கீகரிக்கப்படாத தனி வணிகர்கள்:

துணிச்சல் அதிகம். சிலசமயம் பழிபாவத்துக்கு அஞ்சமாட்டார்கள். புதுப் பகுதிகளுடன் வாணிபத்துக்குச் சில சமயம் வழிசெய்தனர். இவ்வாறு கம்பெனிகளுக்கு முன்னோடிகளாக விளங்கினர்.

தனி வணிகர்களுக்கு எதிராகக் கம்பெனிகள்:

(1) தனிவணிகர்கள் நடவடிக்கைகளால் தூர தேசங்களில் ஆங்கிலேயரின் நற்பெயருக்கு மாசு நேரலாகாது எனக் கம்பெனிகள் கோரின.

(2) கம்பெனிகள் எதேச்சாதிகாரம் கொண்டிருந்ததாகக் குற்றச்சாட்டு. நிறைய நுழைவுக் கட்டணம் செலுத்திப் புதிய வணிகர் சேர்வதைத் தடுத்தல், விலைகளை உயர்த்திப் பொது நலனுக்குக் கேடு விளைவித்தல். தனி வணிகர் இருப்பது நியாயமே. நுழைவுக் கட்டணம் நியாயமானதாக இருந்து பொதுநலன் பாதிக்கப்படாதிருந்தால் தனி வணிகரை ஆதரிக்கும் வாதம் ஒன்றும் இல்லை.

கம்பெனி வகைகள்:

கட்டுப்பாட்டுக் கம்பெனி :

பட்டயம். கம்பெனி விதிகளை அமைத்தது; பண்டக சாலைகளை அமைத்தது; உரிமைகளைப் பெற்றது; நேரிடையாக வியாபாரம் செய்யவில்லை; உறுப்பினர்கள் தனித்தோ, கூட்டாகவோ வியாபாரம் செய்தனர்.

கூட்டுப் பங்குக் கம்பெனி:

கம்பெனி நேரிடையாக வியாபாரம் செய்கிறது. சம்பளத்துக்கு அலுவலர் நியமித்து நிருவாகம். உறுப்பினர்கள் முதலீடு செய்து இலாப ஈவு பெற்றனர்.

சில கம்பெனிகள்:

ஆதார வணிகர்கள் :
இடைக்காலத்தின் பிற்பகுதியில். உரோம ஏற்றுமதி.

துணிகர வியாபாரிகள் :
கம்பளித் துணியும் பிற பொருள்களும் ஏற்றுமதி.

ஈஸ்ட்லண்டு கம்பெனி :

1579 பால்டிக் வாணிபம், கப்பல் சாமான்கள், பிரசித்தமான கம்பெனியல்ல; ஏனெனில், கப்பல் சாமான்கள் வட அமெரிக்காவிலிருந்து வாங்கப்பட்டன.

1672 முற்றுரிமை நிறுத்தப்பட்டது.

மஸ்கோவி கம்பெனி :

1553 வில்லபியும் சான்சலரும் செய்த பிரயாணம். வடகிழக்கு வழி கண்டுபிடிக்க. மாஸ்கோவில் சான்சலர். ஃசார் மன்னர் வரவேற்றார்.

1555 புதுப் பட்டயம். ரஷ்யாவுடன் வியாபாரம். பாரசீக வாணிபத்தில் பங்கு. லெவாண்ட், கிழக்கிந்தியக் கம்பெனிகளின் போட்டி.

17ஆம் நூற்றாண்டு. கஷ்டங்கள் :

(அ) கம்பெனியின் ஏஜன்டுகள் சொந்த வியாபாரம் செய்தனர்.
(ஆ) டச்சுக்காரர் போட்டி
(இ) ஃசார் உரிமைகளைப் புதுப்பிக்க மறுத்தார்.
(ஈ) ஆர்கேஞ்சல் பண்டகசாலை நஷ்டம்.

17ஆம் நூற்றாண்டு இறுதியில். கட்டுப்பாட்டுக் கம்பெனி. நிறைய நுழைவுக்கட்டணம் குறைவாகக் கட்டணம். அநேகமாக எல்லோரும் வியாபாரத்தில் ஈடுபடலாம்.

பார்பரி கம்பெனி:

ஆப்பிரிக்காவின் வட கடற்கரையுடன் வியாபாரம் மூடப்பட்டது.

லெவாண்ட் கம்பெனி :

சுல்தான் உரிமைகள் அளித்தார். ஸ்பெயினிடம் இங்கிலாந்து, துருக்கி இரண்டுக்கும் பொதுவாக விரோதம்.

1581. துருக்கி கம்பெனிக்கு எலிசபெத்தின் பட்டயம். புதுப்பிக்கப் படவில்லை. வாணிபம் தொடர்ந்து நடந்தது.

1592. லெவாண்ட் கம்பெனிக்குப் பட்டயம். கூட்டுப்பங்கு கப்பல் தொகுதிகள் சீராகச் சென்று வந்தன.

முதலாம் ஜேம்ஸ் காலம். கம்பெனி கட்டுப்பாட்டுக் கம்பெனியாகிறது. மஸ்கோவி, கிழக்கிந்தியக் கம்பெனிகளின் போட்டி.

1754. நுழைவுக் கட்டணம் குறைக்கப்பட்டது.
1825. முற்றுரிமை முடிந்தது.

கிழக்கிந்தியக் கம்பெனி :

இழை நாடுகளில் ஸ்பானியர், டச்சுக்காரர் ஆகியோரின் ஆதிக்கத்துக்குப் போட்டியாக அமைந்தது.

1600. பட்டயம், நன்னம்பிக்கை முனையிலிருந்து ஹார்ன் முனை (Cape Horn) வரை. ஒவ்வொரு யாத்திரைக்கும் தனிக் கூட்டுப்பங்கு.
1612. பல பிரயாணங்களுக்கு ஒரு கூட்டுப்பங்கு.
1657. நிரந்தரமாகக் கூட்டுப்பங்கு.

கஷ்டங்கள் :

(அ) டச்சுக்காரர் விரோதம்.
(ஆ) தனி வணிகர் போட்டி.
(இ) எதிராகக் கண்டனங்கள்.
1698-1708. (ஈ) போட்டிக் கம்பெனி.

வியாபாரம் செய்த நாடுகள்:

(அ) இந்தியா.
(ஆ) சைனு.
(இ) பாரசீகம்.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிப்பணியை மேற்கொண்டது. அதைக் கட்டுப்படுத்த.

1773. ரெகுலேடிங் சட்டம்.
1784. இந்தியா சட்டம்.
1813. இந்திய வியாபாரத்தில் அனைவரும் பங்குபெறலாம். சீன வாணிபம் கம்பெனி வசமே இருந்தது.
1833. வியாபார வேலை நிறுத்தப்பட்டது.
1858. கம்பெனி ஒழிக்கப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனிமீது கண்டனங்கள் :

(1) இந்தியாவுடன் பாதகமான வாணிபக் கொடுப்பல் நிலை; ஆனால்,
(அ) இந்தியப் பொருள்கள் ஐரோப்பாவின் பிற பகுதிகளில் விற்கப்பட்டன. இந்நாடுகளுடன் சாதகமான கொடுப்பல் நிலை ஏற்பட்டது.

(ஆ) இந்தியப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தியாவுக்கு அனுப்பியதைவிட அதிகமாக இங்கிலாந்துக்குப் பணம் வந்தது.

(2) நெடு நாள்கள் பெரிய கப்பல்கள் வெளியிடங்களில் இருப்பதால், ஆங்கிலக் கப்பற்படைப் பலம் குறைகிறது. ஆனால்,

(அ) கிழக்கிந்திய வியாபாரம் வளர்ந்ததால், பெருங் கப்பல்கள் கட்ட ஊக்கமுண்டாயிற்று.

(ஆ) கப்பல்களில் ஒரு பகுதி எப்போதும் தாய்நாட்டின் அருகிலேயே இருந்தது.

(3) இந்திய வாணிபம் ஆங்கிலத் தொழிலை வளர்க்கவில்லை. ஏனெனில், ஆங்கிலப் பொருள்களுக்குக் கீழ்நாடுகளில் தேவையில்லை; ஆனால், இந்தியாவில் ஆங்கிலப் பொருள் களுக்குத் தேவையைக் கம்பெனி வளர்க்க முயன்றது.

ராயல் ஆப்பிரிக்கக் கம்பெனி :

பல கம்பெனிகள் (கீழ்க்குறிப்பைப் பார்க்கவும்)
அடிமை வாணிபம்.
அன்னியர்.
தனி வணிகருடைய போட்டி.

ஹட்சன் வளைகுடாக் கம்பெனி :

1670. பட்டயம், ஹட்சன் வளைகுடாவைச் சுற்றிய பகுதிகளில் ஃபர் வாணிபம். பிரெஞ்சுக்காரர் உரிமைகளை எதிர்த்தனர்.
1713. உரிமைகளைப் பிரான்ஸ் அங்கீகரித்தது.
1869. முற்றுரிமை கைவிடப்பட்டது: வாணிபம் தொடர்ந்தது.

தென்கடல் கம்பெனி :

1711. பட்டயம். அமெரிக்காவில் ஆரினோகோவுக்குத் தெற்கில் உள்ள பகுதிகளுடன் வாணிபம்.
1713. யுட்ரெக்ட் உடன்படிக்கைப்படி வாணிப உரிமைகள்.
1720. தென்கடல் குமிழி.
1750. (1713ஆம் வருடத்து) ஆசியண்டோ கைவிடப்பட்டது. முதலில் பெற்ற உரிமைகள் தொடர்ந்து வைத்துக்கொள்ளப் பட்டன.
1807. வியாபார உரிமைகள் கைவிடப்பட்டன.

10. கப்பல் போக்குவரவு ஏற்பாடுகள்

கட்டுப்பாட்டின் குறிக்கோள்:

கப்பற்படையின் வலிமையைப் பெருக்குவது.

முதல் கடற் கடவுச் சட்டங்கள்:

1381. ஆங்கிலக் கப்பல்களிலேயே ஏற்றுமதி இறக்குமதி அமல் செய்ய முடியவில்லை.
1382. 1381ஆம் வருடச் சட்டத்தில் மாற்றம். ஆங்கிலக் கப்பல்கள் கிடைக்காவிட்டால் அந்நியக் கப்பல்கள்.

முதல் டியூடர் மன்னர்களின் கட்டுப்பாடுகள்:

1485. *காஸ்கனியிலிருந்து ஆங்கிலக் கப்பல்களிலேயே மதுவகைகள்.*
1488. *அக்கப்பல்களை ஆங்கிலேயரே ஓட்ட வேண்டும்.*
1532-40 *பிற சட்டங்கள்.*
1559. *உள்ள விதிகள் நீக்கப்பட்டன.*

எலிசபெத் காலத்துக் கட்டுப்பாடுகள்:

1559. *ஆங்கிலக் கப்பல்களில் வந்த பொருள்களைவிடப் பிற கப்பல்களில் வந்தவற்றுக்கு அதிகமாக இறக்குமதி வரிகள்.*
1563. *கரையோரப் போக்குவரவு.*
மீன் தினங்கள்.

முதல் ஸ்டுவர்ட் மன்னர்கள் காலத்துக்குக் கட்டுப்பாடுகள்:

அறிக்கைகள்.
குடியேற்ற நாடுகளின் வாணிபம் ஆங்கிலக் கப்பல்களில்.
குடியேற்ற நாட்டுப் புகையிலை இங்கிலாந்துக்குத்தான் அனுப்பப்பட வேண்டும்.

கொள்கை பலனளிக்காததற்குக் காரணம்:

(1) *செயலாற்ற முடியாத விதிகள்.*
(2) *அரசாங்கம் அவற்றை அமல் செய்ய முடியவில்லை.*
(3) *அரசாங்கம் சட்டத்தை மீற அனுமதிச் சீட்டு வழங்கியது.*

1650. கடற் கடவுச் சட்டம்:

இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளுடன் அந்நியக் கப்பல்கள் வாணிபத்தில் ஈடுபடலாகாது.

1651. கடற் கடவுச் சட்டம்:

(1) *ஆசியா, ஆப்ரிக்கா, அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து, ஐயர்லந்து அல்லது குடியேற்றங்களுக்கு வரும் பொருள்களை ஆங்கிலக் கப்பல்களில் அல்லது காலனி கப்பல்களில் ஏற்ற வேண்டும்.*

(2) *ஐரோப்பாவிலிருந்து.........ஆங்கிலக் கப்பல்களில் அல்லது பொருள்கள் தோன்றிய நாட்டின் கப்பல்களில்.*

(3) *ஆங்கிலக் கப்பல்கள்—சொந்தக்காரன், தலைவன், மாலுமிகளில் பெரும்பாலார் ஆங்கிலேயர்.*

(4) *இடையில் சரக்குகள் கப்பல் மாற்றப்படலாகாது (சிலவிதி விலக்குகள்).*

(5) *சில வகை மீன் ஏற்றுமதி இறக்குமதிகள் ஆங்கிலக் கப்பல்களில் மட்டும்.*

(6) *ஆங்கிலக் கரையோரப் போக்குவரத்தில் ஆங்கிலக் கப்பல்கள் மட்டும்.*

பீ.கு. (அ) *டச்சுக் கப்பல் தொழிலை ஒடுக்கும் நோக்கம்.*
(ஆ) *ஸ்பெயினுடன் போர் மூண்டபோது சட்டத்தை மீறல்.*
(இ) *ஆங்கில மாலுமிகள் விகிதம் குறிப்பிடவில்லை. புறக்கணிக்கப்பட்டது.*

1660. கடற் கடவுச் சட்டம்:

(1) ஆங்கிலக் கப்பலின் இலக்கணத்தில் மாற்றம். சொந்தக்காரன், தலைவன், மாலுமிகளில் நான்கில் மூன்று பேர் ஆங்கிலேயர். சில சமயம், இங்கிலாந்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(2) குடியேற்றங்களின் ஏற்றுமதி இறக்குமதி இரண்டும் ஆங்கிலக் கப்பல்கள் அல்லது காலனிக் கப்பல்களில்.

(3) வெளிநாட்டு வணிகர்கள் ஆங்கிலக் காலனிகளில் வசிக்கலாகாது.

(4) இங்கிலாந்து, அயர்லந்து, அல்லது மற்றொரு குடியேற்றத்துக்குமட்டும் அனுப்பக்கூடிய குடியேற்றப் பொருள்களின் பட்டியல்.

(5) பட்டியலில் சேராத பொருள்கள் எங்கு வேண்டுமானாலும் அனுப்பப்படலாம்; ஆனால், ஆங்கிலக் கப்பல்கள் அல்லது குடியேற்றக் கப்பல்களில் மட்டுமே.

(6) பட்டியலில் சேர்ந்த ஐரோப்பியப் பொருள்களை ஆங்கிலக் கப்பல்களில் மட்டும் (சில விதிவிலக்குகள்).

(7) ஆங்கிலக் கப்பலில் ஏற்றிய பொருளைவிடப் பிற கப்பல்களில் ஏற்றியவற்றுக்கு அதிகச் சுங்கவரி.

(8) எண்ணெய், திமிங்கலக் கொம்பு, திமிங்கலக் கொழுப்பு, காட்மீன் அந்நியக் கப்பல்களில் பிடித்துக்கொண்டு வரப்பட்டால், இருமடங்கு அந்நியர் வரி.

பின்னர் வந்த கப்பல் சட்டங்கள்:

1662. ஆங்கிலக் கப்பல்கள் இங்கிலாந்தில் கட்டப்பட்டவையே.
1664. ஐரோப்பியப் பொருள்களை இங்கிலாந்திலிருந்தே குடியேற்ற நாடுகள் இறக்குமதி செய்யவேண்டும்.
1670. அயர்லந்து நீக்கப்பட்டது.
1673. ஒரு காலனியினின்று மற்றொன்றுக்கு அனுப்பப்பட்டப் பட்டியல் பொருள்கள்மீது வரிகள்.

18ஆம் நூற்றுண்டு. பட்டியலில் மாற்றங்கள்.

ஸ்காட்லந்து:

அந்நிய நாடாகக் கருதப்பட்டது.
1661. ஆங்கில வாணிபத்துக்குக் கடற் கடவுச் சட்டம் இயற்ற ஸ்காட்லந்து முயன்றது; தோல்வியுற்றது.
1707. இங்கிலாந்தோடு ஐக்கியம். கப்பல் கட்டுப்பாட்டில் அதுவும் சேர்ந்தது.

கப்பல் கட்டுப்பாட்டின் குறைவு நிறைவுகள்:

ஆதரித்து:

வணிகக் கப்பல் எண்ணிக்கை பெருகியது. டச்சுக்காரர் போட்டியில் தோற்றனர்.

எதிர்த்து:

(1) டச்சு முன்னேற்றம் தற்காலிகமானது; நிரந்தரமற்ற காரணங்களின் விளைவு.
(2) கப்பல் கட்டுப்பாட்டின் பலன் உணரப்படுமுன்னரே போரில் டச்சுக்காரர் ஆங்கிலேயரிடம் மும்முறை தோற்றனர்.
(3) கட்டுப்பாட்டு முறை ஏதுமின்றி பிரெஞ்சுக் கப்பல் தொழில் வளர்ந்தது.
(4) பால்டிக் நாடுகளுடன் இங்கிலாந்தின் வாணிபத்துக்கு அது தீங்கிழைத்தது.
(5) அதனால் கட்டணங்கள் உயர்ந்தன. மூலப்பொருள்கள் விலை ஏறி, தொழிற்சாலை உற்பத்தியும் விலையும் அதிகமாயின. வியாபாரம் குறைந்தது.

முடிவு:

கப்பல் கட்டுப்பாட்டினாலன்றி, அதை மீறி வாணிபமும் கப்பல் தொழிலும் வளர்ந்தன.

பழைய குடியேற்றத் திட்டம்:

குடியேற்றங்களின் வாணிபத்தை இங்கிலாந்து கட்டுப்படுத்தியது.

அதன் நியாயம்:

(1) குடியேற்றங்களைத் தோற்றுவிக்கச் செலவு.
(2) பாதுகாப்புப் பொறுப்பு.
(3) அவை தாய்நாட்டின் புறத்தலங்கள். (வர்த்தகத் தத்துவப்படி பகுதியின் அக்கறை முழுவதின் அக்கறைக்கு அடங்கியிருக்க வேண்டும்).

இங்கிலாந்துக்கு நன்மை:

(1) தாய்நாட்டில் செய்யமுடியாத பொருள்கள் கிடைத்தன.
(2) அவற்றைப் பிறருக்கு விற்றதில் இலாபம்.

காலனிக்கு நன்மை:

(1) பல பொருள்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.
(2) இங்கிலாந்தில் வரிச் சலுகைகள்.
(3) பட்டியல் பொருள்களுக்கு நிலையான விற்பனை, நிலையான விலை.
(4) இங்கிலாந்தின் போட்டியினின்றே பாதுகாப்பு.

பழைய குடியேற்றத் திட்டத்தின் வீழ்ச்சி:

18ஆம் நூற்றாண்டு. விக்குகள் சரியாக அமல் செய்யவில்லை.

1764. கிரென்வில் மறுபடி செயலாற்றினார்.
1783. அமெரிக்கக் குடியேற்றங்கள் விடுதலை பெற்றன.

கப்பல் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின் மறைவு:

1796. அமெரிக்கக் கப்பல்கள் பிரிட்டனுக்கு வர,
1796. மேற்கிந்தியத் தீவுகளுக்கு வர,
1808. கானடாவுக்கு வர;
1808. 'பிரேசில்' கப்பல்கள் பிரிட்டனுக்கு வர.
அனுமதி தந்து சட்டங்கள் தளர்த்தப்பட்டன.
1820. சிட்டி ஆப் லண்டனிலிருந்து விண்ணப்பம்.
1822. காலனிப் பொருள்கள் பட்டியல் போடுவது நின்றது. ஆனால், இன்னமும் ஆங்கிலக் கப்பல்களிலும் குடியேற்றக் கப்பல்களிலுமே வாணிபம்.
1822. மத்திய. தென் அமெரிக்க நாடுகளுடன் வாணிபம்; அவர்கள் கப்பலிலேயே.
1822. ஐரோப்பிய வாணிபம்பற்றிய விதிகளில் சில மாற்றங்கள்.
1823. பரஸ்பரச் சலுகை உடன்படிக்கைகளுக்கு அங்கீகாரம். அடுத்த சில ஆண்டுகளில் பல உடன்படிக்கைகள் கையெழுத்தாயின.
1845. சட்டங்களை ஒன்றுசேர்த்து அமைக்க எண்ணம், எதிர்ப்பு.
1849. ரத்தாயின.
1854. கரையோரப் போக்குவரவும் திறந்துவிடப்பட்டது.

11. தொழில்கள்மீது அரசாங்கக் கட்டுப்பாடு

இடைக்கால (தல)க் கட்டுப்பாட்டின் மறைவு:

(ஏதேச்சாதிகார) கில்டுகளின் மறைவு.
கில்டு ஆதிக்கத்துக்கு வெளியே கிராமங்களிலும் புது நகரங்களிலும் தொழில் பரவிற்று. மேற்பார்வை இல்லை. தொழிலாளிகளுக்குப் போதுமான பயிற்சியில்லை.

இடைக்காலத்தில் அரசாங்கக் கட்டுப்பாடுகள்:

(1) நார்மன் வெற்றிக்குப் பின் ஒரே நாணயங்கள்.
(2) 13ஆம் நூற்றாண்டுக் காலத்திலேயே ஒரே எடை, அளவு முறைகள்.
1351. (3) தொழிலாளர் சட்டம். கூலிகளைக்கட்டுப்படுத்த மேலும் பல சட்டங்கள். பலனில்லை.
16ஆவது நூற். (4) குறிப்பிட்ட தொழில்களைப் பற்றிச் சட்டங்கள். பலனில்லை.
(5) கில்டு ஆதிக்கத்தை விஸ்தரித்து அவற்றை அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது. பலனில்லை.

1563 தொழிற்கலைஞர்கள் சட்டம்:

நோக்கங்கள்:
(1) சாசனம் பெற்ற நகரங்களின் தேய்வைத் தடுக்க.
(2) கிராமக் கைவினைஞர்களுக்கு நல்ல பயிற்சி தர.
(3) விவசாயத்துக்குக் கூலியாள் பஞ்சம் நேராது தடுக்க.
(4) ஊதியங்களைச் சீராக்க.
(5) தொழில் சம்பந்தமான பூரணமான சட்டம் அமைக்க.

விதிகள்:

(1) 12-60, விதிவிலக்குப் பெருத, திடகாத்திரமானவரெல்லாம் பயிர்வேலையில் ஈடுபடவேண்டும்.

(2) வேலைக்கு வைப்பது ஓர் ஆண்டுக்கு. மூன்று மாத முன்னறிவிப்பு. சான்றிதழ்.

(3) பயிற்சி கட்டாயம். ஏழு ஆண்டுகள். தொழில் முதல்வனுக்கு 24 வயதாவது ஆகியிருக்க வேண்டும்.

(4) எந்தத் தொழிலை வேண்டுமாயினும் தேர்ந்தெடுக்க முடியாது.

(5) தேர்ந்த கூலியாள், பயிற்சியாள் விகிதம்.

(6) நீதிபதிகளால் கூலி நிர்ணயம்.

பி.கு. (1) சட்டப்படி ஒரு தொழிலைச் சேராது யாருமில்லை.
(2 வேலைத் தொடர்ச்சி.
(3) பயிற்சி வசதிகள்.
(4) கூலி அத்தியாவசியத் தேவைநிலைக்கு அதிகம்.
(5) சட்டம் மக்களது ஆதரவைப் பெற்றது.

18ஆம் நூற்றுண்டு. **இம்முறையின் மறைவு:**

(அ) தொழில் வளர்ந்து வேலைகள் சிக்கலானதால்,
(ஆ) தடையிலா வாணிபக் கொள்கையால்,

கூலிநிர்ணயமுறை கைவிடப்பட்டது.

இம்முறையைப் புதுப்பிக்கப் பாராளுமன்றத்துக்குவிண்ணப்பம். பயனில்லை.

1813 (அ) கூலி நிர்ணயம்.
(ஆ) பயிற்சி.
நீக்கப்பட்டன.

12. 1688–9 புரட்சிக்குமுன் அரசாங்கத்தின் நிதி நிலைமை

நார்மானியர், முதல் அஞ்சுவினர் காலங்கள்:

அரசனின் வருவாய்:

(அ) அரசமேனர்களின் விளைச்சல்.
(ஆ) நிலமுதலாளிகளிடம் நிலமானியக் கட்டணங்கள். தவிர, ஸ்கூடேஜ்.
(இ) அரசனுடைய சில உரிமைகள்.
பர்வேயன்ஸ்.
பிரியம்ஷன்.
பிரிசேஜ்.
வெயினேஜ்.
(ஈ) நேர்முக வரி.
(1) நிலத்தின்மீது:
(க) டேன்கெல்டு. இரண்டாம் ஹென்றி கைவிட்டார். அதற்குப் பதில்.

(ங) { டோனம். நிலவரி.
ஆக்ஸிலியம். நகரக் கட்டணம்.
இவற்றுக்குப் பதில்

(ச) { காருகேஜ். காருகேட் (100 ஏக்கர்) மீது வரி.
டாலேஜ். நகரங்களிலிருந்து.

(2) ஜங்கம சொத்துகள்மீது.

1188 சாலடின்டைத்.

வசூல்:

ஷெரீப் வசூலித்தார்.

(1) சிலவற்றுக்கு மொத்தத் தொகை நிருணயம். மாவட்ட நகர பெர்ம்கள் சிராகக் கருவூலத்தில் கட்டப்பட்டன.

(2) வேறு சில. வசூலான தொகையை அப்படியே கட்ட வேண்டும்.

பி.கு. அரசனது வருமானம் வந்த வழிகள்.

(1) அவன் சொந்த நிலம்.

(2) பிறர் சொத்துகள். ஒப்புதல் தேவை.

(க) மகாசாசனத்தில் ஒப்புதல்பற்றிக் குறிப்பு.

(ங) வரிக்குப் பாராளுமன்ற அனுமதி.

இடைக்காலத்தின் பிற்பகுதி:

அரசனது வருமானம்:

(அ) (ஆ) (இ) மேலே உள்ளபடி.

(ஈ) நேர்முக வரி.

(1) (ஜங்கம சொத்துகள்) பத்திலொன்று, பதினைந்திலொன்று. மதிப்பிடுவதில் கஷ்டங்கள். வருவாய் குறைகிறது. எனவே, அதைச் சரிக்கட்ட.

(2) கூடுதல் வரி (நிலம், ஜங்கம சொத்துகள் மீது) இதிலும் மதிப்பிடுவதில் கஷ்டங்கள். வருவாய் குறைந்தது.

(3) தலைவரி.

(உ) மறைமுக வரிகள்:

1275 (1) பழைய சுங்கம். உரோமம், உரோமத்தோடு கூடிய தோல், தோல், பதனிட்ட தோல்மீது.

1303 (2) புதுச் சுங்கம் (வெளிநாட்டார் மீது) 50%அதிகம்.

(3) டன்னேஜ், பவுண்டேஜ்.

டியூடர் காலம், ஸ்டூவர்ட் காலத்தின் முதற் பகுதி:

அரசனது வருமானம்:

(அ) (ஆ) (ஈ) (உ) மேலே உள்ளபடி.

(இ) உபயோகத்தில் இல்லை.

(ஊ) சமயவழி வருவாய். ரோமாபுரியிலிருந்து பிரிவுபட்ட பின். ஆன் அரசி காலம்வரை.

(எ) சிறப்புரிமை மன்றங்களின் அபராதங்கள்.
(ஏ) இம்பொசிஷன்ஸ். கூடுதலான இறக்குமதி வரிகள்.
(ஐ) முற்றுரிமைகள், பேடன்டுகள், லைசென்சுகள்.
(ஒ) கடன்கள். நன்கொடைகள்.

பி. கு. அமெரிக்காவிலிருந்து பொன்னும் வெள்ளியும் வந்த பின் பணத்தின் மதிப்புக் குறைந்து அரசனுக்கு நிதி நெருக்கடி.

மகாபுரட்சியும் காமன்வெல்த்தும்:

ஆயத்தீர்வின் தோற்றம்:

இரண்டாம் சார்லஸ்:

அரசனது வருமானம்:

(1) சொந்த நிலங்கள்.
(2) நிலமானியக் கட்டணங்கள் ஒழிக்கப்பட்டன. அதற்குப் பதில் ஆயத்தீர்வை.
(3) டன்னேஜ், பவுண்டேஜ்.
4) கணப்படுப்பு வரி.

கஷ்டங்களும் வழிகளும்:

ஆண்டுக்கு வருவாய்—1,200,000 பவுண்டு என மதிப்பிடப்பட்டது.
1,000,000 பவுண்டும் வரவில்லை.
பதினான்காம் லூயியின் உதவி.
பொற்கொல்லர்களிடம் கடன். கருவூலம் நிறுத்தியது.

இரண்டாம் ஜேம்ஸ்:

ஆண்டுக்கு—1,900,000 பவுண்டு வருவாய்.

13. பதினெட்டாம் நூற்றாண்டில் விவசாயப் புரட்சி

1600-1750 இருபுரட்சிகளுக்கிடையே விவசாயத்தின் நிலைமை:

(1) நில அடைப்பு இயக்கம் தொடர்ந்து நடக்கிறது. ஸ்டூவர்ட் ஆட்சியின் பிற்பகுதியில் அது பற்றிய கருத்து மாறுகிறது.
(2) சாகுபடிப் பரப்பு விஸ்தரிக்கப்படுகிறது:
  (அ) பாழ்நிலம்.
  (ஆ) தாழ்நிலம்.
  (இ) புதர் நிலம்.
(3) விவசாய முறைகளில் அபிவிருத்தி:
  (அ) கால்நடை விருத்தி செய்தல்.
  (ஆ) நிலத்தினின்று நீர் வடித்தல்.
  (இ) எருவிடல்
  (ஈ) கிழங்குப் பயிர்கள்.

1750-ல் விவசாயத்தின் நிலைமை:

(1) நாட்டின் பாதி மேனர்களில் திறந்த வயல் சாகுபடி.
(2) பிறவற்றில் ஒருங்குசேர்த்து அடைத்த நிலங்கள்.

(3) திறந்த வயல் மேனர்களிலும் சில வேலியிட்ட நிலங்கள். (முன்னர் பிரபுவின் டிமீன்).

(4) விவசாயிகள்.

திறந்த வயல்களில் { சொந்த நிலக்காரர். படிக்காரர்கள்.

வேலியிட்ட வயல்களில் குத்தகைக்காரர்கள்.

(5) பொதுமேய்ச்சல், வனநிலங்கள் மீது வழக்கமான உரிமை.

(6) கிராமக் குடிசைகளில் நூற்பு நெசவு நடந்தது. விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தது.

திறந்த வயல்முறையின் குறைகள்:

(1) நிலமும் நேரமும் வீணாயின.
(2) சோதனைக்கும் அபிவிருத்திக்கும் இடமில்லை.
(3) தகராறுகள் எழுந்தன.

மாற்றத்துக்குக் காரணம்:

(1) மக்கள்தொகை பெருகியது. உணவு அதிகம் தேவைப் பட்டது. பழைய முறையில் போதவில்லை.

(2) உணவுத் தேவையால் விலை உயர்ந்தது. முறைகள் மாற விளக்கம்.

(3) குடிசை நெசவுத் தொழில் தேய்ந்ததனால், துணைவேலை வாய்ப்பு ஒழிந்து விவசாயத்தையே நம்பியவர்கள் விவசாய முறையை அபிவிருத்தி செய்தாக வேண்டியிருந்தது.

ஒருங்குசேர்த்தலும் வேலியிடலும்:

(1) மக்களின் பொதுவான ஒப்புதல்படி செய்வது அரிது. சாதாரணமாக ஒவ்வோர் இடத்துக்கும் பாராளுமன்றச் சட்டம். அக்கறை கொண்டவர்களில் ஐந்தில் நால்வரும், பிரபுவும் விண்ணப்பித்தால் அனுமதி தந்து சட்டம் இயற்றப்பட்டது. இத்தகைய சட்டங்கள் அநேகமாக மூன்றும் ஜார்ஜ் காலத்தில்.

(2) ஆணையாளர் செய்துவைத்தார். சட்டப்படி செல்லும் உரிமைக் கோரிக்கைகளுக்கெல்லாம் வழிசெய்யப்பட்டது. மேய்ச்சல் வனநில உரிமை சட்டப்படியானதல்ல. இந் நிலங்கள் பிரபுவுக்குத் திரும்பின.

(3) ஒருங்குசேர்த்த சிறு நிலக்காரர்களுக்கு அதை நம்பி உயிர்வாழ முடியவில்லை. சாதாரணமாக விற்றுவிட்டனர் நிலத்துக்கு உடனடியான தேவை.

(4) பெரிய பண்ணைகள் தோன்றின. 200,300 ஏக்கர் அல்லது குறைவான பரப்புடைய நிலங்களாகப் பிரிக்கப்பட்டன. குத்தகைக் குடியானவர்கள்.

யோமென்:

(1) சிலர் நகரத்துக்குப் போய், தொழிற்சாலை அதிபர் அல்லது தொழிலாளி ஆயினர்.

(2) சிலர் நாட்டுப்புறத்திலேயே இருந்து, குத்தகை விவசாயி அல்லது தொழிலாளி ஆயினர்.

ஆங்கில கிராமச் சமூகத்தின் படிகள்:

விவசாயப் புரட்சிக்குமுன்:
மேனர் பிரபுக்கள், யோமென், தொழிலாளிகள்.

விவசாயப் புரட்சிக்குப்பின்:
நிலக்கிழார், குத்தகைக் குடியானவர், தொழிலாளர்.

ஒருங்குசேர்த்தல், வேலியிடலின் விளைவுகள்:

(1) *பரிசோதனை, அபிவிருத்தி முடியும்.*
(2) *தரிசு மறைந்தது.*
(3) *நார்பக் முறை.*
(4) *ஆடுமாடுகளுக்குப் பனிக்காலத் தீனி.*
(5) *நிலத்துக்குத் தொழுவ எரு.*

கால்நடை விருத்தி:

பதினெட்டாம் நூற்றுண்டுவரை கால்நடையின் தரம் குறைவு. இழுப்பதற்காகத்தான் எருதுகள். ஆட்டு ரோமம். எடை மிகக் குறைவு. தொத்து நோய்கள். பனிக்காலம் வந்தபோது, பல கொல்லப்பட்டன.

அபிவிருத்திக்குக் காரணம்:

(1) *சாஸ்திரீயமான இனவிருத்தி.*
(2) *முக்கியமாகப் பனிக்காலத்தில் நல்ல உணவு.*

பதினெட்டாம் நூற்றுண்டு விவசாயத்தில் முக்கியமானவர்கள்:

பேக்வெல்.

காலிங் சகோதரர்கள்:
கால்நடை விருத்தி.

டல்:
டிரில்லினுல் விதைத்தல்.

மூன்ரும் ஜார்ஜ்:
விண்ட்ஸரில் மாதிரிப் பண்ணை.

யங்:
பிரிட்டன், பிரான்சில் பிரயாணம். செய்திகளைப் பரப்பினுர்.

கோக்:
பண்ணைநிருவாகம். மண்ணடித்தல். பலவகைஅபிவிருத்திகள்.

விவசாயப் புரட்சியின் விளைவுகள்;

(1) *உணவு உற்பத்தி உயர்வு. ஆனுல், மக்கள்தொகை அதை விட அதிகம் உயர்ந்தது. இறக்குமதி தேவைப்பட்டது.*

(2) *இடைக்கால விவசாயமுறையின் மறைவு. நவீன கிராம அமைப்பின் தோற்றம்.*

(3) ஆங்கில விவசாயம் ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் தலை சிறந்து நின்றது.

(பி. கு. குத்தகை முறைத் தோற்றத்தின் பல கட்டங்களின் சுருக்கத்தை அவ்வதிகாரத்திலேயே அடிக்குறிப்பில் காண்க.)

14. தொழிற் புரட்சி

இலக்கணம்:

தொழில் வினைமுறைகள், அமைப்பு ஆகியவற்றில் மாறுதல்.

குடிசைத் தொழிலிலிருந்து தொழிற்சாலைகள், கைவேலையிலிருந்து எந்திர வேலை.

மாற்றத்தின் காலம்:

மாற்றம் மெதுவாக.

துணி உற்பத்தியில் எழுபது ஆண்டுகள் பிடித்தன. ஆனால், பல முக்கியக் கண்டுபிடிப்புகள் இருபது ஆண்டுகளுக்குள் செய்
1765-85 யப்பட்டன.

நீராவிவிசை பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. 1850 வரை நீர்ச்சக்கரத்துக்குப் பதில் எல்லா இடங்களிலும் உபயோகப்படவில்லை.

1750க்கு முன் தொழில்கள்:

பெரும்பாலும் குடிசைகளில். முக்கியமாகத் துணி உற்பத்தி.

விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்களால் நடத்தப்பட்டது.
சிக்கு வாரியவை குழந்தைகள்.
நூற்றவர் பெண்கள்.
நெய்தவர் ஆண்கள்.

துணித்தொழில் துணி வணிகர் ஆதிக்கத்தில். அவர்கள் மூலப் பொருள் கொடுத்துத் துணியைப் பெற்றுச் சேகரித்தனர். பின்னர் செய்யப்பட்ட வேலைகள். துணி, வியாபாரிகளுக்கு விற்கப்பட்டது. ஒரு பகுதி ஏற்றுமதியாயிற்று.

முறை திருப்திகரமானதல்ல. வேலை செய்தவர் பலர் சோம்பேறிகள்; தவணையில் துணி கொடுக்காதவர்கள்; நேர்மையில்லை.

மாற்றத்துக்குக் காரணங்கள்:

(1) ஏற்றுமதித் தேவையைச் சமாளிக்க உற்பத்தியைப் பெருக்க வேண்டியிருந்தது.

(2) முக்கியமாக நூற்புக்கு எந்திரங்கள் தேவைப்பட்டன.

உடைப்பொருள்கள்:

புது எந்திரங்கள் முதலில் பருத்தித் தொழிலில்தான் பயன்படுத்தப்பட்டன; கம்பளித் தொழிலில் அல்ல.

(1) கம்பளித் துணித் தொழிலில் அக்கறை கொண்டவர் ஆட்சேபம்.

(2) உரோமம் அதிகமாகக் கிடைக்கவில்லை. பருத்தி லெவான்ட், மேற்கிந்தியத் தீவுகள், பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் அமெரிக்கா-ஆகிய இடங்களினின்று. (பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆஸ்திரேலியா, நியூசீலண்டிலிருந்து உரோமம்.)

விசை:

நீர்:

நிறைய, ஆனுல், ஒரே சீராக இல்லை. சில சமயம் கிடைக்காது. தொழிற்சாலைகள் ஓடைக்குப் பக்கத்தில் அமைந்தன. தொழிற்சாலைக் கிராமங்கள்.

நீராவி:

கட்டுப்படுத்தப்பட்ட விசை. அதிகப்படுத்தலாம், குறைக்கலாம். எங்கும் பயன்படுத்தலாம். சுரங்கங்களருகில் தொழிற்சாலைகள். ஆலை நகரங்கள்.

தொழிலில் மாற்றம்;

(1) தொழிற்சாலைகள் தவிர்க்கமுடியாதன. எந்திரங்கள் பெரியவை, விலை உயர்ந்தவை, விசையால் இயங்கியவை. குடிசைகளில் வைக்க முடியாது.

(2) குடிசைவேலை மெல்ல மறைந்தது. இரண்டு முறைகளும் ஒன்ருகப் பல ஆண்டுகள் இருந்தன.

(3) மாறுதலுக்குத் தயக்கம்:

(அ) நாட்பட்ட தொழில்களில் மாறுதலின் நன்மைகள். மிக அதிகமாக இருந்தமையால்தாம் முதலாளிகள் புது முறையைக் கையாண்டனர்.

(ஆ) சில தொழில்களில் கூலியாள்களின் ஊதியம் மிகக் குறைவு. எந்திரங்கள் இலாபகரமாக இருக்கவில்லை.

(இ) தொழிற்சாலையில் ‘கூலிக்கு அடிமையாதலை’த் தொழிலாளிகள் விரும்பவில்லை.

(4) மாறுதலால் நன்மைகள்:

(அ) குடிசைவேலையைவிட வேலைநேரமும் குறைவு, சூழ்நிலை மேலானது.

(ஆ) தொழிற் சங்கங்களை அமைக்க முடிந்தது.

(இ) தொழிலாளர்கள் சமூக, அரசியல் பிரச்சினைகளில் மேன்மேலும் அக்கறை காட்டினர்.

பிரிட்டனில்தான் முதலில் தொழிற் புரட்சி:

(1) பிரிட்டனில் அரசியலும் நிதிநிலைமையும் ஸ்திரம்.
(2) படையெடுப்புகள் இல்லை.
(3) அடிமைத்தனம் இல்லை.
(4) மூலதனம் சேர்ந்தது.

(5) இயற்கையமைப்பில் நன்மைகள்:
- (அ) புவியமைப்பின் நிலைமை.
- (ஆ) கப்பல் தங்குமிடங்கள்.
- (இ) படகோடும் ஆறுகள்.
- (ஈ) நல்ல வெப்பநிலை.
- (உ) கரியும் இரும்பும்.

தொழிற் புரட்சியின் விளைவுகள்:

(1) மூலதனம் பிரதானமாயிற்று.

(2) (அ) மக்கள்தொகை அதிகரிப்பு.
(ஆ) மக்கள் நகரங்களில் குடியேறினர். வடக்கில் புது ஆலைநகரங்கள்.
(இ) வடக்கிலும் மேற்கிலும் மக்களின் சேர்க்கை.

(3) உற்பத்தி அதிகரித்தது. விலை குறைந்தது.

(4) ஏற்றுமதி வியாபாரம் வளர்ந்தது.

(5) புதுத் தொழில்களின் வளர்ச்சி. (உ-ம்.) பொறி செய்யும் தொழில்.

(6) ஆலைத்தொழிலாளிகளின் வேலைச் சூழ்நிலை மோசம். (தடையிலாக் கொள்கை வழங்கி வந்தது.)

(7) போக்குவரத்து முறைகளில் முன்னேற்றம். உற்பத்தி பெருகியதால், பல புது அங்காடிகளுக்குப் பொருள் செல்ல வேண்டியிருந்தது.

(8) பாராளுமன்றச் சீர்திருத்தம்.

15. துணி உற்பத்தித் தொழிலில் ஏற்பட்ட புரட்சி

தொழிற் புரட்சிக்கு முன்:

கம்பளித் துணி உற்பத்தி:

(1) துணி வணிகர்கள் ஆதரவில் குடிசைத் தொழில்.

(2) யார்க்ஷயரில் பணவசதியுள்ள கைவினைஞர்கள் தாமே எல்லா வேலைகளையும் செய்து கம்பளித்துணியை விற்றனர்.

உரோமத் தட்டுப்பாடு:

1660-1825 ஏற்றுமதி தடைசெய்யப்பட்டது.
ஸ்பெயினிலிருந்து மெரினோ உரோமம் இறக்குமதி.
அயர்லந்திலிருந்து உரோமம் இறக்குமதி.
அயர்லந்திலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் பிரான்சுக்குக் கள்ளக் கடத்தல்.

பட்டு:

ஹ்யூஜினட் குடியேற்றம், 1685க்குப்பின்.

லினன்:

ஸ்காட்லந்திலும் அயர்லந்திலும்.
ஐயரிஷ்காரர் போட்டியினின்று 1707க்குப்பின் ஸ்காட்லந்தில் லினன் தொழிலுக்குப் பாதுகாப்பு.

பருத்தித் துணி:

தொழில் வேகமாக வளரவில்லை

(1) பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீராகப் பருத்தி கிடைக்கவில்லை. லெவான்ட். மேற்கிந்தியத் தீவுகள்.

(2) அக்கறை கொண்டவர்களின் விரோதம்:

(அ) உரோமம், பட்டு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்கள்
(ஆ) இந்தியாவிலிருந்து பருத்தித் துணி இறக்குமதி செய்த கிழக்கிந்தியக் கம்பெனி.

(3) சட்ட நடவடிக்கை.

1700 (அ) பருத்தித்துணி இறக்குமதித் தடை.
1722 (ஆ) அச்சிட்ட பருத்தித் துணி உபயோகத்துக்குத் தடை.

(4) வினைமுறைக் கஷ்டங்கள்.
பருத்தி நூல் ஊடையை லினன் பாவோடு சேர்த்துத் தீர்க்கப்பட்டது.

1736 மாஞ்சஸ்டர் சட்டம் ஆதரவளித்தது.

தொழிலின் வளர்ச்சி:

(1) இந்தியாவில் அரசியல் நிலைமை. பருத்தித் துணி இறக்குமதியில் தடங்கல்கள்.

(2) வினைமுறைப் பிரச்சினைகளை எந்திரங்கள் தீர்த்தன.

1774 (3) சட்டப்படி விதித்திருந்த தடை நீக்கப்பட்டது.

(4) பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏராளமாகக் கச்சாப் பருத்தி கிடைத்தது.

எந்திரங்கள்:

நூற்பு:

வியாட். பால். ஹைஸ்.

1767 ஹார்கிரீவ்ஸ். நூற்கும் ஜென்னி. கையியக்கம். மெல்லிய நூல்.

1769 ஆர்க்ரைட். நீர்ச்சட்டம். நீர்விசை. தொழிற்சாலைகள். பலமுள்ள நூல், பாவுக்கு.

1776 கிராம்டன். மியூல். ஜென்னி, நீர்ச்சட்டம் இரண்டின் நன்மைகளும் கலந்தன.

1825 ராபர்ட்ஸ் தானே இயங்கும் மியூல்.
1830 அதில் அபிவிருத்தி.

நெசவு:

1733 கே எறிநாடா.
1785 கார்ட்ரைட். விசைத்தறி.
1815 ஹாரக்ஸ் } ராட்கிளிப் } அபிவிருத்திகள்

முடிவுகள்:

(1) தொழிலாளர்கள் தொழிற்கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும் சேர்ந்து உழைத்தனர்.

(2) கைவேலைக்கு மிகக் குறைவான கூலி.

பருத்தித் தொழிலுக்கு லங்காஷயர் ஏற்றதாயிருந்தது:

(1) வானிலை.

(2) துறைமுகம் (லிவர்பூல்).

(3) விசை (நீர், கரி).

(4) அமைப்பு (லிவர்பூல் பருத்தி அங்காடி).

கம்பளித் துணி:

எந்திரங்கள்:

உரோமம் நிறையக் கிடைக்கும்வரை பயன்படுத்தப்படவில்லை.

1790 கார்ட்ரைட். சிக்குவாரும் எந்திரம்.

18ஆம் நூற்றாண்டு முடிவில் } ஜென்னி பயன்படுத்தப்பட்டது.

19ஆம் நூற்றாண்டு முதலில் } வூர்ஸ்டட் நூற்க எந்திரம்.

1824 வூர்ஸ்டட் நெய்ய விசைத்தறி.

19-ஆம் நூற்றாண்டில் பாதிவரை கைத்தறி தொடர்ந்தது.

லினன்:

எந்திரங்கள்:

மெதுவாகவே உபயோகிக்கப்பட்டன.

அயர்லாந்தின் குடியானவப் பெண்டிர்.

1840 எந்திரத்தால் பிளாக்ஸ் நூற்பு.

1860 எந்திரத்தால் நெசவு.

பட்டு:

தடை, வரி-இவற்றால் தொழிலுக்குப் பாதுகாப்பு.

ஹஸ்கிஸ்ஸன் வரி குறைத்தபின் செழித்தது.

1860 வரி ஒழித்தபின் சிதைந்தது.

துணியை முடிக்கும் வினைகள்:

வெளுத்தல்:

குளோரின் முறை.

சாயமேற்றுதல்:

பல புதுச் சாயங்கள்.

அச்சிடல்:

பெல். அச்சு உருளைகள்.

பின்னர் வந்த புத்தமைப்புகள்:

1830 கதிர் வளையம்.

1847-8 பருத்திச் சிக்கு வாருதல். ஹீல்மன். ஹோல்டன். நார்த்ராப் தறி.

விசேஷ ஈடுபாடுகள்:

(1) நூற்பும் நெசவும் தனித்தனி ஆலைகளில்.
(2) சில ஆலைகளில் சில தர நூல்மட்டும்.
(3) யார்க்ஷயரில் தலங்களின் விசேஷ உற்பத்திகள்.

பருத்தி அளிப்பு:

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது பருத்திப் பற்றுக்குறை. பின்னர் பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்தியா, எகிப்திலிருந்து இறக்குமதிகள்.

1902 பிரிட்டிஷ் பருத்தி உற்பத்திச் சங்கம். இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், நைஜீரியா, உகாண்டா, சூடானிலிருந்து அளிப்புகள்.

பிற துணிப் பொருள்கள:

செயற்கைப் பட்டு, நைலான், டெரிலீன் முதலியன.

1959 **பருத்தி ஆலைகளின் சீரமைப்பு.**

16. நிலக்கரி

உபயோகம்:

(1) வீட்டில்.
(2) நீராவி எஞ்சின்.
(3) இருப்புப் பாதைகளும் நீராவிக் கப்பல்களும்.
(4) (கோக்காக மாற்றி) இரும்பு உருக்க.
(5) தொழிலில் பயன்படும் இரசாயனப் பொருள்கள்.

கஷ்டங்கள்;

(வெட்டி எடுப்பதிலும் போக்குவரத்திலும்):	அதைத் தீர்க்க:
(1) குழிகளில் நீர்.	(1) நீர் இறைத்தல். நீராவிப் பொறி.
(2) கூரை சரியும் அபாயம்.	(2) (அ) கம்பம் அமைக்கும் முறை. (ஆ) நெடுஞ் சுவர் முறை. மர உத்தரங்கள்.
(3) வாயுக்கள்-காற்றேட்டம்.	(3) கெட்ட காற்று அகற்றும் விசிறி. இரட்டை வழிகள்.
(4) ஒளி.	(4) (அ) டேவி விளக்கு. (ஆ) மின் விளக்கு.
(5) கரியை மேலே கொணர்தல்.	(5) கம்பிக் கயிறு. நீராவிப் பொறி.
(6) வெப்பம் அதிகமாதல்.	(6) உள்ளே வரும் காற்றைக்குளிர்ப்படுத்துதல்.
(7) போக்குவரவு.	(7) கால்வாய்கள் இருப்புப் பாதைகள்.

நவீன முன்னேற்றங்கள்:

(1) ஆழமான சுரங்க வழிகள்.
(2) நீளமான குகை வழிகள்.
(3) கரி வெட்ட எந்திரங்கள்.

தொழிலாளர் வேலை நிலைமை:

18-ஆவது நூ. ஆண், பெண், குழந்தைகள் நெடுநேர வேலை. அபாயம். உடலுக்குக் கேடில்லை.

1842. பெண்கள், குழந்தைகள் சுரங்கத்தில் வேலைசெய்வது தடுக்கப்பட்டது.
1850. கண்காணிப்பு.
1860, முதலியன. கரிச் சுரங்கங்கள் கட்டுப்பாட்டுச் சட்டங்கள்.
1881. விபத்துகளுக்குப்பின் விசாரணை.
1896. வெடிவைப்பதுபற்றிக் கட்டுப்பாடுகள்.
1908. எட்டு மணி நேரச் சட்டம்.
1911—14. விதிகளைத் தொகுத்துச் சட்டம்.

18-ஆவது நூ. ஸ்காட்லந்தின் சுரங்கத் தொழிலாளிகள்:

ஊதியம் குறைவு. ஆண், பெண், குழந்தைகள் கட்டாய வேலை. பண்ணையாட்களைப் போல; ஏன், அடிமைகளைப் போல. நூற்றாண்டு முடியும் வரை அதே நிலை.

நாட்டுடைமையாக்கும் பிரச்சினை:

1919—21 சாங்கிக் குழு:

1919 இடைக்கால அறிக்கைகள்;

அ. (1) நாட்டுடைமையாக்கல்.
(2) நாளுக்கு ஏழு மணிநேரம், பின்னர் ஆறு மணி.
(3) ஊதிய உயர்வு.

ஆ. (1) நாட்டுடைமையாக்கல்.
(2) ஆறு மணி வேலை நாள்.
(3) முப்பது சதவிகித வேலை உயர்வு.

இ. (1) நாட்டுடைமையாக்கல் கூடாது.
(2) வேலை நேரம் குறைக்கக் கூடாது.
(3) ஊதியம்பற்றி யோசனை இல்லை.

1920. இறுதி அறிக்கை:
நாட்டுடைமை ஆக்கல் வேண்டுமென யோசனை.
நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை.

1925—6, சுரங்கத் தொழிலில் மந்தம்:
ஊதியத்தைக் குறைக்கப் பயமுறுத்தல். அரசாங்க உதவி.

1926. சாமுவல் குழு:

(1) பண உதவிக்குக் கண்டனம்.
(2) சுரங்க ராயல்டியை அரசாங்கம் வாங்கச் சிபாரிசு.
(3) ஏழரை மணி வேலை நேரம்.
(4) சுரங்க வாயில் குளியலறைகள்.

(5) சம்பளத்தோடு ஆண்டுதோறும் விடுமுறை நாட்கள்.
(6) இலாபத்தில் தொழிலாளர் பங்கு பெறுவது.
(7) நாட்டுடைமையாக்க வேண்டாம்.

1926. வேலை நிறுத்தம்:

ஏப்ரல். பண உதவி நிறுத்தப்பட்டது. முதலாளிகள் கூலியைக் குறைத்தனர். தொழிலாளிகள் வேலையை நிறுத்தினர்.

மே. சுரங்கத் தொழிலாளரை ஆதரித்துப் பொது வேலைநிறுத்தம் தோல்வியுற்றது.

சுரங்கத் தொழிலாளர் வேலையின்றி இருந்து இறுதியில் முதலாளிகள் சொன்ன ஷரத்துகளின்படி வேலைக்குத் திரும்பச் சேர்ந்தனர்.

1926. கரிச் சுரங்கச் சட்டம்:

வேலை நேரத்தை ஒரு மணி அதிகமாக்கியது.

1926. சுரங்கத் தொழில்கள் சட்டம்:

சாமுவல் குழுவின் சில சிபாரிசுகளைச் செயலாற்றியது.

1946. கரிச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கல் சட்டம்:

(1) தேசிய நிலக்கரிக் கழகம். சுரங்கங்களை நடத்திக் கரி சப்ளை செய்ய, துணைத்தொழில்களையும் மேற்கொள்ள.
(2) சுரங்க முதலாளிகளுக்கு நஷ்ட-ஈடு.
(3) 1947 ஜனவரி 1 முதல்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பின்:

(1) முழுமையாய் வாரத்துக்கு ஐந்து நாள் வேலை செய்தால் ஆறு நாள் கூலி.
(2) தாமே ஒப்புக்கொண்டு சனிக்கிழமை வேலை. இரு வாரத்திற்கொரு முறை.
(3) பல விளைமுறை அபிவிருத்திகள்.
(4) வேலைக்கு வராமைப் பிரச்சினைக்கு இன்னும் முடிவு காணவில்லை.
(5) நிருவாகத்துக்கும் வேலை செய்வோருக்கும் உள்ள உறவில் குறைகள்.

17. இரும்பு, எ.்.கு, மற்றும் பொறிகளின் உற்பத்தி

வார்ப்பிரும்பு:

18-வது நூ. வரை. மரக்கரி எரித்து உருக்கல்.

காடுகளில், முக்கியமாக வீல்டு, டீன்காடு, ரீகின் ஆகிய இடங்களில்: தொழில்மீது தடைகள். நலிவு.

கோக்கு உபயோகித்து உருக்கல்.

17-வது நூ. டட் டட்லி.

18-வது நூ. ஏப்ரஹம் டார்பி.
கரிவயல்களில் இரும்புருக்கும் ஆலைகள். முக்கியமாக கிளாட் பள்ளத்தாக்கு, யார்க்ஷயர், தென் வேல்ஸ், கருப்புப் பிரதேசத்தில்.

தேனிரும்பு:

1784. ஹென்றி கார்ட். கலக்குவதும், உருளைகளில் தட்டையாக்குவதும்
உலையின் அனல் காற்று:

1760. ரூபக் (காரன் பட்டறை). அபிவிருத்தி செய்யப்பட்ட பிளாஸ்டு.

1790 அனற்காற்றைச் செலுத்த நீராவிப்பொறி.

1828 நீல்ஸன். மிகச்சூடான அனற்காற்று.

19வது நூ. பிற அபிவிருத்திகள். கழிவு வாயுக்களின் பிரயோகம்.

எஃகு:

(தேனிரும்பு: கரியில்லை அல்லது மிகச்சிறிய அளவு இருந்தது.
வார்ப்பிரும்பு: கரிவிகிதம் 2 முதல் 5 சதவிகிதம்.
எஃகு: குறைந்த விகிதம் 1 முதல் 1½ சதவிகிதம் வரை கரி. கரி அளவைக் கட்டுப்படுத்துவதுதான் எஃகு உற்பத்தியில் கஷ்டம்)

பெசிமர் (மாற்றுலை) முறை:

1855-6 (1) பெசிமர். சக்திவாய்ந்த அனல் காற்று. அசுத்தங்களை எரித்தது. ஸ்பீகலிசன் சேர்க்கப்பட்டது. (பிற்காலத்தில், பெர்ரோ—மாங்கனீஸ்) அமில எஃகு பாஸ்பரஸ் கலவாத கனியிலிருந்து உற்பத்தி.
(2) கில்கிரிஸ்டு-தாமஸ் முறை. மாற்றுலையின் உட்சுவர் டாலமைட்டும் களிமண்ணும். பாஸ்பரஸ் கலந்த கனிகளினின்று கார எஃகு.

சீமன்ஸ்-மார்ட்டின் (திறந்த உலை) முறை:

மாற்றுலைக்குப் பதிலாகத் திறந்த உலை. அமில எஃகு, கார எஃகு இரண்டுக்கும். மாற்றுலையைவிட அதிகமாகப் பயனாகிறது.

மின்சார உலை:

1878 ஸர் வில்லியம் சீமன்ஸ். குறைந்த அளவில் உயர்ந்த எஃகு தயாரிக்க.

பி.கு. (அ) தேனிரும்பைவிட அதிக உபயோகங்களுக்குப் பயனாகிறது.
(ஆ) இரும்பு ஆலைகள் எஃகு ஆலைகளாக மாற்றப்படுகின்றன.

(இ) திறந்த உலையில் பாஸ்பரஸ் கலந்த கனி உபயோகிக்கப்படல். லொரேனின் மினட் கனிகள். ஜெர்மனியின் எஃகுத்தொழில்.

(ஈ) உலோகக் கலவைகளின் விஸ்தாரமான பிரயோகம்.

பொறிகள் உற்பத்தி:

1698 சேவரி:

நீராவிப் பம்பு (pump).

1705 நியூகமன்:

நீராவிப்பொறி. பல குறைகள். செலவதிகம். ஆனால் பயன்பட்டது. ஸ்மீடனும் வாட்டும் அபிவிருத்தி செய்தனர்.

1782 வாட்டு:

சுற்றும் இயக்கத்தின் அடிப்படையில் அமைந்தது. உற்பத்தி குறைவு. (பவுல்டனும் வாட்டும் உற்பத்தி உரிமை பெற்றிருந்தனர்).

நீராவிப்பொறியின் முக்கியத்துவம்:

வெளிக்காரணங்களின் சாதகமான நிலைமையை நம்பியிராத விசையளிக்கும் பொறி. இதன் முக்கியத்துவம் மின்சாரம் ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கும்போது குறைந்துபோகும்.

வேலையின் தரம்:

(1) முதல் பொறியாளர்கள் கொல்லர்கள் போன்றவர்.
(2) முதல் பொறிகள் நன்கு அமைக்கப்படவில்லை.
(3) எந்திரக் கருவிகளின் புத்தமைப்பு.

18. சாலைகளும் கால்வாய்களும்

சாலைகள்:

இடைக்காலம்:

மோசமாக இருந்தன. சிலவற்றைத் திருச்சபை பராமரித்தது.

1555. பாரிஷின் பொறுப்பு. நிலமுடையவர்கள் உழைப்பளிக்க வேண்டும்.

18ஆவது நூ. சுங்கப்பாதை டிரஸ்டுகள்:

சாலைகளைத் தனியார் அமைப்புகள் பராமரித்தன. சுங்கங்கள். முக்கியமாக நல்ல பெருஞ்சாலைகள் ஏற்பட்டன.

அபிவிருத்திகள்:

சாலை அமைப்பில் பிரசித்தி பெற்றவர்கள் { மெட்காஃப். டெல்பர்டு. மகாடம்.

மகாடமைஸ் செய்த சாலை, மகாடத்தின் புத்தமைப்பு.
கல் வேய்ந்த சாலை. குறைந்த குவிவு.

19ஆவது நூ. சுங்கப்பாதை டிரஸ்டுகளின் நலிவு:
நல்ல நிர்வாகத்துக்காக இணைப்புகள் இருப்புப் பாதைப் போட்டியைத் தாங்க முடியவில்லை, மறைந்தன. சாலைப் பராமரிப்பு தல அதிகாரிகளைச் சார்ந்தது.

20ஆவது நூ. மோட்டார் போக்குவரவு:

1909—37 சாலை நிதி; மோட்டார் வரி வசூலினின்று.

1937-க்குப்பின் பாராளுமன்றம் அனுமதித்துப் பணம் செலவழிக்கப்பட்டது.
சாலைகளில் பாகுபாடு.
போக்குவரத்து அமைச்சகமும் தல அதிகாரிகளும் பொறுப்பைப் பகிர்ந்துகொண்டனர்.

கால்வாய்கள்:

கால்வாய் அமைப்பின் தோற்றம்:

17வது நூ. முடிவு — அயர், கால்டர் கால்வாய்.

18வது நூ. முதலில் — பல ஆறுகளை, முக்கியமாக இர்வெல் மெர்சி ஆறுகளை வளைவுகளை நீக்க, ஆழமும் அகலமும் படுத்துதல்.

1759—61. பிரிஜ்வாடர் கால்வாய், ஆறுகளின் தொடர்பின்றி, வெள்ளம் வரட்சியால் பாதிக்கப்படாமல் ரன் கார்ன் வரை விஸ்தரிக்கப்பட்டது.

1760—1800. பின்னல் வலைபோல் எங்கும் கால்வாய்கள். பிரிஜ்வாட்டரின் வெற்றியின் விளைவாக அமைக்கப்பட்டன.

இவ்வமைப்பின் இயல்புகள்:

(1) அரசாங்க உதவியின்றி.
(2) கால்வாய்கள் ஒரே சீராக இல்லை.
(3) கால்வாய்க் கம்பெனிகள் பொருள் ஏற்றிச் செல்வதில்லை. நீர் வழியை அளித்துச் சுங்கங்கள் வசூலித்தன.

கால்வாய்களின் உபயோகம்:

(1) விவசாயப் பிரதேசத்திலிருந்து தொழில் பிரதேசத்துக்கு உணவுப் பொருள் அனுப்ப.
(2) தொழில் பிரதேசத்துக்கு மூலப் பொருள்கள் கொண்டுவர.
(3) நாடு முழுதும் ஆலைப் பொருள்களை அனுப்பவும் துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லவும்.
(4) நிலக்கரிக்கு.
(5) கடல்வழி சென்ற போக்குவரத்து கால்வாய்களில் சென்றது.

19ஆவது நூ. கால்வாய்களின் நலிவு:

(1) இருப்புப் பாதைகள் வேகமதிகம். குறித்த நேரத்தில் போகும் வசதி அதிகம்.

(2) நீராவிக் கப்பல்களின் கரையோரப் போக்குவரவை மீண்டும் பெற்றன.

(3) சில கால்வாய்களை இருப்புப் பாதைகள் வாங்கிவிட்டன.

(4) வருமானம் செழிப்பாக இருந்தபோது கால்வாய்களைப் புதுப்பிக்கக் கம்பெனிகள்தவறிவிட்டன. போக்குவரத்தைத் தாமே மேற்கொள்ளவும், காலங்கடக்கும்வரை தவறின. கால்வாய்களில் அவை நம்பிக்கை இழந்துவிட்டன.

19ஆவது நூ. மாஞ்செஸ்டர் கப்பல் கால்வாய்:
முடிவு

கடலிற் செல்லும் கப்பல்கள் வர.

கால்வாய்களின் இன்றைய நிலைமை:

எடையும் பரிமாணமும் அதிகமாக உள்ள மெதுவாகச் செல்லும் பொருள்களுக்குப் பயனுகின்றன.

1906—9. அரசர் ஆணைக்குழு:

யோசனைகள்:

(1) 'சிலுவைக்' கால்வாய்களின் அபிவிருத்தி.
(2) நீர்வழிகள் கழகத்தின் அமைப்பு.
(3) அரசாங்க உதவி.

செலவு சரியாக மதிப்பிடப்படவில்லை. அரசாங்கம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

1947. நாட்டுடைமையாக்கல்:

போக்குவரவுக் கமிஷனின் நான்கு செயலாற்றும் பிரிவுகள். ஹம்பர், மெர்ஸி, செவர்ன், தேம்ஸ் நதிகளின் அடிப்படையில்.

1956. நீர்வழிகள் அபிவிருத்தித் திட்டம் அறிவிக்கப்பட்டது.
1961. புது உள்நாட்டு நீர்வழிகள் அதாரிடி ஏற்படுத்தும் எண்ணம்.

19. தொன்மைப் பொருளியலார்.

பொருளியல் கோட்பாடுகள்

இடைக்காலம்:
அறநூலுடன் தொடர்பு.

நவீனகாலத்து முற்பகுதி:
மெர்க்கன்டலிசம். தேசீய சக்தி.

தொழிற் புரட்சிக்காலம்:
'தொன்மை' தடையிலா வாணிபக் கொள்கையோடிணைந்த பொருளியல் முறை.

பிசியோக்ராட்டுகள்.

பிரான்ஸில். தொன்மைப் பொருளியலுக்கு முன்னோடிகள்.

சமூகத்தில் 'இயற்கை ஒழுங்கை' வற்புறுத்தினர். கட்டுப்பாடுகளை எதிர்த்தனர். தடையிலாக்கொள்கை விளைந்தது.

விவசாயமே செல்வத்தின் காரணமாகக் கருதப்பட்டது. வேறு தொழில்களில் நிகர உயர்வு இல்லை.

தொன்மைப் பொருளியலார்:

(1) பொருளியலைக் கோட்பாட்டளவேயான நூலாக எண்ணினர். அடிப்படைக் கோட்பாடுகள் எங்கும் பொருந்துமென எண்ணினர்.

(2) பொருளியலை அறவியலினின்று பிரித்தனர்.

(3) உண்மையானவற்றை ஆராயாது கற்பனைக் கோட்பாடுகளையே கருதியதாக அவர்கள்மீது குற்றச் சாட்டு.

1776. ஆடம் ஸ்மித் (*Wealth of Nations*)

(1) (அ) மெர்க்கண்டலிசக் கட்டுப்பாடுகளை எதிர்த்தார்.

(ஆ) சுதந்திரத்தை ஆதரித்தார். கட்டுப்பாடுகளும் முற்றுரிமையும் ஒழியவேண்டுமென்றார்.

(இ) தடையற்ற போட்டியால் ஒவ்வொருவனும் தன் நலனை முற்றிலும் பெருக்கப் பாடுபடுவான்.

பி.கு. (1) சுதந்திரம் பிறரைப் பாதித்தால், நாட்டு நலனைப் பாதித்தால், கட்டுப்பாடுகள் தேவை.

(2) சுதந்திரம் சிறிது சிறிதாகத் தரவேண்டும்.

(2) (அ) வேலைப் பகிர்வின் நன்மைகள். உற்பத்திப் பெருக்கம்.

(ஆ) பரிவர்த்தனைமீது கட்டுப்பாடுகள் கூடாது.

(இ) மக்களுக்குப் பொருந்துவது நாடுகளுக்கும் பொருந்தும். பன்னாட்டு வாணிபத் தடைகள் நீங்க வேண்டும்.

(3) பணத்தின் பயனைப் பற்றிய கருத்துகள்.

1798-1803 சங். தாமஸ் மால்தஸ் (*Essay on Population*)

(1) உணவு உற்பத்தியைப் பெருக்க,

(அ) உள்ள சாகுபடி நிலத்தில் தீவிரமாக விளைவிப்பது (குறைந்து செல் விளைவு).

(ஆ) புது நிலங்களைப் பயிரிடுதல் (அவற்றின் தரம் குறைந்திருக்கும்).

(2) ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் மக்கள்தொகை இரட்டிக்கும், தடைகள் இன்றேல்.
சுகம் உயர உயர, மக்கள்தொகை அதிகரிக்கும்.

(3) உணவு உற்பத்தி கூட்டல் விகிதத்தில் அதிகரிக்கும்.
மக்கள்தொகை பெருக்கல் விகிதத்தில் அதிகரிக்கும்.

எனவே, மக்கள்தொகை உணவு உற்பத்தியை மிஞ்சிவிடும். வாழ்க்கைத்தரம் விழுந்து தீரும்.

(4) மக்கள்தொகை பெருகாமல் தடைகள்.

(அ) இயல்புத்தடைகள். உள்ள தொகையைக் குறைக்கின்றன. போர், பஞ்சம், பிணி முதலியன.

(ஆ) தவிர்ப்புத் தடைகள். புலனடக்கம், மணத்தைத் தவிர்ப்பது.

பி.கு. (அ) மால்தஸின் முடிவுகள் சரியானுல், புலனடக்கமின்றேல் முன்னேற்றத்துக்கு வழியேயில்லை (புலனடக்கம் உண்மையில் பலன் தராது).

(ஆ) மால்தஸின் கூற்றும் நவீன கால அனுபவமும் மாறுபடுகின்றன.

கண்டனம்:

(1) மால்தஸ் தன் காலச் சூழ்நிலையையே கருதினுர். எதிர் காலத்தில் தோன்றக்கூடிய மாறுதல்களை எண்ணிப் பார்க்கவில்லை.

(அ) விவசாய முறையில் முன்னேற்றம் (வளர்ந்து செல் விளைவு).

(ஆ) பயிரிடப்படாதநிலம் மோசமானதாக இருக்க வேண்டியதில்லை. தூரத்திலிருக்கலாம். போக்குவரவு வளர்ந்தால் சாகுபடி ஏற்படலாம்.

(இ) புதுக்குடியேற்றங்களினின்று உணவு இறக்குமதி. பன்னுட்டு வாணிபம்.

(2) சமூகத்தில் வாழ்க்கை வசதிகள் உயரஉயர பிறப்பு விகிதம் அதிகமாகாமல் குறைகிறது.

1817. டேவிட் ரிகார்டோ (*Principles of Political Economy and Taxation*)

வாரக்கோட்பாட்டை எடுத்துரைத்தார். முக்கியம், பொருள் மதிப்புக் கோட்பாட்டைக் கூறினுர், அவ்வளவு முக்கியமல்ல.

வாரம்:

நிலத்தின் 'தானே கொண்டுள்ள அழிக்க முடியாத விளைச்சல் சக்திக்காக' முதலாளிக்குக் கொடுப்பது.

தரம் குறைந்த நிலத்துக்கும் வளப்பம் மிகுந்ததற்கும் உள்ள விளைச்சல் வேறுபாடு.

பி.கு. (அ) தானிய விலை உயர்ந்தால் எல்லை நிலத்தில் பயிர்விளைவிக்கப்படும். தானிய விலை குறைந்தால் தரிசாகும்.

(ஆ) தானிய விலை வாரத்தை நிருணயிக்கிறதேயன்றி வாரத்தால் நிர்ணயிக்கப்படவில்லை.

(இ) மக்கள் தொகை வளர்ந்து சாகுபடிப்பரப்பு அதிகரித்தால் வாரமும் உயரும்.

கண்டனம்:

(1) புது நாட்டில் தரம் குறைந்த நிலம் நல்லதைவிட முதலில் பயிர் செய்யப் பெறலாம். (ரிகார்டோவின் வாதத்தை இது உண்மையில் பாதிக்கவில்லை.)

(2) இக்கோட்பாடு உண்மையாயின் சாகுபடி எல்லையில் உள்ள வாரமில்லா நிலம் இருக்க வேண்டும். அம்மாதிரி நிலம் ஒன்றும் புலப்படவில்லை.

ஆனால்:

(அ) பண்ணையின் வாரம் முழுதும் 'பொருளாதார' வாரமல்ல. நிலத்தில் செலவழிக்கப்பட்ட முதலீட்டு வட்டியும் இதில் சேர்ந்தது.

(ஆ) ஒரு பண்ணையில் பலதரப்பட்ட நிலங்கள் இருக்கும் பண்ணை முழுவதுக்கும் ஒரே வாரம் செலுத்தப் பெறுகிறது. அதில் சில நிலங்கள் வாரம் எதுவும் பெறாதிருக்கலாம்.

(இ) இன்றைய சூழ்நிலையில் வாரமற்ற நிலம் வேறு ஒரு புது நாட்டில் இருக்கலாம்.

(3) மால்தலைப் போல ரிகார்டோ தன்னைச் சூழ்ந்திருந்த நிலையை மட்டும் கருதினார். வேறு மாற்றங்களை எதிர்பார்க்கவில்லை

(4) தடையற்ற போட்டியால் வாரம் நிர்ணயமாவதாக ரிகார்டோ கொண்டார். அயர்லாந்தில் பொதுவாக இது உண்மை. ஆனால் இங்கிலாந்தில் அல்ல.

1821 **ஜேம்ஸ் மில்:** *(Elements of Political Economy)*

ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை ஒப்புக்கொண்டார். முழுவாரமும் பறிக்குமளவுக்கு நிலவரியை ஆதரித்தார்.

1825 **ஜே. ஆர். மெகலக்** *(Principles of Political Economy)*:

கூட்டுச்சங்கச் சட்டங்களை ரத்து செய்ய வேண்டுமென்றார். வேலைநிறுத்த உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றார்.

1836 **நேசௌ சீனியர்** *(Political Economy)*

(1) முதலீட்டுக்குத் துய்ப்புத்தவிர்ப்பு தேவையாதலின் வட்டி நியாயமே.

(2) விவசாய நிலத்தில் மட்டுமன்றி இயற்கை வளம் மாறுபடும் இடத்திலெல்லாம் வாரம் தோன்றுகிறது. வாரம் இயற்கையான நிகழ்ச்சி. விதிவிலக்கானதல்ல.

(3) பொருளியலில் நான்கு கோட்பாடுகள் உள்ளன:

(அ) தன்னலம் பேணல்.
(ஆ) மக்கள் தொகை.
(இ) தொழிலில் வளர்ந்துசெல் விளைவு.
(ஈ) விவசாயத்தில் குறைந்துசெல் விளைவு.

ஜான்-ஸ்டூவர்ட் மில்:

ஒரு கருத்துமாறி மற்ருென்றின் தோற்றம்.
முதல் நூல்கள்—தொன்மைப் பொருளியல். தனியார்சுவாதீனம்.
பின் நூல்கள்—பொது உடைமையை நோக்கி மாறின.

1848 *Principles of Political Economy*

(1) தொன்மைப் பொருளியலாரின் முடிவுகளைத் தொகுத்தமைத்தார்.

(2) அடிப்படைக் கொள்கைகள் மாறமுடியாது என்பதை எதிர்த்தார்.

(அ) உற்பத்தி விதிகள் மாருதன.
(ஆ) பங்கீட்டு விதிகள் செயற்கை, மாற்றலாம்.

(3) சமூகச் சீர்திருத்தத்தை ஆதரித்தார்.

(அ) கூலிமுறைக்குப் பதில் கூட்டுறவு.
(ஆ) வாரத்தின்மீது வரி.
(இ) வாரிசுரிமைக் கட்டுப்பாடு.

20. பத்தொன்பதாம் நூற்ருண்டின் முதற் பாதியில் விவசாயத்தின் நிலைமை

1793—1815. **போர்க்காலம்:**

மக்கள் தொகை அதிகரித்தது. அதிக உணவு தேவைப்பட்டது. சாகுபடிப் பரப்பு அதிகமாயிற்று.

வாரங்கள் உயர்ந்ததால் நில முதலாளிகளுக்கு இலாபம்.

தானிய விலை உயர்ந்ததால் குடியானவருக்கு இலாபம்.

சிறு நிலச் சொந்தக்காரர்கள் பெரிய பண்ணைக்காரர்களுடன் போட்டியிட முடியவில்லை. வேலியிடல் அதிகமாகிறது.

தொழிலாளர்களுக்கு இரவலரெனப் பண உதவி.

1815—1850. **அமைதிக் காலம்:**

தானியச் சட்டங்கள்:

1689. கோதுமை விலை 48 ஷி.க்குக் குறைந்தால், ஏற்றுமதி மானியம் பலனளித்தது.

1773. விலை 48 ஷி.க்கு அதிகமானல் சிறு இறக்குமதி வரி. விலை 40 ஷி.க்குக் குறைந்தால் ஏற்றுமதி மானியம். } பலனளிக்கவில்லை.

1791.	விலை 41 ஷி.க்குக் குறைந்தால் ஏற்றுமதி மானியம். விலை 50 ஷி.க்குக் குறைந் தால் பலத்த இறக்குமதிவரி.	போர்க் காலத்தில் உபயோகப்படவில்லை.

1815. 80 ஷி.க்குக் குறைந்தால் இறக்குமதித் தடை.
1822. 70 ஷி.க்குக் குறைந்தால் இறக்குமதித் தடை.

1828.
1842. } படிக்குப் படி மாறும் சுங்க விகிதங்கள்.

1838—9. தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்:

தோற்றுவிக்கப்பட்டது.
உணவு மலிவாகி உற்பத்திச் செலவு குறையத் தானியச் சட்டங்களை அகற்றும் நோக்கம்.

பீல்:

தானியச் சட்டங்களை ஆதரித்தார். ஆனால், உணவு உற்பத்தியைப் போதுமான அளவு உயர்த்தாவிடில் அவை இருந்து பயனில்லை என ஒப்புக் கொண்டார்.

அயர்லாந்தில் பஞ்சம். தானியச் சட்டத்தைத் தளர்த்த வேண்டிய அவசியம்.

1846. தானியச்சட்டங்கள் நீக்கப்பட்டன:
சிறு இறக்குமதி வரி இருந்தது.

1849. குவார்ட்டருக்கு 1 ஷில்லிங் சுங்கம்.
1869. வரி ஏதுமின்றி இறக்குமதி.

பக்கக் குறிப்பு

(கு = அடிக்குறிப்பு)

கலைச்சொல் அகராதி

ஆங்கிலம்—தமிழ்

A

Abstinence	—	துய்ப்புத் தவிர்ப்பு
Acid Steel	—	அமில எஃகு
Adulterine gild	—	திருட்டு கில்டு
Advalorem	—	மதிப்பில்
Agrarian Revolution	—	விவசாயப் புரட்சி
Alderman	—	முதுமகன்
Aliens	—	அன்னியர்
Anti-corn Law League	—	தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்
Antiqua customa	—	பழைய சுங்கம்
Apprenticeship	—	தொழிற் பயிற்சி
Arithmetical progression	—	கூட்டல் விகிதம்
Artisan	—	கைவினைஞன்

B

Bailiff	—	மேனர் தல அதிகாரி
Balance of Payments	—	செலுத்துநிலை
Balance of Trade	—	வாணிப நிலை
Barter	—	பண்டமாற்று
Basic steel	—	கார எஃகு
Benevolence	—	நன்கொடை
Birth Rate	—	பிறப்பு விகிதம்
Bishop	—	மேற்றிராணியார், சமய மாவட்டத் தலைவர்
Black Death	—	பெருங் கொள்ளை நோய்
Blast Furnace	—	ஊது உலை
Boon work	—	தரும வேலை
Bordar	—	போர்டர்
Bounty	—	அரசாங்கப் பணவுதவி, மானியம்
Breeding	—	இனவிருத்தி
Burgess	—	நகர உரிமைக் குடியினன்
Byproduct	—	துணையுற்பத்திகள்

C

Canal mania — கால்வாய்ப் பித்து
Cast iron — வார்ப்பிரும்பு
Charter — சாசனம், பட்டயம்
Church — திருச்சபை
Civil War — உள்நாட்டுப் போர்
Classical economists — தொன்மைப் பொருளியலார்
Clothier — துணிவணிகன்
Coastal Trade — கரையோரக் கடல் போக்குவரவு
Colonial preference — குடியேற்ற வரிச் சலுகை
Combination Laws — கூட்டுச் சங்கச் சட்டங்கள்
Common carrier — பொதுச் சரக்கேற்றிச் செல்பவர்
Common Law — பொது நீதி
Commutation — மாற்றுகை
Consolidated Fund — தொகு நிதி
Continental system — ஐரோப்பியக் கண்டமுறை
Copyholder — படிக்காரன்
Corn Laws — தானியச் சட்டம்
Cottars — காட்டர்கள்
Country squire — நாட்டுப்புற நிலக்கிழார்
Craft gild — தொழில் கில்டு
Crown — அரசு
Customary tenant — வழக்கமான குத்தகைக்காரன்
Customs duties — சுங்கவரிகள்

D

Death Rate — மரண விகிதம்
Demand — தேவை
Demesne — டிமீன்
Diminishing returns — குறைந்துசெல் விளைவு
Division of labour — வேலைப்பகிர்வு
Domestic system of industry — இல்லத் தொழில் முறை, குடிசைத் தொழில்முறை

E

Enclosure — வேலியிடல், நில அடைப்பு
Enclosure Act — நிலஅடைப்புச் சட்டம்
Engineering — பொறியமைப்பு, பொறியியல்
Engrossing — மொத்தமும் வாங்குதல்
Enumerated goods — பட்டியல் பொருள்கள்

Escheat — வாரிசற்ற நிலப்பறிமுதல்
Experts — வல்லுநர்கள், தேர்ச்சி பெற்றவர்கள்
Extensive cultivation — பரந்த சாகுபடி

F

Fair — திருவிழாச் சந்தை
Fens — தாழ்நிலங்கள்
Feudal Incidents — நிலமானியக் கட்டணங்கள்
Feudalism — நிலமானியச் சமுதாய அமைப்பு
Firma Burgi — நகரக் கப்பம், நகர வரி
Flying shuttle — எறிநாடா
Foreman — எந்திர முதலாள்
Forestalling — முந்திக்கொள்வது
Free holder — சுதந்திரக் குடியானவன், சொந்த நிலக்காரன்
Freemen — சுதந்திர மக்கள்
Free Trade — வரியற்ற ஏற்றுமதி இறக்குமதி, தடையிலா வாணிபம்
Friendly benefits — தோழமை உதவிகள்

G

Gauge (railway) — பாதை அகலம்
Gas — எரிவாயு
Geometric progression — பெருக்கல் விகிதம்
Gild — கில்டு

H

Hanse Merchants — ஹேன்ஸ் வணிகர்கள்
Hedonistic principle — இன்பம் நாடும் கோட்பாடு

I

Increasing returns — வளர்ந்துசெல் விளைவு
Indirect tax — மறைமுக வரி
Industrial Revolution — தொழிற் புரட்சி
Inland navigations — உள்நாட்டு நீர்வழிகள்
Inland Waterways — உள்நாட்டு நீர்வழிகள்
Inspector — ஆய்வாளர், இன்ஸ்பெக்டர், கண்காணிப்பாளர்
Insurance — இன்ஷூரன்ஸ்
Interloper — அங்கீகரிக்கப்படாத வணிகர்கள்
Invention — கண்டுபிடிப்பு, புத்தமைப்பு

J

Journey men — தேர்ந்த கூலியாட்கள்
Justices of the Peace — அமைதி காக்கும் நீதிபதிகள்

K

Knight — திருவீரர்
Knot — கடல் மைல்.

L

Laissez-faire — தலையிடாமை
Land-drainage — நிலவடிகால்
Law Merchant — வணிகச் சட்டம், வணிக நீதி
Learned Profession — கற்ற தொழில்கள்
Leaseholders — குத்தகைக்காரர்கள்
Liberi Homines — சுதந்திர மனிதர்
Livery — தனி உடுப்பு
Liverymen — உடுப்புக்காரர்
Locomotive — ரயில்பொறி
Lundinariu — திங்கட் கிழமைக்காரர்

M

Magna Carta — மகாசாசனம்
Manor — மேனர்
Marsh gas — சதுப்பு வாயு
Market — அங்காடி
Market Town — அங்காடி நகரம்
Master graftsman — தொழில் தலைவன்
Mercantilism — மெர்க்கன்டலிசம், வர்த்தகத் தத்துவம்
Merchant Adventurers — துணிகர வியாபாரிகள்
Merchant gild — வணிக கில்டு
Middle ages — இடைக்காலம்
Migration — இடப்பெயர்ச்சி
Minimum wages — குறைந்தபட்ச ஊதியம்
Monopoly — முற்றுரிமை
Moral Restraint — புலனடக்கம்

N

National Debt — தேசியக்கடன்
Nationalization — அரசாங்கம் மேற்கொள்வது, அரசுடைமையாக்கல், தேசியமயமாக்கல்,
Natural Economy — பண்டமாற்றுப் பொருளாதார முறை
Navigation Act — கடற்கடவுச் சட்டம்
Norman Conqueror — நார்மன் வெற்றி வீரன்
Norman Conquest — நார்மன் வெற்றி

Nouveaux riches	—	புதுப் பணக்காரர்கள்
Nova customa	—	புதுச் சுங்கம்

O

Old colonial system	—	பழைய குடியேற்றத் திட்டம்
Open field cultivation	—	திறந்த வயல் சாகுபடி
Open hearth furnace	—	திறந்த உலை

P

Pasture	—	மேய்ச்சல்
Pasture farming	—	கால்நடை மேய்ச்சல் தொழில்
Pauperism	—	இரவலர் பிரச்சினை
Peasant proprietor	—	சொந்த நில விவசாயி
Physiocrats	—	பிசியோக்கிராட்டுகள்
Pillar and stall system	—	சுரங்கப் பிரிவுகளில் கம்பம் அமைக்கும் முறை
Poll tax	—	தலைவரி
Poor house	—	இரவலர் அகம்
Poor rates	—	இரவலர் வரிகள்
Poor relief	—	இரவலர்க்கு உதவி
Population	—	மக்கள்தொகை
Positive check	—	இயல்புத் தடை
Power-loom	—	விசைத்தறி
Prerogative	—	சிறப்புரிமை
Preventive check	—	தவிர்ப்புத் தடை
Probability	—	நிகழ்திறம்
Prosperity	—	செழுமை, வளம், சுபீட்சம்
Protective duties	—	காப்பு வரிகள்
Quit-rent	—	விடுதலை வாரம்

R

Rates	—	கட்டணங்கள், தலைவரிகள், விகிதங்கள்
Reformation	—	சமயச் சீர்திருத்தம்
Regrating	—	லாபவாணிபம
Regulated company	—	கட்டுப்பாட்டுக் கம்பெனி
Renaissance	—	மறுமலர்ச்சி
Restoration	—	முடியாட்சியின் மீட்சி
Right of lot	—	பண்டத் தொகுதி உரிமை
Ring Spinning frame	—	கதிர்வளையச் சட்டம்
Rotation of crops	—	பயிர்ச் சுழற்சி
Royal Commission	—	அரசர் ஆணைக்குழு

Royal Council — அரச மன்றம்
Rump — எச்சப் பாராளுமன்றம்

S

Serf — பண்ணையாள்
Smuggling — கள்ளக் கடத்தல்
Socialism — பொதுவுடைமை
Socmen — சாக்மென்
Sovereignty — இறைமை
Speculation — ஊக வாணிபம்
Spinning jenny — நூற்பு ஜென்னி
Stallage — கடைவாடகை
Staple — ஆதார அங்காடி
Stapler — ஆதாரத்தார்; ஆதார வணிகர்
Statute of Artificers — தொழிற்கலைஞர்கள் சட்டம்
Steward — நிர்வாக அதிகாரி
Stock and land lease — கால்நடைக் கருவிகளோடு நிலக்குத்தகை
Subsidy — மானியம்
Supply — அளிப்பு

T

Tenant farmers — குத்தகை விவசாயி
Three field system — மூவயல் முறை
Toll — சுங்கம்
Trade Union — தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கம்
Treasure — பொன்னும் வெள்ளியும்
Truck — பண்டக்கூலி
Turnpike — சுங்கப்பாதை

U

Underwriter — ஈட்டுறுதியாளர்
Unemployment — வேலையின்மை
Villein — வில்லின்

W

Warden — காவலர்
Water frame — நீர்ச்சட்டம்
Week work — வார வேலை
Workshop — தொழிற்கூடம்
Wrought iron — தேனிரும்பு
Yeoman — யோமன்

கலைச்சொல் அகராதி

(தமிழ்—ஆங்கிலம்)

அங்காடி — Market
அங்காடி நகரம் — Market Town
அங்கீகரிக்கப்படாத வணிகர் — Interloper
அமில எஃகு — Acid steel
அமைதி காக்கும் நீதிபதி — Justice of the Peace
அரச மன்றம் — Royal Council
அரசர் ஆணைக்குழு — Royal Commission
அரசாங்கப் பணவுதவி — Bounty
அரசு — Crown
அரசுடைமையாக்கல் — Nationalization
அளிப்பு — Supply
அன்னியர் — Aliens
ஆதார அங்காடி — Staple
ஆதாரத்தார், ஆதார வணிகர் — Staplers
ஆய்வாளர் — Inspector
இடப்பெயர்ச்சி — Migration
இடைக்காலம் — Middle Ages
இயல்புத் தடை — Positive check
இரவலர் அகம் — Poor House
இரவலர்க்கு உதவி — Poor Relief
இரவலர் பிரச்சினை — Pauperism
இரவலர் வரி — Poor rates
இல்லத் தொழில்முறை — Domestic system of industry
இறைமை — Sovereignty
இனவிருத்தி செய்தல் — Breeding
இன்பம் நாடும் கோட்பாடு — Hedonism
இன்ஷூரன்ஸ் — Insurance
இன்ஸ்பெக்டர் — Inspector
ஈட்டுறுதியாளர் — Underwriter
உடுப்புக்காரர் — Liverymen

உள்நாட்டு நீர்வழிகள்	—	Inland navigations, Inland waterways
உள்நாட்டுப் போர்	—	Civil War
ஊக வாணிபம்	—	Speculation
ஊது உலை	—	Blast furnace
எச்சப் பாராளுமன்றம்	—	The Rump
எந்திர முதலாள்	—	Foreman
எரிவாயு	—	Gas
எறிநாடா	—	Flying shuttle
ஐரோப்பியக் கண்டமுறை	—	Continental system
கடல் மைல்	—	Knot
கடற் கடவுச் சட்டம்	—	Navigation Act
கடை வாடகை	—	Stallage
கட்டடச் சங்கங்கள்	—	Building Societies
கட்டுப்பாட்டுக் கம்பெனிகள்	—	Regulated Companies
கண்காணிப்பாளர்	—	Inspectors
கண்டுபிடிப்பு	—	Invention
கதிர் வளையச் சட்டம்	—	Ring frame
கரையோரக் கடல் போக்கு வரவு	—	Coastal trade
கள்ளக் கடத்தல்	—	Smuggling
கற்ற தொழில்கள்	—	Learned professions
காட்டர்கள்	—	Cottars
காப்பு வரிகள்	—	Protective duties
காமன்ஸ் சபை	—	House of Commons
கார எஃகு	—	Basic steel
கால்நடை கருவிகளோடு நிலக் குத்தகை	—	Stock and land lease
கால்நடை மேய்ச்சல்	—	Pasture farming
கால்வாய்ப் பித்து	—	Canal mania
காவலர்	—	Warden
கில்டு	—	Gild
குடிசைத் தொழில்முறை	—	Domestic system
குடியேற்றம்	—	Colony, plantation
குடியேற்ற வரிச்சலுகை	—	Colonial preference
குத்தகைக்காரர்கள்	—	Leaseholders
குத்தகை விவசாயி	—	Tenant farmers

குறைந்தபட்ச ஊதியம் — Minimum wages
குறைந்துசெல் விளைவு — Diminishing returns
கூட்டல் விகிதம் — Arithmetical progression
கூட்டுச் சங்கச் சட்டங்கள் — Combination laws
கைவினைஞன் — Artisan
சதுப்பு வாயு — Marsh gas
சமயச் சீர்திருத்தம் — Reformation
சமய மாவட்டத் தலைவர் — Bishop
சாக்மென் — Socmen
சாசனம் — Charter
சிறப்புரிமை — Prerogative
சுங்கப் பாதை — Turnpike
சுங்கம் — Toll
சுங்கவரி — Customs duty
சுதந்திரக் குடியானவன் — Freeholder
சுதந்திர மக்கள் — Freemen
சுதந்திர மனிதர் — Liberi homines
சுபீட்சம் — Prosperity
சுரங்கப் பிரிவுகளில் கம்பம் அமைக்கும் முறை — Pillar and stall system
செலுத்துநிலை — Balance of payments
செழுமை — Prosperity
சொந்த நிலக்காரன் — Freeholder
சொந்த நில விவசாயி — Peasant Proprietor
டிமீன் — Demesne
தடையிலா வாணிபம் — Free trade
தருமவேலை — Boon work
தல அதிகாரி (மேனர்) — Bailiff
தலவரிகள் — Rates
தலையிடாமை — Laissez-faire
தலைவரி — Poll tax
தவிர்ப்புத் தடை — Preventive check
தனி உடுப்பு — Livery
தாழ்நிலங்கள் — Fens
தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் — Anti-corn Law League
தானியச் சட்டம் — Corn Law
திங்கட் கிழமைக்காரர் — Lundinari

திருச்சபை — Church
திருட்டு கில்டு — Adulterine gild
திருவிழாச் சந்தை — Fairs
திருவீரர் — Knight
திறந்த உலை — Open hearth furnace
திறந்த வயல் விவசாயம் — Open field cultivation
துணிகர வியாபாரிகள் — Merchant Adventurers
துணிவணிகர் — Clothier
துணையுற்பத்திகள் — Byproduct
துய்ப்புத் தவிர்ப்பு — Abstinence
தேசியக் கடன் — National Debt
தேசியமயமாக்குதல் — Nationalization
தேர்ச்சி பெற்றவர்கள் — Experts
தேர்ந்த கூலியாட்கள் — Journeymen
தேவை — Demand
தேனிரும்பு — Wrought iron
தொகுநிதி — Consolidated Fund
தொழில் கில்டுகள் — Craft Gilds
தொழிலாளர் சங்கம் — Trade Union
தொழிற்கலைஞர்கள் சட்டம் — Statute of Artificers
தொழிற்கூடம் — Workshop
தொழிற்சங்கம் — Trade Unionism
தொழில் தலைவன் — Master Craftsman
தொழிற் புரட்சி — Industrial Revolution
தொழிற் பயிற்சி — Apprenticeship
தொன்மைப் பொருளியலார் — Classical Economists
தோழமை உதவிகள் — Friendly benefits
நகர உரிமைக் குடியினன் — Burgess
நகரக் கப்பம், நகரவரி — Firma burgi
நன்கொடை — Benevolence
நாட்டுப்புற நிலக்கிழார் — Country squire
நார்மன் வெற்றி — Norman Conquest
நார்மன் வெற்றிவீரர் — Norman Conqueror
நிகழ்திறம் — Probability
நிர்வாக அதிகாரி (மேனர்) — Steward
நில அடைப்பு — Enclosure
நிலஅடைப்புச் சட்டம் — Enclosure Act

நிலமானியக் கட்டணங்கள் — Feudal incidents
நிலமானியச் சமுதாய அமைப்பு — Feudalism
நில வடிகால் — Land drainage
நீர்ச்சட்டம் — Waterframe
நூற்பு ஜென்னி — Spinning jenny
படிக்காரன் — Copyholder
பட்டயம் — Charter
பட்டியல் பொருள்கள் — Enumerated goods
பண்டக்கூலி — Truck
பண்டத்தொகுதி உரிமை — Right of lot
பண்டமாற்று — Barter
பண்டமாற்றுப் பொருளாதாரம் — Natural economy
பண்ணையாள் — Serf
பயிர்ச் சுழற்சி — Rotation of crops
பரந்த சாகுபடி — Extensive cultivation
பழைய குடியேற்றத் திட்டம் — Old Colonial System
பழைய சுங்கம் — Antiqua Custuma
(பாதை) அகலம் — Gauge
பிசியோக்கிராட்டுகள் — Physiocrats
பிறப்பு விகிதம் — Birth Rate
புதுச் சுரங்கம் — Nova Custuma
புதுப் பணக்காரர்கள் — Nouveaux riches
புத்தமைப்பு — Invention
புலனடக்கம் — Moral restraint
பெருக்கல் விகிதம் — Geometric progression
பெருங் கொள்ளை நோய் — Black Death
பொதுவுடைமை — Socialism
பொதுச்சரக்கேற்றிச் செல்பவர் — Common carrier
பொது நீதி — Common Law
பொறியமைப்பு, பொறியியல் — Engineering
பொன்னும் வெள்ளியும் — Treasure
போர்டர் — Bordar
மகாசாசனம் — Magna Carta
மக்கள்தொகை — Population
மதிப்பில் — Advaiorem
மரண விகிதம் — Death rate
மறுமலர்ச்சி — Renaissance

மறைமுக வரி — Indirect tax
மாற்றுகை — Commutation
மானியம் — Bounty, subsidy
முடியாட்சியின் மீட்சி — Restoration
முதுமகன் — Alderman
முந்திக்கொள்வது — Forestalling
முற்றுரிமை — Monopoly
மூவயல் முறை — Three Field System
மெர்க்கன்டலிஸம் — Mercantilism
மேய்ச்சல் — Pasture
மேற்றிராணியார் — Bishop
மேனர் — Manor
மொத்தமும் வாங்குதல் — Engrossing
யோமென் — Yeomen
ரயில் பொறி — Locomotive
லாப வாணிபம் — Regrating
வணிக கில்டு — Merchant gild
வணிகச் சட்டம், வணிக நீதி — Law Merchant
வர்த்தகத் தத்துவம் — Mercantilism
வல்லுநர்கள் — Experts
வழக்கமான குடிவாரதாரன் — Customary tenant
வளம் — Prosperity
வளர்ந்துசெல் விளைவு — Increasing returns
வாணிப நிலை — Balance of trade
வார வேலை — Week work
வாரிசு அற்ற நிலப்பறிமுதல் — Escheat
வார்ப்பிரும்பு — Cast iron
விகிதங்கள் — Rates
விசைத்தறி — Powerloom
விடுதலை வாரம் — Quit rent
வில்லின் — Villein
விவசாயப்புரட்சி — Agrarian revolution
வேலியிடல் — Enclosure
வேலைப்பகிர்வு — Division of labour
வேலையின்மை — Unemployment
ஹேன்ஸ் வணிகர்கள் — Hanse Merchants